QG:21
NO5
78046

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 NOV 1925
MADRAS

1 | 0 | 172/2008

# BIBLE HISTORY

# வேதாகம சரித்திரம்

Accn. No. 78046
No. of Pages: 424

17/9/08



மோட்ச இராச்சியமானது
இப்படிப்பட்டவர்களுடையதாயிருக்கின்றது.

அர்ச். மத்தேயு, 19-ம் அதிகாரம்.

# BIBLE HISTORY

*Containing the Most*
**NOTABLE EVENTS**
OF THE

# Old & New Testament

Prepared for the use of
**CATHOLIC SCHOOLS**

பூர்வ வேதத்திலும் புதிய வேதத்திலுமுள்ள பிரதான
விஷயங்களைக்கொண்டிருக்கும்

# வேதாகம சரித்திரம்

பள்ளிக்கூடங்களில் பிரயோகிக்கும்படியாக
அச்சிடப்பட்டது

THE REGISTRAR OF BOOKS
24 NOV 1925
MADRAS

PRINTED AT THE "GOOD PASTOR" PRESS,
BROADWAY, MADRAS

5-ம் பதிப்பு

இதன் விலை] 1925 [ரூபா 1 0—0

Nihil obstat: A. R. JOHN,
Censor deputatus.

Imprimatur:

✠ J. AELEN,
Archiepiscopus
Madraspatanus.

*Madras, die 9a Novembris, 1925.*

78046
26.21
N25



# முகவுரை

"வேதாகம சரித்திரம்" என்னும் பெயர்கொண்ட இப்புத்தகம் சீமையிலுள்ள அநேக முக்கிய பாஷைகளில் அச்சிடப்பட்டு, கத்தோலிக்கு கல்விச்சாலைகளில் பிரயோகிக்கப்பட்டுவந்ததுபோல இங்கிலீஷ் பாஷையிலும் மொழிபெயர்க்கப்பட்டு, அமெரிக்கா தேசத்துப் பள்ளிக்கூடங்களில் உபயோகிக்கப்பட்டுவருகிறது. காலஞ்சென்ற நமது பரிசுத்த தந்தையாகிய 13-ம் சிங்கராய பாப்பானவர் தமது கைப்பட ஒரு சிறு கடிதமெழுதி அப்புத்தகத்தை கௌரவப்படுத்தினதுடன், கர்தினால்மாரும், மேற்றிராணிமாருங் குருக்களும் அப்புத்தகத்துக்கு நற்சாட்சி பத்திரங்களளித்து தங்கள் விசாரணைகளிலுள்ள பள்ளிக்கூடங்களில் அதை பிரயோகிக்கும்படி கற்பித்தனர்.

இவ்வாறு புகழ்ந்தேற்றப்பட்ட இந்தப் புத்தகம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, சென்னை அதிமேற்றிராணியாண்டவருடைய அநுமதியுடன் அச்சடிக்கப்பட்டிருக்கிறது.

விஷயங்களைப் பிள்ளைகள் எளிதில் கற்கக்கூடும்படி ஒவ்வொரு அதிகாரத்தின் முடிவில் வினாக்களுஞ் சேர்த்து எழுதப்பட்டிருப்பதால் சிறியோரும் பெரியோருமான சகலருக்கும் இப்புத்தகம் வெகு பிரயோசனகரமாயிருக்குமென நம்புகிறோம்.

ஆகையால் நமது பள்ளிக்கூடங்களில் இப்புத்தகத்தை உபயோகிப்பதால் சிறியோர் வேதசத்தியங்களை நன்றாய் அறிந்து ஞான நன்மை அடைவார்களென்பது திண்ணம்.

மேலும் இப்புத்தகத்திலுள்ள சரித்திரங்கள் பிள்ளைகள் மனதில் நன்ருய் படியும்படியாகப் பல படங்கள் சேர்க்கப் பட்டிருக்கின்றன. இவ்வளவு பிரயோசனமான புத்தகத்தை சங். குருசுவாமிமார்கள் தங்கள் கிறீஸ்துவர்களுக்கும், பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கும் சிபாரிசு செய்வதுடன், கத்தோலிக்கு உபாத்திமார்களும் தங்கள் பள்ளிக்கூடங்களில் இதை உபயோகப்படுத்துவார்களாக.

D

# பொருள் அட்டவணை

## பூர்வீக வேத சரித்திரச் சுருக்கம்

### முதல் யுகம்

ஆதாம்முதல் அபிரகாம்வரைக்கும் 2083 வருஷங்கள் அடங்கியது


| அதிகாரம் | | பக்கம் |
|---|---|---|
| 1 | உலக சிருஷ்டிப்பு ... ... ... | 1 |
| 2 | சிங்காரத்தோப்பில் ஆதிபிதாமாதாக்களின் சுகம் | 4 |
| 3 | சம்மனசுக்களும் ஆதி பிதாமாதாக்களுங் கெட்டுப்போதல் ... ... ... | 5 |
| 4 | ஆதி பிதாமாதாக்களுக்கு வந்த தண்டனையும் உலக இரட்சகரின் வாக்குத்தத்தமும் ... | 8 |
| 5 | காயின் ஆபேல் என்பவர்கள் ... ... | 10 |
| 6 | ஜலப்பிரளயம் ... ... ... | 12 |
| 7 | நோவே ஒப்புக்கொடுத்த பலி ... ... | 15 |
| 8 | நோவேயின் குமாரர் 17; பாபேல் கோபுரம்... | 18 |
| ,, | முதல் பத்து பிதாப்பிதாக்களின் நாமங்களும் பிராயமும் ... ... ... | 20 |


### இரண்டாம் யுகம்

அபிரகாம் அழைப்புமுதற்கொண்டு மோயீசன்வரைக்கும் 430 வருஷங்கள் அடங்கியது


| | | |
|---|---|---|
| 9 | அபிரகாமின் அழைப்பு ... ... | 21 |
| 10 | அபிரகாமின் புண்ணியங்கள் ... ... | 22 |
| 11 | அபிரகாமின் உபசாரணை ... ... | 24 |

அதிகாரம் | பக்கம்

12 அபிரகாம் தன் சுயமனதை ஆண்டவருக்கு தத்தஞ்செய்தல் ... ... ... 27
13 ஈசாக்கு ரெபெக்காளை விவாகஞ்செய்துகொண்டது ... ... ... 29
14 எசாவும் யாக்கோபும்... ... ... 31
15 யாக்கோபு ஓடிப்போய் லாபானோடு வசித்தது 34
16 யாக்கோபு திரும்பிவந்தது ... ... 36
17 சூசை தன் தந்தை வீட்டிலிருக்கையில் நடந்த வரலாறு ... ... ... 38
18 சூசை எஜிப்து ராச்சியத்தில் விற்கப்படுகிறார்... 39
19 புத்திப்பாருடைய வீட்டில் சூசைக்கு சம்பவித்தவை ... ... ... 42
20 சூசை சிறைச்சாலையிலிருந்தபோது நடந்த வர்த்தமானங்கள் ... ... ... 43
21 சூசையின் மகத்துவம் ... ... 45
22 சூசையின் சகோதரர் எஜிப்துக்குப் போனது 48
23 பெஞ்சமீன் எஜிப்துக்குப் போனது ... 50
24 சூசையின் வெள்ளிப்பாத்திரம் ... ... 52
25 யாக்கோபு எஜிப்துக்குப் புறப்பட்டது ... 55
26 யாக்கோபின் மரணம் ... ... 57
" சூசையின் மரணம் ... ... ... 58
27 யோபின் பொறுமை ... ... ... 59
நோயே முதல் மோயீசன்வரையிலுள்ள பிதாப்பிதாக்களின் நாமங்களும் வயதும்... 63

## மூன்றாம் யுகம்

### மோயீசன்முதல் தாவீது அரசன்வரையிலும்

28 மோயீசன் ஜனனம் ... ... ... 64
29 மோயீசனின் அழைப்பு ... ... 67
30 எஜிப்தில் நடந்த 10 கொள்ளைநோய்கள் ... 69



அதிகாரம் | பக்கம்

31 முதற்பேறான பிள்ளைகளின் மரணம்—பாஸ்கு செம்மறிப்புருவை—எஜிப்திநின்று புறப்படல் ... ... ... 71
32 செங்கடலைக் கடந்துபோதல் ... ... 74
33 சர்வேசுரன் வனாந்தரத்தில்செய்த அதிசயங்கள் 76
34 பத்துக் கற்பனை ... ... ... 78
35 பொற் கன்றுக்குட்டி .... ... ... 82
36 தேவாராதனையைச் சார்ந்த முறைமைகள் ... 84
37 பொய்த் தூதர்—ஜனங்களின் முறைப்பாடு—சர்வேசுரன் இட்ட தண்டனை ... ... 87
38 கோரே, தாத்தான், அபிரோன் ... ... 89
39 மோயீசனின் சந்தேகமும், வெண்கல சர்ப்பமும் ... ... ... 90
40 மோயீசனின் மரணம் ... ... 92
41 இஸ்றாயேல் ஜனம் வாக்குத்தத்த பூமியில் பிரவேசித்தல் ... ... ... 93
42 நடுவர்கள் ... ... ... 95
43 புண்ணியவதியான ரூத் ... ... 97
44 ஏலி என்பவரின் பிள்ளைகள் ... ... 99
45 முதல் அரசனாகிய சவுல் ... ... 102
46 தாவீது ... ... ... 104
47 தாவீதும் கோலியாத்தும் ... ... 105
48 தாவீதுமட்டில் ஜோனத்தாசுக்குள்ள நேசமும் சவுலுக்குள்ள பகையும் ... ... 107
49 தாவீது சவுலுக்குக் காட்டின தர்மகுணமும் சவுலின் மரணமும்... ... ... 109

## நான்காம் யுகம்

### இஸ்றயேலின் மகத்துவம்—தாவீதுமுதல் றேபோவாம் காலத்தில் இராச்சிய பிரிவுவரையில்

50 பக்திமானும் மஹா அரசனுமாகிய தாவீது ... 111

| அதிகாரம் | | பக்கம் |
|---|---|---|
| 51 | அப்சலோமின் குழப்பமும், தண்டனையும் ... | 113 |
| 52 | தாவீதின் அந்தியகாலம் ... ... | 116 |
| 53 | சலோமோனுடைய ஞானம் ... ... | 117 |
| 54 | எருசலேமில் தேவாலயங் கட்டப்பட்டு அபிஷேகஞ் செய்யப்படுதல் ... ... | 120 |
| 55 | சலமோனுடைய மகத்துவமும், அவருடைய முடிவும் ... ... ... | 122 |
| 56 | இராச்சியத்தின் பிரிவு... ... ... | 125 |


## ஐந்தாம் யுகம்

### இஸ்றயேலருடைய இராச்சியம் அசீரியா அரசர்களால் அழிக்கப்படுதல்


| | | |
|---|---|---|
| 57 | பொது ஆராய்ச்சி ... ... ... | 128 |
| 58 | எலியாஸ் தீர்க்கதரிசி ... ... ... | 130 |
| 59 | எலியாசும், பால்தேவனுடைய பூசாரிகளும் ... | 132 |
| 60 | நாபோத்தின் திராக்ஷ தோட்டம்... ... | 135 |
| 61 | எலிசேயுஸ் தீர்க்கதரிசி ... ... | 136 |
| 62 | யோனுஸ் தீர்க்கதரிசி ... ... ... | 139 |
| 63 | இஸ்ருயேல் இராச்சியத்தின் முடிவு ... | 141 |
| 64 | பெரிய தோபியாஸ் ... ... ... | 143 |
| 65 | தோபியாஸ் தன் குமாரனுக்குச் சொல்லிய புத்திமதிகள் ... ... ... | 144 |
| 66 | சின்ன தோபியாசின் பிரயாணம் ... ... | 145 |
| 67 | தோபியாஸ் திரும்பிவந்தது ... ... | 147 |


### 975-ம் வருஷமுதற்கொண்டு கிறீஸ்துநாதர் பிறக்குமட்டும் நடந்த முக்கிய வர்த்தமானங்கள்


| | | |
|---|---|---|
| 68 | விசேஷ சம்பவங்களின் சுருக்கம்... ... | 150 |
| 69 | யூதராச்சியத்தின் அரசர்களாகிய ரொபோவாம் முதற்கொண்டு எசெக்கியாஸ்வரைக்கும் ... | 151 |





| அதிகாரம் | | பக்கம் |
|---|---|---|
| 70 | தேவபக்தனுன எசெக்கியாஸ் அரசன் ... | 153 |
| 71 | பபிலோன் அடிமைத்தனத்தின்பின் அரசர்கள் | 155 |
| 72 | தீர்க்கதரிசிகள் ... ... ... | 156 |
| 73 | பபிலோனிய அடிமைத்தனம் ... ... | 158 |
| 74 | தானியேலும், மூன்று வாலிபரும் ... | 160 |
| 75 | தானியேல் சுசானுளைக் காப்பாற்றினது ... | 161 |
| 76 | அக்கினிச்சூளையில் போடப்பட்ட 3 வாலர் ... | 163 |
| 77 | தானியேலும் பல்தசார் அரசனும்... ... | 165 |
| 78 | தானியேலும் பேல் விக்கிரகமும் ... ... | 166 |
| 79 | தானியேல் சிங்கக்குகையில் போடப்படுகிறுர் | 168 |
| 80 | யூதர் அடிமைத்தனத்தினின்று திரும்பினது... | 171 |
| 81 | அடிமைத்தனத்துக்குப்பின் வந்த தீர்க்கதரிசிகள் ... ... ... | 173 |
| 82 | எஸ்தேரம்மாள் ... ... ... | 175 |
| 83 | யூதித்தம்மாள் ... ... ... | 179 |
| 84 | வேதசாட்சியான எலியசார் ... ... | 181 |
| 85 | வேதசாட்சியான ஏழு மக்கபேர்கள் ... | 182 |
| 86 | மத்தாதியாஸ், யூதாஸ், மக்கபேயுஸ் ... | 184 |
| 87 | மக்கபேர்முதல் சேசுக்கிறீஸ்துநாதர்வரையில் | 187 |


---

# புதிய வேத சரித்திரச் சுருக்கம்

---

## முதற் பாகம்

### நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய சரித்திரம்


| | | |
|---|---|---|
| 1 | ஸ்நாபக அருளப்பரின் பிறப்பு ... ... | 190 |
| 2 | சேசுநாதரின் ஜனனம் அறிவிக்கப்பட்டது ... | 192 |
| 3 | மரியம்மாள் எலிசபெத்தம்மாளை சந்தித்தல் ... | 195 |
| 4 | ஸ்நாபக அருளப்பரின் ஜனனம் ... ... | 196 |

அதிகாரம் பக்கம்

5 சேசுக்கிறீஸ்துநாதருடைய ஜனனம் ... 198
6 ஆயர் ... ... ... ... 200
7 கீழ்த்திசை அரசர் ... ... ... 201
8 சேசுநாதர் தேவாலயத்தில் காணிக்கையாக எப்புக்கொடுக்கப்பட்டது ... ... 203
9 எஜிப்துக்கு ஓடிப்போகுதல் ... ... 205
10 குழந்தை சேசுநாதர் தேவாலயத்திலிருந்தது 206
11 சேசுநாதரின் பகிரங்க சீவியம்—ஸ்நாபக அருளப்பருடைய பிரசங்கம் ... ... 208
12 சேசுநாதர் ஞானஸ்நானம் பெற்றதும், சோதிக்கப்பட்டதும் ... ... ... 210
13 சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுநாதர் ... ... ... 212
14 சேசுக்கிறீஸ்துநாதரின் பிரதம சீஷர் ... 213
15 கானாவூர்க் கலியாணம் ... ... 215
16 கிறீஸ்துநாதர் தேவாலயத்தின்மட்டில் கொண்டிருந்த சங்கை யாசாரப்பற்றுதல் ... 217
17 நிக்கோதேமென்பவர் சேசுநாதரைக் காணல். 218
18 சேசுநாதர் யாக்கோபின் கிணற்றண்டைபோன போது சம்பவித்தவை ... ... 219
19 சேசுநாதர் நசரேத்தில் பிரசங்கித்தல் ... 221
20 சேசுநாதர் கப்பர்நூவூரில் செய்த புதுமைகள் 223
21 சேசுநாதர் திரளான மச்சங்களை பிடிக்கச்செய்த அற்புதம் ... ... ... 224
22 திமிர்வாதக்காரன் ... ... ... 226
23 பருவதத்தின்மேல் செய்த பிரசங்கம் ... 227
அஷ்டபாக்கியங்கள் ... ... 227
அப்போஸ்தலர்களின் மேன்மையும் கடமைகளும், கிறீஸ்துவர்களின் கடமைகளும் ... 229
விவாகத்தின் பரிசுத்ததனம், கிறீஸ்துவனுடைய தொழில்கள்... ... ... 230



அதிகாரம் பக்கம்

24 குஷ்டரோகி, சேர்வைக்காரனுடைய ஊழியன் 232
25 நாயீம் நகரத்து விதவையின் குமாரன் ... 234
26 மரியமதலேனம்மாள் ... ... ... 235
27 ஸ்நாபக அருளப்பருடைய தூதர்... ... 236
28 சேசுநாதர் முப்பத்தெட்டு வருஷகாலம் வியாதியாய்க் கிடந்தவனை சொஸ்தப்படுத்தினது. 237
29 சர்வேசுரனுடைய இராச்சியத்தைப்பற்றின ஏழு உவமைகள் ... ... ... 239
30 புயல் அடங்கினது ... ... ... 242
31 ஜயீர் என்பவனுடைய மகள் ... ... 244
32 சேசுநாதர் தமது அப்போஸ்தலர்களைத் தெரிந்துகொண்டது ... ... ... 245
33 ஸ்நாபக அருளப்பர் தலை வெட்டுண்டது ... 247
34 அப்பம், மச்சங்களை அதிகரிக்கச்செய்த புதுமை 248
35 திவ்யசற்பிரசாதத்தைப்பற்றிய வாக்குத்தத்தம் 250
36 கனானேய ஸ்திரீ ... ... ... 252
37 இராயப்பருக்கு அளித்த தலைமைப்பட்டம் ... 253
38 கிறீஸ்துநாதர் மறுரூபமானது ... ... 254
39 பிள்ளைகளின் நேசராகிய சேசுநாதர் ... 256
40 குற்றமன்னிப்பு, மன்னிப்பு கொடாத சேவகன் 258
41 அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்பட்ட திறவுகோல்களின் அதிகாரம் ... ... 259
42 நல்ல சமாரித்தானுடைய உவமை ... 260
43 மரியாயும் மார்த்தாளும் ... ... 262
44 பரமண்டல மந்திரம் ... ... 263
45 சேதமாய்ப்போன ஆடும், நல்ல ஆயனும் ... 264
46 ஊதாரிப்பிள்ளை ... ... ... 265
47 ஐசுவரியவானும் இலாசரும் ... ... 268
48 பிறவிக்குருடன் பார்வையடைந்தது ... 270
49 பத்துக் குஷ்டரோகிகள் ... ... 272
50 ஆயக்காரனும் பரிசேயனும் ... ... 273

| அதிகாரம் | | பக்கம் |
|---|---|---|
| 51 | ஐசுவரியவானான வாலன் | 274 |
| 52 | கொடிமுந்திரிகைத் தோட்டத்து வேலையாட்கள் | 275 |
| 53 | இலாசர் உயிர்த்தெழுந்தது | 277 |
| 54 | யூதர் சேசுநாதரைக் கொல்லத் தேடினது | 279 |
| 55 | ஆயக்காரனான ஜக்கேயு | 280 |
| 56 | மரியமதலேனாள் சேசுநாதரைப் பரிமளதைலத்தால் அபிஷேகஞ் செய்தது | 281 |
| 57 | கிறீஸ்துநாதர் ஒட்டோலகராய் எருசலேமில் பிரவேசித்தது | 282 |
| 58 | கலியாண விருந்தின் உவமை | 285 |
| 59 | செசாருக்கு வரி செலுத்துதல் | 286 |
| 60 | எருசலேமின் சங்காரத்தையும் உலக முடிவையும்பற்றி கிறீஸ்துநாதர் சொன்ன தீர்க்க தரிசனம் | 287 |
| 61 | பத்து கன்னியர்களின் உவமை | 290 |
| 62 | தலேந்தென்னும் நாணயத்தின் உவமை | 291 |
| 63 | நடுத்தீர்வை | 292 |
| 64 | பாஸ்கு செம்மறி | 294 |
| 65 | கால்களைக் கழுவுதல் | 295 |
| 66 | கிறீஸ்துநாதர் தேவநற்கருணை உண்டாக்கினது | 296 |
| 67 | யூதாசின் சதிமானமும் இராயப்பரின் மறுதலிப்பும் | 298 |
| 68 | கிறீஸ்துநாதர் தமது அப்போஸ்தலர்களுக்குச் செய்த கடைசிப் பிரசங்கம் | 300 |
| 69 | ஜெத்சமெனித் தோட்டத்தில் சேசுநாதருக்குச் சம்பவித்தவை | 301 |
| 70 | சேசுநாதர் சத்துராதிகளுக்குக் கையளிக்கப்படல் | 303 |
| 71 | சேசுநாதர் சிரேஷ்ட ஆசாரியன்முன் கொண்டுபோகப்பட்டது | 304 |
| 72 | இராயப்பர் சேசுநாதரை மறுதலித்தது | 306 |
| 73 | யூதாசின் அவநம்பிக்கை | 307 |
| 74 | சேசுநாதர் நிந்திக்கப்பட்டது | 308 |
| 75 | சேசுநாதர் பிலாத்து எரோது இவர்கள்முன் கொண்டுபோகப்படுகிறார் | 809 |
| 76 | சேசுநாதரும் பரபாசும் | 311 |
| 77 | சேசுநாதர் கட்டியடிக்கப்பட்டு முண்முடி தரிக்கப்படுகிறார் | 312 |
| 78 | சேசுநாதர் மரணத்தீர்வை யிடப்படுகிறார் | 313 |
| 79 | கல்வாரிமலைக்குப் பிரயாணம் | 315 |
| 80 | சேசுநாதர் சிலுவையில் அறையப்படுகிறார் | 316 |
| 81 | சேசுநாதர் சிலுவையின்மேல் தொங்குகிறார் | 317 |
| 82 | தேவதாயார் சிலுவையினடியில் நிற்கிறாள் | 319 |
| 83 | சேசுநாதர் சிலுவையில் உயிர்விடுகிறார் | 320 |
| 84 | சேசுநாதர் கல்லறையில் அடக்கப்படுகிறார் | 322 |
| 85 | சேசுக்கிறீஸ்துநாதர் உயிர்த்தெழுந்தது | 324 |
| 86 | சேசுக்கிறீஸ்துநாதர் மரியமதலேனாளுக்கு தரிசனையாகிறார் | 327 |
| 87 | சேசுநாதருடைய உயிர்த்தலைப்பற்றி பிரதான ஆசாரியருக்குத் தெரியப்படுத்தினது | 328 |
| 88 | எம்மாவுஸ் கிராமத்துக்குப் போய்க்கொண்டிருந்த இரண்டு சீஷர்களுக்கு சேசுநாதர் தரிசனையாகிறார் | 329 |
| 89 | சேசுநாதர் அப்போஸ்தலர்களுக்குத் தரிசனையாகிறார் | 330 |
| 90 | சேசுநாதர் பாவசங்கீர்த்தனமாகிய தேவத்திரவிய அநுமானத்தை ஸ்தாபித்தல் | 331 |
| 91 | சேசுநாதரும் அர்ச். தோமையாரும் | 332 |
| 92 | இராயப்பர் பிரதான மேய்ப்பராக நியமிக்கப்படல் | 333 |
| 93 | இஸ்பிரீத்துசாந்துவைப்பற்றிய வாக்குத்தத்தம் | 335 |

அதிகாரம் பக்கம்

94 கிறீஸ்துநாதர் அப்போஸ்தலர்களுக்கு அளித்த கடைசி அதிகாரமும்—அவர் மோட்சாரோகணமானதும் ... ... ... 336
95 ஓர் குறிப்பு ... ... ... 338


## இரண்டாம் பாகம்

## அப்போஸ்தலர்களுடைய சரித்திரம்


96 ஆரம்பக் குறிப்பு ... ... ... 339
97 மத்தியாஸ் அப்போஸ்தலராகத் தெரிந்துகொள்ளப்படுதல் ... ... ... 339
98 இஸ்பிரீத்துசாந்துவானவர் இறங்கிவருதல் ... 340
99 இராயப்பர் முடவனை சொஸ்தப்படுத்துகிறார். 343
100 இராயப்பரும் அருளப்பரும் பிடிபட்டது ... 344
101 பூர்வீக கிறீஸ்துவர்களுடைய ஒழுக்கம் ... 346
102 அனனியாசும் சபிராளும் ... ... 347
103 அப்போஸ்தலர் சிறைச்சாலையில் போடப்பட்டது ... ... ... 348
104 அர்ச். முடியப்பர் முதல் வேதசாட்சி ... 350
105 உறுதிப்பூசுதல் எத்தியோப்பிய மந்திரியின் ஞானஸ்நானம் ... ... 352
106 அர்ச். சின்னப்பர் மனந்திரும்பினது ... 355
107 இராயப்பர் யூதேயாவின் கிறீஸ்துவர்களைச் சந்திக்கிறார் — கொர்னேலியுவின் ஞானஸ்நானம் ... ... ... 357
108 அர்ச். இராயப்பர் சிறைப்பட்டது ... 360
109 அர்ச். சின்னப்பர் வேதம் போதிக்கும்படி செய்த முதல் பிரயாணம் ... ... 263
110 எருசலேமில் திருச்சங்கங் கூடினது ... 366
111 அர்ச். சின்னப்பர் செய்த 2-ம் பிரயாணம் ... 367
112 அர்ச். சின்னப்பர் செய்த 3-ம் பிரயாணம் ... 371





அதிகாரம் பக்கம்

113 அர்ச். சின்னப்பர் சிறையில் அடைக்கப்பட்டதும்—அவருடைய மரணமும் ... 374 376
114 மற்ற அப்போஸ்தலர்கள் ... ... 378
115 முடிவுரை ... ... ... 382

தருமநூலைக் காட்டும் வசனங்கள் ... 392
பழய வேதத்தின் தீர்க்கதரிசனங்கள் ...
வேதாகம சரித்திரத்தினின்று தெரிந்தெடுக்கப்பட்ட கிறீஸ்து வேத படிப்பினைகளைக் குறிக்கும் அட்டவணை ... ... 397

# பூர்வீக வேத சரித்திரச் சுருக்கம்

## முதல் யுகம்

(ஆதாம்முதல் அபிரகாம்வரைக்கும் 2083 வருஷங்கள் அடங்கியது).

### முதல் அதிகாரம்

உலக சிருஷ்டிப்பு

| | |
|---|---|
| உலக சிருஷ்டிப்புக்குப்பின் 1 வருடம். | கிறீஸ்து பிறப்பதற்குமுன் 4000 வருடம். |

சர்வேசுரன் பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்தார். அவர் எல்லாவற்றையும் ஓர் க்ஷணத்தில் படைக்காமல், யாவருந் தெளிவாகக் கண்டு உணரும்பொருட்டு, யாவையும் ஆறு நாட்களில் உண்டுபண்ணச் சித்தமானார்.

பூமண்டல முழுதுங் காரிருள் அடர்ந்து, ஒன்றுமில்லாதிருக்கையில், கடவுளானவர் தமது திருவாய்

மலர்ந்து, "பிரகாசமுண்டாகக்கடவது" எனவே, பிரகாசமுண்டானது. இது சர்வேசுரன் முதல் நாளில் செய்த வேலை.

2-ம் நாளில்: கடவுள் வானமண்டலத்தை உண்டாக்கினார்.



3-ம் நாளில்: ஜல மெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து, "நிலங் காணப்படக்கடவது" என்று சொல்ல, உலர்ந்த தரை தோன்றியது. அப்படித் தோன்றின நிலத்தைப் பூமியென்றும், ஜலத்திரளைச் சமுத்திரமென்றும் அழைத்தார். பின்பு புல், பூண்டு, காய், கனி, மரம், செடி, கொடி முதலிய பற்பல தாவர வர்க்கங்களையும் உண்டுபண்ணினார்.

4-ம் நாளில்: வானத்தில் பிரகாசிக்கும் சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையுஞ் சிருஷ்டித்தார்.



5-ம் நாளில்: ஜலசரங்களான மீன் முதலா ஜெந்துக்களையும், ஆகாயத்தில் பறக்கும் பட்சியினங்களையும் உண்டாக்கினார்.

6-ம் நாளில்: பசு முதலான நாற்கால் ஜெந்துக்களையும், ஊர்வன, நடப்பன முதலான சகல பிராணிகளையு முண்டுபண்ணி, கடைசியாக நமது ஆதிபிதாவையுஞ் சிருஷ்டித்தார். எவ்வாறெனில்: "கடவுளானவர் நமது சாயலாக மனுஷனை உண்டாக்குவோம்" என்று சொல்லி, தமது திருக்கரங்களால் மண்ணைப் பிசைந்து மனுஷ ரூபத்தை உண்டாக்கி, அதனில் தமது ஆவியைவிட்டு அழியாத ஓர் ஆத்துமத்தையுங் கொடுத்து அவனுக்கு ஆதாம் என்று பெயரிட்டார்; அதாவது மண்ணால் உண்டாக்கப்பட்டவன் என்று அர்த்தமாகும். பின்பு சர்வேசுரன் தமது கைவேலையைக் கண்டு சந்தோஷித்தார்.

7-ம் நாளில்: தேவன் வேறு நூதன வஸ்துக்களை உண்டுபண்ணாமல் எல்லாவற்றையும்விட்டு இளைப்பாறினார்.

புத்தி.—சிருஷ்டிகர்த்தர் ஆறாம் நாளில் மனிதனை உண்டுபண்ணினபிரகாரம், அர்ச். வாரத்தின் ஆறாம் நாளாகிய வெள்ளிக்கிழமை அவனை இரட்சித்தார். முதல் ஆதாமுடைய சரீரம் எப்படி ஆசீர்வதிக்கப்பட்டதும், பரிசுத்தமானதுமான பூமியிலிருந்து உண்டாக்கப்பட்டதோ, அதே பிரகாரம் இரண்டாம் ஆதாமாகிய "சேசுநாதசுவாமி" ஜென்ம மாசணுகாமல் ஜெனித்த கன்னிமரியாயின் திருக்கருப்பத்தில் உற்பவித்துப் பிறந்தார்.

வினா.—ஆதியில் செய்யப்பட்டதென்ன? உலகம் எப்படி உண்டாக்கப்பட்டது? சர்வேசுரன் முதல் நாளில் எதைப் படைத்தார்? இரண்டாம் நாளில் செய்ததென்ன?

மூன்றும் நாளில் செய்ததென்ன? ஜலத்தை என்னவென்று அழைத்தார்? பூமியிலிருந்து முளைத்ததென்ன? நாலாம் நாளில் உண்டுபண்ணப்பட்டதென்ன? ஐந்தாம் ஆறும் நாட்களி லுண்டாக்கப்பட்டவை எவை? சர்வேசுரன் ஆதி மனிதனை என் ஆதாமென்று அழைத்தார்? சர்வேசுரன் ஏழாம் நாளில் என்ன செய்தார்?

---

## 2-ம் அதிகாரம்

### சிங்காரத்தோப்பில் ஆதிபிதாமாதாக்களுடைய சுகம்

சர்வேசுரன் இப்பூமியில் நானாவித விருக்ஷங்களையும் கனிவர்க்கங்களையும் உடைத்தான பூலோகமோக்ஷமென்கிற சிங்காரவனத்தில் நமது ஆதிபிதாவை வைத்தார். அதில் இருந்த பலவகை மரங்களில் ஆயுள் விருத்திதரும் சீவிய விருக்ஷத்தையும், நன்மை தின்மை அறியத்தக்க மற்றோர் விருக்ஷத்தையும் சிங்காரவனத்தின் மத்தியில்வைத்து, ஆதாமைப்பார்த்து, "நீ சிங்காரத்தோப்பிலுள்ள சகல விருக்ஷங்களினுடையவுங் கனிகளைப் புசிக்கலாம்; ஆனால், நன்மை தின்மை அறிவிக்கும் மரத்தின் கனியைமாத்திரம் புசிக்கவேண்டாம்; பத்திரம்! எப்போது அதைப் புசிப்பாயோ அப்போது மரணதண்டனைக்கு உட்படுவாய்" என்றார்.

பின்பு பூமியின்மீது சஞ்சரிக்கும் சகல ஜீவஜெந்துக்களையும் ஆதாமிடங் கூட்டிவந்து அவைகளுக்குப் பெயரிடச் சொல்லவே, அவன் அவைகள் ஒவ்வொன்றிற்கும் தகுதியான பேரிட்டழைத்தான். ஆயினும் ஆதாம் தனியாகவிருப்பது சரியல்லவென்று கடவுள் எண்ணி, அவனுக்குச் சரிசமானமான ஓர் துணைவியைச் சிருஷ்டிப்போமென்று தீர்மானித்துக்கொண்டார். ஆனதினால் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரை வரச்செய்து, அவன் விலாவெலும்பில் ஒன்றை எடுத்து, அதினால் ஓர் ஸ்திரீ ரூபஞ்செய்து, அவளை ஆதாம் முன் நிறுத்த, அவன் அவளை ஏவாள் என்று அழைத்தான்; அதாவது: எல்லா மானிடருக்கும் மாதாவென்று அர்த்தமாகும்.



புத்தி.—ஆதாமும் ஏவாளுஞ் சிங்கார தோப்பிலிருந்த வரைக்கும் சிரஞ்சீவியத்தைக் கொடுக்கும் மரத்தின் பலனைச் சாப்பிட்டுச் சுகமாக இருந்ததுபோல், நித்திய சீவியத்தை யளிக்கும் மதுர கனியாகிய திவ்யசற்பிரசாதத்தைப் புசித்து வருபவர்கள் நித்தியமாய்ச் சீவிப்பார்கள்.

வினா.—பூலோகமோட்சத்தில் உண்டாக்கப்பட்டதென்ன? அந்த மரங்களின் பெயரென்ன? ஆதாம் அந்தக் கனியைச் சாப்பிட்டால் என்ன வந்திருக்கும்? ஆதாமுக்கு என்ன குறைவு இருந்தது? ஆதாம் முன்னிலையில் நிறுத்தப்பட்டது யார்? ஸ்திரீயானவள் எதினால் செய்யப்பட்டாள்? ஏவாள் என்பதற்கு அர்த்தமென்ன? பூலோகமோட்சத்தைப் பற்றிச் சொல்லப்பட்டதென்ன?

---

## 3-ம் அதிகாரம்

### சம்மனசுக்களும் ஆதி பிதாமாதாக்களும் கெட்டுப்போதல்

மேற்கண்ட வஸ்துக்களையும் ஜீவப்பிராணிகளையுமல்லாமல், சர்வேசுரன் சம்மனசுக்கள் என்னப்பட்ட அரூபியான வஸ்துக்களையும் உண்டுபண்ணினார். அவர்களெல்லோருந் தங்கள் பாக்கியமான அந்தஸ்தில் நிலைக்கொள்ளாமல், சிலர் ஆங்காரத்தினால் தேவனுக்கு விரோதிகளானார்கள். ஆனால், "மிக்கேல்" என்னுந் தேவதூதனுக்கு அனுசாரணையாய் அவர்களில் அநேகர் தேவப்பிரியராகி, எதிர்த்த "லூசிபேர்" என்னுங்

சோதிப் பசாசையும் அதனுடன் சேர்ந்த யாவரையும் பரமபதவியிலிருந்து நரகக் குழியில் விழுத் தாட்டினார்கள். அவ்விதமாக ஆங்காரத்தினால் தேவகத்தத்தை யிழந்தவர்களையே நாம் பிசாசுக்களென்றும், தெய்வப் பிரீதியில் நிலைகொண்டவர்களைச் சம்மனசுக்களென்றும் அழைக்கிறோம்.



நரகத்தில் வீழ்ந்த பசாசானது தனக்கு வந்த நிர்ப்பாக்கியத்தையும், மனுஷர்களுடைய சுகத்தையுங் கண்டு சகிக்கக்கூடாமல், எப்படியாவது அம்மனுஷர்களைக் கெடுத்துத் தன்னுடன் நரகத்திலிழுத்துக் கொள்ளத் தீர்மானஞ் செய்துகொண்டது.

ஒருநாள் ஆதித்தாய் சிங்காரத் தோப்பில் உலாத்திக்கொண்டு நன்மை தின்மை யறிவிக்கும் மரத்தண்டையில் செல்ல, அச்சமயத்தில் பசாசு சர்ப்ப ரூபங்கொண்டு, அம்மரத்தை யணுகி, ஏவாளை நோக்கி “அம்மா நீங்கள் ஏன் இம்மரத்தின் கனியை அருந்துவதில்லை?” என, ஆதித்தாய் சர்ப்பத்தைப் பார்த்து, “நாங்கள் இக்கனியை அருந்தினால் சாவோமென்பதால் சர்வேசுரன் அதைத் தின்னவேண்டா



மென்று கட்டளைசெய்தார்” என்றாள். அதற்குச் சோதனைக்காரன், “நீங்கள் அதைத் தின்றால் இறப்பீர்கள் என்பது அபத்தம்; பழத்தைப் புசிப்பீர்களேயானால், உடனே நன்மை தின்மையை அறிந்து, தேவர்களைப் போல் ஆவீர்களேயன்றி மற்றப்படியல்ல; இதனால்தான் சர்வேசுரன் இப்படிப்பட்ட கண்டித கட்டளையைச்செய்தார்” என்றான். ஆதித்தாய் பசாசினுடைய வார்த்தையை நம்பி, அந்த மரத்தின் பழத்தைப் பறித்துத் தானுந்தின்று ... புருஷனுக்குங் கொடுத்தாள். ஆதா... தன் மனைவி ஏவாளுடைய வார்த்...யைத் தட்டமாட்டாமல், அந்தப் பழத்தைப் புசித்தான். இதுதான் நமது ஆதி பிதாமாதா கட்டிக்கொண்ட முதற் பாவம். இவர்கள் சர்வேசுரனால் விலக்கப்பட்ட கனியைத் தின்றபடியால், அக்ஷணமே கண்கள் திறக்கப்பட, இருவருந் தங்கள் நிர்வாணத்தைக்கண்டு வெட்கப்பட்டு, தங்களுக்கு வஸ்திரமாக அத்திமரத்தின் இ...ளை இடையிற் கட்டிக்கொண்டார்கள். இந்தப் பாவத்தினு... ங்களுக்கிருந்த தேவ இஷ்டப்பிரசாதத்தையும், மற்றனேக ... வரங்களையும் போக்கடித்துக்கொண்டு, இவ்வுலகில் துக்க ...ங்களையும், மரணத்தையும், மறுவுலகத்தில் நித்திய நரகாக்கினையையும் அநுபவிக்கப் பாத்திரவான்களானார்கள்.

புத்தி.—ஒரு மரத்தினின்று அழிவு புறப்பட்டதுபோல் பாவத்தையும் பசாசையும் வெல்லுவதற்கான ஜெயம் வேறொரு மரமாகிய சிலுவைமரத்தினின்று உண்டானது.

வினா.—இன்னும் படைக்கப்பட்ட வஸ்துக்கள் என்ன? அவர்கள் எப்படிக் கெட்டார்கள்? பசாசைப்பற்றிச் சொல்லப்பட்டதென்ன? அது எப்படி ஏவாளைச் சோதித்தது? அந்தச் சோதனை அனுகூலப்பட்டதா? ஆதாமுக்கும் ஏவா

ளுக்கும் சம்பவித்ததென்ன? சிலுவைமரத்தைப்பற்றி சொல்லப்பட்டதென்ன?

---

## 4-ம் அதிகாரம்

### நமது ஆதி பிதாமாதாக்களுக்கு வந்த தண்டனையும் உலக இரட்சகரின் வாக்குத்தத்தமும்

சாயந்திர வேளையில் சர்வேசுரன் சிங்காரவனத்தில் பிரவேசித்து, ஆதாமைக் கூப்பிட்டழைக்க, அவர் பய நடுக்கத்துடன் அணுகி, விலக்கப்பட்ட கனி



யைத் தின்றதாக ஒத்துக்கொண்டபோதிலும், அந்தக் குற்றத்தை ஸ்திரீயின்பேரில் சாட்டினார். ஸ்திரீயோ பாம்பின்பேரில் பழியைப் போட்டாள். அப்பொழுது



சர்வேசுரன் சர்ப்பத்தைக் கோபக் கண்கொண்டு பார்த்து "நீ இனிமேல் வயிற்றால் நகர்ந்து மண்ணைத் தின்பாய். உனக்கும் ஸ்திரீக்கும் தீராப் பகையிருக்கும். அவள் உன் தலையை நசுக்கி உன்னை மேற்கொள்வாள்" என்று சர்ப்பத்தைச் சபித்தார். சர்வ தயையுள்ள கடவுளானவர் இப்படிப்பட்ட வார்த்தைகளை உச்சரித்து, மனுகுலத்தை ஈடேற்றவரும் இரட்சகருடைய வருகையை முன்னதாகவே அறிவித்தாற்போலாயிற்று.

அப்பொழுது தேவன் ஸ்திரீயை நோக்கி "உன் பாவத்துக்கு ஆக்கினையாக பிரசவகாலத்தில் நீ வெகு பெ[illegible]ங்களை யனுபவித்து, வேதனையோடு பிள்ளைகளைப் [illegible]யேனும் நீ உன் புருஷன் அதிகாரத்திற்கு அமைந்து இருப்பாய்" என்றார். கடைசியாக கடவுள் ஆதாமைப் பார்த்து "நீ [illegible]டைய வாக்கை மீறி நடந்தபடியால் இனி பூமி சாரமற்றதாகும்; முட்செடிகளையும் உதவா புல்பூண்டுகளையும் முளைப்பிக்கும். உன் வாழ்நாட்களெல்லாம் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தப் பாடுபட்டு, நீ உனது ஆகாரத்தைப் புசிப்பாய். இவ்விதமாக மண்ணால் உண்டாக்கப்பட்ட நீ திரும்ப மண்ணாய்ப் போகுந்தனையும் தெய்வ சாபத்துக்குள்ளாவாய். ஆகையால் மண்ணாயிருக்கிற நீ திரும்பவும் மண்ணாய்ப்போவாய்" என்று திருவுளம்பற்றினார்.

பின்பு கடவுளானவர், ஆதாம் ஏவாளென்பவர்களுக்குத் தோல் வஸ்திரத்தைக் கொடுத்து உடுத்திக்கொள்ளச்செய்து, சிங்காரத் தோப்பினின்று துரத்திவிட்டார். அவர்கள் திரும்பி அவ்விடத்திற்கு வாராதபடிக்கு அக்கினிமயமான ஓர் பட்டயத்தைக் கையில் பிடித்த ஓர் தேவதூதனை சிங்காரத்தோப்பின் வாசற்படியில் காவலாக வைத்தார்.

வினு.—ஆதாமை அழைத்ததார்? அவருக்குச் சொன்னதென்ன? சர்வேசுரன் பாம்புக்கு இட்ட சாபமென்ன? ஏவாளுக்கு இட்ட சாபமென்ன? ஆதாமுக்கு என்ன சாபமிடப்பட்டது? அவர்களுக்குச் சர்வேசுரன் எப்பேர்ப்பட்ட வஸ்திரங் கொடுத்தார்? ஆதாமுக்கும் ஏவைக்கும் என்ன சம்பவித்தது? பூலோகமோக்ஷத்தின் வாசற்படியில் வைக்கப்பட்டது யார்?

---

## 5-ம் அதிகாரம்

### காயின் ஆபேல் என்பவர்கள்

சிங்காரவனத்தினின்று துரத்தப்பட்ட நமது முதற் பிதாமாதாக்கள் அனேகம் பிள்ளைகளைப் பெற்றார்கள். அவர்களுக்குள் முந்தினவனுக்கு காயின் என்றும். இரண்டாவது குமாரனுக்கு ஆபேல் என்றும் பெயரிட்டார்கள். மூத்தவனான காயின் மூர்க்கன், பயிர்த்தொழில் செய்துவந்தான். இளையவனான ஆபேல் சாது, நீதிமான். இவனுடைய தொழில் ஆடுமாடுகளை மேய்க்கும் ஆயர் தொழில். இவர்களிருவரும் சர்வேசுரனுக்குப் பலிகளை ஒப்புக்கொடுத்துக்கொண்டுவந்தார்கள்; ஆபேல் ஓராட்டையும், அவனுடைய அண்ணன் காயின் தன் நிலத்தின் விளைபொருள்களில் சிலவற்றையுமாகப் பலியிடுவார்கள். இவ்விருவருடைய கருத்தையு மறிந்த ஆண்டவர் ஆபேலுடைய பலியின்மீது பிரியமுள்ளவராயும், காயினுடைய பலியின்மீது பிரியமற்றவராயுமிருந்தார்.

அதனால் காயின் தன் தம்பியைப் பகைத்து, அவன்மீது கோபமுடையவனானன். மனத்துரோதமுள்ள அத்துஷ்டனுடைய முகம் வேறுபட்டதைக் கண்ட தேவன், அவனுடைய மனதை இளகச்செய்ப



அவனுக்குத் தரிசனை தந்து, மிக்க தயையுடன் அவனைப்பார்த்து "காயினே உனக்கு வருத்தமேன்? ஆபேலைப்போல நீயும் நன்மை செய்வாயானுல் உனக்கும சம்பாவனை கிடைக்கும்" என்று சொன்னர். காயினே தன் வர்மத்தை விட்டவனல்ல.

ஆனபடியால் அவன் ஒருநாள் தன் தம்பியிடம் வந்து ஆபேலே! நாம் வயல் பக்கமாய்ச் சுற்றிப்பார்த்து வாலாம், வாவென்று அவனை வெளியே



அழைத்துக்கொண்டுபோய் அவ்விடத்தில் அவனைக் கொன்றுபோட்டான். மாசற்ற ஆபேலுடைய இரத்தம் பூமியில் படவே, சர்வேசுரன் காயினை நோக்கி "உன் சகோதரன் எங்கே?" என்று வினவினர். பாவாக்கிரமத்தால் கடினசித்தனை காயின் மறுமொழியாக "அவன் எங்கேயோ, எனக்குத் தெரியாது. நான்

என் சகோதரனுக்குக் காவலாளியோ?" என்று மறுமொழி சொன்னான்.

சகலத்தையும் தெளிவா யறிந்த சர்வேசுரன் காயினைப்பார்த்து "ஆபேலுடைய இரத்தம் பழிவாங்கும்படி நமது சந்நிதிமட்டும் கூப்பிடுகின்றது. நீ உன் சகோதரனைக் கொல்லத் துணிந்தபடியால் பூமியில் நாடோடியாயிருப்பாய்" என்று தீர்வையிட்டார். சர்வேசுரன் செய்த இந்தத் தீர்ப்பைக் காயின் கேட்கவே அவநம்பிக்கைகொண்டு, "என் பாவம் உமது பொறுத்தலை மிஞ்சிப்போயிற்று" என்று சொல்லி துக்கப்பட்டான். அப்பொழுது சர்வேசுரன் காயினுக்கு ஒருவித அடையாளத்தைப்போட, அவன் பூமியில் நாடோடியாய்த் திரிந்துவந்தான்.

புத்தி.—ஆபேல் சேசுக்கிறீஸ்துநாதருக்கு அடையாளமாயிருக்கிறார். காயினோ குருத்துரோகியான யூதாசுக்கும் இரக்ஷகரைக் கொலைசெய்த யூத ஜனத்துக்கும் அடையாளமாயிருக்கிறான்.

வினா.—காயினையும் ஆபேலையும்பற்றிச் சொல்லியிருப்பதென்ன? அவர்கள் என்ன பலியிட்டார்கள்? சர்வேசுரன் அப்பலிகளை எப்படி அங்கீகரித்தார்? காயினுடைய நடத்தை எப்பேர்ப்பட்டது? அவன் சர்வேசுரனுக்கு என்ன மறுமொழி சொன்னான்? காயினுக்கு இடப்பட்ட தண்டனையென்ன?

---

## 6-ம் அதிகாரம்

### ஜலப்பிரளயம்

ஆபேலுக்குப்பதிலாக சர்வேசுரன் நமது ஆதிபிதா மாதாக்களுக்கு வேறோர் பிரிய குமாரனைக் கொடுத்தார். அவன் பேர் சேத். இப்புண்யவாளனு



டைய சந்ததியார் சர்வேசுரனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்பட்டார்கள். காயினுடைய சந்ததியார்களோவென்றால் தெய்வத்தை மறந்து துன்மார்க்கராய் நடந்ததினால், தெய்வ விரோதிகளானார்கள். நாளாவட்டத்தில் தெய்வபயம் குறைந்துபோனதால், தேவபுத்திரர்முதலாய் பாவாத்துமாக்களாய் நடந்துவந்தார்கள். ஆனால் நோவே என்பவர்மாத்திரம் தேவபக்தியுடையவ



ராக இருந்தார். அதனால் அவருக்கு சுவாமி தரிசனையாகி, "இன்னும் நூறு வருஷகாலத்துக்குள்ளாக பூலோகத்திலிருக்கப்பட்ட உயிருள்ள சகல வஸ்துக்களையும் ஜலப்பிரளயத்தால் அழிக்கச் சித்தங்கொண்டோம். ஆதலால், நீ உன் குடும்பத்துடன் தப்பித்துக்கொள்ளும்படியாக ஓர் பேழையைச் செய்துகொள்

வாயாக" என்று நோவேயுக்குக் கட்டளையிட்டார். அதன் பரிமாணம்: நீளம் 300 முழமும், அகலம் 50 முழமும், உயரம் 30 முழமுமாம். அதன் மேற்பாகத்தில் ஒரு முழ துவாரமும், வேறு பக்கத்தில் அதற்கு வாசற்படியுமிருந்தது. பெட்டகத்தைச் செய்துமுடிக்க 100 வருஷகாலம் பிடித்தது. அப்பெட்டகத்தின் வேலை நடக்கும்போது, நோவே துஷ்டஜனங்களுக்குப் பிரசங்கித்து, வரவிருக்கும் அழிவைக்குறித்து எச்சரித்துப் பாவத்துக்காக தபசுசெய்ய புத்தி சொன்னபோதிலும், ஜனங்கள் அவருடைய புத்திமதிக்குக் காது கொடுத்துக் கேட்டவர்களல்ல.

அப்பொழுது நோவேயும், அவருடைய மனைவியும், மூன்று குமாரர்களும், அவர்களுடைய மனைவிகளும் பெட்டகத்தில் பிரவேசிக்கவும், மிருகஜெந்துக்களில் இனத்திற்கு ஒவ்வொரு ஜதையை பெட்டகத்தில் சேர்த்து, தேவையான ஆகாரத்தைச் சேகரித்து வைக்கவுங் கடவுள் கட்டளையிட்டார்.

ஏழாம் நாள் பூமியின் பேரூற்றுக் கண்கள் திறக்க, நதிகள் சமுத்திரங்கள் அபாரமாய்ப் பொங்கி பூமியின் மீது பாய, வானத்தின் மதகுகள் உடைபட, அகோர மழை தாரைதாரையாய் வருஷிக்க, துஷ்ட ஜனங்கள் பயந்து மரங்கள்மீதும், பருவதங்கள்மீதும் ஏறியும், வெள்ளம் புரண்டு உயர்ந்த பருவதங்களுக்குமேல் 15 முழம் பெருகினபடியால், இரட்சண்ய பேழையிலிருந்த நோவே முதலானவர்கள் தவிர, அப்பொழுது பூமியில் நடமாடியிருந்த மற்ற மனிதர், மிருகங்கள், பறவைகள் முதலிய சகலமும் நாசமாயினார்கள்.

புத்தி.—நோவே சேசுநாதரையும், அவருடைய பேழை சத்திய திருச்சபையையுங் குறிக்கின்றது.



வினா.—மனிதர் எவ்வாறு பேதப்பட்டார்கள்? சேத் என்பவருடைய சந்ததியார் எப்பேர்ப்பட்டவர்கள்? காயினுடையவர்கள் எப்பேர்ப்பட்டவர்கள்? இவர்களில் நீதிமானாயிருந்ததார்? நோவே என்பவர் என்னத்தைச் செய்தார்? அதைச் செய்ய எத்தனை வருஷம் பிடித்தது? பெட்டகத்தில் பிரவேசித்தவர்கள் யார்? ஜலப்பிரளய முண்டானது எப்போது? அப்போது பெட்டகம் எப்படியாயிற்று? மனிதர் எல்லோரும் யாது செய்தார்கள்? அழிந்தது எது?

## 7-ம் அதிகாரம்

### நோவே ஒப்புக்கொடுத்த பலி

இவ்விதமாக நூற்றைம்பது நாள்வரைக்கும் ஜலப்பிரளயம் பூமியை முழுதும் மூடிக்கொண்டபின், கடவுள் நோவேயை நினைவுகூர்ந்து பெருங் காற்றையனுப்ப, ஜலம் நாளாவட்டத்தில் குறைய ஆரம்பித்தது. மலைகள் காணப்படவே, அர்மீனியா சீமையில் ஆராத்தென்னும் பர்வதத்தின்மீது இரட்சண்ணிய பேழை தங்கியது. அப்பொழுது நோவே பெட்டகத்தின் சின்ன துவாரத்தைத் திறந்து காகத்தை விடவே, அது திரும்பிவரவில்லை. பிறகு ஓர் புறுவைவிட்டார். அது கால்வைக்க இடமில்லாதபடியால், பெட்டகத்துக்குத் திரும்பிவந்தது. சிலநாள் பொறுத்து மறுபடியும் ஓர் புறுவை விடவே, அது ஒலிவ் மரத்தின் கிளை யொன்றை வாயில் கவ்விக்கொண்டு திரும்பிவந்தது. அதனால் ஜலம் பூமியின்மீது குறைந்துவருகிறதென்று நோவே தெரிந்துகொண்டார்.

இப்படி ஒரு வருஷந்தனையும் பேழையிலிருந்த பின்னர் தேவ உத்தரவுப்படி நோவே தன் பெண்சாதி,

குமாரர், மருகிகளுடனும், பெட்டகத்திலிருந்த சகல ஜீவப்பிராணிகளுடனும் வெளியேவந்தார்.

பின்பு ஆண்டவருடைய ஏராளமான தயை அனுக்கிரகத்தைக் கண்டுணர்ந்து சந்தோஷானந்தத்தில் மூழ்கி, நோவே அவ்விடத்தில் அவருக்குத் தோத்திரமாக ஓர் பீடத்தை ஸ்தாபித்து, பலிக்கு யோக்கியதையான ஜந்துக்களை சர்வ தகனபலியாகச் சமர்ப்பித்தார்.



அப்போது கடவுள் அப்பலிகளை அங்கீகரித்துக் கொண்டு, நோவேயையும் அவருடைய குமாரர்களையும் ஆசீர்வதித்து " இதோ உன்னுடனும் உன் பிதிர்வழியுடனும் செய்துகொள்ளும் உடன்படிக்கையாவது: மனிதர்களெல்லோரையும் இனி ஜலப்பிரளயத்தால் நாசஞ்செய்யமாட்டோம். பூமி நிலைத்திருக்குந்தனை



யும் விதைப்பு, அறுப்பு, குளிர், வேனில் முதலிய
காலங்களும், இரவும் பகலும் மாறுமலுண்டாகும். நாம்
மேகங்களிலமைத்திருக்கும் வான வில்லானது நாம்
உன்னுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்
அடையாளமாயிருக்கும் " என்று மொழிந்தார்.

புத்தி.—பேழைக்குத் திரும்பிவாராத காகம் மனஸ்தா
பப்படாத பாவிக்கும், திரும்பிவந்த புறு சேசுநாதசுவாமி
யையும், திருச்சபையையும் விட்டுப்பிரியாத புண்ணியாத்து
மத்திற்கும் குறிப்பென்றறிக.

வினு.—ஜலப்பிரளயம் எவ்வளவுகாலம் இருந்தது? நோவே ஜலம் குறைந்
பேழை எவ்விடத்தில் நின்றது? நோவே சர்வேசுரனுக்குச்
ததை எப்படி கண்டுகொண்டார்? நோவே சர்வேசுரனுக்குச்
செலுத்தினதென்ன? சர்வேசுரன் செய்த வாக்குத்தத்த
மென்ன? காகத்தையும் புறுவையும்பற்றிச் சொல்லப்பட்டி
ருப்பதென்ன?

---

## 8-ம் அதிகாரம்

**நோவேயின் குமாரர்** (கி. மு. 2342. உ. பி. 1658.)

நோவே சேம், காம், யாபேத் என்ற தன் மூன்று குமாரர்களோடு ஓர் திராட்சத் தோட்டம் பயிரிட்டார். ஒருநாள் அவர் திராட்ச இரசத்தின் குணத்தை யறியாமல் மிதமிஞ்சிச் சாப்பிட, அதிக மயக்கத்தினால் வஸ்திரம் விலகிய அந்தஸ்தோடு தன் கூடாரத்தில் படுத்திருந்தார்.

காம் என்பவன் தன் தகப்பனுருடைய அலங் கோல ஸ்திதியைக்கண்டு சிரித்துக்கொண்டு, தன் சகோதாருடன் பரிகாசமாகச் சொன்னான். இவர் களோ, பிள்ளைகளுக்குரிய பட்சத்தோடும், மேரை மரி

யாதையோடும் பின்புறமாகப்போய், ஓர் துப்பட்டியால் அவரை மூடினார்கள்.

நோவே நித்திரையைவிட்டு எழுந்தபின், நடந்த சங்கதியை அறிந்து, காமை சபித்து, சேமையும் யாபெத்தையும் ஆசீர்வதித்தார்.

## உ. பி. 1757.) பாபேல் கோபுரம் (கி. மு. 2243.

நோவேயின் சந்ததி அதிகரிக்கவே, ஒரேயிடத்தில் எல்லோரும் வசிக்க இடமில்லாமற்போனது. அவர்கள் அங்காரங்கொண்டவர்களாய், தாங்கள்



பிரிந்துபோவதற்குமுன் ஒரு பட்டணத்தையும், ஆகாயத்தை அளாவும்படியான ஒரு கோபுரத்தையும் கட்டத் தீர்மானித்து வேலையை, ஆரம்பித்தார்கள். ஆனால் சர்வேசுரன் அவர்களுடைய புத்தியற்ற வேலையை



அழிக்கவெண்ணித் திடீரென அவர்களுடைய பாஷையை மாற்றிவிடவே, ஒருவன் சொல்வது மற்றொருவனுக்குத் தெரியாமற்போயிற்று. ஒரே பாஷையாக முன்னிருந்தது; இப்பொழுது பல பாஷைகளாயின. அதனால் அவர்கள் கட்ட ஆரம்பித்த பட்டணத்தையும் கோபுரத்தையும் விட்டுவிட்டு அங்கங்கே சிதறிப்போனார்கள்.

சேமுடைய சந்ததியார் ஆசியாகண்டத்தின் பெரும்பாகத்தில் வசித்தார்கள். சர்வேசுரனால் தெரிந்துகொள்ளப்பட்ட இசாயேல் ஜனம் இவருடைய சந்ததியைச்சேர்ந்தவர்கள். காமுடைய சந்ததியார் ஆப்பிரிக்காவிலும், யாபேத்தென்பவரின் பிள்ளைகள் ஐரோப்பாவிலும் குடியேறினார்கள்.

புத்தி.—பாபேல் கோபுரத்தைக் கட்டின ஜனங்களின் கர்வமானது அவர்களுக்குள் பாஷையை வேறுபடுத்தி, குழப்பத்தை யுண்டுபண்ணி, அவர்களைப் பல தேசங்களுக்கும் சிதறடித்தது. ஆனால் அப்போஸ்தலர்களுடைய மனத்தாழ்ச்சியானது இஸ்பிரீத்துசாந்துவின் திருவிழாவன்று, அவர்களை ஒன்றாக ஐக்கியப்படுத்தியது.

வினா.—நோவேயின் குமாரர்களைப்பற்றிச் சொல்லப்பட்டதென்ன? நோவேயுக்கு என்ன சம்பவித்தது? காம் என்ன செய்தான்? சேம், யாபெத் என்பவர்கள் என்ன செய்தார்கள்? நோவே செய்ததென்ன? பாபேல் கோபுரத்தைப்பற்றி சொல்லப்பட்டிருப்பதென்ன? சர்வேசுரன் செய்ததென்ன? குழப்பமுண்டாவதற்குக் காரணமென்ன? ஜனங்கள் எங்கே போனார்கள்? சேமின் சந்ததியார் போன இடமெது? சேமின் சந்ததியார் யார்? காமின் சந்ததியார் எவர்? யாபெத்தின் பிள்ளைகளார்? பாபேல் கோபுரத்தைப்பற்றியும் இஸ்பிரீத்துசாந்துவின் திருவிழாவைப்பற்றியுஞ் சொல்லியிருப்பது என்ன?

## ஆதாம்முதல் நோவேவரைக்கும் இருந்த முதல் 10 பிதாப்பிதாக்களின் நாமங்களும் வயதுமாவன :

| | பெயர் | பிறப்பு | இறப்பு | வயது |
|---|---|---|---|---|
| 1. | ஆதாம் ... | ... | 930 | 930 |
| 2. | சேத்து ... | 130 | 1042 | 912 |
| 3. | ஏனோஸ் ... | 235 | 1140 | 905 |
| 4. | கயினான் ... | 325 | 1235 | 910 |
| 5. | மலலெயேல் ... | 395 | 1290 | 895 |
| 6. | யாரேத்து ... | 460 | 1422 | 962 |
| 7. | ஏனோக்கு ... | 622 | 987 | 365 |
| 8. | மத்துசலேம் ... | 687 | 1656 | 969 |
| 9. | இலாமேக் ... | 874 | 1651 | 777 |
| 10. | நோவே ... | 1057 | 2006 | 950 |

இதனால் பூர்வீக பிதாப்பிதாக்கள் எவ்வளவு தீர்க்காயுளோடு ஜீவித்தார்களென்று காணலாம். ஆதாம் 930 வருஷம் ஜீவித்தார். நோவேயின் தகப்பனாகிய இலாமேக் 874-ம் வருஷத்தில் பிறந்தார்; ஆகையால் நோவேயுடைய தகப்பனார் ஆதாமோடு 56 வருஷம் வசித்தார். நோவே அபிரகாமுடைய தகப்பனாகிய தாரே என்பவரோடு 128 வருஷம் ஜீவித்துவந்தார். இவ்விதமாக அபிரகாம் தொடங்கி ஆதாம்வரைக்கும் மூன்றுபேரிருந்தபடியால், ஆதிகாலந்தொடங்கி நடந்த சங்கதியெல்லாம் பாரம்பரியமா யறிந்துகொள்வது வெகு எளிதாயிருந்தது. இதைப்பற்றி வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கும் உலக சிருஷ்டிப்பையும் பூர்வீக சரித்திரங்களையும் பாரம்பரியமாய் அறிந்துதான் மோயீசன் எழுதிவைத்தார்.

முதல் யுகம் முற்றிற்று

# இரண்டாம் யுகம்

(அபிரகாம் அழைப்புமுதற்கொண்டு மோயீசன் வரைக்கும் 430 வருஷம் அடங்கியது)

---

## 9-ம் அதிகாரம்

### அபிரகாமின் அழைப்பு

ஆரான் பட்டணத்தில் வசித்த குஷ்டருக்குள் அபிரகாமென்கிற நீதிமான் ஒருவரிருந்தார். சர்வேசுரன் இவர்மூலமாக மெய்க்கடவுளின் ஞானத்தையும் உலக இரக்ஷகரில் நம்பிக்கையையும் மனுக்குலத்தில் நிலைநிறுத்த இவரைத் தெரிந்துகொண்டார். இக்காரணத்தைப்பற்றி, அபிரகாமென்பவருக்கு சர்வேசுரன் தரிசனை தந்து, நீ உன் சுயநாட்டையும் பந்துக்களையும் விட்டு ஓர் அன்னிய நாட்டுக்குப் போகவேணுமென்று கட்டளையிட்டு, நீர் மகாஜனத்தின் பிதாவாயிருப்பீரென்றும், சகல ஜனங்களும் உமதுமூலமாக ஆசீர்வதிக்கப்பட்டவர்களாவார்களென்றும் சொன்னார்.

அபிரகாமென்பவர் சர்வேசுரனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, தன் மனைவியாகிய சாறாள், தன் சகோதரன் மகன் லோத்து, தன் ஊழியரோடும், ஆடுமாடுகளோடும் பாலுந் தேனும் பொழியும் கானான் தேசத்துக்குப்போய்ச் சேர்ந்தார். அவ்விடத்தில் சர்வேசுரன் அபிரகாமுக்கு மறுபடியுந் தோன்றி, "இந்தத் தேசத்தை உனக்கும் உன் சந்ததியாருக்கும் கொடுப்போம்" என்று திருவாக்களிக்க, அபிரகாமென்பவர்

நன்றியறிந்தவராய் ஆண்டவருக்கு ஓர் பீடத்தைக் கட்டி பலி சமர்ப்பித்தார்.

வினா.—அபிரகாமைப்பற்றிச் சொல்லிருப்பதென்ன? சர்வேசுரன் அபிரகாமை எவ்விடத்திற்கு அனுப்பினார்? ஏன்? சர்வேசுரன் என்ன உடன்படிக்கை செய்தார்? அபிரகாம் எந்த தேசத்திற்குப் போனார்? கானான் தேசத்தைப்பற்றிச் சொல்லியிருப்பதென்ன? ......

## 10-ம் அதிகாரம்

### அபிரகாமின் புண்ணியங்கள்

அபிரகாம் சமாதானப்பிரியர். எப்படியென்றால் நாளாவட்டத்தில் ஆடுமாடுகளுக்கு மேய்ச்சல் குறைவால், தன்னுடையவும், தன் சகோதரன் மகன் லோத்துடையவும் ஊழியருக்குள் பெருத்த சண்டை சச்சரவு உண்டாயிற்று. அப்பொழுது தன் சுயநலத்தைவிட சமாதானத்தையே அதிகமாய் விரும்பி, அபிரகாம் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிவது நலமென்று கோரினார். ஆகையால் வலதுபக்கமாவது இடதுபக்கமாவது தன்னிஷ்டம்போல் போகலாமென்று லோத்துக்குச் சொல்ல, லோத்து யோர்தான் நதி பாயும் செழிப்பான தேசத்தைத் தெரிந்துகொண்டு சோதோம் பட்டணத்தில் குடியேற, அபிரகாம் எப்ரோனில் தங்கினார்.

இவர் சுயநலத்தின்மீது பற்றுதலற்றவர். இவர்களிருவரும் பிரிந்துபோன சொற்பகாலத்துக்குள் அன்னிய இராசாக்கள் சோதோம் கொமோறு என்னும் பட்டணங்களைக் கொள்ளையடித்து, லோத்தையும், அவருடைய ஆஸ்திபாஸ்திகளையும் கொண்டுபோன சங்கதி அபிரகாமுக்குத் தெரியவரவே, வெகு துக்கங்கொண்டு



தன் ஊழியரில் முந்நூற்றுப் பதினெட்டு பேர்களோடு மேற்சொன்ன இராசாக்களைத் துரத்தியடித்து, லோத்தையும் அவருடைய சொத்துக்களையும் மீட்டு, அவரைத் தன் சுயநாட்டுக்கு அனுப்பினார். அச்சமயத்தில்தான், சலேம் பட்டணத்தின் அரசனும் உன்னத கடவுளின் குருவுமாகிய மெல்கிசதேக் என்பவர் அபிரகாமை சந்தித்து, அப்பத்தையும், இரசத்தையும் பலிசெலுத்தி, அவரை ஆசீர்வதித்தார். அப்போது சோதோம் பட்டணத்து அரசன் அபிரகாமை யணுகி சகல கொள்ளைப்பொருட்களையும் எடுத்துக்கொண்டு சிறைப்பட்டவர்களைமாத்திரம் விட்டுவிடும்படி மன்றாடியும், அவர் அந்தக் கொள்ளைப்பொருட்களில் ஒன்றையும் எடுத்துக் கொண்டவரல்ல.

அபிரகாமின் விசுவாசம். ஒருநாள் இராத்திரி சர்வேசுரன் அபிரகாமை கூடாரத்து வாசற்படிக்கு வெளியே அழைத்துச் சொன்னதாவது: "உன் கண்களை ஏறெடுத்து ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்களைக் கூடுமானால் எண்ணிப்பார்; அவ்வளவாக உன் சந்ததி பூமியின்மேல் பலுகும்" என்றார். மறுபடியும் சர்வேசுரன் அபிரகாமுக்குப் பிரசன்னமாகி, முன் தாம் கொடுத்த வாக்கை உறுதிப்படுத்தி, தாம் அவரோடு செய்துகொண்ட உடன்படிக்கைக்கு அத்தாட்சியாக அவருக்கு ஒரு குமாரன் பிறப்பாரென்றும், அக் குழந்தைக்கு ஈசாக் என்று பெயரிடவேண்டுமென்றும் மொழிந்து, அதற்குக் கைம்மாறாக தமக்குப் பிரமாணிக்கமாய் ஊழியஞ்செய்யவேணுமென்று கட்டளையிட்டார். அபிரகாமும் ஆண்டவரின் வார்த்தையை நம்பி நடக்க, அவர் விசுவாசமும் கிரியையினால் உறுதிப்பட்டது அக்காலத்தில்தான் சர்வேசுரன் விருத்தசேதன சடங்கை ஏற்படுத்தினார்.

புத்தி.—அன்னிய அரசர்கள்மேல் அபிரகாம் கொண்ட வெற்றியானது நரக வல்லமையின்மேல் கிறீஸ்துநாதர் கொண்ட ஜெயத்துக்கு அடையாளமாகும். மெல்கிசதேக் என்பவர் அப்பத்தையும், இரசத்தையுங்கொண்டு செலுத்திய பலி இக்காலத்தில் நடக்கும் திவ்யபூசைக்கு குறிப்பாகும்.

வினா.—அபிரகாம் தாம் சமாதானப்பிரியரென்று எப்படிக் காட்டினார்? லோத்தைப்பற்றி சொல்லியிருப்பதென்ன? அவர் எங்கே போனார்? அபிரகாம் எங்கே வசித்தார்? சோதோம் கொமோரூவைப்பற்றி உனக்கு என்ன தெரியும்? சர்வேசுரன் அபிரகாமுக்குக் கொடுத்த வாக்கென்ன? சர்வேசுரன் அவருடன் செய்ததென்ன? ஈசாக்கென்பவர் யார்? சர்வேசுரன் ஏற்படுத்திய சாங்கிய மெது?

---

## 11-ம் அதிகாரம்

### அபிரகாமின் உபசாரணை

அதி உக்கிரமமாய் வெயிலெரித்துக்கொண்டிருந்த ஒருநாள் அன்னியரான மூவர் அபிரகாமின் கூடாரத்தண்டை வந்தார்கள். அபிரகாம் அவர்களைக் கண்டவுடனே தாழப்பணிந்து வந்தனஞ்செய்து, அவர்களில் முக்கியமானவரைப் பார்த்து, "ஐயா, பிரபுவே, என் கூடாரத்தைக் கடந்துபோகாமல் நான் உங்களுக்குப் பரிமாறும் அப்பத்தைப் புசித்து சற்று இளைப்பாறுங்கள்" என்று சொன்னார்.

அப்போது சாராள் பரபரப்புடன் ரொட்டிகளைச் சுட ஆரம்பித்தாள். அபிரகாம் கொழுத்த இளங்கன்று ஒன்றைப் பொறுக்கி யெடுத்து ஊழியக்காரரிடம் கொடுத்து பக்குவமாய்ச் சமைக்கக் கட்டளையிட்டார். யாவும் தயாரானவுடனே, பால் நெய்யுடன் மேற்



சொன்ன உணவுகளைத் தாமே கொண்டுபோய் அவர்களுக்குப் பரிமாறினார்.

அம்மூவரும் புசித்தானபிறகு, அவர்களில் முக்கியமானவர் அபிரகாமைப் பார்த்து, "நான் வருகிற வருஷம் திரும்பி இவ்விடம் வருவேன்; அப்போது உமது மனைவி சாராள் ஒரு குமாரனைப் பெற்றிருப்பாள்" என்று சொன்னார். இதை அபிரகாம் கேட்டு, அப்படிச் சொன்னவர் இரு சம்மனசுக்களோடுவந்த சர்வேசுரன்தானென்று அறிந்துகொண்டார்.

அபிரகாமின் பிறசிநேகம். முன்சொன்ன மூவரும் சோதோம் பட்டணத்துக்குப் பிரயாணப்பட்டபோது, அபிரகாமும் அவர்களோடு கொஞ்சதூரம் துணையாகப்போனார். அப்படிப் போகும்போது, ஆண்டவர் அவரைப் பார்த்து சோதோம் கொமோரு பட்டணங்களில் நடக்கும் அக்கிரமங்களைப்பற்றி அதை அழிக்கப்போகிறோமென்றதை அபிரகாம் கேட்டவுடனே அதிக பரிதாபப்பட்டு, "தேவரீர் துஷ்டருடன் நல்லவரையும் அழிக்க இருக்கின்றீரோ! அப்பட்டணத்தில் ஐம்பதுபேர் நீதிமான்கள் இருந்தால் அவர்களைப்பற்றியாவது அப்பட்டணங்களைக் காப்பாற்ற மாட்டீரோ? என, அப்படியே ஆகட்டுமென்று ஆண்டவரும் சம்மதித்தார். ஆனால் ஐம்பதுபேர்கூட நீதிமான்கள் அவ்வூர்களில் இருந்ததில்லை. பின்னையும் அபிரகாம் அத் தொகையைக் குறைத்துக் குறைத்துப் பார்த்ததில் பலமுறை மன்றாடினார். கடைசியாகப் பத்துப்பேராவது நல்லவர்கள் அங்கு இருந்ததில்லை. ஆகையால், மறுநாள் காலையில் அப்பட்டணங்களுக்கு நூதனமும் பயங்கரமுமான மகா தண்டனை நேரிட்டது.

ஆண்டவரால் அனுப்பப்பட்ட இரு தூதர்கள் சோதோமிலுள்ள லோத்து வீட்டுக்குப்போய் லோத்து, அவருடைய மனைவி, இரு குமாரத்திகள் ஆக நாலு பேரையும் அவ்விடத்தினின்று அப்புறப்படுத்தி, அவ்வூர்களைத் திரும்பிப்பார்க்காது போகும்படி அவர்களுக்கு ஆக்கியாபித்தார்கள். உடனே வானத்திலிருந்து கெந்தகங் கலந்த நெருப்பு மழை பெய்து, அப்பட்டணங்களையும், அதிலுள்ள சமஸ்த ஜீவராசிகளையும் அழித்துவிட்டது. ஆனால் லோத்தின் பெண்சாதி சம்மனசுக்களுடைய கட்டளையை மீறி திரும்பிப்பார்த்ததால், உப்புச்சிலையாக சமைக்கப்பட்டாள். அழிக்கப்பட்ட ஷை நகரங்கள் இருந்த இடம் இப்போது "சாக்கடல்" என்று சொல்லப்படுகிறது. அக்கடலின் ஜலம் கசப்புள்ளதாகி மனிதர் செய்த பாவங்களின்மேல் சர்வேசுரனுக்குண்டான கோபத்தின் ஞாபகார்த்தமாயிருக்கிறது.

வினா.—அபிரகாமின் கூடாரத்தண்டையில் வந்தது யார்? சாராளும் அபிரகாமும் என்ன செய்தார்கள்? அவர்களிடம் வந்த அன்னியா என்ன வாக்களித்தார்கள்? அபிரகாம் யாரைத் தொடர்ந்துபோனார்? ஆண்டவர் அவருக்குச் சொன்னதென்ன? எவ்விஷயத்தைப்பற்றி அவர் பரிந்து பேசினார்? மறுநாள் காலை யென்ன சம்பவித்தது? யார் காப்பாற்றப்பட்டது? லோத்தின் பெண்சாதிக்கு என்ன கதி வாய்த்தது? சோதோம் கொமோரு எவ்விதம் மாறிவிட்டன? இப்போது அதன் பெயரென்ன?



## 12-ம் அதிகாரம்

### அபிரகாம் தன் சுயமனதை ஆண்டவருக்கு தத்தஞ்செய்தல்

முன் ஆண்டவர் மொழிந்ததுபோல், சோதோம் பட்டணம் அழிந்த மறுவருஷத்தில் ஈசாக்கு பிறந்தார். இவருடைய தந்தையாகிய அபிரகாம், இவர் தம் தளர்ந்தபிராயத்தில் பிறந்ததால் இவரை மிக்க அன்புடன் சினேகித்துவந்தார். சர்வேசுரன் இவரை சோதித்தறியும்படி, ஈசாக்கை தமக்குத் மோரியா பர்வ



தத்தின்மேல் பலியாக செலுத்தவேணுமென்று கட்டளையிட்டார். அபிரகாம் யாதோர் முறைப்பாடுமின்றி, எழுந்து விறகு சுமையை ஒரு கழுதையின்மேலேற்றி, தன் மகனையும் இரண்டு ஊழியரையும் அழைத்துக்கொண்டு பிரயாணப்பட்டார். மூன்றும் நாள் ஊழியரை ஒரு இடத்தில் நிறுத்தி, தன் மகன் தோளின்மேல் விறகுக்கட்டைச் சுமத்தி மலைமேலேறிப்போனார்.

நடந்துபோகும்போது ஈசாக்கு தன் தகப்பனைப் பார்த்து, " அப்பா, இதோ விறகும் நெருப்பும் இருக்கின்றனவே, பலி வஸ்து எங்கே என்று கேட்க, அவர் " மகனே சர்வேசுரன் கொடுப்பார்" என்று சொன்னார். சர்வேசுரன் அவர்களுக்குக் காட்டிய இடம் வந்து சேரவே, அபிரகாம் அங்கு ஒரு பீடத்தைக் கட்டி, அதன்மேல் விறகைப் பரப்பி ஈசாக்கின் காலையுங் கையையுஞ் சேர்த்துக்கட்டி, அவனை அதன்பேரில் கிடத்தி, தன் பிரிய குமாரனை வாளால் வெட்டக் கையோங்கினார்.

அவ்வேளையில் ஓர் தேவதூதன் அவரைத் தடுத்து, " பையனை வெட்டாதேயும்! ஆண்டவரினிமித்தம் உமது ஏக குமாரனை இழக்கத் துணிந்தபடியால் சர்வேசுரன் உமதுபேரில் சந்தோஷப்பட்டார்" என்று சொன்னதைக்கேட்ட அபிரகாம், தன் கண்களை ஏறெடுத்துத் திரும்பிப்பார்க்கையில் புதர்ச்செடியில் கொம்பு மாட்டிக்கொண்டிருந்த ஒரு செம்மறியாட்டைக்கண்டு, அதைப் பிடித்துத் தமது குமாரனுக்குப்பதிலாய் பலிசெலுத்தினார்.

பிறகு தேவதூதன் அவரிடத்தில் பேசி, " நீர் செலுத்திய பலியைப்பற்றி ஆண்டவர் உம்மை ஆசீர்வதித்து, உமது சந்ததியைக் கடல் மணலுக்கொப்பாகப் பெருகச்செய்வார். மேலும் உம்மிடத்திலிருந்து ஒருவர் பிறப்பார். அவர்மூலமாய் சகல ஜனங்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்" என்றார்.

வினா.—யார் பிறந்தது? சர்வேசுரன் அபிரகாமின் விசுவாசத்தை எப்படி பரீட்சித்தார்? ஈசாக்கு சொன்னதென்ன? அபிரகாம் செய்ததென்ன? ஈசாக்கு எப்படி காப்பாற்றப்பட்டார்? சர்வேசுரன் செய்த வார்த்தைப்பாடுகளென்ன?



## 13-ம் அதிகாரம்

### ஈசாக்கு இரெபேக்காளை விவாகஞ் செய்துகொண்டது

(கி. மு. 1952. உ. பி. 2148)

அபிரகாம் அதிக விருத்தாப்பியானதால் தேவபயமுள்ள ஒரு மனைவியைத் தன் குமாரனுக்குத் தேடவேண்டுமென்று ஆசைகொண்டவராய், பிரமாணிக்கமுள்ள ஊழியனாகிய எலியசேர் என்பவனைக் கூப்பிட்டு, மெசொபொத்தாமியாவுக்குப்போய் தன் பந்துஜனங்களுக்குள் ஈசாக்குக்குப் பெண் விசாரித்துவரும்படி அனுப்பினார். எலியசெர் என்பவன் சீதனங்கள் ஏற்றப்பட்ட 10 ஒட்டகங்களை ஓட்டிக்கொண்டு, அபிரகாமின் சகோதரன் வசிக்கும் ஆரான் பட்டணத்துக்குப் புறப்பட்டான்.

எலியசெர் பட்டணத்தைச் சேர்ந்ததும், ஸ்திரீகள் தண்ணீர் சேந்தும் கிணற்றண்டை ஒட்டகங்களை இளைப்பாறவிட்டு, சர்வேசுரனை மன்றாடின விதமாவது: " ஆண்டவரே, என் எஜமான்பேரில் இரக்கங்கொண்டு, இன்று உதவியாக வாரும்; கொஞ்சத்துக்குள் இப்பட்டணத்துப் பெண்கள் ஜலமொள்ள வருவார்கள். அப்போது 'பானஞ் செய், உன் ஒட்டகங்களுக்கும் ஜலம் வார்ப்பேன்' என்று சொல்லும் மாதே தேவரீரின் ஊழியனாகிய ஈசாக்கின் மனையாட்டியென்று நான் அறிந்துகொள்ளக் கிருபைசெய்யும்" என்று வேண்டிக்கொண்டான்.

இவ்வண்ணஞ் செப முடியாமுன்னமே, அதிக சௌந்தரியமும், மேரைமரியாதையுமுள்ளவளான இரெபேக்காள் என்னுங் கன்னிகை ஒரு குடத்தையெடுத்துக்கொண்டு அங்கு வந்தாள். அவள் ஜலம்

மொண்டானதும் எலியசெர் அவளை யணுகி, தனக்குக் குடிக்க கொஞ்சம் ஜலங் கொடுக்கும்படி கேட்டான். அவளும் சந்தோஷமாக குடத்தைத் தண்ணீரோடு கொடுத்ததுமன்றி, "ஐயா வேண்டுமானால், உமது ஒட்டகங்களுக்கும் வேண்டிய ஜலத்தை மொண்டு ஊற்றுவேன்" என்று சொன்னாள்.

ஊழியன் இதைக் கேட்கவே, அதிசயப்பட்டு, ஒட்டகங்கள் ஜலம் குடித்தானதும், ஓர் ஜதைக் கம்மலையும், பொன்காப்பையும் அவளுக்குக் கொடுத்து, "அம்மா நீ யாருடைய மகள்? நான் தங்கியிருக்க உன் தகப்பன் வீட்டில் விடுதி யகப்படுமா?" என்று கேட்டான். அதற்கு அவள் "நான் நாகோர் மகனாகிய பாதுவேலின் குமாரத்தி. எங்கள் வீட்டில் தங்குவதற்கு விசாலமான இடமும், புல் வைக்கோலுமுண்டு" என்று பதில் சொன்னாள். எலியசேர் இதைக் கேட்டு சர்வேசுரன் தனக்குச் செய்த சகாயங்களுக்காக அவரை வணங்கித் தோத்திரஞ்செய்தான்.

பிறகு அவன் பாதுவேலின் விடுதிக்குப்போய், தான் வந்த சங்கதியைச் சொல்வதற்குமுன் சாப்பிடவும் குடிக்கவுமாட்டேன் என்றான். வந்த காரணத்தையும், அவனுக்குச் சம்பவித்த விஷயங்களையும்பற்றிக் கேள்விப்பட்டு, இதுவெல்லாம் சர்வேசுரனுடைய திருச்சித்தத்தினால் உண்டானதென்றும், ஆகையால் இரெபெக்காளைத் தன்னுடன் கூட்டிக்கொண்டுபோகலாமென்றும் பெண்ணின் அண்ணனாகிய லாபானும் தகப்பனாகிய பாதுவேலும் சொன்னார்கள்.

அப்போது எலியசெர் மறுபடியும் சர்வேசுரனை ஆராதித்து, பொன் வெள்ளிப் பாத்திரங்களையும் விலையுயர்ந்த வஸ்திராபரணங்களையும் இரெபெக்காளுக்குக்



கொடுத்தான். அவளுடைய தாயாருக்குஞ் சகோதரர்களுக்குங்கூட வெகுமதிகளை யளித்தான். அவர்கள் செய்த விருந்தை யாவரும் புசித்து சந்தோஷங்கொண்டாடினார்கள். மறுநாள் காலையில் இரெபெக்காள் தன் தாய்தந்தையருடையவும், சகோதரருடையவும் ஆசீர் பெற்று ஈசாக்குக்கு மனைவியாகும்படி தன் தகப்பன் வீட்டைவிட்டுப் புறப்பட்டாள்.

அபிரகாம் என்பவர் வயோதிகராய் 175௵ சீவித்தார். இவருடைய சகல வேலைகளையும் சாவேசுரன் ஆசீர்வதிக்க, தேவ வரங்களாலும், சகல புண்ணியங்களாலும் நிறைந்தலங்கரிக்கப்பட்டவராய் மரித்தார்.

வினா.—அபிரகாம் என்ன தெரிந்துகொள்ள விருப்பங்கொண்டார்? யாரை அனுப்பினார்? எலியசெர் செய்த ஜெபமென்ன? அது எப்படி நிறைவேறிற்று? எலியசெர் இரெபெக்காளுக்குக் கொடுத்ததென்ன? அவள் அவனுக்கு என்ன சொன்னாள்? எலியசெர் எங்கே போனான்? என்ன நேரிட்டது? இரெபெக்காள் எவ்விடம் போனாள்? அபிரகாம் இறந்தபோது அவருக்குப் பிராயமென்ன?

## 14-ம் அதிகாரம்

### ஏசாவும் யாக்கோபும்

(கி. மு. 1832. உ. பி. 2168)

ஈசாக்கும் இரெபெக்காளும் 20 வருஷகாலமாய் கூடி வாழ்ந்தும், அவர்களுக்குப் புத்திரசந்தானமுண்டாகவில்லை. ஆகையால், அவர்கள் சர்வேசுரனை மன்றாடினதின்மேல் ஜேஷ்டனாகிய ஏசா, கனிஷ்டனாகிய யாக்கோப் என்ற இரு குமாரர்களை அவர்களுக்குச் சர்வேசுரான் தந்தார்.

ஏசா என்பவன் பிங்கல நிற உரோமம் நிறைந்தவனும் முரடனுமாயிருந்தான். ஆனால் யாக்கோப் மெல்லிய உடலுடையவனும், சாதுவானவனுமாகவிருந்தான். ஏசா வேடத் தொழிலையும் விவசாயத் தொழிலையுஞ் செய்ய, யாக்கோபு ஆடுமாடுகளை மேய்த்துவந்தான்.

துணிகரமுள்ளவனும் தைரியசாலியுமாகிய ஏசாவை ஈசாக்கு சிநேகித்து, அவன் கொண்டுவரும் வேட்டை மாமிசத்தைப் புசித்து சந்தோஷங்கொள்வார். இரெபெக்காளோ சாதுவாகிய யாக்கோபை நேசித்துவந்தாள். ஏனெனில், அவன் தன் அண்ணன்மேல் அதிகாரஞ் செலுத்துவானென்று சர்வேசுரன் அவளுக்கு அறிவித்தார்.

ஒருநாள் யாக்கோபு பலகாரத்தைக் கையில் வைத்துக்கொண்டிருக்கும்போது, ஏசா வேட்டையாடி மெத்த களைப்புள்ளவனாய்த் தன் தம்பியிடம் வந்து எனக்குக் கொஞ்சம் பலகாரங் கொடு என்றான். அதற்கு யாக்கோபு "உன் ஜென்ம சுதந்தரத்தை யெனக்குக் கொடுத்தாலொழிய பலகாரங் கொடேன்" என்று சொன்னதற்கு, ஏசா அதை யோர்பொருட்டா யெண்ணாமல், தன் சுதந்தரத்தைப் பலகாரத்துக்காக தன் தம்பிக்கு விற்றுப்போட்டான்.

ஈசாக்கென்பவர் விருத்தாப்பியராகி, கண்பார்வை மங்கிவிட்டது. ஒருநாள் இவர் ஏசாவை தன் படுக்கைப் பக்கமாய்க் கூப்பிட்டு, நீ காட்டுக்குப்போய் வேட்டையாடி அவ்விறைச்சியை ருசிகரமாய்ச் சமைத்துவைத்தால், புசித்து நான் மரணமாவதற்குமுன் உன்னை ஆசீர்வதிப்பேனென்று சொன்னார். இதை இரெபெக்காளும் கேட்டுக்கொண்டேயிருந்தாள். ஏசா வெளிப்பட்டுப் போனவுடனே, அவள் யாக்கோபைக்



கூப்பிட்டு "நீ சுறுக்காய்ப்போய் இரண்டு வெள்ளாட்டுக்குட்டிகளைக் கொண்டுவா. அதை நான் நன்றாய்ச் சமைத்து உன்னிடங் கொடுப்பேன். நீ அதை உன் தகப்பனுக்கு சாப்பிடக்கொடுத்து, அவருடைய ஆசீர்வாதத்தை ஏசாவுக்கு பதில் நீயே பெற்றுக்கொள்" என்று சொன்னாள்.

தகப்பனார் தன் மோசத்தைக் கண்டால், தன்னை ஆசீர்வதிப்பதற்குப் பதிலாக சாபமிடுவாரென்று பயந்து, அதற்கு யாக்கோபு சம்மதிக்கவில்லை. ஆனால் இரெபெக்காள் அவனைத் தைரியப்படுத்தி ஆட்டுக்குட்டியின் தோலை அவனுக்குப் போர்த்தி, அவன் தகப்பனிடமனுப்பினாள். ஈசாக் என்பவர் சந்தேகப்பட்டு, யாக்கோபைத் தன்னிடமழைத்துத் தொட்டுப்பார்த்து, "குரலோ யாக்கோபின் குரலாகவும், கைகளோ ஏசாவின் கைகளாகவுமிருக்கின்றன" என்று சொல்லி அவன் கொண்டுவந்ததைப் புசித்து அவனை ஆசீர்வதித்தார்.

யாக்கோபு போன கொஞ்ச நேரத்திற்குள் ஏசா தான் வேட்டையாடினதைக் கொண்டுவந்து, நடந்த விஷயத்தை யறிந்து அதிக கோபங்கொண்டவனாய், "முன் என் ஜென்ம சுதந்தரத்தைத் திருடிக்கொண்டான்; இப்போதோ என் தகப்பனுடைய ஆசீர்வாதத்தையும் அபகரித்துக்கொண்டான்" என்று யாக்கோபின்மேல் குற்றங் கூறினான். அன்றுமுதல் அவன் யாக்கோபைப் பகைத்து அவனைக் கொன்றுவிட நினைத்தான். இரெபெக்காள் இதைக்கண்டு ஏசாவின் கோபந் தணியும்வரையில் யாக்கோபை ஆரானூரிலுள்ள தன் அண்ணன் லாபான் வீட்டில் போயிருக்கும்படி புத்தி சொல்ல, யாக்கோபும் அதற்குச் சம்மதித்து, உடனே பிரயாணப்பட்டுப்போனான்.

புத்தி.—ஏசா தன் ஜென்ம சுதந்தரத்தை யாக்கோபுக்கு விற்றுவிட்டதானது, யூதர் கிறீஸ்துநாதரையும் அவருடைய சுவிசேஷத்தையும் மறுத்து, தங்கள் மோட்ச சுதந்தரத்தைப் போக்கடித்துக்கொள்ள, அஞ்ஞானிகள் அவர்களுக்குப் பதிலாய் தெரிந்துகொள்ளப்பட்டதற்கு அடையாளமாயிருக்கிறது.

வினா.—ஈசாக்குக்கும் இரெபெக்காளுக்கும் பிறந்த பிள்ளைகளார்? ஏசா என்ன தொழிலாளி? யாக்கோபின் தொழிலென்ன? யாக்கோபு என்ன சமைத்துவைத்திருந்தான்? அதைக் கேட்டதார்? யாக்கோபு தனக்கு எதை விற்கவேணுமென்று கேட்டான்? ஏசா தன் ஜென்மசுதந்தரத்தை என்னத்துக்காக விற்றுவிட்டான்? இப்படி மாற்றிக்கொண்டது எதைக் குறிப்பிக்கிறது? யாக்கோபு தன் தகப்பன் ஆசீர்வாதத்தை யெப்படிப் பெற்றுக்கொண்டான்? யாக்கோபு செய்த ஆட்சேபனை யென்ன? அவன் அனுகூலப்பட்டது எப்படி? ஏசா இந்த மோசத்தைக் கண்டுபிடித்தபோது அவன் செய்ததென்ன? யாக்கோபு எங்கே போனான்?

---

## 15-ம் அதிகாரம்

### யாக்கோபு ஓடிப்போய் லாபானோடு வசித்தது

(கி. மு. 1755. உ. பி. 2245.)

**யா**க்கோபு பிரயாணப்பட்டுப்போகையில் ஓரிடத்தில் இருட்டிப்போனதால் நித்திரைசெய்யும்படி கல் ஒன்றை எடுத்துத் தலையணையாக தன் தலையின்கீழ் வைத்து அங்குதானே நித்திரைபோனார். அவர் தூங்கும்போது பூலோகத்திலிருந்து பரலோகமட்டும் எட்டும் ஒரு ஏணி சாத்தப்பட்டதாகவும், அதன்பேரில் தேவதூதர் ஏறுவதும் இறங்குவதுமாயிருக்க, அதன் நுனியின்மேல் ஆண்டவர் சாய்ந்திருப்



பதாகவுங் கண்டார். ஆண்டவர் அவருடன் பேசி, அவர் அப்போது படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த பூமியை அவருக்கும் அவர் பிதிர்வழிக்கும் கொடுப்பதாகவும் வாக்குத்தத்தஞ்செய்தார். யாக்கோபு விழித்துக்கொண்டதும் தன் தலையின்கீழிருந்த கல்லை யெடுத்து நட்டு, அதை அபிஷேகஞ்செய்து அந்த இடத்தை பெத்தல் அதாவது தேவகிரகம் என்று அழைத்தார்.

யாக்கோபு தன் பிரயாணத்தைத் தொடர்ந்து நடத்தி, ஒரு கிணற்றைச்சுற்றி மூன்று ஆட்டுமந்தைகள் படுத்திருந்தவிடம் வந்துசேர்ந்தார். அவர் அங்கிருந்த இடையரைப்பார்த்து லாபான் என்பவர் உங்களுக்குத் தெரியுமாவென்று கேட்க: ஆம், தெரியும், இதோ அவருடைய மகள் ராக்கேல் மந்தையை ஓட்டிக்கொண்டுவருகிறாள் பாரும், என்று சொன்னார்கள். யாக்கோபு அவளைக் கண்டவுடனே கிணற்றின்மேல் போட்டிருந்த கல்லைப் புரட்டி, தானும் ராக்கேலுமாக மந்தைக்குத் தண்ணீர் காட்டி, தான் இன்னாரென்று அவளுக்குத் தெரியப்படுத்தினார்.

அவர் தன் அத்தை மகனென்று ராக்கேலறிந்து, வீட்டுக்கு வேகமாய் ஓடித் தன் தகப்பனுக்குச் சொல்ல, அவரும் சுறுக்காய் வந்து யாக்கோபைக் கண்டு, அவரைக் கட்டி யாவணைத்துத் தன் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டுபோனார். யாக்கோபு இருபது வருஷகாலம் லாபானுடைய மந்தை மேய்த்துக்கொண்டிருந்தார். லாபான் யாக்கோபுக்குப் பலவிதத்திலும் கஷ்டப்படுத்த நினைத்தும், சர்வேசுரன் யாக்கோபை ஆசீர்வதித்து மிகுந்த பாக்கியவானாகச் செய்தார். காலத்தில் யாக்கோபு ராக்கேலையும், அவள் சகோதரி லீயாளையும் விவாகஞ்செய்துகொண்டார்.

புத்தி.—பெத்தெல் சேசுக்கிறீஸ்துநாதர் வசிக்கும் திருச்சபையின் சாயலாயிருப்பதுடன், அந்த அதிசய ஏணியில் ஏறி யிறங்கிக்கொண்டிருந்த சம்மனசுக்கள் நம்முடைய செபதபங்களை சர்வேசுரன் சந்நிதிக்குக் கொண்டுபோய்ச் செலுத்தி, நமக்கு அவசரமான வரப்பிரசாதங்களை அவர்கள் திரும்பக் கொண்டுவருவதற்கும் அடையாளமாகும்.

வினா.—யாக்கோபின் ஏணியைப்பற்றிய விவரத்தைச் சொல்லு? சர்வேசுரன் என்ன வாக்குத்தத்தஞ் செய்தார்? பெத்தெலென்பது எது? பெத்தெலைப்பற்றியும் திருச்சபையைப்பற்றியும் என்ன சொல்லியிருக்கிறது? யாக்கோபு கிணற்றண்டை யாரைக் கண்டார்? அப்போது சம்பவித்ததென்ன? எவ்வளவுகாலம் யாக்கோபு லாபானுக்கு ஊழியஞ் செய்துவந்தார்? யாரைக் கலியாணஞ்செய்துகொண்டார்?

## 16-ம் அதிகாரம்

### யாக்கோபு திரும்பிவந்தது

(கி. மு. 1735. உ. பி. 2265.)

யாக்கோபுக்குண்டான மிதமிஞ்சின ஆஸ்தியைக் கண்டு லாபான் அதிக காய்மகாரங்கொண்டார். யாக்கோபு என்பவர் சர்வேசுரனுடைய கட்டளைப்பிரகாரம் தன் ஊழியரையும், ஆடு, மாடு, ஒட்டகங்கள், கழுதைகள் முதலியவைகளையுஞ் சேர்த்துக்கொண்டு தன் சுயநாட்டுக்குப் புறப்பட்டார். கானான் தேசத்தின் எல்லையாகிய யோர்தான் நதிக்கரை வந்துசேரவே, ஏசா தன்பேரில் இன்னுங் கோபங்கொண்டிருப்பானென்று நினைத்துப் பயந்து, அவனோடு சமாதானஞ் செய்யும்படி தூதரை யனுப்பினார். ஆனால் ஏசா யாதோர் பதில் சொல்லாமல் நானூறு பேருடன் தன் சகோதரனை யெதிர்நோக்கிப் புறப்பட்டான்.



யாக்கோபு இதைக் கேட்கவே, அதிகமாகப் பயந்து தன் அண்ணன் கையினின்று தன்னைக் காப்பாற்றும்படி சர்வேசுரனைப் பிரார்த்தித்துக்கொண்டார். அன்று இராத்திரி ஓர் தேவதூதன் அவருக்குத் தோன்றி காலைவரையில் அவரோடு மல்லுக்கட்டினார். தேவதூதன் அவரை விட்டுப்போகுமுன் அவருடைய பெயரை மாற்றி இஸ்ராயேல் என்று பெயரிட்டார். இஸ்ராயேல் என்றால் தேவனோடு போராடி மேற்கொண்டவனென்று அர்த்தம்.

மறுநாட் காலையில் ஏசா வருவதைக்கண்ட யாக்கோபு, தன் பிள்ளைகளையும், ஊழியரையும், மங்கைகளையும், இரு பிரிவாய்ப் பிரித்து, பிறகு, ஏசாவைச் சந்திக்கும்படி எதிராகப்போய், அவனுக்குமுன் ஏழுதரம் தாழ்ந்து வணங்கினார். பிறகு இருசகோதரரும் ஒருவரையொருவர் கட்டி யாவணைத்துக்கொண்டு சந்தோஷக்கண்ணீர்விட்டார்கள். யாக்கோபின் பிள்ளைகளும் ஏசாவை வணங்கினார்கள்.

கொஞ்ச நேரத்திற்குப்பின் சகோதரரிருவரும் ஒருவரையொருவர் விட்டுப்பிரிந்து அவரவர் வழியே போனார்கள். யாக்கோபு தெய்வச்செயலால் தான் இரக்ஷிக்கப்பட்டதாக நன்றியறிந்த உணர்ச்சிகொண்டு கானான் தேசம் வந்துசேர்ந்தார். அப்போது விருத்தாப்பியரான அவருடைய தகப்பனார் அவரைக்கண்டு சந்தோஷப்பட்டு, தன் குமாரன் திரும்பிவந்ததைப்பற்றி சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்தார். ஈசாக்கு 180 வயது நடக்கும்போது மரணமடைய, ஏசாவும் யாக்கோபும் அவரைப் பூஸ்தாபிதஞ் செய்தார்கள்.

புத்தி.—தேவதூதன் யாக்கோபோடு செய்த இந்த யுத்தமானது திருச்சபையின் ஸ்பஷ்டமான அடையாளமாம்.

அஞ்ஞான சக்ரவர்த்திகளும், வேதவிரோதிகளும், சகலத்தையும் பார்க்க நரகப்பேய்களும் அதனோடு இடைவிடாமல் யுத்தம் செய்துவந்தார்கள். ஆனால் தேவதூதன் யாக்கோபை மேற்கொள்ளாததுபோல் திருச்சபையானது தோர்வையடையாமல் கடைசி காலம்வரைக்கும் ஜெயித்து நிலைத்திருக்கும்.

வினா.—லாபான் யாக்கோபை நடத்தின விதமெப்படி? யாக்கோபு என்னத்தை ஒன்றாகச் சேர்த்தார்? யோர்தான் ஆற்றங்கரையில் சம்பவித்ததென்ன? யாக்கோபு யாரோடு மல்லுக்கட்டினார்? இஸ்ரயேல் என்றால் அர்த்தமென்ன? யாக்கோபு செய்த யுத்தம் எப்படி திருச்சபையைக் குறிப்பிக்கிறது? ஏசாவும் யாக்கோபும் எப்படிச் சந்தித்துக்கொண்டார்கள்? ஈசாக்கு என்ன வயதில் மரணமடைந்தார்?

---

## 17-ம் அதிகாரம்

### சூசை தன் தந்தைவீட்டிலிருக்கையில் நடந்த வரலாறு

யாக்கோபுக்கு பன்னிரண்டு பிள்ளைகள் இருந்தார்
கள். அவர்களில் சூசை என்பவர் நல்ல குண
முள்ளவராகையால் அவருடைய தந்தையானவர் எல்
லோரையும் பார்க்க அவரை யதிகமாய் நேசித்துவந்
தார். யாக்கோபு சூசைக்குப் பற்பல வர்ணமுள்ள
அங்கியைச் செய்துகொடுத்திருந்ததைக்கண்டு மற்ற
சகோதரர் அவர்மீது காய்மகாரங்கொண்டார்கள்.

தம்முடைய சகோதரர் மந்தைகளை மேய்த்துக்
கொண்டிருக்கையில் ஒருநாள் அடாத ஓர் குற்றத்தைச்
செய்ததைக்கண்டு, சூசை அதைப்பற்றி தன் தகப்ப
னுக்குச் சொன்னார். அன்றுமுதல் அவர்களுடைய
காய்மகாரம் அதிகரித்தது.



வேறோர் சமையத்தில், சூசை தான் கண்ட
கனவை தன் சகோதரருக்குச் சொன்னார். அதாவது:
அவர் தன் சகோதரரோடு வயலில் அரிக்கட்டுகளைக்
கட்டிக்கொண்டிருந்ததாகவும், சடுதியில் தன்னரிக்
கட்டு எழுந்து நிற்க, மற்றவர்களுடையதுகள் தன்ன
ரிக்கட்டைச் சூழ்ந்து அதை வணங்கினதாகவும்
சொல்ல, "அடே! நீ எங்களுக்கு இராசாவாகவாயி
ருக்கப்போகிறாய்?" என்று அவரைக் கடிந்து அதிக
மதிகமாய் அவரைப் பகைத்துவந்தார்கள்.

சூசை வேறொரு கனவையுங் கண்டார். அதில்
சூரியனுஞ் சந்திரனும் பதினொரு நட்சத்திரங்களும்
தன்னை வணங்கினதாகச் சொல்ல, இதை யறிந்த அவ
ருடைய தகப்பன்: "நானும் உன் தாயும் சகோதரர்
களும் உன்னை வணங்கவேண்டுமோ?" என்று கண்டித்
தார். ஆனால் யாக்கோபு என்பவர் இவைகளையெல்
லாம் தியானித்துப்பார்த்து சர்வேசுரன் தன் மகனைக்
கொண்டு அனேக அரிய காரியங்களைச்செய்ய இருப்ப
தாக அறிந்துகொண்டார்.

வினா.—சூசையைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது? அவர் அவருடைய சகோதரர் ஏனவரைப் பகைத்தார்கள்? அவர் கண்ட கனவுகளென்ன?

---

## 18-ம் அதிகாரம்

### சூசை எஜிப்து ராச்சியத்தில் விற்கப்படுகிறார்

(கி. மு. 2714.
உ. பி. 2286.)

சிறிது காலத்திற்குப்பிறகு, ஓர் நாள் யாக்கோபு
சூசையை அழைத்து, சிக்கேமில் ஆடுமாடுகளை
மேய்த்துக்கொண்டிருந்த அவருடைய சகோதரர் எப்

படி இருக்கிறார்களென்று பார்த்துவரும்படி அவரை அனுப்பினார். சூசை வருவதைக்கண்ட அவருடைய அண்ணன்மார் அவரைக் கொன்று சமீபத்திலிருந்த ஒரு கிணற்றில் எறிந்துவிட தீர்மானித்துக்கொண்டார்கள். எல்லோருக்கும் மூத்தவனான ரூபன் என்பவன் இந்தக் குரூர எண்ணத்தைப்பற்றிக் கேள்விப்பட்டு சூசையை யெப்படியாவது அவர்களுடைய கையி



னின்று தப்புவிக்குப்படி மனங்கொண்டவனாய், அவரை அங்கிருந்த ஒரு வெறுமையான கிணற்றில் இறக்கிவிட்டால் நலமாயிருக்குமென்று சொல்லி, அதற்கு அவர்களைச் சம்மதிப்பித்தான். சூசை வந்துசேரவே, அவருடைய பலவர்ண அங்கியை உரிந்துவிட்டு அவரை அந்த பாழுங்கிணற்றில் இறக்கிவிட்டார்கள். பிறகு



அவர்கள் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது, இஸ்மாயேலிய வர்த்தகர் சாமான்கள் ஏற்றப்பட்ட ஒட்டகங்களை ஓட்டிக்கொண்டு அவ்வழியாய் எஜிப்துக்குக் கடந்துபோகிறதைக்கண்ட யூதா "சூசை, நமது தம்பியாயிருப்பதைப்பற்றி அவனைக் கொல்லாமல் விற்றுப்போடுவது நலமாயிருக்கும்" என்று சொல்ல, அவரை அந்தக் கிணற்றினின்று வெளியே எடுத்து ஷை வர்த்தகருக்கு 20 வெள்ளிக் காசுக்கு விற்றுப்போட்டார்கள். ரூபன் இல்லாத சமயத்தில் சூசையை விற்றுப்போட்டபடியால், அவன் கொஞ்ச நேரம் பொறுத்துவந்து சூசையைத் தேடியுங் காணாமல் அதிக விசனங்கொண்டு, மற்ற தம்பிமாரிடம்போய் பையனை என்ன செய்தீர்களென்று கேட்க, அவர்கள் நடந்த விஷயத்தைச் சொன்னார்கள். அப்போது ஒரு ஆட்டுக்குட்டியைக் கொன்று அதன் இரத்தத்தில் சூசையின் சட்டையைத் துவைத்து, அது தங்களுக்கு அகப்பட்டதென்று தகப்பனிடம் சொல்லியனுப்பினார்கள். யாக்கோபு: அந்தச் சட்டை சூசையுடையதுதான்; அவனை யாதோ ஒரு துஷ்ட மிருகம் கொன்று ஐயோ! பட்சித்துவிட்டதே! என்று துக்கத்தால் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, மயிருடையைத் தரித்து அனேக நாள் துக்காக்கிராந்தரானார்.

புத்தி.—சூசையுடைய சீவியம் பலவிதத்திலும் சேசுக்கிறீஸ்துநாதருடைய சீவியத்தை ஒத்திருக்கிறது. சூசை தன் சிறந்த புண்ணியங்களைப்பற்றி தன் சகோதரர்களால் பகைக்கப்பட்டார். சேசுநாதரோ, தமது போதனையைப் பற்றியும் தமது மகத்துவத்தைப்பற்றியும் முன்னதாகவே உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனங்களைப்பற்றியும் பகைக்கப்பட்டார். சூசை காட்டிக்கொடுக்கப்பட்டு, விற்கப்பட்டு, அநியாயமாய்க் குற்றஞ்சாட்டப்பட்டதுபோல சேசுநாதருக்கும்

சம்பவித்தது. சூசை கடைசியாய் மகிமையடைந்ததுபோல சேசுநாதருஞ் செயசீலரானார். சூசை எஜிப்து தேசத்து அதிபதியானதுபோல, சேசுநாதர் பரலோக பூலோக அரசராயிருக்கிறார். சூசை தன் சகோதரர்களைக் காப்பாற்றினார்; சேசுநாதர் மனுக்குலத்தை இரட்சித்துக் காப்பாற்றினார்.

வினா.—சூசை யெங்கே அனுப்பப்பட்டார்? அவருடைய சகோதரர்கள் என்ன செய்ய நினைத்தார்கள்? ரூபன் சொன்ன தென்ன? சூசையை என்ன செய்தார்கள்? சூசையை யாருக்கு விற்றுப்போட்டார்கள்? எவ்வளவுக்கு? ரூபன் என்ன செய்தான்? சூசையின் சட்டையை என்ன செய்தார்கள்? சட்டையைக்கண்டு யாக்கோபு என்ன செய்தார்? சூசையின் சீவியம் சேசுநாதருடைய சீவியத்துக்கு எப்படி ஒத்திருக்கிறது?

## 19-ம் அதிகாரம்

புத்திப்பாருடைய வீட்டில் சூசைக்கு சம்பவித்தவைகள்

உ. பி. 2287.) (கி. மு. 1713.

இஸ்மயேலித்தார் எஜிப்து ராச்சியம் வந்துசேரவே, பாரவோன் அரசனுடைய சேனையில் முக்கிய சேனாதிபதியாகிய புத்திப்பார் என்பவனுக்குச் சூசையை விற்றுப்போட்டார்கள். சர்வேசுரன் சூசையின்மேல் கருணைகொண்டிருந்ததால், அவர் துவக்கும் சகல வேலைகளிலும் அனுகூலமடைய, சீக்கிரத்தில் புத்திப்பாருடைய வீட்டுக் காரியகர்த்தனாக ஏற்படுத்தப்பட்டார். அவர் அப்படியிருந்த கொஞ்சகாலத்துக்குப்பிறகு, புத்திப்பாரின் மனைவி சூசையப் பரைப் பாவத்தில் தள்ள எவ்வளவு முயன்றும், அவர் அதற்குச் சம்மதிக்கவில்லை. ஆனால் அவள் கொண்ட எண்ணத்தை விடாமல் அவரைத் தொந்தரவுசெய்து



கொண்டேவந்தாள். ஒருநாள் அவள் அவரை அதிமூர்க்கமாய்த் தொந்தரவுசெய்தபோது, அவர் பயந்து தன் போர்வையை அவள் கையில் விட்டுவிட்டு வெளியே ஓடிப்போனார். தன்னுடைய கருத்து அபலமாய்ப்போனதால் அவள் சூசையின்மேல் அதிக வர்மங்கொண்டு, தன் கையில் அகப்பட்ட போர்வையைக் கொண்டு அவருடைய பெயரைக் கெடுக்கத் தலைப்பட்டு, சூசை தன்னைக் கெடுக்கவந்தானென்பதாகப் பெருங்குரல் பாய்ச்சிக்கத்தத் தொடங்கினாள். புத்திப்பார் வீட்டுக்கு வந்தபோது அவள் சொன்ன கட்டுக்கதையை நம்பி, அதற்குத் திருஷ்டாந்தமாய் அவள் கையிலிருந்த போர்வையைப் பார்த்து, அதிக கோபங்கொண்டு சூசையைச் சிறையில் அடைத்துவிட்டான்.

வினா.—சூசையை யாருக்கு விற்றுப்போட்டார்கள்? புத்திப்பாரின் மனைவி செய்ததென்ன? சூசையைச் சிறைச்சாலையில் அடைத்ததார்?

## 20-ம் அதிகாரம்

சூசை சிறைச்சாலையிலிருந்தபோது நடந்த வர்த்தமானங்கள்

உ. பி. 2287.) கி. மு. 1713.

சூசை சிறையிலடைப்பட்ட கொஞ்சகாலத்துக்குள் சிறைச்சாலைத் தலைவனுடைய சனுகைப்பெற்று, புத்திப்பாரின் வீட்டிலிருந்ததுபோலவே, அவ்விடத்திலும் சிறைப்பட்ட சகல கைதிகளும் அவர் கையில் ஒப்புவிக்கப்பட்டார்கள். அக்காலத்தில் இரசங் கொடுப்பவனும், அப்பம் சுடுபவனுமாகிய இருவர் பாரவோனுக்கு குற்றஞ்செய்ய, சூசை அடைபட்டிருந்த சிறைச்சாலையில் போடப்பட்டார்கள். சில

நாளுக்குப்பின் ஓரிரவு அவ்விருவரும் ஓர் கனவுகண்டு வெகு விசனமாயிருந்தார்கள். மறுநாட் காலையில் அவர்களிருவரும் துக்கமாயிருப்பதைக்கண்ட சூசை, ஏன் விசனமாயிருக்கிறீர்களென்று கேட்க, "நாங்கள் சொர்ப்பனங் கண்டோம். அதை எங்களுக்கு வியாக்கியானம்பண்ணுவாரில்லை யாதலால், துக்கமாயிருக்கிறோம்" என்று சொன்னார்கள். அப்போது அவர்கள் கண்ட கனவு என்னவென்று கேட்டார். பானபாத்திரக்காரன் சொல்லத் தொடங்கி: "ஒரு திராக்ஷச் செடியில் மூன்று கிளைகளைக் கண்டேன். அவை வளர்ந்து பூவெடுத்துக் கடைசியில் பழம் பழுத்தன. நான் அத்திராக்ஷப்பழங்களை அரசனுடைய பாத்திரத்தில் பிழிந்து, அவருக்குக் குடிக்கக் கொடுத்தேன்" என்றான். இதை சூசை கேட்டு: "நீ கண்ட மூன்று திராட்சைக் கிளைகள் மூன்று தினங்களாம். மூன்று தினங்களுக்குள் அரசன் உன்னை விடுதலைசெய்து பழையபடி உன் உத்தியோகத்தைக் கொடுப்பார். குற்றமில்லாமல் சிறைப்பட்ட எனக்காக நீ அரசனிடத்தில் மனுசெய்ய மறக்கவேண்டாம்" என்று கேட்டுக்கொண்டார். பிறகு அப்பக்காரன்: "நான் மூன்று அப்பக்கூடைகளை என் தலைமேல் சுமந்துகொண்டு போனேன், மேல் கூடையிலிருந்த பலவிதமான அப்பங்களை பட்சிகள்வந்து தின்றுவிட்டன" என்றான். இதற்குச் சூசை: "மூன்று தினங்களுக்குள் அரசன் உன் தலையை வெட்டி உன் உடலைக் கழுமரத்திலேற்றத் தீர்வையிடுவார். அப்போது உன் மாமிசத்தைப் பட்சிகள் தின்னும்" என்றார்.

மூன்று நாளைக்குப்பின் சூசை சொன்னதுபோலவே இருவருக்கும் நிறைவேறியது. அரசன் பானபாத்திரக்காரனை விடுதலைசெய்து முன்போலவே பான



பாத்திரத்தைக் கொடுக்கும் பதவியில் வைத்தான். அப்பக்காரனோ கழுமரத்தில் தூக்கப்பட்டான். பானபாத்திரக்காரன் தன் செல்வக்காலத்தில் சூசையை மறந்துவிட்டான்.

வினா.—சூசை சிறைச்சாலையிலிருந்தபோது என்ன தொழிலை நடத்தினார்? அங்கு என்ன சம்பவித்தது? பானபாத்திரக்காரன் என்ன கனவுகண்டான்? அப்பம் சுடுபவன் என்ன கனவுகண்டான்? அக்கனவுகள் நிறைவேறிய விதம் எப்படி? பானபாத்திரக்காரன் யாரை மறந்துவிட்டான்?

---

## 21-ம் அதிகாரம்

உ. பி. 2289.) சூசையின் மகத்துவம் (கி. மு. 1711.

இரண்டு வருஷங்களுக்குப்பின் பாரவோன் அரசன் ஓர் கனவு கண்டான். அதென்னவென்றால், அவன் நீல் நதிக்கரையில் நின்றுகொண்டிருந்ததாகவும், அப்போது ஏழு கொழுத்த பசுக்கள் பசும்புல் நிலத்தில் மேய்ந்துகொண்டிருக்கையில், வேறே ஏழு மெலிந்த பசுக்கள்வந்து கொழுத்த பசுக்களை விழுங்கிவிட்டதாகவுங்கண்டு விழித்துக்கொண்டான்.

பாரவோன் மறுபடியுந் தூக்கத்தில் இன்னொரு கனவைக் கண்டான். அது என்னவெனில், ஒரு தாளிலிருந்து தானிய மணிகள் நிறைந்து விளைந்த ஏழு நேர்த்தியான கதிர்களைக் கண்டான். பிறகு பதரான ஏழு கதிர்கள் புறப்பட்டு மூந்தின கதிர்களை முற்றும் பட்சித்துவிட்டன. பாரவோன் நித்திரையைவிட்டு எழுந்து பயந்தவனாய், மறுநாள் காலையில் எஜிப்துதேசத்திலுள்ள சகல சாஸ்திரிகளையும் குறிசொல்லுகிறவர்களையும் வரவழைத்துத் தான் கண்ட சொர்ப்பனத்

தைச் சொன்னான். ஆனால் ஒருவராலும் அதன் தாத்பரியம் இன்னதென்று சொல்லக்கூடாமல்போயிற்று.

அப்போது பானபாத்திரக்காரன் சூசையை நினைவுகூர்ந்து, தானும் அப்பக்காரனும் சிறைச்சாலையிற் கண்ட கனவைச் சூசை விவரித்துச் சொன்னாரென்று அரசனுக்குச் சொல்லவே, அரசன் உடனே அவரை வரவழைத்து தான் கண்ட கனவை அவருக்குத் தெரிவித்தான். சூசை சர்வேசுரனுடைய கிருபையால் அதை அவனுக்கு விவரித்துச் சொன்னார். அஃதெப்படியெனில் :

“ நீர் கண்ட கனவின் அர்த்தமாவது: ஏழு கொழுத்த பசுக்களும், ஏழு செழித்த தானியக் கதிர்களும சம்பூரணத்தின் வருஷங்களாம். ஏழு சப்பைப் பசுக்களும், ஏழு பதருள்ள கதிர்களும், பஞ்சகாலத்தின் ஏழு வருஷங்களாம். இவை மேற்படி சம்பூரணத்தின் ஏழு வருஷங்களுக்குப்பிறகு சம்பவிக்க, எங்கும் பஞ்சமாகவேயிருக்கும். ஆகையால் இராஜேந்திரனே! எஜிப்து தேசத்தை யாள புத்திமானாகிய ஒருவனைத் தெரிந்தெடுத்துக்கொள்ளும். அவன் க்ஷேமகாலத்தில் தானியங்களைக் களஞ்சியங்களிற் சேர்த்து, அதை ஏழு வருஷ பஞ்சகாலத்தில் போசனத்திற்கு உபயோகப்படுத்தக்கடவான். இவ்வண்ணஞ் செய்தால் தேசம் பஞ்சத்தால் பாழாகாது ” என்றார்.

இந்த ஆலோசனையால் பாரவோன் அரசன் சந்தோஷங்கொண்டு சூசையின் ஞானத்தை விவேகத்தையுங்கண்டு அதிசயப்பட்டு, அவரையே அந்த உத்தியோகத்துக்குத் தெரிந்துகொண்டான். அப்போது அவன் தன் முத்திரை மோதிரத்தைக் கழற்றி சூசை விரலில் போட்டு, அவருக்குப் பட்டாடைகளை உடுத்தி,



அவர் கழுத்தில் பொன் சரப்பளியைப் பூட்டி, தன்னுடைய இரண்டாம் இரதத்திலேற்றி, ஊர்கோலம் வரும்படி உத்தரவளித்தான். அவர் அப்படி வரும்போது, “எஜிப்துக்கு தேசாதிபதியான சூசைக்கு தண்டனிட்டுப் பணியுங்கள்” என்று ஒரு கட்டியக்காரன் பறைசாற்றிக்கொண்டேபோனான். மேலும் பாரவோன் சூசை



யின் பெயரை மாற்றி ‘உலக ரக்ஷகன்’ எனப் பெயரிட்டான். அப்போது சூசைக்கு வயது முப்பது.

வினா.—பாரவோன் கண்ட முதல் கனவென்ன? இரண்டாவதென்ன? யார் அந்த கனவின் கருத்தை விவரிக்கமாட்டாமற் போனார்கள்? கடைசியில் அதை விவரித்ததார்? அக்கனவுகளின் அர்த்தமென்ன? எஜிப்துக்கு தேசாதிபதியானரார்? சூசையை எப்பெயரால் அழைத்தார்கள்?

## 22-ம் அதிகாரம்

### சூசையின் சகோதரர் எஜிப்துக்குப் போனது

உ. பி. 2296.) (கி. மு. 1704.

சம்பூரணத்தின் ஏழு வருஷங்களில் சூசை மிகுதியான கோதுமையை அந்தந்தப் பட்டணங்களில் சேர்த்துவைத்திருந்தார். அவர் முன் தீர்க்கதரிசனஞ் சொன்னதுபோல் பஞ்சம் வரவே, ஜனங்கள் அரசனிடம்போய் போசனங் கேட்டார்கள். ஆனால் அவன் அவர்களை "சூசையிடம் போங்கள்" என்று அனுப்ப, அவர் களஞ்சியங்களைத் திறந்து கோதுமையைக் கொடுப்பார். இக்கடும் பஞ்சம் கானான் தேசத்திலும் உண்டாகவே, எஜிப்தில் கோதுமை உண்டென்று யாக்கோபு கேள்விப்பட்டு, பெஞ்சமீன் தவிர மற்ற பத்துக் குமாரரையும் தானியம் வாங்கிவரும்படி அனுப்பினார். அவர்கள் எஜிப்தைச்சேர்ந்து சூசையிடம் வந்து, தரையில் விழுந்து அவரை வணங்கினார்கள். சூசை அவர்களை இன்னாரென்று கண்டுகொண்டாலும், அவர்கள் அவரை அறிந்துகொண்டவர்களல்ல. ஆகையால் அவர்களோடு கடூரமாகப் பேசி அவர்களை வேவுகாரரென்று அவர்கள்பேரில் குற்றஞ்சாட்டினார். அதற்கவர்கள்: "ஆண்டவரே! நாங்கள் அப்பேர்ப்பட்டவர்களல்ல. நாங்கள் சமாதானிகள். தானியங்கொள்ள வந்தோம். மேலும் நாங்கள் பன்னிரண்டு பேர் சகோதரர்; ஒரே தந்தையின் மக்கள். ஒருவன் தந்தையிடம் இருக்கிறான், மற்றொருவன் இறந்துவிட்டான்" என்றார்கள். சூசை அவர்களை இன்னும் சோதிக்க மனதாகி, நீங்கள் இளையவனைக் கூட்டிக்கொண்டு திரும்பிவருகிறவரையில் உங்களில் ஒருவன் இங்கே சிறையிலிருக்கவேண்டும்.



அப்போதுதான் உங்களது மெய்யும் பொய்யும் தெரிய வருமென்று சொன்னார்.

தாங்கள் இவ்வளவு கடுமையாக நடத்தப்படுவதைக் கண்ட சகோதரர் தங்கள் பாஷை சூசைக்குத் தெரியாதென்றெண்ணி: "முன் நமது சகோதரனாகிய சூசையைக் குரூரமாய் நடத்தினதற்குத் தண்டனையாக இப்பேர்ப்பட்ட அவதிகளை இப்போது நாம் படவேண்டிவந்தது" என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். சூசை இதைக்கேட்டு அப்பால்போய் அழுதார்.

சிமோன் சிறைச்சாலையிலடைக்கப்பட்டான். அவர்களுடைய சாக்குகளைக் கோதுமைதானியங்களால் நிரப்பி, அவனவன் பணத்தை அவனவன் சாக்கிலே போடவும், வழிப் பயணத்துக்கு வேண்டிய உணவுகளைக் கொடுக்கவும் சூசை தன் ஊழியருக்கு இரகசியமாய்க் கட்டளையிட்டார். யாவும் தயாரானவுடனே சாக்குகளைத் தங்கள் கழுதைகளின்மேலேற்றிக்கொண்டு பிரயாணப்பட்டார்கள்.

அவர்கள் தங்கள் தகப்பனிடம் போய்ச்சேர்ந்து, மேலும் சாக்கி நடந்த சங்கதிகளைச் சொன்னார்கள். கொட்டிப் பார்த்தபோது, அவலுள்ள தானியத்தைக் னவனுடைய தானியத்தின் கிரயமாகிய பணமுமிருக்கக் கண்டு வெகுவாய்ப் பயந்து கலங்கினார்கள். சம்பவித்த காரியங்களை யாக்கோபு கேட்டு, "ஐயோ! சூசை மரணமானான்; சிமோன் கைதியாக்கப்பட்டான்; இப்போது பெஞ்சமினையுங் கொண்டுபோகவேண்டுமோ!" என்று துக்கப் பிரலாபங்கொண்டார்.

வினா.—ஏழு வருஷங்களுக்குப்பிறகு என்ன சம்பவித்தது? சூசை ஜனங்களுக்கு என்ன கொடுத்தார்? யாக்கோபு

என்ன செய்தார்? வீட்டில் நிறுத்தப்பட்டதார்? சகோதரர் சூசைக்குமுன் எப்படிப்போய் நின்றார்கள்? அவர்கள் அவருக்கு என்ன சொன்னார்கள்? சூசை அவர்களைப் பயமுறுத்தினதெப்படி? சகோதரர் ஒருவருக்கொருவர் என்ன சொல்லிக்கொண்டார்கள்? சூசை யென்ன செய்தார்? யாரைச் சிறைச்சாலையிலடைத்தார்கள்? மற்றவர்களை யென்ன செய்தார்கள்? அவர்கள் போய் தங்கள் தகப்பனுக்கு என்ன சொன்னார்கள்? ஒவ்வொருவனுடைய சாக்கிலும் என்ன இருந்தது? யாக்கோபு என்ன செய்தார்?

---

## 23-ம் அதிகாரம்

### பெஞ்சமின் எஜிப்துக்குப் போனது

(கி. மு. 1703. உ. பி. 2297.)

அவர்கள் கொண்டுவந்த கோதுமையைச் சாப்பிட்டு முடிந்தபின் மறுபடியும் எஜிப்துக்குப் போகும்படி யாக்கோபு தன் பிள்ளைகளுக்குக் கட்டளையிட, பெஞ்சமினைக் கொண்டுபோனாலொழிய, போயும் பிரயோசனமில்லையென்று யூதா சொன்னான். யாக்கோபு தீர யோசனைசெய்தபின் கடைசியில் சம்மதிக்கவே, அவர்கள் முன் கொண்டுபோனதைவிட இருமடங்கான பணத்தை யெடுத்துக்கொண்டு பெஞ்சமினையுங் கூட அழைத்துக்கொண்டு பிரயாணப்பட்டார்கள். அவர்கள் எஜிப்தில் சேர்ந்ததும், பெஞ்சமினைக் கொண்டுபோய் சூசைக்குக் காண்பித்தார்கள். அப்போது சூசை, அவர்கள் எல்லோரும் தன்னோடு புசிக்கும்படி தன் அரண்மனைக்குக் கூட்டிக்கொண்டுவரத் தன் காரியக்காரனுக்கு உத்தரவு செய்தார். காரியஸ்தனும் அவருடைய உத்தரவுபிரகாரஞ் செய்தான். இவ்வாறு தங்களுக்குச் செய்யப்பட்ட மரியாதையைக்கண்டு பயங்



கொண்டு தங்கள் சாக்குகளிலிருந்த பணத்தைப்பற்றித்தான் இப்படிச் செய்கிறார்களென்று சூசையின் சகோதரர்கள் சமுசயப்படுவதைக்கண்ட காரியஸ்தன், அப்படியல்லவென்று அவர்களுக்குத் தைரியஞ்சொல்லி, சிமோனையும் அவர்களிடங் கொண்டுவந்துவிட்டான்.

சூசை அவர்களைக் காணவந்தபோது அவர்கள் தங்கள் காணிக்கைகளைக் கையிலேந்தி அவருக்கு ஒப்புக்கொடுத்துத் தரையில் சாஷ்டாங்கமாய் விழுந்து, அவரை வணங்கினார்கள். சூசையும் அவர்களுக்கு மங்களவார்த்தை சொல்லி, "உங்கள் தகப்பனார் சௌக்கியமாயிருக்கிறாரா?" என்று கேட்டு, பதில் விடைபெற்றுக்கொண்டு, பெஞ்சமின் பக்கமாய்த் திரும்பி, அவனை ஆசீர்வதித்துத் தன் அறைக்குள் போய் சந்தோஷத்தால் அழுதார்.

முகங் கழுவிக்கொண்டு மறுபடியும் வெளியே வந்து போஜனம் தயார்செய்ய உத்தரவு செய்தார். போஜனந் தயாரானவுடன் சூசை தன் சகோதரரை யழைத்து அவனவனுடைய வயதின்படி வரிசைக்கிரமமாய் உட்காரவைத்தார். இதைக்கண்டு அவர்கள் மிகவும் அதிசயப்பட்டார்கள். ஒவ்வொருவனுக்கும் பரிமாறப்பட்டதைவிட பெஞ்சமினுக்கு ஐந்துமடங்கு அதிகமாகப் பரிமாறப்பட்டது. இவ்விதமாக அவர்கள் சூசையுடன் விருந்துண்டு ஆனந்தித்தார்கள்.

வினா.—யாக்கோபு செய்த கட்டளை யென்ன? முதல் முதல் யாக்கோபு எதற்கு ஒத்துக்கொள்ளவில்லை? சகோதரர் எஜிப்துக்குப் போனபோது சூசை யென்ன கட்டளையிட்டார்? சகோதரர் என்ன நினைத்தார்கள்? சூசை அவர்களை எப்படி விசாரித்தார்? சூசை பெஞ்சமினுக்குச் செய்ததென்ன? அவர் எப்படித் தன் சகோதரரை உட்காரவைத்தார்? யாருடைய பங்கு அதிகமாயிருந்தது?

## 24-ம் அதிகாரம்

### சூசையின் வெள்ளிப் பாத்திரம்

தன் சகோதரர், முன் தன்பேரில் வைராக்கியமும் கொடுமையுமுள்ளவர்களாய் இருந்தது போல், பெஞ்சமின்பேரிலுமிருக்கிறார்களாவென்று சூசை மறுபடியும் அவர்களைச் சோதிக்க எண்ணங்கொண்டு, விருந்து சாப்பிட்டானவுடன் தன் காரியக்காரனைக் கூப்பிட்டு, அவர்களுடைய சாக்குகளைத் தானியத்தால் நிரப்பி, அவனவன் பணத்தை அந்தந்த சாக்கிலேயே போட்டு, எல்லோருக்கு மிளையவனுடைய சாக்கில் தன் வெள்ளிப்பாத்திரத்தைப் போட்டுக் கட்டும்படியாகக் கட்டளையிட்டார். அவனும் அப்படியே செய்ய, அவர்கள் மறுநாள் காலையில் பிரயாணப்பட்டார்கள்.

ஆனால் அவர்கள் புறப்பட்டு கொஞ்சந்தூரம் போனபிறகு, சூசை தன் காரியஸ்தனை அவர்கள் பின்னால் அனுப்பினார். அவன் போய் அவர்களை மடக்கிக்கொண்டு: "ஆ! நன்றிகெட்டவர்களே, நன்மைக்குத் தின்மை செய்பவர்களே! என் எஜமானனுடைய பாத்திரத்தையா திருடிக்கொண்டுபோகிறீர்கள்?" என்று அவர்கள்பேரில் குற்றஞ்சாட்டினான். யாக்கோபின் மக்கள் பீதிகொண்டு, "ஐயோ! யாரிடத்தில் அப்பாத்திரத்தைக் காண்பிரோ அவன் கொலையுண்ணக்கடவான்" என்று சொல்லி ஆத்திரமாக அவனவன் தன் சாக்கை அவிழ்க்கவே, பெஞ்சமினுடைய சாக்கில் அடி பாத்திரமிருந்தது. அதனால் அவர்கள் திடுக்கிட்டு, ஒருவர் முகத்தையொருவர் பார்த்து தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு சூசையினிடம் திரும்பிப்போனார்கள்.



அவர்கள் அவருடைய காலில் விழ, யூதா என்பவன் "எங்கள் குற்றத்திற்கு மன்னிப்புக் கிடையாது; நாங்கள் எங்கள் பாவத்துக்காக நீதிப்படி தண்டனைப் படுகிறோம். இனி நாங்களெல்லோரும் உமது அடிமைகளாயிருப்போம்" என்று சொன்னான். சூசையோ, "அதெல்லாங் கூடாது. யாரிடத்தில் பாத்திரமகப்பட்டதோ அவன்மாத்திரம் அடிமையாகவேண்டும். மற்றவர்களெல்லோரும் போகலாம்" என்று சொன்னார்.

யூதா இதைக் கேட்டபோது சூசையை அண்டிப் போய், "ஆண்டவனே! எங்கள் தகப்பன் பெஞ்சமினை இவ்விடம் அனுப்ப எவ்வளவோ வருத்தப்பட்டார். பையனை மறுபடியும் அவரிடம் கொண்டுபோய்விட நான் உத்தரவாதியாக நின்றேன். பெஞ்சமினில்லாமல் வீட்டுக்குத் திரும்பினால் விருத்தாப்பியரான எங்கள் தகப்பனார் விசனத்தால் மரணமடைவாரென்பது நிச்சயம். ஆகையால், பெஞ்சமினுக்குப் பதிலாக அடியேனை அடிமையாக வைத்துக்கொள்ள மன்றாடுகிறேன்" என்றான்.

அப்போது சூசை தன்னை அடக்கமாட்டாதவராய்த் தேம்பி அழுதுகொண்டு, "நான்தான் உங்கள் சகோதரனாகிய சூசை. உங்களைச் சோதிக்கும்பொருட்டே நான் இவ்வாறு செய்வித்தேன்" என்றார். இதைக் கேட்ட அவர்கள் இன்னும் அதிகமாய்ப் பயந்து பதில் சொல்லக்கூடாமலிருப்பதைக்கண்டு, அவர்களைத் தயையோடு நோக்கி, "சகோதரர்களே! என்னண்டை வாருங்கள்; நீங்கள் எனக்குச் செய்ததெல்லாம் சர்வேசுரனுடைய ஏற்பாட்டின்படி செய்தீர்கள். நீங்கள் என்னை விற்றுப்போட்டதினாலே சஞ்

சலப்படவேண்டாம். ஏனெனில், உங்கள் க்ஷேமத்திற்காகவே தேவன் உங்களுக்கு முன்னதாக என்னை இங்கு அனுப்பியிருக்கிறார். பஞ்சம் இன்னும் ஐந்து வருடம் நீடித்திருக்கும். ஆகையால் தந்தையரிடம் போய் நானடைந்திருக்கும் மகிமையை வெளிப்படுத்தி, அவரை யிங்கு கூட்டிவாருங்கள்" என்று சொல்லி பெஞ்சமினையும் மற்றவர்களையும் அரவணைத்துப் பேரன்பு காட்டினார்.



பாரவோன் இச்சமாசாரத்தைக் கேட்டு சந்தோஷித்து, யாக்கோபுக்கு எஜிப்து ராச்சியத்தில் செழிப்பான ஊரைக் கொடுப்பதாகவும் சொன்னான். அப்போது சூசை தன் சகோதரர்களுக்கு இரதங்களையும், போஜனவர்க்கங்களையும் விலையுயர்ந்த வஸ்திராபரணங்களையுங் கொடுத்தனுப்பினார்.

வினா.—சூசையின் பாத்திரத்தைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது? சகோதரர்கள் என்ன சொன்னார்கள்? யாருடைய சாக்கில் பாத்திரமிருந்தது? யூதா சொன்னதென்ன? சூசை தன் தகப்பனுக்குச் சொல்லியனுப்பிய சங்கதி என்ன?



## 25-ம் அதிகாரம்

### யாக்கோபு எஜிப்துக்குப் புறப்பட்டது

(கி. மு. 1702. உ. பி. 2298.)

சூசையின் சகோதரர் தங்கள் தகப்பனிடம் போய்ச் சேர்ந்து, சூசை உயிரோடிருப்பதையும், அவர் எஜிப்து நாட்டுக்கு அதிபதியாயிருப்பதையும்பற்றிச் சொன்னார்கள். யாக்கோபோ கனவு கண்டவரைப் போல பிரமைகொண்டு அவர்கள் பேச்சை நம்பாதவராய், அரசனுடைய இரதங்களையும் தன் மகன் அளித்த விலையுயர்ந்த வெகுமதிகளையுங் கண்டபிறகுமாத்திரம் நம்பி, தான் மரணமடையுமுன் எஜிப்துக்குப்போய் தன் அருமை மகனைக் காணவேண்டுமெனப் பேராவல் கொண்டார்.

யாக்கோபு தன் ஆஸ்திகளையெல்லாம் எடுத்துக் கொண்டு குமாரர், மருமக்கள்மார், பேரப்பிள்ளைகள், ஆக மொத்தம் எழுபது பேருடன் எஜிப்துக்குப் பிரயாணப்பட்டார். கானான் தேசத்து எல்லைக்கு வரவே ஆண்டவர் அவருக்குத் தோன்றி, "நீ யாதொன்றுக்கும் பயப்படவேண்டாம். நாம் உன்னோடிருப்போம். உன் ஜனத்தைப் பெருகச்செய்வோம். மறுபடியும் உன்னை இவ்விடத்திற்குக் கூட்டிக்கொண்டுவருவோம்" என்று திருவாய்மலர்ந்தருளினார்.

யூதா முன்னதாகப்போய் தகப்பன் வருகிறாரென்று சூசைக்குச் சொன்னான். சூசையும் துரித

மாக தன் தந்தையை எதிர்கொண்டுபோய் அவரைச் சந்தித்து அவரைக் கட்டி மினவிக்கொண்டு அழுதார். "மகனே, இப்போது நானுன்னைக் கண்டதால் இனி சமாதானமாக உயிர்விடுவேனாக" என்று யாக்கோபு கூறினார்.

சூசை தன் தகப்பனை அரசனிடம் அழைத்துக் கொண்டுபோய் விட்டபோது, அவன் அவரைப் பார்த்து உமது வயதென்னவென்று கேட்டான். அதற்குக் கிழவனார், எனக்கு நூற்று முப்பது வருஷங்களாகின்றன; ஆகிலும் நான் என் பிதாக்களுடைய பிராயமுடையவனல்லவென்றார்.

சூசை பாரவோன் உத்தரவின்படி ஆடுமாடுகளுக்கு ஏராளமான மேய்ச்சலுள்ள ஜெஸ்ஸேன் என்னும் நாட்டைத் தன் தந்தைக்கும் சகோதரருக்கும் தானமாக அளித்தார்.

புத்தி.—1700 வருஷங்களுக்குப்பின் வயோதிகனாகிய சிமோன் என்பவர் மெய்யான சூசையாகிய உலக இரக்ஷகரான சேசுக்கிறீஸ்துநாதரை யெருசலேம் பட்டணத்து தேவாலயத்தில் கண்டபோது அவ்வாறே சொன்னார்.

வினா.—சூசை உயிரோடிருக்கிறாரென்று யாக்கோபு கேள்விப்பட்டபோது என்ன செய்தார்? அவர் எஜிப்துக்குப் போகும்போது தன்னோடு கொண்டுபோனதென்ன? அவருக்கு யார் தரிசனையானார்? ஆண்டவர் அவருக்கு என்ன சொன்னார்? தன் தகப்பன் வருகிறாரென்று முன்னதாக சூசைக்கு அறிவித்ததார்? யாக்கோபினுடையவும் சூசையினுடையவும் சந்திப்பின் விவரத்தைச் சொல்லு?



## 26-ம் அதிகாரம்

உ. பி. 2315.) யாக்கோபின் மரணம் (கி. மு. 1685.

யாக்கோபு எஜிப்து ராச்சியம் வந்துசேர்ந்த 17-ம் வருஷத்தில் வியாதியாய் விழுந்தார். சூசை இதைக் கேட்டவுடனே தன் இரு குமாரராகிய எப்ராயீமையும் மனாசேயையும் அழைத்துக்கொண்டு தன் தகப்பனிடம் போக யாக்கோபு சூசையின் இரு குமாரரையும் ஆசீர்வதித்தார்.

பிறகு யாக்கோபு தன் குமாரர்களை வரவழைத்து "சர்வேசுரன் மறுபடியும் உங்களை உங்கள் சுயநாட்டுக்குக் கூட்டிக்கொண்டுபோவார். நான் மரித்தபின் என்னைக் கானான் தேசத்தில் நீங்கள் அடக்கஞ்செய்ய வேண்டும்" என்று சொல்லி, எல்லோரையும் ஆசீர்வதித்துப் பிற்காலத்தில் அவர்களுக்குச் சம்பவிக்கப் போகிற காரியங்களைத் தீர்க்கதரிசனமாய் மொழிந்தார். அதில் யூதாவை விசேஷ விதமாய் ஆசீர்வதித்து: "யூதாவே, நீ உன் பகைவரை ஆளுவாய். உன் தந்தையின் மக்கள் உன்னை நமஸ்கரிப்பார்கள்; சர்வ ஜனங்களாலும் எதிர்பார்க்கப்படுகிற மேசியா வருங்காலம்வரைக்கும் இராச செங்கோல் உன்னைவிட்டு நீங்குவதில்லை" என்றார். இந்த சிறந்த தீர்க்கதரிசனமானது அன்னியனாகிய எரோதன் யூதேயா நாட்டை ஆண்டபோது நிறைவேறினது. யூதாவின் கோத்திரத்திலிருந்த செங்கோல் அப்போதுதான் மாறிப் போயிற்று.

யாக்கோபு இறந்தபோது, சூசை அவர் முகத்தைக் கட்டி முத்தமிட்டு வெகு துக்கத்தோடு அழுது புலம்பினார். பிறகு வாசனைவர்க்கங்களினால் பிரேதத்

தைப் பதப்படுத்தி, எஜிப்து நாட்டு வழக்கப்பிரகாரம் 70 நாள் துக்கங்கொண்டாடினார். தன் தகப்பன் கட்டளைப்படி அவர் சகோதரரும் இன்னும் ஏராளமான ஜனங்களுஞ் சேர்ந்து, அவருடைய சரீரத்தைக் கானான் நாட்டிலுள்ள எப்ரோனில் அடக்கஞ்செய்தார்கள்.

உ. பி. 2369.) சூசையின் மரணம் (கி. மு. 1631.

சூசை 110 வருஷஞ் சீவித்து, மூன்றாந் தலைமுறைவரையில் தன் பேரப்பிள்ளைகளைக் கண்டார். அவர் தன் ஜீவியகாலத்தின் முடிவு கிட்டிவருவதைக் கண்டு தன் சகோதரரைக் கூப்பிட்டு: "நீங்கள் என் மரணத்துக்குப்பிறகு இடைஞ்சற்படுவீர்கள். ஆனால் ஒன்றுக்கும் பயப்படாதேயுங்கள்; சர்வேசுரன் அபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகிய நமது பிதாப்பிதாக்களுக்கு வாக்குத்தத்தஞ்செய்த நாட்டுக்குத் தவறாமல் உங்களைக் கூட்டிக்கொண்டுபோவார். அப்போது என் எலும்புகளையுங் கொண்டுபோகக்கடவீர்கள்" என்று கட்டளையிட்டு, சமாதானமாக மரணமடைந்தார். அவர்கள் அவருடைய சரீரத்தைப் பரிமளவர்க்கங்களையிட்டுச் சவப்பெட்டியிலே பத்திரப்படுத்திவைத்தார்கள்.

வினா.—யாக்கோபு எஜிப்துக்குப் போய்ச்சேர்ந்து எத்தனை வருஷங்களுக்குப்பிறகு வியாதியாய் விழுந்தார்? சூசையின் பிள்ளைகளுடைய நாமங்களென்ன? யாக்கோபு மரணிப்பதற்குமுன் என்ன செய்தார்? யூதாவுக்குச் சொன்ன தீர்க்கதரிசனமென்ன? இந்தத் தீர்க்கதரிசனம் எப்போது நிறைவேறிற்று? யாக்கோபின் சரீரத்தை யென்ன செய்தார்கள்? எங்கே அடக்கஞ்செய்தார்? சூசை சொன்ன தீர்க்கதரிசனமென்ன? அவருடைய சரீரத்தை யென்ன செய்தார்கள்?

---



# 27-ம் அதிகாரம்

## யோபின் பொறுமை

பிதாப்பிதாக்களின் காலத்தில் அரேபியா நாட்டில் யோப் என்ற ஓர் மகாத்துமா ஜீவித்துவந்தார். அவருக்கு ஏழு குமாரரும், மூன்று குமாரத்திகளும் இருந்தார்கள். ஆஸ்திபாஸ்தியில் ஏழாயிரம் ஆடுமாடுகளும், மூவாயிரம் ஒட்டகங்களும், ஐஞ்ஞூறு ஏர்மாடுகளும், ஐஞ்ஞூறு கழுதைகளுமிருந்ததுடன், அனேக ஊழியரும் பணிவிடைசெய்து வந்தார்கள். அவருடைய அபரிமிதமான திரவியங்களைப்பற்றியும், விசேஷமாய் அவருடைய தேவபக்தியைப்பற்றியும் அவர் யாராலும் புகழப்பட்டுவந்தார்.

ஒருநாள் சர்வேசுரன் சாத்தானைப் பார்த்து: "நமது ஊழியனாகிய யோபை அறிவாயா? பூவுலகில் அவனைப்போல் ஒருவனுமில்லையல்லோ?" என, அதற்குச் சாத்தான் "ஆம் மெய்தான்; அவனுக்கு அளவற்ற ஆஸ்திபாஸ்தியிருப்பதாலும், அவன் துவக்கும் சகல வேலைகளையும் தேவரீர் ஆசீர்வதிப்பதாலும் அவன் உம்மைத் தொழுவது பெருங் காரியமல்ல. ஆனால் அவன்பேரில் உமது கரத்தை நீட்டுவீரானால், அப்போது அவன் உம்மைச் சபித்துக் கைவிடுவான்" என்றது. அதற்குச் சர்வேசுரன் "அவனைத் தொடாமல் உன்னாலாவதைச்செய்" என்று சாத்தானுக்கு உத்தரவளித்தார்.

சர்வேசுரன் உத்தரவளித்த க்ஷணத்தில், யோபின் குமாரர்களும் குமாரத்திகளும் தங்கள் மூத்த சகோதரனின் வீட்டில் விருந்தாடிக்கொண்டிருக்கையில், ஓர் தூதன் யோபண்டை வந்து "ஐயா, சபேயர் உமது

ஊழியரைக் கொன்று எருதுகளையும் கழுதைகளையும் ஓட்டிக்கொண்டு போய்விட்டார்களென்று சொல்லிக் கொண்டிருக்கிறபோதே, இரண்டாவது தூதன் வந்து: ஆகாயத்திலிருந்து நெருப்பு விழுந்து ஆடுகளையும் இடையரையும் எரித்துவிட்டதென்றான். மூன்றாம் ஆள் வந்து: கல்தேயர் ஊழியரைக் கொன்று ஒட்டகங்களை ஓட்டிக்கொண்டுபோய்விட்டார்களென்று சொல்லிக் கொண்டிருக்கும்போது, நாலாம் ஆள் வந்து: உமது பிள்ளைகள் விருந்துண்ணுகையில் பெருங் காற்றடித்து வீடு இடிந்து எல்லோருங் கொல்லப்பட்டார்கள்" என்றான்.

யோப் இவற்றையெல்லாங் கேட்டபின், எழுந்து தன் வஸ்திரங்களை கிழித்துக்கொண்டு, சாஷ்டாங்க தண்டனிட்டு சர்வேசுரனை ஆராதித்து, ஆண்டவர் கொடுத்தார். ஆண்டவர் எடுத்துக்கொண்டார்; அவருடைய நாமம் துதிக்கப்படக்கடவது" என்றார். இவ்வளவு கஸ்தி சஞ்சலங்கள் நேரிட்டும் ஆண்டவர்பேரில் முறைப்படாததால், சர்வேசுரன் தமது ஊழியன்மட்டில் சந்தோஷங்கொண்டார்.

சாத்தான் மறுபடியும் சர்வேசுரன் சமுகஞ்சென்று "ஆண்டவரே! யோபின் சரீரத்தில் யாதேனும் நோய் வரவிட்டால், அப்போது அவன் உம்மைத் தூஷிப்பான்" என்றது. சர்வேசுரன் அப்படியே உத்தரவு கொடுக்க, சாத்தான் யோபை உள்ளங்கால்முதல் உச்சந்தலைவரையும் அழிபுண்களால் வாதிக்கலானான். அவரோ குப்பைமேட்டின்மேல் குந்தி, ஓர் ஓட்டைக் கொண்டு புண்களினின்று வடியுஞ்சீழைச் சுறண்டிக் கொண்டிருந்தார். அப்போது அவருடைய மனைவியும் அவரை அறிவீனனென்று ஏசி நிந்திப்பாள். யோப்



என்பவரோவெனில், "நாம் சர்வேசுரனுடைய கரங்களிலிருந்து நன்மையைப் பெற்றுக்கொள்வதுபோல் ஏன் தின்மையைப் பெற்றுக்கொள்ளக்கூடாது?" என்று சொல்லி, தேவ திருவுளத்துக்கு எதிரிடை செய்தவரல்ல.

யோபுக்கு நேரிட்ட துன்பங்களை அவருடைய சிநேகிதர் அறிந்து, அவருக்கு ஆறுதல் சொல்லுவதற்காக மூவர் வந்தார்கள். அவர்கள் அவரைக் கண்டு கஸ்தியில் மூழ்கி, ஏழு நாள் இரவும் பகலும் அழுது



பிரலாபித்து, ஒருவரோடொருவர் பேசாமல் அவ்விடத்திலேயே உட்கார்ந்துவிட்டார்கள்.

கடைசியில் யோபு என்பவர் தான் படும் வருத்தத்தைச் சொல்ல ஆரம்பித்தார். அப்போது அவர்கள் உமது பாவத்துக்கு ஆக்கினையாக இது நேரிட்டதென்று அவரை வசைச்சொற்களால் தூஷிக்க, யோபு தான் அப்பேர்ப்பட்ட குற்றங்களைச் செய்யவில்லையென்றும், தான் மாசற்றவனும், சர்வேசுரனில் நம்பிக்கைக்கொண்டவனும் இருப்பதாகச் சொன்னார்.

அவர் கொண்டிருந்த இந்த நம்பிக்கையானது வியர்த்தமாய்ப்போகவில்லை. எப்படியெனில், அவருக்குண்டான துன்பதுரிதங்களெல்லாம் சீக்கிரத்தில் நீங்கினதுடன், முன்னையைப்பார்க்க இரட்டிப்பான ஆஸ்திகளைப் பெற்றுக்கொண்டார். பிறகு அவருக்கு ஏழு குமாரரும் மூன்று குமாரத்திகளும் உண்டானார்கள். இவர்கள் பிறந்த பிறகு யோபு நூற்றுநாற்பது வருஷம் சீவித்து, நாலாந் தலைமுறைவரையில் தன் பேரப்பிள்ளைகளைக்கண்டு ஆனந்தபாக்கியங்கொண்டவராய் மரித்தார்.

புத்தி.—உச்சந்தலை தொடங்கி உள்ளங்கால்வரையில் ஏக காயம்பட்டு பாவாக்கிரமியாக பாவிக்கப்பட்டும் நிந்திக்கப்பட்டும் சற்றும் முறைப்படாமலிருந்த யோபு என்பவர் கிறீஸ்துநாதருக்கு அடையாளமாயிருக்கிறார். மேலும் பசாசு மனிதர்மட்டில் தன் அதிகாரத்தைச் செலுத்தும்படி சில சமயத்தில் சர்வேசுரன் அதற்கு உத்தரவு கொடுக்கிறாரென்று யோபின் சரித்திரத்தால் தெரியவருகிறது.

வினா.—யோபைக் குறித்து என்ன சொல்லியிருக்கிறது? சர்வேசுரன் சாத்தானுக்கு என்ன சொன்னார்? சாத்தான் சர்வேசுரனுக்கு என்ன சொல்லிற்று? விருந்தாடிக் கொண்டிருந்தது யார்? முதல் தூதன், 2-ம் தூதன், 3-ம் தூதன், 4-ம் தூதன் ஆக இவர்கள் முறையே யோபுக்கு என்ன சொன்னார்கள்? யோப் என்ன சொன்னார்? சர்வே சுரன் இரண்டாந்தரம் சாத்தானுக்குக் கொடுத்த வல்லமையென்ன? யோபுக்கு என்ன உண்டானது? யோப் தன் மனைவிக்குச் சொன்னதென்ன? யோபைக் காண யார் வந்தது? அவர்கள் என்ன செய்தார்கள்? யோப் சொன்னதென்ன? யோப் தன் பொறுமையைப்பற்றி அடைந்த பலனென்ன? யோப் யாருக்கு அடையாளம்? எப்படி?



## நோவேமுதல் மோயீசன்வரையிலுள்ள பிதாப்பிதாக்களின் நாமதேயங்களும் வயதுமாவன :

| | பெயர் | | பிறப்பு | இறப்பு | வயது |
|---|---|---|---|---|---|
| 1. | தாரே | உ. பி. | 1878 | 2083 | 205 |
| 2. | அபிரகாம் | ,, | 2008 | 2183 | 175 |
| 3. | ஈசாக்கு | ,, | 2108 | 2288 | 180 |
| 4. | யாக்கோபு | ,, | 2168 | 2315 | 147 |
| 5. | லேவி | ,, | 2255 | 2392 | 137 |
| 6. | மோயீசன் | ,, | 2433 | 2553 | 120 |

இரண்டாம் யுகம் முற்றிற்று

# மூன்றும் யுகம்

## (மோயீசன்முதல் தாவீது அரசன்வரையிலும்)

---

## 28-ம் அதிகாரம்

உ. பி. 2433.) மோயீசன் ஜனனம் (இ. மு. 1567.

எஜிப்தில் யாக்கோபின் சந்ததியார் துரிதமாய்ப்
பெருகி அதிகரித்து பிரக்யாதியடைந்தார்கள்.
இதற்கிடையில் சூசையை யறியாத புதிய அரசர்கள்



இஸ்ராயேலித்தார் வல்லமையுடையவர்களாயிருப்ப
தைப்பற்றி பயப்படத் தொடங்கி, யாக்கோபின் மக்
களை நெருக்கிடைப்படுத்தி, அவர்கள்மேல் பாரமான
சுமைகளைச் சுமத்தி, கடைசியில் எபிரேயருக்குள்



பிறக்கும் ஆண்குழந்தைகளனைவரையும் நீல் நதியில்
எறிந்துவிடும்படி மருத்துவச்சிகளுக்குக் கட்டளையிட்
டார்கள். எபிரேய ஸ்திரீகளில் ஒருத்தி ஓர் ஆண்
குழந்தையைப் பெற்று அதை வெகு அன்பாய் நேசித்
ததினால், மூன்று மாதமளவும் ஒளித்துவைத்திருந்தாள்.
பின்னும் அதிக காலம் அதை ஒளித்துவைக்கச் சாத்
தியப்படாமையால் கோரையால் கூடையொன்று
செய்து, அதற்குக் கீல் பூசி, பிள்ளையை யதில் கிடத்தி
ஆற்றங்கரை யோரமாயுள்ள நாணலில் கூடையை வைத்
துப் பிறகு நடக்குங் காரியங்களைப் பார்த்துத் தனக்கு
அறிவிக்கும்படி தன் மகளை யங்கே காவல் வைத்
தாள். தேவ ஏவுதலால் பாரவோன் குமாரத்தி ஆற்றில்
குளிக்கவந்து, அந்தக் கூடையைக்கண்டு தன்
தோழியை யனுப்பி அதைக் கொண்டுவரும்படி கட்
டளையிட்டாள். அவள் அதைத் திறந்து பிள்ளையைப்
பார்க்க, அது எபிரேயருடைய பிள்ளையென்று அறிந்து
கொண்டு, அங்கு காவலாயிருந்த பெண்ணைக் கூப்பிட்டு,
இக்குழந்தைக்குப் பால்கொடுத்து வளர்ப்பதற்காக
ஒரு ஸ்திரீயைக் கூட்டிக்கொண்டுவரும்படி சொன்
னாள். அந்தப் பெண்ணும் ஓடிப்போய் தன் தாயைக்
கூட்டிக்கொண்டுவந்தாள். அக்குழந்தையை வளர்க்
கும்படி அவளிடங் கொடுத்து, அவன் பெரியவனான
பின், அவனை இராஜகுமாரத்தி தன் சுவீகாரப் பிள்ளை
யாகச் செய்துகொண்டு, அவனுக்கு ஜலத்திலிருந்து
இரட்சிக்கப்பட்டவனென்று பொருள்படுவதாகிய
மோயீசன் என்னும் பெயரிட்டாள்.

புத்தி.—மோயீசன் சேசுக்கிறீஸ்துநாதருக்கு அடை
யாளமாயிருக்கிறார். மோயீசன் ஆற்றிலிருந்து காப்பாற்றப்
பட்டார்; சேசுநாதர் எரோதனின் கையினின்று இரட்சிக்
கப்பட்டார். மோயீசன் இளைஞராயிருந்தபோது பேச்சில்

ஞானமும், கிரிகையில் வல்லமையும் உடையவராயிருந்தது போல், கிறீஸ்துநாதரும் தமக்குப் பன்னிரண்டு பிராயம் நடக்கும்போது குருக்களுக்கும் சாஸ்திரிகளுக்கும் அதிசயத்தை வருவித்தார். மோயீசன் ஜலத்தைப் பிரித்தது போல், கிறீஸ்துநாதர் காற்றையும் புயலையும் அமர்த்தினார். மோயீசன் வாக்குத்தத்த தேசத்திற்கு ஜனங்களை நடத்தினார்; கிறீஸ்துநாதரோ மோட்சத்தின் வழியாயிருக்கிறார். மோயீசன் அநேக புதுமைகளைக்கொண்டு பழய வேதத்தை யூதருக்குக் கொடுத்ததுபோல, கிறீஸ்துநாதரும் சகலராலும் பிரமிக்கத்தக்க புதுமைகளைக்கொண்டு புதிய வேதத்தை உலகத்துக்குத் தந்தார். மோயீசன் யூதருக்குள்மாத்திரம் விக்கிரகாராதனையை யழித்தார்; கிறீஸ்துநாதர் அதை உலகமெங்கும் நிர்மூலம் ஆக்கினார். மோயீஸன் யூதருக்கு அரசு ஆசாரங்கள் முதலிய சுயாதினத்தை கொடுத்தார்; கிறீஸ்துநாதரோ மனுக்குலத்துக்கு ஞான ஆளுகையின் சுதந்தரந் தந்தார். மோயீசன் மலையின்மேல் நாற்பது நாள் உபவாசம் பிடித்ததுபோல், கிறீஸ்துநாதரும் நாற்பது நாள் வனாந்தரத்தில் உபவாசமிருந்தார். மோயீசன் முகம் வேறு ரூபங்கொண்டு மலையினின்று இறங்கினார்; அப்படியே கிறீஸ்துநாதரும் மலையின்மேல் மறுரூபங்கொண்டார். வனாந்தரத்தில் மோயீசன் ஜனங்களை மன்னாவென்ற போசனத்தால் போஷித்ததுபோல், கிறீஸ்துநாதரும் தம்முடைய மாமிசத்தாலும் இரத்தத்தாலும் உலகத்தைப் போஷித்துவருகிறார். மோயீசன் ரிஷபங்களின் இரத்தத்தைக்கொண்டு பழய வேதத்தை உறுதிப்படுத்தினார்; கிறீஸ்துநாதரோ, தமது சொந்த இரத்தத்தைக்கொண்டே புதிய வேதத்துக்கு முத்திரையிட்டார்.

வினா.—யாக்கோபின் சந்ததியைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? எஜிப்து தேசத்து அரசர் அவர்களை எப்படி நடத்தினார்கள்? மருத்துவச்சிகளுக்கு இடப்பட்ட கட்டளையென்ன? மோயீசனுடைய பிறப்பையும் வளர்ப்பையும்பற்றிய சரித்திரத்தைச் சொல்? மோயீசன் என்னும் பெயருக்கு



அர்த்தமென்ன? மோயீசன் எவ்வண்ணம் கிறீஸ்துநாதரின் குறிப்பாயிருக்கிறார்?

## 29-ம் அதிகாரம்

உ. பி. 2513.) மோயீசன் அழைப்பு (கி. மு. 1487.

மோயீசனுக்கு நாற்பது பிராயமானபோது அவர் ஜனங்களின் துன்பங்களுக்குத் தானும் பங்காளியாகவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு ஒருநாள் எபிரேயரிடம் போனார். அங்கு எஜிப்தியன் ஒருவன் எபிரேயனைப் பிடித்துக் குரூரமா யடிப்பதைப் பார்த்துச் சகியாமல் மோயீசன் வீரியமாய் அவனைத் தாக்கிக் கொன்றார். அதனால் அரசன் கோபங்கொண்டு மோயீசனைக் கொல்லத் தீர்மானித்தபடியால், அவர் அரேபியாவிலுள்ள மாதியானுக்கு ஓடிப்போனார். அங்கு பூசாரியாயிருந்த தன் மாமனாரான ஜெத்ரோ என்பவரிடத்தில் நாற்பது வருஷம் ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டுவந்தார்.

ஒருநாள் மோயீசன் மந்தைகளை ஓரேபு மலைக்கு ஓட்டிக்கொண்டுபோக, அங்கு தீப்பற்றிச் சுவாலித்து எரிந்துகொண்டிருந்த ஒரு புதரில் சர்வேசுரன் அவருக்குத் தரிசனையானார். அந்த முட்செடி வெந்துபோகாமல் இருப்பதை மோயீசன் கண்டு அதிசயப்பட்டு, அதைப் பார்க்கும்படியாக அருகே போனார். "இது பரிசுத்தமான இடம், உன் பாதரட்சைகளைக் கழற்றி விடு" என்று சர்வேசுரன் சொல்லக்கேட்ட மோயீசன் முகந் தரையில்பட தாழ்ந்து அவரை வணங்கினார்.

அப்போது சர்வேசுரன் மோயீசனைப் பார்த்து "நாம் எபிரேயருடைய துன்பதுரிதங்களைக் கண்டு

மனமிரங்கி, அவர்களை இரக்ஷிக்கச் சித்தமானோம். ஆகையால் நமது ஜனத்தை எஜிப்தினின்று கூட்டிப் போக உன்னைத் தெரிந்துகொண்டோம்" என்றார். அதற்கு மோயீசன் "சுவாமீ, நான் திராணியற்றவனும் திக்குவாயனுமா யிருப்பதைப்பற்றி அது என்னால் சாத்தியப்படுமோ" என்று ஆக்ஷேபனை செய்தும், நாம் மோயீசனோடிருப்பதாக சர்வேசுரன் வாக்களித்து,



அவருடைய சகோதரனாகிய ஆரோனையும் அவருக்குப் பதில்பேசத் துணையாகக் கொடுத்தார்.

அப்போது மோயீசனும் ஆரோனும் எஜிப்துக்குப் போய், இஸ்ராயேல் ஜனங்களை ஒன்றாகக்கூட்ட சர்வேசுரனிட்ட கட்டளைகளையெல்லாம் ஆரோன் அவர்க



ளுக்கு வெளிப்படுத்தினார். மோயீசனும் ஜனக்கூட்டத்துக்குமுன் புதுமைகளைச்செய்ய, அவர்கள் நம்பிக்கைகொண்டு சர்வேசுரனை ஆராதித்தார்கள்.

வினா.—மோயீசன் எபிரேயரோடு சேர தீர்மானித்த போது அவருடைய வயதென்ன? யாருக்குக் கோபத்தை மூட்டினார்? எவ்விடத்துக்கு ஓடிப்போனார்? யாருடைய மந்தைகளை மேய்த்துக்கொண்டிருந்தார்? சர்வேசுரன் மோயீசனுக்கு எதில் தரிசனையானார்? என்ன செய்யவேண்டுமென்று அவருக்குக் கட்டளையிட்டார்? மோயீசனுக்குப் பதிலாய் பேசும்படி யாரை நியமித்தார்? மோயீசனும் ஆரோனும் எங்கே போனார்கள்?

---

## 30-ம் அதிகாரம்

### எஜிப்தில் நடந்த பத்து கொள்ளைநோய்கள்.

(கி. மு. 1487. உ. பி. 2513.)

மோயீசனுக்கும் ஆரோனுக்கும் சுமார் 80 பிராயம் நடக்கும்போது, அவர்கள் பாரவோன் அரசனிடம் போய், வனாந்தரத்தில் ஆண்டவருக்குப் பலி செலுத்த இஸ்ராயேல் ஜனங்களுக்கு விடையளிக்க வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால் பாரவோன் அவர்கள் வார்த்தைக்குக் காதுகொடாமல், இஸ்ராயேல் ஜனங்களுக்கு அதிகமதிகமாய் நெருக்கிடை செய்து, அவர்களுடைய வேலைகளையும் அதிசப்படுத்தக் கட்டளையிட்டான்.

மறுபடியும் ஆரோனும் மோயீசனும் பாரவோனிடஞ் சென்று, சர்வேசுரனுடைய கட்டளைப்பிரகாரம் ஆரோன் தன் கோலை அரசன் முன் போடவே, அது ஓர் சர்ப்பமாக மாறிவிட்டது. அவ்வண்ணமே எஜிப்

தியமாந்திரீகரும் செய்தார்கள். இதைக்கண்ட பார
வோனுடைய இருதயம் பின்னும் கடினமாக, அவன்
ஜனங்களை விட்டவனல்ல. அதனால் சர்வேசுரன் பார
வோனையும் அவன் ஜனங்களையும் பத்துவிதக் கொள்ளை
நோயால் தண்டிக்கத் தீர்மானித்தார்.

முதலில் ஆரோன் நீல்நதி ஜலத்தைத் தன்
கோலால் அடிக்க, அது இரத்தமாக மாறிவிட்டது.



ஏழு நாளைக்குப்பிறகு எஜிப்து நாட்டு ஜனங்களின்மேல்
தன் கரங்களை நீட்டவே, ஏராளமான தவளைகள் புறப்
பட்டு பூமி எங்கும் நிறைந்துவிட்டன; பிறகு பூமியி
லுள்ள தூசி ஈக்களாகவும், பூச்சிகளாகவும் மாறி மனி
தரையும் மிருகங்களையும் வதைத்தன.

இத்தண்டனைக்குப்பின் ஆடுமாடுகளுக் கடுநோயும்,
மனிதருக்குப் பருவு பிளவைகளும் உண்டாக, அவர்
கள் வெகுவாய் அவஸ்தைப்பட்டார்கள். பிறகு இடி



முழக்கமும் மின்னலும் கல்மழையும் உண்டாகி, பயிர்
பச்சைகளையெல்லாம் அழித்துவிட்டன. இதற்குப்
பின் வெட்டுக்கிளிகள் கூட்டங்கூட்டமாகப் புறப்பட்டு
கல்மழைக்குத் தப்பிப்போன மீதியான பயிர்களையெல்
லாம் தின்றுவிட்டன. கடைசியாக பயங்கரமான இரு
ளந்தகாரம் உண்டாகி, பூமியை மூடிக்கொள்ள, ஜனங்
கள் ஒருவரையொருவர் பார்க்கக்கூடாமற்போயிற்று.

ஆனால் பாரவோன் பிடிவாதங்கொண்டு ஆண்டவ
ரின் கட்டளைப்படி ஜனங்களைப் போகவிட்டவனல்ல.
ஆகையால், முந்திய கொள்ளைநோய்களைவிட பயங்கரத்
துக்குரிய பத்தாவது ஆக்கினையைச் சர்வேசுரன் வர
விட்டார்.

வினா.—மோயீசனும் ஆரோனும் பாரவோனிடம்போன
போது அவர்களுடைய வயதென்ன? அவர்கள் அவனை
யென்ன கேட்டார்கள்? பாரவோன் என்ன செய்தான்?
மோயீசன் இரண்டாமுறை பாரவோனிடம் போனபோது
என்ன நடந்தது? முதல் என்ன கொள்ளைநோய் உண்டா
னது? இரண்டாவது? மற்றவை? பாரவோன் ஜனங்களைப்
போக விட்டுவிட்டானா?

---

## 31-ம் அதிகாரம்

### முதற்பேறான பிள்ளைகளின் மரணம்—பாஸ்கு செம்மறிப் புருவை—எஜிப்தினின்று புறப்படல்

(கி. மு. 1487. உ. பி. 2513.)

சர்வேசுரன் பத்தாவது ஆக்கினையை அனுப்புமுன்
இஸ்றாயேல் ஜனங்கள் தங்களை முஸ்திப்புசெய்து
கொள்ளும்படி உத்தரவளித்தார். ஆகையால் மோயீ
சனும் ஆரோனும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் கட்

டளை கொடுத்தபடி அவர்கள் மறுவில்லாத செம்மறிப் புருவையைத் தயார்படுத்தி, மாதத்தில் 12-ம் தேதியன்று பலிசெலுத்தி, அதன் இரத்தத்தை கதவு நிலையில் பூசி, அதன் மாமிசத்தை நெருப்பில் பொரித்து, இடுப்பில் கச்சைகட்டி, ஊன்றுகோலை கையிற்பிடித்து, நின்ற நிலையில் செம்மறி மாமிசத்தையும் புளியாத அப்



பத்தையும், கசப்பான கீரையுடன் சேர்த்துப் புசித்தார்கள்.

நடுச்சாம வேளையில் ஆண்டவரின் சம்மனசானவர் வந்து பாரவோன் முதற்கொண்டு ஏழைக் குடியானவன்வரையிலுமுள்ள சகல எஜிப்து நாட்டாரின் முதற்பேறான பிள்ளைகள் யாவரையும் கொன்றுவிட்



டார். இத்தண்டனையிலிருந்து ஒருவரும் தப்பினவரல்ல. ஆனால் இஸ்ருயேல் ஜனங்களின் கதவுநிலைகளில் இரத்தத்தைக்கண்ட தேவதூதன் அவர்களைக் காப்பாற்றினார்.

பாரவோன் இதைக்கண்டு மோயீசனையும் ஆரோனையும் வரவழைத்து, இஸ்ருயேல் ஜனங்களைக் கூட்டிக்கொண்டுபோகக் கட்டளையிட்டான். எஜிப்தியர் தாங்களும் சிதைக்கப்படுவோமென்று பயந்து கூடியசீக்கிரத்தில் எபிரேயர் தங்கள் தேசத்தைவிட்டுப் புறப்படும்படி துரிதப்படுத்தினார்கள். யாக்கோபு அவ்விடத்துக்குப் போய்ச்சேர்ந்த 215 வருஷங்களுக்குப்பிறகு ஸ்திரீகளும் குழந்தைகளுந் தவிர ஆறு லட்சம் இஸ்ருயேலித்தர் அந்நாட்டைவிட்டுப் புறப்பட்டார்கள். சூசையினுடைய எலும்புகளையும் தங்களுடன் கொண்டு போனார்கள்.

புத்தி.—பாஸ்கு செம்மறிப்புருவையானது சிலுவையின் மேல் தம்மைப் பலியாக ஒப்புக்கொடுத்த சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுக்கிறீஸ்துநாதருக்கு அடையாளமாகும். நாமும் அவருடைய இரத்தத்தால் முத்திரிக்கப்பட்டு நித்திய மரணத்தினின்று இரட்சிக்கப்பட்டோம். இஸ்ருயேலித்தார் எஜிப்தின் அடிமைத்தனத்தினின்று மீட்கப்பட்டதுபோல், நாமும் பாவத்தினுடையவும் நாகப்பேயினுடையவும் அடிமைத்தனத்தினின்று மீட்கப்பட்டோம்.

வினா.—எதைப் புசிக்க சர்வேசுரன் இஸ்ருயேலித்தாருக்குக் கட்டளையிட்டார்? பாஸ்கு செம்மறிப்புருவையைப் புசித்த விதமெப்படி? கதவு நிலைகள் எதனால் பூசப்பட்டன? அர்த்தராத்திரியில் என்ன சம்பவித்தது? யார் காப்பாற்றப்பட்டது? பாரவோன் என்ன செய்தான்? இஸ்ருயேலித்தார் எவ்வளவுகாலம் எஜிப்திலிருந்தார்கள்? எத்தனைபேர் எஜிப்தில் பிரவேசித்தார்கள்? எத்தனைபேர் அதைவிட்டுப்

புறப்பட்டார்கள்? யாருடைய எலும்புகளைத் தங்களுடன் கொண்டுபோனார்கள்? பாஸ்கு செம்மறி எதற்கு அடையா ளம்?

---

## 32-ம் அதிகாரம்

### செங்கடலைக் கடந்துபோதல்

உ. பி. 2513.) (கி. மு. 1487.

சர்வேசுரன் அவர்களுக்கு வழித்துணையாகி பகலில் ஓர் மேகத்தூணைக்கொண்டும், இரவில் அக்கினித் தூணைக்கொண்டும் வழிகாட்டி, அவர்களை நடத்திக்



கொண்டுபோனார்; சிலதினங்களுக்குள் செங்கடலுக்
கருகே வந்தார்கள். இதனிடையில் பாரவோன், எட்



ரேயலை விட்டதினால் மனவருத்தப்பட்டு, தன் குதிரை
களையும் இரதங்களையும் நடத்திப் பின்தொடர்ந்தான்.
அவன் வருவதைக்கண்ட இஸ்ருயேலித்தார் அதிக
மாய்ப் பயந்து நடுங்கினார்கள். ஆனால் ஆண்டவர் அவர்
களுக்காகப் போராடுவாரென்று மோயீசன் உறுதி
சொல்லி, யாவருக்கும் தைரியம் வருவித்தார்.

இஸ்ருயேலித்தாருக்கு முன்னாகச்சென்ற மேக
மானது இப்போது அவர்களுக்குப் பின்னாகவந்து,
எஜிப்தியருக்கும் இஸ்ருயேலித்தாருக்கு மத்தியில் ஒரு
சுவர்போல் நின்று, எஜிப்தியருக்கு இருளையும், இஸ்ரு
யேலித்தாருக்குப் பிரகாசத்தையுங் கொடுத்தது. சர்
வேசுரனுடைய கட்டளைப்படி மோயீசன் தன் கோலைக்
கடல்மேல் நீட்டவே, ஜலம் பிரிந்து இருபக்கத்திலும்
சுவர்போல் நின்று இடையில் வழியுண்டாக, இஸ்ரு
யேல் ஜனங்கள் வெடி காய்ந்த தரைமேல் நடந்து கட
லைக் கடந்தார்கள். மறுநாள் காலையில் எஜிப்தியரும்
அவர்களைப் பின்தொடர்ந்து கடலில் இறங்கியபோது,
சுவாமியுடைய கட்டளைப்பிரகாரம் மோயீசன் மறுபடி
யும் தன் கோலை கடலின்மேல் நீட்டவே, ஜலம் முன்
போல் அதனிடத்துக்குவந்து குவிப, வழியில்லாமல்
ஏக ஜலமாகி, பாரவோனும், அவனுடைய படையும்,
இரதங்களும், குதிரைவீரரும் ஜலத்தில் மூழ்கிப்போக
ஒருவன்முதலாய்த் தப்பிப் பிழைக்காமல் எல்லோரும்
கடலுக்கு இரையானார்கள்.

புத்தி.—பகற்காலத்தில் மேகமாயும், இரவில் அக்கினி
ஸ்தம்பமாயும் நின்றது சேசுக்கிறீஸ்துநாதருக்கு அடையாள
மாம். அவரே வெளிச்சமாயிருக்கிறார். அவ்வெளிச்சத்தில்
நடப்பவர்கள் அழிவையடையார்கள். செங்கடலும் ஞானஸ்
நானத்திற்கு அடையாளமாயிருக்கிறது. நாம் மோட்சத்தை

யடையவேண்டுமாகில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்.

வினா.—இஸ்ராயேலித்தாரை நடத்தினதார்? பகலில் வழிகாட்டினதென்ன? இராவில் எது வழிகாட்டிற்று? பாரவோன் என்ன செய்தான்? மேகத்தூண் எவ்வாறானது? இஸ்ராயேலித்தார் செங்கடலை எப்படிக் கடந்தார்களென்று விவரித்துச் சொல்? எஜிப்தியருக்கு சம்பவித்ததென்ன?

## 33-ம் அதிகாரம்

### சர்வேசுரன் வனாந்தரத்தில் செய்த அதிசயங்கள்

இஸ்ருயேல் ஜனங்கள் வனாந்தரத்துக்கு வந்தபோது அவர்களுக்கு ஆகாரம் குறைவுபட்டதினால், மோயீசன்மீது முறையிட்டு, எஜிப்து நாட்டில் சாப்பிட்ட இறைச்சியை விரும்பிக் கேட்டார்கள். சர்வேசுரனும் அவர்களிஷ்டப்படி அவர்களுக்குத் தேவையான இறைச்சியும் அப்பமுங் கொடுப்பதாக மொழிந்தார். அன்று சாயந்திரம் ஏராளமான காடைகள் பறந்துவரவே, வெகு சுலபமாய் அவைகளைப் பிடித்துக் கொண்டார்கள்; மறுநாள் காலையில் வானத்தினின்று அப்பம் பொழிந்தார். அதற்கு மன்னாவென்று பெயர். அது வெண்ணிறமுள்ளதும், கொத்துமல்லி விதைப்பரிமாணமானதும், தேனும் பாலுங் கலந்ததின் உருசியுள்ளதுமாயிருந்தது.

அப்போது மோயீசன் ஜனங்களைப்பார்த்து அது சர்வேசுரனால் அளிக்கப்பட்டதென்று சொல்லி, அதில் அவனவனுக்குத் தேவையானமட்டும் எடுத்துக்கொள்ளக் கட்டளையிட்டார். சர்வேசுரன் இவ்வாகாரத்தைக்கொண்டு இஸ்ருயேல் ஜனங்களை நாற்பது வருஷ



காலமாக போஷித்துவந்தார். அவர்கள் கானான் தேசம் வந்து சேர்ந்தபிறகு, அதை நிறுத்திவிட்டார்.

இதற்குப்பின் குடிக்க ஜலமில்லாமல்போகவே இஸ்ருயேலித்தார் மறுப்படியும் முறையிடத் தொடங்கினார்கள். மோயீசன் தன் கோலால் ஓரேபு மலைப்



பாறையைத் தட்டும்படியாகச் சர்வேசுரன் கட்டளையிட்டார். அவரும் அப்படியே பாறையை அடிக்க ஏராளமான ஜலம் அப்பாறையினின்று புறப்பட்டது. ஜனங்களும் அதைக் குடித்து தங்கள் தாகத்தைத் தீர்த்துக்கொண்டார்கள்.

புத்தி.—இந்த மன்னாவானது, சேசுக்கிறீஸ்துநாதர் அப்பம் இரசத்தின் குணங்களுக்குள் மறைவாய்த் தம்மைத் தாமே நமக்குக் கொடுக்கும் சற்பிரசாதமாகிற உத்தம ஆகாரத்திற்கு அறிகுறியாயிருக்கிறது.

வினா.—வனாந்தரத்தில் ஜனங்கள் என்ன செய்தார்கள்? சர்வேசுரன் சாயந்தரவேளையில் என்ன அனுப்பினார்? காலையில் என்ன அனுப்பினார்? மன்னாவின் நிறம் ருசி என்னமாயிருந்தது? சர்வேசுரன் மன்னாவைக்கொண்டு அவர்களை எத்தனை வருஷம் போஷித்தார்? மன்னா எதற்கு அடையாளம்? சர்வேசுரன் எப்படி ஜலம் கொடுத்தார்?

## 34-ம் அதிகாரம்

### பத்துக் கற்பனை

இஸ்ராயேலர் எஜிப்து நாட்டைவிட்டுப் புறப்பட்டு மூன்று மாதங்களுக்குப்பிறகு சீனாய் பர்வதத்தின் அருகே வந்துசேர்ந்தார்கள். சர்வேசுரனுடைய கட்டளைப்படி மோயீசன் மலையேறினார். அங்கு சர்வேசுரன் அவருடன் பேசி, தாம் அவர்களுக்குச் செய்துவந்த அற்புதங்களை நினைப்பூட்டியபின், இனி பிரமாணிக்கமாக நடந்துகொண்டால் அவர்களைக் காப்பாற்றி தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களாக ஏற்றுக்கொள்வதாக மொழிந்தார். மோயீசன் மலையிலிருந்து இறங்கி வந்து ஆண்டவர் சொன்னதெல்லாம் அவர்களுக்குத் தெரியப்படுத்தவே: "ஆண்டவர் வாக்கிட்டபடி எல்லாம் செய்து அவருடைய இஷ்டத்தை நிறைவேற்றுவோம்" என்று யாவரும் ஒரே சத்தமாய் ஆர்ப்பரித்துக் கூவினார்கள்.

அப்போது சர்வேசுரன் மூன்று தினங்களுக்குள் தங்களைச் சுத்திகரித்துக்கொள்ளவேண்டுமென்று



ஜனங்களுக்குக் கட்டளையிட்டார். மூன்றா நாள் காலையில் இடியிடிக்கவும் மின்னல் மின்னவுந் தொடங்கின. இருண்ட மேகம் பர்வதத்தைச் சூழ்ந்துகொண்டது. சீனாய் மலையின் உச்சி அக்கினிமயமாயிருந்ததுமன்றி, அடிவாரமும் கிடுகிடென்று அசைந்து ஆடினது. பிறகு தாரையின் பயங்கரத் தொனிச்சத்த முண்டாகவே, ஜனங்களெல்லோரும் மெத்தவும் பயந்து நடுநடுங்கினார்கள்.



அத்தருவாயில் மோயீசன் ஜனங்களை மலையடிவாரத்துக்குக் கூட்டிக்கொண்டுபோக ஆண்டவர் இவ்வண்ணம் அவர்களுடன் பேசினார்:—

I. சர்வேசுரன் நாமே. நமக்கு முன்பாக அந்நிய தேவர் உனக்கில்லாமல் போவதாக.

2. சர்வேசுரனுடைய திருநாமத்தை விபர்த்த
மாக ஸ்வீகரியாதிருப்பாயாக.
3. ஓய்வு நாளை ஆசரிப்பாயாக.
4. பிதாவையும் மாதாவையும் சங்கித்திருப்பா
யாக.



5. கொலைசெய்யாமலிருப்பாயாக.
6. விபசாரஞ் செய்யாமலிருப்பாயாக.
7. களவாடாதிருப்பாயாக.
8. பொய்ச்சாட்சி சொல்லாமலிருப்பாயாக.
9. பாதாரத்தை அபேட்சியாதிருப்பாயாக.
10. பாருடமையை அபேட்சியாதிருப்பாயாக.

அப்பர்வதத்தைச்சுற்றிச் சூழ்ந்திருந்த ஜனங்கள் நடு நடுக்கத்தோடும், அச்ச வணக்கத்தோடும் இவைக



ளைச் செவியுற்றுக் கேட்டு, ஆண்டவரிட்ட கட்டளைப் படி நடப்பதாக உறுதிமொழி கொடுத்தார்கள். அப் போது மோயீசன் ஒரு பீடத்தைக் கட்டி ஆண்டவ ருக்கு பலி சமர்ப்பித்தார். மேலும் அவர்கள் அன்று செய்துகொண்ட உடன்படிக்கைக்கு அடையாளமாக பலியிடப்பட்ட மிருகங்களின் இரத்தத்தை அவர்கள் பேரில் தெளித்தார்.

புத்தி.—பழய ஏற்பாட்டின் உடன்படிக்கை சீனாய் பர் வதத்தின்மேல் செய்யப்பட்டதுபோல புதிய ஏற்பாட்டின் உடன்படிக்கையும் கல்வாரிமலையின்மீது முத்திரிக்கப்பட் டது. கடவுள் அவ்விடத்தில் தமது வல்லமையைக் காட்ட, இவ்விடத்தில் அவர் தமது தயவைக் காட்டினார். அவ்விரு உடன்படிக்கைகளும் இரத்தத்தால் முத்திரிக்கப்பட்டன. சீனாய் பர்வதத்தின்மேல் இரிஷபத்தின் இரத்தத்தாலும் கல் வாரி மலையின்பேரில் சேசுக்கிறீஸ்துநாதருடைய இரத்தத் தாலும் முத்திரையிடப்பட்டது.

வினா.—இஸ்ராயேல் ஜனங்கள் சீனாய் பர்வதத்தினிடம் எப்போது வந்தார்கள்? மலையின்மேலேறி வரும்படி கூப் பிட்டதார்? சர்வேசுரன் மோயீசனுக்கு என்ன சொன்னார்? ஜனங்கள் என்ன சொன்னார்கள்? என்ன செய்யவேண்டு மென்று ஜனங்களுக்குக் கட்டளையிடப்பட்டது? மூன்றும் நாள் சம்பவித்ததென்ன? பத்துக் கற்பனையைச் சொல்? மோயீசன் என்ன செலுத்தினார்? ஜனங்கள்பேரில் என்னத் தைத் தெளித்தார்? சீனாய் பர்வதத்துக்கும் கல்வாரிமலைக்கு முள்ள ஒப்பனையென்ன?

## 35-ம் அதிகாரம்

### பொற் கன்றுக்குட்டி

இதற்குப்பிறகு மோயீசன் மறுபடியும் மலையில் ஏறிப் போய் நாற்பது பகலும் நாற்பது இரவுமாக சர்வேசுரனோடு சம்பாஷித்துக்கொண்டிருந்தார். அப்போது சர்வேசுரன் பத்துக் கற்பனை யெழுதப்பட்ட இரண்டு கற்பலகைகளை அவருக்குக் கொடுத்தார். மோயீசன் மலையினின்றுவரத் தாமதமானதால் ஜனங்கள் முறுமுறுத்து, ஆரோனிடம்வந்து, "எஜிப்தியர் வணங்குந் தேவரைப்போலொன்று தங்களுக்குச் செய்துகொடுக்க வேணுமென்று அவரைத் தொந்தரவு செய்தார்கள். அவர் எவ்வளவுதான் புத்திசொல்லியும் அந்த மூர்க்கர் கேளாததால்: உங்கள் பெண்டுபிள்ளைகளுடைய காது கழுத்திலுள்ள பொன் வெள்ளி நகைகளைக் கொண்டுவாருங்கள்" என்று அவர்களுக்குச் சொன்னார்.

ஆனால், அவர்கள் கொண்டுவரமாட்டார்களென்று அவர் நினைத்திருந்த எண்ணத்துக்கு முழு விரோதமாய் அவர்கள் ஷை நகைகளைக் கொண்டுவந்தார்கள். ஆரோன் கோழை மனமுடையவராகையால், அவர்களுடைய ஆகாத வேண்டுகோளை மறுக்கத் தைரியமற்றவராய், அவர்கள் கொண்டுவந்த பொன்னை யுருக்கி அதினால் ஒரு பொற்கன்று செய்து அதை யொரு பீடத்தின்பேரில் ஸ்தாபித்தார். அதைக்கண்ட இஸ்ருயேலித்தார் சந்தோஷப்பட்டு, அதற்கு பலியிட்டு, அதற்குமுன் அஞ்ஞானிகளைப்போல் தின்றுங் குடித்தும் களித்து விளையாடத் துவக்கினார்கள்.

மோயீசன் மலையினின்று இறங்கிவந்து இந்த அருவருப்புக்குரிய செய்கையைக்கண்டு, அதிக கோபங்



கொண்டவராய் பத்துக் கற்பனை எழுதப்பட்ட கற்பலகையை உடைத்துவிட்டு, அந்தக் கன்றுக்குட்டியை இழுத்துக் கீழே தள்ளி அதைச் சுட்டு பஸ்பமாக்கினார். பிறகு லேவியின் குமாரருக்குக் கட்டளைகொடுத்து, அவர்கள் இறங்கியிருந்த கூடாரங்களைச் சுற்றிவரவும், எதிர்ப்படுகிறவர்களைக் கொன்றுவிடவுஞ் சொன்னார். அப்படியே அத்தினம் இருபத்திமூவாயிரம்பேர் கொல்லப்பட்டார்கள்.

மோயீசன் மறுபடியும் மலையின்மீதேறி ஜனங்களை மன்னிக்கவேண்டுமென்று ஆண்டவரைப் பிரார்த்தித்துக்கொண்டார். ஆண்டவரும் அவருடைய மன்றாட்டுக்குச் செவிகொடுத்தார். மோயீசன் முன்போல் இரண்டு கற்பலகைகளைத் தயார்செய்ய, சர்வேசுரன் மறுபடியும் பத்துக் கற்பனையை அவைகளில் எழுதிக் கொடுத்தார்.

மோயீசன் ஆண்டவரிடத்தில் பேசினபின் ஷை இரண்டு கற்பலகைகளையும் கொண்டுவரும்போது அவர் சிரசில் இரு கொம்புகளைப்போன்ற சூரியக் கதிர்கள் பிரகாசித்தன. இஸ்ருயேலித்தார் அதைக்கண்டு பயந்து, அவரை ஏறெடுத்துப்பார்க்கத் துணிந்தவர்களல்ல. ஆகையால் மோயீசன் அவர்களோடு பேசும்போது தலையில் முக்காடிட்டுக்கொள்ளவேண்டியதாயிற்று.

வினா.—மோயீசன் எவ்வளவு காலம் மலைமேலிருந்தார்? சர்வேசுரன் என்ன கொடுத்தார்? ஜனங்கள் ஆரோனை என்ன கேட்டார்கள்? அவர் என்ன செய்தார்? ஜனங்கள் செய்ததென்ன? மோயீசன் என்ன செய்தார்? எதை உடைத்தார்? லேவியின் குமாரர் செய்ததென்ன? எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள்? மோயீசன் மறுபடியும் எங்கே

போனர்? என்ன கொண்டுவந்தார்? மோயீசன் சிரசில் தோன்றினதென்ன?

---

# 36-ம் அதிகாரம்

## தேவாராதனை முறைமைகள்

சர்வேசுரன் மோயீசனுக்குப் பத்துக் கற்பனைகளையேயன்றி வேதசடங்கு ஆசார முறைமைகளையும் கற்றுக்கொடுத்தார். அவ்வாசார சடங்குகளை அணுவளவேனுந் தவறாது பிரசைகள் சரிவர அனுசரிக்கும்படியாக மோயீசன் அவைகளை வெகு ஜாக்கிரதையுடன் எழுதிக்கொடுத்தார்.

கூடாரம்.—நினைத்தபோது பிரித்துக்கொள்ளக் கூடியபடி தூண்களை நிறுத்தி ஒரு கூடாரத்தை மோயீசன் அமைத்தார். அக்கூடாரம் 30 முழ நீளமும், 10 முழ உயரமும், 10 முழ அகலமுமாயிருந்தது. அதன் தூண்கள் சேதிம் என்னும் விலையுயர்ந்த மரத்தால் செய்யப்பட்டு, பொன் தகட்டால் மூடப்பட்டுள்ளன. உட்புறத்தில் சிறந்த சித்திரவேலைகள் செய்த திரையொன்று பரிசுத்த முற்றத்துக்கும் பலபீடத்துக்கு மத்தியில் தொங்கிக்கொண்டிருந்தது.

உடன்படிக்கையின் பெட்டகம்.—இதை மிக்க விலையுயர்ந்த மரத்தால் செய்து, பொன் தகட்டால் மூடி, இதன்பேரில் இருபுறத்திலும் இரண்டு தேவதூதரின் சுரூபங்களை யமைத்து பரிசுத்த முற்றத்துக்குள் ஸ்தாபித்துவைத்தார். இந்தப் பெட்டகத்தில் வேத கற்பலகைகள் வைக்கப்பட்டிருந்தன.

பலபீடத்தினருகே தேவாராதனைக்கு அர்ச்சனை செய்யப்பட்ட மூன்று வஸ்துக்களிருந்தன: பன்னிரு



அப்பங்கள் வைக்கும் ஓர் மேசையும், இரவு முழுவதும் எரிந்து கொண்டிருக்கும் ஏழு கிளைகளையுடைய ஓர் பொன் விளக்குத்தண்டும், தூப பீடமும் ஆகிய இம் மூன்றுமே. இதுவுமன்றி மோயீசன் கூடாரத்தைச் சுற்றி ஒரு மண்டபமேற்படுத்தினர். அதில் பலிபீடமும், குருக்கள் தேவ கைங்கிரியங்களை நடத்துவதற்கு முன் கங்களைச் சுத்தப்படுத்திக்கொள்ள ஒரு பிரமாண்டமான செம்பு அண்டாவும் வைக்கப்பட்டிருந்தன.

புத்தி.—இந்தப் பெட்டகம் கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களின் கோவிலிலுள்ள திவ்யநற்கருணைப் பெட்டிக்கு அடையாளம். பரிசுத்த முற்றமானது, புதிய ஏற்பாட்டின் பலியைச் செலுத்தும் பீடமாமே. ஆசாரியர் நடமாடும் இடம் பலிபீடத்துக்கு ஒப்பானது. தற்போது ஜனங்கள் ஆராதனை செலுத்துந் தேவாலயத்தின் மத்தியபாகமே மண்டபத்துக்குச் சமானம்.

இரத்தஞ் சிந்துகிற பலி, இரத்தஞ் சிந்தாத பலி ஆக இரண்டுவகைப் பலிகள் பழைய ஏற்பாட்டில் நியமிக்கப்பட்டிருந்தன. ஆடு, மாடு, புறா முதலியவைகளைச் சமர்ப்பித்தல் இரத்தப்பலியென்றும், அப்பம், இரச முதலியவைகளை ஒப்புக்கொடுத்தல் இரத்தஞ் சிந்தாத பலியென்றுஞ் சொல்லப்பட்டுவந்தது. இவ்விரத்தப்பலி சேசுக்கிறீஸ்துநாதர் சிலுவையின்மீது செலுத்திய இரத்தஞ் சிந்தின பலிக்கும், இரத்தஞ் சிந்தாத பலி திவ்யபூசைக்குங் குறிப்பாயிருக்கின்றன.

இஸ்ராயேலர் அனுசரித்துவந்த பண்டிகைகளாவன.— 1-வது பாஸ்குபண்டிகை: அத்தினம் இஸ்ராயேலர் எஜிப்து நாட்டினின்று விடுதலையடைந்த ஞாபகார்த்தமாக செம்மறிப்புருவையின் இறைச்சியையும், ஏழு நாளைக்குப் புளியாத மாவின் அப்பத்தையும் புசிப்பார்கள். 2-வது பெந்தகோஸ்து: இதைச் சீனாய் பர்வதத்தின்மேல் அவர்கள் பெற்றுக்கொண்ட தேவகட்டளையின் ஞாபகார்த்தமாக பாஸ்கு பண்டிகைக்குப்பிறகு 7-ம் வாரங் கொண்டாடுவார்கள். இப்

பண்டிகை காலத்தில் தங்கள் விளைவின் முதற் பலனை
காணிக்கை செலுத்துவார்கள். 3-வது கூடாரப்பண்டிகை:
இது அவர்கள் வனாந்தரத்தில் சஞ்சாரஞ் செய்ததின் ஞாப
கார்த்தமாக கொண்டாடப்பட்டுவந்தது. அத்தினங்களில்
இஸ்ரூயேல் ஜனங்கள் மரக்கிளைகளால் உண்டாக்கிய கூடா
ரங்களில் வசித்துவந்தார்கள். 4-வது பிராயச்சித்த பண்
டிகை: அன்று ஆசாரியன் தன் பாவங்களுக்காக ஓர் எருதை
யும், பிரஜைகளின் பாவங்களுக்காக ஓர் வெள்ளாட்டையும்
பலியிடுவார். பிறகு அவர் பரிசுத்த முற்றத்தில் பிரவே
சித்து, பொன் தூபகலசத்தைக்கொண்டு, பத்துக் கற்பனை
யடங்கிய பெட்டகத்துக்கு தூபங்காட்டிப் பலிப்பொருளின்
இரத்தத்தை தளத்தில் தெளிப்பார்.

தேவாராதனை நடத்துங் குருக்கள்.—1-வது பெரிய
குரு: மோயீசன் இவ்வுத்தியோகத்துக்கு ஆரோனைத் தெரிந்
தெடுத்து, அவரை அர்ச்சித்து, அபிஷேகஞ்செய்து, அவ்வுத்
தியோகத்துக்கு யோக்கியமான பலவித வஸ்திரங்களை அவ
ருக்கு அணிவித்தார். 2-வது ஆசாரியர்: இவர்கள் ஆரோ
னுடைய பிள்ளைகளே. பலி செலுத்துகிறது அவர்கள்
கடமை. 3-வது லேவித்தர்கள்: லேவியின் பிதிர்வழிச
ளான இவர்கள் கூடாரத்துக்குள்ளடங்கிய தாழ்ந்த உத்தி
யோகங்களை வகித்துவந்தார்கள்.

வினா.—சர்வேசுரன் பத்துக் கற்பனையல்லாமல் வேறு
என்ன கொடுத்தார்? கூடாரத்தைப்பற்றிய விபரமென்ன?
பரிசுத்த முற்றமென்றாலென்ன? அதில் என்ன ஸ்தாபிக்கப்
பட்டிருந்தது? பெட்டகமாவது எது? பலிபீடத்தினருகே
வைக்கப்பட்டிருந்த மூன்று பொருட்களெவை? மண்டபம்
எதை வளர்த்துக்கொண்டிருந்தது? இவைகளுக்கும் கத்தோ
லிக்கர் தேவாலயத்திலுள்ளவைகளுக்கும் உள்ள சம்பந்த
மென்ன? பழய ஏற்பாட்டில் செலுத்திய பலிகளெவை?
பாஸ்கென்றாலென்ன? பெந்தகோஸ்து ஆவது யாது?
கூடாரப்பண்டிகை யெது? பிராயசித்த பண்டிகை யெது?
பெரிய குரு யார்? ஆசாரியர் யார்? லேவித்தர்கள் யார்?



# 37-ம் அதிகாரம்

போய்த்தூதர்—ஜனங்களின் முறைப்பாடு—சர்வேசுரன்
'இட்ட தண்டனை (கி. மு. 1486.
உ. பி. 2514.)

இஸ்ரூயேல் ஜனங்கள் சீனாய் பர்வதத்தினருகே ஒரு
வருஷகாலம் இருந்தார்கள். அவர்கள் புறப்
பட்டபோது வாக்குத்தத்தத்தின் நாட்டுக்குப் போய்
வரும்படி ஜோசுவே, காலேப் என்ற இருவருடன்
பன்னிரண்டு பேரை மோயீசன் தெரிந்துகொண்டார்.
அவர்கள் நாற்பதுநாளைக்குப்பிறகு அத்தேசத்தின் பழ
வர்க்கங்களை மாதிரிகாட்டக்கொண்டுவந்தார்கள். அவற்
றுள் பிரமாண்டமான ஒரு திராட்சகுலையை இரண்டு
பேர் தோளில் சுமந்துகொண்டுவந்தார்கள். அத்தே
சம் மெய்பாகவே செழிப்புள்ளதென்றும், ஆனால் அதி
லுள்ள ஜனங்கள் இராட்சதரென்றுஞ் சொன்னார்கள்.

அப்போது ஜனங்கள் அழுதுகொண்டு எஜிப்து
நாட்டிலாவது வனாந்தரத்திலாவது செத்திருந்தால்
உத்தமமாயிருக்குமேயென்று மோயீசனுக்கும் ஆரோ
னுக்கும் விரோதமாய் முறுமுறுத்துப் பேசினார்கள்.
ஜோசுவேயும் காலேபும் அத்தேசத்தின் செழிப்பைப்
பற்றியும், ஜனங்களின் பலவீனத்தைப்பற்றியும் எவ்வ
ளவுதான் சொல்லியும் அவையெல்லாம் நிஷ்பலமாயின.
ஜனக்கும்பல் மற்றவர்களால் தூண்டப்பட்டவர்களாய்,
இவர்கள் சொல்வதைக் கேளாமல், எஜிப்துக்குத்
திரும்பிப் போகவேணுமென்று கூக்குரலிட்டுக் கத்தி
னார்கள்.

அவர்களுடைய முறைப்பாடு அதிகரித்தபோது,
சர்வேசுரனுடைய மகிமைப்பிரதாபம் வாக்குத்தத்தத்
தின் பெட்டகத்தின்மேல் காணப்பட, ஆண்டவர்

மோயீசனைப் பார்த்து, இந்த அவிசுவாசமான ஜனங்களை அழித்து, இவர்களிலும் சிறந்த ஜனங்களுக்கு உன்னை அதிபதியாக்குவோமென்று சொன்னார். ஆனால் மிகவும் பொறுமைசாலியாகிய மோயீசன் அவர்களை மன்னித்துப் பாதுகாக்கவேண்டுமென்றுமாத்திரம் வேண்டிக்கொண்டதனால் ஆண்டவர் அவர்களுக்குப் பொறுத்தலளித்தார். ஆயினும் அப்பாவத்திற்கு ஆக்கினையாக, ஜோசுவேயும் காலேபும் தவிர பிரஜைகளில் இருபது வயதுள்ளவனும் அதற்குமேற்பட்ட எவனும் வாக்குத்தத்தத்தின் நாட்டில் பிரவேசிக்கமாட்டானென்றும், அதைச்சுற்றி வேவுபார்த்த நாற்பது நாட்கணக்கின்படியே ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வருஷமாக கணிக்கப்பட்டு, நாற்பது வருஷகாலம் வனாந்தரத்தில் அவர்கள் பிள்ளைகள் அலைந்து திரிந்தபின்மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள் என்றும் வாக்கிட்டார்.

புத்தி.—இவ்வண்ணமே சேசுக்கிறீஸ்துநாதருடைய காலத்திலும் யூதர்களுக்குச் சம்பவித்தது. அதெப்படியென்றால்: கிறீஸ்துநாதரால் அறிவிக்கப்பட்ட ஞான ராஜாங்கத்தை யூதர் கண்டுபிடியாமல் அவரை வெறுத்துத் தள்ளிவிட்டார்கள். சேசுநாதர் சிலுவையில் தொங்கும்போது அவர்களுக்குப் பொறுத்தலளிக்கும்படி தமது பிதாவை மன்றாடினார். ஆனால் அவர்கள் அவரைப் புறக்கணித்த பாவத்திற்குத் தண்டனையாக உலக முடிவுபரியந்தம் பூமியில் அவர்கள் நாடோடிகளாய்த் திரியும் நிர்ப்பாக்கியமடைந்தார்கள்.

வினா.—ஜனங்கள் சீனாய்ப் பர்வதத்தண்டை எவ்வளவு காலமிருந்தார்கள்? கானான் தேசத்துக்கனுப்பப்பட்டவர்கள் யார்? அவர்கள் வந்து சொன்ன சங்கதியென்ன? ஜனங்கள் என்ன செய்தார்கள்? யாருடைய பேச்சு நிஷ்பலமானது? பெட்டகத்தின்மேல் என்ன தோன்றினது? என்ன செய்வதாகக் கடவுள் சொன்னார்? சர்வேசுரன் விதித்த



தண்டனையென்ன? பிற்காலத்திய யூதரைப்பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது?

---

## 38-ம் அதிகாரம்

### கோரே, தாத்தான், அபிரோன்

(கி. மு. 1486- உ. பி. 2514.)

முன் அதிகாரத்தில் சொன்ன வர்த்தமானங்கள் நடந்த சில நாளைக்குப்பிறகு, கோரே, தாத்தான், அபிரோன், என்ற மூவரும் 250 லேவித்தர்களைச் சேர்த்துக்கொண்டு மோயீசன் ஆரோன் இவர்களுக்கு விரோதமாய்க் கலகம் செய்து, அவர்களுடைய அதிகாரத்தை மறுக்கத் துணிந்தார்கள். மறுநாள் ஆண்டவர் ஜனங்களை அந்த துஷ்டருடைய கூடாரங்களைவிட்டு அப்பாலே போகவும், அவர்களுக்குச் சொந்தமான யாதொன்றைத் தொடாமலிருக்கவுங் கற்பித்து, அப்படித் தொட்டால் அவர்களின் பாவத்துக்கு இவர்கள் உடந்தையாவார்களென்றும் சொன்னார். அப்போது என்ன நேரிடுமோவென்று ஜனங்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், பூமி பிளந்து அம்மூன்று பேரையும் அவர்களுடைய கூடாரம் முதலிய சொத்துக்களனைத்தையும் விழுங்கிவிட்டது. பிறகு நெருப்பு எழும்பி 250 லேவித்தர்களையும் சுட்டெரித்துவிட்டது. மோயீசனும் ஆரோனும் தெய்வ கட்டளைப்படி அதிகாரம் வகித்திருக்கிறார்களென்று அன்று ஜனங்கள் திருஷ்டாந்தமாய் அறிந்துகொண்டார்கள்.

புத்தி.—இக்காலத்திலும் இதைப்போன்ற குழப்பங்கள் குருக்களுக்கு விரோதமாய் நடத்தப்பட்டுவருகின்றன. பேராசைக்காரரும் துஷ்டரும் திருச்சபையை ஆள விரும்பி

கோரேயையும் அவனைச் சேர்ந்தவர்களையும்போல் நடக்க, அவர்களுடைய ஆங்காரத் துணிவால் நீதிபரரான சர்வேசுரனிடமிருந்து தக்க தண்டனையை அடைந்துவருகிறார்கள்.

வினா.—யார் குழப்பஞ்செய்தது? அவர்கள் எப்படி தண்டிக்கப்பட்டார்கள்? இக்காலத்தில் நாம் காணுவதென்ன?

## 39-ம் அதிகாரம்

### மோயீசனின் சந்தேகமும்—வெண்கல சர்ப்பமும்

உ. பி. 2552.) (கி. மு. 1448.

மறுபடியும் ஜலங் குறைவுபட ஜனங்கள் முறையிடத் தொடங்கினார்கள். அப்போது சர்வேசுரன் மோயீசனைத் தன் கோலால் பாறையைத் தட்டச் சொன்னார். மோயீசன் கொஞ்ச நேரம் சந்தேகத்துக்கு இடங் கொடுத்தபிறகு பாறையை அடிக்கவே ஏராளமான ஜலம் புரிட்டுவந்தது. இவ்வற்ப சந்தேகம் சர்வேசுரனுக்குப் பிரியப்படாததினால், அவர் மோயீசனைப் பார்த்து: நீ நம்முடைய வார்த்தையை உடனே நம்பாததால், வாக்குத்தத்தத்தின் நாட்டுக்குபோகமாட்டாய் என்று கடினமாக மொழிந்தார்.

சொற்பகாலத்திற்குப்பிறகு ஜனங்கள் மறுபடியுங் கலகஞ்செய்து, முறுமுறுத்து, ஜலமும் ஆகாரமுமில்லையென்று முறையிட, சர்வேசுரன் அக்கினி சர்ப்பங்களையனுப்பினார். அவைகளால் அநேகர் கடியுண்டு குரூரமான வாதைகளைப் பட்டு இறந்துபோனார்கள். இதைக் கண்ட ஜனங்கள் மோயீசனிடம்வந்து, தங்கள் பாவங்களை யங்கீகரித்துக்கொண்டு, சர்ப்பங்களை ஆண்டவர் நீக்கிவிட மன்றாடும்படி அவரைக்கெஞ்சிக் கேட்டுக்



கொண்டார்கள். அவ்வண்ணமே மோயீசன் மன்றாட, ஒரு வெண்கல சர்ப்பத்தைச்செய்து, அதை ஒரு அடையாளமாய் வைக்கும்படி ஆண்டவர் கட்டளையிட்டார். மோயீசனும் அப்படியே செய்துவைக்க, அதை உற்றுப்பார்த்தவர்கள் எல்லோரும் சுகப்பட்டார்கள்.



புத்தி.—இந்தச் சர்ப்பம், சிலுவையிலறையுண்ட நமது இரட்சகரைக் குறிக்கிறது; எப்படியெனில், சர்ப்பத்தை நோக்கின இஸ்ராயேலித்தார் சொஸ்தப்பட்டதுபோல நரக சர்ப்பத்தின் கடியாலுண்டான பாவ காயமானது சிலுவையிலறையுண்ட கிறீஸ்துநாதரை விசுவாசத்தோடு நோக்குவதால் பரிகாரமாய்விடுகிறது.

வினா.—என்ன குறைவுபட்டது? ஜலம் எப்படி உண்டானது? மோயீசன் என்ன செய்தார்? சர்வேசுரன் அவரை எப்படி தண்டித்தார்? சர்வேசுரன் என்ன அனுப்பி

ஞர்? அதனால் என்ன சம்பவித்தது? எது உயர்த்தப்பட்டது? வெண்கல சர்ப்பம் யாருக்கு அடையாளம்?

---

## 40-ம் அதிகாரம்

உ. பி. 2553.) மோயீசனின் மரணம் (கி. மு. 1447.

சுபாவ முறைப்படி மோயீசன் தாம் மரணமடையுங் காலம் முடுகினபோது, தமக்குப்பின் யோசுவேயுக்கு இஸ்ருயேலித்தார் கீழ்ப்படிந்து தேவசித்தப்பிரகாரம் நடக்கும்படி புத்தி சொன்னபின் ஜனங்களைப் பார்த்து, தமக்கு மரணங் கிட்டினதால் யோர்தான் நதியைக் கடந்து, வாக்குத்தத்தத்தின் பூமியிற் பிரவேசிக்க தம்மால் முடியாதென்று சொன்னார். அதன் பிறகு ஆண்டவர் அவர்களுக்குச் செய்தவைகளையெல்லாம் நினைப்பூட்டி, அவர்களை வனாந்தரத்தில் காப்பாற்றிப் போஷித்த அற்புத விதத்தை விவரமா யெடுத்துக் காட்டி, எப்போதும் பிரமாணிக்கமாய் சர்வேசுரனுடைய கட்டளைகளை யநுசரித்து, அவரைச் சிநேகித்து, அவருடைய குரலொலிக்குச் செவிகொடுத்துவரவேண்டியதென்று சொன்னார். தக்க காலத்தில் ஆண்டவர் தன்னைப்போன்ற ஒரு சிறந்த தீர்க்கதரிசியை அனுப்பும்போது, அவருடைய வாக்கைக் கேட்டு நடக்கவேணுமென்றுந் தீர்க்கதரிசனமாகச் சொன்னார். அவர் குறித்துப் பேசிய தீர்க்கதரிசி கிறீஸ்துநாதர்தான்.

இவ்வாறு மோயீசன் பேசி முடியவே, நேபோ என்ற மலையுச்சியின்மேலேறிப்போனார். அங்கிருந்து ஆண்டவர் கானான் தேசத்தை அவருக்குக் காட்ட, மோயீசன் அதைக்கண்டு சந்தோஷப்பட்டு நன்றியறிந்த மனதோடு சர்வேசுரனுக்குத் தோத்திரஞ்



செய்து 120 பிராயமுள்ளவராய் மரணமடைந்தார். ஆண்டவர் அவரை பாகோர் என்ற கணவாயில் பூஸ்தாபிதஞ்செய்தார். அந்த இடம் யாருக்குந் தெரியாது. இஸ்ருயேலித்தார் 30 நாள் அவருக்காக இழவு கொண்டாடினார்கள். மோயீசனுக்குப்பிறகு அவரைப்போன்ற தீர்க்கதரிசி ஒருவருமிருந்ததில்லை.

வினா.—மோயீசனுக்குப்பதிலாய் வந்தார்? மோயீசன் ஜனங்களுக்கு எதை ஞாபகப்படுத்தினார்? மோயீசன் சொன்ன தீர்க்கதரிசனமென்ன? அவர் எங்கே மரணமானார்? எங்கே பூஸ்தாபிதஞ் செய்யப்பட்டார்?

---

## 41-ம் அதிகாரம்

இஸ்ரயேல் ஜனம் வாக்குத்தந்த பூமியில் பிரவேசித்தல்

உ. பி. 2553.) (கி. மு. 1447.

மோயீசன் மரணமடைந்தபிறகு யோர்தான் நதியைக் கடக்கவேண்டுமென்று ஆண்டவர் யோசுவேயுக்குக் கட்டளையிட்டார். ஆசாரியர் வாக்குத்தத்தத்தின் பெட்டகத்தைச் சுமந்துகொண்டு நடக்க, ஜனங்கள் அவர்களைப் பின்தொடர்ந்தார்கள். அவர்கள் யோர்தான் கரைக்கு வரவே, ஆசாரியர்களுடைய பாதங்கள் தண்ணீர்மேல் பட்டவுடன் ஆற்றின் ஜலம் அங்குமிங்கும் சுவர்போல் நிற்க, உலர்ந்த தரையில் நடந்து ஜனங்கள் ஆற்றைக் கடந்தார்கள். எல்லோரும் கடந்தபின், ஜலம் முன்போலவே இணைந்து ஓட ஆரம்பித்தது. ஜனங்கள் ஜெரிக்கோ பட்டணத்துக்குச் சமீபமாய் பாளையமிறங்கி பாஸ்கா பண்டிகையைக் கொண்டாடினார்கள்.

ஜெரிக்கோ நகரம் ஜனத்திரட்சி பெற்று, கோட்டை கொத்தளங்களால் பலப்படுத்தப்பட்டதாயிருந்தது. இஸ்ருயேல் ஜனங்கள் ஆறு நாளாக அதைச் சுற்றிவந்தார்கள். ஏழாம் நாளில் தேவ கட்டளையின்படி ஆசாரியர் வாக்குத்தத்தப் பேழையைச் சுமந்து முன் நடக்க, அவர்களில் ஏழுபேர் எக்காளத்தை ஊத, ஜனங்கள் பெருங் கூச்சலிட்டு ஆர்ப்பரிக்கவே, சுற்று மதில்களெல்லாம் மடமடவென்று இடிந்துவிழ, இஸ்ருயேலித்தார் உட்புகுந்து பட்டணத்தைக் கைவசப்படுத்திக்கொண்டார்கள்.

யோசுவே காலக்கிரமத்தில் கானான்தேசமெல்லாஞ் ஜெயித்து, இஸ்ருயேலித்தாரின் பன்னிரு கோத்திரங்களுக்குத் திருவுளச் சீட்டால் பங்கிட்டுக்கொடுத்தார். ஒவ்வொரு கோத்திரத்தாரும் யாக்கோபின் பன்னிரு பிள்ளைகளினின்று உண்டானவர்கள். இவ்விதமாக இஸ்ருயேல் ஜனங்கள் வெகுகாலம் அலைந்து திரிந்தபின், கடைசியாய் வாக்குத்தத்த நாடு வந்துசேர்ந்து, அதைச் சுதந்தரித்துக்கொண்டார்கள்.

வினா.—யோர்தான் நதியைக் கடந்தபோது, ஜனங்களை நடத்தினதார்? என்ன சம்பவித்தது? என்ன பண்டிகை கொண்டாடப்பட்டது? ஜெரிக்கோ எப்பேர்ப்பட்டது? அதை யெப்படி பிடித்துக்கொண்டார்கள்? கானானை வென்றது யார்? அத்தேசம் எப்படிப் பங்கிடப்பட்டது?



# 42-ம் அதிகாரம்

## நடுவர்கள்

இஸ்ராயேலித்தாருக்கு சர்வேசுரன் இவ்வளவு செழுமையுஞ் சிறந்ததுமான தேசத்தைக் கொடுத்ததற்காக அவர்கள் அவருக்கு என்றும் நன்றியறிதலுடன் நடந்துவரக் கடமைப்பட்டிருந்தும், நன்றியறியாதவர்களாய் தங்களைச் சுற்றியிருக்கும் அஞ்ஞானிகளைப் பின்பற்றி, வாக்குத்தத்த பூமியை அடைந்த சில காலத்துக்குள் விக்கிரக ஆராதனை செய்யத் தலைப்பட்டார்கள். இவ்வக்கிரமத்துக்குத் தண்டனையாக சர்வேசுரன் அவர்களைச் சத்துருக்கள் கையில் விட்டுவிட, அவர்கள் சத்துருக்களுக்கு அடிமைகளாகி துன்பதுரிதங்களை யநுபவிக்கவே, புத்தியடைந்து, தங்கள் பாவங்களுக்காகப் பச்சாத்தாபப்பட்டு சர்வேசுரனிடம் பாவப் பொறுத்தலைக் கேட்டுக்கொண்டார்கள். அப்போது சர்வேசுரன் மனமிரங்கி, அச்சனத்தை சத்துருக்களிடத்தினின்று மீட்டு, இரட்சிக்கும்படியாக தெய்வபக்தர்களான நடுவர்களை நியமிக்கச் சித்தமானார்.

அவர்களுடைய மனஸ்தாபம் கொஞ்சங்காலந்தான் நீளித்திருந்தது. அது எப்படியெனில், ஒவ்வொரு நடுவர் மரணமடைந்தபிறகு முன்போல பாவாக்கிரமங்களையும், விக்கிரக ஆராதனையையும் நடத்திக்கொண்டுவந்தார்கள். 400 வருஷங்களாக அவிசுவாசிகளும் நன்றிகெட்டவர்களுமான இச்சனங்கள் மாறி மாறி சர்வேசுரனை வணங்குவதும் மறுபடியும் விக்கிரக ஆராதனை செய்வதுமாக இருந்தார்கள். அக்காலத்தில் பன்னிரு நடுவர்கள் நியமிக்கப்பட்டார்கள். இவர்களுடைய நாமங்களாவன: ஒதோனியேல், ஆஓத், சாம்கார், பாரக், தேபோர்ரா, ஜேதயோன்,

தோலார், ஜாயிர், ஜெப்தே, அபெசான், அயியாலோன், அப்தோன், சம்சோன், ஏலி, சாமுவேல்.

இவர்களுள் சம்சோன் என்பவர் மிகப்பேர்போனவர். அவர் எவ்வளவு பராக்கிரமசாலியெனில், ஒருநாள் யாதோர் ஆயுதமுமின்றி தன் கையால் ஒரு சிங்கத்தைக் கிழித்தெறிந்துவிட்டார். வேறோர் நாள் ஒரு கழுதையின் அலகெலும்பைக்கொண்டு ஆயிரம் பேரைக் கொன்றுவிட்டார். இதற்குப்பிறகு அவர் ஒருநாள் தூங்கிக்கொண்டிருக்கும்போது, பிலிஸ்தேயர் அவரைப் பிடித்து ஏழு கயிறுகளால் கட்டிவிட்டார்கள். ஆனால் அவர் விழித்துக்கொண்டவுடனே வெகு சுலபமாக அவைகளை அறுத்தெறிந்துவிட்டார்.

அவர் ஜீவியகாலமெல்லாம் இடைவிடாமல் பிலிஸ்தேயரோடு சண்டை செய்துகொண்டுவந்தார். ஒருவிசை அவர்களது பட்டணத்துக் கோட்டை வாசற்படியைப் பிடுங்கிக் கொண்டுபோய்விட்டார். மறுவிசை அவர்களுடைய விளைச்சலையெல்லாம் கொளுத்திவிட்டார். கடைசியாய் அவர் அவர்கள் கையில் அகப்பட்டுக்கொள்ளவே அவருடைய கண்களைப் பிடுங்கிவிட்டார்கள். பிலிஸ்தேயர் தாங்கள் கொண்ட வெற்றியைப்பற்றி அக்களிப்புக்கொண்டவர்களாய், ஒரு விருந்துசெய்து, அதற்கு சம்சோனையும் வேடிக்கைக்காகக் கூட்டிகொண்டுவந்தார்கள். பிலிஸ்தேயர் கூடியிருந்த வீட்டைத் தாங்கிக்கொண்டிருந்த தூண்களின்மேல் சம்சோன் வெகு இளைப்போடு சாய்ந்துகொண்டிருக்கும்போது, சர்வேசுரனுடைய வரம் அவர்பேரில் வரவே, முந்தின பலமடைந்து தூண்களை அசைத்தவுடனே அவ்வீடு மடமடவென்று இடிந்துவிழ, அவரும், அவருடைய சத்துராதிகளாகிய மூவாயிரம் பிலிஸ்தேயரும் மாண்டார்கள்.



புண்ணியவானான ஜெதையோன் என்பவரும் மாதியான் ஜாதியாரோடு சண்டைசெய்து கீர்த்தி பெற்றார்.

வினா.—இஸ்ருயேலித்தார் ஆண்டவருக்கு என்ன செய்யக் கடமைப்பட்டிருந்தார்கள்? அவர்கள் நடந்தவிதமெப்படி? சர்வேசுரன் அவர்களுக்கு என்ன தண்டனையிட்டார்? நடுவர்கள் யார்? எத்தனைபேர் இருந்தார்கள்? சம்சோனைப் பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது? அவருடைய வல்லமையைப்பற்றிச் சில திருஷ்டாந்தங்களைச் சொல்? யாரோடு சண்டைசெய்தார்? அவரெப்படி மரணமடைந்தார்?

---

## 43-ம் அதிகாரம்

உ. பி. 2708.) புண்ணியவதியான ரூத் (கி. மு. 1292.

நடுவரின் காலத்தில் பேத்லேமிலுள்ள எலிமலேக் என்பவர் தன் பெண்சாதி பிள்ளைகளுடன் மோவாபு நாட்டுக்குப் போனார். அவர் மனைவியின் பெயர் நேமி. அவருடைய குமாரர்கள் மோவாபு ஸ்திரீகளை விவாகஞ்செய்துகொண்டார்கள். காலத்தில், எலிமலேக்கும் அவருடைய இருபுத்திரரும் இறந்துபோனதால், நேமி என்பவள் வெகு துக்கங்கொண்டு பெத்லேமுக்குத் திரும்பிவரும்போது அவளுடைய இரு மருமக்கள்மாரும் அவளைப் பின்சென்றார்கள்.

கொஞ்சதூரம் வழிநடந்தபிறகு, நேமி தன் மருமக்கள்மாருக்குப் புத்திசொல்லி அவர்களுடைய சுய நாட்டுக்குப் போகும்படி பிரேரேபித்தாள். ஓர்பா என்பவள் ஒத்துக்கொண்டாள்; ஆனால் ரூத் சம்மதியாமல் நேமியோடு பெத்லேமுக்கு வந்துசேர்ந்தாள். அப்போது அறுப்புக்காலமாயிருந்தது. அவர்கள் ஏழை

களானதால், ரூத் வயலுக்குப்போய் கீழே விழுந்து கிடக்கும் கதிர்களை பொறுக்கிக்கொண்டிருந்தாள்.

மிகுந்த தனவந்தனும் எலிமேலேக்கின் பந்துவுமாகிய பூஜ் என்பவனுடைய வயலுக்கு அவள் தேவாதீனமாய்ப்போனாள். அப்போது பூஜ் தன் வயலில் அறுப்பு அறுப்பவர்களைப் பார்க்கும்படிவந்து ரூத்தைக் கண்டபோது, அவள் காட்டிய தைரியத்தையும், அவளுக்கு நேமியட்டிலுள்ள விசுவாசப் பற்றுதலையுங் கேள்விப்பட்டு அவளோடு சந்தோஷமாய்ப் பேசி, தன் ஊழியரோடு இருக்கவும், தன் பாத்திரங்களில் ஜலமொண்டு சாப்பிடவும் உத்தரவு கொடுத்தான். மேலும் அவள் அச்சமின்றி பொறுக்கிக்கொள்ளும்படி அங்கங்கே பிடிபிடி கதிர்களை நழுவவிட்டுவிடும்படியாகவும் கூலியாட்களுக்குக் கட்டளையிட்டான்.

இது நடந்த சிலகாலத்துக்குப்பிறகு, இந்த பூஜ் என்பவன் ரூத்தை விவாகஞ் செய்துகொண்டான். ஆண்டவர் அவர்களை ஆசீர்வதித்து, ஒபேத் என்னும் நாமமுடைய ஒரு குமாரனை அவர்களுக்குத் தந்தார். இந்த ஒபேத் என்பவர் தாவீது இராசாவின் தகப்பனாகிய ஈசாயின் தகப்பன். இக்குடும்பத்திலிருந்துதான் சேசுக்கிறீஸ்துநாதர் பிறந்தார்.

புத்தி.—மோவாபித்தர் யூதரல்ல; ஆனால் அன்னியரும் யூதருடைய சத்துருக்களுமாயிருந்தார்கள். நமது இரட்சகர் மோவாபித்த ஜாதியாளாகிய ரூத்தின் சந்ததியில் பிறந்து, தாம் யூதருக்கேயன்றி சகல மானிட ஜாதிக்கும் இரட்சகராயிருப்பதாகக் காட்டச் சித்தமானார்.

வினா.—மோவாபு நாட்டுக்கு யார் போனது? பெத்லேமுக்குத் திரும்பிவந்தது யார்? அவளோடுகூட வந்தது யார்? ரூத் எங்கே போனாள்? யார் அவளைச் சந்தித்தது? பூஜ் என்ன சொன்னான்? ரூத் யாரை விவாகம்பண்ணிக்கொண்டாள்? ஒபேத் யார்? ஈசாயி யார்? தாவீது யார்? சேசுக்கிறீஸ்துநாதர் யாருடைய சந்ததியில் பிறந்தார்?



## 44-ம் அதிகாரம்

### ஏலி என்பவரின் பிள்ளைகள்

(கி. மு. 1152, உ. பி. 2848.)

இஸ்ரூயேலருக்கு ஏலி யென்ற பெரிய குரு நடுவராயிருந்த காலத்தில், புண்ணியவாளர்களான எல்கானாவும், அவருடைய மனைவி ஆனாளுமிருந்தார்கள். ஒருநாள் அப்புண்ணியவதி சிலோயிலுள்ள ஆண்டவரின் கூடாரத்துக்குமுன் வந்து அழுகையுடன்: "ஆண்டவரே! தளங்களின் கர்த்தாவே! தேவரீர் எனக்கொரு பிள்ளையைக் கொடுத்தால் அவனை உமக்கு வசீகரம்பண்ணுவேன்" என்று செபித்தாள். சர்வேசுரன் அவளுடைய செபத்தைக்கேட்டு சாமுவேல் என்ற ஓர் குமாரனைக் கொடுத்தார்.

சாமுவேலுக்கு மூன்று வயது நடக்கும்போது அவருடைய தாயார் அவரை சிலோவிலுள்ள பெரிய குருவாகிய ஏலியென்பவரிடம் கொண்டுபோய் அவ்விடத்தில் அவரைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தாள். சாமுவேல் கூடாரத்தில் ஆண்டவருக்குச் சேவை செய்து சர்வேசுரனுக்கும் மனிதருக்கும் பிரியமாய் நடந்துவந்தார்.

புத்தி.—சாமுவேலும் ஸ்நாபக அருளப்பரும் அவர்களுடைய நடவடிக்கையில் ஒருவருக்கொருவர் ஒத்திருக்கிறார்கள். இருவரும் அவர்களுடைய தாய் தந்தையருடைய வேண்டுதலின் பலனாய் இருக்கிறார்கள். இருவரும் இளம்

பிராயத்திலே சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள். அவர்களிருவரும் ஜனங்களுக்குத் தவஞ்செய்யும்படி பிரசங்கித்தார்கள். சாமுவேலென்பவர் கடைசி நடுவரும், மகா இராசாவாகிய தாவீது அரசனுக்கு முன்னோடியாகவுமிருந்ததுபோல், ஸ்நாபக அருளப்பர் தீர்க்கதரிசிகளில் கடைசியானவரும் நித்திய அரசனாகிய சேசுக்கிறீஸ்துநாதருக்கு முன்னோடியாகவுமிருந்தார். சாமுவேல் தாவீதை அபிஷேகஞ்செய்ய, அருளப்பர் சேசுநாதருக்கு ஞானஸ்நானங் கொடுத்தார்.

எலிக்கு ஒப்னி, பீனே என்ற இரு துஷ்ட குமாரிருந்தார்கள். ஜனங்கள் ஆண்டவருக்குப் பலிசெலுத்த சிலோவுக்கு வரும்போது அவ்விருவரும் பலி மாமிசத்தைப் பலாத்காரமாய் எடுத்துக்கொள்வார்கள். அவர்கள் வேறு துஷ்டக்கிருத்தியங்களைக்கூட பலிபீட ஸ்தானத்தில் கட்டிக்கொண்டார்கள். ஏலி அவர்களைச் சாந்தமாய்க் கண்டித்தாரேயொழிய தக்கவண்ணந் தண்டித்கவில்லை.

ஒருநாள் இராத்திரி ஏலி யென்பவர் பலிபீடத்து உள்ளறையில் நித்திரைசெய்யும்போது ஆண்டவர் சாமுவேலைக் கூப்பிட்டார். அவர், ஏலியென்பவர்தான் தன்னைக் கூப்பிட்டாரென்று நினைத்து எழுந்து அவரிடம் போனார். ஏலி தான் கூப்பிடவில்லையென்று சொல்லி, போய்ப் படுத்துக்கொள்ளச்சொன்னார். இப்படி மூன்றுதடவை சம்பவித்தது. அவரைக் கூப்பிட்டது ஆண்டவர்தானென்று ஏலி அறிந்து, இனி யாராகிலுங் கூப்பிட்டால் "உமது சித்தப்படி செய்யக் காத்திருக்கிறேன்" என்று சொல்லும்படி கற்பித்தார். சாமுவேலும் அப்படியே செய்தார்.

மறுநாள் காலை ஏலி சாமுவேலைக் கூப்பிட, அவர் தனக்கு ஆண்டவர் சொன்னவற்றையெல்லாம் அவருக்கு அறிவித்து, அவர் தமது பிள்ளைகளைக் கண்டியாததற்காக அவரையும், தங்கள் துஷ்டதனத்திற்காக அவர் பிள்ளைகளையும் ஆண்டவர் தண்டிப்பதாகச் சொன்னாரென்றார். ஏலி



யிதைக்கேட்டு சர்வேசுரனுடைய சித்தத்துக்குத் தாழ்ந்து பணிந்தார்.

சொற்ப காலத்துக்குப்பின் பிலிஸ்தேயருக்கும், இஸ்ராயேலருக்கும் கொடுஞ்சண்டை யுண்டாயிற்று. இச்சண்டையில் இஸ்ராயேலர் எலியின் இரு மக்களுடன் முப்பதினாயிரம்பேர் மடிந்ததையும், போர்க்களத்துக்குக் கொண்டுபோகப்பட்ட பெட்டகம் பிடிபட்டதையும், ஏலி யென்பவர் கேள்விப்படவே, பயப்பிராந்திகொண்டவராய், தான் உட்கார்ந்திருந்த ஆசனத்திலிருந்தபடி மல்லாக்காய் விழுந்து தலையுடைந்து செத்தார்.

பிலிஸ்தேயர் பேழையை தாகோன் என்ற தங்கள் தேவதையின் கோவிலில் கொண்டுபோய் வைத்தார்கள். ஆனால் ஆண்டவர் அவர்களுக்குப் பல துன்பங்களை வரவிட்டு, அவர்களுடைய தேவதை கீழேவிழுந்து உடைந்துபோகவும், அவர்களுடைய பயிர்கள் எலிகளால் அழிக்கப்படவும், அவர்களுடைய பட்டணங்கள் கொள்ளைநோயால் பாழடையவுஞ் செய்தார். பிலிஸ்தேயர் பெட்டகத்தை இஸ்ராயேலித்தாருக்கு அனுப்புகிறவரையில் மேற்சொன்ன தின்மைகள் நிகழ்ந்துகொண்டேவந்தன.

எலிக்குப்பின் நடுவரின் உத்தியோகத்தை சாமுவேல் வகித்துக்கொண்டார். அவர் ஜனங்களைக் கூட்டமாகச் சேர்த்து, அவர்களுடைய பாவாக்கிரமங்களை அவர்களுக்குத் தெரியப்படுத்தி, தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பினால், ஆண்டவர் அவர்களை பிலிஸ்தேயருடைய கைகளினின்று விடுத்துக் காப்பாற்றுவாரென்று வாக்களித்தார். அவர் சொன்னபடியே ஜனங்கள் உபவாசம் பிடித்து, தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, தேவ உதவியைக் கொண்டு வெற்றியடைந்து வெகுகாலம்வரைக்கும் சமாதானமாய் வாழ்ந்துவந்தார்கள்.

78046

வினா.—யார் காலத்தில் ஏல்கானாவும் ஆனாளும் ஜீவித்து வந்தார்கள்? ஆனாள் செய்த செபமென்ன? சாமு

வேல் எப்போது ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார்? சாமுவேலும் ஸ்நாபக அருளப்பரும் எப்படி ஒருவருக்கொருவர் ஒத்திருக்கிறார்கள்? ஏலியையும் அவருடைய குமாரரையும்பற்றி சொல்லியிருப்பதென்ன? சாமுவேலைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது? ஏலி எப்படி யிறந்தார்? அவருடைய பிள்ளைகள் எப்படி செத்தார்கள்? பிலிஸ்தேயருக்கு என்ன சம்பவித்தது? ஏலிக்குப்பதில் யார் வந்தது? சாமுவேல் செய்ததென்ன?

---

## 45-ம் அதிகாரம்

உ. பி. 2909.) முதல் அரசனாகிய சவுல் (இ. மு. 1091.

சாமுவேல் விருத்தாப்பியமடைந்தபோது, தன் குமாரரை இஸ்ராயேலருக்கு நடுவர்களாக நியமித்தார். ஆனால் அவர்கள் தேவபயத்துடன் நடவாதபடியால், தங்களுக்கு ஓர் அரசனைக் கொடுக்கும்படி ஜனங்கள் கேட்டுக்கொண்டார்கள். சர்வேசுரன் ஒருவரே இஸ்ராயேலித்தாருக்கு அரசரா யிருக்கவேணுமென்று ஆசித்த சாமுவேல், ஜனங்களின் விருப்பத்தைக்கேட்டு மிக்கக் கோபமடைந்தார். ஆயினும் சர்வேசுரன் ஜனங்களின் இஷ்டத்துக்கு இணங்கினபடியால், அவர் சவுலை இராசாவாக அபிஷேகஞ் செய்தார். அவன் பெஞ்சமின் கோத்திரத்தானும், அழகுள்ளவனும், பராக்கிரமசாலியும், இஸ்ராயேல் எல்லோரும் அவன் தோள்பட்டைமட்டும்வர அவன் அதற்குமேல் உயரமுடையவனுமாயிருந்தான்.

சவுலின் அரசாட்சி யாரம்பத்தில் ஆண்டவர் அவனோடு இருந்து அவனுடைய சத்துருக்கள்மேல் வெற்றியைத் தந்தருளினார். ஒரு சமயத்தில் அவன் சர்வேசுரனுக்குக் கீழ்ப்படியாமற்போனான். அப்போது



நடந்த சண்டையில் அகப்பட்ட அமலேசித்தரையும் அவர்களுடைய உடமை உற்பத்தியாவையும் அழித்துவிடவேண்டுமென்று சர்வேசுரன் கட்டளையிட்டார். ஆனால் சவுல் தனக்குள்ள பராக்கிரமத்தைப்பற்றி கர்வங்கொண்டு மந்தைகளில் நல்லவைகளைப் பத்திரப்படுத்திக்கொண்டு, தான் ஊர் வந்துசேர்ந்ததும், தன் வெற்றியின் ஞாபகார்த்தமாய் ஜெயஸ்தம்பங்களை நாட்டிவைத்தான். இதனால் அவனும் அவனுடைய பிதிர்வழிகளும் இஸ்ராயேல் சிங்காதனத்தினின்று நீக்கப்பட்டார்கள்.

புத்தி.—சவுல் என்பவன் யூத சபையின் குறிப்பாயிருக்கிறான். சர்வேசுரனால் தெரிந்துகொள்ளப்பட்ட சகலரையும் அச்சபையானது தேவ ஞானத்திலும் தேவ வரங்களிலும் மேலிட்டுப்போயிருந்தும், வரவர தளர்ந்துவிட்டது. அது தன் கீழ்ப்படிதலையும், தாழ்ச்சியையும், பிறசிநேகத்தையும் மறந்துபோய், தன் தாஷ்டீகத்தால் கர்வித்து, தன் பலிகளில்மாத்திரம் நம்பிக்கைகொண்டிருந்ததுமன்றி, கிறீஸ்துவ சபையையும் மறுத்துவிட்டது. சவுல் தாவீதை துன்பப்படுத்தினதுபோல் யூதரும் சேசுக்கிறீஸ்துநாதரை இடைஞ்சற்படுத்தினார்கள். சவுல் செத்ததைப்பற்றி தாவீது அழுததுபோல், சேசுக்கிறீஸ்துநாதரும் எருசலேமைப் பார்த்து அழுதார்.

வினா.—ஜனங்கள் என்ன கேட்டார்கள்? அரசனாக அபிஷேகம் பெற்றதார்? சவுலைப்பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது? அவன் முதலில் எப்படி அரசாண்டான்? எதற்காக சவுல் சிங்காசனத்தினின்று நீக்கிவிடப்பட்டான்? சவுல் எப்படி யூத சபையின் குறிப்பாயிருந்தான்?

---

## 46-ம் அதிகாரம்

உ. பி. 2934.) தாவீது (கி. மு. 1066.

சர்வேசுரனுடைய கட்டளைப்பிரகாரம் சாமுவேல் பெத்லேமிலுள்ள ஈசாயி எனபவர் வீட்டுக்குப் போக, அவர் இளைய குமாரனாகிய தாவீது என்பவர் வயலில் மந்தைகளை மேய்த்துக்கொண்டிருந்தார். சாமுவேல் அவரை வரவழைத்து, தைலத்தைக்கொண்டு அவரை அபிஷேகஞ்செய்தார். அந்நாள் முதற்கொண்டு தேவ இஸ்பிரீத்து சவுலைவிட்டு தாவீதின்மேல் வந்து நின்றது.

சவுல்மேல் பேய் ஆவேசமேறி அவனை வெகுவாய் அலைக்கழித்துக்கொண்டிருக்கும். அவ்வேளைகளில் தாவீதைக் கூட்டிக்கொண்டுவர, அவர் தன் வீணையையெடுத்து வாத்தியஞ்செய்ய, கலக்கங்கொண்ட அரசனுடைய மனது தேறி கொஞ்சம் சுகமடைவான். இவ்வண்ணம் தாவீது சவுலின் அரண்மனையில் சேர்க்கப்பட்டார். இதுவுமன்றி, தாவீது அரசாபிஷேகமடைந்ததை சவுல் அறியாமல் அவரைத் தன் ஆயுதந்தாங்கியாக நியமித்துக்கொண்டான். தாவீது வீணை வாசிக்கும்போதெல்லாம் சவுல் சந்துஷ்டியடைவான்.

வினா.—யார் அரசாபிஷேகஞ் செய்யப்பட்டது? அவர் யாருடைய குமாரன்? சவுலுக்கு என்ன உண்டானது? அவனுக்கு வாத்தியஞ்செய்ததார்? தாவீது என்ன உத்தியோகமடைந்தார்?

---



## 47-ம் அதிகாரம்

உ. பி. 2942.) தாவீதும் கோலியாத்தும் (கி. மு. 1058.

பிலிஸ்தேயருக்கும் இஸ்ரூயேலருக்கும் ஒரு புது யுத்தம் நடந்தது. பிலிஸ்தேயர் ஒரு மலைமேல் பட்டாளமிறங்க, இஸ்ரூயேலர் மற்றொரு மலைமேல் அவர்களுக்கு எதிராகப் பாளயமிறங்கினார்கள். இரு பட்டாளங்களுக்கும் மத்தியில் நெருக்கமான ஒரு கணவாயிருந்தது. பிலிஸ்தேயருடைய படையில் கோலியாத்தென்ற ஓர் இராட்சதனிருந்தான். அவன் ஆறு முழமும் ஒரு ஜாணும் உயரமுடையவன் ; அவன் தலையில் ஒரு வெண்கலச் சீராவையுங் கனத்த போர்க்கவசத்தையும் தரித்திருந்தான். அவனுடைய ஈட்டித்தாங்கியின் கோல் நெசவுக்காரருடைய படைபோலிருந்தது.

இவ்விதமாய் அவன் ஆயுதபாணியாக நின்று தன்னோடு சண்டைசெய்ய எவனாவது இஸ்ரூயேலர் படையிலிருந்தால், வாலாமென நாற்பது நாளாக வீறுப்புப் பேசி நின்றதால், சவுலுக்கு வெட்கமும், இஸ்ரூயேலருக்குப் பயங்கரமுமுண்டாயிற்று. தன் சகோதரரைப் பார்க்கும்படியாக பட்டாளத்துக்குவந்த தாவீது கோலியாத்தைப்பார்த்து, அவன் சொல்லும் இகழ்ச்சிமொழிகளைக் கேட்டு, கோபாதீபிதனாகி, சவுலிடம்போய், உமது அடியேனாகிய நான் இப்பிலிஸ்தியனோடு சண்டைசெய்து அவனை வெல்வேன் என்றார்.

உடனே சவுல் சம்மதியாவிட்டாலும் தாவீது உறுதியாய்ச் சொன்னதைக்கேட்டு மகிழ்ந்து, தன் ஆயுதங்களை தாவீதுக்குத் தரித்து அனுப்பினான். தனக்கு ஆயுதங்களைத் தரித்து வழக்கமில்லாததால் தாவீது அவைகளைக் களைந்து போட்டுவிட்டு, ஆற்றில் ஐந்து

கூழாங்கற்களை யெடுத்துக்கொண்டு கவணுடன் கொலியாத்துக்கு எதிராகப் புறப்பட்டுப்போனார்.

இராட்சதன் அவரைப் பார்த்தவுடன் வாய்க்கு வந்தபடி அவரைத் தூஷித்து, "அடா பயலே! என்னை நாயென்று நினைத்தா வந்தாய்?" என்க, தாவீதோ பயப்படாமல் சர்வேசுரனுடைய வல்லபத்தை நம்பி முன்னுக்குப்போனார். இவ்விரண்டு ரணவீரரும் ஒருவரையொருவர் எதிர்த்து நெருங்க, தாவீது தான் கொண்டுபோன கற்களில் ஒன்றை யெடுத்துக் கவணில் வைத்து விசையாய்ச் சுழற்றி பிலிஸ்தேயனுடைய நெற்றியின்மேல் குறிபார்த்து யெறிந்தார். அதிவேகமாய்ச்சென்று அவன் நெற்றியில் தாக்கினதால் அவன் திக்பிரமைகொண்டு தரையில் தொப்பென்றுகுப்புறவிழுந்தான். அப்போது உடனே தாவீது ஓடிப்போய் கொலியாத்தின் உறையினின்று அவன் வாளையே யுருவி, அவன் கழுத்தைத் துண்டித்துவிட்டார்.

தங்கள் வீரசூரன் கொல்லப்பட்டதைக்கண்ட பிலிஸ்தேயர் ஓட்டம்பிடித்தார்கள். ஆயினும் இஸ்ருயேலர் ஆர்ப்பரித்து அவர்களைப் பின்தொடர்ந்துபோய் அனேகரைக் கொன்று, அவர்களுடைய பொருட்களைக் கொள்ளையிட்டுவந்தார்கள்.

புத்தி.—தாவீது கொலியாத்தின்மேல் கொண்ட வெற்றியானது, கிறீஸ்துநாதர் பசாசை ஜெயித்ததற்கு குறிப்பாகும். கொலியாத்து நாற்பது நாளாய் இஸ்ருயேல் படையை நிந்தித்ததுபோல, பசாசானது பூவுலகில் தேவ இராச்சியத்துக்கு விரோதமாய் நாலாயிரம் வருடம் யுத்தஞ்செய்தது. தாவீது கவணைக்கொண்டும், ஐந்து கற்களைக்கொண்டும் கொலியாத்தை வென்றதுபோல், சேசுக்கிறீஸ்துநாதர் திருச்சிலுவையைக்கொண்டும், ஐந்து திருக்காயங்களைக்கொண்டும் பசாசை ஜெயித்தார்.



வினா.—இஸ்ருயேலருடையவும், பிலிஸ்தேயருடையவும், படைகளைப்பற்றி யென்ன சொல்லப்பட்டிருக்கிறது? கொலியாத்தென்பவன் யார்? கொலியாத் என்ன செய்தான்? யார் அவனைக் கொன்றது? எப்படி? கிறீஸ்துநாதருக்கும் தாவீதுக்குமுள்ள ஒப்பனையென்ன? கொலியாத்துக்கும் பசாசுக்குமுள்ள ஒப்பனையென்ன?

---

## 48-ம் அதிகாரம்

தாவீதுமட்டில் ஜோனத்தாசுக்குள்ள நேசமும்—
உ. பி. 2944.) சவுலுக்குள்ள பகையும் (கி. மு. 1056.

பிலிஸ்தேயரை ஜெயித்து சவுலும் அவன் படையும் திரும்பிவந்தபோது இஸ்ருயேலர் பெண்கள் பல பட்டணங்களிலிருந்துவந்து, சவுல் ஆயிரம் பேரைக் கொல்ல, தாவீது பத்தாயிரம் பேரைக் கொன்றானென்று கும்மிபடித்துப் பாடினார்கள். சவுல் இதைக் கேட்டு அதிக கோபோதீபிதனாகி தாவீதைத் தன் ஈட்டியால் கொல்லப் பிரயாசைப்பட்டும், தாவீது தப்பித்துக்கொண்டார்.

பிலிஸ்தேயரை எதிர்க்கும்படி தாவீதை எழுப்பிவிட்டால் அவர் கொல்லப்படுவாரென்று நம்பி, இருநூறு பிலிஸ்தேயரைக் கொன்றால் மிக்கேல் எனும் தன் மகளை அவருக்கு விவாகஞ் செய்துகொடுப்பதாக சவுல் தாவீதுக்குச் சொன்னான். ஆனால் சவுல் எண்ணினதற்கு மாறாக தாவீது பிலிஸ்தேயரைக் கொன்று ஜெயங்கொண்டார். ஜனங்களும் அவர்மேல் அதிக நேசங்கொண்டார்கள். சவுல் இதைக்கண்டு இன்னும் அதிக பகைகொண்டு தாவீதின் உயிரை வாங்கிவிட வேண்டுமென்று தீர்மானஞ்செய்துகொண்டான். சவுல்

தாவீதை யெவ்வளவு பகைத்தானோ அவ்வளவுக்கும் அவனுடைய குமாரனாகிய ஜோனத்தாஸ் அவரை நேசித்துவந்தான். தாவீதும் ஜோனத்தாசும் சமாதானத்தின் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். தாவீது பிலிஸ்தேயரை ஜெயித்து அடக்கினதைப் பற்றி ஜோனத்தாஸ் தன் தகப்பனிடம் சொல்லிக்காட்டும்போதுமாத்திரம் சவுலுடைய கோபஞ் சற்றுத் தணியும். பிறகு மறுபடியும் முன்போல தாவீதுமட்டில் தீராப் பகைகொண்டிருப்பான்.

நாலாமுறை தாவீது பிலிஸ்தேயரோடு யுத்தஞ் செய்து ஜெயம்பெற்றும், சவுலின் கோபந் தணியாமல் அதிகரிக்க, அவன் காய்மகாரங்கொண்டு, தன் ஈட்டியால் தாவீதைக்குத்தப் பிரயத்தனப்பட்டான். தாவீது அந்த வினையுந் தப்பித்துக்கொண்டார். மறுபடியும் ஜோனத்தாஸ் தன் சிநேகிதனுக்காகப் பரிந்துபேசியும் சவுலுக்குக் கோபந் தணியாமல், அவனுக்கிருந்த அதிக ஆத்திரத்தால் வாளை யுருவித் தன் மகனையே வெட்டப்போனான்.

ஜோனத்தாஸ் இதைக்கண்டு தாவீதிடம்போய் சம்பவித்த காரியத்தையெல்லாஞ் சொல்லி, அவர் அவ்விடத்தைவிட்டு ஓடிப்போகும்படி ஆலோசனை கொடுத்தான். தாங்கள் அன்று செய்துகொண்ட உடன்படிக்கையாவது, ஆண்டவருக்குச் செய்த சத்தியத்தையாவது மறப்பதில்லையென்று சொல்லி, அழுகையுடன் ஒருவரையொருவர் விட்டுப்பிரிந்தார்கள்.

வினா.—ஸ்திரீகள் என்ன பாட்டுப்பாடி கும்மியடித்தார்கள்? சவுல் நடந்த விதமெப்படி? அவன் என்ன செய்ய முயற்சி செய்தான்? என்ன காரணத்தைப்பற்றி சவுல் தன் மகளை தாவீதுக்குக் கொடுத்து விவாகஞ்செய்துவைப்பதா



கச் சொன்னான்? தாவீதையும் ஜோனத்தாசையும்பற்றி சொல்லியிருப்பதென்ன? ஜோனத்தாஸ் எப்படி தாவீதுக்காகப் பரிந்துபேசினான்? சவுல் இரண்டாந்தரம் எதற்காக முயற்சி செய்தான்? ஜோனத்தாஸ் தாவீதுக்குச் சொன்ன யோசனையென்ன?

---

## 49-ம் அதிகாரம்

தாவீது சவுலுக்குக் காட்டின தர்மகுணமும்—
சவுலின் மரணமும் (கி. மு. 1051. உ. பி. 2949.)

சிலகாலம், சவுல் தாவீதைக் கொல்லப் பிரயத்தனப்பட்டும் அவர் தன் நம்பிக்கையெல்லாம் சர்வேசுரன் பேரில் வைத்திருந்தபடியால் சர்வேசுரன் அவரைக் கைவிடவில்லை. ஒருநாள் சவுல் மூவாயிரம் ஆட்களோடு தாவீதைத் துரத்திக்கொண்டுபோய் அலுத்துப்போனதால், தாவீதும் அவருடைய ஆட்களும் ஒளிந்திருந்த குகைக்குட் சென்றான். தாவீது உத்தரவு கொடுத்திருந்தால், அவருடைய ஆட்கள் சவுலைக் கொன்றிருப்பார்கள். ஆனால் அவர் அப்படிச் செய்யாமல் சவுலினுடைய போர்வையின் விளிம்பைமாத்திரம் கத்தரித்துக்கொண்டார்.

வேறொரு சமயத்தில் சவுல் அரசன் தாவீதை ஆக்கிலாவென்ற காட்டில் துரத்திக்கொண்டு போகும்போது, அரசனும் அவனுடைய தளக்கர்த்தனுமாகிய ஆப்னெரும் சேனை சமுகமும் நித்திரைசெய்யுந் தருவாயில், தாவீதும் அபிசாயி என்பவனும் படைக்குள் பிரவேசித்தார்கள். அபிசாயி தளக்கர்த்தன் தன்னீட்டியாற் சவுலைக் குத்தப்போகுஞ் சமயத்தில் தாவீது அவனைத் தடுத்து அரசனுடைய தலைமாட்டிலிருந்த ஈட்டி

யைமாத்திரம் எடுத்துக்கொண்டுபோனார். அவர்கள் பட்டாளமிறங்கியிருந்த இடத்தைவிட்டு கொஞ்சந் தூரம் போகவே, தாவீது கூச்சல்போட்டதைக் கேட்ட அரசன் விழித்துக்கொண்டு தன்னீட்டியில்லாததைக்கண்டு, தான் தாவீது கையில் சிக்கிக்கொண்டதையும், இரண்டாந் தடவையும் தாவீது தன்னுயிரைக் காப்பாற்றினதையும் நினைத்துப் பச்சாதாபப்பட்டுத் தன் படையோடு ஊருக்குத் திரும்பினான். தாவீதும் தன் வழியேசென்றார்.

பிலிஸ்தேயருக்கும் இஸ்றாயேலித்தாருக்கும் மறுபடி யுத்தம் நடக்கவே, சவுல் படையைக் கூட்டி சத்துருக்களை யெதிர்த்தான், யுத்தத்தில் சவுலுக்குக் கடுங் காயம் பட்டு, தான் பிலிஸ்தேயருடைய கையில் அகப்படாதபடிக்குத் தன் வாளை நட்டு, அதன்மேல் விழுந்து மடிந்தான். அவனுடைய துர்மரணத்தால் தாவீதுக்கு அபாயம் நீங்கினும், அவர் சந்தோஷியாமல் அரசனுடைய புண்ணியத்தையும் நற்குணங்களையும் குறித்துப் பேசுவார். இதே சண்டையில் ஜோனத்தாசும் கொல்லப்பட்டான். தாவீது தன் சிநேகிதனுடைய மரணத்தைப்பற்றிக் கேள்விப்படவே, அவனைத் தன் சகோதரனென்றும், ஓர் தாய்க்குரிய அன்புடன் தன்னை நேசித்த உத்தமனென்றுஞ் சொல்லி, வெகு துக்கத்துடனே அழுதார்.

வினா.—தாவீதின் சீவியத்தைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? தாவீது தன் தயாளத்தை யெப்படிக் காட்டினார்? சவுல் நடந்த விதமென்ன? அவன் எப்படிச் செத்தான்? வேறே யார் இறந்தது? ஜோனத்தாசினுடைய மரணத்தைபற்றிக் கேள்விப்பட்டபோது தாவீது என்ன செய்தார்?

மூன்றாம் யுகம் முற்றிற்று

# நான்காம் யுகம்

### இஸ்றாயேலரின் மகத்துவம்—தாவீதுமுதல் றேபோவாம் காலத்தில் இராச்சியப் பிரிவுவரையில்

---

## 50-ம் அதிகாரம்

### பக்திமானும் மஹா அரசனுமாகிய தாவீது

(கி. மு. 1051. உ. பி. 2949.)

சவுலின் மரணத்துக்குப்பிறகு தாவீது இஸ்றாயேலருக்கு அரசனாகத் தெரிந்துகொள்ளப்பட்டார். அவர் யெருசலேம் பட்டணத்தை இராஜதானியாக ஏற்படுத்தி ஏராளமான போர் படைகளின் கணக்காலும் அவரடைந்த சிறந்த வெற்றிகளாலும் அயல்நாட்டு ஜனங்களுக்குள் மகா பிரக்கியாதியடைந்திருந்தார். அவரிடத்தில் பன்னிரண்டு தளகர்த்தர்களிருந்தார்கள். ஒவ்வொரு தளகர்த்தனுக்குக்கீழ் இருபத்து நாலாயிரம் படைவீரரிருந்தனர். சகல தளகர்த்தருக்குமேல் அப்னேர் என்பவனையே முக்கிய சேனாபதியாக ஏற்படுத்தியிருந்தார்.

இவர் அரசு செலுத்தினகாலமெல்லாம் அனந்தமுறை படையெடுத்து யுத்தஞ்செய்து பிலிஸ்தேயர், மோவாபித்தர், சீரியர், எதோமித்தர், அம்மோனித்தர் முதலியவர்களை வென்று கீழ்ப்படுத்தினார். அவர் கொண்ட வெற்றிகளால் பொன் வெள்ளி முதலிய அளவற்ற திரவியம் யெருசலேமுக்குக் கொண்டுவரப்பட்டது. தாவீது மரணிக்கும்போது எஜிப்துமுதல் யூப்றா

தெஸ்வரைக்கும் அவருடைய இராச்சியம் விஸ்தீரணித்திருந்தது. வெளிதேசங்களில் கொண்ட பெரும் வெற்றியைப்பற்றியும் இராச்சியத்தில் ஏற்படுத்திய உசிதமான சட்டதிட்டங்களைப்பற்றியும் அக்காலத்தில் இஸ்ரூயேலர்கள் சிறந்து விளங்கினார்கள்.

தாவீது நீதிநியாயங்களை நடத்தும் விஷயத்தில் அதிக கவனங்கொண்டு தனக்கு ஆலோசனைக்காரராக ஞானிகளையும், ஜனங்களை ஆள யோக்கியர்களையுந் தெரிந்துகொண்டார். இராசாங்க திரவியங்களைக் காக்கவும், அரசாங்கத்தின் நிலங்களைக் கிரமமாய் விவசாயஞ் செய்விக்கவும் எதார்த்தவாதிகளான மனிதர்களை ஏற்படுத்த, சகலமும் ஒழுங்காய் நடந்துவந்தன.

மெய்யங்கடவுளை வணங்குவதில் தாவீதரசன் தானே சகலருக்கு முன்மாதிரிகையாயிருந்ததுமன்றி, தேவாராதனை தன் பிரசைகளிடத்தில் அதிகமாய்ப் பரவி அபிவிருத்தி யடையும்படியாக ஆவலுடன் முயன்றுவந்தார். சீயோன் பர்வதத்தின்மேல் சிறந்ததோர் கூடாரத்தை யமைத்து அதில் உடன்படிக்கையின் பெட்டகத்தை ஸ்தாபிக்க விரும்பினவண்ணம் சகலத்தையுந் தயாராக்கி, அப்பெட்டகத்தை அவ்விடத்துக்கு வெகு ஆரவாரச் சிறப்புடன் கொண்டுபோனார். பவனி போகும்போது பிரபுக்களெல்லோரும் ஊதா நிறமான உடைகளையும், ஆசாரியர் விலையுயர்ந்த உடுபாவனைகளையுந் தரித்தவர்களாயிருந்தார்கள். ஆயுதபாணிகளான மூவாயிரம் போர்வீரர் அணிவகுத்து மேரைமரியாதையாய் முன் நடக்க, கணக்கற்ற ஜனங்கள் பேழையைப் பின்சென்றார்கள்.

பெட்டகத்தைப் புடைசூழ்ந்து நடக்கும் பிரஜைகள் வீணை வாசித்துக்கொண்டும், சங்கு, தாரை ஊதிக்



கொண்டும் தாளம் போட்டுக்கொண்டும் நடக்க, தாவீது ஆசாரியருக்கு முன் வீணை வாசித்துக்கொண்டு நடனஞ் செய்து செல்ல, அப்போதைக்கப்போது மிருகங்கள் தகனபலியாக ஆண்டவருக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

இதற்குப்பிறகு, தாவீது ஆசாரியரை இருபத்து நான்கு பிரிவாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவாரும் முறைப்படி ஆண்டவருக்குச் சேவைசெய்யும்படி கற்பித்தார். லேவித்தருக்குள் நாலாயிரம் பாட்டுக்காரரைத் தெரிந்தெடுத்து, சகலவித வாத்தியங்களோடு நாடோறும் சர்வேசுரனுடைய ஸ்துதிகளைப் பாடும்படி ஏற்பாடுசெய்தார்.

வினா.—அரசனாகத் தெரிந்துகொள்ளப்பட்டதார்? அவரைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது? அவருடைய சேனைகளைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது? யார் வெல்லப்பட்டார்கள்? எருசலேமுக்கு என்ன கொண்டுவரப்பட்டது? தாவீதின் ஆளுகையைப்பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது? சீயோன் மலையின்மேல் என்ன கட்டப்பட்டது? அதில் எதை வைத்தார்கள்? ஆசாரியர் எப்படி பிரிக்கப்பட்டார்கள்? லேவித்தரின் உத்தியோகமென்ன?

---

## 51-ம் அதிகாரம்

அப்சலோமின் குழப்பமும்—அவனுக்குவந்த
உ. பி. 2981.) தண்டனையும் (கி. மு. 1019.

தாவீது இரண்டு பெருங் குற்றங்களைக் கட்டிக்கொண்டார். முதலாவது, தன்னோடு பாவஞ் செய்யும்படி பெத்சபீ என்பவளை உடன்படுத்தினார். பிறகு அவளுக்கு நேரிட்ட அவமானத்தை மறைக்கும்படியாக அவளுடைய கணவனாகிய ஊரியாசைக் கொலை

செய்வித்தார். சர்வேசுரன் நாத்தான் தீர்க்கதரிசியை அவரிடத்துக்கு அனுப்ப, அவர் தைரியமாக அரசனுடைய குற்றத்தைப்பற்றி கடிந்துபேச, தாவீது ஆண்டவருக்கு விரோதமாய்ப் பாவங்கட்டிக்கொண்டேனேயென்று மிகத் தாழ்ச்சியோடு தன் குற்றத்தை அங்கீகரித்துக்கொண்டார். சர்வேசுரன் அவருடைய தாழ்ச்சியைக்கண்டு அவருடைய பாவத்தை மன்னித்தபோதிலும், அதற்குத் தண்டனையாகப் பல துன்பங்களையனுப்பினார்.

அவைகளுள் பிரதானமானது: இஸ்ருயேலரில் மிக்க அழகுள்ளவனாகிய அப்சலோம் என்னும் அவருடைய குமாரன் எழுப்பின பெருங் குழப்பமாகும். அவன் ஜனங்கள் தன் கருத்துக்கு இணங்கினதையும் தனக்குள்ள பலாட்டியத்தையுங்கண்டு கர்வித்துப் பகிங்கரமாக தன் தகப்பனுக்கு விரோதமாய் குழப்பஞ்செய்யத் தலைப்பட்டான். ஜனங்கள் நாலாபக்கங்களிலுமிருந்துவந்து தன் மகனோடு சேர்ந்துகொண்டதைக்கண்ட தாவீது யெருசலேமைவிட்டு செதிரோன் நீரோடையைக் கடந்து பாதரட்சையில்லாமலும், வெறுந் தலையோடும் வழிநெடுக அழுதுகொண்டே ஒலிவேத்து பர்வதம் போய்சேர்ந்தார்.

சவுல் கோத்திரத்தானான செமேயி என்பவன், ஓடிப்போவதைக்கண்டு அவரை இரத்தப்பிரியனென்று திட்டி, தூஷித்து, சபித்து, அவர்பேரில் கற்களை எறிந்தான். அப்போது தாவீதின் ஊழியனாகிய அபிசாயி கோபங்கொண்டு செமேயியைக் கொல்ல உத்தரவோவென்று தாவீதைக் கேட்க, "ஒருவேளை கர்த்தர் என் துயரத்தை சந்தோஷமாக மாற்றி எனக்கு நன்மைசெய்யக்கூடுமாதலால், அவன் என்னை தூஷிக்



கட்டும் அவனுக்கு ஒன்றுஞ் செய்யாதீர்கள்" என்று சாந்தமாக மொழிந்தார்.

இதற்கிடையில் அப்சலோம் யோர்தான் நதிபக்கமாய்த் தன் தகப்பனை பின்தொடர்ந்துவர, இரண்டு சேனைகளும் கலந்து போர்பொருதின. அப்போது அப்சலோம் தோல்வியடைந்து ஒரு கோவேறு கழுதையின்மேலேறி ஓட்டம்பிடித்தான். ஒரு பெரிய மரத்தடியில் போகும்போது அவனுடைய தலைமயிர் அம்மரத்தின் அடர்ந்த கிளைகளில் மாட்டிக்கொண்டது. வாகனங் கடந்துபோக அவன் அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருந்தான். இதைப்பற்றிக் கேள்விப்பட்ட அரசனுடைய தளக்கர்த்தரில் ஒருவனாகிய ஜோவாப் என்பவன் ஓடிப்போய் அந்த நன்றிகெட்ட அப்சலோமின் இருதய ஸ்தானத்தில் ஈட்டிகளால் மூன்று குத்து ஊடுருவக்குத்தி வீழ்த்தி, அவனுடைய உடலை ஆழ்ந்த பள்ளத்தில்போட, வீரர்கள் அதன்பேரில் பெரிய கற்குவியலை குவித்துவிட்டார்கள்.

தாவீது தன் மகனுடைய மரணத்தைப்பற்றிக் கேள்விப்பட்டு வெகுவாய்த் துக்கித்து: "என் குமாரனாகிய அப்சலோமே! உனக்குப்பதில் நான் செத்திருந்தால் நலமாயிருக்குமே; ஆ! மகனே! மகனே! அப்சலோமே!" என்று அழுது புலம்பினார். அதற்குப் பிறகு தாவீது தன் சேனைகளோடு எருசலேமுக்குத் திரும்பிவரவே பெருங்கூட்டமான பிரசைகள் அவரையெதிர்கொண்டு அழைக்க வந்தார்கள்.

புத்தி.—தாவீது குடும்பத்துக்கு பெத்லேம் வாசஸ்தலமாயிருந்ததும், அவருடைய இளமைப்பருவத்தின் அந்தரங்க சீவியமும், அவர் கோலியாத்தை ஜெயித்ததும், செதிரோன் நீரோடையைக் கடந்துபோகையில் அவருக்கு வந்த

வியாகுலமும், ஒலிவேத்து மலையின்மேலேறினதும், தன்னைத் துன்பப்படுத்தினவர்களுக்கு அவர் காட்டிய தயாளமும், கடைசியாய் அவர் ஒட்டோலகராய் யெருசலேமில் பிரவேசித்ததும், ஆகிய இவைகளெல்லாம் சேசுக்கிறீஸ்துநாதருக்குச் சம்பவித்தவைகளுக்குக் குறிப்பாயிருந்தன.

தாவீதென்பவர் சவுல், அப்சலோம் ஆகிய இவ்விரு சத்துருக்களுக்கு விரோதமாய்ப் போராடவேண்டியிருந்தது போல், கிறீஸ்துநாதருக்கும் அவருடைய திருச்சபைக்கும் விரோதமாய் இரு சத்துருக்கள் கிளம்பினார்கள். முதல் சத்துரு யூத மதமாகும். இதற்குப் பதிலாகத்தான் திருச்சபை தோன்றினது. 2-வது சத்துரு, பதித மதம். இது பலமுறை திருச்சபையை யெதிர்த்து, 'மனுஷருடைய ஆசாபாசத்துக்கு இணங்கி நடந்து, கணக்கற்ற ஆத்துமாக்களை அந்தகாரத்திலமிழ்த்திக் கெடுத்துக்கொண்டேவருகிறது.

வினா.—சர்வேசுரன் தாவீதிடத்துக்கு யாரை யனுப்பினார்? தாவீது என்ன செய்தார்? சர்வேசுரன் அனுப்பிய பெருந் தண்டனை யெது? தாவீதை யார் தூஷித்தது? தாவீது எங்கே போனார்? தாவீது யாருக்குக் குறிப்பாயிருக்கிறார்? எப்படி?

---

## 52-ம் அதிகாரம்

உ. பி. 2986.) தாவீதின் அந்தியகாலம் (கி. மு. 1014.

தாவீது தன் முப்பதாம் பிராயமுதல் எழுபதாம் பிராயம்வரையில் இஸ்ராயேலரை ஆண்டுவந்தார். அவர் தன் அந்தியகாலம் நெருங்கிவருவதைக் கண்டு பிரபுக்களையும் நாட்டின் மூப்பரையும் வரவழைத்து: தான் ஆண்டவருக்கு ஒரு தேவாலயம் கட்ட நினைத்து, அதற்காகப் பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, மரம், கல் முதலியவைகளைச் சேகரித்திருப்ப



தையும், ஆனால்தான் அகோர சண்டைகள்செய்து இரத்தஞ்சிந்தியிருப்பதால், சர்வேசுரன் தன்னை நீக்கிவிட்டு தன் குமாரனாகிய சலமோனைக்கொண்டு தேவாலயத்தைக் கட்டுவிப்பாரென்றுஞ் சொன்னார்.

பிறகு தாவீது சலமோனுக்கு அத்தேவாலயத்தைக் கட்டும் விதத்தைப்பற்றி விவரித்து, அது மனிதனுடைய கிருகமாயிராமல் உன்னத சர்வேசுரனின் ஸ்தலமாயிருப்பதால், அதை மிக நேர்த்தியாய்க் கட்டி முடிக்கக் கற்பித்தபின், ஆண்டவரை ஒருபோதும் கைவிடாமல் கீழ்ப்படிதலுள்ள இருதயத்தோடு அவரை நிலைமையாய் சேவிக்கவேண்டுமென்றும், அவரெப்போது சர்வேசுரனைக் கைவிடுவாரோ அப்போதே சர்வேசுரனும் அவரைக் கைவிடுவாரென்றும் இவை முதலிய புத்தி ஆலோசனைகளை அவனுக்குப் போதித்தார். தாவீது மரணமடைந்தபின் சீயோன் பர்வதத்தில் அகப்பட்டார். அவருடைய குமாரர் சலமோன் சிங்காசனமேறினார்.

வினா.—தாவீது எவ்வளவுகாலம் அரசுபுரிந்தார்? தேவாலயத்தைப்பற்றி என்ன சொன்னார்? அவர் சலமோனுக்கு என்ன புத்தி போதித்தார்?

---

## 53-ம் அதிகாரம்

உ. பி. 2989.) சலமோனுடைய ஞானம் (கி. மு. 1011.

சலமோன் தன்னரசாட்சியின் துவக்கத்தில் ஆண்டவரைச் சிநேகித்துத் தன்தகப்பனைப்போல் நெறியாய் நடந்தார். ஒருநாள் இராத்திரி ஆண்டவர் அவருக்குத் தோன்றி நீ விரும்புவதைக் கேட்பாயாகவென,

அதற்கு சலமோன், "ஆண்டவரே, உமது ஜனங்களை நீதிநியாயத்துடன் அரசாளும்படிக்கான ஞானத்தை அடியேனுக்குக் கட்டளையிட்டருளும்" என்று மன்றாடினார். ஆண்டவர் அதைக்கேட்டு சந்தோஷித்து, அவர் கேட்டுக்கொண்ட ஞானத்துடன் திரவிய மகிமையையும் நீடிய ஆயுளையும் அவருக்கு அருளிச்செய்தார்.

இதுவுமன்றி, சகல பொருட்களின் திட்டமான அறிவையும் சர்வேசுரன் அவருக்கு அளித்தார். ஆகையால் அவர் சிருஷ்டிப்பின் ஆச்சரியத்துக்குரிய ஒழுங்கையும், பூதியங்களின் சக்தியையும், பருவ முறைமையையும், கிரக ஓட்டங்களையும், ஜீவஜெந்துக்களின் சுபாவ அறிவையும், மனிதரின் எண்ணங்களையும், மூலிகைகளின் குணாகுணங்களையும், அவற்றின் வேரிலுள்ள அவுழ்த பிரயோகங்களையும் நன்றாயறிந்திருந்தார். இவ்வாறு சிருஷ்டிகளின் குணாகுணங்களையெல்லாம் அவர் தெளிவாயறிந்திருந்தபடியால் ஞானிகளும் அரசரும், சலமோனின் ஞானத்தைக்கண்டு அதிசயப்பட்டார்கள்.

ஒருநாள் ஸ்திரீகள் இருவர் அவரிடம் வந்து தங்கள் வியாச்சியத்தைத் தீர்க்கும்படி மன்றாடினார்கள். ஒருத்தி துக்கத்துடன் "இவளும் நானும் ஒரே வீட்டில் குடியிருக்கிறோம். இருவருக்கும் ஒவ்வொரு குழந்தையிருந்தது. இராத்திரி அவளுடைய குழந்தையிறந்துபோனதால் எழுந்துவந்து செத்த குழந்தையை என் பக்கத்தில் கிடத்திவிட்டு என் குழந்தையைக் கொண்டுபோய்விட்டாள். காலையில் என் பக்கத்தில் கிடந்த குழந்தை செத்திருப்பதாக அறிந்து, நன்றாய் உற்றுப்பார்த்தபோது, அது என்னுடைய குழந்தையல்லவென்று அறிந்துகொண்டேன்" என்றாள்.



அதற்கு மற்றொருத்தி: "உன் குழந்தை செத்ததேயொழிய என் பிள்ளை உயிரோடிருக்கிறது" என்று மறுமொழி சொன்னாள். அதற்கு முந்தினவள் "அல்ல அல்ல" வென்று சொல்ல, இவ்வாறு அவ்விரு ஸ்திரீகளும் அரசன் முன் வாதாடிக்கொண்டிருப்பதைக் கண்ட சலமோன் பிழைத்திருந்த குழந்தையை வாளால் இரு துண்டமாக்கி ஒரு பாதியை ஒருத்திக்



கும் மறுபாதியை மற்றொருத்திக்கும் கொடுக்கும்படியாகச் சேவகனுக்குக் கட்டளையிட்டார். அப்பிள்ளையின் தாயானவள் இதைக் கேட்கவே, மனம் பதறி, மகா துக்கங்கொண்டு, "அரசனே அப்பிள்ளையைக் கொல்லாமல் அவளுக்கே கொடுத்துவிடுங்கள்" என்று அழுகையுடன் சொல்ல, மற்றொருத்தி, "கூடாது அதை வெட்டத்தான்வேண்டியது" என்றாள்.

அப்போது சலமோன் உயிரோடிருந்த பிள்ளையின் தாய் முதல் ஸ்திரீயேயென நிச்சயித்து அவளுக்கு அக்குழந்தையைக் கொடுக்கும்படி தீர்மானித்தார்.

இந்தத் தீர்மானம் இஸ்ருயேலர் நாடெங்கும் பரவவே, சர்வேசுரனுடைய வரம் சலமோன்பேரில் இறங்கின தென்று சகல ஜனங்களும் ஆச்சரிய பிரமைகொண் டார்கள்.

வினு.—சலமோனைப்பற்றி யென்ன சொல்லப்பட்டிருக்கிறது? சர்வேசுரன் அவருக்கு என்ன அளித்தார்? பின்னும் வேறே என்னத்தைத் தந்தார்? இரு ஸ்திரீகளைப் பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? சலமோன் செய்த தீர்ப்பென்ன?

---

## 54-ம் அதிகாரம்

எருசலேமில் தேவாலயங் கட்டப்பட்டு அபிஷேகஞ்
உ. பி. 2992. செய்யப்படுதல் (கி. மு. 1008.

சலமோன் தன் அரசாட்சியின் நாலாம் வருஷத்தில் எருசலேமிலுள்ள மொரியா பர்வதத்தின்மேல் ஆண்டவருக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட ஆரம்பித்தார். அது கட்டப்படும்போது மரங்களை வெட்டிக்கொண்டு வர 70 ஆயிரம் ஆட்களும், கற்களைப் பெயர்த்து சிற்பிக்க 80 ஆயிரம் பேரும் வேலை செய்ததுடன், 3600 மேஸ்திரிகள் மேல்விசாரணை பார்த்துவந்தார்கள். லிபனன் மலையிலுள்ள கருங்காலி விருட்சங்களை வெட்டும்படி 10 ஆயிரம் இஸ்ருயேலித்தார் அனுப்பப்பட்டார்கள்.

தேவாலயக் கட்டிடம் பிரமாண்டமானதும் அதன் பரிமாணத்துக்கேற்ற சிறப்பும் அலங்காரமும்வாய்ந்து கப்பீரத் தோற்றமுடையதுமாயிருந்தது. அதன் நீளம் 60 முழம்; உயரம் 30 முழம்; அகலம் 20 முழம். இதைத்தவிர, அக்கட்டிடத்தைச்சுற்றி மண்டபங்க



ளும், ஆசாரியருக்கும் ஜனங்களுக்கும் உபயோகப்படும்
படி முற்றங்களும் அமைக்கப்பட்டிருந்தன. உட்பாகம்
சேதுரு மரத்தால் மூடப்பட்டு சம்மனசுக்களின் உரு
வங்கள், தெங்கு, பனை இவைபோன்ற விருட்சங்கள்,
சகலவிதமான புஷ்பங்கள் ஆக இவைகளைப்போல்
கொத்து வேலைகளாற் சித்தரிக்கப்பட்டிருந்தது. தேவ
ஊழியத்துக்குத் தேவையான சகலமும் பசும்பொன்
னால் செய்ப்பப்பட்டிருந்தன. அவைகளுள் பத்து
மேசைகளும் பெருந்தொகையான தீபஸ்தம்பங்களும்,
நூறு பாத்திரங்களுமிருந்தன.

ஏழாம் வருஷத்தில் ஷை ஆலயம் முடிவுபெற பிர
புக்களும் ஜனத்தின் மூப்பரும் ஒன்றுசேர்ந்து, தேவ
பெட்டகத்தை சீயோன் மலையினின்று அதற்கென்று
சித்தஞ்செய்யப்பட்ட தேவஸ்தலத்துக்குக் கொண்டு
போனார்கள். ஜனங்கள் முன்னடக்க, லேவித்தர் வீணை
முதலிய வாத்தியங்களை வாசித்துக்கொண்டுபோக,
நூறு ஆசாரியர் எக்காளங்களை யூத ஜனக்கூட்டமெல்
லாம் "ஆண்டவர் நன்மைத்தனமுள்ளவராகையால்
அவருக்குப் புகழ்ச்சி யுண்டாகக்கடவது! அவரு
டைய கிருபை என்றென்றைக்கும் நம்மோடு இருக்கக்
கடவது!" என்று பாடிக்கொண்டு சென்றார்கள். இப்
படிச் சுற்றுப்பிரகாரம் போகும்போது வழிநெடுக
கணக்கற்ற மிருகபலிகள் இடப்பட்டன.

தேவ பெட்டகத்தை தேவாலயத்தில் ஸ்தா
பித்தபோது, ஓர் மேகமானது தேவாலயத்தைச் சூழ்ந்
துகொள்ள, ஜனசமூகம் முழங்காலிலிருக்க, சலமோன்
கரங்களை மேலே உயர்த்திக்கொண்டு, "ஆண்டவரே!
இஸ்ருயேலரின் சர்வேசுரா! தேவரீருக்கு இணையி
டக்கூடியது ஒன்றுமில்லையே; பரலோகமே உம்மைக்

கொள்ளாதிருக்க, இச்சிறிய வீடு தேவரீரைக்கொள்
ளுமோ? ஆகிலும், தேவரீர் இவ்விடத்தில் உமது பிரா
ர்த்தனைகளின் மன்றாட்டைக் கேட்கவும், அவர்கள்மேல்
கிருபைக்கண்ணோக்கவும், இதை நியமித்தேன்; தேவ
ரீர் கிருபைகூர்ந்தருளும்" என்று ஜெபித்தார்.

இவ்வண்ணம் சலமோன் செபஞ்செய்ய,ஜனங்கள்
ஆராதனை செலுத்திக்கொண்டிருக்க ஆகாயத்தினின்று
அற்புதமாக நெருப்புவந்து பலிகளை பஸ்மீகரித்துவிட்
டது. சர்வேசுரன் மறுபடியும் சலமோனுக்குத் தரிச
னையாகி, அவருடைய வேண்டுதல் ஏற்றுக்கொள்ளப்
பட்டதென்றும், அவர் கட்டிய அவ்வாலயத்தில்
பொருத்தனை செலுத்துபவர்களுடைய மன்றாட்டு
கேட்கப்படுமென்றுந் திருவாய்மலர்ந்தருளினார்.

வினா.—சலமோன் கட்டியதென்ன? அதில் எத்தனை
பேர் வேலை செய்தார்கள்? ஆலயத்தையும் தேவாராத
னைக்கு தேவையான தட்டுமுட்டுகளையும்பற்றிய விவரத்தைச்
சொல்லு? அபிஷேகஞ் செய்யப்பட்ட விதமெப்படி? தேவ
பெட்டகத்தை ஆலயத்தில் ஸ்தாபித்தபோது என்ன சம்ப
வித்தது? சர்வேசுரன் சலமோனுக்குச் செய்த வாக்குத்
தத்தமென்ன?

---

## 55-ம் அதிகாரம்

சலமோனுடைய மகத்துவமும் அவருடைய முடிவும்
உ. பி. 3023.)
(கி. மு. 977.

சலமோன் தம்முடைய அரசாட்சியின்முதல் 20 வரு
ஷங்கள்வரையில் தமது தந்தையாகிய தாவீதென்
பவரை எவ்விஷயத்திலும் கண்டுபாவித்து நடந்துவந்
தார். அவருடைய பெருங் கீர்த்தியும் உலக மெத்தி



சையிலும் வியாபிக்க, அநேக இராச்சியத்தார் அவருக்
குக் கப்பங்கட்டிவந்தார்கள். அவர் செய்வித்த ஓடங்
கள் இந்தியா முதற்கொண்டு இஸ்பானியா தேசம்
வரைக்கும் கடலில் சென்று, பொன், தந்தம், நவரத்
தினங்கள் முதலியவற்றை ஏற்றிக்கொண்டு அவர் ராஜ
தானிக்கு வரும்.

இப்பிரசித்த க்ஷேமகாலத்தில் அநேக பட்டணங்
கள் கட்டப்பட்டதுடன் யெருசலேம் பட்டணமானது
அதிக சிறப்புற்றோங்கி பிரகாசித்தது. சலமோன் கட்
டின அரண்மனைக்குப் பிடித்த திரவியம் உரைக்குந்தன்
மையல்ல; அவருடைய சிங்காதனமானது தந்தத்தாற்
செய்யப்பட்டு தங்கதகட்டால் மூடப்பட்டு செப்பனி
டப்பட்டிருந்தது. இன்னும் பொன்னாற் செய்யப்பட்ட
ஐம்பது கனத்த கேடயங்கள் அரண்மனையில் தொங்க
விடப்பட்டிருந்தன.

தேவாராதனைக்கு வேண்டிய சகல பாத்திரங்களும்,
தட்டுமுட்டுகளும் பசும்பொன்னால் செய்யப்பட்டிருந்
தன. பிரஜைகள் யாவருஞ் சமாதானத்தோடு வாழ,
அயல் நாட்டார் அவருடைய சிநேகத்தைத் தேடினார்
கள். சாபாநாட்டு இராணிமுதலாய் அவருடைய கீர்த்
தியைக் கேள்விப்பட்டு பிரமித்து, தானாக நேரில்வந்து
அவருடைய மகிமையையும் மேலான ஞானத்தையும்
அறிந்து ஆச்சரிய பிரமிப்புக்கொண்டாள். இஸ்ராயே
லர் பேர் பிரதாபம்படைத்த காலம் இதுவென்கலாம்.

ஆனால் சலமோன் தாம் அரசாளத் துவக்கின
விதத்தைப்போல் அதை முடித்தவரல்ல. அவருக்குப்
பிராயமானபோது அஞ்ஞான ஸ்திரீகளின் இச்சகத்
தால் சர்வேசுரனைக் கைவிட்டார். அவருடைய பத்தி
தளர்ந்துபோக. அவர் விக்கிரக ஆராதனைக்குட்பட்ட

துடன் தன் ஸ்திரீகளுக்குப் பிரியப்படும்படி அவர்களுடைய விக்கிரகங்களுக்கு ஒரு கோவிலையுங் கட்டிக்கொடுத்தார். ஆண்டவர் அதைக்கண்டு அதிக கோபங்கொண்டு, "உன் பாவங்களைப்பற்றி இராச்சியம் பிடுங்கப்பட்டு மற்றொருவனுக்குக் கொடுக்கப்படும். ஆகிலும் உன் தகப்பனாகிய தாவீதைப்பற்றி உன் மகனை இரண்டு கோத்திரத்தாருக்குமாத்திரம் அரசனாக்குவோம்" என்று வாக்கிட்டார்.

சலமோன் தன் ஆசாபாசத்தாலும் பாவ மிகுதியாலும் அந்தகாரத்திற்குட்பட்டு தன் பேரையும் பெருமையையும் போக்கடித்துக்கொண்டார். அவர் தன் பிரஜைகளை நெருக்கிடைப்படுத்தி அவர்களுக்குத் துர்மாதிரிகை காட்டியதால், இராச்சியமெங்கும் அதிருப்தியும் கலகங்களும் உண்டாயின. இப்பெரும் சங்கடகாலத்தில் மனிதருக்குள் மிக்க பெரிய ஞானியாய் விளங்கிய சலமோன் மரணமடைந்தார். மனிதன் எவ்வளவு பலவீனன் என்பதற்கும், அவனுடைய மனது எவ்வளவு சுலபத்தில் மாறக்கூடியதென்பதற்கும், உலகத்தின் பெருமை அநித்தியமென்பதற்கும் இவர் ஓர் நல்ல உதாரணமானார்.

வினா.—சலமோனுடைய ஆளுகையின் முதல் வருஷங்களைப்பற்றிச் சொல்லியிருப்பதென்ன? சலமோனுடைய உன்னத மகிமையைப்பற்றி விவரி? தேவாலயதின் சிறப்பையும் அதன் தட்டுமுட்டுகளையும்பற்றி சொல்லியிருப்பதென்ன? சலமோன் தன் அந்தியகாலத்தை எப்படிக் கழித்தார்?



## 56-ம் அதிகாரம்

உ. பி. 3029.) இராச்சியத்தின் பிரிவு (கி. மு 971,

சலமோன் இறந்தபிறகு, அவருடைய குமாரனாகிய ரோபோவாமிடம் ஜனங்கள் கூட்டமாய் வந்து அவன் தகப்பன் தங்கள்பேரில் சுமத்திய பாரத்தைச் சற்றுக்குறைக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். ரொபோவாம் அவர்களை மூன்று தினங்களுக்குப்பிறகு வரும்படிச் சொன்னான். இதனிடையில் அவ்விஷயத்தைப்பற்றி விருத்தாப்பியரை ஆலோசனை கேட்க, அவர்கள்: இராசனே, நீர் ஜனங்களுக்கு தயவு இரக்கத்தைக் காட்டவேண்டுமென்றார்கள். பிறகு அவன் வாலிபருடைய தாற்பரியத்தைக் கேட்க: அரசே, நீர் அவர்களைக் கொடுமையாய் நடத்தவேண்டுமென்றார்கள். ரொபோவாம் வாலிபருடைய யோசனைப்பிரகாரம் மூன்றாம் நாள் ஜனங்களைப்பார்த்து "என் தகப்பன் உங்கள்பேரில் பாரமான நுகத்தடியைச் சுமத்தினார். நானோவெனில் அதிலும் பாரமானதைச் சுமத்துவேன். என் தகப்பன் உங்களைச் சவுக்காலடித்தார். நானோ உங்களை முள்முனைச் சாட்டிகளாலடித்து வாதிப்பேன்" என்று சொன்னான்.

ஜனங்கள் இதைக்கேட்டு அதிக கோபங்கொண்டு, அரசனுடைய தூதனாகிய ஆதுரான் என்பவனைக் கல்லாலெறிந்து கொன்று, சலமோனுடைய ஊழியரில் ஒருவனாகிய ஜெரோபோவாம் என்பவனை பத்து கோத்திரங்களுக்கு அரசனாகத் தெரிந்துகொண்டார்கள். யூதா, பெஞ்சமின் இவ்விரு கோத்திரத்தார்மாத்திரம் ரொபோவாம் ஆளுகைக்குட்பட்டிருந்தார்கள்.

சர்வேசுரன் சலமோனுக்கு வாக்களித்ததுபோல், யூத ஜனங்கள் இஸ்ருயேல் கோத்திரத்தார், யூதா

கோத்திரத்தாரென இரு பிரிவாக பிரிக்கப்பட்டார்கள். யூதா கோத்திரத்தாருக்கு யெருசலேம் பட்டணம் இராஜதானியாகவும், பிற்காலத்தில் சமாரியா இஸ்ராயேலருடைய இராஜதானியாகவுமாயின.

புத்தி.—சற்றுக் குரூரமானவனானாலும் தங்கள் நியாயமான அரசனை பாவத்தால் விட்டுப்பிரிந்துபோன ஷை பத்து கோத்திரத்தார், பூலோகத்தில் கடவுளின் மெய்யான பிரதிநிதியாயிருக்கும் கத்தோலிக்குத் திருச்சபையைத் தங்கள் பாவங்களினால் விட்டுப்பிரியும் வேதவிரோதிகளுக்கு அடையாளமாகிறார்கள். எருசலேம் சத்திய வேதத்தையும், சமாரியா பதிதத்தனத்தையும் குறிக்கின்றன. எருசலேம் பட்டணத்தின் தேவாலயத்தில் இடப்பட்ட பலியொன்றே சர்வேசுரனுக்குப் பிரியப்பட்டது. இவ்விடத்தில் தான் உடன்படிக்கையின் பெட்டகமிருந்தது. அங்கேயே சர்வேசுரன் ஏற்படுத்திய குருத்துவமும் இருந்தது.

பிரமாணிக்கமாய் நின்ற இரு கோத்திரத்தாரை விட்டுப் பிரிந்துபோனவர்களுடைய தொகை பெரிதாயினும் அவர்கள் கடைத்தேறவில்லை; கொஞ்சகாலத்துக்குள் ஊரும் பேருமற்று ஒழிந்துபோனார்கள். இவ்வண்ணமே பதித மதமுந் தோன்றி வெகுசீக்கிரத்தில் ஒன்றுமில்லாது அழிந்துபோகும்.

இந்த இரு கோத்திரத்தினின்று உலக இரட்சகர் பிறந்தபடியால் சர்வேசுரன் அவர்கள்மட்டில் கிருபை தயாளமாயிருந்தார். அவ்வாறே திருச்சபைக்கு விரோதமாய் பல பதித மதங்கள் எழும்பி அதை அடியோடே நாசமாக்குவதுபோல பயமுறுத்தினாலும், அவைகள் தாமே அழிந்துபோக கத்தோலிக்குத் திருச்சபையானது இன்று ஜெயசீலமாய் விளங்குவதுபோல உலக முடியுமட்டும் தவறாமல் நிலைத்திருக்கும்.

வினா.—ரொபோவாம் ஜனங்களை எப்படி நடத்தினான்? அப்போது என்ன சம்பவித்தது? ஜெரோபோவாமை என்ன செய்தார்கள்? ரொபோவாம்பக்கம் சேர்ந்தவர்களார்? யூதர்



எவ்விதம் பிரிக்கப்பட்டார்கள்? இரண்டு இராச்சியங்களுக்கும் இராஜதானிபட்டணங்களெவை? இஸ்ராயேல் இராச்சியத்தைப்பற்றியும், யூதேயா இராச்சியத்தைப்பற்றியும் சொல்லப்பட்டிருப்பதென்ன? கத்தோலிக்குத் திருச்சபையைப்பற்றியும் பதித மதங்களைப்பற்றியும் சொல்லியிருப்பதென்ன?

நான்காம் யுகம் முற்றிற்று

# ஐந்தாம் யுகம்

## இஸ்ருயேலருடைய இராச்சியம் அசீரியா அரசர்களால் அழிக்கப்படுதல்

## 57-ம் அதிகாரம்

### பொது ஆராய்ச்சி

இஸ்ருயேலர் யூத இராச்சியத்தினின்று பிரிந்துபோன சொற்பகாலத்திற்குள் விக்கிரகாராதனைக் காரரானார்கள். அதெப்படியெனில், ஜெரோபோவாம் தன்னுடைய ஜனங்கள வேதகட்டளைப்பிரகாரம் பலி செலுத்த எருசலேம் பட்டணத்துக்குப் போகவாவிருந்தால் ரொபோவாமோடு சேர்ந்துகொண்டு தன்னைக் கைவிடுவார்களென்று பயந்து, பொன்னால் இரண்டு கன்றுக்குட்டிகளை செய்வித்து ஜனங்களைப் பார்த்து நீங்கள் எருசலேம் பட்டணத்திற்குப் போகவேண்டாம், ஏனெனில் உங்கள் தெய்வங்கள் இவ்விடத்திலேயேயிருக்கின்றார்கள் என்று சொல்லவே, ஷை ஜனங்கள் அவன் சொல்லைக்கேட்டு விக்கிரகங்களை வணங்கி வந்தார்கள்.

ரொபோவாம் தன்னுடைய ஆளுகைகாலமெல்லாம் ஜெரோபோவாமுடன் யுத்தஞ் செய்துகொண்டே வந்ததினால், அவ்விரு இராச்சியத்தாருக்கும் சமாதானமிருந்ததில்லை. இவ்விரு கோத்திரத்தாருக்கும் சண்டைச்சச்சரவுகள் வரவர மும்முரமானதால், பலக்குறைவான கட்சிக்காரர் அன்னியரையும் அஞ்ஞானிகளையும் அடிக்கடி தங்களுக்கு உதவியாகச் சேர்த்துக்கொண்டு வந்தார்கள்.

253 வருஷகாலமாக இஸ்ருயேலருடைய இராஜதானிப்பட்டணம் சாமாரியாவிலே இருந்தது. அந்தக் காலத்தில் இஸ்ருயேலரை 19 அரசர்கள் அரசாண்டு வந்தார்கள். ஏறக்குறைய அவ்வரசர்ளகனைவரும் பலவந்தமாயாவது அல்லது முந்தின அரசர்களைக் கொலை செய்தாவது சிங்காதனம் ஏறினார்கள். அலங்கோலம், துர்மார்க்கம், விக்கிரக ஆராதனை ஆகிய பாவாக்கிரமங்கள் அங்கு மிகுந்திருந்தன.

அரசர்களைக் கண்டிக்கவும், ஜனங்களைத் திருத்தவும் அவர்களுடைய பாவங்களுக்கு சாக்குபோக்குச் சொல்லாதிருக்கவும், சர்வேசுரன் அப்போதைக்கப்போது தீர்க்கதரிசிகளென்று சொல்லப்படும் புண்ணியவாளரை யனுப்பிவைத்தார். இவர்கள் இஸ்ருயேல், யூதா ஆகிய இரு இராச்சியங்களிற் சென்று பிரசங்கித்தும் புதுமைகளைச் செய்தும்வந்தார்கள்.

சர்வேசுரன் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களை இரட்சிக்கும்படியாக பல உபாயங்களைச் செய்தும், அவர்கள் மூர்க்கத்தனத்தால் அவர்களுக்குக் கீழ்ப்படியாமற்போனார்கள். அதாவது சர்வேசுரன் அவர்களைப்பார்த்து "இஸ்ருயேலே! உன் அழிவுக்கு நீயே காரணம்" என்று சர்வநியாயத்தோடு கடிந்து சொல்லவேண்டியதாயிருந்தது.

வினா.—இஸ்ருயேல் ஜனங்கள் எப்படி விக்கிரக ஆராதனைக்காரரானார்கள்? ரொபோவாம் ஜெரொபோவாமுக்கு விரோதமாய்ச் செய்ததென்ன? இஸ்ருயேல் இராச்சியம் எவ்வளவுகாலம் நீளித்திருந்தது? அதன் நடத்தை எப்படி? தீர்க்கதரிசிகளார்? அவர்கள் என்ன செய்தார்கள்?

## 58-ம் அதிகாரம்

உ. பி. 3092.) எலியாஸ் தீர்க்கதரிசி (கி. மு. 908.

இஸ்ருயேல் இராச்சியத்தை ஆண்ட அரசருக்குள் ஆகாப் இராயன் வெகு துஷ்டன். அவனுடைய அஞ்ஞான மனைவியாகிய ஜெகபேலுடைய இஷ்டத்துக்கிணங்கி பால்தேவனுக்கு ஓர் கோவில் கட்டி, அதற்கு சேவைசெய்யும்படி நானூற்று ஐம்பது பூசாரிகளை யேற்படுத்தினதுமன்றி, தன் இராச்சியத்திலுள்ள மெய்க்கடவுளுடைய குருக்களெல்லோரையுங் கொன்றும்போட்டான்.



சர்வேசுரன் இந்த அரசனுடைய துஷ்டதனத்தைக்கண்டு, எலியாஸ் தீர்க்கதரிசியை யவனிடமனுப்பி, இஸ்ருயேல் இராச்சியத்தில் மழைபெய்யாதென்று சொல்லக் கற்பித்தார். ஆகாப் இதைக் கேட்டு அதிக கோபங்கொண்டு, எலியாசை இரகசியமாய்க் கொல்லத் தேடினான். சர்வேசுரன் ஷை தீர்க்க



தரிசியை காரீத் என்ற நீரோடைக்கருகாமையில் போய் வசிக்கச்சொல்லி, அவ்விடத்தில் ஓர் காகத்தைக்கொண்டு அவரைப் போஷித்துவந்தார்.

எலியாசும் தேவகற்பனைப்படி செய்ய, காலையிலும் மாலையிலும் காகங்கள் கொண்டுவந்த அப்பத்தையும் இறைச்சியையும் புசித்து, ஷை நீரோடையின் ஜலத்தை அருந்திவந்தார். நாளாவட்டத்தில் ஷை நீரோடையுங் காய்ந்துபோக, சிதோனியர் நாட்டின் சரெப்தா ஊருக்குப்போனால், ஒரு விதவை ஸ்திரீயால் சவாட்சணை நடக்குமென்று கர்த்தர் எலியாசுக்குச் சொன்னார்.

எலியாஸ் ஷை பட்டணத்தில் பிரவேசிக்க, அங்கு ஓர் கைம்பெண்சாதியைக்கண்டு அவளைக் குடிக்க ஜலங் கேட்டார். அவள் ஜலங்கொண்டுவரப் போகையில் எலியாஸ் அவளை மறுபடியுங் கூப்பிட்டு: அம்மா ஜலத்துடன் கொஞ்சம் அப்பமுங் கொண்டுவருவாயோ? என்க, அதற்கு அவள்: ஐயா! பிடி மாவும் கொஞ்சம் எண்ணெயுமாத்திரம் என்னிடமிருக்கிறது. நான் பொறுக்கும் இந்தக் குச்சிகளைக்கொண்டு உரொட்டி சுட்டு நானும் என் மகனும் புசித்தபின் சாக நினைத்திருக்கிறோமென்று சொன்னாள்.

எலியாஸ் அவளைப் பார்த்து, அம்மா, நீ பயப்படவேண்டாம். முதல் எனக்கு ஒரு உரொட்டி சுட்டுக் கொடு; பிறகு உனக்கும் உன் மகனுக்கும் ஒன்று சுட்டுக்கொள். மேலும் மழை வருஷிக்கும்வரையில் மாவும் எண்ணெயும் உனக்குக் குறைவுபடாதிருக்குமென்று உறுதியாக வாக்களித்தார். அந்த ஸ்திரீயும் அவர் சொன்னபடியே செய்ய, மாவும் எண்ணெயும் குறையாமலிருந்தன.

சிலநாளைக்குப்பிறகு அவ்விதவையின் மகன் இறந்துபோக, எலியாஸ் சர்வேசுரனைப் பிரார்த்தித்து அவனை உயிர்ப்பித்தார். அந்த ஸ்திரீ யிதைக்கண்டு 'நீ சர்வேசுரனுடைய மனிதனென்று இப்போதுதான் எனக்குத் தெரியவருகிறது' என்று அவரைப் புகழ்ந்தாள்.

வினா.—ஆகாபைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? அவன் என்ன கட்டினான்? அவனிடம் யார் வந்தது? எலியாஸ் எங்கே போனார்? அவர் எப்படிப் போஷிக்கப்பட்டார்? சர்வேசுரன் அவரை யெங்கே அனுப்பினார்? சரெப்தா பட்டணத்துக் கைம்பெண்சாதிக்கு நேர்ந்ததென்ன?

---

## 59-ம் அதிகாரம்

### எலியாசும் பால்தேவனுடைய பூசாரிகளும்

உ. பி. 3096.) (கி. மு. 904.

மூன்றரை வருஷகாலமாக இஸ்ராயேல் நாட்டில் மழை பெய்யவில்லை. அப்போது எலியாஸ் மறுபடியும் அரசனிடம் போக, அவன் அதிக கோபங்கொண்டு அப்போது தன் தேசத்துக்கு நேரிட்டிருக்கும் துன்பதுரிதங்களைப்பற்றி அவரைக் கண்டித்துப் பேசினான். எலியாஸ் அவனுக்குப் பிரதியுத்தரமாக இப்போது இஸ்ராயேலருக்கு நேரிட்டிருக்கும் துன்பங்களுக்குக் காரணம் நானல்ல; ஆனால் உன்னுடைய பாவதோஷங்களும் விக்கிரகாராதனையுமே அதற்குக் காரணமென்று கண்டிதமாகச் சொன்னார்.

இஸ்ராயேல் ஜனங்களையும், பால்தேவனுடைய 450 பூசாரிகளையும் கர்மேல் பர்வதத்தின்மேல் சேர்க்கும்படி எலியாஸ் அரசனுக்குக் கற்பித்தபிரகாரம், ஆகாபும் அப்படியே செய்து தானும் பர்வதத்திற்குச்



சென்றான். அவ்விடம் யாவருஞ் சேர்ந்தபின் எலி
யாஸ் அரசனைப்பார்த்து, "நான் ஒருவன்; பால்தேவ
னுடைய பூசாரிகளோ 450 பேர் இருக்கிறார்கள்.
இரண்டு ரிஷபங்களில் அவர்களுக்கு இஷ்டமான
தொன்றை தெரிந்துகொள்ளட்டும். நான் மற்றொன்
றைத் தெரிந்துகொள்ளுகிறேன். அவர்களுடைய
ரிஷபத்தை அவர்களும் என்னுடையதை நானுமாக
வெட்டி, விறகு கட்டைகளை அடுக்கி நெருப்பு
மூட்டாமல் வெடி ரிஷபங்களைமாத்திரம் அதன்மேல்
வைப்போம். அவர்களுடைய தெய்வங்களை அவர்கள்
அழைக்கட்டும்; என்னுடைய தேவனை நான் அழைப்
பேன். எந்த தெய்வம் அந்த ரிஷபங்களை நெருப்பால்
எரித்துவிடுமோ, அதே உண்மையான தெய்வமென்று
கண்டுகொள்வீர்" என்று சொன்னார். அவர் சொன்ன
விஷயம் யாவருக்கும் பிரியப்பட்டபடியால் அதற்கு
எல்லோருஞ் சம்மதித்தார்கள்.

பால்தேவனுடைய பூசாரிகள் பெருந்த சாங்கி
யங்களுடன் ரிஷபத்தை வெட்டி பீடத்தின்மேல்
வைத்துக் காலைமுதல் மத்தியானம்வரையில் பால்
தேவனை ஓயாமல் கத்திக் குறைவையிட்டு அழைத்த
போதிலும் பிரயோஜனமில்லாமற்போயிற்று.

அப்போது எலியாஸ் அவர்களைப் பார்த்து
நகைத்து, "உரக்கக் கத்தி கூப்பிடுங்கள்; சிலவிசை
பால்தேவன் தூங்குகிறானாக்கும்; அல்லது தன் சினே
கிதனோடு விருந்துண்ணலாம்; அல்லது எங்கேயாவது
ஊருக்குப் பிரயாணப்பட்டுப் போனானோ என்னவோ"
என்று இவ்வாறு பரிகாசமாய்ச் சொன்னார். அவர்
களோ இடைவிடாமல் கத்திக்கூப்பிட்டும் பால்தேவன்
பேசவுமில்லை. அவர்கள் மன்றாட்டைக் கேட்கவுமில்லை.

அப்போது எலியாஸ் ஓர் பீடங்கட்டி, ரிஷபத்தை வெட்டி அதன்மேல் வைத்து, அப்பீடத்தைச்சுற்றி ஆழமான வாய்க்கால் வெட்டுவித்து, அதை ஜலத்தால் நிரப்பி, விறகின்மேலும் ஜலமூற்றி அதை நனைத்தார். அதன்பின் அங்கு தம்முடைய வல்லமையைக்காட்டி அதனால் ஜனங்களை மனந்திரும்பும்படியாக ஆண்டவனைப்பார்த்து உருக்கமாக பிரார்த்திக்க வாரம்பித்தார்.



எலியாஸ் இவ்வண்ணம் ஜெபித்துக்கொண்டிருக்கையில் ஆகாயத்தினின்று அக்கினி வந்து, பலிப்பொருள், விறகு, பீடக்கற்கள், பீடத்தைச் சுற்றிலுமிருந்த அகழியிலுள்ள ஜலம் ஆகிய சகலத்தையும் சுட்டு பஸ்மீகரித்துவிட்டது. ஜனங்கள் அதைக் கண்டவுடனே முகங்குப்புறவிழுந்து “ஆண்டவரே! நீரே தெய்வம்!



ஆண்டவரே! நீரே மெய்யான சர்வேசுரன்” என்று கூவித் துதித்து வணங்கினார்கள்.

பால்தேவனின் பூசாரிகளெல்லோருங் கொல்லப்பட்ட கொஞ்ச நேரத்துக்குள் பெருமழை பெய்தது.

வினா.—எவ்வளவு காலம் மழை பெய்யவில்லை? எலியாஸ் செய்துகொண்ட ஒப்பந்தமென்ன? பால்தேவனுடைய பூசாரிகள் என்ன செய்தார்கள்? எலியாஸ் என்ன செய்தார்? அதன் பலாபலனென்ன?

---

## 60-ம் அதிகாரம்

### நாபோத்தின் திராட்சைத்தோட்டம்

நாபோத்தென்பவனுக்கு ஆகாப் அரசனுடைய அரண்மனைக்குச் சமீபமாய் ஒரு திராட்சத்தோட்டமிருந்தது. அரசன் அதை விலைக்கு வாங்க விருப்பங்கொண்டும், நாபோத்து அதை விற்க சத்மதிக்கவில்லை. அரசியாகிய ஜெசபேல் நடந்த காரியத்தைக் கேட்டு, நாபோத்து சர்வேசுரனையும் அரசனையும் தூஷித்ததாகப் பொய்ச்சாட்சிகளைக்கொண்டு ருசுப்பித்து, நாபோத்தைக் கல்லாலெறிந்து கொல்லுவித்தான். பிறகு ஆகாப் அத்திராட்சதோட்டத்தை அபகரித்துக்கொண்டான்.

சர்வேசுரனுடைய கட்டளைப்பிரகாரம், எலியாஸ் ஆகாபினிடம்போய்: நீ மகா துஷ்ட கிரியையினால் நாபோத்துடைய திராட்சத்தோட்டத்தை அநியாயமாய் அபகரித்துக்கொண்டாயாதலால், நாய்கள் உன்னுடைய இரத்தத்தை நக்கவும், ஜெசபேலுடைய மாமிசத்தைத் தின்னவும் நேரிடுமென்று சாபமிட்டார்.

இந்தத் தீர்க்கதரிசனத்தில் ஒரு எழுத்தும் பிசகாமல் நிறைவேறியது. மூன்று வருஷங்களுக்குப்பிறகு ஆகாப் ஒரு சண்டையில் மரணகாயம் படவே, நாய்கள் அவனுடைய இரத்தத்தை நக்கின. கொஞ்சகாலத்துக்குப்பிறகு ஜேஹூ என்ற அரசன் அரசாட்சிசெய்யும்போது, அவனுடைய கட்டளைப்பிரகாரம் ஜெசபேல் பலகணியிலிருந்து கீழே தள்ளப்பட்டு குதிரைகளின் காலடிகளால் மிதிக்கப்பட்டு செத்த சில மணிநேரத்திற்குப்பின் அவள் மித்திரர் அவளுடைய பிரேதத்தைத் தேடவந்தபோது, அதை நாய்கள் துண்டுதுண்டாய்க் கிழித்திருப்பதாக அறிந்துகொண்டார்கள்.

வினா.—நாபோத்துடைய திராட்சைத்தோட்டத்தைப் பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? ஆகாப் அதைக் கைக்கொண்டவிதமெப்படி? எலியாஸ் ஆகாபுக்கு என்ன சொன்னார்? இந்தத் தீர்க்கதரிசனம் எப்படி நிறைவேறினது?

---

## 61-ம் அதிகாரம்

### எலிசேயுஸ் தீர்க்கதரிசி

சர்வேசுரனுடைய கட்டளைப்பிரகாரம் எலியாஸ் எலிசேயுவைத் தமக்குப்பதிலாகத் தெரிந்துகொண்டார். எலியாஸ் சர்வேசுரனிட மேகுங்காலம் சமீபித்தபோது, இச்சங்கதி எலிசேயுவுக்குத் தெரியாமலிருக்கப் பிரயாசைப்பட்டுங் கூடாமற்போயிற்று. அவர்கள் இருவரும் நடந்துபோகையில் நெருப்புமயமான இரதமொன்று வர, அதில் எலியாஸ் ஏறி சுழற்காற்றுமூலமாக வானமண்டலத்திற் சென்றார். எலியாசின் போர்வை தனித்துநின்ற எலிசேயுவின்மேல் விழுந்தது. அதனால் அவருக்குத் தன் குருவைப்போல் தேவ அருளும், புதுமைசெய்யும் வரமும் உண்டாயின.



ஒருநாள் சில துஷ்டப்பிள்ளைகள் எலிசேயுவை "வழுக்கைத்தலையா" என்று பரிகாசஞ்செய்தார்கள். அப்போது தீர்க்கதரிசியானவர் ஆண்டவருடைய நாமத்தைக்கொண்டு அவர்களை பயமுறுத்தினார். அந்த க்ஷணமே காட்டினின்று இரண்டு கரடிகள் வந்து அத்துஷ்டப்பிள்ளைகளில் 40 பேரைத் துண்டுதுண்டாய்க் கிழித்தெறிந்துவிட்டன.

வேறோர் சமையத்தில் நாமான் என்னும் ஓர் பேர்போன சீரிய தளக்கர்த்தன் எலிசேயுவினிடம் வந்து தனக்கிருந்த குஷ்டவியாதியைக் குணப்படுத்தும்படியாக மன்றாடினான். அவன் எலிசேயுவின் இருப்பிடத்துக்கு வந்தபோது, அவன் ஏழுதரம் யோர்தான் ஆற்றில் முழுகினால் குணப்படுவானென்று தன் ஊழியனிடத்தில் சொல்லி யனுப்பினார். தீர்க்கதரிசி தன்னைச் சொற்பமாய் எண்ணினாரென்று நினைத்து நாமான் அவர்பேரில் அதிக கோபங்கொண்டான்.

ஆகிலும், அவனுடைய ஊழியர் அவனை வருந்திக் கேட்டுக்கொண்டதின்மேல், நாமான் யோர்தான் நதிக்குப்போய் ஏழுதரம் முழுகவே, குணமடைந்தான். அவன் அந்த அதிசயத்தைக் கண்டு, எலிசேயுவினிடம் போய், இஸ்ராயேலருடைய தெய்வம் தவிர வேறே தேவனில்லையென்று சொல்லி, தீர்க்கதரிசிக்கு வெகுமதியளிக்க, அவர் அதைப் பெற்றுக்கொண்டவரல்ல.

நாமான் விடைபெற்றுக்கொண்டுபோனபின் எலிசேயுவின் ஊழியனாகிய ஜியேஜி என்பவன் அவன் பிறகே ஓடிப்போய், தன் எசமானன் ஒரு வெள்ளி தலேந்தும் இரண்டு ஜதை உடுப்பும் கேட்டாரென்று சொல்லி அவற்றை வாங்கிக்கொண்டுவந்தான்.

எலிசேயு அவனைக் கண்டபோது: நீ யெங்கே போனாயென்று கேட்க, "நான் எங்கும் போகவில்லை" என்று சொன்னான். அவன் சொன்ன பொய்யைக் கண்டு எலிசேயு கோபங்கொண்டு, "ரதசவாரி போகும் நாமானை நீ கூப்பிட்டபோது நான் ஞானதிருஷ்டியால் கண்டேன். அவன் கொடுத்த வெள்ளி நாணயமும், உடுப்புகளும் உன்னிடமிருக்கின்றன. ஆகையால் உன் பாவத்துக்கு ஆக்கினையாக நாமானுடைய குஷ்டம் உனக்கு ஒட்டிக்கொள்ளக்கடவது" என்க, அக்ஷணமே ஜியேஜி குஷ்டரோகியானான்.

எலிசேயு அனேக புதுமைகளைச்செய்து மரணமடைந்த சிலகாலத்துக்குப்பிறகு, இறந்துபோன ஒருவனை அவனுடைய சிநேகிதர் எலிசேயுவின் கல்லறைக்கு அருகாமையில் புதைக்க வந்தபோது, சில கள்ளர்கள் சடுதியில் அவர்களைத் தாக்க வருவதைக்கண்டு, அந்தப் பிரேதத்தை எலிசேயுவின் கல்லறையில் எறிந்துவிட்டு ஓட்டம்பிடித்தார்கள். அந்த மனிதனுடைய பிரேதம் எலிசேயுவின் எலும்பின்மேல் பட்டக்ஷணமே அவன் உயிர்த்து எழுந்து நின்றான்.

புத்தி.—சர்வேசுரன் யூதர்களுக்குள்முதலாய் தமது அர்ச்சியசிஷ்டவர்களின் பரிசுத்த பண்டங்களைக் கொண்டு புதுமைகளைச் செய்தாரென்று இதனால் தெரியவருகிறது.

வினா.—எலியாசுக்குப்பதிலாய் யார் வந்தது? எலியாசு எப்படி பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்? எலிசேயுவின்மேல் என்ன விழுந்தது? துஷ்டப்பிள்ளைகளுக்கு என்ன நேரிட்டது? நாமானுடைய வரலாறென்ன? ஜியேஜி என்பவனுக்கு என்ன சம்பவித்தது? இறந்துபோன ஒருவனுக்கு என்ன சம்பவித்தது?



## 62-ம் அதிகாரம்

### யோனாஸ் தீர்க்கதரிசி

எலிசேயுவின் மாணத்துக்குப்பின் யோனாஸ் என்பவரை சர்வேசுரன் தீர்க்கதரிசியாகத் தெரிந்துகொண்டார். நினிவே பட்டணத்து ஜனங்கள் மிகுந்த பாவங்களைக் கட்டிக்கொண்டதால், தவஞ்செய்யும்படி அவர்களுக்கு புத்திசொல்ல ஒருநாள் சர்வேசுரன் அவருக்குக் கட்டளையிட்டார்.

அசீரியாவின் தலைநகரமாகிய நினிவே நகரம் நிர்மூலமாய்விட்டால் நலமாயிருக்குமென்று யோனாஸ்



கோரி ஷை நகரத்துக்குப் போகாமல் சமுத்திரக்கரைக்குப்போய் தார்சிஸ் பட்டணத்துக்குப் பிரயாணப்பட்டு கப்பலிலேறினார். இதனால் தான் சர்வேசுரனிடத்திலிருந்து தப்பித்துக்கொள்ளலாமென்று எண்ணினார்.

அந்தக் கப்பல் கரையைவிட்டுப் பிரயாணப்பட்டு நடு சமுத்திரத்தில் போகவே, சர்வேசுரன் பெரும்

புயலை யனுப்ப, கப்பல் முழுகிப்போகும் ஆபத்திலிருந்தது. அப்பொல்லாப்புக்குக் காரணம் யாரென்று கப்பற்காரர் திருவுளச்சீட்டு போட, யோனஸ் பேருக்குச் சீட்டு விழுந்ததினால், அவரைக் கடலிலெறிந்துவிட்டார்கள், கடலும் உடனே அமைதியானது.

ஆண்டவர் தீர்மானப்படி அவரை யொரு பிரமாண்டமான திமிங்கிலம் விழுங்கிவிட்டது. அவர் அதன் வயிற்றில் மூன்று இரவும் மூன்று பகலுமிருந்தார். அப்போது அவர் தன்னைப் பாதுகாக்கும்படியாக ஆண்டவரைப் பிரார்த்திக்க, அம்மச்சம் அவரைக் கரையின்மீது கக்கிவிட்டது.

புத்தி.—யோனஸ் சேசுக்கிறீஸ்துநாதரின் குறிப்பாயிருக்கிறார். ஒருவருடைய மரணத்தினால் கப்பற்காரர் இரக்ஷிப்பு அடையும்படி யோனஸ் கடலில் எறியப்பட்டார். அதேபிரகாரம் கிறீஸ்துநாதரின் பலியால் உலகம் இரட்சண்யமடைந்தது. யோனஸ் திமிங்கிலத்தின் வயிற்றில் மூன்று தினங்களிருந்ததுபோல கிறீஸ்துநாதரும் கல்லறையில் மூன்று தினங்களிருந்தார்.

நினிவே பட்டணம் நாற்பது நாளுக்குள் அழியுமென அப்பட்டணத்தாருக்குச் சொல்லும்படியாக சர்வேசுரன் இரண்டாந்தரம் யோனசுக்குக் கட்டளையிட்டார். அவ்வார்த்தைகளை அவர்கள் கேட்டு, சர்வேசுரனை நம்பி உபவாசம் பிடித்து மயிருடையைத் தரித்து, சாம்பலில் புரண்டு தபசு செய்தார்கள். அரசன்முதல் ஜனங்களனைவரும் தபசுசெய்ய, அவர்களுடைய உண்மையான மனஸ்தாபத்தைக்கண்டு அவர்கள்பேரில் மனதிரங்கி சர்வேசுரன் அப்பட்டணத்தைக் காப்பாற்றினார்.

இதைக்கண்ட யோனஸ் ஜனங்கள் தன்னைக் கள்ளத்தீர்க்கதரிசி யென்பார்களென்று பயந்து, வெறுப்படைந்து பட்டணத்துக்கு வெளியே போய் ஒரு பந்தல் போட்டு



அதில் வசித்துவந்தார். அவருக்கு வெயில் படாதபடிக்கு, ஆண்டவர் அன்று இராத்திரியே ஒரு கொடி பந்தலில் படரச் செய்ய, யோனஸ் அதைக்கண்டு அதிக சந்தோஷங் கொண்டார்; ஆனால் மறுநாள் இராத்திரி சர்வேசுரன் ஒரு பூச்சியால் அதை அரிக்கச்செய்ய, அது உலர்ந்துபோயிற்று.

மறுதினம் வெயில் அதிக உக்கிரமா யெரிந்து நெருப்புக்காற்று அடித்தபடியால், தீர்க்கதரிசி தீக்ஷண்யத்தைப் பொறுக்கமாட்டாதவராய் அதைரியங்கொண்டு சாகும்படி கோரினார். அப்போது ஆண்டவர் அவருக்குத் தோன்றி, "நீ நடாததும் வளரச் செய்யாததுமான இந்த அற்ப கொடி வாடினதற்காக இவ்வளவு வருத்தப்படுகிறாயே; இலக்ஷத்து இருபதினாயிரத்துக்கதிகமான ஜனங்களைக்கொண்ட இந்த நினிவே பட்டணத்துக்கு நாம் பொறுத்தல்தராதிருப்போமோ?" என்று அவருக்கு ஆறுதலாக மொழிந்தார்.

வினா.—யோனஸ் எங்கே அனுப்பப்பட்டார்? அவருக்கு என்ன சம்பவித்தது? அவர் எப்படி சேசுக்கிறீஸ்துநாதருக்குக் குறிப்பாயிருக்கிறார்? நினிவே பட்டணத்து ஜனங்கள் என்ன செய்தார்கள்? யோனஸ் நடந்த விதமென்ன? யோனஸ் கட்டினதென்ன? கொடியைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? நினிவே பட்டணத்துக்கு சம்பவித்ததென்ன?

---

## 63-ம் அதிகாரம்

### இஸ்றயேல் இராச்சியத்தின் முடிவு

உ. பி. 3278.) (இ. மு. 722.

அஞ்ஞான பட்டணமாகிய நினிவே, தவஞ்செய்து சர்வேசுரனுக்குப் பிரியப்பட்டது. இஸ்றயேலித்தாரோ நாளுக்குநாள் அதிக துஷ்டராகி, சர்வேசுரனை யெதிர்த்து, அவருடைய தீர்க்கதரிசிகளை நிந்

தித்துவந்தபடியால் சர்வேசுரன் அவர்களை அழித்து விடத் தீர்மானித்துக்கொண்டார்.

சடுதியில் அசீரியாவின் அரசனாகிய சல்மனசார் என்பவன் பலமான சேனையோடு இஸ்ருயேலரின் தலைப் பட்டணமாகிய சமாரியாவை முற்றுகைப்போட்டு, மூன்று வருஷங்களுக்குப்பிறகு அவர்களில் பெருந் தொகையான ஜனங்களை அடிமைகளாக அசீரியாவுக்குக் கொண்டுபோக, மீதியாக நின்றவர்கள் அயல் நாட்டு ஜனங்களோடு சேர்ந்துகொண்டார்கள்.

சமாரித்தார், யூத மதமும் அஞ்ஞான மதமுங் கலந்த ஓர்வித மதத்தை யனுசரித்துவந்தபடியால், யூதர் அவர்களை வேதவிஷயங்களைப்பற்றியும் தங்களை விட்டுப் பிரிந்ததைப்பற்றியும் பகைத்துவந்தார்கள். அதைப்பற்றியே யூதர் நமது இரட்சகரை சமாரித்தான் என்று கூப்பிட்டார்கள். ஏனெனில், அப்பேரால் கூப்பிடுவது பெருத்த அவமானமென்று அவர்கள் எண்ணியிருந்தார்கள்.

சிறையாகக் கொண்டுபோகப்பட்டவர்கள் திரும்பி வாராமல் அசீரியரோடும் அக்கம்பக்கத்து ஜனங்களோடுங் கலந்துபோனபடியால், அவர்கள் சரித்திரம் நமக்கு எட்டாததுடன் பத்து கோத்திரத்தாரைப்பற்றிய எந்த விஷயமும் இந்நாள்வரைக்குந் தெரியவில்லை.

வினா.—இஸ்ருயேலரை யார் அழித்தது? எப்படி? ஜனங்கள் என்னமாய்ப் போனார்கள்? சமாரித்தாருடைய வேதம் எப்பேர்ப்பட்டது? கிறீஸ்துநாதர் ஏன் சமாரித்தானென்று அழைக்கப்பட்டார்?



## 64-ம் அதிகாரம்

உ. பி. 3286.) பெரிய தோபியாஸ் (கி. மு. 714.

சல்மனசாரால் சிறையாக்கப்பட்டவர்களுள் தேவபக்தரான தோபியாஸ் என்ற ஒரு புண்ணியவானிருந்தார். அவர் தம இளம்பிராயமுதற்கொண்டு துஷ்டருடைய சகவாசத்தை விலக்கி சர்வேசுரனுடைய கற்பனைகளை நுணுநுணுக்கமாக அநுசரித்துவந்தார். அவர் தன்னோடு சிறைப்பட்டவர்களுக்கு ஆறுதல் சொல்வதிலும், வறுமைப்பட்டவர்களுக்கு தர்மத்தினால் உதவிசெய்வதிலும், தமது காலத்தைச் செலவழித்துவந்தார். பசித்தவருக்கு அன்னமிடுதல், நிர்வாணிகளுக்கு வஸ்திரங்கொடுத்தல், மரித்தவர்களை இரவில் அடக்கஞ்செய்தல் ஆகிய இவைகளே அவருடைய சாதாரண வேலை.

ஒருநாள் மரித்தவரை அடக்கஞ்செய்து அதிக இளைப்படைந்து தன் வீட்டுக்குப்போய் சுவரோரமாய்ப் படுத்து நித்திரைசெய்தார். அவர் தூங்கும்போது ஒரு குருவியின் எச்சம் கண்ணில்விழ பார்வையையிழந்தார். தோபியாஸ் முறைப்பாடின்றி தன் வருத்தங்களைச் சகித்துக்கொண்டு அச்சோதனையால் பரிசுத்தமடைந்துவந்தார். அந்தகனான தோபியாஸ் யாதோர் வேலையும் செய்யக்கூடாதவராய் இருந்தபடியால் அவருடைய மனைவியாகிய அன்னாள் பிரதிதினம் நெசவு வேலைசெய்து அவரை சவாட்சணைசெய்துவந்தாள். ஒருநாள் அவளுக்குக் கூலிக்குமேல் ஒரு ஆட்டுக்குட்டியுங் கிடைத்தது. அது கத்துகிறதைத் தோபியாஸ் கேட்டு, அது திருட்டுத்தனமாக அகப்பட்ட பொருளாயிருக்குமென்று பயந்து, அது இரு

மாகக் கொடுக்கப்பட்டதென்று நிச்சயமாய் அறிந்துகொள்ளுமட்டும் அதை அவர் தொட்டவரல்ல.

வினா.—தோபியாசைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? அவர் என்ன செய்தார்? தோபியாஸ் எப்படி தன் கண்பார்வையை யிழந்தார்? ஆட்டுக்குட்டியைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது?

---

## 65-ம் அதிகாரம்

### தோபியாஸ் தன் குமாரனுக்குச் சொல்லிய புத்திமதிகள்

தோபியாஸ் அநேக துன்பவருத்தங்களால் சோதிக்கப்பட்டபின்பு தனக்கு மரணகாலம் கிட்டியிருக்கிறதென்று எண்ணி, தன்குமாரனுக்குச் சில புத்திமதிகளைச் சொல்லவேண்டுமென அவரைக் கூப்பிட்டு: "என் மகனே நான் மரித்தபிறகு என்னை அடக்கஞ்செய்யத் தவறாதே. உன் தாயை கனம்பண்ணி அவள் உனக்காகப் பட்ட வருத்தங்களை மறவாதே. அவள் மரித்தபிறகு அவளை என் பக்கத்தில் அடக்கஞ்செய்வாயாக. சர்வேசுரனுக்குப் பயந்து நட. ஒருபோதும் பாவஞ்செய்யாதே. ஆங்காரத்தை அடக்கு. புத்திமானிடத்தில் எப்போதும் ஆலோசனையைக்கேள். புறத்தியான் உனக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புவாயோ அதை அவனுக்குச் செய். உன் ஐவேசுக்குத் தக்கபடி தர்மஞ்செய். உனக்கு அதிகமிருந்தால் அதிகமாய்க் கொடு; கொஞ்சமிருந்தால் கொஞ்சமாய்க் கொடு. ஆனால் தர்மத்தை நல்ல மனதுடன் கொடு. நாம் ஏழைகளென்பது மெய்தான். ஆனால் நாம் சர்வேசுரனுக்குப் பயந்து பாவத்தை விலக்கி நடந்தால் நாம் அதிகமாய் அவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்வோம்" என்றார்.



விருத்தாப்பியான தன் நல்ல தகப்பன் போதித்த போதனைகளைச் சின்ன தோபியாஸ் கேட்டு அழுகையோடு தன் தகப்பனை அரவணைத்துக்கொண்டு அவர் சொன்னபடி நடப்பதாக உறுதிமொழி கொடுத்தார்.

வினா.—தோபியாஸ் தன் மகனுக்குச் சொன்ன புத்தியென்ன? சின்ன தோபியாஸ் என்ன செய்தார்?

---

## 66-ம் அதிகாரம்

### சின்ன தோபியாசின் பிரயாணம்

(கி. மு. 700. உ. பி. 3300.)

இப்புத்தி போதனைக்குப்பிறகு வெகு தொலையான ராஜேஸ் என்னும் ஊரில் தனக்கு வரவேண்டிய பாக்கி பணத்தைத் தண்டிக்கொண்டுவருவதற்காக தோபியாஸ் தன்மகனை அங்கு அனுப்ப விருப்பங்கொண்டார். அவ்வண்ணமே அவனைக் கூட்டிக்கொண்டுபோக வழிதெரிந்த ஒரு துணைவனைத் தேடும்படி சொல்ல, சின்ன தோபியாஸ் ஆளைத் தேடப் போனவிடத்தில் சௌந்திரியவானான ஓர் வாலிபன் பிரயாணத்துக்கு முஸ்திப்பாய் நிற்பதைக்கண்டார். அப்படி நின்றிருந்தவர் இரபாயேல் சம்மனசுதான். ஆனால் தோபியாஸ், அவர் இன்னாரென்று அறியாமல், ராஜேசூருக்கு வழி தெரியுமாவென்று கேட்க, அவர் ஆம் தெரியுமென்று சொன்னார். உடனே அவர் அவ்வாலிபனை இட்டுக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினபோது, அவ்வாலிபன் தான் சின்ன தோபியாசை ராஜேசூருக்குக் கூட்டிக்கொண்டுபோய் மறுபடியும் கொண்டுவந்து வீடுசேர்ப்பதாகச் சொல்லவே, இதற்குப் பெரியதோபி

யாஸ் சம்மதித்து அவர்களிருவரையும் ஆசிர்வதித்து அனுப்பினார்.

அவர்கள் முதல் நாள் பிரயாணஞ்செய்து திகிரிஸ் ஆற்றண்டை வந்தார்கள். தோபியாஸ் கால்கழுவ ஆற்றில் இறங்கினபோது, ஓர் பெரிய மீன் அவனை விழுங்கவந்தது. பயப்படாமல் அதைப் பிடித்து கரை மேல் போடும்படி தூதன் சொல்ல, தோபியாசும் அப்படியே செய்தார். பிறகு தேவதூதனுடைய கட்டளைப்



படி அவர் அதன் ஈரலையும் பித்தையும் எடுத்து மரு துக்காகப் பத்திரப்படுத்திவைத்துக்கொண்டார். பிற மச்சத்தைத் தேவையானமட்டும் சமைத்து சாப்பிட் மீதியை உப்பிட்டு கூடக்கொண்டுபோனார்கள்.

அவர்கள் ஓர் ஊருக்குச் சமீபமாய் வந்தபோ தோபியாசுக்குக் கிட்டின பந்துவாகிய இராகுவே லென்பவன் அவ்வூரிலிருப்பதாகவும், அவனுடை மகள் சாராளைத் தனக்கு விவாகஞ் செய்துகொடு



அவனைக் கேட்கும்படியாகவும் தோபியாசுக்கு தேவதூதன் சொன்னார்.

அவ்வண்ணமே சின்ன தோபியாஸ் இராகுவேல் வீடு வந்துசேர்ந்தார். இராகுவேல் அவரை யின்னாரென்று அறிந்துகொண்டபின் வெகு சந்தோஷப்பட்டு தன் மகளை அவருக்கு மணமுடித்துக்கொடுத்தார். தோபியாஸ் தன் மாமன் வீட்டில் கல்யாண சம்பிரமத்திலிருக்கையில், இரபாயேல் ராஜேசூருக்குப்போய் பணத்தைத்தண்டிக்கொண்டுவந்தார்.

வினா.—இரபாயேலின் சரித்திரத்தைச் சொல்? மீனைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? இராகுவேலைப்பற்றி உனக்கென்ன தெரியும்?

---

## 67-ம் அதிகாரம்

### தோபியாஸ் திரும்பிவந்தது

வீட்டைவிட்டு வந்து வெகு நாளானபடியால் இந்த நெடிய தாமதத்தைப்பற்றி தன் தகப்பன் வருத்தப்படுவாரென்று சின்ன தோபியாஸ் எண்ணி வீட்டுக்குத் திரும்பிப்போக உத்தேசித்தார். ராகுவேல் அவரை நிறுத்த முயன்றும் பயன்படாததால், தன் ஆஸ்தியில் பாதியை மகளுக்குச் சீதனமாகக் கொடுத்து, மகளையும் அவரையும் வாழ்த்தியனுப்பினார்.

கொஞ்சதூரம் வழிநடந்தபிறகு சாராளையும் கூட வந்தவர்களையும் நிதானமாக வரச்சொல்லி, இரபாயேலும் தோபியாசும் முன்னதாகப் போனார்கள். தேவதூதனுடைய உத்தரவுப்படி தோபியாஸ் மீன் பித்தைத் தன்னுடன் எடுத்துக்கொண்டுவந்தார்.

இதற்கிடையில் தோபியாசின் தாய்தந்தையர் தங்கள் குமாரன் வெகுநாளாய் வாராததைப்பற்றி வெகு கவலைகொண்டார்கள். தாயானவள் இடைவிடாமல் அழுதுகொண்டு பிரதிதினமும் ஒரு குன்றின்மேலேறித் தன் மகன் வரவுக்கு எதிர்பார்த்துக்கொண்டிருப்பாள். கடைசியாய் ஒருநாள் தொலைவில் தன் மகன் வருவதைக்கண்டு வீட்டுக்குத் துரிதமாய்ப்போய் தங்கள் குமாரன் வருகிறாரென்று தன் கணவனுக்குச் சொன்னாள். அவரும் இருவரால் கைலாகாய் நடத்தப்பட்டு தன் மகனுக்கு எதிராகச் சென்று, அவரைக் கட்டி முத்தமிட, இருவரும் சந்தோஷத்தால் அழுதார்கள். இதற்குள் சின்ன தோபியாசோடு போன நாய் முன்னதாக ஓடிவந்து வாலை ஆட்டிக்கொண்டு உல்லாசமாய்க் குதித்துக்கொண்டிருந்தது.

சர்வேசுரன் காட்டின தயவுக்காக அவரை யெல்லோருந் தோத்திரஞ்செய்தபின் தோபியாஸ் கொண்டுவந்த மீன் பித்தைத் தன் தகப்பன் கண்களில் தடவினவுடனே அவர் பார்வையடைந்தார். அப்போது அவர் முழந்தாட்படியிட்டு, தன்னைக் குருடனாக்கிப் பின் அதைப் போக்கி சௌக்கியந் தந்ததற்காக சர்வேசுரனைப் புகழ்ந்து தோத்திரம் செய்தார். ஏழு நாளைக்குப் பிறகு சாராள், ஊழியர், ஆடுமாடுகள், ஒட்டகங்கள் முதலியவற்றோடும், காபேலுஸ் என்பவன் கொடுத்த பாக்கிப்பணத்துடனும் வீடுவந்து சேரவே, பெரிய விருந்துசெய்து எல்லோருஞ் சந்தோஷங் கொண்டாடினார்கள்.

விருந்து நாட்கள் முடியவே தன்னோடு துணையாக வந்த வாலிபனுக்கு என்ன வெகுமதி கொடுக்கலாமென்று சின்ன தோபியாஸ் தன் தகப்பனைக் கேட்க,



அவர் தேவதூதனை அழைத்து தங்களுக்குள்ளதில் சரிபாதியைப் பெற்றுக்கொள்ளும்படியாக மன்றாடினார். அவர், தனக்கு ஒன்றுந் தேவையில்லையென்று சொல்லி, அவர்களைப்பார்த்து "சர்வேசுரன் உங்களுக்குக் காட்டின தயைக்காக சந்தோஷித்து அவருக்கு என்றும் நன்றியறிந்த தோத்திரஞ்செய்து, செபத்துடன் ஒருசந்திபிடித்து, பயபக்தியுடன் நடந்துவாருங்கள். சர்வேசுரனுடைய சந்நிதியில் நிற்கும் தேவதூதரில் ஒருவனாகிய இரபாயேலென்பவர் நான்தான். உங்களுக்கு உதவிசெய்யும்படி ஆண்டவரால் அனுப்பப்பட்டேன்" என்று சொன்னார். அதைக்கேட்டு அவர்கள் அச்சங்கொண்டு முகந் தரையில்பட விழுந்தார்கள். ஆனால் தேவதூதன் "பயப்படாதிருங்கள். நானிவ்வாறு உங்களுடன் இருந்தது கடவுளிட்ட கட்டளை. ஆதலால் அவரை வாழ்த்திப் புகழ்ந்து ஸ்துதியுங்கள்" என்று சொல்லி அதரிசனமானார். அவர்களோவெனில் சர்வேசுரனைத் துதித்து அவருடைய அதிசயங்களைப் பிரசித்தப்படுத்தினார்கள். அவர்களிருவரும் சர்வேசுரனுக்கும் மனிதர்களுக்கும் நல்லவர்களாய் நடந்து, பெரும் விருத்தாப்பிய பிராயத்தில் மரணமடைந்தபிறகு தங்கள் பிதாக்களோடு சேர்க்கப்பட்டார்கள்.

வினா.—இராகுவேல் பிரித்துக் கொடுத்ததென்ன? பெரிய தோபியாசும் சின்ன தோபியாசும் சந்தித்தபோது என்ன நடந்தது? தோபியாஸ் கண்பார்வையை யெப்படியடைந்தார்? சாராளைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது? இரபாயேலுக்குக் கொடுக்கப்பட்டதென்ன? அவர் என்ன சொன்னார்?

## 975 வருஷமுதற்கொண்டு கிறீஸ்துநாதர் பிறக்கு மட்டும் நடந்த முக்கிய வர்த்தமானங்கள்

---

### 68-ம் அதிகாரம்

விசேஷ சம்பவங்களின் சுருக்கம்

உ. பி. 3025.)

(கி. மு. 975.

கி. மு. 588ளு வரைக்கும் தாவீதின் கோத்திரத்தாராகிய 18 அரசர்கள் ஒருவர் பின்னொருவராய் யூதராச்சியத்தை ஆண்டுவந்தார்கள். அவர்களிற் சிலர் தேவ ஞானமுள்ளவர்களாய் சர்வேசுரனுக்குப் பயந்து, தங்களுக்கு அனுப்பப்பட்ட தீர்க்கதரிசியின் சொல் கேட்டு நடந்துவந்தார்கள். ஆனால் அனேகர் துஷ்டராய் விக்கிரக ஆராதனைசெய்து ஜனங்களைப் பாவவழியில் நடத்திவந்தார்கள்.

இவர்களுக்குத் தண்டனையாக 606ளு பபிலோனியரால் யெருசலேம் பட்டணம் பிடிபடவும், யூதரில் பிரதானமானவர்கள் சிறைபடவுஞ் சர்வேசுரன் சித்தமானார். 18 வருஷங்களுக்குப்பிறகு—அதாவது கி. மு. 588-ம் வருஷத்தில்—யூதராச்சியத்தின் சகல பிரசைகளும் பபிலோனுக்குக் கொண்டுபோகப்பட, யூதராச்சியம் நிர்மூலமாகிவிட்டது.

யூதர் தங்கள் பாவங்களை நினைத்து, மனஸ்தாபப்பட்டு மனந்திரும்புமட்டும் 70 வருஷமாக பபிலோனியாவில் அடிமைகளாகவேயிருந்தார்கள். அக்காலத்தில் அவர்கள் தீர்க்கதரிசிகள் போதனையால் விசுவாசத்தில் உறுதிப்பட்டு தேவபக்தி மேலிட்டு, தங்கள்பேரில்



வெற்றிபெற்ற ஜனங்களுக்கு புத்திசொல்லி உலக இரக்ஷகரின் வருகையை அவர்களுக்குத் தெரியப்படுத்தினார்கள்.

70 வருஷங்களுக்குப்பிறகு—அதாவது கி. மு. 636-ம் வருஷத்தில்—சர்வேசுரன் யூதரை மறுபடியும் தங்கள் சுயதேசத்துக்கு வரச்செய்தார். அவர்கள் வந்து சேர்ந்தவுடனே யெருசலேமையும், தேவாலயத்தையும் திரும்பக் கட்டி 200 வருஷகாலம் சமாதானமாய் சீவித்துவந்தார்க்ள்.

மகா அலெக்சாந்தரின் மரணத்துக்குப்பிறகு—அதாவது கி.மு. 323-ம் வருஷத்திலிருந்து—அன்னியனாகிய எரோது என்பவன் தாவீதின் சிங்காதனம் ஏறும் வரையில் மறுபடியும் யூதர் பலஜாதியார் கையில் சிக்கி துன்பப்பட்டுக்கொண்டுவந்தார்கள். யாக்கோபின் தீர்க்கதரிசனப்பிரகாரம் கிறீஸ்துநாதர் பிறக்கவேண்டிய காலம் எரோதுடன் ஆரம்பித்ததாமே.

வினா.—தாவீதுக்குப்பிறகு வந்த அரசரைப்பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது? யூதர் எப்போது பபிலோனியாவுக்குக் கொண்டுபோகப்பட்டார்கள்? எவ்வளவு காலம் சிறைப்பட்டிருந்தார்கள்? யூதர் எப்போது திரும்பிவந்தார்கள்? திரும்பக் கட்டப்பட்டவை எவை?

---

### 69-ம் அதிகாரம்

யூத இராச்சியத்தின் அரசர்களாகிய ரொபோவாமுதல் எசேக்கியாஸ்வரைக்கும்

தைரியசாலியும் துஷ்டனுமான அபியா என்பவன் தன் தகப்பனாகிய ரொபோவாமுக்குப்பிறகு யூத இராச்சியத்திற்கு அரசனானான். அவனுக்குப்பிறகு

ஆசா என்பவன் சிங்காதனமேறி துவக்கத்தில் நீதியோடு ஆண்டு, அனேக சிறந்த வெற்றிகளை படைத்து பிறகு சர்வேசுரனைக் கைவிட்டு மரித்தான்.

முன்சொன்ன மூவரிலும் நல்லவனாகிய யோசபாத் என்பவன் ஆசாவுக்குப்பிறகு பட்டத்திற்குவந்தான். அவன் விக்கிரக ஆராதனையைத் தொலைத்து, ஜனங்களை நடுக்கேட்கவும், அவர்களுக்கு வேதத்தைப் படிப்பிக்கவுந் தக்க தேவ பக்தர்களான மனிதர்களை யேற்படுத்தினான். அவனுடைய பயபக்தியைப்பற்றி அவன் தன் சத்துருக்களனைவரையும் வெல்ல சர்வேசுரன் உதவியாயிருந்தார்.

யோசபாத்துக்குப்பிறகு கொடியனும் விக்கிரக ஆராதனைக்காரனுமாகிய ஜோராம் என்ற அவனுடைய மகன் சிங்காதனமேற, அவனுக்குப்பிறகு ஒக்கோசியாஸ் என்ற துஷ்டன் வந்தான். இவனுக்குப்பிறகு அவன் மனைவியாகிய அத்தாலியா என்பவள் ஏழு வருஷம் ஆண்டு சகலவித அக்கிரமங்களையும் நடத்திவந்தாள்.

அவள் ஒக்கோசியாசின் பேரனாகிய ஜோவாஸ் என்பவனைத் தவிர இராஜகுடும்பத்திலுள்ள சகல பிள்ளைகளையும் கொலைசெய்தாள். ஜோவாஸ் என்பவன் ஜோயாதா என்ற பெரிய குருவால் ஒளித்துவைக்கப்பட்டு, பிற்காலத்தில் சிங்காதனமேறி, ஜோயாதா என்பவர் உயிரோடு இருக்குமட்டும் புண்ணியவானும் தேவ பத்தியுள்ளவனும் இருந்து, பெரிய குரு மரணமடைந்தபின் அவனும் தன் முன்னோரைப்போல விக்கிரக ஆராதனைக்காரனானான்.

அமாசியாஸ், ஒசியாஸ், ஜோவாதாம் ஆகிய இவர்கள் முறையே யூதாவை ஆண்டுவந்தார்கள். இவர்கள்



சில விஷயங்களில் தங்கள் முன்னோரைவிட நல்லவர்களாயினும் விக்கிரக ஆராதனையையே நடத்திக் கொண்டுவந்தார்கள்.

ஒரு தடவை ஒசியாஸ் என்பவன் குருத்துவ உத்தியோகத்தை வகிக்க விருப்பங்கொண்டு, தேவாலயத்தில் பிரவேசித்து ஆண்டவருக்கு தூபங்காட்ட எத்தனித்தபோது, குருக்கள் அவனைத் தைரியமாய்த் தடுத்து பலிபீடத்துக்கு வெளியே போகும்படி கற்பித்தார்கள்.

ஒசியாஸ் அதிககோபங்கொண்டு தன் கையிலிருந்த தூபகலசத்தால் குருக்களை அடிக்கப் பார்த்தான். அச்சணமே தேவ சாபத்தால் அவனுக்குக் குஷ்டவியாதி உண்டாக, அதினால் அவன் பயங்கரமான மரணத்துக்குள்ளானான். குருத்துவமில்லாதவர்கள் குருத்தொழிலைச் செய்யத்துணிவதால் சர்வேசுரன் அப்பேர்ப்பட்டவர்களை யெப்படி தண்டிக்கிறாரென்று இதனால் தெளிவாய் விளங்குகிறது.

வினா,—ரொபோவாமுக்குப்பின் வந்தவர்களைப்பற்றி சொல்லியிருப்பதென்ன? ஒசியாசைப்பற்றிச் சொல்லப்பட்டிருப்பதென்ன?

---

## 70-ம் அதிகாரம்

### தேவபக்தனான எசேக்கியாஸ் அரசன்

(கி. மு. 699-உ. பி. 3301.)

துஷ்டனும் விக்கிரக ஆராதனைக்காரனுமான ஜோவாதாமின் மகனான ஆக்காஸ் என்பவனுடைய மரணத்துக்குப்பிறகு யோக்கியவானும் தேவபக்தனுமான எசேக்கியாஸ் என்பவர் சிங்காதனமேறினார். தாவீ

தைப்போல் இவரும் சர்வேசுரனுடைய இருதயத்திற்கு ஒத்தவராய் நடந்து, தேவாலயத்தை சுத்திகரித்து விக்கிரக ஆராதனையை நீக்கினபடியால், இவரைச் சர்வேசுரன் ஆசீர்வதிக்க, யூத ராச்சியம் வல்லமையிலும் செல்வத்திலும் கீர்த்திபெற்றோங்கியது.

அவர் அரசாளும்போது அசீரியாவின் அரசனாகிய சென்னகெரிப் என்பவன் யெருசலேம் பட்டணத்தை முற்றுகையிட்டான். ஆயினும் எசெக்கியாஸ் பயப்படாமல் தேவாலயத்துக்குப்போய் ஆண்டவரைப் பிரார்த்தித்ததுடன், குருக்கள் துக்கவஸ்திரத்தோடு இசையாஸ் தீர்க்கதரிசியிடம்போய் தங்களுக்காக அவரும் சர்வேசுரனிடம் பிரார்த்திக்கவேணுமென்று கேட்டுக்கொள்ள அவர்களை அனுப்பினர்.

ஆண்டவர் அவருடைய மன்றாட்டுக்கிரங்கி அன்றிரவில் தமது தூதனை அசீரியருடைய பாளயத்துக்கனுப்ப, மறுநாள் காலையில் இலக்ஷத்தெண்பதினாயிரம் பேர் கொல்லப்பட்டுக்கிடந்தார்கள். மீதியாக நின்றவர்கள் வெருண்டு ஓடும்போது மடிந்தார்கள்.

அந்நாட்களில் எசெக்கியாஸ் கடினவியாதியாய் விழுந்தபோது, இசையாஸ் தீர்க்கதரிசி அவரிடம்வந்து: "நீர் மரணமடையுங் காலம் கிட்டினதால் உம்முடைய காரியங்களை ஒழுங்குபடுத்திக்கொள்ளவேண்டும்" என்று சொன்னார். அரசன் அதைக் கேட்டு பயந்து தேவாலய பக்கமாய்த் தம் முகத்தைத் திருப்பி வெகு உருக்கமாய் ஆண்டவரை மன்றாட, இன்னும் பதினைந்து வருடம் அவர் ஜீவித்திருக்கும்படியாக சர்வேசுரனும் சித்தங்கொண்டார். அவருடைய ஆளுகை யூத சரித்திரத்திற் சிறந்து விளங்கினவைகளில் ஒன்றாயிருந்ததென்கலாம்.



வினா.—எசெக்கியாசைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? சென்னகெரிப் எப்படி தோல்வியடைந்தான்? எத்தனைபேர் கொல்லப்பட்டார்கள்? எசெக்கியாசுடைய ஆயுளைப்பற்றிய விஷயமென்ன?

---

## 71-ம் அதிகாரம்

### பாபிலோன் அடிமைத்தனத்துக்குப்பின் வந்த அரசர்கள்

எசெக்கியாசுக்குப்பிறகு அவருடைய மகனாகிய மனா சேஸ் பட்டத்துக்கு வந்தான். இவனோ துஷ்டன். அநியாயமாய் மாசற்றவர்களுடைய இரத்தத்தைச் சிந்தினான்; அவனுடைய தகப்பன் அழித்த பொய்த்தேவர்களின் பீடங்களை மறுபடி கட்டி, தன் துஷ்ட நடத்தையால் பிரசைகளை அஞ்ஞானிகளைவிட அதிக பாவாக்கிரமிகளாகச் செய்தான். அவனுடைய ஆக்கிரமங்களுக்குத் தண்டனையாக தேவ சித்தத்தால் அந்த துஷ்ட அரசன் அசீரியரால் சிறைபிடிக்கப்பட்டு பபிலோனுக்கு அடிமையாகக் கொண்டுபோகப்பட்டான். சிறையில் அவன் தன் பாவங்களுக்காகக் கஸ்திப்பட்டுத் தபஞ்செய்ததினால், சர்வேசுரன் அவன்மேல் இரக்கங்கொண்டு மறுபடியும் அவனை யெருசலேமுக்கு வரும்படி செய்ய, முன் அவன் காட்டிய துர்மாதிரிகைக்குப் பரிகாரஞ்செய்யப் பிரயாசைப்பட்டான்.

அவனுடைய மகன் ஆமோன் சிங்காதனமேறி துஷ்டனாகவேயிருந்தான். ஆனால் அவனுடைய பேரனாகிய ஜோசியாஸ் என்பவன் நல்லவன். இவன் காலத்தில் விக்கிரக ஆராதனையை வேரோடு நீக்கிவிட்டு சத்திய வேதத்தை நிலைநிறுத்தினான். யூதராச்சியத்துக்கு நேரிடவிருந்த கேடுகளை அவன் காணாதபடிக்கு அவன்

அரசுபுரிந்த சொற்பகாலமான ஒன்பது வருஷத்துக்குப் பின் அவனை தம்மிடம் சர்வேசுரன் அழைத்துக்கொண்டார். அவனுக்குப்பிறகு ஜூவாக்கேஜ், ஜூவாக்கிம், செதேகியாஸ் என்ற துர்மார்க்கர் சிங்காதனமேறி சர்வேசுரனிடமிருந்து பிரஜைகளைப் பிரித்து, அவர்களை விக்கிரக ஆராதனைக்காரர்களாக்கினபடியால், பபிலோனிய அடிமைத்தனத்துக்கு உட்பட்டார்கள். சிலபேர் தவிர மற்ற யூதரெல்லோரும் தேவசாபத்துக்குப் பாத்திரவான்களானார்கள். எப்படியெனில்: யூதருடைய சரித்திரத்தை நாம் வாசிக்கும்போது அவர்கள் பாவாக்கிரமத்தில் ஆழ்ந்து நிலைநின்றதால், இரட்சகராகிய கிறீஸ்துநாதரை அங்கீகரியாமல் அவரைச் சிலுவையிலறைந்து கொல்லும் துரோகத்தையும் கட்டிக்கொள்ள பயப்படாமற்போனார்கள். அதற்குத் தண்டனையாக சர்வேசுரனால் கைவிடப்பட்டார்களென்று தெரியவருகிறது.

வினா.—மனுசேசைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? சர்வேசுரன் அவனை யெப்படி தண்டித்தார்? அவன் தன் வாழ்நாளை யெப்படி முடித்தான்? ஜோசியாசைப்பற்றி சொல்லப்பட்டிருப்ப தென்ன? யூதரைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது?

---

## 72-ம் அதிகாரம்

### தீர்க்கதரிசிகள்

ரொபோவாமுடைய ஆளுகை முதற்கொண்டு செதேகியாஸ் என்பவனுடைய அடிமைத்தனம்வரைக்குமுள்ள காலத்தில் விசேஷ வல்லமையும், தேவ வரமும் உடைத்தான தேவபக்தர்களைச் சர்வேசுரன் அனுப்பினார். அவர்கள் ஜனங்களுக்குத் தவத்தைப் போதித்து, தேவ கற்பனையைமீறி நடக்கும் அரசருக்கு வரவிருக்கும் தண்டனையைத் தெரியப்படுத்தி, அவர்களைப் பயமுறுத்தவும் சர்வேசுரனால் அனுப்பப்பட்டவர்களாமே. இவர்களே தீர்க்கதரிசிகளென்னப்பட்டவர்கள்.



யூத அரசாட்சியின் ஆரம்பகாலத்தில் தோன்றின தீர்க்கதரிசிகளில் முக்கியமானவர்கள் ஜோயெல், மிக்கேயாஸ், இசெயாஸ் என்பவர்களே.

இந்தத் தீர்க்கதரிசிகள் சாதாரணமாக ஏழைகளாயினும் தேவ அதிகாரமுள்ளவர்களாய், அரசர்களுடைய பாவதோஷங்களைப் பயமின்றி எடுத்துக்காட்டி, அவர்களைக் கண்டித்துவருவார்கள். அவர்களுடைய பிரசங்கத்தால் அனேகர் மனந்திரும்பி சிலகாலம் நெறியாய் நடந்தார்கள். அவர்கள் பாவத்துக்கு விரோதமாய்ப் போராடினதாலும், அரசர்களுடையவும் பிரசைகளுடையவும் அக்கிரமங்களை வெளிப்படுத்திக் கண்டித்தபடியாலும், அவர்களிற் சிலர் கொல்லப்பட்டார்கள். அவர்கள் மரணமடைந்தபோதிலும் வேதப்பிரமாணத்தை அனுசரித்துவந்த நீதிமான்களின் இருதயங்களில் ஷை தீர்க்கதரிசிகளின் போதனை ஸ்திரமாய்ப் பதிந்ததுடன், வரவிருக்கும் இரட்சகரைப்பற்றிய வாக்குத்தத்தம் பாரம்பர முறையாய் ஜனங்களுக்குத் தெரிந்திருந்ததினால், அவர்கள்மூலமாக மற்ற ஜனங்கள் இரக்ஷகரில் நம்பிக்கைகொள்ளப் பாத்திரவான்களானார்கள்.

வினா.—தீர்க்கதரிசிகள் என்பவர்கள் யார்? அதிக கீர்த்திபெற்றவர்கள் யார்? அவர்கள் செய்த பிரசங்கமென்ன? அவர்களிற் சிலர் எப்படி மரணமடைந்தார்கள்?

## 73-ம் அதிகாரம்

### பபிலோனிய அடிமைத்தனம்

தேவபக்தனான ஜோசியாஸ் அரசனின் மரணத்திற்குப்பிறகு, நபுகோதோனோசோர் என்னும் பபிலோனிய அரசன் யெருசலேமுக்கு முற்றுகை போட்டான். அவன் அப்பட்டணத்தைப் பிடித்துக் கொண்டபோது, யெருசலேமின் மூப்பரையும், தேவாலயத்தின் திருப்பாத்திரங்களையும் பபிலோனியாவுக்குக் கொண்டுபோனான். இது கி. மு. 606-ம் வருஷத்தில் சம்பவித்தது. இக்காலத்தில் தான் பபிலோனியாவின் அடிமைத்தனம் துவக்கமாயிற்று.

இது நடந்த மூன்று வருஷத்திற்குப்பிறகு நபுகோதொனோசோர் மறுபடியும் யெருசலேமுக்குவந்து, ஜெக்கோனியாவென்கிற அரசனையும், அநேக ஜனங்களையும் அடிமைகளாக்கி, திரளான திரவியங்களையுங் கொள்ளைகொண்டு, யூத இராச்சியத்தில் மீதியாக நின்ற பாகத்தை யாளும்படி செதேசியாசைவிட்டுத் திரும்பிவிட்டான். செதேசியாஸ் கலகஞ்செய்ய, நபுகோதொனோசோர் மூன்றுந்தடவையும் படையெடுத்து யெருசலேமை யழித்து, சிறப்புற்றதும் மகத்துவத்துக் குரியதுமான சலோமோனுடைய தேவாலயத்தைச் சுட்டெரித்து, செதேசியாசின் கண்களைப் பிடுங்கி, விலங்கிட்டு, அவனையும் அவனுடன் யூத ஜனமனைத்தையும் அடிமைகளாக்கி, கி. மு. 558-ம் வருஷம் பபிலோனியாவுக்குக் கொண்டுபோனான்.

இக்காலத்திலிருந்த எரேமியாஸ் தீர்க்கதரிசி அச்சனங்களுக்கு நேரிடவிருந்த நிர்மூலத்தைக் குறித்து ஏற்கெனவே எச்சரித்து, ஏகாந்தமாகி வெகு துக்கத்தோடு யெருசலேமைக் குறித்து அழுது பிரலாபித்து,



அடிமைத்தனத்தின் அடையாளமாக தன் கழுத்தில் சங்கிலியைக் கட்டிக்கொண்டு அழுகையோடு ஜனங்களுக்குப் புத்திசொல்லிவந்தும், அந்த நிர்ப்பாக்கிய ஜனம் அவருடைய புத்திமதிக்குக் காதுகொடாமல், அவரை நிந்தித்துத் துன்பப்படுத்தினார்கள். கடைசியாய் யெருசலேம் நிர்மூலமானபின், எரேமியாஸ் அங்கு விடப்பட்ட ஜனங்களுக்கு ஆறுதல் சொல்லித் தேற்றி, பூர்வம் சிறப்புற்றோங்கிய பட்டணம் பாழடைந்துகிடப்பதைக்கண்டு பிரலாபித்துவந்தார்.

அவர் துக்கப்பெருக்கத்தினால் புலம்பிப் பெருமூச்செரியும்போது, "ஆ! மொரியா பர்வதத்து வழி எவ்வளவு வியாகுலம் நிறைந்ததாயிருக்கிறது; ஐயோ! இப்போது உற்சவத்திற்கு வருபவர் ஒருவருமில்லையே; பட்டணத்து வாசல்களெல்லாம் அழிந்துவிட்டனவே! ஆசாரியர்கள் அழுகிறார்கள்! கன்னியர்கள் ஆபரணமின்றியிருக்கிறார்கள்! ஓ! இவ்வழியாய்ப் போகிறவர்களே! எனக்கிருக்குந் துக்கத்திற்குச் சமமான துக்கம் வேறுண்டோவென்று பாருங்கள்! ஹா! மகத்துவம் பொருந்தியதும், சிறப்பலங்காரத்தில் ஒப்பற்றதும், உலகத்தின் மகிழ்ச்சியுமாகிய நகரம் இதுதானோ!" என்று சொல்லி பிரலாபித்துப் புலம்புவார்.

அடிமைத்தனத்தில் யூதர் தங்கள் பாவங்களுக்குத் தபசுசெய்து, மெய்யான மனஸ்தாபப்பட்டு, கர்த்தரைச் சினேகித்தபடியால், நபுகோதொனோசோர் இராசா அவர்களைப் பட்சமாய் நடத்திவந்தான். ஆயினும், அவர்கள் தங்கள் சுய இராச்சியம் திரும்பிப் போகும்படி அழுது புலம்பிக்கொண்டிருந்தார்கள்.

வினா.—நபுகோதொனோசோரைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது? அவன் எப்போது திரும்பிவந்தான்? அவன்

தன்னுடன் கொண்டுபோனதென்ன? அங்கு யாரை நிறுத்தினான்? யெருசலேமுக்குந் தேவாலயத்திற்கும் என்ன நேரிட்டது? எரேமியாசைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது? அவருடைய பிரலாபத்தைப்பற்றி சொல்லியிருப்பதென்ன? அடிமைத்தனத்திலிருந்த யூதரைப்பற்றி சொல்லப்பட்டிருப்பதென்ன?

---

## 74-ம் அதிகாரம்

### தானியேலும் மூன்று வாலிபரும்

உ. பி. 3410.) (கி. மு. 590.

பபிலோனிலிருந்த அடிமைகளுக்குள் இராஜவம்சத்தைச்சார்ந்த பல வாலிபரிருந்தார்கள். இவர்களுக்குள் தானியேலும், அசாரியாஸ், அனனியாஸ், மிசாயேல் என்ற அவருடைய மூன்று தோழருமிருந்தார்கள். அவர்களுடைய சௌந்தரியத்தையும், புத்தி விவேகத்தையும்பற்றி நபுகோதொனோசோர் இராஜா அவர்களைத் தன் அரண்மனையில் நிறுத்திக்கொண்டு நாடோறும் அவர்களுக்கு இராஜபோஜனங் கொடுத்துப் போஷிக்கும்படியாகத் தன் காரியஸ்தனுக்குக் கட்டளை கொடுத்திருந்தான்.

யூத பிரமாணத்தின்படி விலக்கப்பட்டிருந்த இறைச்சிப் பதார்த்தங்களைச் சாப்பிடும்படி நேரிடுமென்று பயந்த இந்த வாலர் தங்கள் மேல்விசாரணைக்காரனிடம்போய் மரக்கறி முதலிய பதார்த்தங்களையும், நல்ல ஜலத்தையுங் கொடுத்து, பத்து நாள் பரீஷை செய்து, அந்த கெடுவுக்குள் இராஜபோஜனத்தை புசிப்பவர்களைவிட தாங்கள் அதிக புஷ்டியாகவும், வடிவுள்ளவர்களாகவுங் காணப்படாவிட்டால் அவன் கொடுக்கு



போஜனபதார்த்தத்தையே புசிப்பதாக விண்ணப்பஞ் செய்தார்கள். மலாசார் என்னும் மேல்விசாரணைக்காரனும் அதற்கு ஒத்துக்கொண்டு அவர்கள் விருப்பத்தின்படி செய்ய, பத்து நாள் இராஜபோஜனத்தைப் புசித்தவர்களைவிட இவர்கள் அதிக புஷ்டியாகவும், வடிவழகுள்ளவர்களாகவுமிருக்கக்கண்டு, அந்நாள்முதல் அவர்கள் கேட்டுக்கொண்ட சுத்த போஜனத்தையே கொடுத்து வந்தான்.

சர்வேசுரன் மற்றவர்களைவிட இவர்களுக்கு மிகுந்த வடிவழகையும், புத்தி ஞானத்தையுங் கொடுத்தபடியால், நபுகோதொனோசோர் இராஜா அங்கிருந்த சகல வாலரையும்விட இவர்கள்மட்டில் அதிக பிரியங்கொண்டு, இவர்களைத் தன் அரண்மனை உத்தியோகத்தில் அமர்த்திக்கொண்டான்.

வினா.—தானியேலையும் அவர் துணைவரையும்பற்றிய சரித்திரத்தைச் சொல்?

---

## 75-ம் அதிகாரம்

### தானியேல் சுசானாளைக் காப்பாற்றினது

உ. பி. 3410.) (கி. மு. 590.

பபிலோனியா அடிமைத்தனத்தில் யூதருக்குள் தர்மகுணமுள்ள சுவக்கீன் என்பவனும், புண்ணியவதியும் சௌந்தரியவதியுமான அவன் மனைவியுமிருந்தார்கள். அவன் வீட்டில் இரு யூத மூப்பர் வழக்குகளை விசாரித்துவந்தபடியால் யூதரில் அநேகர் அவன் வீட்டுக்கு வருவார்கள். சுவக்கீனுடைய பலவகை பழத்தோட்டம் அருகாமையிலிருந்ததைப்பற்றி சுசானாள்

பகலில் அதில் உலாவிவருவாள். இதை அறிந்திருந்த அந்த இரு துஷ்ட விருத்தாப்பியர் ஒருநாள் தோட்டத்தில் ஒளிந்துகொண்டிருந்து, சுசானாள் உலாவ வரும்போது, அவளை பாவத்திலிழுக்கப் பிரயாசைப்பட்டும் அதற்கு அவள் சம்மதியாதபடியால், அவள் பாவஞ் செய்தாளென்று மற்ற ஜனங்களுக்குச் சொல்லித் தண்டிப்பதாக அவளை பயமுறுத்தினார்கள்.

இதைக்கண்ட சுசானாள் கலங்கி "நான் இவர்கள் துர்க்கருத்துக்குச் சம்மதித்தால், சர்வேசுரன் சமுகத்தில் குற்றவாளியாவேன்; சம்மதியாவிட்டால் இவர்கள் கையினின்று தப்பமாட்டேன். ஆகிலும் பாவஞ்செய்வதைவிட மாசற்றவளாய் இவர்கள் கையில் சிக்கிக்கொள்வது உத்தமம்" என்று தீர்மானஞ்செய்துகொண்டு, உரத்த சத்தமாய்க் கூப்பிட, இரு கிழவரும் அபயசத்தமிட்டார்கள். சத்தத்தைக் கேட்ட ஜனங்கள் ஓடிவந்தார்கள். அப்போது அந்த இரு கிழவரும் சுசானாளின்பேரில் அபாண்ட குற்றஞ்சாட்டினார்கள். மறுநாள் சுசானாள் விசாரணைக்கு வரவழைக்கப்படவே, தன் பெற்றோர் சிநேகிதர் முதலியவர்களோடு சேர்ந்து, தனக்கு வந்த அவமானத்தைப்பற்றி அழுதுகொண்டு விசாரணைக்குப் போக, கிழவர்கள் அவளைக் குற்றவாளியாக்கி சாவுக்குக் கையளித்தார்கள். சுசானாளோ சர்வேசுரனைப் பார்த்து மன்றாட, அவரும் அவள் மன்றாட்டுக்கிரங்கினார்.

சுசானாளைக் கல்லாலெறிந்து கொல்லும்படி கூட்டிக்கொண்டுபோகும்போது, தானியேல் தேவ ஏவுதலால் காரியத்தை யறிந்துகொண்டு, "இம்மனிதர் பொய்சாக்ஷி சொன்னபடியால் மறுவிசாரணை செய்யவேண்டும்" என்று சொல்லவே, ஜனங்கள் சந்தோஷத்துடன்



திரும்பினார்கள். அப்போது, தானியேல் அவ்விரு கிழவரையுந் தனித்தனியாக பிரித்துவைத்து, ஒருவனை நோக்கி தாட்டீகமாக "எந்த மரத்தடியில் சுசானாள் பாவஞ்செய்யக் கண்டாய்" என்று கேட்க, அவன் "அத்திமரத்தடியில்" என்றான். மற்றொருவனை வரவழைத்து அதேபிரகாரம் வினவ, "ஒலீவ் மரத்தடியில்" என்றான். புண்ணியவதியான சுசானாளுக்கு விரோதமாய் அவர்கள் சொன்ன பொய்சாக்ஷிகள் ஒன்றுக்கொன்று விருத்தமாயிருப்பதைக்கண்ட ஜனங்கள், தம்மை நம்பினவர்களைக் கைவிடாது இவ்வாறு அற்புதமாகக் காப்பாற்றுஞ் சர்வேசுரனுக்குத் தோத்திரஞ்செய்தார்கள். அந்நாள்முதல் தானியேலை ஜனங்கள் கனமாய் மதித்துவந்தார்கள்.

வினா.—சுசானாளின் சரித்திரத்தைச் சொல்? சுசானாளை மறுநாள் எவ்விடத்துக்குக் கொண்டுபோனார்கள்? எதற்காக அவளுக்கு மரணதண்டனை யிடப்பட்டது? சுசானாளைக் காப்பாற்றினது யார்? எப்படி?

---

## 76-ம் அதிகாரம்

### அக்கினிச்சூளையில் போடப்பட்ட மூன்று வாலர்

(கி. மு. 583. உ. பி. 3417.)

நபுகோதோனோசோர் ஓர் பொன் விக்கிரகஞ்செய்து அதை யோர் மேடைமீது ஸ்தாபித்து, தன் ராஜ்ஜியத்திலுள்ள பிரபுக்களும் பிரஜைகளும் அதற்கு ஆராதனைசெய்யவேண்டுமென்று கட்டளையிட்டான். அனனியாஸ், மிஸாயேல், அசாரியாஸ் தவிர மற்றவர்களெல்லோரும் அவன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்கள். அம்மூன்று வாலிபரும் விக்கிரகத்தைக் கும்பிடாமலிருப்

பதை பபிலோனியர் கண்டு, அதைப்பற்றி அரசனுக்குத் தெரிவித்தார்கள்.

அவர்கள் அதை ஆராதிக்கும்படி அரசன் தன்னாலானமட்டும் பிரயாசைப்பட்டும் முடியாமற்போனதால், கோபங்கொண்டு சாதாரணமாயிருப்பதைவிட ஏழுமடங்கு அதிக சூடுகொள்ளும்படியான ஒரு தீச்சூளையை மூட்டி அதில் அவ்வாலரை எறிந்துவிடும்படியாகக் கட்டளையிட்டான். கட்டளைப்படி அவ்வாலரைத் தூக்கி நெருப்பில் போட்டவர்கள் தீயால் எரிக்கப்பட்டு மடிய, வாலிபரோ யாதொரு அற்ப தீங்குமின்றி ஆச்சரியமாய்க் காப்பாற்றப்பட்டார்கள். எப்படியெனில், ஒரு தேவதூதன் இறங்கிவந்து அவர்களோடிருந்தார். குளிர்ந்த காற்று சூளைக்குள் வீசிக்கொண்டிருந்தது. அவர்களுடைய தலைமயிரில் ஒன்றுவது நெருப்பால் கருகாமலிருந்ததுமன்றி, வஸ்திரங்களுக்கும் நெருப்பு பிடித்ததில்லை.

அரசன் இவ்வதிசயத்தைக் கேட்டு, தானே நேரில் வந்துபார்த்து: "நாம் மூன்று பேரை ஒன்றாய்ச் சேர்த்துக்கட்டி நெருப்பிலெறிந்திருக்க, அதோ! நாலுபேர் உலாவிக்கொண்டிருக்கிறார்கள்; நாலாவது ஆள் தேவகுமாரனைப்போலிருக்கிறான்" என்று பிரமிப்புடன் சொல்லி, "தேவ ஊழியரே வாருங்கள்" என்று கூப்பிட்டழைத்தான். அவர்களும் வெளிப்பட நெருப்பால் அற்பத் தீங்குமின்றியிருப்பதை அரசன் கண்டு, பாவஞ்செய்வதைவிட சாக தயாராயிருந்த தமது ஊழியரைக் காப்பாற்றின சர்வேசுரனைத் துதித்து ஆராதித்தான். இதுவுமன்றி யூதரின் தேவனை ஒருவருந் தூஷணிக்கக்கூடாதென்று ஒரு சட்டம் ஏற்படுத்தி, அம்மூன்று வாலிபருக்கும் உயர்ந்த உத்தியோகங்களை யளித்தான்.



வினா.—பொன் விக்கிரகத்தைப்பற்றிய சங்கதியைச் சொல்? மூன்று வாலிபருக்கு என்ன செய்தார்கள்? அவர்கள் எப்படி உயிர்தப்பினார்கள்?

---

## 77-ம் அதிகாரம்

### தானியேலும் பல்தசார் அரசனும்

உ. பி. 3466.) (கி. மு. 534.

நபுகோதோனோசோர் இறந்தபிறகு அவனுடைய பேரன் பல்தசார் என்பவன் பபிலோனை ஆண்டான். அவன் தன் பிரபுக்களுக்கும் அவர்கள் மனைவிகளுக்கும் ஒரு பெருத்த விருந்திட்டான். அவர்களெல்லோரும் இரசத்தைக் குடித்து உல்லாசங்கொண்டிருக்கையில், தன் பாட்டன் நபுகோதோனோசோர் யெருசலேம் தேவாலயத்தினின்று கொண்டுவந்த பொற்பாத்திரங்களைத் தன்னிடம் கொண்டுவரச்செய்து, அவைகளில் அவனும் விருந்தாடிகளும் பானஞ்செய்தார்கள். அவர்கள் அப்படிக் குடித்துக்கொண்டிருக்கும்போது, அற்புதமாகக் கையொன்று அங்கு காணப்பட்டு, சுவரின்மேல் சில வார்த்தைகளை வரைந்தது. பல்தசார் அதைக் கண்டு அதிக கலக்கமுந் திகிலுங்கொண்டு, குறி சொல்லுகிறவர்களை வரவழைத்துக் கேட்க, அக் கையெழுத்தின் அர்த்தம் அவர்களுக்குத் தெரியாமற்போனதால், கடைசியாகத் தானியேலை வரவழைத்தான்.

அவ்வார்த்தைகள்: மானே, தேக்கேல், பாரேஸ் என்பவைகளாம். அதன் அர்த்தம்: "மானே — உன் இராச்சியபாரத்தின் நாட்கள் கணக்கிடப்பட்டு சீக்கிரத்தில் முடிவுபெறும்; தெக்கெல் — உன் புண்ணியங்

களை நிறுத்துப்பார்த்ததில் குறைவுபட்டதாகத் தெரிகிறது; பாரேஸ்—உன்னுடைய இராச்சியம் பிரிக்கப்பட்டு மேதியருக்கும், பாரசீகருக்கும் கொடுக்கப்பட்டது" என்று தானியேல் விபரமாய்ச் சொன்னார்.

அன்று இராத்திரியே இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறினது. மேதியரும் பாரசீகரும் அவ்விராத்திரியில் பபிலோனில் பிரவேசித்து, பல்தசாரைக் கொன்று இராச்சியத்தைத் தங்களுக்குள் பிரித்துக்கொள்ள, மேதியனான தரையஸ் என்பவன் பபிலோனை ஆளத்துவக்கினான்.

வினா.—பல்தசாருக்கு என்ன சம்பவித்தது? கையெழுத்து என்ன? அதை யார் விவரித்துச் சொன்னது? அது நிறைவேறினதா? எப்படி?

---

## 78-ம் அதிகாரம்

### தானியேலும் பேல் விக்கிரகமும்

பாரசீகத்தின் அரசனாகிய சிருஸ் என்பவன் வெகு சீக்கிரத்தில் பபிலோனுக்கு அதிபதியானான். அவன் தானியேல்மட்டில் அதிக கருத்துள்ளவனாய் அவரைத் தன்னோடு புசிக்கும்படி அடிக்கடி வரவழைப்பான். ஒருநாள் சிருஸ் தானியேலைப் பார்த்து, "நீர் ஏன் பபிலோனியரின் தேவனாகிய பேலை வணங்குவதில்லை?" என்று கேட்டான். தானியேல் மறுமொழியாக: "சகலத்தையும் படைத்த சிருஷ்டிகர்த்தரும் சிரஞ்சீவியருமான கடவுளைமாத்திரம் ஆராதிக்கிறேன்" என்று சொன்னார்.

ஆனால் அரசன் "பேலும் ஜீவனுள்ள கடவுள்தான்; அவர் நாளொன்றுக்கு 12 படி மாவும் 40 ஆடு



களும் புசிப்பதன்றி 6 ஜாடி ரசமும் குடிக்கிறார்" என்று அரசன் சொன்னதைக் கேட்ட தானியேல் அவனைப் பார்த்து சிரித்து "அரசனே! மோசம்போகாதேயும்; களிமண்ணும் பித்தளையும் சாப்பிடுமா?" என்றார். அப்போது சிருஸ் பேலின் பூசாரிகளை வரவழைத்து தானியேல் சொன்ன விஷயத்தை அவர்களுக்குச் சொன்னான்.

மஹாராஜாவே! நீரே பேலுக்குமுன் போஜனங்களைப் படைத்துக் கோவில் கதவைப் பூட்டி முத்திரையிடும்; மறுநாள் நாம் பார்க்கும்போது அவற்றை தேவன் சாப்பிடாமலிருந்தால், நாங்கள் மாணத்துக்கு உட்படுவோம்" என்று பூசாரிகள் சொல்ல, சிருஸ் ஒத்துக்கொண்டான். பூசாரிகள் சொன்னபிரகாரம், அரசன் அவர்களைக் கோவிலுக்கு வெளியே அனுப்பிவிட்டு தானே பேலுக்கு சாப்பாடு படைத்தான். தானியேலும் அரசன் கூடப்போய் அவன் முன்னிலையில் தெள்ளிய சாம்பலைக்கொண்டு கோவில் முழுதும் இறைத்துவைத்தார். பிறகு அவர்கள் கதவைச்சாத்தி இராஜமுத்திரையிட்டு வந்துவிட்டார்கள். அந்தப் பூசாரிகள் வழக்கப்படி இரவில் திருட்டுவழியாய் கோவிலில் பிரவேசித்து, அவர்களுடைய பெண்சாதி பிள்ளைக்குட்டிகள் சமேதமாய் அந்த விக்கிரகத்துக்குமுன் படைத்ததையெல்லாம் தின்றுவிட்டார்கள்.

மறுநாள் காலையில் சிருசும் தானியேலும் கோவிலுக்குவந்து முத்திரையை உடைத்து உள்ளே சென்று பார்க்க, மேசை வெறுமையாயிருப்பதை அரசன் கண்டு: "பேல் மகாதேவன்; அவர் ஏய்க்கப்படத்தக்கவரல்ல" என்று உரக்கக்கத்தினான். தானியேலோ தளத்தின்மேல் இருந்த காலடிகளை அரசனுக்குக் காட்.

டினார். கவனமாய்ப் பரிசோதனை பண்ணினபோது படையல் போடும் மேசையின்கீழ் திருட்டுவழியிருப்பதை அவர்கள் கண்டார்கள். அப்போது அரசன் தான் மோசம்போனதை யறிந்து அப்பூசாரிகளெல்லோரையுங் கொன்றுவிட, தானியேல் பேல் தேவனையும் அதன் கோவிலையும் இடித்துத் தகர்த்துவிட்டார்.

வினா.—பேலைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? தானியேல் அம்மோசத்தை சீருசக்கு எப்படி தெளிவித்தார்?

---

## 79-ம் அதிகாரம்

### தானியேல் சிங்கத்துகையில் போடப்படுகிறார்

உ. பி. 3466.)

(கி. மு. 534.

பபிலோனியர் பேல் தேவனையல்லாமல் ஒரு பெரும் சர்ப்பத்தையும் வணங்கிவந்தார்கள். ஒரு நாள் சீருஸ் தானியேலைப் பார்த்து, "இதையும் ஜீவியக்கடவுள் என்று சொல்லத்தகாதல்லவா?" என்று கேட்க: தானியேல் அரசனிடம் வாதியாமல் "அந்த சர்பத்தை வாளும் கோலுமின்றி கொல்லமாட்டுவேன்; உத்தாவுதானோ?" என்றார். அப்படியே ஆகட்டுமென்று சீருஸ் ஒத்துக்கொள்ளவே, தானியேல் குங்கிலியம், கொழுப்பு, ரோமம் ஆகிய முப்பதார்த்தங்களை ஒன்றாய்ச்சேர்த்துக் காய்ச்சி, உருண்டைகளாக்கி பாம்புக்குமுன் போட, அது அவற்றை விழுங்கி வயிறு வெடித்துச் செத்தது.

பபிலோனியர் இதைக்கேட்டு அதிமூர்க்கங்கொண்டு தானியேலை தங்களுக்குக் கையளிக்கவேணுமென்று கேட்டார்கள். சீருஸ் முதலில் சம்மதியா



விட்டாலும், ஜனக்கூட்டம் அதிக மூர்க்கங்கொள்வதைக்கண்டு பயந்து, தானியேலை அவர்களுக்குக் கையளிக்கவே, ஜனங்களவரை சிங்கக்குகையில் போட்டடைத்தார்கள். ஏழு சிங்கங்களுந் தானியேலை சீக்கிரத்தில் விழுங்கிவிடுமென்று எண்ணி அவைகளுக்கு ஆகாரம் போடாமலிருந்தார்கள். ஆகிலும் தானியேல் யாதோர் மோசமின்றி இருந்தார். ஆறு நாளைக்குப்



பிறகு தானியேலுக்குப் பசியுண்டானதால், அக்காலத்தில் பாழடைந்த யெருசலேமிலிருந்த அபகூக் என்ற ஒரு தீர்க்கதரிசி தன் வயலில் அறுப்பு அறுத்துக்கொண்டிருந்த வேலைக்காருக்குப் போசனம் எடுத்துக்கொண்டு போகும்போது, ஒரு தேவதூதன் அவருக்குத் தோன்றி, அவரிடத்திலுள்ள ஆகாரத்தை சிங்கக்குகையிலிருக்கும் தானியேலுக்குக் கொண்டுபோய் கொடுக்கும்படி சொன்னார். தான் பபிலோனுக்குப்

போனதில்லையென்றும், குகையிருக்குமிடம் தனக்குத் தெரியாதென்றும் அபகூக் சொல்ல, தேவதூதன் அவருடைய தலைமுடியைப் பிடித்துத் தூக்கிக்கொண்டு போய் கண்ணிமைப்பொழுதில் தானியேலிருந்த குகையில் விட்டார்.

இக்கட்டுகாலத்தில் தன்னை மறவாமல் அற்புதமாய்ச் சர்வேசுரன் அனுப்பின போசனத்தைத் தானியேல் புசித்து, அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்தார். தேவதூதன் மறுபடியும் அபகூக்கை முன்னிருந்த இடத்துக்குக் கொண்டுவந்துவிட்டார்.

ஏழா நாள் அரசன் சிங்கக்குகைக்குவந்து தானியேல் துஷ்டமிருகங்களின் மத்தியில் உட்கார்ந்திருப்பதைக்கண்டு மிகுந்த அதிசயங்கொண்டு, தானியேலை தக்ஷணமே குகையைவிட்டு வெளியேற்றவும், அவருடைய விரோதிகளை உள்ளே போட்டடைக்கவுங் கட்டளையிட்டான். அந்த துஷ்டரை பசித்திருந்த சிங்கங்கள் துண்டுதுண்டாய்க் கிழித்து விழுங்கிவிட்டன. தானியேலுடைய தெய்வம் உன்னதமானவரும் புதுமைகளைச் செய்பவருமாயிருப்பதால், அவரொருவருக்கே எல்லோரும் பயந்து பூசனைவந்தனைகள் சமர்ப்பிக்கவேண்டுமென அரசன் கட்டளையிட்டான்.

புத்தி.—அக்கினிச்சூளையில் போடப்பட்ட வாலரும், சிங்கக்கெபியிலிருந்த தானியேலும் கிறீஸ்துநாதரின் அடையாளமாம். தானியேல் சிங்கங்களினின்று தீங்கின்றி வெளிப்பட்டதுபோல் கிறீஸ்துநாதரும் கல்லறையினின்று மகிமையுடன் நித்திய ஜீவவந்தராக எழுந்தார். தானியேல் வெகுகாலமாய் அடிமைத்தனத்திலிருந்த யூதரோடு இருந்து, அவர்களுக்கு ஆறுதல் சொல்லியும், உற்சாகப்படுத்தியும்வந்தார். அதேபிரகாரம் கிறீஸ்துநாதர் தமது திருச்சபையோடு நிலைத்திருந்து அதன் வைரிகளின் கையினின்று அதைப்



பாதுகாத்து இரட்சித்துவருகிறார். மூன்று வாலர் தைரியமாக அக்கினியில் நின்றதுபோல, சேசுநாதரும் வேதசாட்சிகளோடு நின்று சத்தியத்திற்காக பூலோக முடிவுபரியந்தம் வேத விரோதிகளுடன் போராடி ஜெயம்பெற்றுவருகிறார்.

வினா.—தானியேல் சர்ப்பத்தை எப்படிக் கொன்றார்? அவரை யென்ன செய்தார்கள்? தானியேலுக்கு போசனங் கொண்டுவந்ததார்? அவர் எப்படி விடுதலையானார்? கிறீஸ்துநாதரின் அடையாளமாயிருந்ததார்? எப்படி?

---

## 80-ம் அதிகாரம்

### யூதர் அடிமைத்தனத்தினின்று திரும்பினது

(கி. மு. 532. உ. த. 3468.)

தீர்க்கதரிசிகளால் முன்கூறப்பட்ட எழுபது வருஷத்து அடிமைத்தனம் முடிவுபெறவே, மேதியர் பாரசீகருடைய அரசனாகிய அர்த்தாக்சேர்க்சேஸ் என்பவனுடைய மனதைச் சர்வேசுரன் திருப்பி அடிமைகளின்பேரில் இரக்கங்கொள்ளும்படிச் செய்ய, அவன் கி. மு. 532-ம் வருஷத்தில் யூதர் ஜெருசலேமுக்குப் பிரயாணப்பட்டுப்போய் ஆண்டவரின் ஆலயத்தை மறுபடியும் கட்டிக்கொள்ளலாமென்று ஒரு சட்டத்தை விளம்பரப்படுத்தினான்.

ஜொரோபாபெல் என்பவனைத் தலைமையாகக் கொண்டு, 40 ஆயிரத்துக்கு அதிகமான யூதர் தங்கள் சுயநாட்டுக்குத் திரும்பினார்கள். அர்த்தாக்சேர்க்சேஸ் என்ற அரசன் அவர்கள்மேல் அதிக பிரீதிகொண்டு, நபுகோதொனோசோர் கொண்டுவந்த பணம், பொன், வெள்ளிப்பாத்திரங்கள் முதலியவற்றை யவர்களுக்கு உத்தரித்துவிட்டான். ஜனங்கள் ஜெருசலேமில்

சேர்ந்து தேவாலயத்தைக் கட்டி முடிக்க 21 வருஷம் சென்றது. அது கட்டி முடிந்தபோது விருத்தாப்பியர் வந்து அதைப்பார்த்து அது சலமோன் ஆலயத்தைப்போல அவ்வளவு சிறப்பு இல்லாததாயிருப்பதைக் கண்டு மனநொந்து அழுது பிரலாபித்தார்கள்.

ஜெரோபாபெல் யெருசலேமுக்குப்போன 20 வருஷங்களுக்குப்பிறகு, எஸ்திராஸ் என்ற ஒரு பரிசுத்த குரு பபிலோனியாவில் இன்னும் மீதியாயிருந்த யூதரை ஒன்றாய்ச்சேர்த்து யெருசலேமுக்குக் கொண்டுபோனார். இவ்விடத்தில் தேவபக்தனான நேஹேமியாசின் உதவியைக்கொண்டு சர்வேசுரனுடைய கற்பனைகளை ஜனங்களுக்குப் போதிக்கவும், அவர்கள் அஞ்ஞான துர்மாதிரிகையால் அடைந்த பாவப்பழக்கங்களைப் போக்கவும் பிரயாசைப்பட்டார். இதுவுமன்றி பெருசலேமை மறுபடி கட்டும்படி நேஹேமியாஸ் ஜனங்களைத் தூண்டிவிட அவர்கள் அவருடைய மாதிரிகையைப் பின்சென்று, பெரிய குரு முதல் கடைசியானவன்வரையில் முயற்சியுடன் வேலைசெய்தார்கள்.

பாழாகின பட்டணம் இவ்வளவு சுருக்கில் கிளம்பினதால் தங்களுக்கு அபாயம் நேரிடுமென்று சமாரித்தார் அறிந்து, பொய்ப்புரட்டைச் சொல்லியும், துராலோசனைக்கொடுத்தும் வேலையை நிறுத்தும்படி பிரயாசைப்பட்டும் அவர்களால் அது மாளவில்லை. ஏனெனில், ஊக்கமாய் ஒவ்வொருவனும் வேலை செய்ததால் 52 நாட்களுக்குள் யெருசலேமின் மதில்களும் வாசல்களும் கோபுரங்களும் முடிய, நாளாவட்டத்தில் பட்டணமுங் கட்டப்பட்டது.

வினா.—எந்த தலைவனோடு யூதர் திரும்பினார்கள்? அவர்கள் கட்டினதென்ன? புது ஆலயத்தைப்பற்றி யென்ன



சொல்லியிருக்கிறது? மீதியான யூதரை யார் கூட்டிவந்தது? எஸ்திராசும் நேஹேமியாசும் என்ன செய்தார்கள்? சமாரித்தார் என்ன செய்ய முயன்றார்கள்?

---

# 81-ம் அதிகாரம்

## அடிமைத்தனத்துக்குப்பிறகு வந்த தீர்க்கதரிசிகள்

பபிலோன் அடிமைத்தன காலத்தில் எரேமியாஸ், தானியேல், எசக்கியேல் என்ற தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்குத் தீர்க்கதரிசனஞ் சொல்லி அவர்களைத் தைரியப்படுத்திவந்தார்கள். யூதர் யெருசலேமுக்கு வந்தபிறகு சர்வேசுரன் வேறு தீர்க்கதரிசிகளையனுப்பி, தமது பிரஜைகளை உற்சாகப்படுத்தியும் தைரியப்படுத்தியும்வந்தார். அவர்கள் யாரெனில், அக்கேயுஸ், சக்கரியாஸ் என்பவர்களே. மேசியா என்னும் இரட்சகர் ஒருநாள் அத்தேவாலயத்தில் பிரவேசிப்பாரென்றும், ஆனதைப்பற்றி முதல் ஆலயத்தின் மகிமை சிறப்பைவிட இரண்டாமாலயத்தின் மகிமை சிறந்தோங்குமென்றும், அவர்கள் சொன்ன தீர்க்கதரிசனத்தால் ஜனங்களுடைய விசுவாசம் மிக உறுதிகொண்டு வேலையை ஊக்கத்துடன் நடத்தினார்கள். யூதருக்குள் உண்டான கடைசி தீர்க்கதரிசியாகிய மலக்கியாசென்பவர் கி. மு. 400 வருஷங்களுக்குமுன்னிருந்தார். அவர் அக்காலத்திலிருந்த கள்ள போதகருக்கும், விசேஷமாய் கள்ள குருக்களுக்கும் விரோதமாய்ப் பிரசங்கித்துக்கொண்டுவந்தார். சர்வேசுரன் பழய ஏற்பாட்டின் பலியை நீக்கி அதற்குப்பதில் சூரியோதயமுதல் அஸ்தமனம்வரையில் ஒழிவில்லாமல் நடந்தேறிவரும் ஒரு புது பலியை ஏற்படுத்துவாரென்று அவர் தீர்க்கதரிசன

மாகச் சொன்னார். இந்தத் தீர்க்கதரிசனம் இக்காலத்தில் நடந்துவரும் திவ்யபூசையால் நிறைவேறலாயிற்று.

சுமார் கி. மு. 277-ம் வருஷத்தில் பழய வேத சரித்திரம் ஈப்ரு பாஷையினின்று கிரீக்கு பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டது. இந்த மொழிபெயர்ப்புக்கு செப்துவாஜிந்தா என்று பெயர். (எழுபது வேத சாஸ்திரிகள் எழுதிய பழைய வேத ஏற்பாடு என்று பொருள்படும்.) இது முடிவுபெற்றகாலத்தில் கிரீக்கு பாஷை யெங்கும் பேசப்பட்டுவந்தது. ஆகையால் இந்த மொழிபெயர்ப்பைக்கொண்டு பரிசுத்த வேதாகமங்களும், விசேஷமாய் மேசியாவைப்பற்றிய தீர்க்கதரிசனங்களும் அஞ்ஞான இராச்சியங்களிலும் வெகுவாகப் பரம்பலாயினவென்று சொல்லவேண்டும்.

அக்காலத்தில் சர்வேசுரனுடைய ஏவுதலின்படி சிராக்கின் மகனாகிய ஏசு வென்பவர் பக்தி நிறைந்த வாக்கியங்களடங்கிய சர்வப்பிரசங்கி ஆகமம் என்னும் ஒரு புத்தகத்தை யெழுதினார். அப்புத்தகத்தின் கருத்தென்னவெனில், மனிதருக்கு உண்மையைப் போதித்து அவர்கள் சர்வேசுரனைச் சிநேகிக்கும்படி செய்வதேயாம்.

வினா.—அடிமைத்தன காலத்தில் தீர்க்கத்தரிசிகளாயிருந்தவர்களார்? பிறகு இருந்தது யார்? மலாக்கியாசைப் பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? செப்துவாஜிந்தா என்றாலென்ன? சர்வப்பிரசங்கி ஆகமம் என்ற புத்தகத்தை எழுதினதார்?

---



## 82-ம் அதிகாரம்

உ. பி. 3495.) எஸ்தேரம்மாள் (கி. மு. 505.

பாரசீக அரசர் யூதரைப் பட்சமாய் நடத்தினபடி
யால் அவர்களிலநேகர் பபிலோனிலேயே தங்கி
விட்டார்கள். அவர்களுள் எஸ்தேரம்மாளும் ஒருவள்.
அசுயேருஸ் என்ற அரசன் அரசாட்சி செய்யும்போது
எஸ்தேரம்மாள் தன் சிற்றப்பனாகிய மர்தோக்கேயின்
ஆதரவிலிருந்தாள். அரசன் அவள்மட்டில் பிரியங்
கொண்டு அவளை இராணியாக்கிக்கொண்டான்.

அவளுடைய சிற்றப்பனாகிய மர்தோக்கே தன்
மகளுக்கு யாதேனும் தீங்கு நேரிடுமென்று பயந்து
இராஜ அரண்மனை வாசற்படியில் காத்திருப்பார். அவர்
இவ்வண்ணம் தன் மகளைப்பற்றி அவ்விடத்தில் காத்தி
ருக்குங்காலத்தில் இரண்டு உத்தியோகஸ்தர் அரசனுக்
குக் சதிமானஞ்செய்யத் தீர்மானித்துக்கொண்டதை
மர்தோக்கே யறிந்து எஸ்தேருக்குத் தெரிவிக்க, அவள்
அரசனுக்கு அறிவித்தக்ஷணமே, அவன் அவ்வுத்தி
யோகஸ்தரைக் கொல்லுவித்து, அந்த வர்த்தமனத்தை
இராச்சிய நடவடிக்கைப் புத்தகத்தில் பதித்துவைக்கக்
கட்டளையிட்டான்.

சிலகாலத்துக்குப்பிறகு அரசன் ஆமான் என்ப
வனை இராஜாங்கத்தின் மேலான பதவியில் உயர்த்த,
மர்தோக்கே நீங்கலாக சகல ஊழியரும் அவனுக்கு
முன் முழந்தாள்படியிட்டு வணக்கஞ்செய்வார்கள்.
ஆமான் மர்தோக்கேயைக் கண்டு அதிக கோபங்
கொண்டு தன்னை மதியாதவனும் பிடிவாதக்காரனுமா
கிய யூதனை அழித்துவிடத் தீர்மானித்துக்கொண்டான்.
இத்துர்க்கருத்துடன் ஆமான் ஓர் நாள் அரசனையண்டி,

யூதரெல்லோரும் பபிலோன் பட்டணத்தில் பெருங் குழப்ப மெழுப்பத் தயாராயிருக்கிறார்களென்று, அவர்களனைவரையுங் குடும்பங்களுடன் ஓரே யிராத்திரியில் கொன்றுபோட்டு, அவர்கள் சொத்துக்கள் யாவற்றையும் ஓரே இராஜ கஜானாவில் சேர்த்துக்கொள்ள இராஜ கட்டளை யொன்றை அனுப்பவேண்டுமென்று துர் ஆலோசனை கொடுத்தான். அவன் கேட்டபடியே அரசனும் சம்மதித்துக்கொண்டான்.

மர்தோக்கோ இந்த தாக்கீதைக் கண்டவுடனே எஸ்தேரிடம்போய் அவள் தன் ஜனத்திற்காக அரசனிடம் பரிந்து பேசவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஆனால் தான் அரசனாலழைக்கப்படாமல் அரச சமுகம் போகத் தகாதென்கிற ஓர் இராச சட்டமிருந்தும் அதற்கவள் பயப்படாமல் சிங்காரமான வஸ்திராபரணங்களைப் பூண்டு தபசினாலும் ஜெபத்தினாலும் சர்வேசுரனுடைய ஆசீர்வாதத்தைப் பிரார்த்தித்துக்கொண்டபின், அரசன் சிங்காதனத்தில் வீற்றிருக்க அவன் சமுகஞ் சென்றாள். அப்போது அரசன் அவளைக் கோபத்துடன் பார்க்கவே, அவள் திகில்கொண்டு மூர்ச்சையாய் விழுந்தாள். அப்போது அசுயேருஸ் தன் இராணிக்கு நேர்ந்த சங்கடத்தைக்கண்டு மனமிளகி, சிங்காதனத்திலிருந்து இறங்கிவந்து, அவளைத் தூக்கி உபசாந்திசெய்து, அவளைப் பார்த்து, "எஸ்தேர் பயப்படாதே; நீ சாகமாட்டாய்; உனக்கென்ன தேவை?" என்று வினவ, "அரசனே நீரும் ஆமானும் நாளை நானிடும் விருந்துக்கு வரும்படியாக மன்றாடுகிறேன்" என்றாள். அதற்கு அரசன் சம்மதித்தான்.

அன்று இராத்திரி அரசனுக்குத் தூக்கம்பிடியாததினால் காலப் போக்காக இராச்சிய நடவடிக்கைப் புத்



தகத்தை யெடுத்து வாசிக்கக் கட்டளையிட்டான். மர்தோக்கே கண்டுபிடித்த சதியாலோசனையைப்பற்றி வாசிக்கும்போது, "அதற்காக மர்தோக்கேயுக்கு என்ன சன்மானஞ் செய்யப்பட்டது?" என்று அரசன் கேட்க, "ஒன்றுஞ் செய்யப்படவில்லை" என்று பதில் சொன்னார்கள். அப்போது அசுவேருஸ் ஆமானை வரவழைத்து "நான் கனப்படுத்த விரும்பும் ஒருவனுக்கு என்ன செய்யலாம்?" என்று கேட்டான். தன்னைத் தான் கனப்படுத்த அரசன் விரும்பினானென்று எண்ணி, "அரசன் மகிமைப்படுத்த விரும்பிய மனிதனை இராஜ உடுபாவனை உடுத்தி அரசன் ஏறும் வாகனத்தின்மேல் அவனையேற்றி அரசனுடைய பிரபுத் தலைவன்: 'அரசனால் கனப்படுத்தப்படும் மனிதன் இவ்வித மகிமையடைவான்' என முன் நடந்து கூறவேண்டும்" என்று சொன்னான். "அப்படியானால் நீ சொன்னபடியே யூதனாகிய மர்த்தோக்கேயுக்கு நீயே செய்யக்கடவாய்" என்று ஆமானுக்கு அரசன் கட்டளையிட்டான். ஆமான் அதை நிராகரிக்கத் துணிந்தவனல்ல.

இதற்குள் அரசன் விருந்துக்கு ஆமானும் துரிதமாகப் போனான். விருந்து வேளையில் அரசன் எஸ்தேரைப்பார்த்து "உனக்கு என்ன தேவை, என் இராச்சியத்தில் பாதி வேண்டுமானாலுங் கொடுப்பேன்" என்க, "மகாராஜாவே! தேவரீருக்குச் சித்தமானால் என்னுடையவும் என் ஜனங்களுடையவும் ஜீவனைக் காப்பாற்ற வேண்டும். அதுவே போதும்" என்று மன்றாடினாள். தந்திரமாக யூதரெல்லோரும் கொல்லப்பட விருப்பதை அரசன் கேட்டு கோபங்கொண்டு "இப்படிச் செய்யத் துணிந்தவன் யார்?" என்று கேட்டான். "ஆமான் தான்" என்று எஸ்தேர் பதில் சொன்னாள். அரசன்

கடுங்கோபங்கொண்டு எழுந்து தன் அண்ணகரை வரவழைத்து இவனை யென்ன செய்யலாமென்று கேட்க, ஆமான் மர்தோக்கேயுவை தூக்கில்போட 50 முழ உயரமான ஒரு தூக்குமரத்தைச் சித்தஞ்செய்திருக்கிறானென்று அவர்களில் ஒருவன் சொன்னான். "உடனே ஆமானையே அதில் தூக்குப்போடுங்கள்" என்று அரசன் உத்தரவு செய்தான்.

அக்ஷணமே ஆமான் தூக்கில் போடப்பட, அவனுடைய உத்தியோகம் மர்தோக்கேயுக்குக் கொடுக்கப்பட்டது. யூதருக்கு விரோதமாய் உண்டான சட்டத்தை அரசன் ரத்துசெய்தான். இதைக்கண்ட அநேக அஞ்ஞானிகள் மனந்திரும்பினார்கள்.

புத்தி.—எஸ்தேர் இராணி தேவமாதாவுக்கு அடையாளமாயிருந்தாள். பாரசீகருடைய கொடுமையான சட்டத்தினின்று எஸ்தேர்மாத்திரம் தவிர்க்கப்பட்டதுபோல் பரிசுத்த கன்னிகைமாத்திரம் சென்மப்பாவத்தினின்று தவிர்க்கப்பட்டாள். எஸ்தேர் தனது பிரசைகளைக் காப்பாற்றி யிரட்சித்தாள். மரியம்மாளோ உலகத்துக்கு ஓர் இரட்சகரைத் தந்தாள்.

மர்தோக்கே எஸ்தேருக்குப் பிரமாணிக்கப் பாதுகாவலனாயிருந்ததுபோல, சூசையப்பர் சேசுநாதருடையவும் தேவதாயாருடையவும் காவலாளியாயிருந்தார். மர்தோக்கே இராஜாங்கத்தில் உயர்ந்த உத்தியோகத்தில் வைக்கப்பட்டார். சூசையப்பரோ பரலோகத்தில் மேலான அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டார்.

வினா.—எஸ்தேர்ன் சரித்திரத்தைச் சொல்? மர்தோக்கே என்ன செய்தார்? ஆமானைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது? எஸ்தேர் என்ன செய்தாள்? அப்போது என்ன நடந்தது? ஆமான் கொடுத்த யோசனையென்ன? ஆமான் துரிதமாக எங்கே போனான்? அவனுக்கு என்ன



நேரிட்டது? மர்தோக்கேயுக்கு சம்மவித்ததென்ன? எஸ்தேர் எப்படி தேவமாதாவுக்கு அடையாளமாயிருக்கிறாள்?

## 83-ம் அதிகாரம்

### யூதித்தம்மாள்

யூதர் தங்கள் சுயநாட்டுக்கு மறுபடியும் போய்ச் சேர்ந்தபோது, சர்வேசுரன் ஒரு ஸ்திரீயைக் கொண்டு மிக்க அதிசயமான விதமாய் அவர்களை யிரட்சித்தார். அசீரியருடைய சேனாபதியாகிய ஹோலோபெர்னெஸ் பலமான சேனையோடு யூதர் நாட்டில் பிரவேசித்து, அநேக பட்டணங்களைப் பிடித்துக்கொண்டு ஜனங்களை வெகு குரூரமாக நடத்தினான். கடைசியாய் அவன் பெத்துலியாவை முற்றுகையிட்டு, பட்டணத்து ஜனங்களுக்கு குடிக்க ஜலமகப்படாதபடி அவ்விடம் பாய்ந்துகொண்டிருந்த வாய்க்காலை அடைத்துவிட, ஜனங்கள் வெகு சங்கடப்பட்டார்கள். இந்த சங்கடங்களை யூதர் சகிக்கமாட்டாதவர்களாய், ஐந்து நாட்களுக்குள் தங்களுக்கு உதவி வராவிட்டால் பட்டணத்தை அவனுக்கு விட்டுவிடத் தீர்மானித்தார்கள். அந்நகரத்தில் மிகுந்த ஐசுவரியவதியும் சௌந்தரியவதியுமான யூதித் என்னும் ஒரு இளம் விதவையிருந்தாள். யூதருடைய மேற்கண்ட தீர்மானத்தைப்பற்றி கேள்விப்படவே, தன் விதவை வஸ்திரத்திற்குப்பதிலாக விலையுயர்ந்த வஸ்திராபரணங்களைத் தரித்து, தலைக்கு எண்ணெயிட்டுத் தன்னை அலங்கரித்துக்கொண்டு தன் ஊழியக்காரருடன் அசீரியர் இறங்கியிருந்த விடத்துக்குப் போனாள். சர்வேசுரனும் அவளுடைய அழகை அதிகப்படுத்தினார். ஹோலோபெர்னெஸ் அவளைக்

கண்டு வெகு பட்சத்தோடு அவளை வரவழைத்து, அவள் இஷ்டம்போல் பாளையத்துக்குள்ளே வரவும் போகவும் விடவேண்டுமென தன் சேவகருக்கு உத்தரவு செய்தான்.

அவள் அசீரியருடைய பாளையம் போய்ச்சேர்ந்த நாலு நாட்களுக்குப்பிறகு ஹோலோபெர்னெஸ் தன் உத்தியோகஸ்தருக்குப் பெருத்த விருந்திட்டான். அப்போது அவன் அதிகமாய்ச் சாராயங் குடித்து மதுவின் மிகுதியால் மயங்கி ஒன்றுமறியாதவனாய்க் கட்டிலின் பேரில் கிடந்திருக்கும்போது, யூதித்தம்மாள் ஹோலோபெர்னெசின் படுக்கையை அணுகி, சர்வேசுரனைப் பிரார்த்தித்து அவ்விடத்தில் தொங்கிக்கொண்டிருந்த வாளை யெடுத்து அவனுடைய தலையை வெட்டித் துண்டித்துவிட்டாள்.

பிறகு அவள் அந்தத் தலையை ஒரு பையில் போட்டுத் தன் ஊழியக்காரிடம் கொடுத்து, அசீரியருடைய பாளையத்தைவிட்டு வேகமாய் பெத்தூலியா வந்துசேர்ந்தாள். அப்போது அவள் யூதப்படைத் தலைவரையும் ஜனங்களையும் வரவழைத்து ஹோலோபெர்னெசின் தலையைக் காட்டி, தன்னைப் பாவத்தினின்று காப்பாற்றினதற்காகவும், தன்மூலமாய் தங்களுடைய சத்துருவைக் கொன்றதற்காகவும் ஆண்டவரைப் போற்றிப் புகழுங்கள் என்றாள்.

சர்வேசுரன் தங்களுக்காகப் போர்புரிந்தபடியால் ஹோலோபெர்னெசின் தலையைக் கோட்டை மதிலின் மேல் தூக்கி தொங்கவிட்டு, சேனாதிபதியில்லாத அசீரியரைத் துரத்தி முறியடித்தார்கள்.

யூதித்தை அவள் சுயநாட்டாரே அன்றி சகல யூதரும் கொண்டாடினதுடன், அவள் மரணமடைந்த



போது சகல ஜனங்களும் அவளுக்காகத் துக்கங் கொண்டாடினார்கள்.

வினா.—யூதித்தின் சரித்திரமென்ன? யாருடைய தலையை அவள் வெட்டினாள்? யூதர் என்ன செய்தார்கள்? யூதித்தம்மாள் மரணமடைந்தபோது என்ன செய்தார்கள்?

---

## 84-ம் அதிகாரம்

### வேதசாட்சியான எலியசார் (கி. மு. 163. உ. பி. 3837.)

கிறீஸ்துநாதருக்குமுன் 333-ம் ஆண்டில் மகா அலெக்சாந்தர் பாரசிகருடைய அரசாட்சிக்கு முடிவுண்டாக்கினபின், யூதர் எஜிப்து அரசர்களாலும், கடைசியாக சீரிய அரசர்களாலும் ஆளப்பட்டுவந்தார்கள். சீரிய அரசரில் கொடியவன் அந்தியோக்குஸ் இராயன். இவன் யூதரின் வேதபுத்தகங்களை சுட்டெரித்ததுமல்லாமல், அவ்வேதத்தின்படி நடப்பவர்களைக் கொலை செய்வதாகவும் பயமுறுத்தினான். அதனால் அநேகர் வேதத்தை விட்டுவிட, மற்றவர்கள் பிரமாணிக்கமாயிருந்தார்கள். அவர்களில் வேதத்தை நன்றாயறிந்தவருஞ் சகலராலுங் கனமாய் மதிக்கப்பட்டவருமான எலியசார் என்னும் தொண்ணூறு வயதுள்ள விருத்தாப்பியரொருவரிருந்தார். பூர்வ வேதத்தில் விலக்கப்பட்டிருந்த பன்றி யிறைச்சியை எலியசார் புசியாவிட்டால் அவரைக் கொன்றுபோடும்படி அரசன் கட்டளையிட்டான்.

அவ்விருத்தாப்பியர் தேவ கட்டளையை மீறுகிறதைவிட சாகத் தீர்மானித்திருப்பதைக்கண்ட அவருடைய சிநேகிதர் அதைச் சாப்பிடும்படி அவரை வற்

புறத்தினதுடன், அதைப் புசியாவிட்டாலும் வெளிக்குச் சாப்பிட்டதாக காட்டும்படி அவரை மன்றாடின போது, அவர் அவர்களைப் பார்த்து "நான் மனிதர்களை ஏமாற்றினபோதிலும் சர்வேசுரனை ஏமாற்றக்கூடுமோ? மேலும் உங்கள் ஆலோசனையை நான் பின்சென்றால், அநேகர் என் துர்மாதிரிகையால் கெடுவார்கள்" என்று சொல்லி மகா குரூரமான மரணத்துக்குள்ளானார்.

வினா.—யூதர் யாருடைய ஆளுகைக்கு உட்பட்டார்கள்? அந்தியோகுசைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது? எலிய சாரைப்பற்றி சொல்லியிருப்பதென்ன?

## 85-ம் அதிகாரம்

### வேதசாட்சிகளான ஏழு மக்கபேர்கள்

உ. பி. 3837.) (கி. மு. 163.

மக்கபேர் என்னும் ஏழு மக்களும் அவர்களுடைய தாயும் அந்தியோகுசுக்குமுன் குற்றவாளிகளாக நிறுத்தப்பட்டார்கள். வேதத்தில் விலக்கப்பட்ட பன்றி யிறைச்சியைப் புசிக்கவேணுமென்று அவர்களுக்கு அரசன் கட்டளையிட்டபோது, அவர்கள் சர்வேசுரனுடைய கட்டளையை மீறுவதைவிட சாகத் தீர்மானித்திருக்கிறோமென்று சொன்னார்கள்.

அரசன் அதைக் கேட்டு அதிக கோபங்கொண்டு அந்த ஏழு சகோதாரையும் பிரம்பாலடிக்கும்படி சொன்னான். ஆனால் அச்சிறு வீரர் இன்னுந் தனக்குக் கீழ்ப்படியாதிருப்பதைக்கண்டு பெரிய இரும்பு அண்டாவை நெருப்பில்வைத்துக் காய்ச்சும்படி சொன்னான். அது முடியவே கொலைக்காரர் மூத்தவனைப் பிடித்து, அவன்



நாக்கை யறுத்து, தோலை யுரித்து, அவனுடைய கைகளையும் கால்களையும் வெட்டி, கடைசியாய் சிவக்கக் காய்ந்திருந்த அண்டாவில் போட்டார்கள். அவனுடைய தாயும் தம்பிமாரும் உறுதியாயிருக்கும்படி அவனுக்குத் தைரியஞ் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அவன் மரணமடையவே, அவனுக்கு இளையவனைக் கொண்டுவந்து அவனுடைய தலைத்தோலை உரித்துவிட்டபின், "இறைச்சியைத் தின்பாயா" என்று கேட்க, தின்னமாட்டேனென்றான். அவனுடைய சகோதானைப்போல இவனையும் வதைத்துக் கொன்றார்கள். இவனுக்கு அடுத்த நாலு சகோதரர்களும் சர்வேசுரன்மட்டில் தங்களுக்குள்ள விசுவாசத்தைப் பிரசங்கித்து, நித்திய பாக்கியம் அடைவோமென்ற நம்பிக்கையுடன் மனதுபொருந்தி தங்களைக் கொலைஞருக்கு ஒப்புக்கொடுத்தார்கள்.

எல்லோருக்கும் கடைக்குட்டியை பயமுறுத்தி வெல்லலாமென்று அரசன் நம்பியிருந்தான். அந்தச் சிறுவன் யூதமதத்தை விட்டுவிடுவானாகில், அவனுக்குத் தேவையான ஆஸ்திபாஸ்தியும், மகிமையும், இன்னும் தன் சிநேகத்தையுமே கொடுப்பதாக வாக்களித்தும் அவனதற்கு இணங்கவில்லை. தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும்படி உன் மகனுக்குப் புத்திசொல்லென்று அரசன் பையனுடைய தாய்க்குச் சொல்ல, அவளோ அவனுடைய மற்ற சகோதாரைப்போல் வேதசாட்சியாகவேணுமென்று அவனுக்கு தைரியஞ் சொன்னாள். இவ்வாறு அவள் தன் மகனுக்குச் சொல்லிக்கொண்டிருக்கும்போது, அவன் "நான் அரசனுக்குக் கீழ்ப்படியவுமாட்டேன், சர்வேசுரனுடைய கட்டளையை மீறவுமாட்டேன்" என்று உரக்கக் கத்தி

னன். அரசன் இதைக் கேட்டு கோபத்தால் பொங்கி, முந்தியவர்களைவிட இவனை அதிக குரூரமாய் வாதிக்கும்படி கட்டளையிட்டான். கடைசியாய்த் தாயும் ஏழு மக்களைப்போல் வீரத்தோடு வாதைப்பட்டு வேதசாட்சியானாள்.

வினா.—மக்கபேர்களைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? எல்லோருக்கும் மூத்தவன் எப்படி கொல்லப்பட்டான்? இவனுக்கு நேர் இளையவனை என்ன செய்தார்கள்? மற்ற சகோதரர்கள் எப்படி மரணித்தார்கள்? அரசன் கடைசிச்சகோதரனை நடத்தினவித மெப்படி? தாயை என்ன செய்தார்கள்?

---

## 86-ம் அதிகாரம்

### மத்தாதியாஸ், யூதாஸ் மக்கபேயுஸ்

(கி. மு. 162. உ. பி. 3838.)

அந்தியோகுஸ் அரசுபுரியுங் காலத்தில் யூதேயாவில் மத்தாதியாஸ் என்னும் நாமமுடைய ஆசாரியர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஐந்து புத்திரரிருந்தார்கள். வேதகட்டளைக்கு விரோதமாய் நடக்கும் அருவருப்புக்களையும், ஜனங்கள் படும் குரூர துன்பங்களையுங்கண்டு, சர்வேசுரனுடைய கட்டளைப்பிரகாரம் நடப்பவர்கள் எல்லோரையும் தம்முடன் அழைத்துக்கொண்டு தன் பிள்ளைகளுடன் மலைக்கு ஓடிப்போனார். அவர் விக்கிரகங்களையும், அதன் பீடங்களையும் உடைத்துத் தகர்த்து, பிறகு ஜனமதிகரிக்கவே தன் தேசசத்துருக்களோடு யுத்தஞ்செய்யத் துவக்கினார்.

அவருடைய மரணத்துக்குப்பிறகு, அவருடைய மகனாகிய யூதாஸ் சேனாதிபதியானார். இவர் யுத்தத்தில் அரிதான தைரியமுள்ளவரா யிருந்ததினால் மக்கபேயுஸ் என்ற பேரடைந்தார். அவர் சிங்கத்தைப்போல் துணிவுகொண்டவராய் அந்தியோகுசின் தளக்கர்த்தர்களை ஒருவனுக்குப்பின் ஒருவனாய் அவர்கள் அனைவரையும் எதிர்த்து முறியடித்தார்.



அவர் யெருசலேமை மறுபடியும் கைப்பற்றிக்கொண்டு, தேவாலயத்தை சுத்திகரித்து, வீணை முதலிய வாத்தியங்களுடன் கம்பீரியமாக பீடாபிஷேகஞ் செய்து, பலிகளை சமர்ப்பித்து தானடைந்த வெற்றிகளுக்காக ஓர் விசேஷ பண்டிகையை கொண்டாடும்படி ஏற்பாடுசெய்தார்.

மக்கபேயுஸ் அடைந்த யெஜத்தைப்பற்றி அந்தியோகுஸ் கேள்விப்பட்டு மிக்க கோபங்கொண்டு, பெரும் படையைக்கூட்டித் தானே அதை நடத்திக்கொண்டு யெருசலேமுக்குப்போய், அதை அடியோடு அழித்துவிடத் தீர்மானித்தான். ஆனால் வழியில் தெய்வ தண்டனையைப் பெற்றுக்கொண்டான். எவ்வாறெனில்: ஒருநாள் அவன் தன் இரதத்தினின்று கீழேவிழுந்து கடுங்காயப்பட, அக்காயங்கள் அழுகிப் புழுத்து, புழுக்கள் வெளியே நெளிந்துகொண்டிருந்ததினால் தன்னாலும் மற்றவர்களாலும் சகிக்கமுடியாதபடி அவன் உடல்முழுதும் நாற்றமெடுத்தது.

தான் இவ்வளவு கடுமையாய் வாதைப்படுவதை அந்தியோகுஸ் கண்டு, சர்வேசுரன் தன்னை தண்டிக்கிறாரென்று அறிந்துகொண்டு, மரணத்துக்குத் தப்பித்துக்கொள்ளும்படி தன்னைத் தாழ்த்தி, தான் நடத்தின குரூர செய்கைகளைப்பற்றி பிரலாபிக்கத் தொடங்கி, தான் செய்த தீங்குகளை தன்னாலானமட்டும் பரிகரிப்பேனென்றும் உறுதிமொழி கூறினான். ஆனால் அவன்

காட்டிய பச்சாத்தாபம் உண்மையல்லவென்று கண்ட சர்வேசுரன் அவனுடைய மன்றாட்டைத் திரஸ்காரம் பண்ணினார். ஆதலால் மிகக் குரூரமான வாதைகளை அனுபவித்து அகோரமாய்ச் செத்தான். இவன் பூலோகத்தாருக்கு சர்வேசுரனுடைய நீதியைக் காட்டும் ஓர் பயங்கர உதாரணமாக விருக்கிறான்.

அவனுடைய மரணத்துக்குப்பிறகு அவனுடைய மகன் யூதேயாவை மறுபடி வெல்ல முயற்சி செய்தான். ஆனால் மக்கபேயுஸ் சர்வேசுரனை நம்பி ஜனத்தைச் சேர்த்து யுத்தத்தை நடத்தினார். சண்டை மும்முரமாய் நடந்துகொண்டிருக்குஞ் சமயத்தில் திடீரென்று பரலோகத்தினின்று ஐந்துபேர் வந்தார்கள். அவர்கள் தரித்திருந்த ஆயுதங்கள் சூரியனைப்போல் பிரகாசிப்பவைகளாயும், அவர்களுடைய குதிரைகள் பொன் அணிகலத்தால் பூட்டப்பட்டவைகளாயுமிருந்தன. இருவர் யூதாசின் இருபக்கத்திலுமிருக்க, மற்ற மூவரும் சத்துருவின் படையில் அம்புகளை விட்டெய்தார்கள். இடியு மின்னலும் சிரியர்மேல் விழுந்தன. அனேகர் பயத்தால் தத்தளித்துத் தாழவிழுந்தார்கள். மற்றவர்கள் வெருண்டு வந்தவழியே திரும்பி ஓட்டம் பிடித்தார்கள். எதிரிகளின் பக்கத்தில் 20 ஆயிரம் காலாட்படைகளும் 6 ஆயிரம் குதிரைப்படைகளும் அன்று யுத்தகளத்தில் செத்துக்கிடந்தார்கள்.

இவ்வண்ணமாக சத்துராதிகளின்பேரில் அனேக வெற்றிகளைப் பெற்றதின்பின், யூதாஸ் தன் நாட்டுக்கு சுய அரசாட்சியை உண்டாக்கினார். ஆகிலும் இவர்கள் பக்கத்தில் சேதமில்லாமலில்லை. யூதரிலும் அனேகர் மாண்டார்கள். செத்தவர்களைச் சோதித்துப்பார்க்கையில் அஞ்ஞான கோவில்களிலிருந்து திருடப்பட்ட



காணிக்கைகள் அவர்களுடைய சட்டைப்பைகளில் அகப்பட்டன. அவர்கள் இறந்ததற்கு இதுவே காரணமென யாவரும் அறிந்துகொண்டார்கள்.

அவர்கள் இவ்வண்ணம் தண்டிக்கப்பட்டதை யூதாஸ் கண்டிருந்தும் அவர் அவநம்பிக்கைகொள்ளாமல், சர்வேசுரனுடைய தயவையும் ஜெபத்தின் பலத்தையும் நம்பி, அவர்களுக்காக பலி செலுத்தும்படி பன்னீராயிரம் வெள்ளி திராக்மா என்னும் நாணயம் யெருசலேமுக்குக் கொடுத்தனுப்பி, “மரித்தவர்களுக்காக வேண்டிக்கொள்வது பரிசுத்தமும் உத்தமமுமான கருத்து” என்று சொன்னார்.

வினா.—மத்தாதியாசைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? யூதாஸ் மக்கபேயுசைப்பற்றி சொல்லியிருப்பதென்ன? அந்தியோகுஸ் எப்படி யிறந்தான்? அவனுடைய மகன் எப்படி தோல்வியடைந்தான்? யூதாஸ் யெருசலேமுக்கு அனுப்பினதென்ன? ஏன்?

## 87-ம் அதிகாரம்

### மக்கபேர்முதல் சேசுக்கிறீஸ்துநாதர்வரையில்

புண்ணியவாளனும் வீரனுமான யூதாசின் மரணத்துக்குப்பிறகு அவருடைய சகோதரர்கள் ஒருவருக்குப்பின் ஒருவராய் இராச்சிய தலைமைவகித்து ஜனங்களை நடத்திவந்தார்கள். அவர்களுடைய நுண்ணறிவாலும் சாமர்த்திய வல்லமையினாலும் அனேக வெற்றிகளை யடைந்து, சமாதானம் நாட்டில் நிலைக்கச் செய்தார்கள். அதனால் யூத இராச்சியம் மறுபடியுஞ் செழித்தோங்கத் துவக்கினது. ஆனால் பிற்காலத்தில் வந்த தலைவர்கள் முந்தினவர்களுடைய சுகிர்த வழியில்

நடவாததால் வரவர நிலைமைபற்ற யூதர் மறுபடியும் பாவத்தில் விழுந்து கெட்டார்கள்.

யூதர் மெய்யான சர்வேசுரன் உண்டென்று நம்பி, அவருடைய கட்டளைகளை வெளிவேஷமாகமாத்திரம் அனுசரித்துவந்தார்களேயொழிய அவர்களுடைய இருதயமானது சர்வேசுரனுக்கு வெகுதூரமாயிருந்தது. அவர்களுக்குள் பரிசேயர், சதுசேயர் என்ற இரு கட்சிக்காருண்டானார்கள். முந்தினவர்கள் வெளிக்கு வேதகட்டளையை யநுசரிப்பது போதுமென்றெண்ணியிருந்தார்கள். பிந்தினவர்கள் அநேக வேத விதிகளையும், முக்கியமாய் மாம்ஸ உத்தானத்தையு மறுத்துவந்தார்கள்.

யூதேயா இராச்சியந் தவிர உலகமுழுதும் விக்கிரக ஆராதனையிலும் அருவருப்புக்குரிய பாவாக்கிரமங்களிலும் மூழ்கியிருந்தது. குரூர கிருத்தியங்களும் நெருக்கிடைகளும் எங்கும் நிறைந்திருந்தன. மனுக்குலம் மேசியாவின் வருகைக்கு ஆவலாய் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. இவ்விஷயமாத்திரம் நிறைவேறாமலிருந்தது. அதுதான் யாக்கோபு தன் மகன் யூதாவுக்குச் சொன்ன தீர்க்கதரிசனமாமே. அதுவும் சீக்கிரத்தில் நிறைவேறலாயிற்று.

மக்கபேயுசுக்குப்பிறகு வந்தவர்கள் சுயநாட்டிலும் வெளிநாட்டிலும் ஓயாத யுத்தங்கள் செய்துகொண்டுவந்தார்கள். சகோதரனுக்கு விரோதமாய்ச் சகோதரன் போர்புரிந்தான். எங்கும் கொலையுங் கொள்ளையுமாகவேயிருந்தன. கடைசியாய் இரு கட்சிக்காருக்குமுள்ள விவாதங்களைத் தீர்க்கும்படி உரோமையரை யழைக்கவே, அவர்களுடைய சேனைகள் சீக்கிரத்தில் தேச முழுதும் பரவிப்போக, அவர்களுடைய அதிகாரம் ஏற்பட்டு ஏரோது என்ற ஒரு அன்னியன் யூதரின் அரசனாக ஏற்படுத்தப்பட்டான். இவ்வாறு யூதருடைய அரசாங்கம் அழிந்துபோய், யூத கோத்திரத்தினின்று செங்கோலும் எடுபட்டது. மேசியா என்று சொல்லப்படும் நமது இரட்சகரும் ஆண்டவருமாகிய சேசுக்கிறீஸ்துநாதர் உலகத்தை ஆசீர்வதித்து மனுக்குலத்தையிரட்சிக்கும்படிவர குறிப்பிட்டகாலம் இதுவே. அவருக்கு சதாகாலம் ஸ்துதியுந் தோத்திரமுமுண்டாகக்கடவது.



வினா.—யூதரின் பிந்தின சரித்திரத்தைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? பரிசேய ரென்பவர்களார்? சதுசேய ரென்பவர்கள் எவர்? உலகத்தைப்பற்றிப் பொதுவாய்ச் சொல்லியிருப்பதென்ன? எது நிறைவேறாமலிருந்தது? யூத இராச்சியத்துக்கு வரவழைக்கப்பட்டதார்? ஏன்? யார் அரசனானான்? யாருக்குக் காலஞ் சமீபித்தது?

பழய வேதம் முற்றிற்று

# புதிய வேத சரித்திரச் சுருக்கம்

## முதற் பாகம்

### நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய சரித்திரம்

### முதல் அதிகாரம்

#### ஸ்நாபக அருளப்பரின் பிறப்பு

ஏரோதன் அரசாட்சி செய்யுங்காலத்தில் விருத்தாப்
பிய ஆசாரியாகிய சக்கரியாசும் அவருடைய
மனைவியாகிய எலிசபெத்தம்மாளும் யூதராச்சியத்தின்
மலைநாட்டில் வசித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள்
சர்வேசுரன் சமூகத்தில் நீதிவந்தராயிருந்ததுமல்லா
மல், அவர்களுக்குப் புத்திரசந்தானமில்லாக் குறையே
யன்றி மற்றப்படி சகல பாக்கிய சம்பத்துக்களையுங்
கொண்டிருந்தார்கள்.



தங்களுக்கோர் புத்திரனை யளிக்கும்படியாகப் பிரதிதினம் சர்வேசுரனைப் பிரார்த்தித்தும், அவர்களுடைய பிரார்த்தனை அங்கீகரிக்கப்படாததுபோல் தோன்றினது.



ஆசாரியருடைய வழக்கப்படி, ஒருநாள் சக்கரியாஸ் பலிபீடத்தில் தூபங்காட்டிக்கொண்டிருக்கும்போது, பீடத்தின் வலதுபுறத்தில் சடுதியில் ஓர் தேவதூதன் தரிசனையானதைக்கண்டு அதிகமாய் பயந்தார். பயப்படாதபடிக்குத் தேவதூதன் அவருக்கு தைரியஞ் சொல்லியபின், அவரைப்பார்த்து "சக்கரியாசே உம்மு

டைய வேண்டுதல் கேட்கப்பட்டது. உமது மனைவியாகிய எலிசபெத்தம்மாள் உமக்கோர் குமாரனைப் பெறுவாள். அக்குழந்தைக்கு அருளப்பன் என்று பெயரிடவேண்டும்" என்று உரைத்தார்.

சக்கரியாஸ் அதைக் கேட்டு, "தானும் தன் மனைவியும் விருத்தாப்பியாயிருப்பதால் தங்களுக்கு எப்படி பிள்ளையுண்டாகும்" என்று தனக்குள் சந்தேகப்படத் தொடங்கினார். இதைத் தேவதூதன் அறிந்து: "நீ என் வார்த்தைகளை நம்பாமல் சந்தேகப்பட்டதால், நான் உனக்குச் சொன்னது நிறைவேறும்வரையில் ஊமையாயிருப்பாயாக" என்று சொல்லி அதரிசனமானார். சக்கரியாஸ் அக்ஷணமே ஊமையனார்.

வினா.—சக்கரியாசையும் எலிசபெத்தையும்பற்றி என்ன சொல்லியிருக்கிறது? பீடத்தண்டை சக்கரியாசுக்கு என்ன சம்பவித்தது?

---

## 2-ம் அதிகாரம்

### சேசுநாதரின் ஜனனத்தைப்பற்றி அறிவிக்கப்பட்டது

மேற்சொன்ன வர்த்தமானம் நிகழ்ந்த ஆறு மாதத்துக்குப்பிறகு, கபிரியேலென்னுந் தேவதூதன் கலிலேயா நாட்டிலுள்ள நசரேத்தென்னும் நகரத்தில் நிவசித்துவந்த மரியம்மாள் என்னும் கன்னிகையிடத்திற்குப் போனார். அவள் தாவீது இராசாவின் கோத்திரத்தில் பிறந்தவளாயிருந்தும் இவ்வுலக செல்வசுகங்களற்று வெகு எளியவளாயிருந்தாள். ஆனால் சகல புண்ணிய சுகுணங்களில் யாவருக்கும் மேற்பட்டவள். அவள் தன்னைப்போல் இராஜவம்சத்தில் பிறந்து, தச்சு வேலைசெய்து ஏழையாய் ஜீவித்துவந்த



சூசை என்பவரை சிலமாதங்களுக்குமுன் விவாகஞ் செய்துகொண்டவள்.

மகா தாழ்ச்சியுள்ள இக்கன்னிகை ஓர் நாள் அதி பக்தி உருக்கத்தோடு செபித்துக்கொண்டிருக்கையில் கபிரியேல் என்னுந் தேவதூதன் சடுதியில் அவளறையில் பிரவேசித்து "பிரியதத்தத்தினாலே பூரணமானவளே வாழ்க! கர்த்தரும்முடனே; பெண்சாதிகளுக்



குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே" என்று அவளை வாழ்த்தினார்.

இவ்வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில் அவள் கலங்கி, இம்மங்கள மெத்தன்மையானதோவென்று யோசித்துக்கொண்டிருந்தாள். அப்போது தேவதூதன் அவள் கலக்கத்தை நீக்கி, மேசியாவின் வருகையை அறிவிக்கும்படி சர்வேசுரனால் தான் அனுப்பப்பட்டவனென்றும், அவளே அவருக்குத் தாயாய் நியமிக்கப்பட்டிருக்கிறாளென்றுஞ் சொன்னார். தான் கன்னிகையாயும் புருஷனை அறியாதவளாயு மிருப்பதைப்பற்றி அது

எப்படியாகுமென்று கேட்க, தேவதூதன்: "நீர் அஞ்ச வேண்டாம்; இஸ்பிரீத்துசாந்துவானவர் உமதுமேல் எழுந்தருளிவருவார். உன்னத கடவுளின் வல்லமை உமக்கு நிழல் செய்யும். ஆகையாலும்மிடத்தில் பிறக்கும் பரிசுத்தர் தேவசுதனென்னப்படுவார்" என்று பதிலுரைத்தார்.

கபிரியேல் தன் வார்த்தைகளை உறுதிப்படுத்தும்படியாக அவள் பந்துவாகிய எலிசபெத்தம்மாள் முதிர்ந்த வயதில் கருப்பந்தரித்திருப்பதையும் அறிவித்தார். அதனால் சர்வேசுரன் தன்னிடத்தில் பெருங் காரியங்களைச் செய்ய சித்தங்கொண்டிருப்பதை மரியம்மாள் அறிந்து, அவருடைய சித்தத்துக்குச் சம்பூரணமாக சம்மதித்தாள். அவள் சம்மதித்தக்ஷணமே தேவமாதாவானாள். ஓர் ஸ்திரீ சர்ப்பத்தின் தலையை நசுக்குவாளென்று சிங்காரவனத்தில் செய்யப்பட்ட வாக்குத்தத்தமானது மரியாயிடத்தில் அன்று நிறைவேறிற்று. அவளுடைய திவ்ய குமாரனும் மெய்யாகவே பசாசை ஜெயித்தார்.

வினா.—மரியம்மாளிடத்தில் யார் வந்தது? அவள் யார்? அவளைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? கபிரியேல் சம்மனசு அவளுக்கு என்ன சொன்னார்? மரியம்மாள் நடந்துகொண்ட விதமெப்படி? கபிரியேல் தூதன் தன் வார்த்தைகளை உறுதிப்படுத்தும்படி மரியம்மாளுக்கு வேறு என்ன சொன்னார்?



# 3-ம் அதிகாரம்

## மரியம்மாள் எலிசபெத்தம்மாளை சந்தித்தல்

தேவதூதன் மரியம்மாளை விட்டகன்றபிறகு அவள் தன் பந்துவாகிய எலிசபெத்தம்மாளைச் சந்திக்கும்படியாகத் தீவிரமாய்ப் போனாள். அவள் வீட்டில் நுழைந்தபோது, எலிசபெத்து சடுதியில் இஸ்பிரீத்துசாந்துவால் நிரப்பப்பட்டு சந்தோஷ பூரிப்பால் உரத்த சத்தமாய்: "பெண்சாதிகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்



டவள் நீரே. உம்முடைய வயிற்றின் கனியானது ஆசீர்வதிக்கப்பட்டதுமாமே" என்று மொழிந்தாள். மரியம்மாளும் தன்னுள்ளத்தில் பற்றியெரியும் தேவசிநேகத்தை அடக்கமாட்டாதவளாய், திருச்சபை பிரதிதினமும் பாடிவரும் சிறந்த தேவஸ்துதியாகிய 'மாக்னிபிகாத்' என்னும் சங்கீதத்தைப் பாடினாள். அதாவது: "என்னாத்துமமானது ஆண்டவரை வணங்கி தோத்திரம்பண்ணுகிறது; என்னிரட்சணிய

மாகிய சர்வேசுரனிடத்தில் என்னாத்துமம் ஆனந்தமாய் எழும்பி யகமகிழ்கின்றது. அதேனெனில், அவர் தமதடியாளுடைய நீசத்தனத்தை கிருபாகடாட்சத்தோடு நோக்கினார். ஆகையால் இதோ இக்காலமுதல் எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பாக்கியமுள்ளவளென்று சொல்லும்"*

மரியம்மாள் ஏறக்குறைய மூன்று மாதகாலம் எலிசபெத்தம்மாளோடிருந்தபின் தன் நிவாசஸ்தலமாகிய நசரேத்தூருக்குத் திரும்பிவந்து செபத்தியானத்திலும் தன்வீட்டு வேலையிலுங் காலங்கழித்துவந்தாள்.

வினா.—மரியம்மாள் எங்கே போனாள்? அவள் எலிசபெத்தைச் சந்தித்தபோது என்ன சம்பவித்தது? மாக்னிபிகாத் என்னுஞ் சங்கீதத்தைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? மரியம்மாள் எலிசபெத்தோடு எவ்வளவு காலந் தங்கியிருந்தாள்.

---

## 4-ம் அதிகாரம்

### ஸ்நாபக அருளப்பரின் ஜனனம்

எலிசபெத்தம்மாளுக்கு பிரசவகாலம் நிறைவேறவே அவளொரு குமாரனைப் பெற்றாள். பிள்ளைக்கு விருத்தசேதனஞ் செய்யும்போது அதற்கு நாமகரணஞ் சூட்டுவது யூதருக்குள்ள வழக்கமாதலால், அயலார் கூட்டங்கூடி தகப்பனுடைய பெயரைப் பிள்ளைக்கிட வேண்டுமென்று சொன்னார்கள். எலிசபெத்தம்மாளோ

* இந்த தீர்க்கதரிசனம் இவ்விருபது நூற்றாண்டுகளாய் கத்தோலிக்கு திருச்சபையில் பிரியதத்த மந்திரத்தை நாம் செபிப்பதனால் நிறைவேறிவருகின்றது.



அதற்குச் சம்மதியாமல் அருளப்பனென்று அழைக்கப் படவேண்டுமென்றாள்.

சிலர் சந்தேகித்துத் தகப்பனைக் கேட்க, அவர் ஊமையானதால் 'அருளப்பன்' என்று ஓர் பலகையின்பேரில் எழுதிக் காட்டினார். அச்சணமே சக்கரியாசின் வாயும் நாவும் கட்டவிழ்க்கப்பட, அவர் வாய் திறந்து பேசி சர்வேசுரனைத் துதிக்கவும், அவருடைய அற்புதாச்சரியங்களைப் பகிரங்கப்படுத்தவும் தொடங்கினார். இவற்றைக் கண்டவர்களும் கேட்டவர்களுமாகிய சகலரும் பயப்பிராந்திகொண்டவர்களாய், "இப் பாலன் எப்படிக்கொத்தவனாயிருப்பானோ? ஏனெனில் ஆண்டவருடைய கரம் அவனோடிருந்தது" என்று ஒருவரோடொருவர் ஆச்சரிய பிரமிப்போடு பேசிக்கொண்டார்கள். இந்த அதிசயமான சங்கதிகள் யூதேயாவின் மலைநாடெங்கும் பரவவே, சிலருக்கு நம்பிக்கையும் வேறு சிலருக்கு அச்சமுமுண்டாயின.

பாலன் தேகத்தில் வளர்ந்ததுபோல் ஞானத்திலும் வளர்ந்துகொண்டுவந்தார். அவர் இளம்பிராயத்திலே காட்டுக்குப்போய் செபதவங்களைச் செய்து, யூதேயாவில் இஸ்ராயேலருக்குப் பிரசங்கஞ்செய்ய சர்வேசுரனால் அனுப்பப்படுமட்டும் அங்கேயிருந்தார். 'நமது தூதனை அனுப்புவோம், அவன் நமக்குமுன் வழியை முஸ்திப்புசெய்வான்' என்று மலாக்கியாஸ் சொன்ன தீர்க்கதரிசனம் அருளப்பரைப்பற்றியதாமே.

வினா.—அருளப்பர் பிறந்தபோது என்ன சம்பவித்தது? அவருக்கு விருத்தசேதனமானபோது சம்பவித்ததென்ன? அருளப்பரைப்பற்றி யென்ன நினைத்தார்கள்? அவர் எங்கே போனார்?

---

## 5-ம் அதிகாரம்

### சேசுக்கிறீஸ்துநாதருடைய ஜனனம்

(கி. பி. 1. உ. பி. 4000.)

தன் மனைவியாகிய மரியம்மாள் கருப்பந்தரித்திருக்கிறாளென்று சூசையப்பர் கண்டு சஞ்சலத்துக்குள்ளாகி, அவளிடத்தில் நடந்திருக்கும் பரமரகசியத்தையறியாதபடியால், இரகசியமாக அவளை நீக்கிவிடத் தீர்




மானம் செய்துகொண்டார். அவர் அதைப்பற்றி தனக்குள் யோசித்துக்கொண்டிருக்கையில் ஆண்டவரின் தூதன் நித்திரையில் அவருக்குத் தோன்றி: "சூசையப்பரே! நீர் பயப்படவேண்டாம். கடவுளுடைய வல்லமை அவளுக்கு நிழலிட்டதால் அவள்



கருப்பந்தரித்திருக்கிறாள். மேலும் அவளிடத்தில் பிறக்கும் பிள்ளைக்கு இரட்சகர் என்று அர்த்தமுள்ள சேசு என்னும் நாமகரணஞ் சூட்டுவீர்" என்று ஆறுதல் சொன்னார். தேவதூதன் கட்டளையிட்டபிரகாரம் சூசையப்பர் நடந்துகொண்டார்.

அக்காலத்தில் உலகமுழுமையும் ஜனத்தொகையெடுக்கும்படி உரோமை சக்கரவர்த்தியாகிய அகுஸ்துஸ் என்பவன் ஒரு கட்டளை பிறப்பித்தான். இவ்வெண்ணிக்கை முதலில் யூதேயாவில் ஆரம்பிக்கப்பட, ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஜன்ம நாட்டுக்குப் போய் பேரெழுதிவைக்கவேண்டியதாயிற்று. சூசையப்பரும் மரியம்மாளும் தாவீது வம்சத்தைச் சேர்ந்தவர்களானதால் தாவீதின் நகரமாகிய பெத்லேமூருக்குப் புறப்பட்டுப்போனார்கள்.

அவர்கள் பெத்லேமூர் சேர்ந்தபோது, ஊரெங்கும் ஜனக்கும்பலாயிருந்ததால் சத்திரங்களிலாவது தங்கள் சிநேகிதர் வீடுகளிலாவது தங்க இடமின்றி ஊருக்கு வெளியேயிருந்த ஒரு மாட்டுத்தொழுவத்தில் தங்கினார்கள். மாடும் கழுதையுமிருந்த அந்த விடத்திலேயே, தேவகுமாரனும், சகலத்துக்கும் எசமானனுமாகிய சேசுக்கிறீஸ்துநாதர் பிறந்தார். கன்னித்தாயாகிய மரியம்மாள் மகா சந்தோஷத்துடன் பிள்ளையைக் கந்தைத்துணியால் பொதிந்து மாட்டுத்தொட்டியில் அவரைக் கிடத்தினாள். "பெத்லேமே! நீ யூதா நகரங்களில் சிறியதாயினும், உன்னிடமிருந்து இஸ்ராயேலை ஆள்பவர் வருவார்" என்று மிக்கேயாஸ் சொன்ன தீர்க்கதரிசனம் அன்று நிறைவேறலாயிற்று.

வினா.—சூசையப்பரைப்பற்றி யென்ன சொல்லப்பட்டிருக்கிறது? அவர் மரியம்மாளை நீக்கிவிடவேண்டுமென்ற

எண்ணத்திலிருந்து எப்படி தவிர்க்கப்பட்டார்? அருளப்பரைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? மரியம்மாளும் சூசையப்பரும் ஏன் பெத்லேமுக்குப் போனார்கள்? கிறீஸ்துநாதர் எங்கே பிறந்தார்? எந்த தீர்க்கதரிஸனம் நிறைவேறினது?

---

## 6-ம் அதிகாரம்

### ஆயர்

கிறீஸ்துநாதர் பிறந்த அன்று இராத்திரி, பெத்லேமுக்குக் கொஞ்சந் தொலையில் சில இடையர் தங்கள் மந்தைகளைக் காத்துக்கொண்டிருந்தார்கள். உடனே ஆண்டவரின் தூதன் அவர்களுக்கு தரிசனமாகவே, பிரகாசமான சுடரொளி அவர்களைச் சூழ்ந்துகொண்டது. அதனால் அவர்கள் அதிகமாய்ப் பயந்தார்கள். ஆனால் தேவதூதன்: "நீங்கள் அஞ்சவேண்டாம்; உங்களுக்குப் பெரிய சந்தோஷமுள்ள சுபசெய்தியை அறிவிக்க வந்தேன். உலகரட்சகராகிய கிறீஸ்து ஆண்டவரென்னப்படும் ஓர் குழந்தை பெத்லேமில் பிறந்திருக்கிறார். அக்குழந்தை கந்தை வஸ்திரங்களாற் போதியப்பட்டு மாட்டுத்தொட்டிவிற் கிடத்தப்பட்டிருப்பதைக் காண்பீர்கள்; அதுவே உங்களுக்கு அடையாளமாம்" என்றார்.

அவர் அப்படிச் சொல்லிமுடிக்கவே, தேவதூதரிலனேகர் வானத்தில் தோன்றி: "உன்னத பரமண்டலங்களில் சர்வேசுரனுக்குத் தோத்திரமும், பூமியில் நல்ல மனதுள்ள மனிதர்களுக்குச் சமாதானமும் உண்டாகக்கடவது" என்று பாடினார்கள். சம்மனசுக்கள் அதரிசனமாகவே, ஆயர் தீவிரமாய் பெத்லேமுக்குப்



போய் தொட்டியில் கிடத்தப்பட்டிருந்த திவ்ய குழந்தையைத் தரிசித்தார்கள். பிறகு அவர்கள் கண்டதும் கேட்டதுமாகிய யாவற்றையும்பற்றி மரியம்மாளுக்கும் சூசையப்பருக்கும் சொல்லி ஆச்சரியத்துடன் இராசபாலனை ஆராதித்து, சர்வேசுரனைத் துதித்துக்கொண்டு தங்களில்லங்களுக்குத் திரும்பிப்போனார்கள்.

எட்டு நாளைக்குப்பிறகு குழந்தைக்கு வேதக் கட்டளைப்படி விருத்தசேதனச் சடங்கை நிறைவேற்றி சேசு வென்னும் நாமகரணஞ் சூட்டினார்கள்.

வினா.—இடையரைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது? அவர்களுக்குச் சொன்ன அடையாளமென்ன? திவ்விய பாலனை யெங்கே கண்டார்கள்? சேசுநாதருக்கு எப்போது விருத்தசேதனஞ் செய்யப்பட்டது?

---

## 7-ம் அதிகாரம்

### கீழ்த்திசை அரசர்

கிறீஸ்துநாதர் பிறந்த சிலநாட்களுக்குப்பிறகு கீழ்த்திசையினின்று மூன்று இராசாக்கள் யெருசலேமுக்கு வந்து, "யூதரிராசாவாக புதிதாய்ப் பிறந்திருக்கிறவரெங்கே? ஏனெனில் கீழ்த்திசையில் அவருடைய நட்சத்திரத்தைக்கண்டு அவரை யாராதிக்க வந்தோம்" என்றார்கள். இதைக்கேட்ட ஏரோது அரசனும் அவனுடன் யெருசலேம் நகரத்தாரெல்லாருங் கலங்கினார்கள். ஆதலால் அவன் பிரதான ஆசாரியர்களையும் வேதபாரகர்களையும் அழைத்துக் கிறீஸ்துநாதர் எங்கே பிறப்பாரென்று அவர்களை வினவ, பெத்லேமில் பிறப்பாரென்று அவனுக்குப் பதிலுரைத்தார்கள்.

ஏரோதன் இதைக்கேட்டு மூவேந்தரையும் இரகசியமாய் வரவழைத்து, "நீங்கள் குழந்தையைக் கண்டபிறகு எனக்கும் வந்து தெரிவியுங்கள்" என்று சொல்லி அவர்களை யனுப்பிவிட்டான். அவர்கள் யெருசலேமைவிட்டுப் புறப்படவே, கீழ்த்திசையிலவர்கள் கண்ட நட்சத்திரம் மறுபடியுமவர்களுக்குத் தோன்றி பிள்ளையிருந்த ஸ்தலத்துக்குமேல் வந்து நிற்குமட்டும்



அவர்களுக்குமுன் சென்றது. அவர்கள் உள்ளே பிரவேசித்துக் குழந்தையைக்கண்டு சாஷ்டாங்கமாக விழுந்து ஆராதித்து பொன், தூபம், வெள்ளைப்போளம் ஆகிய இவைகளை காணிக்கையாக ஒப்புக்கொடுத்தார்கள். ஏரோதன் பிள்ளைக்குக் கெடுதிசெய்ய நினைத்திருந்தபடியால், அவர்கள் அவனிடத்தில் மறுபடி போகவேண்டாமென்று நித்திரையில் தேவ உத்த



பெற்று வேறு வழியாய் தங்கள் தேசத்துக்குத் திரும்பிப்போனார்கள்.

புத்தி.—நமக்கும் ஓர் நட்சத்திரமுண்டு. அதாவது தேவ இஷ்டப்பிரசாதமாம். நட்சத்திரத்தைப்போல் அது மோட்ச யெருசலேமுக்குப் போகும் வழியை நமக்குக் காட்டி ஞான பிரகாசத்தைத் தந்து திருச்சபையாற் கற்பிக்கப்பட்ட சத்தியத்தை யவலம்பிக்கச்செய்கிறது.

வினா.—சாஸ்திரிகள் எங்கிருந்து வந்தார்கள்? ஏரோதன் அவர்கள்மட்டில் நடந்த விதமென்ன? மறுபடியும் தோன்றினதெது? அவர்கள் யாரைக் கண்டார்கள்? அவர்கள் என்ன காணிக்கைகளைச் செலுத்தினார்கள்? அவர்களுடைய சுயதேசத்துக்கு எப்படி திரும்பிப்போனார்கள்?

---

## 8-ம் அதிகாரம்

### சேசுநாதர் தேவாலயத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்டது

சேசுநாதர் பிறந்த நாற்பதாம் நாள் அவரை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கும்படியாக, தேவ கட்டளைப்பிரகாரங் காணிக்கைப் பொருளாகிய இரண்டு காட்டுப்புறாவை யெடுத்துக்கொண்டு மரியம்மாளுஞ் சூசையப்பருந் தேவாலயத்திற்குப் போனார்கள்.

அக்காலத்தில் சிமையோனென்கிற நாமமுடைய ஒருவர் யெருசலேமிலிருந்தார். அவர் மிகுந்த தேவ பக்தர்; தான் இரட்சகரைக் காணுமுன் இறப்பதில்லை யென்று இஸ்பிரீத்துசாந்துவினால் அறிந்திருந்தார். மரியம்மாளுஞ் சூசையப்பருந் தேவாலயத்தில் பிரவேசித்தபோது, சிமையோனும் இஸ்பிரீத்துசாந்துவின் ஏவுதலால் ஆலயத்தில் நுழைந்து, பிள்ளையைக்கண்டு

அவரைத் தமது கரங்களிலேந்தி, "ஆண்டவரே! இப்போது உமது அடியானைச் சமாதானமாகப் போகவிடும்; ஏனெனில், மனுகுலத்துக்கு நீர் நியமித்திருந்த இரட்சகரை என் கண்களே கண்டன" என்று மகிழ்ச்சியோடு கூறினார்.

பின்னுஞ் சிமையோன் மரியம்மாளையுஞ் சூசையப்பரையும் ஆசீர்வதித்து, மரியம்மாளைப் பார்த்து:



"ஒருநாள் வியாகுல வாளால் உமது இருதயம் ஊடுருவப்படும்" என்றார்.

அந்நேரத்தில்தானே அன்னம்மாளென்ற தீர்க்கதரிசினியும் தேவாலயத்தில் பிரவேசித்து, அவளும் பிள்ளையைக் கையிலேந்தி ஆண்டவரைத் துதித்தாள். பிறகு அவள் இஸ்ராயேலின் இரட்சிப்புக் கெதிர்பார்த்திருந்த அனைவருக்கும் இச்சுபசெய்தியை யறிவித்தாள்.



வினா.—சேசுநாதர் எப்போது தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டார்? அங்கே என்ன சம்பவித்தது? சிமையோன் சொன்னதுஞ் செய்ததுமென்ன? அன்னம்மாள் என்னசெய்தாள்?

---

# 9-ம் அதிகாரம்

## எஜிப்துக்கு ஓடிப்போகுதல்

மூன்றிராசாக்களுந் தன்னிடம் வாராததைக்கண்டு எரோதன் கோபத்தால் பொங்கி, புதிதாய்ப் பிறந்த அரசனை நிர்மூலஞ்செய்யத் தீர்மானித்துக்கொண்டு, பெத்லேமிலும் அதைச் சூழ்ந்த நாடுகளிலுமுள்ள சகல பிள்ளைகளையுங் கொன்றுவிட தாக்கீது செய்தான். சர்வேசுரன் அக்குழந்தையை எவ்வளவோ சுலபமாய்க் காக்கக்கூடுமென்று அவன் நினையாமல், மற்றவர்களோடு சேசுநாதருந் தவறாமல் கொல்லப்படுவாரென்னும் வீணெண்ணங்கொண்டான்.

எரோதன் குற்றமற்ற சிசுக்களைக் கொல்ல எத்தனப்பட்டுக்கொண்டிருக்கையில், ஒரு தேவதூதன் நித்திரையில் சூசையப்பருக்குத் தோன்றி, பிள்ளையையும் அதன் தாயையுங் கூட்டிக்கொண்டு எஜிப்துக்கு ஓடிப்போய் மறுபடி உத்தரவாகிறவரையில் அவ்விடத்திலேயே இருக்கும்படியாகக் கட்டளையிட்டார். சூசையப்பர் முறைப்பாடான சொற்ப வார்த்தைமுதலாய்ச் சொல்லாமல், உடனே எழுந்திருந்து பிள்ளையையும் அதன் தாயையுங் கூட்டிக்கொண்டு எஜிப்துக்குப் புறப்பட்டுப்போனார்.

அவர் போனவுடனே எரோதனின் சேவகர் பெத்லேமுக்குவந்து, தாய்மாரின் கரங்களிலிருந்த குழந்தை

களைப் பிடித்திழுத்துக் கொலைசெய்தார்கள். அப்பொழுது ஒவ்வொரு வீட்டிலும் அழுகையும் புலம்பலுமுண்டாயின. "தன் பாலர்களினிமித்தம் அழுகிற இராக்கேலென்பவள் அவர்களில்லாமையால் ஆறுதலடைய மனங்கொள்ளாதிருந்தாள்" என்று எரேமியாஸ் சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறினது. எரோதனுடைய குரூர செய்கைக்குத் தண்டனையாக சில வருஷங்களுக்குப்பிறகு அவன் மகா பயங்கர வேதனைப்பட்டு அகோரமாய்ச் செத்தான்.

மறுபடியுந் தேவதூதன் சூசையப்பருக்குத் தரிசனையாகி, எரோதன் இறந்தபடியால் நீர் யூதேயாவுக்குத் திரும்பலாமென்று சொல்லவே, சூசையப்பர் எழுந்து பிள்ளையையும் மரியம்மாளையுங் கூட்டிக்கொண்டு திரும்பிவந்து நசரேத்தூரில் வசித்துவந்தார்.

புத்தி.—இஸ்ராயேலின் இரட்சகனாகிய மோயீசன் அற்புதமாகக் காப்பாற்றப்பட்டதுபோல, உலக இரட்சகராகிய சேசுநாதரும் புதுமையாகக் காப்பாற்றப்பட்டார்.

வினா.—எரோதன் செய்த கட்டளையென்ன? சேசுநாதர் எப்படிக் காப்பாற்றப்பட்டார்? குழந்தைகளுக்குச் செய்யப்பட்டதென்ன? எரோதன் எப்படிச் செத்தான்? சூசையப்பர் எஜிப்தினின்று திரும்பிவந்து எங்கே வசித்தார்?

---

## 10-ம் அதிகாரம்

### குழந்தை சேசுநாதர் தேவாலயத்திலிருந்த வரலாறு

(கி. பி. 12.)

யூதருடைய வழக்கப்பிரகாரம் மரியம்மாளுஞ் சூசையப்பரும் வருஷந்தோறும் பாஸ்கு பண்டிகை கொண்டாட யெருசலேமுக்குப் போவார்கள். சேசு



நாதருக்குப் பன்னிரு பிராயம் நடக்கையில் தன் தாய் தந்தையரோடு அவரும் யெருசலேமுக்குப் போனார். பண்டிகை முடியவே, தேவமாதாவும் சூசையப்பரும் தங்கள் ஊருக்குத் திரும்பிவிட, சேசுநாதர் யெருசலேமில் தங்கிவிட்டார். தங்களோடு பிள்ளை யில்லாததைக் கண்டு தங்கள் சிநேகிதரோடு இருப்பாரென்று எண்ணி அவர்கள் பிரயாணத்தைத் தொடர்ந்து நடத்தினார்கள்.



இராக்காலமானதும் அவரைத் தேடியும் காணாததால் வெகு துக்கக்கவலைகொண்டு மறுபடியும் யெருசலேமுக்குத் துரிதமாகத் திரும்பிப்போனார்கள்.

மூன்றாந்தினம் அவர் தேவாலயத்தில் சாஸ்திரிகள் நடுவில் உட்கார்ந்து அவர்களுக்குச் செவிகொடுத்து வினவுவதைக் கண்டார்கள். அவருடைய ஞானத்தையும், அவர் சொல்லும் மறுமொழியையுங்கண்டு சகல

ரும் அதிசயப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது அவருடைய தாயார் அவரை யணுகி: "மகனே! ஏன் எங்களுக்கிப்படிச் செய்தீர்?" என்று கேட்க: "என் பிதாவுக்குரியவைகளில் அலுவலாயிருந்தேன்" என்று வெகு அன்போடு விடைபகர்ந்தார். பின்னும் அவர் அவர்களோடு திரும்பி நசரேத்தூருக்குவந்து அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார். அவரும் சர்வேசுரனுக்கும் மனிதருக்கு முன்பாக ஞானத்தில் வளர்ந்துகொண்டுவந்தார்.

வினா.—சேசுநாதருக்குப் பன்னிரண்டு பிராயமான போது என்ன சம்பவித்தது? அவரை எங்கே கண்டார்கள்? அவர் தாய்தந்தையர்மட்டில் நடந்துகொண்ட விதம் எப்படி?

---

## 11-ம் அதிகாரம்

### சேசுநாதரின் பகிரங்க சீவியம்—ஸ்நாபக அருளப்பருடைய பிரசங்கம்

சேசுநாதர் நசரேத்தூரில் முப்பது வருஷகாலமாய் அந்தரங்கமாக சீவித்துவந்தார். அவர் பகிரங்கமாய்ச் சீவிக்க காலம் வரவே, சிறுவந்தொட்டு வனாந்தரத்தில் வசித்துவந்த ஸ்நாபக அருளப்பரை, காட்டைவிட்டு வெளியேவந்து ஜனங்களுக்குப் பிரசங்கஞ்செய்யும்படியாகக் கட்டளையிட்டார். அருளப்பரும் அவருக்குக் கீழ்ப்படிந்து யோர்தான் நதிக்கடுத்த நாட்டுக்குப்போனார்.

அருளப்பர் செய்யும் பிரசங்கத்தின் கீர்த்தி யெங்கும் பரம்பவே, யெருசலேமிலிருந்தும் யூதேயாவிலிருந்தும் திரளான ஜனக்கூட்டங்கள் யோர்தான் நதிக்



கரையின் திசையை நோக்கிவர, ஒட்டக மயிருடையையும் வார்க்கச்சையையு மணிந்துகொண்டு, வெட்டுக்கிளிகளையுங் காட்டுத் தேனையும் உணவாக உண்டு சீவிக்கும் பெருந்தவசியான அருளப்பரைக் கண்டார்கள். அவரோ "தவஞ்செய்யுங்கள், ஏனெனில் தேவ இராச்சியம் சமீபமாயிற்று" என்று பிரசங்கிக்க, அநேகர் தங்கள் பாவங்களை வெளிப்படுத்தி ஞானஸ்நானம் பெறுவார்கள்.



பரிசேயரிலும் சதுசேயரிலு மநேகர் அருளப்பருடைய பிரசங்கத்தைக் கேட்க வருவதை அவர் கண்டு, "தபஞ்செய்யுங்கள்! அபிரகாம் சந்ததியிலுதித்தோம் என்ற பெருமையை யெண்ணி மோசம்போகாதீர்கள்! ஏனெனில், இப்பொழுதே மரங்களின் வேரில் கோடாலி வைக்கப்பட்டிருக்கின்றது; நற்கனி கொடாத மரங்களெல்லாம் வெட்டுண்டு அக்கினியிற்

போடப்படும்" என்று உரத்த சத்தமாய்ப் பிரசங்கித்தார்.

அருளப்பருடைய புத்திப்பிரசங்கங்கள் ஜனங்களின் மனதில் நன்றாய்ப்பதிந்ததினால், அவர்தான் மேசியாவென்று அநேகர் நம்பினார்கள். ஆனால் அவர்களுடைய எண்ணத்தை அறிந்த அவர் அதைத் தடுத்து, "ஆரணியத்தில் கூவுகிறவனுடைய குரலொலி நானே" என்றார்.

வினா.—சேசுநாதர் நசரேத்தில் எவ்வளவுகாலம் வசித்தார்? ஸ்நாபக அருளப்பரைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? அவர் சத்தமாய் கூவிப் பிரசங்கித்ததென்ன? அருளப்பர் தன்னைப்பற்றி யென்ன சொன்னார்?

## 12-ம் அதிகாரம்

### சேசுநாதர் ஞானஸ்நானம் பெற்றதும், சோதிக்கப்பட்டதும்

சேசுநாதரும் அருளப்பரிடம் யோர்தானில் ஞானஸ்நானம் பெறவந்தார். தான் அவ்வளவு மகத்தானக் காரியத்தைச் செய்ய அபாத்திரனென்று அருளப்பர் முதலில் மறுத்திருந்தும், சேசுநாதர் அவருக்குப் பிரத்தியுத்தாரமாக "இப்போது தடைசெய்யாதீர்; ஏனெனில் இவ்விதமாய் நாம் சர்வ நீதியை நிறைவேற்றத்தக்கது" என்றார். அதனால் அருளப்பர் சேசுநாதருக்கு ஞானஸ்நானங் கொடுக்க, அச்சணமே பரமண்டலங்கள் திறக்கப்பட்டதுமன்றிச் சர்வேசுரனுடைய இஸ்பிரீத்தானவர் புறாவின் வடிவமா யிறங்கி அவர்மேல் வரவுங் கண்டார். மீளவும் பரமண்டலங்களினின்றோர் குரலொலி யுண்டாகி "நமக்குகந்தவரா



யிருக்கிற நம்முடைய நேச குமாரன் இவரே" என்று உரைத்தது.

சேசுநாதர் ஞானஸ்நானம் பெற்றபிறகு, அவர் பசாசினால் சோதிக்கப்படுவதற்கு இஸ்பிரீத்துசாந்துவினால் வனாந்தரத்துக்குக் கூட்டிக்கொண்டுபோகப்பட்டு, அவ்விடத்தில் நாற்பது இரவும் நாற்பது பகலும் உபவாசமாயிருந்த பின்பு பசியுற்றார். அப்போது பசாசு அவரிடம்வந்து: "நீ சர்வேசுரனுடைய சுதனாயிருந்தால்



இந்த கற்கள் அப்பமாகும்படி கட்டளையிடும்" என்றான். அதற்குச் சேசுநாதர்: "மனுஷன் அப்பத்தினால்மாத்திரமல்ல, தேவோக்கித்தமான எந்த வாக்கியத்தினாலும் பிழைக்கிறானென்று எழுதப்பட்டிருக்கிறது" என்றார்.

மறுபடியும் பேயானது அவரைச் சோதிக்கத் துணிவுகொண்டு அவரை யெருசலேமுக்கு எடுத்துக் கொண்டுபோய் தேவாலய சிகரத்தின்மேல் அவரை நிறுத்தி "நீர் சர்வேசுரனுடைய குமாரனாயிருந்தால்

வேழ குதியும், தேவதூதர்கள் உம்மைத் தாங்கிக்கொள்வார்கள்" என்றது. அதற்கு சேசுநாதர் "உன் தேவனாகிய ஆண்டவரைச் சோதியாதிருப்பாயாக" என்றார்.

மூன்றாமுறை சாத்தான் அவரை மிகவும் உயர்ந்த பருவதத்தின்மேலெடுத்துக்கொண்டுபோய், உலக ராச்சியங்களெல்லாவற்றையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து, "நீர் சாஷ்டாங்கமாக விழுந்து என்னை யாராதிப்பீராகில், இவை எல்லாவற்றையும் உமக்குத் தருவேன்" என்று சொன்னான். அப்போது சேசுநாதர் ஞானக்கோபங்கொண்டு, "சாத்தானே அகன்றுபோ, உன் தேவனாகிய கர்த்தாவை ஆராதித்து, அவரொருவரையே சேவிப்பாயாகவென்று எழுதியிருக்கிறது" என்றார். அப்போது சாத்தான் அவரை விட்டகன்றுபோகவே, தேவதூதாளுகி அவருக்குப் பணிவிடைசெய்தார்கள்.

புத்தி.—ஜலப்பிரளயத்தால் உலகத்திலுள்ள பாவ அசுத்தங்கள் சுத்திகரிக்கப்பட்டதுபோல் ஞானஸ்நானமானது ஆத்துமத்திலுள்ள பாவதோஷங்களை அகற்றி அதைப் பரிசுத்தப்படுத்துகிறது.

வினா.—சேசுநாதர் ஞானஸ்நானம் பெற்றபோது என்ன சம்பவித்தது? ஞானஸ்நானத்திற்குப் பிறகு சம்மவித்ததென்ன? கிறீஸ்துநாதர் சோதிக்கப்பட்டதைப்பற்றி விவரமாய்ச் சொல்லு?

---

## 13-ம் அதிகாரம்

### சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுநாதர்

சேசுநாதர் ஞானஸ்நானம் பெற்ற சிலகாலத்துக்குப் பிறகு, அருளப்பர் ஞானஸ்நானங் கொடுத்துக் கொண்டிருந்த நாட்டுக்கு வந்தார். அப்போது அருளப்பர் சேசுநாதரைச் சுட்டிக்காட்டி: "இதோ சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையானவர், உலகத்தின் பாவத்தைப் போக்குகிறவர். எனக்குப்பின் ஒருவர் வருகிறார். அவர் என்னிலும் மேன்மையாய் மதிக்கப்பட்டவரென்று நான் ஏற்கெனவே குறித்துச் சொன்னவர் இவரே. இவர் சர்வேசுரனுடைய குமாரனாயிருக்கிறார். ஏனெனில், இவர் ஞானஸ்நானம் பெற்றபோது, இஸ்பிரீத்துசாந்துவானவர் புறாவின் வடிவமாய் இவர்மேல் இறங்கித் தங்கினதைக் கண்டேன்" என்று கூறினார்.



புத்தி.—யூத வேத முறைமைப்படி நாடோறும் செம்மறிப்புருவை ஆண்டவருக்குப் பலியிட்டதுபோல், புதிய ஏற்பாட்டுப் பலியின் செம்மறிப்புருவையாகிய சேசுக்கிறீஸ்துநாதர் ஒருவிசை கல்வாரிமலையில் பலியிடப்பட்டும், இக்காலத்திலும் திவ்யபூசையில் பிரதிதினமும் அவ்வண்ணம் ஒப்புக்கொடுக்கப்பட்டுவருகிறார்.

வினா.—அருளப்பர் சேசுநாதரை இரண்டாம்விசை கண்டபோது அவரைக் குறித்து என்ன சொன்னார்? செம்மறிப்புருவையைப்பற்றி புதிய ஏற்பாட்டிலும் பழய ஏற்பாட்டிலும் சொல்லியிருப்பதென்ன?

---

## 14-ம் அதிகாரம்

### சேசுக்கிறீஸ்துநாதரின் பிரதம சீஷர்

மறுநாள் சேசுநாதர் யோர்தான் நதிப்பக்கமாய் நடந்துபோகையில் ஸ்நாபக அருளப்பருடைய சீஷராகிய பெலவேந்திரரும் அருளப்பரும் அவரைக் கண்டுகொண்டு அன்றைபத்தினமெல்லாம் அவரோடிருந்தார்கள். சாயங்கால வேளையில் பெலவேந்திரர் தன் சகோதரனாகிய சீமோனை சேசுநாதரிடத்திற் கூட்டிக்

கொண்டுவந்து விட, சேசுநாதர் அவரைப்பார்த்து: "ஜோனாவுடைய மகனாகிய சீமோனே! நீ இனி இராயப்பனென்று அழைக்கப்படுவாய்" என்று மொழிந்தார்.

மறுநாள் சேசுநாதர் பிலிப்பைக்கண்டு "என்னைப் பின்செல்" என்றார். பிலிப்பு அவருடைய வசனங்களைக் கேட்டபிறகு, தன் சகோதரனாகிய நத்தானியேலைத் தேடித்திரிந்து அவரை ஒரு மரத்தடியில் கண்டு, "கடைசியாக மேசியாவென்பவர் வந்துவிட்டார். அவர் யாரெனில் நசரேத்தூரராகிய சேசு என்பவர்தான்" என்று அவருக்குச் சொன்னார். அதற்கு நத்தானியேல் "நசரேத்தூரினின்று யாதோர் நன்மை வரக்கூடுமோ!" என்று அவரைக் கேட்க, பிலிப்பென்பவர் "நீரே வந்து பாரும்" என்றார்.

சேசுநாதர், நத்தானியேல் தம்மிடம் வரக்கண்டு "இதோ, கபடமில்லாத உண்மையான இஸ்ராயேலன்" என்று திருவுளம்பற்றவே, "எதனால் என்னை அறிந்திருக்கிறீர்?" என்று நத்தானியேல் கேட்க, "பிலிப்பு உன்னை அழைக்குமுன் நீ அத்திமரத்தின்கீழிருக்கும்போது உன்னைக் கண்டோம்" என்று சேசுநாதர் திருவுளம்பற்றினார். நத்தானியேல் இதைக் கேட்டு அச்சங்கொண்டு, சேசுநாதரை வணங்கி, "நீரே சர்வேசுரனுடைய குமாரனாயிருக்கிறீர்" என்றார். பிற்காலத்தில் நத்தானியேலென்பவர் பர்த்தலோமேயென்ற நாமம் பூண்டு கிறீஸ்துநாதருடைய சீஷர்களில் ஒருவரானார்.

வினா.—கிறீஸ்துநாதருடைய முதல் சீஷர்களார்? அவர் இராயப்பருக்கு என்ன சொன்னார்? பிலிப்பையும் நத்தானியேலையும்பற்றி என்ன சொல்லியிருக்கிறது? நத்தானியேலின் வேறு பெயரென்ன?



# 15-ம் அதிகாரம்

## கானாவூர்க் கலியாணம்

சேசுநாதர் பிலிப்பையும் நத்தானியேலையும் தம்மைப் பின்செல்லும்படி அழைத்த மூன்று தினங்களுக்குப்பிறகு, கலிலேயா நாட்டிலுள்ள கானாவூரில் ஒரு கலியாணம் நடந்தது. சேசுநாதரும், தேவமாதாவும், புது சீஷரும் கூடி கலியாணத்துக்குப் போயிருந்



தார்கள். விருந்து நடக்கும்போது திராட்ச இரசம் குறைவுபட்டதால் மரியம்மாள் சேசுநாதரை நோக்கி: "இரசமில்லை" என்றாள். சேசுநாதர் வீட்டெசமானுடைய சங்கடத்தை நீக்க இஷ்டமில்லாதவரைப்போல் காணப்பட்டபோதிலும், மரியாயி தன் குமாரனுடைய இரக்கத்தையறிந்து, "அவர் சொல்லுகிறபடி செய்யுங்கள்" என்று ஊழியருக்குக் கட்டளையிட்டாள்.

இரண்டு மூன்று சால் அடங்கும்படியான ஆறு கற்சாடிகள் அங்கேயிருந்தன. அப்போது அவற்றை ஜலத்தால் நிரப்ப சேசுநாதர் ஊழியர்களுக்குக் கட்டளையிட்டார். பிறகு அதை மொண்டு பந்தி விசாரணைக்காரனிடம் கொடுக்கும்படி ஊழியருக்கு அவர் சொல்ல, பந்தி விசாரணைக்காரன் திராட்ச இரசமாக மாறின தண்ணீரைச் சுவைபார்த்தமாத்திரத்தில் அதிசயப்பட்டு மணவாளனை வரவழைத்து முதல்தரமான இரசத்தை முதல் பந்திக்கு உபயோகியாமலிருந்தது சரியல்லவென்று கடிந்துபேசினான்.

சேசுநாதர் செய்த முதற் புதுமை இதுவே. இதைக் கண்டவர்கள் அதிசயப்பட்டதுமல்லாமல், அவர் சர்வேசுரனுடைய சுதனென்றும் விசுவசித்தார்கள்.

புத்தி.—இந்த கானாவூர் கலியாணத்தில் சேசுநாதர் விவாகத்தைப் பரிசுத்தப்படுத்தி அதையொரு தேவத்திரவிய அநுமானமாக ஏற்படுத்தினார். ஜலம் இரசமாக மாறின அந்த மாற்றத்தைவிட இன்னுஞ் சிரேஷ்டமான ஓர் மாற்றம் திவ்யபூசையில் நாடோறும் நடந்தேறிவருகிறது. அதுயாதெனில், இரசமானது சேசுக்கிறீஸ்துநாதருடைய இரத்தமாக மாறுவதாமே.

வினா.—கல்யாண உற்சவத்திற்கு போயிருந்தவர்களார்? அங்கு என்ன இல்லாமற்போனது? எப்படி இரசங் கிடைத்தது? சேசுநாதர் செய்த முதல் புதுமையென்ன? மெய் விவாகம் ஏற்படுத்தப்பட்டதெப்போது?



## 16-ம் அதிகாரம்

### கிறீஸ்துநாதர் தேவாலயத்தின்மட்டில் கொண்டிருந்த சங்கை யாசாரப் பற்றுதல்

(கி. பி. 31.)

சேசுநாதருக்கு 31 வயது நடக்கையில் அவர் பாஸ்கு பண்டிகையை ஆசரிக்கும்படி யெருசலேமுக்குப் போனார். அங்கே தேவாலயத்தில் ஆடு, மாடு, புறா முதலியவைகளை விற்கிறவர்களையும் காசுக்காரர்களையுங்கண்டு பரிசுத்த வைராக்கியங்கொண்டவராய், சிறு கயிறுகளால் ஒருவித சாட்டைசெய்து சர்வேசுரனுடைய ஆலயத்தை அவ்வண்ணம் அசுசிப்படுத்தினவர்களை அடித்துத் துரத்தினார். அவரை ஒருவனும் எதிர்க்கத் துணியவுமில்லை. இடமும் சீக்கிரத்தில் காலியாயிற்று.

அங்கிருந்தவர்களில் சிலர் "நீர் எந்த அதிகாரத்தைக்கொண்டு அப்படிச் செய்தீர்?" என்று அவரைக் கேட்டார்கள். அதற்கு அவர்: "இத்தேவாலயத்தை நிர்மூலமாக்கிப்போடுங்கள், பின்னும் மூன்று நாளைக்குள் அதை யெழுப்புவேன்" என்று பதிலுரைத்தார். அவரோவெனில், தமது சரீரமாகிய தேவாலயத்தைக் குறித்துச் சொன்னாரென்பதை யூதர்கள் அறிந்துகொள்ளாமல், தங்கள் முன்னோர்கள் 40 வருஷகாலமாக உழைத்து ஏராளமான பொன் வெள்ளிச் செலவுசெய்து கட்டின இந்த பிரமாண்டமான தேவாலயத்தைக் குறித்துச் சொன்னாரென்று அவர்கள் தவறாக எண்ணிக்கொண்டார்கள்.

பாஸ்கு பண்டிகையின்போது யெருசலேமிலும் அதற்குச் சமீபமான விடங்களிலும் அவர் செய்த

அநேக புதுமைகளைக்கண்டு வெகுபேர் அவர்பேரில் விசுவாசங்கொண்டார்கள்.

வினா.—சேசுநாதர் தேவாலயத்தை யெப்படி சுத்திகரித்தார்? தேவாலயத்திலிருந்தவர்களுக்கு என்ன சொன்னார்?

---

## 17-ம் அதிகாரம்

### நிக்கோதேமென்பவர் சேசுநாதரைக் காண வருகிறார்

சேசுநாதர் யெருசலேமில் பாஸ்கு பண்டிகையை ஆசரித்துக்கொண்டிருக்கும்போது, யூதர்களுடைய மகா சபையின் அங்கத்தவரான நிக்கோதேமென்பவர் இரவில் சேசுநாதரிடத்தில்வந்து: "குருவே மெய்யாகவே நீர் சர்வேசுரனால் போதகராக அனுப்பப்பட்டுவந்திருக்கிறீர். அப்படியில்லாவிட்டால் நீர் செய்கிற இவ்வற்புதங்களை எவனுஞ் செய்யமாட்டான்" என்று சொன்னார்.

அவர்களிருவருஞ் சற்றுநேரம் சம்பாஷித்தபின் இரட்சண்யமடைய தான் என்ன செய்யவேணுமென்று நிக்கோதேம் அவரைக் கேட்க, "நீ ஜலத்தாலும் இஸ்பிரீத்துசாந்துவாலும் மறுபடி பிறக்கவேண்டும்" என்று சேசுநாதர் சொல்லவே, நிக்கோதேம் இதைக்கேட்டு கலக்கங்கொள்வதை அவர் அறிந்து, தாம் முன்சொன்ன வார்த்தைகளையே மறுபடியுஞ் சொல்லி, "சர்வேசுரன் உலகத்தை இரட்சிக்கத் தமது ஏக குமாரனை யனுப்பினார்" என்று திருவுளம்பற்றினார்.

இவ்வார்த்தைகளால் கிறீஸ்துநாதர் ஞானஸ்நானத்தின் அவசியத்தைப்பற்றி போதித்தார். கத்தோலிக்குத் திருச்சபையும் இதே போதனையை இக்காலத்தில் போதிப்பதுமன்றி, ஞானஸ்நானமில்லாமல் யாதொருவனும் இரட்சண்யமடையக்கூடாதென்றும் படிப்பிக்கின்றது.



புத்தி.—இஸ்ராயேலர் செங்கடலைக் கடந்து எஜிப்து நாட்டு அடிமைத்தனத்தினின்று இரட்சிக்கப்பட்டதுபோல் கிறீஸ்துவர்களும் ஞானஸ்நானத்தின் ஜலத்தைக்கொண்டு பாவ அடிமைத்தனத்தினின்று விடுதலையடைகிறார்கள்.

வினா.—சேசுநாதரைக் காண வந்ததார்? நிக்கோதேம் சேசுநாதருக்கு என்ன சொன்னார்? சேசுநாதர் சொன்ன மறுமொழி யென்ன? கிறீஸ்துநாதர் இந்த சம்பாஷணையில் என்ன கற்பித்தார்?

---

## 18-ம் அதிகாரம்

### சேசுநாதர் யாக்கோபின் கிணற்றண்டை போனபோது சம்பவித்தவை

பாஸ்கு பண்டிகை முடிவாகவே சேசுநார் ஞானஸ்நானங் கொடுத்துக்கொண்டே யூதேயா நாட்டைக் கடந்துபோனார். அவர் நசரேத்துக்குப் போகும்போது சமாரியா நாட்டிலுள்ள சிக்கார் என்னும் பட்டணத்துக்கு வந்தார். அவர் இளைப்பாயிருந்ததால், யாக்கோபு வெட்டுவித்த கிணற்றின்மேல் உட்கார்ந்தார். அவருடைய சீஷர்களோவெனில் அவரை யவ்விடத்தில் விட்டுவிட்டு, அப்பங்கொள்ளப் பட்டணத்துக்குப்போனார்கள்.

சேசுநாதர் அவ்விடத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கும்போது, ஒரு சமாரிய ஸ்திரீ ஜலமொள்ள வந்தாள். அவர் அவளைக் குடிக்க ஜலம் கேட்டதைப்

பற்றி அவள் ஆச்சரியப்பட்டு: "நீ யூதனாயிருக்கச் சமாரித்தாளாகிய என்னிடத்தில் தண்ணீர் கேட்பதெப்படி? ஏனெனில் யூதர் சமாரியர்களோடு சகவாசஞ்செய்கிறதில்லையே" என்றாள்.

சேசுநாதர் மறுமொழியாக: "எனக்கு ஜலங்கொடுவென்று உனக்குச் சொல்லுகிறவரின்னாரென்று அறிந்திருப்பாயேயாகில் நீயே அவரைக் குடிக்கக் கேட்டிருப்பாய்; அவரும் ஒருபொழுதும் தாகம் உண்டுபண்ணாத ஜீவிய ஜலத்தை உனக்குக் கொடுத்திருப்பார்" என்று மொழிந்தார். ஜீவிய ஜலமென்றும் அதைக் குடிப்பவர்கள் தாகமடையமாட்டார்களென்றும் அவள் கேட்டு: "ஐயாவே நான் மொண்டுகொள்ள இங்கே வராதபடி அத்தண்ணீரை எனக்குத் தந்தருளும்" என்றாள். பிறகு சேசுநாதர் அவள் இரகசியமாய்ச் செய்த பாவங்களையெல்லாம் அவளுக்குத் தெரியப்படுத்தினபோது, சர்வேசுரனுடைய வரம் அவரிலிருப்பதை அவள் ஸ்பஷ்டமாக வறிந்து, "ஐயாவே! நீர் தீர்க்கதரிசியாயிருக்கிறீர்" என்றுரைத்தாள். "மேலும் எங்கள் பிதாக்கள் கரிசிம்மலையிலாராதித்தார்கள். நீங்களோ யெருசலேமில் ஆராதனை செலுத்துகிறீர்கள்; இவர்களில் யார் செய்வது சரி?" என்று அவள் கேட்க, சேசுநாதர் "கரிசிம்மலையிலாவது யெருசலேமிலாவது நீங்கள் கடவுளை யாராதியாத காலம் வரும். அதுவும் நெருங்கியிருக்கிறது" என்று மறுமொழி யளித்தார்.

மேசியாவென்பவர் தாமேயென்று சேசுநாதர் சொல்லக்கேட்ட அந்த ஸ்திரீயானவள் தன் குடத்தை அவ்விடத்தில் வைத்துவிட்டுத் தீவிரமாகப் பட்டணத்துக்குப் போய் சம்பவித்த காரியங்களைப்பற்றி ஜனங்களுக்குச் சொல்லவே, சமாரித்தார் சேசுநாதரிடம்வந்து அவர் தங்களூரில் தங்கவேண்டுமென்று மன்றாடினார்கள். அவரும் அவ்வூரில் இரண்டு நாளிருந்து, ஜனங்களுக்குப் பிரசங்கஞ்செய்து போதித்தார். அவர் போதனைகைக் கேட்டு அநேகர் அவரை விசுவசித்தார்கள்.



புத்தி.—சேசுநாதர் கொடுக்கும் ஜலம் எதுவெனில் ஆத்துமத்துக்கு ஞானப்பிரகாசமும், ஆசாபாசங்களை யடக்குவதற்கவசரமான வரப்பிரசாதமுமேயாம். சர்வேசுரனை உண்மையாகச் சிநேகிப்பவர்கள் வெளிக்கு பத்தியாயிருப்பது மாத்திரம் போதாது. ஆனால் தாழ்ச்சி, விசுவாசம், பிறசினேகம் ஆகிய இவற்றை யவருக்குக் காணிக்கை செலுத்தவேண்டும். இப்புண்ணியங்கள் சத்திய வேதத்தின் அஸ்திவாரங்களாமே.

வினா.—யாக்கோபின் கிணற்றண்டை யென்ன சம்பவித்தது? சேசுநாதர் என்ன கேட்டார்? அந்த ஸ்திரீ ஏன் ஆச்சரியப்பட்டாள்? சேசுநாதர் அவளுக்குத் தெரியப்படுத்தினதென்ன? பட்டணத்து ஜனங்களுக்கு அவள் என்ன சொன்னாள்? சமாரித்தார் என்ன செய்தார்கள்? சேசுநாதர் நடந்துகொண்ட விதமெது?

---

## 19-ம் அதிகாரம்

### சேசுநாதர் நசரேத்தில் பிரசங்கித்தல்

சேசுநாதர் சிக்கார் என்னும் ஊரைவிட்டுத் தமது சுயநகரமாகிய நசரேத்துக்குவந்தார். அவருடைய வழக்கப்படி ஒருநாள் செபக்கூடத்திற் பிரவேசித்தார். அவ்விடத்தில் அநேகர் கூடியிருந்ததினால் அவர் வாசிக்கத் தொடங்கினார். அப்போது தீர்க்கதரிசியாகிய இசையாசின் ஆகமம் அவருக்குக் கொடுக்கப்பட,

அவர் புத்தகத்தைத் திறந்தமாத்திரத்தில்: "ஆண்டவருடைய இஸ்பிரீத்துசாந்துவானவர் என்பேரிலிருக்கிறார். அவர் என்னை அபிஷேகம்பண்ணி, தரித்திருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், இருதயம் நொறுக்கப்பட்டவர்களை சௌக்கியப்படுத்தவும் அவர் என்னை அனுப்பினார்" என்று எழுதப்பட்ட வாக்கியத்தை வாசித்தார்.

பின்னும் புத்தகத்தை மூடி அதை சாஸ்திரிகள் கையிற் கொடுக்கவே, சகலரும் ஆச்சரிய பிரமிப்புடன் பார்த்துக்கொண்டிருக்க, மேசியாவைப்பற்றி தீர்க்கதரிசிகள் சொன்னதெல்லாம் எடுத்துக்காட்டி, தாமே மேசியாவென்றுந் தெளிவாய் ருஜுப்படுத்தினதைக் கண்ட அவர்கள் மலைப்புற்று "இவர் தச்சனுன சூசையுடைய மகனல்லவோ!" என்று சொல்லக்கேட்ட சேசுநாதர்: "நீங்கள் நம்மை நம்பாதது அதிசயமன்று; ஏனெனில் ஓர் தீர்க்கதரிசி தன் ஜன்மநாட்டில் அங்கீகரிக்கப்படமாட்டான்; மேலும் எலியாஸ் முதலாய் தன் சொந்த ஜனங்களால், புறக்கணிக்கப்பட, சரெப்தா ஊரின் அஞ்ஞான விதவைக்கு சகாயம்புரிந்தால்லோ?" என்றார்.

தங்களைக் குறித்தே இவைகளைச் சொன்னாரென்று ஜனங்களறிந்து கோபங்கொண்டு, இனி யாதொன்றும் பேசாதபடி அவரைத் தடுத்தவுடன், நகரத்துக்குப் புறம்பே நடத்தி அவரைக் கீழே தள்ளிவிடும்படி அப்பட்டணங் கட்டப்பட்டிருந்த மலையுச்சிக்குக் கூட்டிக்கொண்டுபோனார்கள். அங்கு சேர்ந்தவுடனே சேசுநாதர் மகா சாந்த அமரிக்கையுடன் அவர்கள் மத்தியிலிருந்து அதரிசனமானார். இதைக்கண்ட அவருடைய சத்துருக்கள் வெட்கி நின்றார்கள்.



வினா.—சேசுநாதர் நசரேத்தில் என்ன செய்தார்? ஜனங்களைக் கலகப்படுத்தினதென்ன? அவர்கள் கேட்ட கேள்வியென்ன? அவர் என்ன மறுமொழி சொன்னார்? அவர்கள் சேசுநாதருக்கு என்ன செய்ய நினைத்தார்கள்? அவர் எப்படி தப்பித்துக்கொண்டார்?

---

# 20-ம் அதிகாரம்

## சேசுநாதர் கப்பர்னூமில் செய்த புதுமைகள்

சேசுநாதர் நசரேத்திலிருந்து கப்பர்னூமுக்குப்போய் ஓய்வுநாட்களில் ஜனங்களுக்குப் போதித்துக்கொண்டிருந்தார். அவரைப்போல் வேறொருவரும் போதியாதபடியாலும் அவருடைய வார்த்தைகள் ஜனங்களின் இருதயத்தில் அம்புபோல் பாய்ந்தபடியாலும் யாவரும் அதிசய பிரமைகொண்டார்கள். அவர் அப்படி போதித்துக்கொண்டிருந்தபோது, ஆவேசமேறின ஒருவன் உரத்த சத்தமாய்க் கூப்பிட்டு: "எங்களை விட்டுவிடும், உமக்கு மெங்களுக்குஞ் சம்பந்தமென்ன? நீர் சர்வேசுரனுடைய பரிசுத்தராயிருப்பதை அறிந்திருக்கிறோம்" என்றான். ஆனால் சேசுநாதர் பசாசை அதட்டி அம்மனிதனிடத்திலிருந்து அதைத் துரத்தினார். அதைக்கண்ட ஜனங்களுக்குப் பயங்கரமுண்டானது.

சேசுநாதர் செபக்கூடத்தைவிட்டு எழுந்து சிமோனுடைய வீட்டுக்குப்போக, சீமோனுடைய மாமியார் கடின காய்ச்சலாய்க்கிடந்தாள். அவளுடைய சினேகிதர் அவளுக்காகப் பரிந்துபேச, சேசுநாதர் அவளண்டையிற்போய், அவள் கையைப்பிடித்து தூக்கினமாத்திரத்தில் காய்ச்சல் அவளை விட்டொழிந்தது. உடனே

அவளெழுந்து அவருக்கும் அவருடைய சீஷர்களுக்கும் பணிவிடைசெய்தாள்.

அன்று சாயங்கிரமே ஊர் ஜனங்கள் பல வியாதிக்காரரையும் ஆவேசமானவர்களையுங் கூட்டிக்கொண்டு இராயப்பருடைய வீட்டுக்குவர, சேசுநாதர் உரோகஸ்தர்களை சொஸ்தப்படுத்தி பசாசுக்களைத் துரத்தினார். மறுநாள் அவர் கலிலேயாவுக்குப்போய் அவ்விடத்திலுமிவ்வித அதிசயங்களைச் செய்தார்.

புத்தி.—பூத பிரமாண காலத்தில் அர்ச்சியசிஷ்டவர்களும் தீர்க்கதரிசிகளும் சர்வேசுரனுடைய அதிகாரத்தைக்கொண்டு அவருடைய நாமத்தால் புதுமைகளைச் செய்துவந்தார்கள். சேசுநாதரோவெனில் தமது சொந்த வல்லமையைக்கொண்டும் தமது சொந்த நாமத்தாலும் புதுமைகளைச் செய்துவந்தார்.

வினா.—சேசுநாதர் கப்பர்னகூமில் என்ன செய்தார்? அவர் செய்த புதுமை யெது? அர்ச்சியசிஷ்டவர்களும் தீர்க்கதரிசிகளும் என்ன செய்தார்கள்?

---

## 21-ம் அதிகாரம்

### சேசுநாதர் திரளான மச்சங்களைப் பிடிக்கச்செய்த அற்புதம்

சேசுநாதர் கப்பர்னகூமைக் கடந்து ஜெனசரேத் என்னும் ஏரிக்குச் சென்றார். அவ்விடத்தில் ஜனங்கள் அவரைக் காணவும் அவருடைய வார்த்தைகளைக் கேட்கவும் அவரை நெருங்கிக்கொண்டிருந்ததினால் கரையோரமாயிருந்த இராயப்பருடைய படகிலேறி, அதைக் கரைக்குச் சற்று தூரமாய்த் தள்ளும்



படிச் சொல்லி அவர் அதில் உட்கார்ந்து ஜனங்களுக்குப் போதித்தார்.

சேசுநாதர் பிரசங்கஞ் செய்து முடிந்தபின், தோணியை ஆழமான தண்ணீரில் தள்ளி வலையை வீசும்படி இராயப்பருக்குச் சொன்னார். இராயப்பர் அவருக்குப் பிரத்தியுத்தாரமாக: "போதகரே! இரவெல்லாம் நாங்கள் பிரயாசைப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை. ஆகிலும் உமது வார்த்தையின்படியே வலையைப் போடுவோம்" என்றார். அப்படியே அவர்கள் செய்தமாத்திரத்தில் ஏராளமான மச்சங்களகப்பட்டு, வலை கிழிகிறதாயிருந்தபடியால், தங்களுக்கு உதவி செய்யும்படி வேறு படகிலிருந்த தங்கள் கூட்டாளிகளுக்கு சயிக்கினை காட்டி வரவழைத்து, இரண்டு படகுகளையும் நிரப்ப, அவை முழுகிப்போவதாயிருந்தன. இதைக்கண்ட இராயப்பர் சேசுநாதருடைய பாதங்களில் விழுந்து: "ஆண்டவரே! பாவியாயிருக்கிற அடியேனை விட்டகன்றருளும்" என்றார். ஆனால் சேசுநாதர்: "பயப்படாதே! இதுமுதல் மனிதனைப் பிடிக்கிறவனாயிருப்பாய்" என்றார். இராயப்பரும் அவருடைய தோழரும் படகுகளைக் கரையிற் செலுத்தியபின் தங்களுக்கிருந்த யாவற்றையும் விற்றுப்போட்டு சேசுநாதரைப் பின்சென்றார்கள்.

புத்தி.—சேசுநாதர் ஜனங்களுக்குப் போதிக்கும்படி இராயப்பருடைய படகைத் தெரிந்துகொண்டார். இராயப்பருடைய படகு சத்திய கத்தோலிக்கு திருச்சபைக்கு அடையாளமாயிருந்தது. இராயப்பருக்குப் பதிலாளிகளான பாப்புமார்கள்மூலமாய் சேசுநாதர் உபதேசித்து திருச்சபையை நடத்திவருகிறார். புதுமையாக மீன்களைப் பிடித்ததும் ஒரு அறிகுறியே. கடல் உலகமாகும், வலை திருச்சபையாகும், மீன் பிடிப்போர் மேற்றிராணிமாரும் குருக்களுமாவார்கள்.

கடைசியாய் மச்சங்கள், இரட்சண்யமடையும்படி திருச்சபையில் பிரவேசிக்கும் விசுவாசிகளுமென வறிக.

விந.—ஜெனசரேத் ஏரியில் சேசுநாதர் என்ன செய்தார்? அவர் செய்த புதுமையென்ன? இராயப்பரின் படகைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது?

## 22-ம் அதிகாரம்

### திமிர்வாதக்காரன்

ஒருநாள் சேசுநாதர் கப்பர்னூமூரிலுள்ள ஒரு வீட்டில் பரிசேயருக்கும் சாஸ்திரிகளுக்கும் போதித்துக் கொண்டிருக்கையில், திமிர்வாதக்காரனை ஓர் மனிதனை அவ்விடத்துக்குக் கொண்டுவந்தார்கள். அப்போது உள்ளே செல்லக்கூடாதபடி அவ்வளவு நெருக்கமாய் ஜனங்கள் நிறைந்திருந்ததால், வீட்டின்மேலேறி கூரையைப்பிரித்து அதன் வழியாய் வியாதிக்காரனை சபை மத்தியில் இறக்கினார்கள்.

சேசுநாதர் அவர்களுடைய விசுவாசத்தைக்கண்டு வியாதிக்காரனைப் பார்த்து: "உன் பாவங்கள் பொறுக்கப்பட்டன" என்று சொன்னார். சாஸ்திரிகளும் பரிசேயரும் இதைக் கேட்டு "இம்மனிதன் தேவதூஷணஞ் சொல்லுகிறான்; தேவனொருவராலொழிய பாவங்களை மன்னிக்க வேறு யாரால் கூடும்?" என்றார்கள். அவர்களுடைய நினைவுகளை யறிந்த சேசுநாதர், "பாவங்களுக்குப் பொறுத்தல் அளிப்பது சுளுவோ அல்லது இம்மனிதனுக்குச் சௌக்கியத்தைக் கொடுப்பது சுளுவோவென்று" அவர்களை வினவி "ஆயினும் மனுமகன் பாவங்களைப் பொறுக்க வல்லமையுடையவராயிருக்கிறாரென்று நீங்களறியும்படியாக நான் வியாதிக்காரனை நோக்கி சொல்லுவதாவது: நீ யெழுந்து உன் கட்டிலை யெடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப்போ" என்றார். அவனும் அப்படியே எழுந்து சர்வேசுரனைத் துதித்துக்கொண்டுபோனான்.



இந்த மகா புதுமையைக் கண்டவர்களெல்லோரும் பிரமிப்படைந்து கலங்கி நின்றார்கள். மேலும் "உன் பாவங்கள் பொறுக்கப்பட்டன" என்று சேசுநாதர் சென்னதற்கத்தாட்சியாக, அவர் அம்மனிதனை சௌக்கியப்படுத்தினதையுங் கண்டார்கள். ஆகையால் அங்கிருந்த சகலரும் "ஆச்சரியத்துக்குரியவைகளை இன்று கண்டோம்" என்று கூக்குரலிட்டார்கள்.

விந.—திமிர்வாதக்காரனுக்கு சேசுநாதர் என்ன என்ன சொன்னார்? வேதபாரகர் என்ன சொன்னார்கள்? சேசுநாதர் என்ன செய்தார்? ஜனங்கள் இந்த புதுமையின் பேரில் கொண்ட எண்ண மென்ன?

## 23-ம் அதிகாரம்

### பருவதத்தின்மேல் செய்த பிரசங்கம்

அப்படியிருக்க சேசுநாதர் ஜனக்கூட்டங்களைக் கண்டு பருவதத்தின்மேலேறி உட்கார்ந்தபின்பு, அவருடைய சீஷர்கள் அவரண்டையில் வந்தார்கள். அப்போது அவர் தமது திருவாய்மலர்ந்து அவர்களுக்கு உபதேசித்துத் திருவுளம்பற்றினதாவது:

#### அஷ்ட பாக்கியங்கள்

1. மனதரித்திரர் பாக்கியவான்கள். ஏனெனில், மோட்சராச்சியம் அவர்களுக்குச் சொந்தம்.

2. சாந்த குணமுடையவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில், அவர்களே பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்.

3. அழுவோர் பாக்கியவான்கள். ஏனெனில், அவர்களே ஆறுதலடைவார்கள்.



4. நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில், அவர்களே திருப்தியடைவார்கள்.

5. இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில், அவர்களே இரக்கமடைவார்கள்.



6. தூய இருதயமுள்ளவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில், அவர்களே சர்வேசுரனைத் தரிசிப்பார்கள்.

7. சமாதான குணமுடையவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில் அவர்களே சர்வேசுரனுடைய பிள்ளைகளென்னப்படுவார்கள்.

8. நீதியினிமித்தம் உபத்திரவப் படுகிறவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில், மோட்ச இராச்சியம் அவர்களுக்குச் சொந்தம்.

### அப்போஸ்தலர்களுடைய மேன்மையும், அவர்களுடைய கடமைகளும்

சேசுநாதர் ஜனங்களுக்குப் போதித்தபிறகு, தமது அப்போஸ்தலர்கள் பக்கமாய்த் திரும்பி, அவர்கள் பூமியின் உப்பாகவும் வெளிச்சமாகவு மிருக்கிறார்களென்றும், உப்பு தன் சாரத்தை யிழந்தபோதும், வெளிச்சம் மரக்காலின்கீழ் வைக்கப்பட்டபோதும் அவை யிரண்டும் பயன்படாமற்போவதுபோல, அவர்களும் பயன்படாமற்போகாதபடி ஜாக்கிரதையாக நடந்துவரவேண்டுமென்றுந் திருவாய்மலர்ந்தருளினார்.

### கிறீஸ்துவர்களின் கடமைகள்

மறுபடியுமவர் ஜனங்கள் பக்கமாய்த் திரும்பி, வேதபாரகர் பரிசேயரைவிட அவர்கள் உத்தமமாயிருக்கவேண்டுமென்றும், கொலைசெய்யாமலும் புறத்தியாரை தூஷிக்காமலும் இருக்கவேண்டுமென்றும், ஒருவன் தன் சகோதரனோடு பகையாயிருந்தால், அவனோடு சமாதானப்பட்டபிறகுமாத்திரம் அவன் சர்வேசுரனுக்குக் காணிக்கை சமர்ப்பிக்கவேண்டுமென்றும் போதித்தார். இந்த உத்தம போதனைகளேயன்றி பகைவரைச்

சிநேகித்து, அவர்களுக்கு நன்மைசெய்து, தங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காக வேண்டிக்கொள்ள வேண்டுமென்றுங் கற்பித்தருளினார்.

### விவாகத்தின் பரிசுத்தத்தனம்

கிறீஸ்துவர்கள் ஒருவருக்கொருவர் அநுசரிக்க வேண்டிய பொதுவான கடமைகளைப்பற்றிப் போதித்தபின் விவாகபந்தனத்தைப்பற்றி அவர் திருவுளம்பற்றினதாவது: "எவனும் தன் மனைவியை விலக்காதிருக்கக்கடவான். ஏனெனில், சர்வேசுரன் இணைத்ததை மனிதன் பிரிக்க ஒண்ணாது" என்று வசனித்து, அவர்களுடைய நடத்தை பரிசுத்தமாயிருக்கவேண்டுவதுடன், மற்றவர்களால் பெருமையடையவேண்டுமென்ற கருத்துடன் யாதொன்றையுஞ் செய்யாமலிருக்க அவர்களுக்குப் புத்திசொன்னார்.

### கிறீஸ்துவனுடைய தொழில்கள்

இதற்குப்பிறகு சேசுநாதர் ஜனங்களுக்கு உலக வாழ்வின் மாய்கையையும், பூமியில் திரவியத்தைச் சம்பாதித்துவைக்கும் மூடத்தனத்தையும்பற்றிப் போதித்து, பரலோகத்தில் திரவியத்தைச் சேர்த்துவைத்தால் அவ்விடத்திலதைத் துருவும் புழுவும் அழிக்காததுமன்றி திருடரும் நோண்டித் திருடார்கள் என்று கூறினார். வஸ்திரம், போஜன முதலிய இவ்வுலக சீவியத்துக்கடுத்த காரியங்களைப்பற்றிக் கவலைப்படலாகாதென்றும், பட்சிகள் விதைக்காமலும் அறுக்காமலும் களஞ்சியத்தில் சேர்த்துவைக்காமலுமிருக்க, அவைகளை சர்வேசுரன் போஷிக்கிறாரென்றும், "வயலிலுள்ள லீலியமலர்ப் பூண்டுகளை உற்றுப்பாருங்கள். அவை உழைப்பதுமில்லை, நூற்பதுமில்லை, ஆகிலும் சலோ-



மோன் அவைகளில் ஒன்றைப்போலென்கிலும் உடுத்தினவனல்ல" என்றும் வசனித்தார். எவனும் இரண்டெசமான்களுக்கு ஊழியஞ் செய்யக்கூடாததுபோல, நீங்கள் சர்வேசுரனுக்கும் ஐசுவரியத்துக்கும் பணிவிடை செய்யமுடியாது என்று திருவாய்மலர்ந்தருளினார்.

### பிரசங்கத்தின் முடிவு

இவைகளும் இன்னுமனேக புத்திபோதகங்களுமின்றி சேசுவானவர் போதித்ததாவது: "ஆணையிடாதிருப்பாயாக. உள்ளதையுள்ளதென்றும் இல்லாததை இல்லையென்றுஞ் சொல்லக்கடவாய். மற்றவர்களிடத்தில் நீ யெதை விரும்புவாயோ அதை அவர்களுக்குச் செய்? நீ குற்றவாளியாக எண்ணப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளாக எண்ணாதிருப்பாயாக" என்பதே.

கடைசியாய் அவர் ஓர் நேர்த்தியான உவமையைச் சொல்லி பிரசங்கத்தை முடித்தார். அதாவது: "அவருடைய போதனையின்படி நடப்பவர்கள் காற்றடித்தாலும் வெள்ளம் புரண்டாலும் தகர்ந்துவிழாத பாறையின்மேல் கட்டப்பட்ட வீட்டுக்கும், அவ்விதம் நடவாதவர்கள் காற்றடித்து வெள்ளம்வரவே, இடிந்துவிழும் மணலின்மேல் கட்டப்பட்ட வீட்டுக்குஞ் சமானமாயிருக்கிறார்கள்" என்பதே.

இவ்வளவு அதிகாரத்தோடு பேசும் சேசுநாதருடைய இப்போதனைகளை ஜனங்கள் கேட்டு மிகவும் ஆச்சரிய பிரமிப்புக்கொண்டார்கள்.

வினா.—பருவதத்தின்மேல் செய்த பிரசங்கத்தின் முதற்பங்கெது? அஷ்ட பாக்கியங்களைச் சொல்லு? சேசு

நாதர் அப்போஸ்தலர்களைப்பற்றி யென்னசொன்னார்? கிறீஸ்துவர்களுக்குப் பொதுவாகச் சொல்லப்பட்டதென்ன? விவாகத்தைப்பற்றி யென்ன சொன்னார்? சேசுநாதர் கற்பித்த வேறு பாடங்கள் எவை? சேசுநாதருடைய போதனைகளைப் பற்றி ஜனங்கள் கொண்ட எண்ணமென்ன?

---

## 24-ம் அதிகாரம்

### துஷ்டரோகி—சேர்வைக்காரனுடைய ஊழியன்

சேசுநாதர் பருவதத்தினின்று இறங்கிவரும்போது ஓர் குஷ்டரோகி அவரை யணுகி ஆராதித்துத் தன்னை சௌக்கியப்படுத்தும்படியாக மன்றாடினான். சேசுநாதர் கரத்தை நீட்டி அவனைத் தொட்டக்ஷணமே சொஸ்தப்பட்டான். அப்போது சேசுநாதர் அவனை நோக்கி, "நீபோய் ஆசாரியனுக்குக் காட்டி மோயீசன் கட்டளையிட்ட காணிக்கையையுஞ் செலுத்தக்கடவாய்" என்று ஆக்யாபித்தார்.

புத்தி.—யூதருக்குள் ஒரு குஷ்டரோகி சுகப்பட்டால், அவன் ஆசாரியனுக்குத் தன்னைக் காட்டவேண்டும். அவர் அவனைப் பரிசோதித்துப்பார்த்து அவன் சுத்தமாக்கப்பட்டானென்று பிரசித்தஞ்செய்து, மோயீசன் ஏற்பாட்டில் குறித்திருந்த நிபந்தனையை நீக்கிவிடுவார். யூத ஆசாரியரின் இந்த அறிக்கையானது, பாவிகளுக்கு சத்தியவேத குருக்களால் கொடுக்கப்படும் பாவப்பொறுத்த லாசீர்வாதத்துக்கு அடையாளமாம். அது ஞானகுஷ்டத்தைச் சுத்திகரிக்கிறது.

சேசுநாதர் கப்பர்னூமுருக்கு வந்தார். அவ்விடத்தில் சேர்வைக்காரனொருவன் அவரை யணுகி "ஆண்டவரே திமிர்வாதமுள்ள என் ஊழியன் கடின வாதைப்படுகிறான்" என்றான். அதற்கு சேசுநாதர் நாம்வந்து



அவனைச் சௌக்கியப்படுத்துவோமென்று அவனுக்குத் திருவுளம்பற்றினார். ஆனால் சேர்வைக்காரன்: "ஆண்டவரே! தேவரீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பேறுபெற்றவனல்ல; நீரொரு வார்த்தைமாத்திரமே திருவுளம்பற்றும்; அப்போது என் ஊழியன் சௌக்கியமடைவான்" என்றான்.

சேசுநாதர் அதைக் கேட்டு, நாம் இஸ்ராயேலரிடத்தில் இம்மாத்திரம் பெரிதான விசுவாசத்தைக் கண்டதில்லையென்று சொல்லி, கிழக்கிலும் மேற்கிலும் நின்று அநேகர்வந்து, பரலோக விராச்சியத்திலே அபிராகாம், ஈசாக், யாக்கோபு என்பவர்களுடனே பந்தியிலிருக்க, யூதர் விசுவசியாததால் புறம்பாய்த் தள்ளப்படுவார்களென்றார். பின்னும் அவர் சேர்வைக்காரன் பக்கமாய்த் திரும்பி: "நீ விசுவசித்தபடியே உனக்காகக்கடவது" என்றார். அந்நேரமே ஊழியன் சௌக்கியப்பட்டான்.

புத்தி.—யூதர் அஞ்ஞானிகளைப்போல் கிறீஸ்துவேதத்தை மனப்பூரணமாய்ப் பெற்றுக்கொள்ளவில்லை. அவ்வண்ணமே சூசையின் சகோதரரும் அவரைப் புறக்கணிக்க எஜிப்தியர் அவரைக் கனம்பண்ணினார்கள்.

வினா.—குஷ்டரோகியைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? யூதருக்குள்ளிருந்த வழக்கமென்ன? அது எதன் அடையாளம்? கப்பர்னூமில் என்ன சம்பவித்தது?

---

## 25-ம் அதிகாரம்

### நாயீம் நகரத்து விதவையின் குமாரன்

சேசுநாதர் தமது சீஷரோடு ஒருதடவை நாயீம் நகரத்துக்குப் போய்க்கொண்டிருக்கையில், ஒரு விதவையின் குமாரனுடைய சவக்ஷேமிப்புக்காக வந்து கொண்டிருந்த திரளான ஜனக்கூட்டத்துக்கு எதிரே சென்று, தாயினுடைய அழுகைப் பிரலாபத்தைக் கண்டு, மனமிரங்கி "அழவேண்டாம்" என்றார்.

பின்னும் இறந்தவனை வளர்த்தப்பட்டிருந்த பாடையை யணுகி அதைத்தொடவே அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள். அப்போதவர் "வாலிபனே உனக்குக் கட்டளையிடுகிறோம், எழுந்திரு" என்று அவர் வசனித்தக்ஷணமே அவன் எழுந்து பேசத் தொடங்கினான். பின்னுமவர் அவனை அவன் தாயாருக்குக் கையளித்தார். அவ்விடத்திலிருந்தவர்கள் இந்த அதிசயத்தைக்கண்டு, மிகுந்த பயங்கரத்துக்குள்ளாகி தங்களுக்கு ஒரு மகா தீர்க்கதரிசியை அனுப்பினதற்காக சர்வேசுரனைப் புகழ்ந்து ஸ்துதித்தார்கள்.

புத்தி.—இந்தப் புதுமையானது சர்வேசுரன் சகல மனிதரையும் கல்லறையினின்று எழுப்பும் உத்தானத்துக்குக் குறிப்பாகும். இக்காலத்தில்முதலாய் சேசுக்கிறீஸ்துநாதர் தமது குருப்பிரசாதிகளைக்கொண்டு பாவிகளைப் பாவசங்கீர்த்தனமூலமாய் ஞான சாவினின்று உயிர்ப்பிக்கிறார்.

வினா.—சேசுநாதர் விதவையின் குமாரனை எழுப்பின விதத்தை விவரி ?



## 26-ம் அதிகாரம்

### மரியமதலேனம்மாள்

சிமோனென்ற பரிசேயனொருவன் தன்னோடு போசனம்பண்ணும்படி சேசுநாதரை மன்றாட, அவர் அவன் வீட்டில் பிரவேசித்துப் பந்தியிலமர்ந்தார். மரியமதலேனம்மாள் இதை யறிந்து பரிமள தைலச்சிமிழைக் கொண்டுவந்து அவருடைய கால்களைக் கண்ணீரால் கழுவி, தன் கூந்தலால் துடைத்து, அவைகளை முத்தஞ்செய்து அவைகளின்மேல் தைலத்தைப் பூசிக்கொண்டிருந்தாள்.

அவரை விருந்துக்கு அழைத்திருந்த பரிசேயன் அதைக்கண்டு "அவர் தீர்க்கதரிசியாயிருப்பாரேயாகில் தம்மைத் தொடுகிற ஸ்திரீயானவள் பாவியாயிருக்கிறாளென்று அறியாதிருப்பாரோ!" என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.

சேசுநாதர் அவன் எண்ணத்தை யறிந்து அவனைப்பார்த்து: "நேசனே கடன்தந்த ஒருவனுக்குக் கடன்காரர் இருவரிருந்தார்கள். ஒருவன் தெனியர் ஐந்நூறும் மற்றொருவன் ஐம்பதுங் கடன்பட்டிருந்தார்கள். உத்தரிக்க அவர்களுக்கு அவகாசமில்லாமையால், இருவருக்குங் கடனை மன்னித்தான். ஆதலாலவனை யதிகமாய் நேசிக்கிறவனார்?" என்று கேட்டார். சிமோன் பிரத்தியுத்தாரமாக "எவனுக்கதிகமாய் மன்னித்தானோ அவன்தான்" என்று உரைத்தான்.

பின்னும் கிறீஸ்துநாதர் ஸ்திரீயின் பக்கமாய்த் திரும்பி சிமோனுக்குத் திருவுளம்பற்றினதாவது: "இந்த ஸ்திரீயைப் பார்க்கிறாயே! நான் உன் வீட்டிற் பிரவேசித்தேன்; நீ என் கால்களை யலம்பத் தண்

ணீர் தந்ததில்லை. இவளோவெனிற் கண்ணீரால் என் பாதங்களைக் கழுவித் தன் கூந்தலால் துடைத்தாள். நீ எண்ணெயால் என் சிரசை யப்பியங்கனஞ் செய்ததில்லை; இவளோ பரிமள தைலத்தால் என் பாதங்களைப் பூசினாள். ஆனதைப்பற்றி நாம் உனக்குச் சொல்லுகிறதாவது: இவள் மிகவுஞ் சிநேகித்ததினால் மிகுந்த பாவங்களிவளுக்குப் பொறுக்கப்படுகின்றன" என்பதே.

வினா.—மரியமதலேனம்மாளுடைய சரிதையையும் அவள் பரிமள தைலத்தைக்கொண்டு பூசினதையும்பற்றிச் சொல்லு?

---

## 27-ம் அதிகாரம்

### ஸ்நாபக அருளப்பருடைய தூதர்

சேசுநாதருடைய ஜீவியம் தரித்திரமுள்ளதும் மறைவானதுமாயிருந்தபடியால், அவர் சர்வேசுரனுடைய குமாரனாகிய மேசியாவோ அல்லவோவென்று அனேகர் சந்தேகப்பட்டார்கள். அவர்தான் மேசியாவென்று ஸ்நாபக அருளப்பர் அறிந்தபோதிலும் மற்றவர்களுக்கு அவருடைய தெய்வத்துவத்தை வெளிப்படுத்தும்படி அவருடைய சீஷரில் இருவரை சேசுநாதரிடமனுப்பி, மேசியா அவர்தானோ அல்லவோவென்று விசாரிக்கச்சொன்னார்.

விசாரிக்கவந்த சீஷருக்கு சேசுநாதர் ஆம், அல்லது, அல்லவென்று சொல்லாமல், தாம் ஏற்கெனவே செய்துள்ள அற்புதங்களையும் சொஸ்தப்படுத்தியுள்ள வியாதிகளையும் குறிப்பித்து "குருடர் காண்கிறார்கள்; முடவர் நடக்கிறார்கள்; செவிடர் கேட்கிறார்கள்; மரித்



தோர் உயிர்க்கிறார்கள்; ஏழைகளுக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகின்றது" என்று சொன்னார். இக்காரியங்களெல்லாம் வெகுகாலத்துக்குமுன் மேசியாவைப் பற்றி இசையாசால் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களாமே.

வினா.—அருளப்பர் தூதரை அனுப்பினது என்னத்துக்கு? சேசுநாதர் அத்தூதருக்கு என்ன மறுமொழி சொன்னார்?

---

## 28-ம் அதிகாரம்

### சேசுநாதர் முப்பத்தெட்டு வருஷம் வியாதியாய்க் கிடந்தவனை சௌக்கியப்படுத்தினது

சேசுநாதர் போதிக்கத்தொடங்கின இரண்டாம் வருஷத்தில் பாஸ்கா பண்டிகை ஆசரிக்கும்படி யெருசலேமுக்குப் போனார். அவ்விடத்தில் பெத்சயிதாவென்ற ஒரு குளமும், அதைச்சுற்றி ஐந்து மண்டபங்களும், அம்மண்டபங்களில் குருடர் சப்பாணிகள், திமிர்வாதக்காரர் முதலிய அனேக வியாதிக்காருந் தங்கியிருந்தார்கள்.

ஓரோர் சமயத்தில் தேவதூதன் வந்து அக்குளத்தின் ஜலத்தைக் கலக்குவார். அப்போது அக்குளத்தில் எவன் முதல் இறங்குவானோ அவனுக்கு எப்பேர்ப்பட்ட வியாதி யிருந்தபோதிலும் சுகப்படும்.

அம்மண்டபங்களிலொன்றில் 38 வருஷமாக வியாதியாய்க் கிடந்த ஒருவனிருந்தான். சேசுநாதர் அவனிடம்வந்து "நீ சொஸ்தப்பட மனதாயிருக்கிறாயா?" என்று வினவ, அந்த வியாதிக்காரன் மறுமொழியாக,

"ஆண்டவரே! ஜலங் கலக்கப்பட்டபோது குளத்தி லென்னை யெடுத்துப்போட எனக்கொரு துணைவனு மில்லை" என்றான். சேசுநாதர் அவனை நோக்கி: "நீ யெழுந்து உன் கட்டிலை யெடுத்துக்கொண்டு நட" எனவே, அவன் உடனே எழுந்து கட்டிலை யெடுத்துக் கொண்டு நடந்துபோனான்.

கிறீஸ்துநாதர் ஓய்வு நாளில் சொஸ்தப்படுத்தி னதை யூதர் கண்டு முறுமுறுத்தார்கள். அப்போது



சேசுநாதர் அவர்களுடைய ஆட்சேபனையை மறுத்து "என் பிதா எப்போதும் வேலைசெய்தார், நானும் அப்படியே செய்துவருகிறேன்" என்றார். இவர் தம்மைச் சர்வேசுரனுக்குச் சரியொத்தவராக்குகிறாரென்று யூதர் மிகக் கோபங்கொண்டார்கள். ஆகையால் அவரைக் கொல்லப் பிரயத்தனப்பட்டார்கள். ஆனால் அவரோ தாமே சர்வேசுரனுடைய குமாரனென்றும், தம்மைக்



கொண்டே சகலரும் இரட்சிப்படையவேண்டுமென்றும் தமது பிதா செய்வதையே தாமுஞ் செய்வதாகவும் அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.

வினா.—38 வருஷமாய் வியாதியாய்க்கிடந்தவனுடைய சங்கதியைச் சொல்லு? அவன் எப்படிச் சௌக்கியப்பட்டான்? யூதர் ஏன் முறைப்பட்டார்கள்? அவர்கள் என்ன செய்ய பிரயத்தனப்பட்டார்கள்? கிறீஸ்துநாதர் அவர்களுக்கு வெளிப்படுத்தினதென்ன?

---

## 29-ம் அதிகாரம்

### சர்வேசுரனுடைய இராச்சியத்தைப்பற்றின ஏழு உவமைகள்

சேசுநாதர் மறுபடியும் ஜெனசரேத் என்னும் ஏரிக்கு வந்து ஓர் படகிலேறி கரையிலிருந்த ஜனக் கும்பலுக்கு உவமைகளால் போதித்தார்.

### விதைப்பவனுடைய உவமை

விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான். அவன் விதைக்குமளவில் சில விதைகள் வழியோரத்தில் விழவே, ஆகாயத்தின் பட்சிகள் வந்து அவைகளைப் பட்சித்தன. சில விதைகள் சொற்ப மண்படர்ந்த கற்பாறையின்பேரில் விழுந்தன. அவைகள் முளைப்பதற்கு ஆழ்ந்த பூமியில்லாதிருந்தும் முளைத்தன. சூரியனுதித்த பின்போவெனில் அவை தீய்ந்ததுமன்றி, வேரூன்றாமையால் காய்ந்தும்போயின. வேறு சிலது முட்கள் நடுவில் விழுந்தன. பின்னும் முட்கள் வளர்ந்து அவைகளை அமுக்கிப்போட்டன. வேறு சில விதைகளோவென்றால் நல்ல நிலத்தில் வீழ்ந்து

ஒன்றுக்கு நூறாகவும், அறுபதாகவும், முப்பதாகவும் பலனளித்தன என்றார்.

பிறகு சேசுநாதர் இவ்வுவமையின் அர்த்தத்தை சீஷர்களுக்கு இவ்வாறு விவரித்தார்: விதையானது சர்வேசுரனுடைய வாக்கியம். அவ்வாக்கியம் விதைக்கப்படுகிற வழியோரத்திலிருக்கிறவர்கள் அதைக் கேட்டவுடனே அதனால் பிரயோசனமடைந்து இரட்சிக்கப்படாதபடி பசாசு அவைகளைப் பறித்துப்போடுகிறான். பாறையில் விழுந்த விதையாற் குறிக்கப்பட்டவர்கள், வாக்கியத்தைக் கேட்டமாத்திரத்தில் சந்தோஷத்துடன் அதை யங்கீகரித்துக்கொள்பவர்களென்றாலும், வேருக்கு ஒப்பான நிலைமை அவர்களிடமில்லாததால், சோதனையால் கெட்டழிகிறார்கள். முள்ளுக்கள் நடுவில் விழும் விதைக்கொப்பானவர்கள் யாரெனில், வேதவாக்கியத்தைக் கேட்டும் இப்பிரபஞ்ச சிந்தைகளாலும், பாசங்களாலும் மேற்கொள்ளப்பட்டு, பலன் கொடாமற்போகிறவர்களாமே. நந்நிலத்தில் விதைக்கப்பட்டதாற் குறிக்கப்பட்டவனோவெனில், அதன்படி நடந்து காலத்தில் பேறுபலனடைபவனாமே.

### களைகளின் உவமை

சேசுநாதர் மற்றோருவமையைச் சொன்னார். ஒருவன் தன் வயலில் நல்ல விதையை விதைத்தபின் நித்திரைசெய்யும்போது, அவனுடைய சத்துரு வந்து களையை விதைத்தான். பயிர் வளரும்போது களையுங் காணப்பட்டது. அப்போது எஜமானன் அறுப்புக்காலம் வருமட்டும் களையைப் பிடுங்காதபடிக்குக் கட்டளையிட்டு, அறுப்புக்காலத்தில் களையைப் பிடுங்கிக் கட்டுகட்டாகக் கட்டி நெருப்பிற் போட்டு, கோதுமையைச் சேர்த்து களஞ்சியத்திற் பத்திரப்படுத்தும்படி அறுப்புக்காரருக்குக் கட்டளையிட்டான் என்றார்.



இவ்வுவமையின் தாற்பரியமாவது: விதைக்கிறவன் தேவகுமாரன். வயல் நிலம்—உலகம். விதையானது—நல்லவர்கள். களை—பாவங்கள். களையை விதைத்த சத்துராதி—பசாசு. அறுப்புக்காலம்—உலக முடிவு. அறுப்புக்காரர்—சம்மனசுக்கள். களை சேர்க்கப்பட்டு சுட்டெரிக்கப்பட்டதுபோல பாவிகள் தீர்வை காலத்தில் சேர்க்கப்பட்டு நரக நெருப்பில் தள்ளப்படுவார்கள்.

### கடுகு விதையின் உவமை

பரலோக இராச்சியமானது ஓர் மனிதன் நிலத்தில் விதைத்த கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கின்றது. அது சகல விதைகளிலே மிகவுஞ் சிறியதாயினும் வளர்ந்தபிறகு சகல பூண்டுகளைவிட அதிக பெரிதாகி, ஆகாய பட்சிகள் வந்து அதின் கிளைகளில் வசிக்கத்தக்க மரமாகுமென்றார்.

### புளித்த மாவின் உவமை

மோட்சராச்சியமானது மூன்று மரக்கால் மாமுழுதும் புளிப்பேறும்படிக்கு அதற்குள் திணித்துவைக்கப்பட்ட புளி காரத்திற்கு ஒப்பாயிருக்கிறது.

### பொக்கிஷ உவமை

பரலோக இராச்சியமானது ஓர் வயலிற் புதைக்கப்பட்ட பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கின்றது. அதைக்கண்ட மனிதன் போய்த் தனக்குள்ளதெல்லாவற்றையும் விற்று அவ்வயலை வாங்கிக்கொள்ளுகிறான்.

### முத்தின் உவமை

மீளவும் பரலோக இராச்சியமானது நல்ல முத்துகளைத் தேடுகிற வியாபாரிக்கொப்பாயிருக்கின்றது. அவன் விலையேறப்பெற்ற ஓர் முத்தைக் கண்டபின் தனக்கிருந்த யாவற்றையும் விற்று அதை வாங்கிக் கொள்ளுகிறான்.

### மச்சங்களின் உவமை

மறுபடியும் பரலோக இராச்சியமானது கடலில் வீசப்பட்டு எல்லாவித மச்சங்களையும் சேர்த்து வாரும் வலைக்கொப்பாயிருக்கிறது. அது நிறைந்தபின் மீன் பிடிக்கிறவர்கள் அதை வெளியிலிழுத்துக் கரையிலுட்கார்ந்து, நல்லவைகளைப் பாத்திரங்களிலே தெரிந்தெடுத்துக்கொண்டு ஆகாதவைகளைப் புறம்பேயெறிந்துவிடுவார்கள். உலக முடிவில் அப்படியே நடக்கும். தேவதூதர் புறப்பட்டு நீதிமான்கள் நடுவினின்று தீயோரைப் பிரிப்பார்கள். பின்னும் அவர்களை நரகத் தீச்சூளையில் தள்ளிப்போடுவார்கள்.

வினா.—விதைப்பவனுடைய உவமையைச் சொல்லு? களையின் உவமை யெது? அதன் அர்த்தமென்ன? மற்ற உவமைகளெவை?

---

## 30-ம் அதிகாரம்

### புயல் அடங்கினது

சேசுநாதர் மேற்சொன்னவற்றைப் போதித்து முடித்தபின், தமது அப்போஸ்தலர்களை நோக்கி: "வேறே பக்கம் போவோமாக" என்றார். அவர்கள் புறப்படுவதற்குமுன் வேதபாரகனொருவன்



அணுகி: "குருவே நீரெங்கேபோனாலும் உம்மைப் பின்செல்லுவேன்" என்றான். சேசுநாதர் அவனை நோக்கி: "நரிகளுக்கு வளைகளும், ஆகாயத்துப்பட்சிகளுக்குக் கூடுகளுமுண்டு; மனுமகனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" என்றார். அவன் அதைக் கேட்டு போய்விட்டான்.

கொஞ்சத்துக்குப்பின் படகு கரையைவிட்டு ஆழத்துக்குப் போகவே, பெரும் புசல் கிளம்பினது.



அப்போது சேசுநாதர் நித்திரைசெய்துகொண்டிருந்தார். புசல் அகோரமாகி அலைகள் படகில் வருவதைக் கண்ட சீஷர் சேசுநாதரை யணுகி, "ஆண்டவரே! எல்லோரும் சிதைந்துபோகிறோம்" என்று சொல்ல, சேசுநாதர் எழுந்து அவர்களுடைய அவவிசுவாசத்தைக் கண்டித்துப் புயலை யமர்த்தினார்.

புத்தி.—புயலுள்ள கடலுக்கு ஒப்பான இவ்வுலகத்தில் படகாகிய திருச்சபையோடு கிறீஸ்துநாதர் வீற்றிருந்து அதைச் சகல குழப்பங்களினின்றும் பத்திரமாய் நடத்திவருகிறார்.

வினு.—சேசுநாதரைப் பின்செல்வதாகச் சொன்ன மனிதனைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? புயலுண்டான வர்த்தமானத்தைச் சொல்லு?

---

## 31-ம் அதிகாரம்

### ஜயீர் என்பவனுடைய மகள்

சேசுநாதர் ஏறியிருந்த படகு கரைசேர்ந்தபோது திரளான ஜனக்கும்பல் வெகு அக்களிப்போடு அவரைக் காணவந்தது. அப்போது ஜெபக்கூடத்துத் தலைவனாகிய ஜயீர் என்பவன் சடுதியில் அவரை யணுகி சாகக்கிடக்குந் தன் குமாரத்தியைக் குணப்படுத்தும்படியாக மன்றாடினான். சேசுநாதர் அவனுடன் போனார்.

சேசுநாதர் போய்க்கொண்டிருக்கும்போது, 12 வருஷகாலமாய் வியாதியாய்க் கிடந்து, எந்த வைத்தியராலும் குணப்படாதவளான ஓர் ஸ்திரீ அவர்பின் நடந்து, அவரது வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்ட க்ஷணமே சொஸ்தமடைந்தாள்.

மேற்படி சிறுபெண்ணுடைய வீட்டுக்கு சேசுநாதர் போனபோது அங்கு பெருஞ் சனக்கூட்டம் அழுவதைக்கண்டு, "அவள் சாகவில்லை; அழாதேயுங்கள்" என்றார். அச்சிறுமி செத்ததாக அறிந்திருந்த ஜனக்கூட்டம் அவரைப்பார்த்து நகைத்தார்கள். அப்போது சேசுநாதர் இராயப்பரையும் யாகப்பரையும் அருளப்பரையும் பெண்ணின் பெற்றோரையு மழைத்துக்கொண்டு உள்ளே பிரவேசித்து, அவள் கரத்தைப் பிடித்து, "எழுந்திரு" என்கவே, அவள் எழுந்து வீட்டில் நடமாடத் துவக்கினாள்.



வினு.—சேசுநாதர் ஜயீரின் குமாரத்திக்கு என்ன செய்தார்? கும்பலிலிருந்த ஸ்திரீக்கு என்ன சம்பவித்தது?

---

## 32-ம் அதிகாரம்

### சேசுநாதர் தமது அப்போஸ்தலர்களைத் தெரிந்துகொண்டது

பிரதிதினம் சேசுநாதரிடம் தூரத்திலிருந்தும் அருகிலிருந்தும் திரளான ஜனங்கள் வருவார்கள். அவர்களைப்பார்த்து அவர்கள்பேரில் மனமிரங்குவார். ஏனெனில் அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல சிதறியிருந்தார்கள். அப்போது அவர் தம்முடைய சீஷரை நோக்கித் திருவுளம்பற்றினதாவது: "வெள்ளாண்மை மிகுதியாகவிருக்கின்றது. வேலையாட்களோ வெகு சொற்பம். ஆகையால் தமது வெள்ளாண்மைக்கு வேலையாட்களை யனுப்பும்படியாக வெள்ளாண்மை எசமானனை மன்றாடுங்கள்" என்றார்.

மறுநாள் இராத்திரி அவர் செபத்தியானத்தில் காலங்கழித்து, காலையில் தமது சீஷரை வரவழைத்து, அவர்களில் பன்னிருவரைத் தெரிந்துகொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர்கள், அதாவது (அனுப்பப்பட்டவர்கள்) என்று பெயரிட்டார். அவர்களுடைய நாமங்களாவன: இராயப்பர், பெலவேந்திரர், யாகப்பர், அருளப்பர், பிலிப்பு, பர்த்தலோமை, தோமையார், மத்தேயு, சின்ன யாகப்பர், ததேயு, சிமோன், யூதாஸ் இஸ்காரியோத் என்பவர்களாம்.

சேசுநாதர் அவர்களைத் தெரிந்துகொண்டபின், வியாதியஸ்தரைக் குணப்படுத்தவும் மரித்தவர்களை

உயிர்ப்பிக்கவும் பசாசுகளை ஓட்டவும் அவர்களுக்கு அதிகாரமளித்தார். ஊன்றுகோல் தவிர வேறொன்றையும் கொண்டுபோகாமல் புறப்பட்டுப்போய் உலகெங்கும் உபதேசிக்கக் கற்பித்தார். இதனால் மனுஷ எத்தனங்களைக் கையாடாமல் சர்வேசுரனையே நம்பும்படியாக படிப்பித்தார்.

மேலுந் தம்மைப்பற்றி அவர்கள் துன்பப்படுவதுவன்றி, அடிபட்டு, கொலையுண்ணப்படவும் வேண்டியதாயிருக்குமென்றுஞ் சொன்னார். ஆனால் குருவைவிட சீஷன் மேற்பட்டவனோ? அல்லவென்றால், இப்பேர்ப்பட்டவைகளையெல்லாம் நானனுபவித்திருக்க, நீங்களெவ்வளவோ அனுபவிக்கவேண்டுமென்று மொழிந்தார்.

பின்னும் அவர்களுக்குத் தேறுதலாக, "நாம் உங்களோடிருந்து உங்கள்மூலமாய்ப் பேசுவோம். உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்! உங்களை ஏற்றுக்கொள்ளாதவன் என்னை ஏற்றுக்கொள்ளான்" என்று சொல்லி அவர்களுக்குத் தைரியம் வருவித்தார்.

அப்போஸ்தலர்கள் இருவரிருவராகப் பிரசங்கித்துக்கொண்டும், பசாசுக்களை யோட்டிக்கொண்டும், வியாதியஸ்தரைச் சௌக்கியப்படுத்திக்கொண்டும்போனார்கள். கொஞ்ச நாளைக்குப்பிறகு அப்போஸ்தலர்களுக்கு உதவி புரிய சேசுநாதர் எழுபது சீஷர்களை ஏற்படுத்தினார்.

புத்தி.—அபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட ஆசீர்வாதமானது யாக்கோபின் பிள்ளைகளுக்கும் பலித்ததுபோல, நமது ஆண்டவர் தமது போதனையின் வழியாய் அளித்த ஆசீர்வாதமானது அவருடைய அப்போஸ்தலர்கள்மூலமாய்ப்



பரவினது. ஜெதயோன் சொற்பப் படையைக்கொண்டு சத்துருக்களை வென்றபிரகாரம் அப்போஸ்தலர்கள் தங்களுடைய ஊன்றுகோலைக்கொண்டு உலகத்தை எதிர்த்துப் போராடி நின்று கிறீஸ்துநாதருடைய நுகத்தடிக்கு அதைக் கீழ்ப்படுத்தினார்கள்.

வினா.—அப்போஸ்தலர்கள் என்பவர்களார்? அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வல்லமை யென்ன? சேசுநாதர் அவர்களை எங்கே அனுப்பினார்? அவர்களுக்கு எப்படித் தேறுதல் சொன்னார்? அப்போஸ்தலர்கள் என்ன செய்தார்கள்? அப்போஸ்தலர்களுக்கு உதவி செய்யும்படி சேர்க்கப்பட்டவர்களார்?

---

## 33-ம் அதிகாரம்

### ஸ்நாபக அருளப்பர் தலை வெட்டுண்டது

கலிலேயாவின் காற்பங்குக்கு அதிபதியாகிய எரோதன் சகோதரனின் மனைவியாகிய எரோதியாளென்பவளை விவாகஞ்செய்துகொண்டான். ஸ்நாபக அருளப்பர் எரோதனிடம் வந்து, சகோதரனின் மனைவியைச் சேர்த்திருக்கலாகாதென்று சொல்ல, அவன் அதிக கோபங்கொண்டு அவரைச் சிறையிலடைத்து வைத்தான்.

அப்படியிருக்க, எரோதன் தான் பிறந்த வருஷாந்திரக் கொண்டாட்ட நாளில் கலிலேயாவிலுள்ள பிரபுக்களுக்குச் செய்த பெருத்த விருந்தின்போது, எரோதியாளின் மகள் சபை நடுவில் நடனஞ்செய்து எரோதனுக்குப் பிரியப்பட்டாள். அதினிமித்தந் தன்னிடம் எதைக் கேட்டாலுந் தருவேனென்று ஆணையிட்டு அவன் அவளுக்கு வாக்குத்தத்தஞ்செய்தான்.

அவளோ தன் தாயால் ஏற்கெனவே எச்சரிக்கப்பட்டவளாதலால், இப்போதே ஸ்நாபக அருளப்பருடைய சிரசை ஓர் தட்டில் எனக்குத் தரவேண்டுமென்றாள். அதற்கு எரோதன் விசனப்பட்டான். என்றாலுந் தானிட்ட ஆணையைப்பற்றி அருளப்பரைச் சிரச்சேதஞ் செய்வித்து, அவருடைய சிரசை ஓர் தட்டில் கொண்டுவந்து, அந்தப் பெண்ணுக்கு அளிக்கும்படி செய்ய, அவள் அதைத் தன் தாய்க்குக் கொண்டு போய்க் கொடுத்தாள்.

புத்தி.—ஸ்நாபக அருளப்பரைப்போலத் தைரியசாலியும் அர்ச்சியசிஷ்டவருமான எலியாஸ் தீர்க்கதரிசி ஆகாபு அரசனிடம் போக, அவனும் எரோதனைப்போல உண்மையைப் பகைத்து தேவதாசனைக் கொல்லப்பார்த்தும் முடியாமற்போனது.

வினா.—ஸ்நாபக அருளப்பர் ஏன் சிறையிலடைக்கப்பட்டார்? அவர் எப்படி மரணமடைந்தார்?

---

## 34-ம் அதிகாரம்

### அப்பங்களையும் மச்சங்களையும் அதிகரிக்கச்செய்த புதுமை

பாஸ்கா பண்டிகை சமீபமானபோது, அப்போஸ்தலர்கள் தங்கள் விசாரணைகளிலிருந்து சேசுநாதரிடம் திரும்பி வந்து, தாங்கள் செய்தவற்றையும் போதித்தவற்றையும்பற்றி அவரிடஞ் சொல்லிக்கொண்டார்கள். பிறகு சேசுநாதர் அவர்களைத் தம்மோடு கூட்டிக்கொண்டு கலிலேயாவின் கடலைக் கடந்து வனாந்தரத்திற்குப் போனார். ஜனக்கும்பல் அதைக் கேள்விப்பட்டு அவரைப் பின்தொடர்ந்தார்கள். சேசுநாதர்



திரளான ஜனக்கும்பலைக்கண்டு மனமிரங்கி, அவர்களுக்குப் போதிக்கவும் வியாதியஸ்தரைக் குணப்படுத்தவுந் தொடங்கினார்.

அப்போஸ்தலர் தங்களிடத்தில் புசிக்க யாதொன்றுமில்லாதிருந்ததால், பொழுதுசென்றபோது ஜனக்கூட்டத்தை அவரவர்களுடைய விடுதிகளுக்கு அனுப்பி



விட உத்தேசித்திருந்தார்கள். சேசுநாதர் அப்போஸ்தலர்களிடம் புசிப்பதற்கு ஏதாவது உண்டாவென்று கேட்க, ஐந்து அப்பங்களும் இரண்டு மச்சங்களும் மாத்திரம் உண்டென்றார்கள். சேசுநாதர் ஜனங்களைப் புல்லின்மேல் பந்தியமாக் கட்டளையிட்டு, அவ் ஐந்து அப்பங்களையும் இரண்டு மச்சங்களையும் எடுத்து ஆசீர்வதித்து, ஜனங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கும்படி தமது அப்போஸ்தலர்களிடங் கொடுத்தார். சீஷர்-

களோ ஸ்திரீகளுக்கும் பிள்ளைகளுக்குந்தவிர ஐயாயிரம் பேர்களுக்கு அவைகளைப் பரிமாறி அவர்களெல்லோருந் திருப்தியாய்ப் புசித்தபின், மீதியாயிருந்த துண்டுகளைப் பன்னிரண்டு கூடைகள் நிறைய எடுத்தார்கள்.

ஜனங்கள் இந்த மகத்தான புதுமையைக்கண்டு பிரமிப்படைந்து, சேசுநாதரைத் தங்களுக்கு அரசனாக்க விரும்பினார்கள். ஆனால் அவர் அவர்களுடைய கருத்தை யறிந்து தம்மை மறைத்துக்கொண்டு, இராக்காலத்தில் தமது சீஷரோடு கப்பர்னாமூருக்குச் சென்றார்.

வினா.—அப்போஸ்தலர்கள் திரும்பிவந்ததைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது? அப்பங்களுடையவும் மச்சங்களுடையவும் சரித்திரத்தைச் சொல்லு? இந்தப் புதுமையால் ஜனங்கள் கொண்ட எண்ணமென்ன?

---

## 35-ம் அதிகாரம்

### திவ்ய சற்பிரசாதத்தைப்பற்றிய வாக்குத்தத்தம்

மேற்சொல்லப்பட்ட புதுமை நடந்த மறுதினம் சேசுநாதர் கப்பர்னாமூரிலுள்ள செபக்கூடத்தில் இருக்கும்போது, ஜனங்கள் அவரிடம் வந்தார்கள். அவர்கள் புதுமையான அப்பத்தைப் புசித்ததால் தம்மிடம் வந்ததை அவர் கண்டு, அழிந்துபோகும் அப்பத்திற்காகப் பிரயாசைப்படாமல், தாம் கொடுக்கப்போகும் ஒருபோதும் அழியாத திவ்ய போசனத்திற்காக பிரயாசைப்படவேண்டுமென்று சொன்னார்.

பிறகு, உயிருள்ள அப்பம் தாமேயென்றும், அந்த அப்பம் தமது சரீரந்தானென்றுஞ் சொல்ல, யூதர் அதைக் கேட்டு சந்தேகமுற்று ஒருவன் தன்சரீரத்தை



யெப்படிப் புசிக்கக் கொடுக்கக்கூடுமென்றார்கள். ஆனால் சேசுநாதர் தாம் முன்சொன்ன சொற்களையே இரட்டித்து உச்சரித்து, "மனுமகனுடைய சரீரத்தைப் புசித்து அவனுடைய இரத்தத்தைப் பானஞ் செய்யாவிட்டால், உயிரற்றவர்களாய் இருப்பீர்கள். ஏனெனில், என் மாமிசமானது மெய்யான போசனமாகவும் என் இரத்தமானது மெய்யான பானமாகவும் இருக்கிறது" என்று தெளிவாய்ச் சொன்னார்.

சீஷரில் அநேகர் இதைக் கேட்டு அதிக கலக்கங் கொண்டு கிறீஸ்துநாதர் புசிக்கத் தமது உடலையும், குடிக்கத் தமது இரத்தத்தையும் எப்படிக் கொடுக்கக் கூடுமெனக் கண்டுபிடிக்கமுடியாமல் அவரை விட்டுப் பிரிந்தார்கள்.

ஆனால் சேசுநாதர் மனித யுத்திக்கெட்டாத பரம இரகசியத்தைப்பற்றி யாவருக்கும் அதிக உறுதியோடு சொல்லி, கடைசியாய் இராயப்பர் பக்கந் திரும்பி, நீயும் நம்மைவிட்டுப் போவாயோவென்று கேட்டார். மற்றவர்களைவிட இராயப்பர் அதைப்பற்றி அதிகமாய்க் கண்டுபிடியாவிடினும், "ஆண்டவரே! உமது வார்த்தை நித்திய சீவனுள்ளதாயிருப்பதால் அதை நான் விசுவசிப்பேன். மேலும் உம்மைவிட்டுப் பிரியமாட்டேன்" என்று மறுமொழி சொன்னார்.

புத்தி.—வனாந்தரத்தில் இஸ்ராயேலரைப் போஷிக்கப் பரலோகத்தினின்று விழுந்த மன்னாவைப்போல சீவிய யுத்தத்தில் ஆத்துமத்தைப் போஷித்துக் காப்பாற்றும்படியாக நமது பீடங்களின்மேல் பிரதிதினம் திவ்யநற்கருணை இறங்கி வருகிறதாமே.

வினா.—புதுமையாக அப்பமும் மச்சமும் பலுகச்செய்யப்பட்ட மறுநாள் என்ன சம்பவித்தது? யூதர் சேசுக்

கிறீஸ்துநாதருடைய வார்த்தைகளை எப்படி ஏற்றுக்கொண்டார்கள்? அவர்கள் செய்த ஆட்சேபனை என்ன? அநேகர் என்ன செய்தார்கள்? இராயப்பர் நடந்துகொண்ட விதமென்ன? மன்னாவைப்பற்றியுந் திவ்யநற்கருணையைப்பற்றியும் என்ன சொல்லியிருக்கிறது?

---

## 36-ம் அதிகாரம்

### கனானேய ஸ்திரீ

சேசுநாதர் தீர், சீதோன் முதலிய நாடுகளுக்குப் போனார். அப்போது கனானேயளாகிய ஒரு அஞ்ஞான ஸ்திரீ அவரிடம் வந்து, பசாசினால் ஆவேசமேறின தன் மகளைக் குணப்படுத்தும்படியாகக் கேட்டுக்கொண்டாள். ஆனால் சேசுநாதர் யாதோர் பதிலும் அவளுக்குச் சொன்னவரல்ல. அந்த ஸ்திரீயோவெனில் ஓயாமல் அவரை அலட்டிக்கொண்டு பின்தொடர்ந்தாள். சீஷர்கள் அவளை அனுப்பிவிடக் கருத்தாயிருந்ததை சேசுநாதர் அறிந்து, அவர்களைச் சும்மாயிருக்கச்சொன்னார்.

அந்த ஸ்திரீ சமீபமாய்வந்து சேசுநாதரை ஆராதித்தாள். அப்போது அவர், "பிள்ளைகளின் அப்பத்தையெடுத்து நாய்களுக்குப் போடுவது தகுமா?" என்றார். அதற்கு அந்த ஸ்திரீ, "நாய்க்குட்டிகள் தங்கள் எசமான்களுடைய மேசையினின்று விழுகிற உரொட்டித் துண்டுகளைத் தின்னுகின்றனவல்லோ?" என்றாள். சேசுநாதர் அவளது விசுவாசத்தைக் கண்டு அதிசயித்து, அவளுடைய மகளைச் சொஸ்தப்படுத்தினார்.

புத்தி.—பூர்வகாலத்தில் யோனாஸ் என்பவர் நினிவே பட்டணத்து அஞ்ஞானிகளுக்குள் திடவிசுவாசத்தைக் கண்



டதுபோல், சேசுநாதரும் சீதோன் நாட்டு அஞ்ஞானிகளுக்குள் திடவிசுவாசத்தைக் கண்டார்.

வினா.—கனானேய ஸ்திரீயைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது.

---

## 37-ம் அதிகாரம்

### இராயப்பருக்கு அளித்த தலைமைப் பட்டம்

சேசுநாதர் செசாரையா பிலிப்பி நகரத்திற்கு வந்தார். அப்போது தம்முடைய சீஷர்களைச் சோதிக்க, மனிதர்கள் மனுமகனை ஆரென்று சொல்லுகிறார்களெனக் கேட்டார். அதற்கவர்கள் மறுமொழியாக, சிலர் ஸ்நாபக அருளப்பரென்றும், வேறு சிலர் எலியாசென்றும், மற்ற சிலர் எரேமியாஸ், அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவரென்றுஞ் சொல்லுகிறார்கள் என்றார்கள்.

மீளவும் சேசுநாதர் அவர்களை நோக்கி "நீங்களோ என்னை யாரென்று சொல்லுகிறீர்கள்?" என்றார். "சீவியான சர்வேசுரனுடைய சுதனாகிய கிறீஸ்துநாதராயிருக்கிறீர்" என்று இராயப்பர் அவர்கள் எல்லோருடைய போலும் மறுமொழி பகர்ந்தார்.

தமது தெய்வீகத்தைப்பற்றி அவர் சாக்ஷிசொன்னதை சேசுநாதர் கேட்டு இராயப்பரைப் பார்த்து: "யோனாவின் மகனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; நீ கல்லாயிருக்கிறாய்; இந்த கல்லின்மேல் எனது திருச்சபையைக் கட்டுவேன்; அன்றியும், நரகத்தின் வாசல்கள் அதனை மேற்கொள்ளமாட்டாது; பின்னும் பரலோக இராச்சியத்தின் திறவுகோல்களை உனக்களிப்பேன். பூலோகத்தில் நீ கட்டுவதெல்லாம் பரலோகத்

திலுங் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்தில் நீ கட்டவிழ்ப்பதெல்லாம் பரலோகத்திலுங் கட்டவிழ்க்கப்படும்" என்று திருவுளம்பற்றினர்.

புத்தி.—இராயப்பர் அவ்விதமாய் சேசுக்கிறீஸ்துநாதருடைய தெய்வீகத்தை முதன்முதல் பிரசித்தப்படுத்தினதால், அவருடைய விசுவாசத்தைப்பற்றி அப்போஸ்தலர்களுக்குள் முக்கியமானவராகவும், திருச்சபைக்குக் காணப்படுந் தலைவராகவும் சேசுநாதரால் நியமிக்கப்பட்டார். 1922 வருஷங்களாக அர்ச். இராயப்பரின் பாரம்பரை வரிசைக்கிரமந் தவறு வரம்பெற்ற அர்ச். பாப்புமார்கள் கிறீஸ்துவ உலகத்தின் தலைவர்களாக ஸ்தாபிக்கப்பட்டுவருகிறார்கள்.

வினு.—செசாரையா பிலிப்பி என்ற இடத்தில் சேசுநாதர் செய்ததென்ன? ஜனங்கள் அவரைப்பற்றி கொண்ட அபிப்பிராயமென்ன? இராயப்பர் என்ன சொன்னார்? கிறீஸ்துநாதர் அவருக்கு அளித்த அதிகாரமென்ன? பாப்புமாரைப்பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது?

---

## 38-ம் அதிகாரம்

### கிறீஸ்துநாதர் மறுரூபமானது

ஆறு நாட்களுக்குப்பிறகு சேசுநாதர் இராயப்பர், யாகப்பர், அருளப்பர் ஆகிய இம்மூவரையும் அழைத்துக்கொண்டு உயர்ந்த மலையின்மேல் பிரத்தியேகமாக ஏறி, அங்கு அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார். அப்போது அவரது முகம் சூரியனைப்போல் ஒளிர்ந்து பிரகாசித்ததுமல்லாமல், அவருடைய வஸ்திரங்கள் வெண்பனிக் கட்டியைப்போல வெண்மையுமாயின. மீளவும் மோயீசும் எலியாசும் அவரோடு சம்பாஷிப்பவர்களாய் அம்மூன்று அப்போஸ்தலர்களுக்குந் தரிசனையானார்கள்.



அப்போஸ்தலர்கள் கிறீஸ்துநாதர் அடைந்திருந்த மகா சௌந்தரியத்தைக் கண்டு, ஆனந்த அக்களிப்படைந்து, அவருக்கு ஒன்றும், மோயீசனுக்கு ஒன்றும், எலியாசுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அங்கே கட்ட உத்தேசங்கொண்டார்கள். அவரின்னும் பேசிக்கொண்டிருக்கையில் ஓர் குரற்சத்தமுண்டாகி:



"நமக்கு மிகவும் பிரியமான நம்முடைய நேசகுமாரனிவரே. இவருக்குச் செவிகொடுங்கள்" என்று வசனித்தது.

இதைக் கேட்டுச் சீஷர்கள் முகங்குப்புறவிழுந்து மிகவும் அஞ்சினார்கள். அப்போது சேசுநாதர் அவர்

களை அணுகித் தொட்டு "எழுந்திருங்கள் பின்னும் அஞ்சாதிருங்கள்" என்று திருவுளம்பற்றினார். அவர்களோ தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்க்க, சேசுநாதரைமட்டுமேயல்லாமல் மற்றொருவரையுங் கண்டதில்லை. அவர்கள் மலையைவிட்டு இறங்கிவருகையில், அவர்கள் கண்ட காட்சியை தாம் மரித்தோரினின்று உயிர்க்கிறவரைக்கும் ஒருவருக்குஞ் சொல்லவேண்டாமெனக் கர்த்தர் அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

புத்தி.—ஜனங்களுக்குப் பத்து கற்பனைகளைக் கொடுத்த மோயீசும், புதுமைகளைச்செய்த எலியாசுமாகிய இவ்விரு பழய ஏற்பாட்டு மகானுபாவர்களுக்கு மத்தியில் சேசுநாதர் மறுரூபமானார். யூத கிறீஸ்துவர்களுக்கு தாம் மகிமைப்பிரதாபவல்லவரென்றும், முதன்மையானவரென்றுங் காட்டும்படியாக கர்த்தர் அவர்களிருவரையும் பார்க்க அங்கு சிறந்தவராக விளங்கினார்.

வினா.—மறுரூபமான சரித்திரத்தைச் சொல்லு?

---

## 39-ம் அதிகாரம்

### பிள்ளைகளின் நேசராகிய சேசுநாதர்—துர்மாதிரிகை—இடறற்பாவம்

ஒருநாள் சேசுநாதர் போதித்தபிறகு இளைப்பாறும்படி ஓரிடத்திலுட்கார்ந்தார். அப்போது சிறுபிள்ளைகளை ஆசீர்வதிக்கும்படி, ஸ்திரீகள் அவர்களைக் கொண்டுவந்து அவரிடம் விட்டார்கள். சீஷர்களோ அவர்களைத் தடுத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் சேசுநாதர் சீஷர்களை நோக்கி: "சிறுபிள்ளைகளை என்னிடத்தில் வரவிடுங்கள்; ஏனெனில், சர்வேசுரனுடைய இராச்சியம் இப்படிப்பட்டவர்களுடையதா



யிருக்கின்றது" என்று சொல்லி பிள்ளைகளுடைய சிரசுகளின்மேல் தமது கரங்களை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார்.

மற்றோர் சமயத்தில், பரலோகத்தில் பெரியவன் யாரென அப்போஸ்தலர்கள் அவரைக் கேட்டார்கள். அப்போது அவர் ஓர் சிறுபிள்ளையை அழைத்து அதை அவர்கள் மத்தியில் நிறுத்தி "பரலோகத்தில் பெரிய



வனாயிருக்கவேண்டுமானால், பூலோகத்தில் சிறுபிள்ளைகளைப்போல் பரிசுத்தமுடையவர்களாகவும் தாழ்ச்சியுடையவர்களாகவும் ஆகவேண்டும்" என்று பதிலுரைத்தார்.

மீளவும் அவர் சிறுபிள்ளைகளுக்கு துர்மாதிரிகை காண்பிப்பவர்களைப்பற்றி திருவுளம்பற்றினதாவது: "சிறுபிள்ளைகளுக்கு இடறலாயிருந்து அவர்களைப் பாவத்திற்கு உட்படுத்துகிறவர்களுக்கு ஐயோ

கேடாம்! ஏனெனில், அவர்களுடைய தேவதூதர்கள் சர்வேசுரனுடைய முகத்தைத் தரிசிக்கிறார்கள்" என்பதே.

புத்தி.—தோபியாசைச் சம்மனசானவர் காப்பாற்றினதுபோல், நமக்குஞ் சம்மனசுக்கள் காவலாயிருக்கிறார்கள். ஆயினும் சரீரக்கண்ணால் நாம் அவர்களைப் 'பார்க்கமுடியாது.

வினா.—சிறுபிள்ளைகளைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது?

---

## 40-ம் அதிகாரம்

### குற்றமன்னிப்பு—மன்னிப்புகொடாத சேவகன்

ஒருநாள் இராயப்பர் நமது இரட்சகரைப் பார்த்து, ஆண்டவரே! என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்ய எத்தனைவிசை அவனுக்கு நான் மன்னிப்பு கொடுக்கலாம்? என்று கேட்க: "ஏழெழுபதுவிசை" அதாவது அநேகந்தரம் என்று பதிலுரைத்தார்.

இதற்கத்தாட்சியாய் அவர் சொன்ன உவமையாவது: "ஓர் அரசன் தன் ஊழியரிடத்தில் கணக்குக் கேட்கச் சித்தமாகி அவர்களை வரவழைத்தான். பதினாயிரந் தலேந்து கடன்பட்ட ஒருவன் அரசன்முன் வந்து, கடனை உத்தரிக்க தனக்கு நிருவாகமில்லையென்றதால், அவனுடைய பெண்சாதி பிள்ளைகளை விற்கும்படியாக அரசன் கட்டளையிட்டான். அவ்வூழியனோ அரசன் பாதத்தில் விழுந்து, சிலநாள் கெடுவு கொடுக்கும்படி மன்றாடினான். அரசனும் அவனது வேண்டுகோளுக்கு மனதிரங்கி அவன் கடனை மன்னித்துவிட்டான்."



"அப்பணிவிடைக்காரன் புறப்பட்டுபோய், நூறு தெனியரென்னும் நாணயந் தன்னிடத்திற் கடன்பட்டிருந்த தன் உடனூழியனைக்கண்டு, அவனைப் பிடித்து, அவன் தொண்டையை நெரித்து, நீ பட்ட கடனைச் செலுத்தென்றான். அவ்வூழியன் கெடுவுகேட்டு மன்றாடியும் அவன் சம்மதியாமல் அவ்வூழியனைச் சிறையிலடைப்பித்தான்."

"மற்ற ஊழியர்கள் இதைக்கண்டு ஷை சங்கதியை அரசனுக்கறிவிக்க, அவ்வரசன் நன்றிகெட்ட ஊழியனை வரவழைத்து, அவனுடைய குரூர குணத்தைப்பற்றி அவனை மிகக் கடிந்துகொண்டு, அவன் தன்னுடைய பாக்கிக் கடனைச் செலுத்தும்வரையில் அவனைச் சிறையிலடைப்பித்தான்" என்று சொல்லி, "உங்களில் யாதொருவன் தன் சகோதரனுக்கு முழுமனதோடு மன்னியாவிட்டால், என் பரமபிதாவும் அப்படியே உங்களுக்குஞ் செய்வார்" என்றார்.

வினா.—குற்றங்களை மன்னிப்பதைப்பற்றிய பாடமென்ன? இரு ஊழியரைப்பற்றியென்ன சொல்லியிருக்கிறது? அரசன் அதை நடத்திய விதமெப்படி? கடைசியாய்க் கிறீஸ்துநாதர் சொன்னதென்ன?

---

## 41-ம் அதிகாரம்

### அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்பட்ட திறவுகோல்களின் அதிகாரம்

கிறீஸ்துநாதருடைய தெய்வீகத்தைப்பற்றி அர்ச். இராயப்பர் பகிரங்கமாய் சாக்ஷி கூறினபோது, ஆண்டவர் அவருக்குத் திருச்சபையின் தலைமையதிகாரத்தைக் கொடுத்ததுமல்லாமல், பூலோகத்தில் கட்

டவுங் கட்டவிழ்க்கவும் விசேஷ வல்லமையுந் தந்தருளினார். எறக்குறைய அதேகாலத்தில் மற்ற அப்போஸ்தலர்களுக்கும் அதே வல்லமையை அளித்தார்.

அப்போஸ்தலர்களுக்கு அளிக்கப்பட்ட அதிகார வல்லமையைக் குறித்து சேசுநாதர் வசனித்த வாக்கியங்களாவன: "மெய்யாகவே சொல்லுகிறேன்: நீங்கள் பூலோகத்தில் எதெதைக் கட்டுவீர்களோ பரலோகத்திலும் அது கட்டப்படும்; பூமியில் எதெதைக் கட்டவிழ்ப்பீர்களோ பரலோகத்திலும் அது கட்டவிழ்க்கப்படும்." மேலும் அவர்கள் பிரசங்கிக்கப் போகும்போது, அவர்களுக்குள்ள அதிகாரத்தைப்பற்றி சந்தேகங்கொள்ளாதபடி, "உங்களுக்குச் செவிகொடுக்கிறவன் எனக்குஞ் செவிகொடுக்கிறான்' உங்களைப் புறக்கணிப்பவனோவெனில் என்னையும் புறக்கணிக்கிறான்" என்றருளிச்செய்தார்.

வினா.—அப்போஸ்தலர்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரமென்ன? இந்த வல்லமையைத் தந்தபோது கிறீஸ்துநாதர் வசனித்த வாக்கியங்களெவை?

---

## 42-ம் அதிகாரம்

### நல்ல சமாரித்தானுடைய உவமை

சேசுநாதர் ஒருநாள் போதித்துக்கொண்டிருக்கையில், வேதசாஸ்திரி யொருவன் அவரிடம் வந்து, நித்திய சீவியத்தையடைய என்ன செய்ய வேண்டுமென்றான். "உன் முழு இருதயத்தோடு சர்வேசுரனையும், உன்னைப்போல உன் புறத்தியானையும் சினேகிப்பாயாக" என்று அவர் பதில் சொல்ல:



அவன் அவரைச் சோதிக்கும்படியாக தன் புறத்தியான் யாரென்று கேட்டான்.

சேசுநாதர் மறுமொழியாக சொன்னதாவது: "ஓர் மனிதன் யெருசலேம் பட்டணத்தினின்று யெரிக்கோ நகருக்கிறங்கிப் போகையில் கள்ளர்கையில் அகப்பட, அவர்கள் அவனுடைய வஸ்திரங்களைப் பறித்து, அவனையுங் காயப்படுத்திக் குற்றுயிராய் விட்டுப்போனார்கள். அப்போது ஓர் ஆசாரியன் அவ்வழியாயிறங்கிவரச் சம்பவித்தது. ஆயினும் அவன் அவனைக் கண்டு கடந்துபோனான். அப்படியே லேவியனொருவனும் கடந்துபோனான். ஆனால் சமாரியனாகிய ஒருவன் அவனைக் கண்டு மனமிரங்கினான். அவன் அவனை யணுகி காயங்களைக் கட்டி, தன் வாகனத்தின்மேல் அவனை யேற்றி, ஒரு சத்திரத்துக்குக் கூட்டிக்கொண்டுபோய் அவனைப் பராமரித்தான். மறுநாள் அவன் இரண்டு தெனியரென்னும் நாணயங்களைக் கொண்டுவந்து சத்திரக்காரனுக்குக் கொடுத்து, பிணியாளியைப் பராமரிக்கச்சொல்லி, தான் திரும்பிவரும்போது அதிகமாய்ச் செலவானதற்கெல்லாம் தான் உத்தரிப்பதாகச் சொன்னான்.

நமது இரட்சகர் இதைச் சொல்லி முடித்தபின் வேதசாஸ்திரியைப்பார்த்து: "திருடர்கையில் அகப்பட்ட மனிதனுக்குப் புறத்தியான் யார்?" என்று வினவினார். "அவனுக்கு இரக்கங்காட்டினவன்தான்" என்று வேதசாஸ்திரி விடைசொல்ல, "நீயும் போய் அந்தப்படியே செய்" என்று சேசுநாதர் அவனுக்குச் சொன்னார்.

வினா.—வேதசாஸ்திரி என்ன கேட்டான்? அவனடைந்த மறுமொழி யென்ன? நல்ல சமாரித்தானுடைய

உவமையைச் சொல்? இவ்வுவமை நமக்குப் படிப்பிக்கிறதென்ன?

---

## 43-ம் அதிகாரம்

### மரியாயும், மார்த்தாளும்.

இதற்குப்பிறகு சேசுநாதர் பெத்தானியா பட்டணத்திற்கு வந்தார். இவ்விடத்தில் மார்த்தாளென்ற ஒரு ஸ்திரீ அவரைத் தன் வீட்டில் ஏற்றுக்கொண்டாள். அவள் அவருக்கு மரியாதையாக வீட்டுக் காரியங்களை ஒழுங்குபடுத்துவதில் அதிக கவலைகொண்டிருந்தாள்; ஆனால் அவளுடைய சகோதரியாகிய மரியம்மாள் சேசுநாதருடைய பாதங்களினருகில் உட்கார்ந்து அவருடைய வாக்கியங்களுக்குச் செவிகொடுத்துக்கொண்டிருந்தாள்.

மரியம்மாள் வீட்டு வேலைகளையெல்லாந் தன் பேரில் போட்டுவிட்டதை மார்த்தாள் கண்டு, சேசுநாதரிடம் வந்து "ஆண்டவரே! எனக்கு உதவிசெய்ய என் சகோதரிக்குக் கற்பித்தருளும்" என்று அவரை மன்றாடினாள். ஆனால் சேசுநாதர் அவளுக்குப் பிரத்தியுத்தாரமாக: "மார்த்தாளே! நீ அநேக காரியங்கள் மட்டில் கவலைபட்டுக் கலங்குகின்றாய்; ஆயினும் ஒரே காரிய மவசரமாயிருக்கின்றது; மரியம்மாளோ அந்த உத்தமமான பங்கைத் தெரிந்துகொண்டாள்; அது அவளிடத்தினின்று எடுக்கப்படமாட்டாது" என்றார்.

வினா.—மார்த்தாளைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? மரியாயியைப்பற்றி ஆண்டவர் சொன்னதென்ன? இவ்விருவரில் யாருடைய நடத்தை சிறந்தது?

---



## 44-ம் அதிகாரம்

### பூரமண்டல மந்திரம்

ஒருநாள் சேசுநாதர் ஜெபஞ்செய்து முடிந்தபின் அவருடைய சீஷரிலொருவர் அவரை நோக்கி "ஆண்டவரே! அருளப்பர் தம்முடைய சீஷர்களுக்குப் படிப்பித்ததுபோல செபம்பண்ண நீரும் எங்களுக்குப் படிப்பித்தருளும்" என்றார். அதற்குச் சேசுநாதர் நீங்கள் வேண்டிக்கொள்ளுகையில்: "பரமண்டலங்களிலேயிருக்கிற எங்கள் பிதாவே! உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக; உம்முடைய இராச்சியம் வருக; உம்முடைய சித்தம பரமண்டலத்திலே செய்யப்படுமாப்போல பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக; அன்றன்றுள்ள எங்களப்பம் எங்களுக்கு இன்று தாரும்; எங்கள் கடன்காரருக்கு நாங்கள் பொறுக்குமாப்போல எங்கள் கடன்களை எங்களுக்குப் பொறும்; எங்களைச் சோதனையில் பிரவேசிப்பியாதேயும்; தின்மையிலேநின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும் ஆமென்" என்று ஜெபியுங்கள் எனப் படிப்பித்தார்.

மீளவும் அவர்களை நோக்கி, "வருந்திச் சுமைசுமக்கிறவர்களே, என்னிடத்தில் நீங்களனைவரும் வாருங்கள்; நானே உங்களை இளைப்பாற்றுவேன். என் நுகத்தடி இனிதாகவும், என் சுமை இலேசாகவுமிருக்கிறது. நான் சாந்தகுணமும் மனத்தாழ்ச்சியுமுள்ளவனென்று என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்" என்றார்.

வினா.—பரமண்டல மந்திரத்தின் வாலாற்றைச் சொல்லு? சேசுநாதர் சொன்ன வேறு புத்திமதிகளெவை?

---

## 45-ம் அதிகாரம்

### சேதமாய்ப்போன ஆடும், நல்ல ஆயனும்

கூடாரப் பண்டிகையின்போது சேசுநாதர் யெருசலேமுக்குப்போய் போதிக்கும் தருணத்தில், ஆயக்காரரும், பாவிகளுமானோர் அநேகர் அவருடைய போதனையைக் கேட்க வந்ததால், பரிசேயரும் வேதபாரகரும் முறையிட்டுக்கொண்டார்கள். ஆனதால், ஆண்டவர் அவர்களைப்பார்த்துத் திருவுளம்பற்றின உவமையாவது.

"உங்களுக்குள்ளே நூறாடுகளை உடையவனாகிய மனிதன் எவனாவது அவைகளில் ஒன்றை யிழந்துபோவானானால், மற்ற தொண்ணூற்றொன்பதையும் வனாந்தரத்தில் விட்டுவிட்டுச் சேதமாய்ப் போனதைக் கண்டுபிடிக்குமட்டும், அதைத் தேடிப்போகிறானல்லவோ? அல்லாமலும அதைக் கண்டுபிடித்தபின் களிகூர்ந்து, அதைத் தன் தோளின்மேற் சுமந்து வீட்டுக்குவந்து தன் சிநேகிதரையும் அயல் வீட்டாரையும் வரவழைத்து: சேதமாய்ப்போயிருந்த என் ஆட்டை நான் கண்டுபிடித்தபடியால், என்னோடு சந்தோஷியுங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவானே. இழந்துபோன ஒரு ஆட்டின்மட்டில் ஒருவன் செய்வதுபோலவே, சர்வேசுரனும் தவஞ்செய்கிற பாவியின்மட்டில் செய்கின்றார்" என்பதே.

மேலுங் கிறீஸ்துநாதர்: "நான் நல்ல ஆயனாயிருக்கிறேன்! மேய்ப்பன் தன் ஆடுகளுக்காகத் தன் சீவனைக் கொடுக்கிறான். ஆனால் கூலியாளோவெனில் ஓநாய் வருவதைக் கண்டு ஆடுகளைவிட்டு ஓடிப்போகிறான். நான் ஆட்டுக்காக என் சீவனைக் கொடுக்கிறேன். இந்த



ஆட்டுக்கிடையைச் சேராத வேறாடுகளுமெனக்குண்டு; அவைகளையும் நான் கூட்டிக்கொண்டு வரவேண்டும். அப்போது ஒரே ஆட்டுக்கிடையும் ஒரே மேய்ப்பனுமுண்டாம்" என்று திருவுளம்பற்றினார்.

வினா.—நல்ல ஆயனுடைய உவமையைச் சொல்வதற்குக் காரணமென்ன? அதைச் சொல்லு? கிறீஸ்துநாதர் தம்மைப்பற்றி யென்ன சொன்னார்?

---

## 46-ம் அதிகாரம்

### ஊதாரிப்பிள்ளை

நல்ல ஆயன் எவ்விதமா யிருக்கவேண்டுமென்பதை வெகு நேர்த்தியாய் விளக்கிக்காட்டின மேற்படி உவமையைச் சொன்னபிறகு, தவஞ்செய்யும் பாவியின்மட்டில் தமது பிதாவுக்குள்ள தயாள குணத்தைக் காட்டும்படி வேறோர் உவமையைத் திருவுளம்பற்றினார்:

"ஓர் மனிதனுக்கு இரண்டு குமாரரிருந்தார்கள். அவர்களில் இளையவன் தந்தையிடமிருந்து தனக்குச் சேரவேண்டிய பாகத்தைக் கேட்டுப்பெற்றுக்கொண்டு, தூரதேசம்போய் துஷ்டரோடு சகவாசஞ்செய்து, தன் பணத்தையெல்லாந் துர்மார்க்கத்தில் செலவழித்துவிட, அவனுடைய தோழர்கள் அவனை அம்பலத்தில் விட்டுவிட்டார்கள்.

"அப்போது அவன் தான் பசியால் சாகவேண்டியிருப்பதை யுணர்ந்து ஒரு குடியானவனிடத்தில் வேலைக்கமர்ந்து அவனது பன்றிகளை மேய்த்துக்கொண்டிருக்கையில், தன் ஈனஸ்திதியைக் கண்டுபிடித்துக்

கஸ்திப்பட்டுத் தன் தகப்பனிடம் திரும்பிப்போக தீர்மானித்துக்கொண்டான்.

“இரக்கமுடைய அவனுடைய தகப்பன், தன் மகன் தன்னிடம் எப்போது வருவானோவென்று ஏக்கமுற்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கையில், மகன் திரும்பிவருவதைக் கண்ட தகப்பன் ஆவலோடு அவனைச் சந்திக்க எதிர்கொண்டுபோய் அவனைக் கட்டி முத்



தமிட, அவன் ‘தந்தையே! பரலோகத்துக்கும் உமக்குங் குற்றஞ்செய்தேன். இனி உம்முடைய குமாரனென்று அழைக்கப்படுவதற்கு நான் பேறுபெற்றவனல்ல’ என்றான்.

“தகப்பனோவெனில் தன் ஊழியருக்குக் கட்டளையிட்டதாவது: ‘நீங்கள் தீவிரமாய்ப்போய் முதற்றரமான அங்கியைக் கொண்டுவந்து இவனுக்கணியுங்



கள்; இவன் கைக்கு மோதிரத்தையும், கால்களுக்குப் பாதரட்சையுந் தரியுங்கள்; கொழுமையான கன்றையுங் கொண்டுவந்தடியுங்கள். பின்னும் நாமெல்லோரும் விருந்தாடி மகிழ்வோமாக’ என்றான்.

இவ்வாறு காரியம்நடந்துகொண்டிருக்கும்போது அவனுடைய மூத்த குமாரன் வயலிலிருந்து வீட்டிற்குச் சமீபித்துவருகையில், கீதவாத்தியத்தையும் நடனத்தையுங் கேட்டு, அதன் காரணத்தையுந் தெரிந்துகொண்டு, அதிக சினங்கொண்டு, தன் தகப்பனிடம் போய் ‘தன் ஆஸ்தியை விலைமாதரோடு விழுங்கின என்னுடைய சகோதரன் வந்தவுடனே அவனுக்காக கொழுமையான கன்றை யடித்தீர். நான் என் சிநேகிதரோடு விருந்தாடும்படி ஒரு வெள்ளாட்டுக்குட்டியை முதலாய் நீர் எனக்கொருபோதுங் கொடுத்ததில்லையே’ என முறையிட்டுக்கொண்டான். தகப்பனோவென்றால் அவனை நோக்கி ‘மகனே! நீ எப்போதும் என்னோடிருக்கிறாய்; எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதுதானே; உன் சகோதரனாகிய இவனோவெனில், இறந்து மறுபடி உயிர்த்ததினாலும், இழக்கப்பட்டு மீளவுங் கண்டுபிடிக்கப்பட்டதினாலும், விருந்தாடவுஞ் சந்தோஷிக்கவும்வேண்டியதாயிருந்ததென்றான்” என்று திருவுளம்பற்றினார்.

புத்தி.—இந்த உவமையில் சேசுநாதர் தவத்தைப்பற்றிப் போதிக்கிறார் என்னலாம். 1-வது ஊதாரிப்பிள்ளை தன் பாவங்களை அறிந்து மனஸ்தாபப்பட்டுத் தன் தகப்பனிடந் திரும்புகிறான். 2-வது தன் தப்பிதத்தை அறிக்கையிட்டு அதற்குப் பரிகாரஞ்செய்யத் தயாராயிருக்கிறான். இவ்வண்ணமே பாவியானவன் தன் பாவங்களைக் கண்டுபிடித்து, மனஸ்தாபப்பட்டு, அவற்றைப் பாவசங்கீர்த்தனஞ் செய்கிறான்; பிறகு தனக்கிடப்பட்ட அபராதத்தை முழு

மனதுடன் எற்றுக்கொள்ளுகிறான்; கடைசியாய் குருவானவருடைய பாவப்பொறுத்தல் ஆசீர்வாதமானது அவனை சர்வேசுரனோடு உறவாக்குகின்றது.

வினா.—ஊதாரிப்பிள்ளையின் உவமையைச் சொல்லு? அந்த உவமை கற்பிப்பதென்ன? எப்படி?

---

## 47-ம் அதிகாரம்

### ஐசுவரியவானும், இலாசரும்

சேசுநாதர் பிரசங்கஞ்செய்கையில் வேறோர் உவமையைச் சொன்னார்: "ஐசுவரியவானான ஓர் மனிதனிருந்தான். அவன் சிவப்பு பட்டையும் மெல்லிய சணலாடையுந் தரித்துக்கொண்டு அநுதினமும் சம்பிரமமாய் விருந்தாடுவான். இலாசரென்னும் ஓர் பிச்சைக்காரனுமிருந்தான். இவன் இரணம் நிறைந்தவனாய் ஐசுவரியவானுடைய வாசற்படியிலே கிடந்து, அவனுடைய மேசையிலிருந்து சிதறி விழும் பருக்கையால் பசியாற்றிக்கொள்ள அபேட்சித்திருந்தான்; மேலும் நாய்களும் அவனுடைய இரணங்களை நக்கிக்கொண்டிருந்தன.

"பிச்சைக்காரனிறந்து சம்மனசுக்களால் அபிரகாமென்பவருடைய மடியிற் கொண்டுபோய் விடப்பட, ஐசுவரியவானு மிறந்து நரகத்தில் புதைக்கப்பட்டான். பின்னும் அவன் தன் கண்களை ஏறெடுத்து, தூரத்தினின்று அபிரகாம் மடியிலிருந்த இலாசரைப்பார்த்து, 'அவனுடைய விரலை ஜலத்தில் தோய்த்து தன் நாவைக் குளிரச்செய்ய அனுப்பவேண்டு'மென்று அபிரகாமைப் பிரார்த்தித்துக்கொண்டான். அபிரகாம் அவனுக்குப் பிரத்தியுத்தரமாக 'நீ உன் சீவியகாலத்தில் சுகத்தைப்



பெற்று அகமகிழ்ந்தாய். இலாசர் அவ்விடத்தில் துன்பங்களை யனுபவித்தான். ஆனால் இப்போதிவன் தேற்றரவடைகிறான்; நீயோவெனில், வேதனைப்படுகிறாய்.



மேலும் நாங்கள் உங்களிடத்திற்கும் நீங்கள் எங்களிடத்திற்கும் வராதபடிக்கு பெரும் பாதாளம் ஒன்று நிலையாயமர்ந்திருக்கிறது' என்றார்.

"கடைசியாக அந்த ஐசுவரியவான் தன்னுடைய பந்து சகோதராவது நரக பிராப்தர் ஆகாவண்ணம் இலாசரை யனுப்பி அவர்களுக்கு புத்திபோதிக்கும்படியாக அபிரகாமை மன்றாடினான். அதற்கு அபிரகாமென்பவர் அவனை நோக்கி அவர்களுக்கு மோயீசனும் தீர்க்கதரிசிகளும் இருக்கிறார்கள்; அவர்களுக்கு செவி கொடுத்து நடப்பார்களாக" என்றார்.

வினா.—ஐசுவரியவானைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது? இலாசரைப்பற்றி சொல்லியிருப்பதென்ன? அபிரகாம் என்ன சொன்னார்? கடைசியாக ஐசுவரியவான் செய்த மன்றாட்டேது? அதற்கு அவனடைந்த மறுமொழி எது?

---

## 48-ம் அதிகாரம்

### பிறவிக்குருடன் பார்வையடைந்தது

சேசுநாதர் கூடாரப் பண்டிகையைக் கொண்டாடிக் கொண்டிருக்கையில் ஓர் ஓய்வுநாளில் தேவாலயத்தைவிட்டு வெளியே வந்தபோது, குருடனாகப் பிறந்த மனிதனொருவன் எதிராக வந்தான். அப்போது சீஷர் "குருவே இவன் குருடனாகப் பிறக்கும்படி பாவம் செய்தவனார்? இவனோ அல்லது இவன் பெற்றோரோ?" என்று வினாவ, சேசுநாதர் மறுமொழியாக "இவனாவது இவனுடைய பெற்றோராவது பாவஞ் செய்தவர்களல்ல. ஆனால் சர்வேசுரனுடைய கிரியைகள் இவனிடத்தில் விளங்கும்பொருட்டு இப்படியாயிற்று" என்றார்.

பின்னும் அவர் தரையில் துப்பி உமிழ்நீரால் சேறாக்கி அச்சேற்றை அவனுடைய கண்களின்மேல் தடவி "நீ போய் சிலோயேயென்னுங் குளத்தில் உன்



னைக் கழுவு" என்று சொல்லி யனுப்ப, அவனும் அப்படியே செய்து பார்வையடைந்து திரும்பிவந்தான்.

முன் அவனை யறிந்தவர்கள் திகைத்து பரிசேயரிடத்தில் அவனைக் கொண்டுபோனார்கள். நீ எப்படி பார்வையடைந்தாயென்று கேட்க, நடந்த காரியத்தைச் சொன்னான். சேசுநாதர் ஓய்வு நாளில் குணப்படுத்தினாரென்று அவர்கள் கேள்விப்பட்டபோது, சிலர் அவரைச் சர்வேசுரனென்றும், வேறு சிலர் அவரைப் பாவியென்றுஞ் சொல்ல, மற்றுஞ்சிலர் "பாவியானவன் புதுமைகளைச் செய்யலாகுமோ!" என்று சொன்னார்கள். அதனால் அவர்களுக்குள்ளே அபிப்பிராய பேதத்தினால் பிரிவினையுண்டாயிற்று.

வேறு சிலர் பிறவிக்குருடன் இவனல்லவென்றார்கள். ஆகையால் இவனுடைய தாய்தந்தையரை வரவழைத்து பிறவிக்குருடனாகப் பிறந்த உங்கள் மகன் இவன்தானோவென்று கேட்க, ஆமென்று சொன்னார்கள். அப்போது பார்வையடைந்த குருடன் சர்வேசுரன் ஒருவரால்மட்டுமே தவிர மற்ற எவராலும் சௌக்கியப்படக்கூடாதென்று பல நியாயங்களைச் சொல்லிக்காட்டியும் பரிசேயர் வெகு சினங்கொண்டு அவனைப் புறம்பே தள்ளினார்கள்.

சில தினங்களுக்குப்பிறகு, சேசுநாதர் முன் சொன்ன மனிதனைக்கண்டு, நீ சர்வேசுரனுடைய குமாரன்பேரில் விசுவாசமாயிருக்கிறாயோவென்று கேட்க, அவன் அவர் யாரென்றான்; நாமே சர்வேசுரனுடைய குமாரனென்று சேசுநாதர் சொல்ல, ஆண்டவரே விசுவசிக்கிறேன் என்று சொல்லி சாஷ்டாங்கமாக விழுந்து அவரை ஆராதித்தான்.

புந்தி.—கிறிஸ்துநாதருடைய காலத்தில் "குருடன் பார்வை யடைவான்" என்று இசையாஸ் சொன்ன தீர்க்கதரிசனமானது இந்தப் புதுமையால் சம்பூரணமாயிற்றென்னலாம். இப்பேர்ப்பட்ட புதுமை சர்வேசுரனால்மாத்திரம் ஆகக்கூடுமொழிய மற்றப்படியல்ல; அப்படியிருந்தும் அந்த மூர்க்கப் பரிசேயர் அதை நம்பவில்லை.

வினா.—குருடனைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது? அவன் எப்படி சொஸ்தப்பட்டான்? பரிசேயர் நடந்த விதமெப்படி? யாரை வரவழைத்தார்கள்? குருடனுக்கு என்ன செய்யப்பட்டது? ஏன்? பிறகு அவனுக்கு என்ன சம்பவித்தது?

---

## 49-ம் அதிகாரம்

### பத்து குஷ்டரோகிகள்

கூடாரப் பண்டிகை முடிந்தபிறகு சேசுநாதர் சமாரியா கலிலேயா நாடுகளின் நடுவே நடந்துகொண்டிருக்கையில், ஓர் கிராமத்தில் பத்து குஷ்டரோகிகளைக் கண்டார். மோயீசன் பிரமாணப்படி குஷ்டரோகிகள் பட்டணங்களிலாவது ஊர்களிலாவது ஜனங்களோடு கலந்துசஞ்சரியாமல் ஊருக்கு வெளியேயிருக்கவேண்டுமென்று திட்டஞ் செய்யப்பட்டிருந்தது. சேசுநாதர் அவர்களைக்கண்டு "நீங்கள் போய் ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள்" என்று கட்டளையிட்டார். அப்படியே அவர்கள் போகும்போது வழியிலே சொஸ்தமடைந்தார்கள்.

அவர்களிலொருவன் தான் சொஸ்தமானதைக் கண்டு உடனே வந்து சேசுநாதருடைய பாதத்தில் விழுந்தான். இவனே சமாரியன். அப்போது அவர்



அவனை நோக்கிப் பத்துப்பேரும் சொஸ்தமானார்களல்லோ, மற்ற ஒன்பது பேரும் எங்கே? அன்னியனான நீமாத்திரம் துதிசெலுத்த வந்ததேதென்றார். பிறகு அந்நன்றியுள்ள குஷ்டரோகிக்கு ஆறுதலாக நீ எழுந்து போ; ஏனெனில் உன் விசுவாசம் உன்னை சௌக்கியப்படுத்தினது என்று சொல்லி, அவனை ஆசீர்வதித்து அனுப்பினார்.

வினா.—பத்து குஷ்டரோகிகளுடைய வரலாற்றைச் சொல்லு?

---

## 50-ம் அதிகாரம்

### ஆயக்காரனும், பரிசேயனும்

தங்களை நீதிமான்களாக நினைத்துக்கொண்டு மற்றவர்களை நிந்திக்கிறவர்களைப்பற்றி அடியில்வரும் உவமையைச் சேசுநாதர் திருவுளம்பற்றினார்: "பரிசேயனும் ஆயக்காரனுமாகிய இருவர் செபஞ்செய்ய தேவாலயத்துக்குப் போனார்கள். பரிசேயன் நின்ற நிலையில் தனக்குள் செபித்ததாவது: 'சர்வேசுரா! திருடர், அநீதர், விபசாரராகிய மற்ற மனிதரைப்போலும், இவ்வாயக்காரனைப்போலும் நான் இராததைப்பற்றி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்துகிறேன். வாரத்தில் இரண்டு விசை ஒருசந்தி பிடிக்கிறேன்; எனக்குண்டான யாவற்றிலும் பத்தில் ஒருபங்கு கொடுக்கிறேன்' என்றான்.

"ஆயக்காரனோவென்றால் தூரத்திலே நின்று தன் கண்களால் வானத்தை ஏறிட்டுப்பார்க்கமுதலாய்த் துணியாமல், தன் மார்பில் அடித்துக்கொண்டு 'சர்வேசுரா! பாவியாகிய எனக்குத் தயாபரராயிரும்' என்றான்.

"அவனைவிட இவனே நீதிமானானென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில் 'தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்; தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்' " என்றார்.

வினா.—பரிசேயனையும் ஆயக்காரனையும்பற்றி உவமையைச் சொல்லு? பரிசேயன் என்ன செய்தான்? ஆயக்காரன் என்ன செய்தான்? எவன் நீதிமானாக எண்ணப்பட்டான்?

---

## 51-ம் அதிகாரம்

### ஐசுவரியவானான வாலன்

ஐசுவரியவானான ஒரு வாலன் சேசுநாதரிடம் வந்து நல்ல குருவே! நான் எதைச் செய்தால் நித்திய சீவியத்தை யடைவேனென்று கேட்டான். "கற்பனைகளை அனுசரித்துக்கொள்" என்று சொன்னார். அவன் சந்தேகப்பட்டு எந்த கற்பனைகள் என்று கேட்க, சேசுநாதர் மறுமொழியாக: "கொலைசெய்யாதிருப்பாயாக, பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக, உன் பிதாவையும் மாதாவையும் சங்கித்திருப்பாயாக" என்ற இவை முதலிய பத்துக் கற்பனைகளைத்தான் என்றார். அவன் இதைக் கேட்டு: என்னிளம் பிராயமுதல் இவற்றை அனுசரித்துவந்தேனென்றான்.

அப்போது சேசுநாதர் அவன் பக்கமாய்த்திரும்பி "நீ உத்தமனாகவேண்டுமானால், உனக்குண்டான எல்லாவற்றையும் விற்று தரித்திரருக்குக் கொடு; பின்னும் வந்து நம்மைப் பின்செல்" என்றார். ஆனால் அந்த வாலிபன் அதைக் கேட்டு விசனப்பட்டுப் போய் விட்டான். அப்போது சேசுநாதர் தமது அப்போஸ்



தலர்கள் பக்கமாய்த்திரும்பி, பணக்காரருக்குத் தங்கள் ஆஸ்தியை விட்டுவிடுவது எவ்வளவோ பிரயாசையாயிருக்கும் என்றும்,* அவர்களில் சொற்பப்பேர்மாத்திரம் மோக்ஷராச்சியஞ் சேருவார்களென்றும் திருவுளம் பற்றினார்.

வினா.—ஐசுவரியவானைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? அவன் சேசுநாதரோடு செய்த சம்பாஷணையைப் பற்றிச் சொல்லு? பணக்காரரைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது?

---

## 52-ம் அதிகாரம்

### கொடிமுந்திரிகைத் தோட்டத்து வேலையாட்கள்

சேசுநாதர் தமது பிரமாணிக்கமுள்ள ஊழியனுக்குக் கிடைக்கும் வெகுமானத்தைப்பற்றிச் சொன்னபிறகு, பின்வரும் உவமையையுஞ் சொன்னார்:

"பரலோக இராச்சியமானது தனது கொடிமுந்திரிகைத் தோட்டத்துக்குக் கூலியாட்களை அமர்த்துவதற்காக அதிகாலையிற் புறப்பட்ட குடும்பத்தெசமானனை ஒத்திருக்கிறது. அவன் நாளொன்றுக்கு ஒரு தெனியர் நாணயங் கொடுப்பதாக கூலியாட்களுடன் ஒப்பந்தஞ் செய்துகொண்டு தனது கொடிமுந்திரிகைத் தோட்டத்துக்கு அவர்களை அனுப்பிவைத்தான்.

"அவன் மூன்றாம், ஆறாம், ஒன்பதாம் மணிவேளையிலும் போய் வேலையில்லாது சோம்பலாயிருந்தவர்களைக்கண்டு உங்களுக்கு நியாயமான கூலி கொடுப்பேன் என் தோட்டத்துக்குப் போங்கள் என்றான். பதினோராம் மணிவேளையிலும் அவ்விதமே செய்தான்.

"சாயரட்சையானபின்பு எசமான் வேலையாட்களை வரவழைத்து கடைசியானவர்கள் துவக்கி முதலானவர்கள்வரைக்கும் ஆளுக்கு ஒரு தெனியாக கூலி தீர்த்துக்கொடுத்தான். அதிகாலைமுதல் வேலை செய்தவர்களும் அதே கூலியைப் பெற்றுக்கொண்டதால் அவர்கள் முறையிட்டுப் பின்னால் வந்தவர்களையும் எங்களோடு சமமாக்கலாமோ வென்றார்கள்.

"அதற்கு எசமான் மறுமொழியாக, 'உங்களுக்குச் சேரவேண்டியதைப் பெற்றுக்கொண்டீர்களல்லோ! அப்படியிருக்க ஏன் முறைப்படுகிறீர்கள்? என்னிஷ்டம்போல் நான் செய்ய என்னாற் கூடாதோ?' என்றான்.

பிறகு சேசுநாதர் சொன்னதாவது: "இப்படியே பரலோகத்திலுமிருக்கும்; கடைசியானவர்கள் முதலானவர்களாகவும், முதலானவர்கள் கடைசியானவர்களாகவுமிருப்பார்கள். ஏனெனில் அழைக்கப்பட்ட அநேகரில் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் சிலராகவேயிருப்பார்கள்" என்றார்.

புத்தி.—சேசுக்கிறீஸ்துநாதர் பிறக்க இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னதாகவே யூதர் சர்வேசுரனுடைய பிள்ளைகளாகத் தெரிந்துகொள்ளப்பட்டபோதிலும் அவர்கள் அச்சுதந்தரத்தை அசட்டைசெய்தபடியால் அவர்களில் சிலர் மாத்திரம் தெரிந்துகொள்ளப்பட்டு, சேசுக்கிறீஸ்துநாதருடைய இராசாங்கத்தில் ஓர் பங்கைப் பெற்றுக்கொண்டார்கள். யூதர் சேசுக்கிறீஸ்துநாதரை மறுத்துத் திரஸ்கரித்துவிட்டபடியால், அவர் அஞ்ஞானிகள் பக்கந் திரும்பவே கணக்கற்றபேர் அவருடைய கொடியின்கீழ் சேர, கடைசியானவர்கள் மூந்தினவர்களாகவும், மூந்தினவர்களாகிய யூதர் கடைசியானவர்களாகவுமானார்கள்.



வினா.—கொடிமுந்திரிகைத் தோட்டத்து வேலையாட்களைப்பற்றிய உவமையைச் சொல்லு? யூதரையும் அஞ்ஞானிகளையும்பற்றி என்ன சொல்லியிருக்கிறது?

---

## 53-ம் அதிகாரம்

### இலாசர் உயிர்த்தெழுந்தது

சேசுநாதர் தேவாலய அபிஷேக திருநாளைக் கொண்டாடுகையில், தாமும் பிதாவும் ஒன்றாயிருப்பதை வெளிப்படையாகப் போதித்தார். யூதரிதைக் கேட்டு, அவர் தம்மைச் சர்வேசுரனுக்குச் சரியொத்தவராக்குகிறாரென்று கண்டு, அதிக சினங்கொண்டு அவரைக் கல்லாலெறிந்து கொல்லத் தீர்மானித்துக்கொண்டார்கள். சேசுநாதர் அவர்களுடைய கருத்தை யறிந்து யெருசலேமைவிட்டு யோர்தான் நதி நாட்டுப்பக்கமாய்ப் போனார். அவ்விடத்தில் பெத்தானியா ஊராராகிய மரியாயி மார்த்தாளென்ற இரு சகோதரிகளுடைய தமயனான இலாசரென்பவன் அதிக வியாதியாயிருப்பதாக சங்கதி எட்டினது.

இலாசர் இறந்துவிட்டானென்று அவர் தமது அப்போஸ்தலர்களுக்குச் சொல்லி, இரண்டு நாள் அவ்விடத்திலேயே தங்கியிருந்தார். அவர் பெத்தானியாவுக்கு வந்தபோது, மார்த்தாள் அவரைச் சந்தித்து, தாமதப்பட்டு வந்தபடியால் முறையிட்டுக்கொண்டாள். அவரோ "உன் சகோதரன் பிழைப்பான், தைரியமாயிரு" என்று சொன்னார். சேசுநாதர் வருகிறாரென்று மார்த்தாள் மரியாயிக்குச் சொல்லவே, அவள் தன்னழுகையை நிறுத்தி, ஊருக்கு வெளியே வந்துகொண்டிருந்த சேசுநாதரைச் சந்திக்க துரித

மாய்ப் புறப்பட்டுப்போய் அவருடைய பாதத்தில் விழுந்து: "ஆண்டவரே, நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் மரித்திருக்கமாட்டானே" என்றாள்.

அவளும் அவளோடுவந்த யூதரும் அழுவதை சேசுநாதர் பார்த்து, இலாசரை எங்கே அடக்கஞ் செய்தீர்களென்று கேட்க, கல்லறைக்கு அவரைக் கூட்டிக்கொண்டு சென்றார்கள். அப்போது அவர் கல்ல



றையை மூடியிருந்த கல்லைப் புரட்டும்படி கட்டளையிட்டு, தமது கண்களை மேலே உயர்த்திச் செபித்து: "இலாசர்! வெளியே வா" என்று பேரொலியாய்க் கூப்பிட்டார். அக்ஷணமே இலாசர் எழுந்து தான் புதைக்கப்பட்டபோது கட்டப்பட்ட கச்சையோடும் மூடப்பட்ட வஸ்திரத்தோடும் வெளியே வந்தான். அப்போது யூதரில் அநேகர் சேசுநாதரை விசுவசிக்க,



மற்றவர்கள் போய் பிரதான ஆசாரியர்களுக்கும் பரிசேயர்களுக்கும் சம்பவித்த காரியத்தைச் சொன்னார்கள்.

வினா.—சேசுநாதர் தம்மைப்பற்றியும் பிதாவைப்பற்றியும் என்ன போதித்தார்? அவர் எங்கேபோனார்? அவருக்கு எட்டின சங்கதி யென்ன? சேசுநாதர் பெத்தானியாவுக்கு வந்தபோது என்ன சம்பவித்தது?

---

## 54-ம் அதிகாரம்

### யூதர் சேசுநாதரைக் கொல்லத் தேடினது

இலாசர் உயிர்த்ததையும், ஜனங்கள் சேசுநாதரைப் பின்பற்றுவதையும், பரிசேயரும் பிரதான ஆசாரியருங் கேட்டு "நாம் இவனை இப்படியே விட்டு விட்டால் எல்லோரும் இவன்பேரில் விசுவாசங்கொள்ளுவார்கள்" என்று சொல்லி அவ்வருடத்தில் பிரதான ஆசாரியனாயிருந்த கைப்பாசைப்பார்த்து இவ்விஷயத்தில் அவனுடைய அபிப்பிராயம் என்னவென்று கேட்க, அவன்: "சனமுழுவதும் சேதமடையாவண்ணம் ஒருவன் இறப்பது நலம்" என்று சர்வேசுரனுடைய பிரேரேபணைப்படி சொன்னான்.

அதைக்கேட்ட யூதர்கள் அன்றுமுதல் சேசுநாதரைக் கொலைசெய்யக் கருதினபடியால், அவர் யூதர்களுக்குள் பிரசித்தமாய்த் திரியாமல் எப்ரேமூரில் சஞ்சரித்தார். சேசுநாதருடைய கிரியைகள் அவரது தெய்வீகத்தை உருசுப்படுத்தினபடியால், யூதர்கள் அவரைப் பகைத்தார்கள்; அப்படியே சர்வேசுரன் ஆபேலை நேசித்ததால் காயின் அவனைக் கொலைசெய்தான்.

இலாசர் உயிர்த்த ஆறு நாட்களுக்குப்பிறகு சேசுநாதர் தமது அப்போஸ்தலர்களைப்பார்த்து: "நான் எருசலேமுக்குப் போகவேண்டும்; அங்கே நான் காட்டிக்கொடுக்கப்பட்டு மரணத்தீர்ப்படைவேன்; அப்போது என்னை வாதைப்படுத்திச சிலுவையிலறைந்து கொல்வார்கள்; ஆனால் மூன்றாம் நாள் மறுபடியும் உயிர்ப்பேன்" என்று வசனித்தார். இம்மகா தீர்க்கதரிசனத்தில் ஓரெழுத்தும் பிசகாமல் நிறைவேறினது.

வினா.—இலாசர் உயிர்த்தெழுந்ததைப் பரிசேயர் கேள்விப்பட்டபோது அவர்கள் நடந்தவிதமெப்படி? பிரதான ஆசாரியன் என்ன சொன்னான்? யூதர்கள் என்ன செய்யப் பிரயத்தனப்பட்டார்கள்? சேசுநாதர் சொன்ன தீர்க்கதரிசனமென்ன?

---

## 55-ம் அதிகாரம்

### ஆயக்காரனான ஜக்கேயு

ஜெரிக்கோ பட்டணத்தில் ஆயக்காரருக்குத் தலைவனான ஜக்கேயு என்பவனிருந்தான். சேசுநாதர் அப்பட்டணத்தைக் கடந்துபோவதை அறிந்து அவரைப் பார்க்கவேணுமென்று பிரியங்கொண்டான். அவன் குள்ளனாயிருந்ததைப்பற்றி சனக்குப்பலில் அவரைக் காணமுடியாமல் ஓடிப்போய் ஓர் மரத்தின்மேலேறினான். சேசுநாதர் அந்த மரத்தடியில் வந்து அவனை நோக்கி: "ஜக்கேயுவே! சீக்கிரத்திலிறங்கிவா. ஏனெனில் இன்று உன் வீட்டில் நான் தங்கவேண்டும்" என்று சொன்னதைக் கேட்ட ஜக்கேயு என்பவன் துரிதமாய் இறங்கிவந்து அக்களிப்போடு அவரை ஏற்றுக்கொண்டான்.



அதை யாவருங்கண்டு பாவியான மனிதனிடத்தில் தங்கப் போனாரென்று முறையிட்டுக்கொண்டிருந்தார்கள். சேசுநாதர் ஜக்கேயுவைப்பார்த்து: "இன்று இவ்வீட்டுக்கு இரட்சண்யமுண்டாயிற்று. ஏனெனில் மனுமகன் சேதமாய்ப்போனதை இரக்ஷிக்க வந்தான்" என்றார்.

வினா.—ஜக்கேயுவைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது?

---

## 56-ம் அதிகாரம்

### மரியமதலேனாள் சேசுநாதரை பரிமள தைலத்தால் அபிஷேகஞ்செய்தது

சேசுநாதர் ஜெரிக்கோவிலிருந்து பெத்தானியாவுக்குப் போனபோது அவ்விடத்திலிருந்த சிமையோன் என்ற ஒரு குஷ்டரோகி அவருக்கு விருந்திட்டான். அவ்விருந்தில் இலாசரும் விருந்தாடியாயிருக்க, அவனுடைய சகோதரி பணிவிடை செய்துகொண்டிருந்தாள். எல்லோரும் சாப்பிட்டுக்கொண்டிருக்கையில் மரியமதலேனாள் பரிமள தைலச் சிமிழைக்கொண்டு வந்து சேசுநாதருடைய பாதங்களின் அருகே முழந்தாளிட்டு மேற்படி தைலத்தை அவருடைய பாதங்களில் பூசி தன் கூந்தலால் துடைக்கவே, வீடு பரிமள வாசனையால் நிறைந்தது.

இதை யூதாஸ் இஸ்காரியோத்தென்பவன் கண்டு இந்த தைலத்தை முந்நூறு தெனிபருக்கு விற்று தரித்திருக்குக் கொடுக்கலாமே என்றான்; அவன் ஏழைகளின்மேல் இரக்கங்கொண்டவனாயிராமல் திரு-

டனாயிருந்ததினாலும், பணப்பையைச் சுமந்துகொண்டிருந்ததினாலுமே அப்படிச் சொன்னான்.

அதற்கு ஆண்டவர் என் அடக்க நாளுக்கு அடையாளமாய் இவள் இந்நல்ல காரியத்தைச் செய்தாள்; இவளைச் சும்மா விடுங்கள்; மேலும் நமது சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் இடங்கள்தோறும் மரியமதலேனாளுடைய பத்திக்கிருத்தியம் யாவருக்கும் வெளியாக்கப்படுமென்று திருவுளம்பற்றினார்.

புத்தி.—கோவில் சிறப்புக்காவது தேவவழிப்பாடுகளுக்காவது தேவகட்டணங் கேட்கும்போது "ஊதாரித்தனம்" என்றும், "இதற்குக் கொடுக்கிறதை ஏழைகளுக்குக் கொடுக்கலாமே" என்றும் யூதாசைப்போல் அனேகர் இக்காலத்திலுஞ் சொல்லிவருகிறார்கள். ஆனால் சேசுநாதர் இரண்டையுஞ் செய்யுங்கள் என்றார். அதாவது: தேவாலயத்தையுஞ் சிறப்பித்து ஏழைகளுக்கும் உதவிசெய்யுங்கள் என்பதே.

வினா.—சேசுநாதர் ஜெரிக்கோவிலிருந்து எவ்விடத்துக்குப் போனார்? அங்கு என்ன சம்பவித்தது? மரியமதலேனாள் என்ன செய்தாள்? யூதாஸ் என்ன சொன்னான்? சேசுநாதர் என்ன சொன்னார்? இக்காலத்தில் அனேகர் சொல்லுவதென்ன?

---

## 57-ம் அதிகாரம்

### கிறீஸ்துநாதர் ஒட்டோலகராய் எருசலேமில் பிரவேசித்தது.

மறுநாள் சேசுநாதர் எருசலேம் நகருக்குச் சமீபித்து ஒலிவேத்தென்னும் மலையருகிலுள்ள பெத்பாஜேஊரில் வந்தபோது, அவர் இரண்டு சீஷர்களை எதிரிலிருந்த கிராமத்துக்கு, அனுப்பி அங்கே வழியோரத்தில் கட்டப்பட்டிருக்குங் கோவேறுகழுதையை அவிழ்த்துக்கொண்டுவரும்படி சொன்னார்.



ஆதலால் சீஷர்கள் போய் சேசுநாதர் தங்களுக்கிட்ட கட்டளையின்படியே செய்து, கோவேறுகழுதையைக் கொண்டுவந்து, அதன்பேரில் தங்கள் வஸ்திரங்களை விரித்து சேசுநாதரை யேற்றி, யெருசலேமுக்குள் அவரை நடத்திக்கொண்டுபோனார்கள். வழியில் திரளான ஜனங்கள் அவரைச் சந்தித்து, தங்கள் வஸ்திரங்களைத் தரையிலே விரித்தார்கள். மற்றவர்களோ மரங்களின் கிளைகளைத் தறித்து, வழியிற் பாப்ப, எல்லோரும் "தாவீதன் குமாரனுக்கு ஓசன்னா உண்டாக! ஆண்டவருடைய நாமத்தால் வருகிறவர் ஆசீர்வதிக்கப்படக்கடவார்" என்று முன்னும் பின்னுமாக ஆர்ப்பரித்துக்கொண்டு சென்றார்கள்.

அந்தக் கூட்டத்தில் பரிசேயர் அநேகரிருந்ததால், ஜனங்கள் ஆர்ப்பரிப்பதைக்கண்டு பொறாமையடைந்து, சேசுநாதரைப்பார்த்து, "உமது சீஷரை அதட்டும், ஜனங்களை அமர்த்தும்" என்று சொல்லியும் சேசுநாதர் அப்படிச் செய்தவரல்ல.

சேசுநாதர் நகரத்துக்குச் சமீபமாய் வரவே, அதைக்கண்டு அழுகைப்பிரலாபத்தோடு "ஐயோ யெருசலேமே! உனக்கு வரப்போகிற காரியங்கள் இப்போது உன்கண்ணுக்கு மறைவாயிருக்கின்றன. ஆகையால் உனக்கு நாட்கள் வரும்; அப்போது உன் சத்துருக்கள் உன்னை வளைந்துகொண்டு உன்னைச் சிதைத்துத் தரைமட்டமாக்கிவிடுவார்கள். ஒரு கல்லின்மேல் மறு கல் வைப்பதற்குமுதலாய் இல்லாமற்போகும்" என்று வாக்கிட்டார்.

சேசுநாதர் எருசலேமில் பிரவேசித்தபோது நேராகத் தேவாலயத்துக்குச் செல்லவே, நான்கு திக்கிலுமிருந்து கொண்டுவரப்பட்ட வியாதியஸ்தர், குரு

டர், சப்பாணிகள் முதலியவர்களைச் சொஸ்தப்படுத்தினார். கடைசியாய் பெரியவர்கள்முதல் சிறுபிள்ளைகள்வரையில் எல்லோரும் ஆனந்த பாவசங்கொண்டு “தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா உண்டாக” என்று கூவினார்கள்.

“சீயோன் குமாரத்திகளே! அகமகிழுங்கள். இதோ உங்கள் அரசன் ஏழையாக ஓர் கோவேறுகழுதையின்மேலேறிவருகிறார்” என்று கிறீஸ்துநாதர் யெருசலேமில் பிரவேசிப்பதைப்பற்றி ஜக்காரியாஸ் வெகு காலத்துக்குமுன் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியது நிறைவேறியது.

புத்தி.—யூதர் மோயீசன் கட்டளைப்படி பாஸ்கா புருவையைச் சித்தப்படுத்தும் அதே தினத்தில் சேசுநாதரும் யெருசலேமில் பிரவேசித்ததால், பாஸ்கா புருவையை யூதசனங்களுக்காக பலியிடும் தினத்தில் நிஜ பாஸ்கா புருவையாகிய இவர் உலகத்திலுள்ள சகல ஜனங்களுக்காகவும் பலியிடப்பட வந்தாரென்று காட்டலானார்.

வினா.—கிறீஸ்துநாதர் எருசலேமில் பிரவேசிப்பதைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது? சனக்கும்பல் என்ன செய்தது? பரிசேயர் நடந்த விதமென்ன? சேசுநாதர் எருசலேமைப்பற்றி என்ன சொன்னார்? தேவாலயத்தில் என்ன செய்யப்பட்டது? சேசுநாதர் பரிசேயருக்கு எவ்விதமாய் பதிலுரைத்தார்? ஜக்காரியாசின் தீர்க்கதரிசனமென்ன? சேசுநாதர் எந்த நாளில் எருசலேமில் பிரவேசஞ்செய்தார்?



## 58-ம் அதிகாரம்

### கலியாண விருந்தின் உவமை

அடுத்த நாள் சேசுநாதர் தேவாலயத்தில் போதித்துக்கொண்டிருக்கும்போது, பின்வரும் உவமையைச் சொன்னார்: “பரலோக இராச்சியமானது தன் குமாரனுக்குக் கலியாணஞ்செய்த ஓரரசனுக்கொப்பாயிருக்கிறது. அவன் கலியாணத்துக்குக் குறிக்கப்பட்டவர்களை அழைக்கும்படி தன் ஊழியர்களை யனுப்பினான். ஆனால் வருவதற்கு அவர்களுக்கு மனமில்லாமற்போயிற்று. மறுபடியும் அவன் வேறு ஊழியரை அனுப்பியும் அவர்கள் வரமாட்டோமென்று சொன்னதுடன், அவனுடைய ஊழியரைப் பிடித்துக் கொலையுஞ்செய்தார்கள்.

“அரசன் இதைக் கேட்டுச் சினந்து தன் சேனைகளை யனுப்பி, அந்தக் கொலைப்பாதகரைச் சங்கரித்து அவர்களுடைய பட்டணத்தையுஞ் சுட்டெரித்தான்.

“அவனுடைய கலியாண விருந்துக்கு விருந்தாடிகளில்லாமலிருப்பது சரியல்லவென்று நினைத்து அரசன் தன் ஊழியரை நாலாபக்கமும் அனுப்பி, எதிர்ப்படுபவரையெல்லாம் அழைத்துவரும்படி கட்டளையிட்டான்.

“அவ்விதமே பந்தி யமர்த்தப்பட்டபிறகு அரசன் விருந்து மண்டபத்துக்குப்போய் கலியாண வஸ்திரமற்ற ஒருவனைக்கண்டு ‘நீ ஏன் கலியாண வஸ்திரமணியவில்லை?’ என்று கேட்க, அவன் மௌனமாயிருந்ததால் அவன் கைகால்களைக் கட்டி புறம்பேயுள்ள இருளில் தள்ளும்படி கட்டளையிட்டான்.”

புத்தி.—கீழ்த்திசையிலுள்ள அரசர் தங்கள் விருந்தாடிகளுக்குக் கலியாண உடை யளிப்பது வழக்கம்; ஆகையால்

அந்த துரதிஷ்ட மனிதன் தன் அஜாக்கிரதையால் தனக்குக் கொடுக்கப்பட்ட வஸ்திரத்தை யணியாமற் சென்றதால் தண்டிக்கப்பட்டான்.

வினா.—கலியாண விருந்தின் உவமையைச் சொல்லு? மௌனமாயிருந்த விருந்தாடிக்கு சம்பவித்ததென்ன? கீழ்த்திசை வழக்கமென்ன?

---

## 59-ம் அதிகாரம்

### செசாருக்கு வரி செலுத்துதல்

வேதபாரகரும் பரிசேயரும் கலியாண விருந்தின் உவமையைக்கேட்டு அதைத் தங்களைக் குறித்துத்தான் சொன்னாரென்று அவர்மேல் வர்மங்கொண்டு அவரை எப்படியாவது பேச்சில் சிக்குப்படுத்திக் குற்றம்பிடித்து, அவரைக் கொன்றுவிடலாமென ஆலோசனைசெய்தார்கள்.

ஆதலால் அவர்கள் தங்களில் சிலரை ஏரோதியரோடு அவரிடம் அனுப்பி பசப்புதலாய் வினாவச் சொன்னதாவது: "குருவே! நீர் உண்மையுள்ளவருமாய்ச் சர்வேசுரனுடைய நெறியைச் சத்தியமாய்ப் போதிக்கிறவருமாய்—எவன்மட்டிலுந் தாட்சண்யமில்லாதவருமாய்—இருக்கிறீரென்று அறிந்திருக்கிறோம். ஏனென்றால், நீர் மனிதருடைய அந்தஸ்தைப் பார்க்கிறதில்லை. ஆதலால் இராயனாகிய செசாருக்கு வரி செலுத்தலாமோ அல்லவோ சொல்லும்" என்பதே.

"வரி செலுத்தவேண்டும்" என்றால் யூதரால் பகைக்கப்படுவாரென்றும், "கூடாது" என்றால் அது இராசாங்கத்துக்கு விரோதமாய் இருப்பதைப்பற்றி ஏரோதன் அவரைப் பிடித்துக்கொள்வானென்றும்



அவர்கள் செய்த துர் ஆலோசனையின் கபடத்தை நன்கறிந்த சேசுநாதர் "வரி நாணயத்தை எனக்குக் காட்டுங்கள்" என்றார். அவர்களோ ஓர் தெனியரை அவருக்குக் காண்பித்தார்கள். இவ்வுருவம் யாருடையதென்றார். "செசாருடையது" என்று அவர்கள் சொல்ல, "அப்படியானால் செசாருக்குடையவைகளை செசாருக்கும், சர்வேசுரனுக்குடையவைகளை சர்வேசுரனுக்குஞ் செலுத்துங்கள்" என்றார்.

அவர்கள் இதைக் கேட்டு அவருடைய ஞானத்தைப்பற்றி ஆச்சரியப்பட்டதுமன்றி மறுபடியும் அவரை வினாவத் துணியாமல் அவரை விட்டகன்று போனார்கள்.

வினா.—வேதபாரகர் சேசுநாதரைக் குற்றப்படுத்த செய்த பிரயத்தனமென்ன? அவர் எப்படி மறுமொழி கூறினார்? அவர்களென்ன செய்தார்கள்?

---

## 60-ம் அதிகாரம்

### ஏருசலேமின் சங்காரத்தையும் உலக முடிவையும்பற்றி கிறீஸ்துநாதர் சொன்ன தீர்க்கதரிசனம்

சேசுநாதர் பேசி முடித்தபின் தேவாலயத்தினின்று புறப்பட எத்தனிக்கவே, அவருடைய சீஷர்கள் தேவாலயக் கட்டிடங்களை யவருக்குக் காண்பித்து அதனுடைய சிறப்பையும், உறுதியையும்பற்றிப் புகழ்ந்தார்கள். அவரோவெனில் மறுமொழியாக அவர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: "வெளித் தோற்றத்தைக்கண்டு நீங்கள் மதிமயங்கவேண்டாம். நீங்கள் இவ்வாறு பிரமிக்கிற இக்கட்டிடம் வெகுசீக்கி

ரத்தில் அழிந்து நாசமாய்ப்போகும். ஒரு கல்லின்மேல் மறு கல்லும் நிற்கப்போகிறதில்லையென்று நிச்சயமாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

பின்னும் அவர் பட்டணத்துக்குச் சற்று தூரத்திலிருக்கும் ஒலிவேத்துமலைக்குவந்து அங்கு உட்கார்ந்து யெருசலேம் பட்டண அழிவைப்பற்றியும், உலக முடிவைப்பற்றியும் திருவாய்மலர்ந்தருளியதைக் கேட்ட சீஷர்கள் அவரை நோக்கி, இவைகள் எப்போது சம்பவிக்குமென்று கேட்டார்கள்.

அதற்கு மறுமொழியாக, "எப்போது பெருஞ்சேனை எருசலேமை முற்றுகையிடுமோ அதே அழிவின் காலமென்று அறியுங்கள். அப்போது யூதேயாவிலுள்ளவர்கள் பர்வதங்களுக்கும், எருசலேமிலுள்ளவர்கள் அதை விட்டும் ஓடிப்போகக்கடவார்கள். பழிவாங்குங் காலமும் உபத்திரவ நாட்களும் அதுவேயாம்; பலர் வாளுக்கிரையாக,—பெரும் தொகையானோர் அடிமைகளாகக் கொண்டுபோகப்படுவார்கள். அப்போதே எருசலேம் சர்வ சங்காரமடையும்" என்றார்.

உலக முடிவைப்பற்றி அவர் சொன்ன மாறுத்தரமாவது: "எச்சரிக்கையாயிருங்கள்! என்னுடைய சுவிசேஷம் உலகெங்கும் பிரசங்கிக்கப்படும்; அதுவே உலக முடிவின் ஆரம்பமாம். இதுவரையில் இல்லாததும், இனி ஆகப்போகாததுமாகிய மிகுந்த உபத்திரவங்கள் அப்போது நடக்கும். மோக்ஷத்துக்கு நியமிக்கப்பட்டவர்களை முதலாய் மோசம்போக்கும்படி கள்ளக் கிறீஸ்துக்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளுந் தோன்றி, அனேக அடையாளங்களையும், அற்புதங்களையும் காட்டுவார்கள். ஆயினும் இன்னமும் முடிவாயிராது.



"ஆனால் அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே சூரியனும் இருள, சந்திரனுந் தன்னொளிகெட, அழகிய நட்சத்திரங்களும் வானத்தினின்று விழ, பரமண்டலத்தின் வல்லமைகள் அசைக்கப்படும். அப்பொழுதே மனுமகனுடைய அடையாளம் வானத்தில் காணப்படுவதுமன்றி, அவர் வானமேகங்களின்மேல் மிகுந்த வல்லமையோடும், மகிமையோடும் வருவார். அப்போது தேவதூதர் பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைக் கூட்டிச்சேர்ப்பார்கள். ஆனால் என் பிதா ஒருவரேயன்றி மற்றெவனும் அந்நாளையும் அந்நாழிகையையும் அறியான்" என்று வசனித்தார்.

புத்தி.—யெருசலேமின் அழிவைப்பற்றி தீர்க்கதரிசனமாய்ச் சொன்ன எழுபதாம் வருஷத்தில் தீத்துஸ் என்ற உரோமைத் தளகர்த்தன் சேனையோடு வந்து யெருசலேமை முற்றுகையிட்டான். ஆண்டவர் தீர்க்கதரிசனமாகச் சொன்ன வார்த்தைகளில் ஒரு அக்ஷரமும் பிசகாமல் எல்லாம் நடந்தேறியது. சுவர்களை நிலமட்டமாக்கி, நகரத்தைப் பிடித்துக்கொண்டு, தேவாலயத்தைச் சுட்டெரித்து, யூதரை அடிமைகளாக்கிக் கொண்டுபோனான். அவர்கள் மறுபடியுந் திரும்பினவர்களல்ல.

உலக முடிவைப்பற்றிய தீர்க்கதரிசனமும் அதற்குக் கடவுளால் நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் நிறைவேறுமென்பதற்குச் சந்தேகமில்லை.

வினா.—சேசுநாதர் தேவாலயத்தைப்பற்றி யென்ன சொன்னார்? அவர் ஒலிவேத்துமலைக்கு வந்தபோது எதைப்பற்றிப் பேசினார்? யெருசலேம் எப்போது அழிந்துபோகுமென்று சொன்னார்? உலக முடிவைப்பற்றி சொன்னதென்ன? எருசலேமை யார் அழித்தது? எப்போது?

## 61-ம் அதிகாரம்

### பத்து கன்னியர்களின் உவமை

மேலும் சேசுநாதர் தமது சீஷரிடம் பேசத்தொடங்கித் திருவுளம்பற்றினதாவது: "பரலோக இராச்சியமானது தங்கள் தீபங்களைக் கையிலேந்தி மணவாளனை எதிர்கொண்டழைக்கப் புறப்பட்ட பத்து கன்னியர்களுக்கொப்பாயிருக்கிறது. அவர்களில் ஐந்து பேர் விவேகிகளும், ஐந்து பேர் மதியீனருமாயிருந்தார்கள். அப்படியிருக்க மதியீனராகிய ஐவர் தீபங்களைப் பிடித்துத் தங்களோடு எண்ணெயைக் கொண்டுபோனதில்லை; விவேகிகளோவென்றால் தீபங்களோடு தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் எடுத்துக்கொண்டு போனார்கள். மணவாளன் தாமதஞ் செய்ததால் எல்லோருந் தூங்கிவிழுந்து நித்திரைபோனார்கள்.

"நடுச்சாமத்திலோவெனில் மணவாளன் வரவே, அவர்கள் எழுந்து அவனைச் சந்திக்கப் போகையில் மதியீனருடைய தீபங்கள் அணைந்துபோனதால், அவர்கள் போய் எண்ணெயை வாங்கிக்கொண்டு திரும்பி வருவதற்குள் மணவாளன் சித்தமாயிருந்த கன்னிகைகளுடன் உட்பிரவேசித்து கதவுகளை யடைத்துவிட்டான்.

"கடைசியில் மதியீனராகிய கன்னியர் வந்தும் உட்பிரவேசிக்கக்கூடுமாயில்லை. ஆகையால் தங்களுக்குக் கதவைத் திறக்கும்படி மன்றாட, மணவாளன் அவர்களுக்கு மறுமொழியாக: 'உங்களை அறியேன்' என்றான். ஆகையால் விழித்திருங்கள், ஏனெனில் மனுமகன் எப்போது வருவானென்று அறியமாட்டீர்கள்" என்றார்.



வினா.—கன்னியர்களின் உவமையைச் சொல்லு?

---

## 62-ம் அதிகாரம்

### தலேந்தென்னும் நாணயத்தின் உவமை

வேறோர் உவமையாவது: "உலக முடிவானது பிரதேசத்துக்குப் பிரயாணமாய்ப் போகிற ஓர் மனிதன் தன்னூழியரை அழைத்துத் தன்னாஸ்திகளை அவர்களுக்குக் கையளித்ததற் கொப்பாகும். அவன் ஒருவனுக்கு ஐந்து தலேந்தையும், ஒருவனுக்கு இரண்டையும், ஒருவனுக்கு ஒன்றையுங் கொடுத்துப் பிரயாணமாய்ப் போனான்.

"ஐந்து தலேந்துகளை வாங்கினவன் போய் அவைகளைக்கொண்டு வியாபாரஞ்செய்து வேறு ஐந்தைச் சம்பாதித்தான். அந்தப்பிரகாரமே இரண்டு தலேந்தைப் பெற்றுக்கொண்டவனும் வேறிரண்டைச் சம்பாதித்தான். ஆனால் ஒன்றை வாங்கினவனோவெனில் போய் பூமியைத் தோண்டித் தன்னெசமானனுடைய பணத்தைப் புதைத்துவைத்தான். அப்படியிருக்க வெகு காலத்துக்குபபிறகு அவ்வூழியரின் எசமான் வந்து அவர்களை கணக்குக் கேட்டான். ஐந்து தலேந்தை வாங்கினவன் அதனுடன் தான் சம்பாதித்த ஐந்து தலேந்தையுஞ் சேர்த்துப் பத்துத் தலேந்தை எசமானனுக்கு ஒப்புக்கொடுக்க, அவன் சந்தோஷப்பட்டு, பிரமாணிக்கமுள்ள நல்ல ஊழியனே! நன்றாய்ச் செய்தாய். நீ சொற்பக்காரியங்களில் பிரமாணிக்கமுள்ளவனாயிருந்தபடியால் அனேக காரியங்களுக்கு உன்னை யதிகாரியாக்குவேன். உன்னெசமானனுடைய சந்தோஷத்

துக்குட் பிரவேசி யென்றான். இரண்டு தலேந்தை வாங்கினவனையும் அப்படியே புகழ்ந்து சன்மானித்தான்.

"ஒரு தலேந்தை வாங்கினவன் அவரை யணுகி 'ஆண்டவரே, நீர் கண்டிப்புள்ள மனுஷராயிருந்ததைப் பற்றி நான் அஞ்சி உமது தலேந்தைப் பூமியில் புதைத்துவைத்தேன். இதோ உம்முடைய தலேந்து' என்றான். அந்த எசமான் அவனுடைய சோம்பலைப்பற்றி அவனைப் புறக்கணித்து, அவனிடமிருந்த தலேந்தை வாங்கி, பத்து தலேந்துடையவனுக்குக் கொடுத்துவிட்டு, அந்தப் பிரயோசனமற்ற ஊழியனுடைய கைகளையுங் கால்களையுங் கட்டி புறம்பேயுள்ள இருளில் போடும்படி கட்டளையிட்டான்" என்றார்.

வினா.—தலேந்தின் உவமையைச் சொல்லு?

---

## 63-ம் அதிகாரம்

### நடுத்தீர்வை

கிறீஸ்துநாதர் பகிரங்கமாகப் போதித்த விஷயங்களில் கடைசியாகச் சொல்லப்பட்டவைகளில் நடுத்தீர்வையும் ஒன்றாகும். தம்முடைய சீஷர்கள் அதற்கு முஸ்திப்பாயிருக்கும்படி அவர்களை யெச்சரித்தார்.

நடுத்தீர்வைக்கு முன்னதாக ஆகாயத்திலும் பூமியிலும் நடக்கப்போகும் குழப்பங்களையும், சூரிய சந்திர நட்சத்திரங்களின் மாற்றத்தையும், பூமி அதிர்ச்சியையும், தேவதூதர் எக்காளத்தின் தொனியால் மனிதரைத் தீர்வைக்கு அழைப்பதையும், அப்போது மனுமகன் தேவதூதரால் சூழப்பட்டு மேகங்களின்மேல்



எழுந்தருள, ஜனங்களனைவரும் அவருடைய சந்நிதியில் சேருவதையும் இன்னுமற்ற நடுநடுக்கத்துக்குரிய விஷயங்களையும்பற்றி விவரித்துச் சொன்னார்.

இவ்விதமாய் சகல ஜனங்களும் ஒன்றுகூடியபின், சேசுக்கிறீஸ்துநாதர் தமது தேவதூதரைக்கொண்டு நல்லவர்களையும் கெட்டவர்களையும் வெவ்வேறாகப் பிரித்து, நல்லவர்களை அவருடைய வலதுபாரிசத்திலும், கெட்டவர்களை இடதுபாரிசத்திலும் நிற்கவைப்பார். அப்போது கிறீஸ்துநாதர் நல்லவர்கள் பக்கமாய்த் திரும்பி, "என் பிதவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, வாருங்கள்; உலக சிருஷ்டிப்பு முதற்கொண்டு உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்ட இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ள வாருங்கள்" என்பார்.

ஆனால் கெட்டவர்களை வெகு உக்கிரமமான கோபமுகத்தோடு திரும்பிப்பார்த்து: "சபிக்கப்பட்டவர்களே! பசாசுக்கும் அவன் தூதருக்கும் முஸ்திப்பாக்கப்பட்ட நித்திய அக்கினியிற் போங்கள்" என்று பயங்கரமான தீர்வையிடுவார்.

புத்தி.—முதலில் சேசுநாதர் வந்தபோது வறுமையுள்ளவராகவும், பலவீனராகவுந் தோன்றினார். இரண்டாந்தடவையோ வல்லமைபொருந்தியவராய் தமது சர்வ மகிமையால் சூழப்பட்டு நடுவராகத் தோன்றுவார். இப்போது வெகுவாய் நிந்திக்கப்படும் சிலுவையானது, அப்போது அவருடைய மகிமைப்பிரதாபத்தின் வெற்றி அடையாளமாயிருக்கும்.

வினா.—நடுத்தீர்வையைப்பற்றி விவரித்துச் சொல்லு? நல்லவர்களுக்கும் கெட்டவர்களுக்கும் சம்பவிப்பதென்ன? சேசுக்கிறீஸ்துநாதருடைய முதல் வருகைக்கும் இரண்டாம் வருகைக்குமுள்ள பேதமென்ன?

# சேசுக்கிறீஸ்துநாதருடைய பாடுகளும் மரணமுமான

## 64-ம் அதிகாரம்

### பாஸ்கு செம்மறி

மோயீசன் ஏற்பாட்டின்படி அசீம் என்ற மாதத்தின் முதல் நாளில் யூதர் பாஸ்கு செம்மறிப் புருவையைப் பலிசெலுத்தவும், எட்டு நாளைக்குப் புளியாத மாவின் அப்பத்தைப் புசிக்கவும் கட்டளையிடப்பட்டிருந்தது. அன்றைபத்தினம் தமக்கும் தமது சீஷருக்கும் பாஸ்காவை முஸ்திப்புசெய்யும்படி இராயப்பருக்கும், அருளப்பருக்கும் சேசுநாதர் உத்தரவு செய்தார்.

அவர்கள் நகருக்குள் சென்று சேசுநாதர் தங்களுக்குக் கற்பித்தபடியே பாஸ்காவை ஆயத்தப்படுத்தினார்கள். சாயரட்சையானபோது அவர் தம்முடைய பன்னிரு அப்போஸ்தலருடன் பந்தியமர்ந்து: "இந்த இராப்போசனத்தை உங்களோடு புசிக்க எவ்வளவோ காலமாய் ஆசித்துக்கொண்டிருந்தோம்" என்றார்.

புத்தி.—யூதருடைய பாஸ்கா புருவையானது மெய்யான பாஸ்கா புருவையாகிய சேசுக்கிறீஸ்துநாதருக்கு அடையாளமாமாயிருந்தது. இதுகாரணத்தைப்பற்றியே யூதர் தேவாலயத்தில் பாஸ்கா புருவையை வருஷா வருஷம் பலிசெலுத்தும் அதே நாளிலும் அதே நாழிகையிலும் கிறீஸ்துநாதர் மனதுபொருந்திச் சிலுவையின்மேல் கொல்லப்படத் தம்மைக் கையளித்தார்.



வினா.—அசீம் மாதத்தின் முதல் நாளில் என்ன செய்யப்பட்டது?

## 65-ம் அதிகாரம்

### கால்களைக் கழுவுதல்

எல்லோரும் புசித்தானபிறகு சேசுநாதர் மேசையை விட்டெழுந்து ஓர் துணியை எடுத்து தமது இடையிற் சுற்றிக் கட்டிக்கொண்டு, ஓர் கிண்ணியில் தண்ணீர் வார்த்து தமது சீஷர்களுடைய கால்களைக் கழுவவும், தமதிடையில் சுற்றியிருந்த துணியால் துடைக்கவுந் தொடங்கினார்.

இராயப்பரிடத்தில் அவர் வந்தபோது, "ஆண்டவரே! என் காலைத் தொடாதேயும்" என்று அவர் சொல்ல, "அப்படியானால் என்னோடு உனக்குப் பங்கு கிடைக்காது" என்று கர்த்தர் சொன்னதைக் கேட்டு இராயப்பர் விக்கினஞ்செய்யவில்லை.

சேசுநாதர் அப்போஸ்தலர்களுடைய கால்களைக் கழுவியபின் மறுபடியும் உட்கார்ந்து: "ஊழியன் எசமானனைவிடப் பெரியவனல்ல; எசமானனாகிய நானே உங்கள் கால்களைக் கழுவியிருக்க, நீங்களும் ஒருவரொருவருடைய கால்களைக் கழுவக்கடவீர்கள்" என்றார்.

புத்தி.—கால்களைக் கழுவுவது அவசியமென்று சேசுநாதர் வசனித்தபோது, ஞானஸ்நானம், பச்சாத்தாபத்தைப் பற்றிச் சொன்னாரென்னலாம். எப்படியெனில்: ஞானஸ்நானத்திலும் பச்சாத்தாபத்திலும் நமது கர்த்தருடைய பேறுபலனால் பாவதோஷங்கள் கழுவப்படுவதுபோல், கடைசி இராப்போசனத்தின்பின் கால் கழுவினது முன்சொல்லப்

பட்ட தேவத்திரவியாநுமானங்களுக்கு அடையாளமாயிருக்கின்றதென்று காட்டச் சித்தமானார்.

வினா.—சேசுநாதர் கால்களைக் கழுவினதை விவரி? இராயப்பர் சொன்னதும் செய்ததுமென்ன? கால்கள் கழுவினது எதைக் குறிக்கிறது?

---

## 66-ம் அதிகாரம்

### கிறீஸ்துநாதர் தேவநற்கருணை உண்டாக்கினது

அப்போஸ்தலர்களுடைய கால்களைக் கழுவினபிறகு சேசுநாதர் வெகுகாலமாய் ஆசித்திருந்த நேரஞ் சமீபித்ததால், தாம் பாடுபடுமுன் தமது மாமிசத்தைப்



போசனமாகவும், தமது இரத்தத்தை பானமாகவுந் தருவோமென்று முன் திருவுளம்பற்றின வாக்கியத்தை நிறைவேற்றச் சித்தமானார்.



ஆகையால், அவர்களெல்லோரும் மேசையில் உட்கார்ந்திருக்கையில் தம்முன் வைக்கப்பட்டிருந்த உரொட்டியை சேசுநாதர் எடுத்துத் தமது திருக்கரங்களிலேந்தி, கண்களை மேலே உயர்த்தி, நன்றியறிந்த தோத்திரஞ்செய்து, அப்பத்தை ஆசீர்வதித்து: "வாங்கிக்கொண்டு புசியுங்கள்; இது உங்களுக்கு அளிக்கப்பட்ட என் சரீரமாய் இருக்கின்றது" என்று சொல்லி சீஷர்களுக்குக் கொடுத்தார். சேசுநாதர் இவ்வார்த்தைகளை உச்சரித்து, அப்பமாயிருந்ததை ஆராதனைக்குரிய தமது சரீரமாக மாற்றினார்.

பிறகு இரசமிருந்த பாத்திரத்தை எடுத்து, நன்றியறிந்த தோத்திரஞ்செய்து, ஆசீர்வதித்து: "யாவரும் இதிலே பானஞ்செய்யுங்கள்; ஏனெனில் இது பாவங்களுடைய பொறுத்தலினிமித்தம் அனேகருக்காகச் சிந்தப்படும் புதிய உடன்படிக்கையினுடைய என் இரத்தமாய் இருக்கின்றது; இதை என் ஞாபகமாய்ச் செய்யுங்கள்" என்று திருவாக்களித்து அதையுந் தமது சீஷர்களுக்குக் கொடுத்தார்.

இவ்வசனங்களைக்கொண்டு இரசத்தைத் தமது இரத்தமாக மாற்றினார். மேலும், "இதை என் ஞாபகமாகச் செய்யுங்கள்" என்றதால், அப்போஸ்தலர்களுக்குக் குருத்துவமளித்து மாட்சிமைதங்கிய இத்தேவத்திரவிய அனுமானம் எக்காலத்திலும் நீடித்திருக்கும்படியான ஏற்பாடு செய்தருளினார்.

புத்தி.—புதிய ஏற்பாட்டின் மெல்கிசதேக்காகிய—அரசனுங் குருவுமாகிய—சேசுநாதர் அப்பத்தினுடையவும் இரசத்தினுடையவுங் குணங்களுக்குள்ளே தம்மைப் பலியாக ஒப்புக்கொடுக்கின்றார்.

வினா.—திவ்யநற்கருணை யேற்படுத்தப்பட்ட விவரத்தைச் சொல்லு? கிறீஸ்துநாதர் என்ன செய்தார்? அவர் சொன்னதென்ன? புதிய ஏற்பாட்டில் சேசுநாதர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?

---

## 67-ம் அதிகாரம்

### யூதாசின் சதிமானமும், இராயப்பரின் மறுதலிப்பும்

சேசுநாதர் திவ்யநற்கருணையை ஏற்படுத்தினபிறகு, யூதாஸ் இஸ்காரியோத்தென்பவன் சொற்பத்தொகையாகிய முப்பது வெள்ளிக்காசுக்குத் தம்மைக் காட்டிக்கொடுக்க இருப்பதை யறிந்து கஸ்திப்பட்டார். அப்பாதகன் சாக்குசொல்லாதபடி, சேசுநாதர் வெளிப்படையாக: "உங்களில் ஒருவன் நம்மைக் காட்டிக்கொடுப்பான்" என்றார். உடனே சீஷர் ஐயப்பட்டு, "ஆண்டவரே! நானோ? நானோ?" என்று ஒவ்வொருவரும் அவரை வினவத் தொடங்கினார்கள்.

சேசுநாதரை வெகு உருக்கமாய் நேசித்திருந்த அருளப்பர் அவர் பக்கத்திலுட்கார்ந்திருந்தார். இராயப்பர் அவருக்குச் சயிக்கினைகாட்டி யாரைக் குறித்துப் பேசுகிறாரென்று கேட்கச்சொல்ல, சேசுநாதருடைய மார்பின்மேல் சாய்ந்துகொண்டிருந்த அருளப்பர் அவரை வினவினார். அதற்கு அவர் மறுமொழியாக: "நான் யாருக்கு அப்பத்தை இரசத்தில் தோய்த்துக்கொடுப்பேனோ அவனே" என்று சொல்லி தக்ஷணமே அப்பத்தைத் தோய்த்து யூதாசுக்குக் கொடுத்தார். யூதாஸ் அதை உட்கொண்டபிறகு பசாசு அவனில் பிரவேசித்தது. அவன் எழுந்துபோய் தன் சதிமானத்தை நிறைவேற்றலானான்.



யூதாஸ் புறப்பட்டுப்போனபின் சேசுநாதர் திருவுளம்பற்றினதாவது: "இப்போது மனுமகன் மகிமைப்படுத்தப்பட்டிருக்கிறான். சர்வேசுரனும் அவனிடத்தில் மகிமைப்படுத்தப்பட்டிருக்கிறார். நானுங்களோடு இன்னுங் கொஞ்சகாலமாத்திர மிருப்பேன்" என, இராயப்பர் இதைக்கேட்டு எங்கே போவீரென்று கேட்க, சேசுநாதர் மறுமொழியாக: "நான் போகிறவிடத்துக்கு நீ யிப்போதென்னைப் பின்செல்லமாட்டாய்" என்று சொல்லவே, இராயப்பர் அதிக ஆத்திரத்தால் தூண்டப்பட்டு "ஏன் இப்போதே நானும்மைப் பின்செல்லக்கூடாது? உமக்காக என சீவனையுங் கொடுப்பேனே" என்றார்.

ஆகையால் சேசுநாதர் அவர்பக்கமாய்த் திரும்பி: "இராயப்பா! சேவலிருமுறை கொக்கரிக்குமுன் நீ என்னை மும்முறை மறுதலிப்பாயென்று மெய்யாகவே, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

புத்தி.—சூசையப்பர் தன் சகோதரரை பஞ்சகாலத்தில் காப்பாற்றும்படி அவர்களால் விற்கப்பட்டதுபோல் மனுக்குலத்தை இரட்சிக்கவந்த சேசுநாதர் யூதாசால் விற்கப்பட்டார்.

வினா.—திவ்யநற்கருணை ஸ்தாபித்தபிறகு சேசுநாதருக்கு என்ன சம்பவித்தது? சேசுநாதர் யூதாஸ் இஸ்காரியோத்தின்மட்டில் நடந்த விதமெப்படி? யூதாஸ் என்ன செய்தான்? சேசுநாதர் இராயப்பருக்கு என்ன சொன்னார்?

## 68-ம் அதிகாரம்

### கிறீஸ்துநாதர் தமது அப்போஸ்தலர்களுக்குச் செய்த கடைசிப் பிரசங்கம்

யூதாஸ் அசன அறையைவிட்டுப் போனபிறகு சேசுநாதர் மற்ற அப்போஸ்தலர்கள்பக்கமாய்த் திரும்பி: "நான் போக நேரமாயிற்று. நானுங்களை விட்டுப் பிரியுமுன் உங்களுக்கோர் புதிய கட்டளையிடுகிறேன்; அதாவது, ஒருவரொருவரைச் சிநேகியுங்கள்; உங்களிருதயங் கலங்காதிருக்கக்கடவது; நானுங்களை முற்றும் விட்டுப்பிரியமாட்டேன். தற்காலம் என் பிதாவின் வீட்டில் உங்களுக்கு இடம் முஸ்திப்புச் செய்யப் போகிறேன்; மறுபடியும் நான் வந்து உங்களை யென்னிடத்திற் சேர்த்துக்கொள்வேன். பின்னும் நான் பிதாவை வேண்டிக்கொள்வேன். அவரோ உங்களோடு என்றென்றைக்கும் வசிக்கும்படியாகத் தேற்றுகிறவராகிய வேறொருவரை உங்களுக்குத் தந்தருளுவார். நானே வழியும் உண்மையுஞ் சீவியமுமாயிருக்கிறேன்; என்மூலமாயல்லாமல் வேறெவ்விதமுமாய்ப் பிதாவினிடத்தில் வருகிறவனொருவனுமில்லை. நானே கொடிமுந்திரிகைச் செடியாயிருக்கிறேன்; என் பிதா அதைப் பயிரிடுகிறவராயிருக்கிறார். எனெனில் நிலைகொள்ளுகிறவனிடத்தில் நானும் நிலைகொண்டு மிகுந்த பலனைத் தருவேன். என் சமாதானத்தை உங்களுக்கு விடுகிறேன்" என்றார்.

சேசுநாதர் அன்பு நிறைந்த இவ்வசனங்களை வசனித்தபின்பு, கண்களை யுயர்த்தி: "பிதாவே! நேரம் வந்திருக்கின்றது; உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தியருளும். என்னுடையவர்களுக்காக நான்



வேண்டிக்கொண்டதால் அவர்களைச் சுத்திகரித்தருளும். என்னுடையவர்கள் மாத்திரமேயன்றி அவர்களுடைய வார்த்தையைக்கொண்டு என்னை விசுவசிப்பவர்களெல்லோரும்—பிதாவே! நீர் என்னிலும் நான் உம்மிலுமிருப்பதுபோல, அவர்களும் என்னில் நிலைத்திருக்கும்படி செய்ய உம்மைப் பிரார்த்திக்கிறேன்" என்று வேண்டுதல் புரிந்தார்.

வினா.—கிறீஸ்துநாதர் அப்போஸ்தலர்களுக்குச் செய்த கடைசிப் பிரசங்கமென்ன?

---

## 69-ம் அதிகாரம்

### ஜெத்சேமனித் தோட்டத்தில் சேசுநாதருக்குச் சம்பவித்தவை

சேசுநாதர் செபஞ்செய்து முடியவே, ஒலிவேத்து மலைக்குச் சமீபமாயிருந்த ஜெத்சேமனி என்ற பூங்காவனத்திற்குத் தமது சீஷர்களோடு சென்றார். அதில் பிரவேசித்து, "நான் செபஞ்செய்துவருமளவும் இங்கே உட்கார்ந்து இளைப்பாறுங்கள்" என்று தமது சீஷர்களுக்குச் சொல்லி, இராயப்பரையும், யாகப்பரையும், அருளப்பரையுங்கூட அழைத்துக்கொண்டுபோய், சற்று தூரமாய்ச் சென்று சஞ்சலத்தால் துயரப்படத் தொடங்கி, "என்னாத்துமம் மரணத்திற்கேதுவான துயரங்கொண்டிருக்கின்றது; விழித்திருந்து செபஞ்செய்யுங்கள்" என்றார்.

பின்னுந் தமதப்போஸ்தலர்கள் மூவரையும் விட்டுச் சற்றப்புறம்போய் முகங் குப்புறவிழுந்து: "என் பிதாவே! கூடுமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு

அகலக்கடவது; ஆயினும் என் மனதின்படியல்ல, உமது சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று ஜெபித்தெழுந்து தமதப்போஸ்தலர்களிடம் வந்து, அவர்கள் தூங்குவதைக்கண்டு மறுபடியும்போய் முன்போலவே ஜெபித்தார். மூன்றுந் தடவையும் முன்



சொன்னவிதமாகவே அந்தே வார்த்தைகளைச் சொல்லி மன்றாடினார்.

அவர் மூன்றுந் தடவை ஜெபித்தபிறகு தமது பிதாவின் சித்தத்துக்கு கீழ்ப்படிந்து அவஸ்தைப்படத் தொடங்கினார். அவர்மேல் சுமத்தப்பட்ட பாவச்சுமையால் நெருக்கிடைப்பட்டு மிதமிஞ்சின வியாகுலத்திற்குள்ளாகவே, இரத்த வியர்வை வியர்த்து துளித்துளி



யாய்ப் பூமியின்மீது சிந்தினது. அப்போது அவருடைய பிதாவினால் அனுப்பப்பட்ட தேவதூதன் வந்து அவருக்கு ஆறுதல் சொன்னார். சேசுநாதர் அவஸ்தைப்பட்டு முடியவே, அவர் தமது அப்போஸ்தலர்களிடம் வந்து "எழுந்திருங்கள் போவோமாக; என்னைக் காட்டிக்கொடுப்பவன் கிட்டிவந்திருக்கிறான்" என்றார்.

வினா.—ஜெத்சேமனித் தோட்டத்தில் சேசுநாதருக்கு என்ன சம்பவித்தது?

---

## 70-ம் அதிகாரம்

### சேசுநாதர் சத்துராதிகளுக்குக் கையளிக்கப்பட்டது

அவரின்னும் பேசிக்கொண்டிருக்கையில் பெருஞ்சனக்கூட்டம் பந்தங்களோடு ஆயுதபாணிகளாய்த் தோட்டத்திற்குள் நுழைந்தார்கள். யூதாஸ் இஸ்காரியோத் தென்பவன் ஜனங்களுக்கு முன்னாக வந்து: போதகரே வாழ்கவென்று அவரை முத்தமிட்டான்.

சேசுநாதர் ஜனக்கும்பலை நோக்கிச் சற்று முன்னாகப்போய், யாரைத் தேடுகிறீர்களென்று கேட்க, "நசரேனுவாகிய சேசுவை" என்றார்கள். அவர் "நானே" என்று மறுமொழி சொன்னதைக்கேட்ட யூதர் திகில்கொண்டு பின்னிட்டதுமன்றித் தரையில்விழுந்தார்கள். பின்னும் சேசுநாதர் அவர்களைப்பார்த்து, "திருடனைப் பிடிக்க வருவதுபோல் வந்தீர்களே; நாடோறும் தேவாலயத்தில் உங்களோடிருந்தபோது நீங்களென்னைத் தொடவில்லையே" என்றார்.

சேசுநாதர் இதைச் சொல்லி முடிக்கவே, படைவகுப்பார் முன்சென்று அவரைப் பிடித்துக்கொண்டார்கள். தன் குருவுக்கு சம்பவிந்தவைகளைக்கண்ட இராயப்பர் மனம்பொறாமல் கத்தியை யுருவிச் சிரேஷ்ட ஆசாரியனுடைய ஊழியனை மால்கூஸ் என்பவனின் காதை வெட்டினார். அப்போது சேசுநாதர்: "உன் கத்தியை உறையிற் போடு; எனக்குத் தேவையானால் என் பிதா பன்னிருவிலாசத் தூதரிலும் அதிகமானபேரை உதவியாக அனுப்புவார்" என்றார்.

பிறகு கர்த்தர் மால்கூஸுடைய காதைச் சௌக்கியப்படுத்தித் தம்மை அவ்வீரர்களுக்குக் கையளிக்க, அவர்கள் அவரைக் கயிறுகளால் கட்டினார்கள். சீஷர்கள் இதைக்கண்டு பயந்து ஓட்டம்பிடிக்க, இராயப்பரும் அருளப்பருமாத்திரஞ் சற்றுதூரத்தில் அவரைப் பின்சென்று நடந்தார்கள்.

வினா.—சேசுநாதரை யார் காட்டிக்கொடுத்தது? எதைக்கொண்டு? சேசுநாதர் பிடிபட்டபோது இராயப்பர் என்ன செய்தார்? சேசுநாதரைப் பின்சென்றதார்?

---

## 71-ம் அதிகாரம்

### சேசுநாதர் சிரேஷ்ட ஆசாரியன்முன் கொண்டுபோகப்பட்டது

சனக்கூட்டம் சேசுநாதரை அன்னாவென்னும் ஆசாரியன் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டுபோனார்கள். அவன் அவருடைய போதகத்தைக் குறித்தும் சீஷரைக் குறித்தும் அவரை வினவியதற்கு: "நான் வெளியாங்கமாய்ப் பேசினேன்; நான் சொன்னவைகளையுஞ் செய்தவைகளையும் எல்லோரு மறிந்திருக்கிறார்கள்" என்று சேசுநாதர் மறுமொழி சொல்ல, அங்கிருந்த ஊழியரிலொருவன்: "நீ இவ்விதமாய் மறுமொழி சொல்லத் துணிந்ததேது?" என்று அவரைக் கன்னத்தில் அறைந்தான்.



அவர்கள் அவரைப் பலவிதமாய்த் தூஷித்தபிறகு, அன்னாவென்பவன் பிரதான ஆசாரியனாகிய கைப்பாசிடத்திற்கு அவரை அனுப்பினான். இவ்விடத்தில் ஆசாரியர்களும் வேதபாரகரும், திரளான சனங்களும் ஒன்றுகூடியிருக்க, அச்சபை மத்தியில் கிறீஸ்துநாதரைக் கொண்டுபோனபோது, அவர்கள் பொய்சாட்சி சொல்லி, சகலவித அபாண்டங்களையும் அவர்மேல் சுமத்தி அவரைக் கொலைசெய்யத் தீர்மானித்தார்கள்.

சாட்சிகளை விசாரித்தபிறகு கைப்பாஸ் எழுந்து, நீ சொல்லவேண்டிய காரியம் ஏதாவதுண்டோவென்று சேசுநாதரைக் கேட்க, மௌனமாயிருந்தார். மறுபடியும் அவனெழுந்து: நீ சர்வேசுரனுடைய சுதனாகிய கிறீஸ்துவாயிருக்கிறாயோவென்று ஜீவவந்தராகிய சுவாமி யாணையால் உனக்குக் கட்டளையிடுகிறேனென்று சொல்ல, "நீரே உள்ளபடி சொன்னீர்" என்று கிறீஸ்துநாதர் பதிலுரைத்தார்.

அப்போது பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: "இதோ இவன் தேவதூஷணம் உரைத்தானே, இன்னும் நமக்கு சாட்சிகள் வேண்டுவதென்ன? தேவதூஷணத்தை யிப்பொழுது நீங்களே கேட்டீர்கள்; இதனால் உங்களுக்குத் தோன்றுகிறது என்ன?" என்று கேட்க, அவர்களதற்கு மறுமொழியாக: இவன் மரணாக்கினைக்குரிய குற்றவாளியாயிருக்கின்றானென்றார்கள்.

வினா.—சேசுநாதரை எங்கே கொண்டுபோனார்கள்? அவரைக் கேட்டதென்ன? அவருக்கு என்ன செய்தார்கள்? கைப்பாஸ் வீட்டில் என்ன நடந்தது?

## 72-ம் அதிகாரம்

### இராயப்பர் சேசுநாதரை மறுதலித்தது

சேசுநாதர் பிரதான ஆசாரியனுடைய நீதியாசன சாலையிலிருந்தபோது, இராயப்பர் வெளியே தலைவாசலில் உட்கார்ந்திருந்தார். அப்போது பணிவிடைக்காரி ஒருத்தி அவரை யணுகி: நீயும் கலிலேயனாகிய சேசுவோடிருந்தாயே என்றாள். அவரோ எல்லாருக்கு முன்பாக மறுதலித்து, நீ சொல்லுகிறதை நானறியேனென்றார்.

பின்னும் அவர் வாசலைக் கடந்துபோகையில் வேறோர் பணிவிடைக்காரி யவரைக்கண்டு, இவனும் நசரேயனாகிய சேசுவோடிருந்தானென்று அங்கேயிருந்தவர்களுக்குச் சொன்னாள். அம்மனிதனை யறியேனென்று அவர் ஆணையிட்டு மறுபடியும் மறுதலித்தார்.

மீளவுஞ் சற்று நேரத்துக்குப்பின் அங்கே நின்றவர்கள் இராயப்பரை நோக்கி: மெய்யாகவே நீயும் அவர்களிலொருவனாயிருக்கிறாய்; ஏனெனில் உன் பாஷையே உன்னை வெளிப்படுத்துகின்றதென்றார்கள். அப்போதவர் நான் அம்மனிதனை அறியேன் என்று சபிக்கவும் ஆணையிடவுந் துவக்கினார். அக்ஷணமே சேவல் கொக்கரித்தது.

அச்சமயத்தில் சேசுநாதரை நீதிசாலைப்பக்கமாய்க் கூட்டிக்கொண்டு போனார்கள். அவர் இராயப்பரைத் திரும்பிப் பார்க்கவே, “சேவல் இருமுறை கொக்க-



ரிக்குமுன் மும்முறை என்னை மறுதலிப்பாய்” என்று சேசுநாதர் திருவுளம்பற்றின வாக்கியத்தை இராயப்பர் நினைத்து வெளியேபோய் வெகுவாய் துக்கித்து அழுதார்.

புத்தி.—இராயப்பர் கிறீஸ்துநாதரை மறுதலித்தபின், அவர் சேவல் கொக்கரிக்கும்போதெல்லாம் அழுதுகொண்டுவந்ததால், கண்ணீர் ஓடி இரு கன்னமும் பள்ளம் விழுந்ததாகச் சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மனிதன் வெகு பலவீனன். இராயப்பர் தன் குருவைத் தபோர் மலையில் கண்டிருந்தும் நீதிசாலையில் அவரை மறுதலித்தார். அவர் பூங்காவனத்தில் ஜெபஞ்செய்திருந்தால் சோதனை நேரத்தில் அவ்வளவு கோழைத்தனமாயிருந்திருக்கமாட்டார். ஆகையால் நாமும் விழித்திருந்து ஜெபஞ்செய்வோமாக.

வினா.—இராயப்பர் சேசுநாதரை எப்படி மறுதலித்தார்? அவருடைய பிற்காலத்து சீவியத்தைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது?

## 73-ம் அதிகாரம்

### யூதாசின் அவநம்பிக்கை

சேசுநாதர் மரணத்தீர்வை யிடப்பட்டதை யூதாஸ் கண்டு, மனஸ்தாபத்தால் ஏவப்பட்டவனாய், பிரதான ஆசாரியர்களிடத்திற்குப்போய்: குற்றமற்ற இரத்தத்தைக் காட்டிக்கொடுத்தேனே என்று சொல்லி, தன் முப்பது வெள்ளிக்காசுகளையும் அவர்கள் சமுகத்தில் எறிந்துவிட்டு, வெளியேபோய் நான்றுகொண்டு அவலமாய்ச் செத்தான்.

ஆசாரியர்கள் அந்த வெள்ளிக்காசுகளை எடுத்து அது இரத்தக் கிரயமாகையால் அதைக் காணிக்கைப்

பெட்டியில் போடலாகாதென வெண்ணி, அன்னியரைப் புதைப்பதற்காக ஓர் குயவனுடைய நிலத்தை வாங்கி அதற்கு அசல்தாமா, அதாவது: இரத்த நிலமென்று பெயரிட்டார்கள்.

வினா.—யூதாஸ் நடந்த விதமென்ன? வெள்ளிக்காசின் சங்கதியென்ன?

---

## 74-ம் அதிகாரம்

### சேசுநாதர் நிந்திக்கப்பட்டது

சேசுநாதருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டபிறகு, படைச்சேவகர் அவரை யோர் சாலைக்குக் கொண்டுபோய் அவ்விடத்தில் அவரைப் பரிகாசஞ் செய்யவும், அவர்மேல் துப்பவும், கண்களைக் கட்டித் தலையிற் குட்டி, உன்னை யடித்தவன் யாரென்று கேட்கவும், இவ்விதமாய் அவருக்குப் பலவித நிந்தனைகளைச் செய்யவுந் தலைப்பட்டார்கள். ஆயினும் அவர்களவரை நிந்தித்துத் தூஷித்துக் கேலிபரிகாசஞ் செய்யும்போது சம்மனசுக்களும் மனிதர்களும் அதிசயிக்க சேசுநாதர் மௌனமாயிருந்தார்.

வினா.—அவர்கள் சேசுநாதரை எவ்வாறு நிந்தித்தார்கள்? சேசுநாதர் நடந்த விதமென்ன?

---



## 75-ம் அதிகாரம்

### சேசுநாதர் பிலாத்து, எரோது இவர்கள்முன் கொண்டுபோகப்படுகிறார்

பொழுது விடிந்தபோது யூதர் பெருங் கூட்டமாய்க் கூடி, சேசுநாதருக்கு மறுபடியும் மரணதண்டனையிட்டார்கள். ஆனால் அக்காலத்தில் யூத இராச்சியம் உரோமையர் அதிகாரத்திற்குட்பட்டிருந்ததினால், யூதர் தேசாதிபதியின் உத்தரவின்றி ஒருவருக்கும் மரணதண்டனை யிடக்கூடாதென்ற ஒரு சட்டமிருந்தது. ஆகையால் அப்போது யூத இராச்சியத்திற்கு தேசாதிபதியாயிருந்த போஞ்சுபிலாத்தண்டைக்கு சேசுநாதரைக் கூட்டிக்கொண்டு போனார்கள்.

சேசுநாதரைப் பிலாத்தின்முன் கொண்டுபோகவே, அவன் ஜனக்கூட்டத்தைப் பார்த்து, நீங்களிந்த மனிதனுக்கு விரோதமாய்க் கொண்டுவந்த பிரியாது என்னவென்று கேட்டான். அதற்கு ஜனக்கூட்டம்: அவன் குழப்பக்காரன்; செசாருக்கு வரி செலுத்தக் கூடாதென்று ஜனங்களுக்குத் துற்போதனை செய்ததுமல்லாமல், தன்னைக் கிறீஸ்து இராஜாவென்றுஞ் சொல்லிக்கொள்ளுகிறான் என்றார்கள்.

ஆதலால் பிலாத்து சேசுநாதரைப் பார்த்து: நீ யூதர்களின் இராசாவாயிருக்கிறாயோவென்று கேட்க, சேசுநாதர் மறுமொழியாக "நீரே உள்ளபடி சொல்லுகிறீர்; ஆனால் என்னிராச்சியம் இவ்வுலகத்தினின்று உண்டானதல்ல" என்றார். பிலாத்து இதைக் கேட்டு ஜனங்களைப் பார்த்து: "நானிந்த மனிதனிடத்தில் யாதோர் குற்றத்தையுங் காணேனே" என்றான். அவர்களோவெனில்: இவன் கலிலேயா நாடு தொடங்கி இவ்

விடம்வரைக்கும் யூதேயா தேசமெங்கும் ஜனங்களுக்குள் கலகத்தை யெழுப்ப முயலுகிறானென்று கூவி ஆர்ப்பரித்தார்கள்.

ஆனால் பிலாத்தன் கலிலேயா நாடென்பதைக் கேட்கவே, சேசுநாதர் கலிலேயனென்றறிந்து, அப்போது பாஸ்கா பண்டிகையைப் பார்க்க யெருசலேமுக்கு வந்திருந்த கலிலேய நாட்டுத் தேசாதிபதியாகிய எரோதனிடத்தில் அவரை யனுப்பினான். எரோதன் அவரைக்கண்டு மிகவுஞ் சந்தோஷப்பட்டான். ஏனெனில், அவன் அவரைக் குறித்து அநேக காரியங்களைக் கேள்விப்பட்டிருந்ததால், அவர் தன்முன் யாதோர் அற்புதஞ் செய்வாரென்று நம்பியிருந்தான்.

ஆனால் அவன் அவரை அநேக விஷயங்களைப்பற்றிக் கேள்வி கேட்டும் சேசுநாதர் மௌனமாயிருந்தார். எரோதனுடைய வியர்த்த நூதனப்பிரியமானது அபலமானதினால், நமது இரட்சகரைப் பரிகாசஞ்செய்து, அவரைப் பயித்தியக்காரனென்று சொல்லி, அதற்கடையாளமாய் வெள்ளை வஸ்திரத்தை யவருக்கு உடுப்பித்து, மறுபடியும் பிலாத்தினிடம் அனுப்பினான். எரோதனும் பிலாத்தனும் வெகுகாலமாய் ஒருவருக்கொருவர் பகையாளிகளாயிருந்தும் அந்நாளிற்றானே சிநேகிதரானார்கள்.

வினா.—யூத சங்கத்தார் என்ன செய்தார்கள்? அவர்கள் செய்யக்கூடாத காரியமெது? ஏன்? கிறீஸ்துநாதரை யாருக்குமுன் கொண்டுபோனார்கள்? அவர்கள் அவருக்கு விரோதமாய்ச் சாட்டின குற்றங்களெவை? பிலாத்து சேசுநாதரை யாரிடத்துக்கனுப்பினான்? எரோது அவரை நடத்தினவிதமெப்படி?



## 76-ம் அதிகாரம்

### சேசுநாதரும் பரபாசும்

சேசுநாதர் குற்றமற்றவரென்று பிலாத்தன் அறிந்திருந்தமையால் அவரை யெப்படியாவது காப்பாற்றவேணுமென்று முயற்சிசெய்தான். ஆனால் அவன் பலவீனனும் கோழைத்தனமுள்ளவனுமாயிருந்தபடியால் அது சாத்தியப்படாமற்போயிற்று. அவனுடைய மனைவி கர்த்தரைக் குறித்துக் கனவுகண்டு பயந்து, அவர் நீதிமானென்றும், அவர் விஷயத்தில் கலந்துகொள்ளவேண்டாமென்றும் அவனுக்குச் சொல்லியனுப்பினதைக் கேட்டு பிலாத்தன் அதிகமாய் மனங்கலங்கினான்.

பாஸ்கா பண்டிகைகாலத்தில் யூதருடைய வழக்கப்படி அவர்கள் தெரிந்துகொள்ளும் ஓர் குற்றவாளியைத் தேசாதிபதி விடுதலைசெய்யவேண்டியிருந்தபடியால், சேசுநாதரை யிரட்சிக்கலாமென்று நம்பி, கொலைப்பாதகனும் திருடனுமான பரபாசை அவருடனிறுத்தி, இவர்களிருவரில் யாரை விடுதலைசெய்யலாமென்று கேட்டான்.

பரபாசை விடுதலைசெய்து சேசுநாதரைக் கொலைசெய்யக் கேளுங்களென்று ஆசாரியர்களும் மூப்பரும் ஜனங்களை ஏவினதால், அவர்கள் பரபாசை விடுதலைசெய்து, சேசுவைச் சிலுவையிலறையும் என்று ஏகமாய்க் கூக்குரலிட்டார்கள்.

புத்தி.—பரபாசு பாவத்தின் குறிப்பாயிருக்கிறான். மனிதன் கீழ்ப்படியாமல் பாவஞ்செய்து, தேவ வரப்பிரசாதத்தைப் போக்கடித்து ஒருவிதத்தில் தன்னாத்துமத்தைக் கொலைசெய்கிறான். சேசுநாதர் பாவத்தினின்று மனிதனை

விடுவிக்கவந்து அவனுடைய பாவப் பரிகாரத்துக்காக தம்மைப் பலியாக்கினார்.

வினா.—சேசுநாதரையும் பரபாஸையும்பற்றிய வர்த்தமானத்தைச் சொல்லு?

---

## 77-ம் அதிகாரம்

### சேசுநாதர் கட்டி யடிக்கப்பட்டு முண்முடி தரிக்கப்படுகிறார்



பிலாத்தன் சேசுநாதரை மரணத்தினின்று காப்பாற்றவும், ஜனங்களுக்குத் திருப்திசெய்யவும் எண்ணி, அவரைக் கட்டி அடியுங்களென்றான். போர்ச்சேவகர் நமது திவ்ய இரட்சகரை நியாயசாலையின் முற்றத்துக்



குக் கொண்டுவந்து அவருடைய வஸ்திரங்களைக் களைந்து அவரை ஒரு தூணில் கட்டி அடித்தார்கள்.

இதன்பிறகு இராசாவாக அவரைப் பாவித்துப் பரிகாசஞ் செய்யும்பொருட்டு சிவப்புப் போர்வையை அவர்மேல் போர்த்தி, முண்முடியைப் பின்னியவர் சிரசின்மேல் வைத்து அழுத்தி, செங்கோலாக நாணலை அவர் கையில் கொடுத்து, அவருக்குமுன் பரிகாசமாக முழந்தாளிட்டு வணங்கி "யூதராசாவே வாழ்க" என்று சொல்லி முகத்தில் உமிழ்ந்து, அந்த நாணலை வெடுக்கென்று பிடுங்கி அதனால் அவரை யடித்து வாதைப்படுத்தினார்கள்.

வினா.—கிறீஸ்துநாதர் அடிபட்ட விவரத்தைச்சொல்லு? அடித்தபிறகு அவரை என்ன செய்தார்கள்?

---

## 78-ம் அதிகாரம்

### சேசுநாதர் மரணத்தீர்வையிடப்படுகிறார்

மேற்கண்டவாறு அடியும் அலங்கோலமும்பட்ட சேசுநாதருடைய பரிதாபத்துக்குரிய ஸ்திதியை பிலாத்தன் கண்டு, அவரை அந்த நிலைமையில் பார்த்தால் யூதருடைய கோபந்தணியுமென்று எண்ணி, தேவசுதனை உயர்ந்த மேடையின்மேலேற்றி அவரை யெல்லோருக்குங் காட்டி "இதோ மனிதன்! இவனுடைய நிர்ப்பாக்கிய நிலைமையைப் பாருங்கள்" என்றான். ஆனால் இரத்தத் தாகங்கொண்ட அந்தக் கொடிய ஜனங்கள் "அவனைச் சிலுவையிலறையும், அவனைச் சிலுவையிலறையும்" என்று கூவினார்கள்.

எவ்விதமாய் இவரைக் காப்பாற்றக்கூடுமென்று பிலாத்து திகைத்து நிற்கையில், ஜனத்தின் தலைவன்

அவனிடம்வந்து நீர் சேசுவை விடுதலைசெய்தால் செசாருடைய சிநேகிதனாய் இருக்கமாட்டீரென்று சொல்லவே, அவன் தன் மனச்சாட்சியை ஒருவாறு சாந்தப்படுத்திக்கொள்ளவெண்ணி, கொஞ்சம் தண்ணீர் தருவித்து, " இந்த நீதிமானுடைய இரத்தத்தில் நான் குற்றமற்றவனாயிருக்கிறேன் " என்று சொல்லித் தன் கைகளைக் கழுவினான். ஆனால் சனங்கள் " இவனுடைய



இரத்தம் எங்கள்பேரிலும் எங்கள் மக்கள்பேரிலும் இருக்கட்டும் " என்று கூவினார்கள்.

புத்தி.—இருபது சதாப்தகாலமாய் கிறீஸ்துநாதருடைய இரத்தப்பழியானது யூதர்மேல் நிற்க, அவர்கள் யூதேயாவினின்று துரத்தப்பட்டு, நாடின்றி வீடின்றி அன்னியருக்குள் அன்னியராய் யாவராலும் பகைக்கப்பட்டு, நாடோடிகளைப்போல் அலைந்து திரிகிறார்கள். அதனால் அவர்கள் சர்வேசுரனுடைய சாபத்தைப் பெற்றிருக்கிறார்களென்று தெளிவாய் விளங்குகின்றது. காயீனைப்போலிவர்களும் ஒருவித



தேவசாபத்தின் அடையாளத்தால் குறிக்கப்பட்டு உலக முடிவுவரையில் அலைந்து திரிந்துகொண்டேயிருப்பார்கள்.

வினா.—பிலாத்தன் சேசுநாதரை மேடையின்மேல் நிறுத்தி என்ன செய்தான்? ஜனங்கள் என்ன சொன்னார்கள்? சேசுநாதரைக் கொலைசெய்யப் பிலாத்தனை உடன்படுத்தும்படி ஜனத்தின் தலைவர்கள் என்ன சொன்னார்கள்? சேசுநாதருடைய இரத்தத்தைப்பற்றியும் யூதரைப்பற்றியும் என்ன சொல்லியிருக்கிறது?

---

## 79-ம் அதிகாரம்

### கல்வாரிமலைக்குப் பிரயாணம்

சேசுநாதரை யூதர் கையினின்று மீட்கத் தன்னாலாகவில்லையென்று பிலாத்தன்கண்டு கடைசியாக சேசுநாதருக்கு மரணத்தீர்ப்பளித்தான். அப்போது போர்வீரர் காயத்தால் நொறுக்கின அவருடைய புஜத்தின்மேல் பாரமான ஓர் சிலுவைமரத்தைச் சுமத்திக் கொலை ஸ்தலமாகிய கல்வாரிமலைக்கு அவரை நடத்தினார்கள்.

சேசுநாதர் எருசலேம் வீதிகளில் சிலுவை சுமந்துபோகையில் பலவீனத்தால் பல முறை கீழே விழுந்தார். இனியவர் சிலுவையைச் சுமந்து நடக்க முடியாதென்று கொலைஞர் கண்டு, வழியில் எதிர்ப்பட்ட சிரேனிய சிமையோனைப் பலவந்தப்படுத்தி கல்வாரிமலைவரைக்கும் சிலுவையைச் சுமக்கச்செய்தார்கள். சிலுவையில் அறைந்து கொல்லும்படி வேறே இரண்டு திருடரும் சேசுநாதரோடு கூட்டிக்கொண்டு போகப்பட்டார்கள்.

சேசுநாதரைப் பின்தொடர்ந்துபோன ஜனக்கூட்டத்தில் அநேக ஸ்திரீகள் அழுது பிரலாபித்துச் சென்றதால், அவர்களை சேசுநாதர் திரும்பிப் பார்த்து, அவர்களுக்கு ஆறுதலாக, பக்ஷம் நிறைந்த வார்த்தைகளால் பேசி, தம்மைப்பற்றி அழாமல் தங்களுக்காகவுந் தங்கள் பிள்ளைகளுக்காகவும் அழும்படி அவர்களுக்குப் புத்திசொன்னார்.

புத்தி.—ஆ! கிறீஸ்துநாதர் தமது பாடுகளால் நமக்கு எவ்வளவோ மேலான, பொறுமையின் மாதிரிகையைக் காட்டுகிறார்! அநியாயமாக மரணதண்டனை யடைந்தும் முறைப்பாடின்றி சிலுவையைச் சுமக்கிறார். மகா குரூரத்தோடும் மனித சுபாவத்திற்கடாதவிதமாயும் தம்மை நடத்தினபோதிலும் அவர் கொஞ்சமும் முறையிட்டவரல்ல. ஆகையால் நமக்குக் கஸ்தி சஞ்சலம் நேரிடும்போதும், மனிதர் நம்மை நிந்தித்து வதைத்துத் துன்பப்படுத்தும்போதும், அவர் காட்டிய நன்மாதிரிகையைப் பின்பற்றி பொறுமையாயுஞ் சாந்தமாயும் நடக்க முயல்வோமாக.

வினா.—சேசுநாதருக்கு மரணதண்டனை விதித்தது யார்? சேசுநாதர் புஜத்தின்மீது எதைச் சுமத்தினார்கள்? கல்வாரிமலைக்குப் போகும் வழியில் என்ன சம்பவித்தது? சிலுவையை யார் சுமந்தது? ஜனக்கூட்டத்திலிருந்ததார்? சேசுநாதர் ஸ்திரீகளுக்கு என்ன சொன்னார்?

---

## 80-ம் அதிகாரம்

### சேசுநாதர் சிலுவையிலறையப்படுகிறார்

சேசுநாதர் கல்வாரிமலையிற் சேர்ந்தபோது பித்துக் கலந்த காடியை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள். இது வாதையைச் சற்றே குறைக்கக்கூடி-



யதாயிருந்தும், தமது பிதா நிருமித்த கஷ்டங்களையெல்லாம் அனுபவித்துத் தீரவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டபடியால் அவர் அந்தக் காடியைக் குடித்தவரல்ல.

பிறகு அவருடைய வஸ்திரங்களை உரிந்து அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். அவர் இருபுறத்திலும் இரண்டு கள்ளரைச் சிலுவையிலறைந்தார்கள். போர்ச்சேவகர் அவருடைய வஸ்திரங்களைப் பங்கு போட்டுக்கொண்டு, அவருடைய அங்கியின்மேல் அதிர்ஷ்ட சீட்டு போட்டார்கள்.

புத்தி.—நமது இரட்சகருடைய அங்கி அவருடைய திருச்சபைக்கு அடையாளமாகும். அந்த அங்கி தையலில்லாமல் முழுதும் பின்னப்பட்டிருந்ததுபோல திருச்சபையும் பிரிவினையின்றி ஏகமும் பாகிக்கப்படக்கூடாததுமாயிருக்கிறது.

வினா.—கல்வாரிமலைமேல் சேசுநாதரை என்ன செய்தார்கள்? சேசுநாதரோடு வேறே யார் சிலுவையில் அறையப்பட்டது? அவருடைய வஸ்திரங்களை என்ன செய்தார்கள்?

---

## 81-ம் அதிகாரம்

### சேசுநாதர் சிலுவையின்மேல் தொங்குகிறார்

கடைசியாய் சேசுநாதர் உயர்த்தப்பட்டுச் சிலுவையில் தொங்கினார். அவருடைய காயங்களினின்று இரத்தம் பீரிட்டுத் தாரைதாரையாக வழிந்தோடிற்று. அவர் சொல்லிலடங்காத குரூர வாதை வேதனைகளை அனுபவித்தார். இந்த அவருடைய நிர்ப்பாக்கிய நிலை

மையைக் கண்டும் கொடிய யூதர் நெஞ்சம் கொஞ்சமும் இளகவில்லை. மேலும் ஆண்டவரைப் பலவிதமாய் நிந்தித்துப் பகடிபரிகாசம்பண்ணத் தொடங்கினார்கள். "ஆ! ஆ! சர்வேசுரனுடைய தேவாலயத்தையிடித்து மறுபடியும் அதை மூன்று தினங்களுக்குள் கட்டுகிறவனே! நீ சர்வேசுரனுடைய குமாரனாயிருந்தால் இச்சிலுவையினின்று இறங்கிவா" என்று சொல்ல, "பிதாவே! அவர்கள் செய்வதை இன்னதென்று தெரியாமல் செய்கிறார்கள்; அவர்களுடைய பாவத்தைப் பொறுத்தருளும்" என்று வேண்டிக்கொண்டிருந்தார்.

அவர் பக்கத்தில் சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த கள்ளரில் ஒருவன் தேவதூஷணஞ் சொல்லி, நீ கிறீஸ்துவாயிருந்தால் உன்னையும் எங்களையும் இரட்சிக்கக்கூடாதோ? என்று அவரை நிந்திக்கத் தொடங்கினான். ஆனால் மற்றவனோ அவனைக் கண்டித்து, நாம் நியாயமாய்த் தண்டிக்கப்படுகிறோம்; இவரோ அநியாயமாய்த் தண்டனைப்படுகிறார் என்று சொல்லி, சேசுநாதர் பக்கமாய்த் திரும்பி, தன்னை நினைவுகூரும்படி மன்றாடினான். சேசுநாதர் உடனே: "நீ இன்றே நம்மோடு பரகதியிலிருப்பாய்" என்று வசனித்தார்.

புத்தி.—பச்சாத்தாபக் கள்ளனுடைய சரித்திரத்தால் செபத்துக்குள்ள வல்லமை நன்றாக விளங்குகின்றது. எப்படியெனில், அவனுடைய ஒரேயொரு மனஸ்தாப வார்த்தையே அவனை இரட்சித்தது. வனாந்தரத்தில் மோயீசன் நிறுத்திவைத்த வெண்கலசர்ப்பத்தைப் பாம்பால் கடியுண்டவர்கள் பார்த்தவுடனே சுகப்பட்டதுபோல், கல்வாரிமலைமீது சிலுவையில் தொங்கின சேசுநாதரை விசுவாசத்தோடும் தேவ சிநேகத்தோடும் பார்ப்பவர்களெல்லோரும் ஆத்தும காயத்தினின்று சுகப்படுவார்கள்.



வினா.—சிலுவையில் தொங்கின சேசுநாதரைப்பற்றியென்ன சொல்லியிருக்கிறது?, யூதர் நடந்த விதமென்ன? சேசுநாதர் என்ன செய்தார்? ஒரு திருடனுக்கு என்ன சம்பவித்தது? பச்சாத்தாபக் கள்ளனுடைய மாதிரிகை நமக்குப் படிப்பிக்கிறதென்ன? வெண்கலசர்ப்பத்தைப்பற்றியுஞ் சிலுவையைப்பற்றியுஞ் சொல்லியிருப்பதென்ன?

---

## 82-ம் அதிகாரம்

### தேவதாயார் சிலுவையினடியில் நிற்கிறாள்

சேசுநாதர் சிலுவையின்மேல் தொங்கிக்கொண்டிருந்தபோது, அவருடைய தாயாகிய மரியம்மாளும், அப்போஸ்தலராகிய அருளப்பரும் அவ்விடம் வந்து சிலுவையினடியில் நின்றார்கள். சேசுநாதர் அவர்களைக் கண்டபோது தம்முடைய மாதாவை நோக்கி: "ஸ்திரீயே இதோ உம்முடைய குமாரன்" என்றும், அருளப்பரை நோக்கி: "இதோ உன் மாதா" என்றுஞ் சொல்ல, அந்நேரமுதல் சீஷன் தன் வீட்டில் அவளைச் சேர்த்துக்கொண்டார்.

புத்தி.—பூர்வகாலத்தில் மக்கபேருடைய வீரப்பிரதாபமுள்ள தாயானவள் தன் எழு பிள்ளைகளும் வேதத்திற்காக தைரியமாய்ப் பிராணனைக் கொடுக்கும்படி பிரேரபித்தது போல், மரியம்மாளுஞ் சிலுவையினடியில் நிற்க, சிமையோனுடைய தீர்க்கதரிசனப்பிரகாரம் வியாகுல வாளால் ஊடுருவப்பட்டாள். அருளப்பர்மூலமாய் கிறீஸ்துவர்களெல்லோரும் மரியம்மாளுக்குப் பிள்ளைகளாயிருக்கிறார்கள்.

வினா.—சிலுவையினடியில் நின்ற தேவதாயாரைப்பற்றியும் அருளப்பரைப்பற்றியும் என்ன சொல்லப்பட்டிருக்கிறது?

# 83-ம் அதிகாரம்

## சேசுநாதர் சிலுவையில் உயிர்விடுகிறர்

இதற்குப்பிறகு "நான் தாகமாயிருக்கிறேன்" என்று சேசுநாதர் சொல்ல, ஒரு சேவகன் கடற்காளானைக் காடியிற் றோய்த்து அதை யொரு கோலின் முனையிற் கட்டி அவருக்குக் குடிக்கக் கொடுத்தான்.



அவர் அதை உருசி பார்த்து "எல்லாம் நிறைவேறிற்று" என்று சொல்லித் தலைசாய்த்து உயிர்விட்டார்

கிறீஸ்துநாதர் உயிர்விட்ட அக்ஷணத்தில் பூமி அதிர, கற்பாறைகள் பிளக்க, கல்லறைகள் திறக்கப்பட்டு மரித்தவர்கள் எழுந்திருக்க, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்துவக்கி கீழ்வரைக்கும் இரண்டாய்க் கிழிந்துபோயிற்று. சேசுநாதருடைய சிலுவையைச்



சூழ்ந்து நின்ற சேர்வைக்காரனும் படைச்சேவகரும்,
"மெய்யாகவே இவர் சர்வேசுரனுடைய சுதன்தான்"
என்று உரக்கக் கூவினர்கள். ஜனக்கூட்டம் தங்கள்
மார்பிலறைந்துகொண்டு அவர்கள் கண்ட காரியங்க
ளால் திக்பிரமைகொண்டு, எருசலேமுக்குத் திரும்பிப்
போனர்கள்.

புத்தி.—கடைசியாக மனிதனுடைய இரட்சண்யம்
நிறைவேறிற்று. கிறீஸ்துநாதரும் வெற்றியடைந்தார். அவர்
நிகரற்ற சினேகமுடையவரென்று காட்ட அவருடைய திருக்
கரங்கள் விரிந்திருக்கின்றன; அவருடைய காயங்கள் பாவப்
பரிகாரம் வரப்பிரசாதங்கள் பாயும் ஊற்றுகளாகத் திறக்கப்
பட்டிருக்கின்றன. கிறீஸ்துநாதருடைய மரணத்தோடு
மோயீசன் வேதமும் முடிவாயிற்றென்பதற்கும், சனங்களைப்
பழய வேதத்தினின்று பிரித்து மோட்ச வழியைத் திறந்த
கிறீஸ்துநாதருடைய வேதத்திற் சேர்க்கவேண்டுமென்பதற்
கும் அடையாளமாகத் தேவாலயத்தின் திரைச்சீலை இரண்
டாய்க் கிழிந்துபோயிற்று. மேலும் மெய்யான பலிக்கு
அடையாளமாயிருந்த மோயீசன் நியமித்த இரத்தபலி அன்
றோடு அற்றுப்போய், அதற்குப் பதிலாக சேசுநாதருடைய
ஏகமும் உண்மையுமான பலி பூமியின்மீது ஸ்திரமாக ஸ்தா
பிக்கப்பட்டது.

வினு.—கிறீஸ்துநாதர் சிலுவையில் அறையப்பட்ட
அன்று மத்தியானம் என்ன சம்பவித்தது? சேசுநாதர் மரண
மாவதற்கு சற்று முன்னதாக என்ன சொன்னர்? கிறீஸ்து
நாதர் மரணமடைந்தபோது என்ன சம்பவித்தது?

# 84-ம் அதிகாரம்

## சேசுநாதர் கல்லறையில் அடக்கப்படுகிறர்

கிறீஸ்துநாதர் ஓய்வு நாளுக்கு முந்தின சாயரட்சை சிலுவையில் அறையுண்டிருந்தார். பாஸ்கா பண்டிகையின்போது குற்றவாளிகளின் சடலங்கள் சிலுவையில் தொங்கக்கூடாதாகையால், இரு கள்ளர்களும் சீக்கிரத்தில் மரிக்கும்படி அவர்களுடைய கால்களை



முறித்துவிட்டு சேசுநாதரண்டை வந்தபோது, அவர் ஏற்கனவே மரணமடைந்திருப்பதைக்கண்டு அவருடைய கால்களை முறிக்காமல் விட்டார்கள். ஆனால் ஒருவன் ஈட்டியால் அவருடைய விலாவைக் குத்தவே இரத்தமுந் தண்ணீரும் ஏராளமாய்ப் புறப்பட்டன.

யூத சங்கத்தைச் சேர்ந்தவரும், கிறீஸ்துநாதனை இரகசியத்தில் விசுவசித்தவருமாகிய அரிமத்தியா சூசையென்பவர் பிலாத்தனிடம்போய், சேசுநாதரு



டைய சரீரத்தைக் கொண்டுபோக உத்தரவு கேட்க,
அவன் அப்படியே உத்தரவு கொடுத்தான். அப்போது
சூசை, நிக்கதோமென்ற இருவரும் சிலுவையினின்று
சரீரத்தை இறக்கி, அதைப் பரிமளவர்க்கங்களுடனே
பரிவட்டத்தால் சுற்றிக்கட்டி, கல்வாரிமலைக்குச் சமீபத்
திலிருந்த தோட்டத்தில் புதிதாய்ப் பாறையில் வெட்
டப்பட்டிருந்த கல்லறையில் ஸ்தாபகஞ்செய்தார்கள்.

பிரதான ஆசாரியர்களும் பரிசேயரும் வெளிக்கு
ஜெயங்கொண்டவர்களைப்போலிருந்தும் சமாதானமற்
றிருந்ததுடன், சேசுநாதர் மரித்த மூன்றும் நாள்
உயிர்ப்பாரென்று அவர் சொன்ன தீர்க்கதரிசனம்
அவர்கள் ஞாபகத்துக்கு வரவே, அப்போஸ்தலர்கள்
அவருடைய சரீரத்தைத் திருட்டுத்தனமாய் எடுத்து
ஒளித்துவிட்டு, அவர் உயிர்த்தெழுந்தாரென்று புரளி
செய்வார்களென சந்தேகங்கொண்டு பிலாத்தனிடம்
போய் கல்லறைக்கு முத்திரையிட்டு, காவலாட்களை
அதற்கு வைக்கவேண்டுமென்று கேட்க, அவனும் அப்
படியே செய்தான்.

புத்தி.—மனுக்குலத்தின் தாயாகிய ஏவாள் ஆதாமின்
விலாவினின்று உண்டானதுபோல், நமது ஞானத்தாயாகிய
திருச்சபையும் கிறீஸ்துநாதருடைய விலாவினின்று புறப்
பட்டது. பாஸ்கா புருவையின் எலும்புகளை முறிக்கக்கூடா
தென்று விலக்கஞ்செய்யப்பட்டிருந்தபடியே நிஜ பாஸ்கா
வின் செம்மறிப்புருவையாகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய
எலும்புகளும் முறிக்கப்படவில்லை. இவ்விதமாய் கிறீஸ்து
நாதருடைய சீவியத்தையும் மரணத்தையும்பற்றி தீர்க்கதரி
[illegible] தவறாமல் சகல
மும் பூர்த்தியாய் நிறைவேறினதைக் காண்கிறோம்.

வினா.—இரு கள்ளரை என்ன செய்தார்கள்? போர்
வீரனொருவன் செய்ததென்ன? கிறீஸ்துநாதருடைய விலா

வினின்று புறப்பட்டதென்ன? அவருடைய சரீரத்தை யார் கேட்டது? அதை யென்ன செய்தார்கள்? கல்லறை காக்கப்பட்டதெப்படி? எவாளைப்பற்றியும் திருச்சபையைப்பற்றியும் சொல்லியிருப்பதென்ன?

---

## 85-ம் அதிகாரம்

### சேசுக்கிறீஸ்துநாதர் உயிர்த்தெழுந்தது

சேசுநாதருடைய சரீரம் இரண்டு நாள் கல்லறையிலிருந்தது. மூன்றும் நாள் அதிகாலையில் பூகம்பமுண்டாகி, பூமி அதிர்ந்ததாலும், சடுதியில் ஓர் தேவதூதன் தோன்றி கல்லறையின்மேலிருந்த கல்லைப் புரட்டினதாலும் காவற்காரர் திடுக்கிட்டு அஞ்சினார்கள். மேலும் சேசுநாதருடைய முகம் சூரியனைப்போல் பிரகாசிக்க, அவர் கல்லறையினின்று எழுந்ததைக் காவற்சேவகர் கண்டு, பயங்காத்தால் திடுக்கிட்டதுமன்றி, செத்தவர்களைப்போலும் ஆனார்கள். பின்னும் எழுந்து நகருக்குள் ஓட்டம்பிடித்தார்கள்.

மூன்றும் நாள் அதிகாலையில் மரியமதலேனம்மாளும், யாகப்பரின் தாயாரான வேறு மரியம்மாளும், சலோமேயம்மாளும் சேசுநாதருடைய சரீரத்தில் பூசும்படி தாங்கள் முஸ்திப்புப்பண்ணின சுகந்த வர்க்கங்களை யெடுத்துக்கொண்டு கல்லறையண்டையில் வந்தார்க்ள். ஆனால் கல் புரட்டப்பட்டு கல்லறை வெறுமையாயிருந்ததைக்கண்டு அதிசயித்தஞ்சினார்கள்.

இதை மரியமதலேனம்மாள் கண்டு சீக்கிரமாய்த் திரும்பிப்போய் அப்போஸ்தலர்களிடஞ் சொல்ல, மற்ற ஸ்திரீகள் அவ்விடத்திலேயே இருந்து கல்லறைக்குள் குனிந்துபார்க்கையில் அதில் தேவதூதனைத் தரிசித்தார்



கள். அவர் அவர்களை நோக்கி "நீங்கள் பயப்பட வேண்டாம். கிறீஸ்துநாதர் உயிர்த்தெழுந்தார். உங்களுக்கு முன்னதாக கலிலேயாவுக்குச் சென்றிருக்கிறார். அவ்விடத்தில் அவரைக் காண்பீர்கள். மேலும் சீக்கிரமாய்ப்போய் அப்போஸ்தலர்களுக்கும் முக்கியமாய் இராயப்பருக்கும் இந்த விருத்தாந்தத்தைச் சொல்லுங்கள்" என்றார்.



இந்தப் புண்ணியஸ்திரீகள் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டக்ஷணமே இராயப்பரும் அருளப்பரும் ஓடி வந்தார்கள். இவர்களிருவரும் மரியமதலேனம்மாளுடைய வார்த்தையை நம்பாததால் தாங்களே நேரில் காணும்படி வந்தார்கள். அருளப்பர் முந்தமுந்த கல்லறைக்குப்போய்ச் சேர்ந்திருந்தும் முதலில் அதில்

பிரவேசித்தவர் இராயப்பர்தான். சரீரத்தைச் சுற்றியிருந்த சீலை தவிர மற்றொன்றையும் கல்லறையில் காணாதபடியால் அவர்கள் மறுபடியும் விரைந்தோடி, இந்தச் சங்கதிகளை மற்றவர்களுக்குஞ் சொன்னார்கள்.

புத்தி.—தீர்க்கதரிசனமாய் உரைத்ததுபோல யோனாஸ் திமிங்கிலத்தின் வயிற்றில் எவ்வளவுகாலம் இருந்தாரோ அவ்வளவுகாலம் சேசுநாதர் மரித்தவர்களோடு இருந்தார். அவர் மரணமடைந்தபோதிலும் "உம்முடைய பரிசுத்தமானவர் அழிவைக் காணமாட்டார்" என்று தாவீதரசன் பாடியதுபோல் அவருடைய சரீரம் அழிவைக் கண்டதில்லை.

சேசுநாதர் மரித்தவர்களிடத்திலிருந்து எழுப்பப்படாமல் தமது சுய வல்லமையைக்கொண்டு தாமே உயிர்த்தெழுந்தார். அவருடைய சரீரம் மகிமைப்பிரதாபத்துடன் மறுரூபங்கொண்டு எழுந்ததுபோல நீதிமான்களுடைய சரீரங்களும் அவ்வாறே எழுந்திருக்கும். கிறீஸ்துநாதருடைய உத்தான மூதற்கொண்டு அவருடைய திருக்கல்லறை உலகத்திலுள்ள சகல கிறீஸ்துவர்களாலும் இக்காலம்வரையிலும் பூச்சியமாய் வணங்கப்பட்டதுபோல இனி எப்போதும் அவ்வாறே வணங்கப்படும்.

வினா.—சேசுநாதருடைய சரீரம் எவ்வளவுகாலங் கல்லறையிலிருந்தது? மூன்றாம் நாள் என்ன சம்பவித்தது? கல்லறைக்கு யார் வந்தது? அவர்கள் பார்த்ததென்ன? மரியமதலேனம்மாளைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? மற்ற ஸ்திரீகளைப்பற்றிச் சொல்லியிருப்பதென்ன? இராயப்பரும் அருளப்பரும் என்ன செய்தார்கள்? சேசுநாதரைப்பற்றியும் யோனாசைப்பற்றியும் என்ன சொல்லப்பட்டிருக்கிறது? கிறீஸ்துநாதருடைய கல்லறையைப்பற்றிச் சொல்லியிருப்பதென்ன?



# 86-ம் அதிகாரம்

## சேசுநாதர் மரியமதலேனம்மாளுக்குத் தரிசனையாகிறார்

இராயப்பரும் அருளப்பரும் கல்லறையை விட்டுப்
போன சற்றுநேரத்திற்குள் மரியமதலேனம்
மாள் கல்லறைபண்டை வந்துசேர்ந்து, தன்னாண்ட
வருடைய சரீரங் காணாமற்போனதைப்பற்றித் துக்கங்
கொண்டு கல்லறைக்குள் பிரவேசித்தபோது, அங்கு ஓர்
தேவதூதனைக் கண்டாள். அத்தேவதூதன் அவளை
நோக்கி, "மரியமதலேனாளே! நீ ஏன் அழுகிறாய்"
என்று கேட்க, என்னாண்டவரைக் களவாண்டவர்கள்
யாரோ? மேலும் அவரை எங்கே வைத்தார்களோ அறி
யேன் என்று மறுமொழி சொன்னாள்.

தான் தேவதூதனோடு பேசினதாக அவளுக்குத்
தெரியாமல் கல்லறையைவிட்டுவந்த சற்றுநேரத்திற்
குள் சேசுநாதரை யவள் கண்டபோதிலும், அவரைத்
தோட்டக்காரனென்றெண்ணி, சேசுநாதருடைய சரீ
ரம் எங்கே இருக்கிறதென்று அவரைக் கேட்டாள்.
ஆனால் சேசுநாதர், 'மரியே' என்று வசனிக்கவே,
அவள் அவரை இன்னாரென்று அறிந்துகொண்டு, அவர்
பாதத்தில் விழுந்து ஆராதித்தாள்.

அப்போது சேசுநாதர் அவளைப்பார்த்து, "நாம்
பிதாவினிடம்போகவேண்டியிருப்பதால் நீ துரிதமாகப்
போய் அப்போஸ்தலர்களுக்குச் சொல்" என்று வச
னித்து அதரிசனமானார். அவளுமப்படியே சீஷர்களி
டஞ் சொன்னபோதிலும் அவர்கள் அவள் ஆண்டவ
ரைத் தரிசித்ததையும், அவர் உயிர்த்ததையும்பற்றி
நம்பினவர்களல்ல.

வினா.—மரியமதலேனம்மாளைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? அவள் யாரைக் கண்டாள்? சேசுநாதரை எப்படி அறிந்துகொண்டாள்? சேசுநாதர் அவளுக்குச் சொன்ன சங்கதியென்ன? சீஷர் அவளுடைய வார்த்தையின்மட்டில் கொண்ட கருத்தென்ன?

---

## 87-ம் அதிகாரம்

### சேசுநாதருடைய உயிர்த்தலைப்பற்றி பிரதான ஆசாரியருக்குத் தெரியப்படுத்தினது

கல்லறையைக் காவல் காத்துக்கொண்டிருந்தவர்கள் ஓட்டம்பிடித்து நகருக்குள் சென்று, சம்பவித்த காரியத்தைச் சொன்னார்கள். பிரதான ஆசாரியர் இந்த ஆச்சரியத்திற்குரிய வர்த்தமானத்தைக்கேட்டு சனத்தின் மூப்பரை வரவழைத்து, இதுவிஷயத்தில் தாங்கள் செய்யவேண்டியதென்னவென்று யோசனை கேட்டார்கள்.

கிறீஸ்துநாதர் மரித்தவர்களிடத்தினின்று உயிர்த்தாரென ஜனங்கள் கேள்விப்பட்டால் அவரை நம்புவார்களென்றும், அதனால் தாங்கள் செய்த உபாய தந்திரங்கள் வியர்த்தமாகுமென்றும் எண்ணி, காவற்காரரை வரவழைத்து, "நாங்கள் தூங்கும்போது சேசுவின் சீஷர் வந்து சரீரத்தைத் திருடிக்கொண்டுபோய் விட்டார்கள்" என்று மற்றவர்களுக்குச் சொன்னால் உங்களுக்குப் பணங்கொடுப்போமென, சேவகர் பணத்தைப் பெற்றுக்கொண்டு அவர்கள் கற்றுக்கொடுத்தபடியே கேட்டவர்களுக்குச் சொல்லிவிட்டார்கள்.

வினா.—பிரதான ஆசாரியர்கள் என்ன செய்தார்கள்? அவர்கள் சேவகரோடு செய்துகொண்ட ஒப்பந்தமென்ன?



## 88-ம் அதிகாரம்

### எம்மாவுஸ் கிராமத்திற்குப் போய்க்கொண்டிருந்த இரண்டு சீஷருக்கு சேசுநாதர் தரிசனையாகிறார்

சேசுநாதருயிர்த்த அன்று சாயந்திரம் அவருடைய சீஷரிலிருவர் எம்மாவுஸ் என்னும் கிராமத்திற்குப் போகும்போது, அன்று சம்பவித்த காரியங்களைப் பற்றிப் பேசிக்கொண்டுபோனார்கள். அப்போது சேசுநாதர் அவர்களோடு சேர்ந்து பேசிக்கொண்டுபோனபோதிலும், அவர்கள் அவரை இன்னாரென்று அறிந்துகொண்டவர்களல்ல. அவர்களில் கிளேயோபாஸ் என்ற ஒருவர் வெகுகஸ்தியுடன் கிறீஸ்துநாதரைப்பார்த்து: "ஐயா, நீர் அன்னியராகத் தோன்றுகிறீரே; எருசலேமில் சம்பவித்த காரியங்களைப்பற்றி நீர் ஒன்றுங் கேள்விப்படவில்லையா? மெய்யாகவே நாங்கள் அவரை வாக்களிக்கப்பட்ட உண்மையான மேசியாவென்றே விசுவசித்து, அவர்பேரில் எவ்வளவோ நம்பிக்கை கொண்டிருந்தோம். ஆனால் அவருடைய வல்லமை ஸ்திரப்படுத்தப்படுங்காலத்தில் யூதத்தலைவர் அவரைப் பிடித்துச் சிலுவையிலறைந்து கொன்றுவிட்டார்கள். அவரைக் கல்லறையில் அடக்கி இன்றைக்கு நாள் மூன்றாகிறது; அப்படியிருக்க அவர் மறுபடியும் உயிரோடெழுந்தாரென்று எங்கும் பிரஸ்தாபமாயிருக்கிறது" என்று சொன்னார்.

அப்போது சேசுநாதர் அவர்களைப்பார்த்து, மோயீசன் முதற்கொண்டு தீர்க்கதரிசிகள் அனைவரும் வேதாகமங்களில் தம்மைக் குறித்துச் சொன்னவைகளையெல்லாங் கிறீஸ்துநாதர் அனுபவிக்கவேண்டியிருந்ததென்று அவர்களுக்கு விவரித்துச் சொன்னார். அவர்கள் கிரா

மத்திற்குச் சமீபமாய் வந்தபோது, சேசுநாதர் தாம் வெகுதூர பிரயாணஞ்செய்பவராகக் காட்டிக்கொண்டார். ஆயினும் பொழுதுபோனதைப்பற்றித் தங்களோடு தங்கும்படி சீஷர்கள் அவரை வெகுவாகக் கேட்டுக்கொண்டதின்மேல், அவரும் அவர்களுடைய இஷ்டத்திற்கிணங்கி, போசனஞ்செய்ய அவர்களோடு உட்கார்ந்து, அப்பத்தை ஆசீர்வதித்து அவர்களுக்குக் கொடுக்கவே, உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு அவரின்னாரென்று அறிய ஆரம்பித்தக்ஷணமே அவர் அவர்களது கட்புலன்களுக்கு அதரிசனமானார்.

புத்தி.—யூதர்கள் சேசுநாதரை மறுதலித்ததுமல்லாமல் மனந்திரும்ப இடங்கொடாதபடியால், அவர் உயிர்த்தெழுந்தபிறகு அவர்களுக்குத் தம்மைப் பிரத்தியட்சமாகக் காட்டாமல், தமது சீஷர்களுக்குமட்டும் தரிசனமளித்தார். இக்காலத்திலும் அதேவிதமாய்த் தம்மை நல்ல மனதோடு அங்கீகரிக்கிறவர்களிடம் வந்து தங்குகிறார்; ஆனால் தமது அனுக்கிரகத்தை நிராகரிக்கிறவர்களைத் தாமுந் திரஸ்கரிக்கிறார்.

வினா.—எம்மாவுஸ் கிராமத்திற்குப் போய்க்கொண்டிருந்த இரண்டு சீஷருக்குச் சம்பவித்ததென்ன? அவர்கள் சேசுநாதரை எப்படி அறிந்துகொண்டார்கள்?

---

## 89-ம் அதிகாரம்

### சேசுநாதர் அப்போஸ்தலர்களுக்குத் தரிசனையாகிறார்

சேசுநாதர் அதரிசனமான அக்ஷணமே இரு சீஷருமெழுந்து துரிதமாய் எருசலேமுக்குப் போக, இராயப்பரும் அப்போதே அறையிற் பிரவேசித்துத் தாமும் ஆண்டவரைக் கண்டதாகச் சொல்ல, எல்லோரு



மனவெழுச்சிக்கொண்டிருக்கையில், எம்மாவுஸ் கிராமத்திற்குப் போய்வந்த இரு சீஷருந் தங்களுக்குச் சம்பவித்தவைகளையுஞ் சொன்னார்கள்.

இவ்வாறு அவர்களெல்லோருங் கதவடைத்த ஓரறையில் பேசிக்கொண்டிருக்கும்போது சேசுநாதர் உட்பிரவேசித்து: “உங்களுக்குச் சமாதானம் உண்டாகக்கடவது” என்று சொல்லக்கேட்ட அப்போஸ்தலர்கள் அவர் அரூபியென்று பயந்து கலங்கினார்கள். ஆதலால் அவர் அவர்களுக்குத் தமது கரங்களையும் பாதங்களையுங் காட்டி, தம்மைத் தொட்டுப் பார்க்கச்சொல்லி, அவர்கள் கண்டது அரூபியல்லவென்று நிரூபித்தார். ஆயினும் அவர்கள் இன்னமுஞ் சந்தேகித்துக்கொண்டிருந்தமையால், அவர் அவர்களிடமிருந்த பொரித்த மச்சத்துண்டையுங் கொஞ்சந் தேனிறாட்டையுமெடுத்து அவர்களுக்குமுன் புசித்தார்.

வினா.—சேசுநாதர் வேறே யாருக்குத் தரிசனையானார்? எப்படி? தாம் அரூபியல்லவென்று எப்படி நிரூபித்தார்?

---

## 90-ம் அதிகாரம்

### சேசுநாதர் பாவசங்கீர்த்தனமாகிய தேவத்திரவிய அனுமானத்தை ஸ்தாபித்தல்

அப்போஸ்தலர்கள் ஆண்டவரைக் கண்டதாக அவர்களுக்கு உறுதிப்பட்டபோது, சேசுநாதர் மறுபடியும் அவர்களுக்குச் சமாதான வாழ்த்துதல் கூறி: “பிதா என்னை யனுப்பினதுபோல நானுமுங்களை யனுப்புகிறேன்” என்று திருவுளம்பற்றியபின், அவர்கள்மேல் ஊதி: “இஸ்பிரீத்துசாந்துவானவரைப் பெற்

றுக்கொள்ளுங்கள்; நீங்கள் எவர்களுடைய பாவங்களை மன்னிப்பீர்களோ அவர்களுக்கவைகள் மன்னிக்கப் பட்டிருக்கின்றன; எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ அவைகள் மன்னிக்கப்படாதிருக்கின்றன" என்று திருவாக்களித்தார்.

புத்தி.—அப்போஸ்தலர்களுக்கு அளிக்கப்பட்ட இவ்விரண்டு அதிகாரங்களைக்கொண்டு கத்தோலிக்குத் திருச்சபையின் மறுக்கப்படாத தெய்வீகத்தன்மையையும் கத்தோலிக்குக் குருத்துவத்தின் வல்லமையையும் திருஷ்டாந்தமாக கண்டுகொள்ளலாம். அப்போஸ்தலர்கள் சாவுக்குரிய மனுஷராயினும் திருச்சபையானது அழிவுக்குரியதல்ல. ஆகையால் இவ்வதிகார வல்லமை அப்போஸ்தலர்களுக்கும் அவர்களைத் தொடர்ந்துவரும் கத்தோலிக்கு மேற்றிராணிமார்களுக்குங் குருக்களுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது.

வினா.—சேசுநாதர் பச்சாத்தாபமாகிய தேவத்திரவிய அநுமானத்தை ஸ்தாபித்ததைப்பற்றிச் சொல்லு? கத்தோலிக்குத் திருச்சபையின் தெய்வீகம் எப்படி விளங்குகிறது? குருத்துவத்தின் வல்லமை யெப்படிக் காட்டப்பட்டிருக்கிறது? எந்தத் தேவத்திரவிய அனுமானத்தைக்கொண்டு பாவங்களை பொறுக்கப்படுகின்றன?

---

## 91-ம் அதிகாரம்

### சேசுநாதரும் அர்ச். தோமையாரும்

சேசுநாதர் அப்போஸ்தலர்களுக்குத் தரிசனையான போது, அவர்களில் ஒருவராகிய தோமையார் அவர்களுடன் இருந்தவரல்ல. ஆகையால் தோமையார் அவர்களுடைய வார்த்தையை நம்பாமல் நான் அவருடைய கரங்களிலும் பாதங்களிலும் ஆணிகளின் காயங்களை என் கண்ணாரக்கண்டு, அவருடைய விலா



வில் என் விரலைவிட்டுப் பார்த்தாலொழிய விசுவசியேனென்றார். எட்டு நாளைக்குப்பிறகு தோமையார் மற்ற அப்போஸ்தலர்களோடு ஒரு வீட்டில் கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே யிருக்கும்போது, மறுபடியும் சேசுநாதர் அறைக்குள் பிரவேசித்து தோமையாரைப் பார்த்து: "நீ என் காயங்களைப் பார்; உன் விரலை என் விலாவில் விட்டுப்பார்" என்று திருவாய்மலர்ந்தருளினார்.

தோமையார் சேசுநாதரைப் பரிசோதித்துப் பார்த்தவுடனே முழந்தாளிட்டு: "என்னாண்டவரே! என் தேவனே!" என்று சொல்ல, "தோமையே! நீ என்னைக் கண்டு விசுவசித்தாய்; ஆனால் காணாமல் விசுவசித்தவர்கள் பாக்கியவான்கள்" என்று நமதாண்டவர் விடைபகர்ந்தார்.

வினா.—சேசுநாதரையும் தோமையாரையும்பற்றி என்ன சொல்லியிருக்கிறது?

---

## 92-ம் அதிகாரம்

### இராயப்பர் பிரதான மேய்ப்பாக நியமகமடைந்தது

அப்போஸ்தலர்கள் சேசுநாதருடைய கட்டளைப்படி எருசலேமைவிட்டு கலிலேயாவுக்குப் போனார்கள். அங்கு ஜெனெசரேத்தென்னும் ஏரி பண்டை சேசுநாதர் அவர்களுக்குத் தரிசனையாக அன்று அற்புதமான விதமாக மச்சங்களைப் பிடித்தார்கள்.

அவர்களெல்லோரும் போஜனஞ் செய்தபிறகு சேசுநாதர் இராயப்பரைப் பார்த்து: "சீமோனே! இவர்களெல்லோரையும்விட நீ யென்னை அதிகமாய்ச்

சினேகிக்கிறாயோ?" என்றார். இராயப்பர்: "ஆம் ஆண்டவரே! உம்மை நேசிக்கிறேனென்று உமக்குத் தெரியுமே" எனவே, "என் ஆட்டுக்குட்டிகளை மேய்" என்றார். இவ்வண்ணம் இருமுறை யவரைக் கேட்டபின், கடைசியாய், "என் ஆட்டுக்குட்டிகளையும் ஆடுகளையும் மேய்ப்பாயாக" என்று திருவுளம்பற்றினார்.



புத்தி.—ஆட்டுக்குட்டிகளும் ஆடுகளுமென்றதால் விசுவாசிகளும் திருச்சபையின் மேய்ப்பருமென்று அர்த்தமாகும். கிறீஸ்துநாதர் இராயப்பரை நடத்தின விதத்தில் ஓர் விசேஷமடங்கியிருக்கிறது. அதென்னவெனில் கிறீஸ்துநாதர் இராயப்பருடைய படகிலேறுகிறார்; இராயப்பரைக் கல்லென அழைக்கிறார்; இராயப்பர் மற்ற அப்போஸ்தலர்களை உறுதிப்படுத்த அதிகாரம் பெறுகிறார்; கிறீஸ்துநாதர் இராயப்பருக்காகத் தமது பிதாவை மன்றாடுகிறார். இவ்விஷயங்களால் இராயப்பரே முதன்மையானவராகக் குறிக்கப்படுகின்றார். அதனால் கத்தோலிக்குத் திருச்சபையில் ஞானதத தலைமையதிகாரம் இராயப்பரின பதிலாளிகளாகிய பாப்புமார்களிடம் என்றுங் காணப்படுகிறதாமே.

வினா.—ஜெனெசரேத் ஏரியண்டை என்ன சம்பவித்தது? இராயப்பருக்கு அளித்த அதிகாரமென்ன? கிறீஸ்துநாதர் இராயப்பரையெப்படி நடத்தினார்? தலைமை யதிகாரம் யாரிடத்திற் காணப்படுகிறது?



---

## 93-ம் அதிகாரம்

### இஸ்பிரீத்துசாந்துவைப்பற்றி வாக்குத்தத்தம்

இதற்குப்பின் சேசுநாதர் பலமுறை தமது அப்போஸ்தலர்களுக்குத் தரிசனையாகி, இனி அவர்கள் செய்யவேண்டிய வேலையைப்பற்றிப் போதித்துக் கொண்டுவந்தார். அவர் முக்கியமாய்த் தமது திருச்சபையின் சுபாவ மேரையைப்பற்றியும், அது எங்கும் விஸ்தரித்து பிரபலியமாகும் விதத்தைப்பற்றியும் ஒவ்வொன்றாக விவரித்துச் சொன்னார்.

அவர் உயிர்த்த நாற்பதாம் நாள் அப்போஸ்தலர்களெல்லாரும் எருசலேமில் கூடியிருந்த சமயத்தில் கடைசிவிசையாக அவர்களுக்குத் தரிசனையாகி, அவர்கள் இஸ்பிரீத்துசாந்துவை பெற்றுக்கொள்ளுகிறவரையில் எருசலேமில் சில நாள் தங்கியிருக்கவேண்டுமென்றும், அதற்குப்பிறகு அவரைக் குறித்து சாட்சி சொல்லி வேதத்தைப் போதிக்க, எருசலேம் யூதேயாவில் மாத்திரமல்ல, பூமியின் எத்திசையிலும் போகவேண்டுமென்றும் கட்டளையிட்டார். அவர் வாக்குத்தத்தஞ் செய்தபிரகாரம் பத்து நாளைக்குப்பிறகு இஸ்பிரீத்துசாந்து அக்கினி நாக்கு உருவமாய் அப்போஸ்தலர்கள்மேல் இறங்கிவந்தார்.

வினா.—கிறீஸ்துநாதர் தமது அப்போஸ்தலர்களுக்கு எதைக்குறித்து முக்கியமாய்ப் போதித்தார்? நாற்பதாம் நாள் என்ன சம்பவித்தது? கிறீஸ்துநாதர் அப்போஸ்தலர்களுக்கிட்ட கட்டளையென்ன?

## 94-ம் அதிகாரம்

### கிறீஸ்துநாதர் அப்போஸ்தலர்களுக்களித்த கடைசி அதிகாரமும்—அவர் மோட்ச ஆரோகணமானதும்

சேசுநாதர் இவைகளைத் திருவுளம்பற்றினபிறகு அப்போஸ்தலர்களை ஒலிவேத்துமலைக்கு அழைத்துப்போய், அவ்விடத்தில் அவர்களுக்குத திருவுளம்



பற்றினதாவது: "எனக்குப் பரலோகத்திலும் பூலோகத்திலும் சகல வல்லமையும் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் உலகமெத்திசையிலும்போய் ஜனங்களுக்கு சுவிசேஷத்தைப் போதித்து, பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்துசாந்துடையவும் நாமத்தினாலே ஞானஸ்நானங் கொடுங்கள்; மேலும் உலக



முடிவுபரியந்தம் நாம் உங்களோடு இருப்போம்" என்றார்.

இவ்விதமாய் அவர் வசனித்து முடியவே, தமது காங்களை உயர்த்தி, அப்போஸ்தலர்களை ஆசீர்வதித்து மெள்ள பூமியைவிட்டுக் கிளம்பி பரலோகத்துக்கு உயர்ந்துபோய் தமது பிதாவின் வலதுபாரிசத்தில் இப்போதைக்கும் எப்போதைக்கும் வீற்றிருக்கிறார்.

அப்போஸ்தலர்கள் அதிசயப் பிரமிப்புடன் துக்க
சாகரத்தில் அமிழ்ந்தி அவர் மோட்சத்துக்கு எழுந்தரு
ளிப்போகிறதைப் பார்த்துக்கொண்டிருக்கிறபோது,
ஒரு வெண்மேகம் அவரை மறைத்துக்கொண்டது.
அப்போஸ்தலர்கள் இன்னும் முன்போலவே பரலோ
கத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்ததால்
வெள்ளை வஸ்திரமணிந்த இரு தேவதூதர் காணப்பட்டு
"இப்போது நீங்கள் சேசுநாதரைக் கண்டபடியே மறு
படியும் வருவார்" என்றார்கள். அப்போஸ்தலர்கள்
அதைக் கேட்டு சாஷ்டாங்கமாக விழுந்து, சர்வேசுரனை
ஆராதித்து, எழுந்து எருசலேமுக்குப்போய் இஸ்பி
ரீத்துசாந்துவின் வருகைக்கு காத்துக்கொண்டிருந்
தார்கள்.

புத்தி.—எலியாசென்ற தீர்க்கதரிசி அக்கினி இரதத்
திலேறி பரலோகஞ்சென்று மலக்கியாசென் தீர்க்கதரிசனப்
படி உலக முடிவில் மறுபடியும் வரவிருப்பதால், அவர்
கிறீஸ்துநாதருக்குக் குறிப்பாயிருக்கிறார். ஆதாம் தன் பாவத்
தால் மனிதரை சர்வேசுரனிடத்திலிருந்து அப்புறப்படுத்தி
னதுபோல், கிறீஸ்துநாதர் தமது ஆரோகணத்தால் மனிதரு
டைய எண்ணங்கள் பரலோகத்தைத் தாவும்படி செய்து நித்
திய பதவியின் நம்பிக்கையை அவர்களில் நிலைநிறுத்தலானார்.

வினா.—அப்போஸ்தலர்களுக்கு அளிக்கப்பட்ட கடைசி
அதிகாரமென்ன? எந்த மலைமேல் நின்று ஆரோகணமா

னார்? அப்போஸ்தலர்களுக்கு சம்பவித்ததைச் சொல்லு? எலியாசையும் ஆதாமையும்பற்றி என்ன சொல்லியிருக்கிறது?

---

## 95-ம் அதிகாரம்

### ஓர் குறிப்பு

நமது திவ்ய இரட்சகரின் சீவியம், செய்கை, வார்த்தை முதலியவைகளைப்பற்றி நாம் இப்புத்தகத்திற் சொன்னவைகளெல்லாம் நான்கு சுவிசேஷங்களினின்று தெரிந்தெடுக்கப்பட்டவைகளே. ஆனால் இதில் குறிக்கப்பட்டவைகள் தவிர வேறெதுவும் சேசுநாதர் செய்யவில்லையென்றாவது, சொல்லவில்லையென்றாவது எவரும் நினைக்கத்தகாது.

வேதாகமங்களிற் சொல்லப்படாத அநேக காரியங்களை சேசுநாதர் செய்தாரென்றுஞ் சொன்னாரென்றுங் கத்தோலிக்கு வேதம் படிப்பிக்கிறது. மேலும் அர்ச். அருளப்பர் தாமெழுதின சுவிசேஷத்தின் கடைசி அதிகாரத்தில் சொல்லியிருக்குமாப்போல சேசுநாதர் செய்த காரியங்களில் அநேகம் எழுதப்படவில்லையென்றும், அவர் செய்ததும் பேசினதுமானவையெல்லாம் எழுதவேண்டுமானால், அப்புத்தகங்களை உலகங்கொள்ளாதென்றுஞ் சொல்லுகிறார்.

வினா.—இவ்வதிகாரத்தில் சொல்லியிருப்பதென்ன? கத்தோலிக்குப் போதனை யெது?

முதல் பாகம் முற்றிற்று

# இரண்டாம் பாகம்

## அப்போஸ்தலர்களுடைய சரித்திரம்

---

## 96-ம் அதிகாரம்

### ஆரம்பக் குறிப்பு

சேசுநாதர் பசாசின் வல்லமையை அழித்து சர்வேசுரனுடைய இராச்சியத்தை ஸ்தாபிக்கும்படி வந்தார். ஆனதுபற்றி, அவர் மோட்சாரோகணமான போது அவருடைய திருச்சபையானது சிறியதும் பூர்த்தியாகாததுமாய் இருந்தபோதிலும் கடுகு செடியைப்போல், அது வரவர வளர்ந்து உலக முழுதும் பரவுமென்பதற்குச் சந்தேகமில்லை.

திருச்சபையின் இந்த வளர்ச்சியும் பரம்புதலும் முதலில் யூதேயாவில் ஆரம்பமாகி, பிறகு அப்போஸ்தலர்களைக்கொண்டே உலக முழுவதும் பரம்பினது. அவர்களைப்பற்றிய சரித்திரம் பின்வரும் அதிகாரங்களிற் சொல்லப்படும்.

வினா.—திருச்சபையின் பிறப்பையும் அதன் வளர்ச்சியையும்பற்றி சொல்லியிருப்பதென்ன?

---

## 97-ம் அதிகாரம்

### மத்தியாஸ் அப்போஸ்தலராகத் தெரிந்துகொள்ளப்படுதல்

அப்போஸ்தலர்களுக்குக் கற்பித்தபடி சேசுநாதர் மோட்சாரோகணமானபிறகு அவர்கள் எருசலேமிலேயே இருந்தார்கள். அவர்களோடு தேவமாதா

வும் அனேக சீஷர்களுஞ் சேர்ந்து நூற்றிருபது பேர்
வரையில் செனுதலம் என்ற அசனசாலையில் பத்து
நாள் செபத்தியானத்தில் நிலைத்திருந்தார்கள்.

அச்சமயத்தில் இராயப்பர் எழுந்து அப்போஸ்த
லத்துவத்துக்கு அபாத்திரனான யூதாஸ் இஸ்காரியோத்
துக்குப் பதிலாக வேறொருவரைத் தெரிந்துகொள்ள
வேணுமென்று சொல்ல, அதற்கு எல்லோரும் சம்ம
தித்து செபஞ்செய்து திருவுளச்சீட்டு போடவே, அது
சீஷரில் ஒருவராகிய மத்தியாஸ் பேருக்கு விழுந்தது.

வினு.—சேசுநாதர் மோட்சாரோகணமானபிறகு சீஷர்
கள் என்ன செய்தார்கள்? இராயப்பர் என்ன செய்தார்?

---

## 98-ம் அதிகாரம்

### இஸ்பிரீத்துசாந்துவானவர் இறங்கிவருதல்.

பெந்தகோஸ்தென்னும் பண்டிகை நாட்கள் நிறை
வேறினபோது அப்போஸ்தலர்களுஞ் சீஷர்க
ளுமாகிய எல்லோரும் ஓரிடத்தில் ஒருமிக்கக் கூடியிருந்
தார்கள். அப்போது பலத்த காற்றின் ஒலிபோலச்
சடுதியில் வானத்தினின்று பேரொலியுண்டாக, அதே
சமயத்தில் அக்கினிமயமான பிளவுள்ள நாவுகள் அவர்
களுக்குத் தோன்றி அவர்களில் ஒவ்வொருவர்பேரிலும்
ஒவ்வொன்றாக நின்றன.

இஸ்பிரீத்துசாந்துவினால் எல்லோரும் நிரப்பப்
பட்டு அக்ஷணமே பயம் அச்சம் என்பன இலவலேசமு
மின்றி, சிலுவையில் அறைப்பப்பட்ட கிறீஸ்துநாதரைப்
பற்றி பகிரங்கமாகப் பிரசங்கிக்கப் போவல்கொண்
டார்கள். பெந்தகோஸ்த் பண்டிகையைக் கொண்டா



டும்படியாக அன்னியரான ஜனங்கள் உலகத்தின் எத்
திசையினின்றும் எருசலேமில் வந்திருந்தபடியால்,
இச்செய்தி பரம்பவே சீக்கிரத்தில் திரளான ஜனக்கூட்
டம் அப்போஸ்தலர்களிருந்த வீட்டைச் சூழ்ந்து
கொண்டு, அவரவருடைய பாஷையில் அப்போஸ்தலர்
கள் பிரசங்கிப்பதைக் கேட்டு அதிசய பிரமைகொண்
டார்கள். அப்போது சிலர்: "இதோ பேசுகிறவர்க
ளெல்லோரும் கலிலேயராயிருக்க நமது ஜென்ம



பாஷைகளால் பேசுவதை நாம் ஒவ்வொருவரும் கேட்
கிறோமே! இஃதெப்படி?" என்று பிரமிப்போடு
கேட்க, வேறு சிலர்: "அவர்கள் புதிய இரசத்தை
நிறையக் குடித்திருக்கிறார்கள்" என்று சொல்லி
நகைத்தார்கள்.

அதனால் இராயப்பர் பதினொருவரோடு நின்று
சொன்னதாவது: "யூத மனிதரே! எருசலேமில் வசிக்

கிற சகல ஜனங்களே! இவர்கள் லாகிரிகொண்டவர்களல்லவென்று அறியக்கடவீர்கள்; 'கடைசி நாளில் சம்பவித்ததென்னவென்றால், எல்லா மாமிசத்தின்பேரிலும் என் இஸ்பிரீத்துவை எடுத்துப் பொழிவேன்' என்று ஜோயேல் தீர்க்கதரிசி சொன்ன வாக்கியம் இவர்களில் இன்று நிறைவேறியிருக்கிறது.

"இஸ்றாயேலர்களே! நான் சொல்லும் இவ்வாக்கியங்களைக் கேளுங்கள்: நசரேயனாகிய சேசுநாதர் உங்கள் மத்தியில் அதிசயங்களையும் புதுமைகளையும் செய்து, தம்மை சர்வேசுரனால் அனுப்பப்பட்டவராக உரூபித்தும், தீயோர் அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றார்கள். ஆனால் இப்போது அவர் சர்வேசுரனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார். நீங்கள் காண்பதுபோல் எங்கள்பேரில் இஸ்பிரீத்துசாந்துவைப் பொழிந்தருளினவர் அவரே. மேலும் அவரே பரலோக பூலோகங்களுக்கு இரட்சகரும் ஆண்டவருமென்று அறியக்கடவீர்களாக" என்றார்.

ஜனங்கள் இவைகளைக் கேட்டு, மனத்துயாமுற்று, என்ன செய்யவேணுமென்று இராயப்பரைக் கேட்க, "தவஞ்செய்யுங்கள்; மேலும் சேசுக்கிறீஸ்துநாதருடைய நாமத்தினால் ஞானஸ்நானம் பெறக்கடவீர்கள்" என்று மாறுத்தரம் அளித்தார். அச்சமயத்தில் சுமார் மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் பெற, அவர்களோடு புதுமையானவிதமாய் திருச்சபை ஆரம்பித்து, வரவர அதிகரித்துப் பெருக, உலக முழுதும் கிறீஸ்து வேதம் ஸ்தாபிக்கப்படலாயிற்று.

புத்தி.—பெந்தகோஸ்து தினத்தன்று இஸ்பிரீத்துசாந்துவானவர் இறங்கி, அப்போஸ்தலர்கள் சொல்வதைக் கண்டுபிடிக்க ஜனங்களின் புத்திக்கு ஞான வெளிச்சமளித்து,



அவர்களை ஐக்கியமாக்கினார். ஆனால் பாபேல் கோபுரத்
தருகே ஜனங்களின் ஆங்காரத்தைத் தாழ்த்தவும், அவர்களு
டைய வீண் எண்ணத்தைத் தடுக்கவும் சர்வேசுரன் அவர்க
ளுடைய பாஷையை மாற்றிச் சிதற அடித்தார்.

யூதருடைய முதல் பெந்தெகோஸ்து பண்டிகையானது
மின்னல் இடிமுழக்கத்தோடு சீனாய் பர்வதத்தில் கொண்
டாடப்பட, அவ்விடத்தில் சர்வேசுரன் பழைய ஏற்பாட்
டைப் பிரசித்தப்படுத்தினார். கிறீஸ்துநாதருடைய முதல்
பெந்தெகோஸ்தின்போதோவெனில், புதிய ஏற்பாட்டை
உறுதிப்படுத்தி, அதற்குச் சாட்சி கூற அக்கினி நாக்கு ரூப
மாய் இஸ்பிரீத்துசாந்துவானவர் இறங்கிவந்தார்.

வினா.—பெந்தெகோஸ்து எப்போது கொண்டாடப்
பட்டது? அப்போஸ்தலர்களுக்கு என்ன சம்பவித்தது? எரு
சலேமிலிருந்ததார்? என்ன அதிசயங் காணப்பட்டது? இரா
யப்பர் என்ன சொன்னார்? ஜனங்கள் என்ன செய்தார்கள்?
இராயப்பருடைய முதற் பிரசங்கத்தின்போது எத்தனை பேர்
மனந்திரும்பினார்கள்? யூத பெந்தகோஸ்தைப்பற்றியும் கிறீஸ்
து வ பெந்தகோஸ்தைப்பற்றியும் என்ன சொல்லப்பட்டிருக்
கிறது?

---

## 99-ம் அதிகாரம்

### இராயப்பர் முடவனை சொஸ்தப்படுத்துகிறர்

இராயப்பருடைய முதல் பிரசங்கத்தால் மூவாயிரம்
பேர் மனந்திரும்பின சிலநாட்களுக்குப்பிறகு
இராயப்பரும், அருளப்பருஞ் செபஞ்செய்ய தேவால
யத்துக்குப் போனார்கள். தன் தாயின் உதரத்தினின்று
முடவனாய்ப் பிறந்த ஒருவனை அநுதினமும் அவன் சுற்
றத்தார் தேவாலயத்து வாசற்படியண்டை கொண்டு
வந்துவிட, அவன் கோவிலுக்கு வருகிறவர்களிடத்தில்
பிச்சை கேட்பான்.

ஆகையால் இராயப்பரும், அருளப்பரும் தேவாலயத்தில் பிரவேசிப்பதைக்கண்டு அவன் பிச்சைகேட்க, இராயப்பர்: "என்னிடத்தில் வெள்ளியும் பொன்னுமில்லை; ஆயினும் எனக்குள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயாகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய நாமத்தினால் எழுந்து நட" எனவே அவன் எழுந்து குதித்து சர்வேசுரனை துதித்துக்கொண்டு அவர்களோடு தேவாலயத்திற் பிரவேசித்தான்.

ஜனங்கள் இதைப் பார்த்து அதிசய பிரமை கொண்டு நிற்க, இராயப்பர் அவர்களை நோக்கி: "இஸ்றாயேலரே; இதற்கு நீங்களாச்சரியப்படுவானேன்? எங்கள் வல்லமையினாலாவது, அல்லது தத்துவத்தினாலாவது நாங்கள் இவனை நடக்கச்செய்தாற்போல நீங்கள் என்னை உற்றுப்பார்ப்பானேன்? நசரேயாகிய சேசுவின் நாமத்தினாலும், அவருடைய வல்லமையாலும் இம்மனிதன் நடக்கிறானே ஒழிய மற்றப்படியல்ல" என்றார். அவர் செய்த பிரசங்கம் ஜனங்கள் மனதில் நன்றாய்ப் பதிந்தபடியால், மறுபடியும் ஐயாயிரம்பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

வினா.—முடவனை சொஸ்தப்படுத்தினதார்? இராயப்பர் என்ன சொன்னார்? இராயப்பர் செய்த பிரசங்கத்தால் உண்டான பலனென்ன?

---

## 100-ம் அதிகாரம்

### இராயப்பரும் அருளப்பரும் பிடிபட்டது

இராயப்பரும் அருளப்பரும் பிரசங்கித்துக்கொண்டிருக்கையில், ஆசாரியர்களும் தேவாலயத்தின் சேர்வைக்காரரும் வந்து, அவர்கள் பகிரங்கமாய்ப் பிர



சங்கிப்பதைக் கண்டு கோபாவேசத்தால் பொங்கி, அவர்களைப் பிடித்து சிறையிலடைத்தார்கள். மறுநாள் பிரதான ஆசாரியர்கள் சங்கங்கூடி இராயப்பரையும் அருளப்பரையும் வரவழைத்து "நீங்கள் எந்த வல்லமையைக்கொண்டு அந்த முடவனை சொஸ்தப்படுத்தினீர்கள்" என்று அவர்களைக் கேட்க, அதற்கு இராயப்பர், "உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், இப்போது உயிர்த்தெழுந்தவருமாகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய நாமத்தினாலும் வல்லமையினாலும் முடவன் சொஸ்தப்பட்டான்" என்று மறுமொழி யளித்தார்.

ஆசாரியர் இதைக்கேட்டு அப்போஸ்தலர்களை சங்கத்துக்கப்புறப்படுத்தி "இது காரியத்தில் நாம் செய்யவேண்டியதென்ன? அவர்கள் செய்தது புதுமைதானென்று வெட்டவெளிச்சமாய்த் தெரிகிறதே; அவர்கள் அதை மறுக்கவுமாட்டார்கள்" என்று பலவாறாய்த் தங்களுக்குள் ஆலோசனைசெய்து, கடைசியாய் அவர்கள் தீர்மானித்தபடி அப்போஸ்தலர்களை வரவழைத்து, சேசுநாதருடைய நாமத்தைக் குறித்துப் பேசவாவது போதிக்கவாவது கூடாதென்று கட்டளையிட்டார்கள். ஆனால் இராயப்பர்: "சர்வேசுரனுக்குக் கீழ்ப்படிவதைவிட உங்களுக்குக் கீழ்ப்படிவது நியாயமோ? நாங்கள் கண்டதையும் கேட்டதையும்பற்றி பேசவேண்டியதே" என்றார். அப்போது நடுவர்கள் அப்போஸ்தலருக்கு வெறும் பயங்காட்டி அனுப்பிவிட்டார்கள்.

வினா.—இராயப்பருக்கும் அருளப்பருக்கும் என்ன சம்பவித்தது? இராயப்பர் சங்கத்தாருக்கு என்ன மறுமொழி சொன்னார்?

---

# 101-ம் அதிகாரம்

## பூர்வீக கிறீஸ்துவர்களுடைய ஒழுக்கம்

பிரதம கிறீஸ்துவர்களின் பரிசுத்த சீவியத்துக்கு இணையிடக்கூடியது ஒன்றுமில்லை; எல்லோருக்கும் ஒரே ஆத்துமமும் ஒரே சரீரமுமிருந்ததுபோல வாழ்ந்துவந்தார்கள். அப்போஸ்தலர்கள் தேவ ஊழியத்தில் ஓய்வற்று உழைத்துவர, விசுவாசிகள் பிரதிதினம் நன்மை வாங்குவதிலும், இடைவிடாது செபத்தியானஞ் செய்வதிலும் காலங் கழித்துவந்தார்கள். அவர்களுடைய சொத்துக்களெல்லாம் யாவருக்கும் பொதுவாக இருந்தது. நிலங்களாவது வீடுகளாவது உடையவர்கள் அவற்றை விற்று அதன் கிரயத்தை அப்போஸ்தலர்கள் பாதத்தில் வைக்க, அவர்கள் அதை அவனவனுக்குத் தேவையானபடி பகிர்ந்துகொடுப்பார்கள். அவர்கள் ஏழைகள்மட்டில் கொண்டிருந்த இரக்கமும், அவர்களுக்குள்ள சகோதர வாஞ்சையுஞ் சொல்லுந்தன்மையல்ல. அவர்களுடைய புண்ணிய நடத்தையை யூதரும் அஞ்ஞானிகளுங் கண்டு அவர்களைக் கனம்பண்ணிவந்தார்கள். அதனால் விசுவாசிகளுடைய தொகையும் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வந்தது.

வினா.—பூர்வீக கிறீஸ்துவர்களைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது? அவர்களுடைய சொத்துக்கள் எப்படி உபயோகிக்கப்பட்டன? அவர்களுடைய நன்னடக்கையாலுண்டான பயனென்ன?

---



# 102-ம் அதிகாரம்

## அனனியாசும் சபிராளும்

அக்காலத்தில் அனனியாஸ் சபிராள் என்னும் இரு தம்பதிகளிருந்தார்கள். அவர்கள் ஓர் நிலத்தை விற்று, அதன் கிரயத்தில் ஓர் பங்கை இரகசியமாய் வைத்துக்கொண்டார்கள். மற்றதை அனனியாஸ் கொண்டுபோய் அப்போஸ்தலர்களுக்குப் பாதகாணிக்கையாக வைத்து இவ்வளவுதான் அதன் கிரயமென்று பொய்சொன்னான்.

இராயப்பர் அவனைப் பார்த்து: "அனனியாஸே! நீ இஸ்பிரீத்துசாந்துவுக்குப் பொய்சொல்லும்படி ஏன் சாத்தானுக்கு இடங்கொடுத்தாய்? உன் நிலக்கிரயத்தில் ஓர் பங்கை ஒளித்துவைத்துக்கொண்டது என்னத்திற்கு? நீ மனிதருக்கல்ல, சர்வேசுரனுக்கே பொய் சொன்னாய்" என்று வசனித்தமாத்திரத்தில் அனனியாஸ் கீழேவிழுந்து உயிர்விட்டான்.

மூன்றுமணி நேரத்துக்குப்பிறகு சபிராளும் வந்து, தன் புருஷனுக்குச் சம்பவித்த காரியத்தை யறியாமல் அவனைப்போலவே பொய்சொல்ல, அவளும் அவருடைய பாதங்களுக்கு முன்பாக கீழேவிழுந்து செத்தாள். இவ்விஷயம் விசுவாசிகளெல்லோருக்கும் மிகுந்த பயங்கரத்தை யுண்டாக்கினது.

வினா.—அனனியாசுடையவும் சபிராளுடையவும் சரித்திரத்தைச் சொல்லு?

# 103-ம் அதிகாரம்

## அப்போஸ்தலர்கள் சிறைச்சாலையில் போடப்பட்டது

அப்போஸ்தலர்கள் புதுமைகளைச் செய்துகொண்டிருக்கும்போது, சுற்றுக்கிராமங்களிலுள்ள நோயாளிகளையும், அசுத்த ஆவேசமானவர்களையும் சனங்கள் எருசலேமுக்குக் கொண்டுவர, அப்போஸ்தலர்கள் அவர்களை சொஸ்தப்படுத்துவார்கள். இராயப்பர் மற்ற அப்போஸ்தலர்களைவிட சிறந்தவராகவே எண்ணப்பட்டுவந்தார். அவர் வீதிகளில் போகும்போது அவருடைய நிழலானது நோயாளிகளின்மேல் பட்டமாத்திரத்தில் சொஸ்தமடைவார்கள்.

இப்படியிருக்க, யூத ஆசாரியர்களுடைய அதிகாரத்தால் இராயப்பரையும் அருளப்பரையும் பிடித்து சிறைச்சாலையில் அடைத்தார்கள். ஆனால் இரவில் ஓர் தேவதூதன் சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்து அவர்களை வெளியேற்றி, தேவாலயத்துக்குப்போய் போதிக்கும்படி கட்டளையிட்டார்.

மறுநாள் காலையில் அப்போஸ்தலர்களை நியாய சபைக்குக்கொண்டுவரும்படி உத்தியோகஸ்தர் சிறைச்சாலையண்டை போனபோது, அது பத்திரமாய் பூட்டப்பட்டு, சேவகரால் காக்கப்பட்டிருக்க, அதற்குள் அடைபட்டிருந்தவர்கள் இல்லாததைக்கண்டு சபையோரெல்லாருங் கலக்கங்கொண்டார்கள்.

சற்று நேரத்திற்குப்பிறகு ஒருவன் வந்து, இரா
யப்பரும் அருளப்பரும் தேவாலயத்திற் போதித்துக்
கொண்டிருக்கிறார்களென்று அவர்களுக்குச் சொல்
னான். அப்போது சேர்வைக்காரன் சேவகர்களோடே
போய் பலவந்தமின்றி யவர்களைக் கூட்டிக்கொண்டுவ



பிரதான ஆசாரியன் எழுந்து, தங்களுடைய கட்டளையைமீறி பிரசங்கித்துக்கொண்டிருந்ததற்காக வசைச்சொற்களால் அப்போஸ்தலர்களை நிந்தித்தான். அப்போஸ்தலர்களோ: “நாங்கள் சர்வேசுரனுக்குமாத்திரம் கீழ்ப்படிவோம். நீங்கள் சிலுவையில் அறைந்து கொன்ற சேசுநாதரை நமது பிதாக்களின் கடவுள் உயிர்ப்பித்திருக்கிறார்” என்று சொன்னார்கள்.

இதைக் கேட்ட ஆசாரியர்கள் கோபமூர்க்கத்தால் தங்கள் பற்களை நெறநெறெனக் கடித்துக்கொண்டு அவர்களை யெப்படி கொன்றுவிடக்கூடுமென யோசித்தார்கள். ஆனால் சகலரிலுஞ் சங்கைபொருந்தியவனும், மகா சங்கத்தில் ஒருவனுமாகிய கமாலியேலென்னும் பரிசேயனொருவன் கூட்டத்தில் எழுந்து “இம்மனிதரைச் சற்று வெளியே கொண்டுபோங்கள்” எனக் கட்டளையிட்டான். அவர்கள் போனபிறகு அவன் மூப்பர்களைப் பார்த்து “இஸ்ராயேலர்களே! நீங்கள் செய்யப்போகிறதை நன்றாய் யோசித்துப்பாருங்கள். ஏனெனில், இது மனிதராலுண்டாயிருந்தால் அழிந்துபோம். சர்வேசுரனாலுண்டாயிருக்குமேயாகில் அதையழிக்கமாட்டீர்கள்” என்றான். யூதருக்கோ அவ்வார்த்தைகள் பிரியப்படவில்லை. ஆதலால் அவர்கள் அப்போஸ்தலர்களை வரவழைத்து, அவர்களை அடித்து, சேசுநாதருடைய நாமத்தினால் பரிச்சேதம் பேசாதிருக்க அவர்களுக்கு கட்டளையிட்டார்கள். அவர்களோவென்றால், சேசுநாதருடைய நாமத்தைப்பற்றி அவமானப்படும் பாக்கியந் தங்களுக்குக் கிடைத்ததினிமித்தம் சந்தோஷித்து ஆலோசனைக் கூட்டத்தாருடைய சமுகத்தைவிட்டுப் புறப்பட்டு, எந்நாளும் தேவாலயத்திலும் வீடுகளிலும் ஓயாமல் போதித்தும் சேசுக்கிறீஸ்துநாதரைப் பயிரங்கமாகக் கொண்டாடியும்வந்தார்கள்.

வினா.—அப்போஸ்தலர்கள் செய்துகொண்டுவந்ததென்ன? இராயப்பருடைய நிழலைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? இராயப்பரையும் அருளப்பரையும் என்ன செய்தார்கள்? அவர்கள் விடுதலையானதெப்படி? சபைக்கூட்டத்தார் என்ன செய்தார்கள்? இராயப்பர் சொன்ன மறுமொழியென்ன? கமாலியேல் சொன்னதென்ன? அப்போஸ்தலர்களை என்ன செய்தார்கள்? பிறகு இவர்கள் நடந்தவிதமெப்படி?

---

## 104-ம் அதிகாரம்

### அர்ச். முடியப்பர் முதல் வேதசாட்சி

அந்நாட்களில் விசுவாசிகளுடைய தொகை பெருகவே அநாதின தர்ம பராமரிப்பைப்பற்றி ஓர் முறைப்பாடுண்டாயிற்று. அப்போஸ்தலர்கள் அதைக் கண்டு: "சகோதரர்களே! நாங்கள் சர்வேசுரனுடைய வாக்கியம் போதிக்கிறதைவிட்டுப் பந்திகளிற் பணிவிடைசெய்வது நியாயமல்ல. ஆகையால் அவ்வலுவலுக்குத் தக்கவர்களை ஏற்படுத்தும்படிக்கு இஸ்பிரீத்துசாந்துவினாலும் ஞானத்தினாலும் நிறைந்து நல்ல பெயர்பெற்ற ஏழு பேரை உங்களுக்குள்ளே பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள். நாங்கள் அவர்கள்மேல் கரங்களை நீட்டி, தியக்கோன் பட்டமளிப்போம். மேலும் அவர்கள் திருச்சபையின் லௌகீக காரியங்களை கவனிப்பார்கள்; நாங்களோவென்றால் செபத்திலுந் தேவ வாக்கியத்தைப் பிரசங்கிப்பதிலும் இடைவிடாத அலுவலாயிருப்போம்" என்று சொல்ல விசுவாசிகள் அதற்குச் சம்மதித்து, பிலிப்பு, முடியப்பர் உட்பட ஏழு பேரைத் தெரிந்துகொண்டார்கள்.



இப்படியாய் நியமனமடைந்த முடியப்பர் ஜனத்துக்குள்ளே பெரிதான அற்புதங்களையும் அதிசயங்களையுஞ் செய்துகொண்டுவருவார். மேலும் அவருடைய வாய்ச்சாலகத்தை யெதிர்க்க எவராலும் கூடாமையாயிருந்தது. அவர் மோயீசனுக்குஞ் சர்வேசுரனுக்கும் விரோதமான தூஷண வார்த்தைகளை வசனித்ததாக யூதர் அவர்மேல் குற்றஞ்சாட்டி, அவரைப் பிடித்து ஆலோசனை சங்கத்துக்குமுன் கூட்டிவந்தார்கள். அப்போது அவருடைய முகம் ஓர் சம்மனசின் முகத்தைப் போல ஒளிர்கிறதை எல்லோருங் கண்டார்கள்.

அப்போது பிரதான ஆசாரியன் எழுந்து, உன்மேல் சுமத்தப்பட்ட குற்றம் மெய்தானோவென்று அவரைக் கேட்டான். முடியப்பர் அதற்கு மறுமொழியாக, கிறீஸ்துவ ஏற்பாட்டுக்கு முன்னோடியாக விருந்த யூத சபையின் சரித்திரத்தை விவரித்துச்சொல்லி, யூதருடைய அவிசுவாசத்தால் இஸ்பிரீத்துசாந்துவை யெதிர்த்து மேசியாவைச் சிலுவையிலறைந்து கொன்ற பாதகத்தைப்பற்றி அவர்களைக் கடிந்துபேசினார்.

இவைகளைக் கேட்கையில் இவர்களிருதயம் பிளந்தாற்போலச் சினந்து, அவருக்கு விரோதமாய்ப் பற்களைக் கடித்துக்கொண்டிருந்தார்கள். மேலும் அவர் தமது கண்களை மேலே உயர்த்தி: "இதோ பரமண்டலங்கள் திறந்திருக்கிறதையும், மனுமகன் சர்வேசுரனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையுங் காண்கிறேன்" என்று உரத்த சத்தமாய்ச் சொன்னார்.

அப்போது அவர்கள் பேரொலியாய் ஆர்ப்பரித்து, தங்கள் காதுகளை மூடிக்கொண்டு, ஒருமிக்க அவர்பேரில் வேகமாய்ப் பாய்ந்து அவரைக் கல்லாலெறிந்து கொல்லும்படி பட்டணத்துக்கு வெளியே தள்ளிக்

கொண்டுபோனார்கள். மேலும் கிட்ட நின்றவர்கள், சவுலென்னும் (பிற்காலத்தில் பேர்போனவராகிய அர்ச். சின்னப்பரான) ஓர் வாலிபனுடைய பாதங்களில் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, முடியப்பரைக் கல்லாலெறிந்துகொண்டிருக்கையில் அவர்: "ஆண்டவரே! இப்பாவத்தை இவர்கள்மேற் சுமத்தாதேயும்" என்று அவர்களுக்காகப் பரிந்துபேசி, ஆண்டவரில் நித்திரைகொண்டார்.

புத்தி.—யூதர் சர்வேசுரனுக்குப் பயங்கரமான கணக்கு கொடுக்கவேண்டியவர்களா யிருக்கிறார்கள். அவர்கள் தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுத்தி, இரட்சகரைச் சிலுவையில் அறைந்து அப்போஸ்தலர்களைக் கொலைசெய்துவந்தார்கள். ஆனால் "வேதசாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் விதை" என்னும் பழமொழிப்படி, அவர்கள் எவ்வளவு கொடுமையாய்த் திருச்சபையைத் துன்பப்படுத்தினார்களோ அவ்வளவு துரிதமாய்த் திருச்சபையும் பரவலாயிற்று.

வினா.—என் தியாக்கோன்களைத் தெரிந்துகொண்டார்கள்? அவர்களுடைய தொழிலென்ன? முடியப்பர் என்ன செய்தார்? அவர் ஆலோசனைக்கூட்டத்தில் என்ன சொன்னார்? அவர் சொன்னதை யூதர் கேட்டுக்கொண்டிருந்த விதமெப்படி? முடியப்பரை யென்ன செய்தார்கள்? சவுலின் பாதங்களில் வைக்கப்பட்டதென்ன? திருச்சபைக்குச் செய்யப்படுந் துன்பங்களால் விளையும் பயனென்ன?

## 105-ம் அதிகாரம்

### உறுதிப்பூசுதல், எத்தியோப்பியன் ஞானஸ்நானம்பெற்றது

முடியப்பருடைய மரணத்தோடு எருசலேமிலுள்ள திருச்சபைக்கு விரோதமாக ஓர் பெருங் கலகமுண்டாயிற்று. கொடிய வேதவிரோதிகளில் ஒருவ



ராகிய சவுலென்பவர் ஓய்வின்றி வீடுவீடாய் நுழைந்து, ஸ்திரீ புமான்களை நீதியாசனத்திற்கு முன்னிழுத்துச் சிறையிலடைத்தார். அனேகர் எருசலேமை விட்டு யூதேயா சமாரியா தேசங்களுக்கு ஓடிப்போனார்கள். அப்படி ஓடினவர்கள் போகுமிடமெல்லாம் சர்வேசுரனுடைய வாக்கியத்தைப் பிரசங்கிப்பார்கள். தியாக்கோனாகிய பிலிப்பென்பவர் சமாரியா நகரத்துக்கு வந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்து அற்புதங்களைச் செய்ய அநேகர் மனந்திரும்பினார்கள்.

சமாரியா நகரத்தார் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்களென்று எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, இராயப்பரையும் அருளப்பரையும் அவ்விடத்துக்கனுப்ப, அவர்கள் வந்து செபஞ்செய்து மனந்திரும்பினவர்களின்மேல் தங்கள் கரங்களை நீட்டவே, ஞானஸ்நானம் பெற்றவர்களெல்லோரும் இஸ்பிரீத்துசாந்துவைப் பெற்றுக்கொண்டார்கள்.

புத்தி.—இராயப்பரும் அருளப்பரும் சமாரியாவுக்குச் செய்த இப்பிரயாணத்தால் உறுதிப்பூசுதலென்னும் தேவத்திரவிய அநுமானத்தை அப்போஸ்தலர்களும் அவர்களுடைய பதிலாளிகளாகிய மேற்றிராணிமார்களும் மாத்திரம் கொடுக்கக்கூடுமென்று நன்றாய் விளங்குகிறது. பிலிப்பென்பவர் தியக்கோனாக இருந்ததைப்பற்றி வேதத்தைப் பிரசங்கித்து ஞானஸ்நானம்மாத்திரங் கொடுத்துவந்தார்.

பிலிப்பென்பவர் சமாரியாவிலிருக்கும்போது ஆண்டவருடைய தூதன் அவரோடு பேசி, நீ எழுந்து தென்திசைக்கு நேராய் எருசலேமிலிருந்து காசாவுக்குப் போகிற வழியே போவாயாகவென்று சொல்ல, பிலிப்பும் அவருடைய கட்டளைப்பிரகாரம் வழிநடந்து போனார். அப்போது எத்தியோப்பிய இராக்கினியின்

உத்தியோகஸ்தனும், அவளுடைய பொக்கிஷக்காரனுமான அண்ணகன் பண்டிகைக்காக எருசலேமுக்கு வந்து திரும்புகையில், தன் இரதத்தின்மேல் உட்கார்ந்து இசையாசென்னும் தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக்கொண்டிருக்க பிலிப்பு அவனிடம் போய்ச் சேர்ந்தார்.

இஸ்பிரீத்துசாந்துவின் ஏவுதலின்படி பிலிப்பு அவனை நெருங்கிப்போய்: "நீர் வாசிக்கிறவைகளைக் கண்டுபிடிக்கிறீரோ" என்று வினவினார். அதற்கவன் "ஒருவன் எனக்கு விவரிக்காவிட்டால் இது யென்னாலே ஏலுவதெப்படி?" என்க, பிலிப்பு இரதத்திலேறி உட்கார்ந்து சேசுநாதரையும் சுவிசேஷத்தையும் பற்றிப் பேசத் தொடங்கினார்.

பிலிப்பென்பவர் அவனுக்குச் சொன்ன பல விஷயங்களுள் ஞானஸ்நானத்தைப்பற்றியுஞ் சொன்னார். பின்னும் அவர்கள் பேசிக்கொண்டு சவாரிபோகையில் தண்ணீருள்ள ஓரிடத்துக்குவந்து சேரவே, அண்ணகன் பிலிப்பைப் பார்த்து: "இதோ தண்ணீர் இருக்கிறது. நான் ஞானஸ்நானம் பெறத் தடையென்ன?" என்றான். பிலிப்போவெனில், "நீர் முழு இருதயத்தோடு விசுவசித்தால் தடையில்லை" என்றார். அதற்கு அண்ணகன் சேசுக்கிறீஸ்துநாதரை விசுவசிக்கிறேனென்று சொன்னதின்மேல் ஞானஸ்நானம் பெற்றான்; பின்னும் அவன் சந்தோஷமாய்த் தன் வழியே செல்ல, ஆண்டவருடைய இஸ்பிரீத்துசாந்துவின் செயலால் பிலிப்பு மறுபடியும் முன்னிருந்த ஸ்தலத்திற்கு கொண்டுபோகப்பட்டார்.

வினா.—முடியப்பர் மரணமடைந்தபிறகு யெருசலேமில் என்ன சம்பவித்தது? வேதவிரோதியாயிருந்ததார்? சமாரியாவில் பிரசங்கித்ததார்? அப்போஸ்தலர்கள் உறுதிப்பூசுதல் கொடுத்தார்களென்று உனக்கு எப்படித் தெரியும்? பிலிப்புடையவும் அண்ணகனுடையவும் சரித்திரத்தைச் சொல்லு?



---

## 106-ம் அதிகாரம்

### அர்ச். சின்னப்பர் மனந்திரும்பினது

முடியப்பர் வேதசாட்சியானபின் சவுல் கிறீஸ்துவர்களை விரோதித்து அவர்களை யழித்துவிடத் தீர்மானித்து, தாமஸ்கு பட்டணத்தில் கிறீஸ்துநாதரைப் பற்றிப் பிரசங்கிப்பவர்களையும், அவ்வேதத்திலுட்பட்டவர்களையும் பிடித்துக்கொண்டுவரத் தனக்கு அதிகாரப் பத்திரங் கொடுக்கும்படியாய்ப் பிரதான ஆசாரியரைக் கேட்டார்.

அவர் ஷை அதிகாரத்தை யடைந்து, பிரயாணப்பட்டு தமாஸ்கு பட்டணத்துக்குச் சமீபமாய் வரும்போது, சடுதியில் வானத்தினின்று ஓர் வெளிச்சம் அவரைச் சூழ்ந்துகொள்ள, அவர் தரையில் விழுந்தார். மேலும் "சவுலே! சவுலே! ஏனென்னை யுபத்திரவப்படுத்துகிறாய்?" என்னுமோர் குரற்சத்தங் கேட்டு: "ஆண்டவரே! நீரார்?" என்று கேட்க "நீ யுபாதிக்கிற சேசு நாம்தாமே" என்றார்.

ஆதலால் அவர் நடுநடுங்கிப் பிரமித்து! "ஆண்டவரே, நான் செய்யும்படி உமக்குச் சித்தமாயிருக்கிறதென்ன?" என்று கேட்டார். அதற்கு சேசுநாதர், "நீ எழுந்து நகரத்துக்குள் பிரவேசி; பின்னும் நீ செய்யவேண்டியதேதென்று அங்கே உனக்குச் சொல்லப்படும்" என்றார். அப்போது சவுல் தரையினின்

றெழுந்து கண்கள் திறந்திருந்தும் ஒன்றையுங் காணாததால், அவருடைய துணைவர் அவரைத் தமாஸ்கு நகரத்துக்குக் கைலாகாய் கூட்டிக்கொண்டுபோக, அங்கு யூதாவின் வீட்டில் மூன்று நாள்பரியந்தம் புசியாமலும் பானஞ்செய்யாமலுமிருந்தார்.

அப்போது அனனியாவென்னும் ஓர் சீஷர் தமாஸ்கு நகரில் வாசஞ்செய்துகொண்டிருந்தார். ஆண்டவர் அவருக்குத் தோன்றி, "நீ சவுலிடஞ் சென்று உன் கரங்களை அவர்மேல் நீட்டுவாயாக" என்று கட்டளையிட்டார். அவ்விதமே அனனியாஸ் சவுலண்டைபோய் அவரைத் தொட்டவுடனே அவரது நேத்திரங்களினின்று செதில்களைப்போன்ற சிறு கிருமிகள் தாழ உதிரவே, அவரது கண்களும் பார்வையடைந்தன. உடனே யவர் ஞானஸ்நானம் பெற்றுச் சின்னப்பர் என்னும் நாமதேயம் அடைந்தார்.

அதன்பின் அவர் சேசுநாதருடைய அதிமிக தோத்திரத்தினிமித்தம் வெகு உற்சாகத்தோடு உழைப்பதைச் சகலருங்கண்டு ஆச்சரியமுற்றார்கள். ஆயினும் யூதர்கள்மாத்திரம் அவர்மட்டில் தீராப் பகைகொண்டு, அவரை எவ்விதமேனுங் கொன்றுவிடவேணுமென்று பலமுறை முயன்றும், சர்வேசுரன் அவரை அற்புதமேரையாகக் காப்பாற்றி இரட்சித்தார்.

புத்தி.—சவுலின் சரித்திரத்தில், யாக்கோபு தன் குமாரனாகிய பெஞ்சமீனுக்குச் சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறியது. எவ்வாறெனில்: "பெஞ்சமீன் கொள்ளையிடும் ஓநாயாவான்; காலையில் அவன் தன் இரையைத் தின்று, மாலையில் தன் கொள்ளையைப் பங்கிடுவான்" என்றபடியே சவுல் பெஞ்சமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவராகையால், அவர் காலைக்கு சமானமான தமது வாலப்பிராயத்தில் திருச்



சபையைத் துன்பப்படுத்தி, மாலை வேளைபோன்ற தம் முதிர் வயதில் யூதரையும் அஞ்ஞானிகளையும் ஒன்றாகக் கூட்டி, அவர்களைக் கிறீஸ்துநாதருடைய பாதங்களில் விலையுயர்ந்த மாணிக்கங்களாகக் காணிக்கை சமர்ப்பித்தார்.

வினா.—சவுலைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? அவர் தமாஸ்கு நகருக்குப் போகையில் வழியில் சம்பவித்ததென்ன? சவுலுக்கு யார் ஞானதீட்சை யளித்தார்? ஞானதீட்சை யடைந்தபிறகு சவுல் நடந்த விதமெப்படி? சவுலைப்பற்றி நிறைவேறிய தீர்க்கதரிசன மெது?

---

## 107-ம் அதிகாரம்

### இராயப்பர் யூதேயாவின் கிறீஸ்துவர்களைச் சந்தித்ததும் —கோர்னேலியுவென்பவன் ஞானஸ்நானம் பெற்றதும்

வேதகலகங்கள் சற்றே அமர்ந்ததன்பின், அர்ச். இராயப்பர் யூதேயாவிலுள்ள பற்பல சபையாரைச் சந்தித்து, சனங்களுக்குப் பிரசங்கஞ்செய்து அவர்களை வேத விசுவாசத்தில் உறுதிப்படுத்திவந்தார்.

இம்மேரையாய் அவர் ஊர்களைச் சுற்றி கிறீஸ்துவர்களைச் சந்தித்துவருங்காலையில், லித்தா நகரில் எட்டு வருஷகாலமாகக் கட்டிலிற் படுகிடையாய்க்கிடந்த திமிர்வாதக்காரனான ஏநேயாஸைச் சொஸ்தப்படுத்தினார். ஜோப்பே நகரில் நற்கிரியைகளாலுந் தருமங்களாலும் நிறைந்தவளாகிய தாபீத்தாள் உயிர்துறக்க, அவர் அவளை உயிரோடு எழுப்பினார். இப்புதுமைகள், அநேகர் மனந்திரும்பவும், அதனால் கிறீஸ்து வேதத்தின் மாட்சிமை யெங்கும் பிரபலியமாகவும் காரணமாயின.

இராயப்பர் ஜோப்பே நகரிலிருக்கையில், கொர்னேலியுவென்னும் ஓர் மனிதன் செசாரையா நகரிலி

ருந்தான். ஒருநாள் கொர்னேலியு ஜெபித்துக்கொண்டிருக்கையில் ஓர் தேவதூதன் அவனுக்குத் தோன்றி, "ஜோப்பே நகருக்கு ஆளனுப்பி இராயப்பரை உன்னிடம் வரவழைத்தால், நீ செய்யவேண்டியதைப்பற்றி அவர் உனக்குச் சொல்வார்" என்று வசனித்தார். இதைக் கேட்ட ஷை கொர்னேலியு உடனே தன்னூழியரை இராயப்பரிடம் அனுப்பினான்.

மேற்படி ஊழியர் ஜோப்பே நகருக்குச் சமீபித்து வருகையில் செபத்தியானத்திலிருந்த இராயப்பரும் ஓர் காட்சி கண்டார். அக்காட்சியில்: வானந் திறக்கப்படுவதையும், அதினின்று பெரிய துப்பட்டி போன்ற ஓர் பாத்திரம் பூமியில் விடப்படுவதையும், அதனில் பூமியிலுள்ள சகலவகை நாற்கால் மிருகங்களும், ஊர்வன பறப்பனவாகிய ஜெந்துக்களும் நிறைந்திருப்பதையுங் கண்டார். அன்றியும் ஓர் குரலொலி: "இராயப்பா, நீ எழுந்து அவைகளை அடித்துப் புசி" என்று சப்தித்தது.

இராயப்பரோவென்றால்: "ஆண்டவரே! இது ஆகாதிருக்கக்கடவது; ஏனெனில், தீட்டும் அசுத்தமுமானதொன்றையும் நான் ஒருபோதும் புசித்ததில்லையே" என்றார். மீளவும் அக்குரலொலி: "சர்வேசுரன் சுத்தமாக்கினதை நீ யசுத்தமென்று சொல்லாதே" எனச் சப்தித்தது. இவ்வண்ணம் மும்முறை சம்பவித்துக் காட்சி மறையவே, இராயப்பர் தாங் கண்ட காட்சியைப்பற்றித் தம்முள்ளத்தில் ஐயப்பட்டுக்கொண்டிருக்கையில் இஸ்பிரீத்துசாந்துவானவர் அவருள்ளத்தில்: "இதோ மூன்று மனிதர் உன்னைத் தேடுகிறார்கள்; எழுந்து அவர்களோடு போ" என வசனித்தார்.



மறுநாள் இராயப்பர் கொர்னேலியுவின் ஊழியரோடு செசாரையா நகருக்குப் போனார். அப்போது கொர்னேலியு தான் கண்ட தரிசனத்தை யவருக்கறிவிக்க, இராயப்பருந் தாம் கண்ட காட்சியின் அருத்தத்தை யறிந்துகொண்டு, கிறீஸ்துநாதர் சகல மனிதருக்காகவும் மரணமடைந்தபடியால், யூதரையும் அஞ்ஞானிகளையுந் திருச்சபையில் சேர்த்துக்கொள்ள இனித் தடங்கலில்லையென உணரலானார்.

ஆகையால், சேசுநாதர் சிலுவையிலறையுண்டு, மரித்தோரினின்று திரும்ப உயிர்த்தெழுந்ததையும், அவர்மூலமாய் சகல மனிதரும் ஈடேறவேண்டியதையும்பற்றி இராயப்பர் அந்நகரில் பிரசங்கிக்கத் தொடங்கினார். அவர் இவ்வண்ணம் ஷை சம்பவங்களைப்பற்றி அந்நகரவாசிகளுக்குப் பிரசங்கித்துக்கொண்டிருக்கையில், அப்பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்த எல்லோர்பேரிலும் இஸ்பிரீத்துசாந்துவானவர் இறங்கவே, அப்போஸ்தலர் ஆச்சரியப்படத்தக்கவிதமாய் அவர்கள் பற்பல பாஷைகளைப் பேச ஆரம்பித்தார்கள். இராயப்பர் இதைக்கண்டு அவர்களெல்லோருக்கும் ஞானதீட்சை யளிக்கத் தஞ்சீஷருக்குக் கட்டளையிட்டார். இவர்கள்தான் முதல்முதல் திருச்சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட அஞ்ஞானிகள்.

அன்றுமுதல் அப்போஸ்தலர்கள் யூதருக்குமாத்திரமல்ல, அஞ்ஞானிகளுக்கும் வேதத்தைப் போதித்து வந்தார்கள். அர்ச். சின்னப்பர் அஞ்ஞானிகளுக்கே முக்கிய அப்போஸ்தலரானார். அந்தியோக்கியாபுரியில் மனந்திரும்பினவர்கள் கிறீஸ்துவர்கள் அதாவது கிறீஸ்துவைப் பின்செல்லுகிறவர்கள் என்ற பெயரால் அழைக்கப்பட்டார்கள்.

புத்தி.—சேசுநாதர் மனுக்குலத்திற்காக மரணமடைந்ததால், ஏழு வருஷத்திய பஞ்சகாலத்தில் சூசையப்பர் எஜிப்தியருடன் இஸ்ராயேலரையும் அன்னியரையும் போஷித்துவந்ததுபோல், யூதரும் அஞ்ஞானிகளும் சேசுக்கிறீஸ்துநாதருடைய பாடுகளிற் பங்கடைகிறார்கள். யூதர் மனுக்குலத்தில் சொற்பக் கூட்டத்தாராயும், சர்வசாதாரணமாக அடங்காக்குணமுடையவர்களாயுமிருந்ததினால் கிறீஸ்துவ சபையானது ஆரம்பமுதற்கொண்டு அஞ்ஞானிகளிடத்தினின்றே உற்பத்தியானதென்று சொல்லலாம்.

வினா.—இராயப்பர் எங்கே போனார்? அவர் லித்தா நகரிலும் ஜோப்பே நகரிலும் என்ன செய்தார்? கொர்னேலியு திருச்சபையில் எப்படிச் சேர்த்துக்கொள்ளப்பட்டான்? திருச்சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட முதல் அஞ்ஞானிகள் யார்? அஞ்ஞானிகளுக்கு முக்கிய அப்போஸ்தலராயிருந்தவர் யார்? எவ்வூராருக்கு கிறீஸ்துவர்களென்கிற பெயர் முதல்முதல் இடப்பட்டது?

---

## 108-ம் அதிகாரம்

### அர்ச். இராயப்பர் சிறைப்பட்டது

கிறீஸ்து பிறந்த 45ஆம் கொர்னேலியு மனந்திரும்பிய பிறகு இராயப்பர் எருசலேமுக்குத் திரும்பினார். ஏறக்குறைய 44ஆம் அக்கிரிப்பா என்ற ஏரோதரசன் கிறீஸ்துவர்களைத் துன்பப்படுத்தத் துவக்கி, அருளப்பருடைய சகோதரராகிய யாகப்பரைக் கொலைசெய்வித்து, இராயப்பரைச் சிறையிலடைப்பித்தான். ஆனால் திருச்சபையின் தலைவராகிய இவருக்காக கிறீஸ்துவர்களனைவரும் சர்வேசுரனைப் பிரார்த்தித்துவந்தார்கள்.



இராயப்பர் தண்டனைப்படப்போகும் நாளுக்கு முன்னாளிரவு அவர் சங்கிலிகளாற் கட்டப்பட்டு, இரு போர்ச்சேவகருக்கிடையில் நித்திரைசெய்ய, வாசலுக்கு முன்னுங் காவற்காரர் சிறைக்கூட்டத்தைக் காவல் செய்துகொண்டிருந்தார்கள். அவ்விரவு சடுதியில் ஓர் தேவதூதன் தோன்றவே, மோக்ஷப்பிரகாசத்தால் அக்காவற்கூடம் நிரப்பப்பட்டதுடன், தேவதூதன் இராயப்பரைத் தட்டி எழுப்பி, "எழுந்து உன் பாதரக்ஷைகளைத் தொடுத்துக்கொண்டு என்னைப் பின்செல்" என்றார். இராயப்பர் அதற்கு உடனே கீழ்ப்படிந்தாராயினும் தாமொரு காட்சியைக் காணுவதாக நினைத்திருந்தார். அப்படியிருக்க, அவர்கள் முதற் காவலையும் இரண்டாங் காவலையுங் கடந்து ஒரு இருப்புக் கதவினிடம் வந்தபோது, அது தானாய்த் திறந்துகொள்ள அவர்கள் நகரத்துள் பிரவேசித்தார்கள். பிரவேசித்தவுடனே காணப்பட்ட தேவதூதன் அதரிசனமானார்.

அப்போது இராயப்பர் மனந்தெளிந்து, சர்வேசுரன் ஒரு தேவதூதனைக்கொண்டு தம்மை ஏரோதனது கொடுமைக்குத் தப்புவித்தாரெனக்கண்டு, அவருக்கு நன்றியறிந்தவராகி, அனேகர் ஒன்றுசேர்ந்து செபஞ்செய்துகொண்டிருந்த மார்க்குவின் வீட்டுக்குவந்து கதவைத்தட்ட, உரோதை அல்லது உரோஸ் என்னும் ஓர் சிறு பெண் கதவைத் திறக்கவந்தாள். வந்தவள் இராயப்பருடைய குரற்சத்தத்தைக் கேட்டு, சந்தோஷத்தினால் உள்ளேயோடி, சிறைக்கூடத்தில் அடைபட்ட இராயப்பர் கதவண்டை நிற்கிறாரென்று, அங்குள்ளவர்களுக்கு அறிவித்தாள். ஆயினும் அவர்கள் அவளது வார்த்தையை உடனே நம்பவில்லை. இராயப்பரோ ஓயாமல் கதவைத் தட்டிக்கொண்டிருந்தமையால்,

கடைசியாய் கதவைத் திறக்கவே, எல்லோருந் திருச்சபையின் தலைவரைக்கண்டு ஆச்சரியமுற்றார்கள். இராயப்பர் தாம் சிறைச்சாலையினின்று விடுவிக்கப்பட்டவிதத்தை அவர்களுக்குச் சொன்னபோது, எல்லோருஞ் சர்வேசுரனைத் துதித்து தோத்தரித்தார்கள்.

பொழுது விடிந்தபிறகு இராயப்பர் எப்படித் தப்பித்துக்கொண்டாரென்றும், எங்கே போனாரென்றும் தெரியாதபடியால் போர்ச்சேவகர் வெகுவாய்ப் பயந்து அஞ்சினார்கள். மேலும் எரோதன் போர்ச்சேவகரை விசாரணைசெய்து. அவர்களைக் கடுமையாய் தண்டித்தான்.

இது நடந்த சிலதினங்களுக்குப்பிறகு செசாரையா நகரிலிருந்து சில ஸ்தானாதிபதிகள் எரோதனிடம் வந்தார்கள். அப்போது ஜனங்கள் அவனை நோக்கி "நீர் தேவனைப்போலப் பேசுகிறீர்" என்று வஞ்சகமாய்க் கூற, எரோதன் இவ்வஞ்சக வார்த்தையால் மகா கர்வங்கொள்ளத் துவக்கினான். அக்ஷணமே ஓர் தேவதூதனால் அவனுக்குப் பயங்கர வியாதியுண்டாகி, அதனால் அவன் வாக்குக்கெட்டாத வாதைப்பட்டு அவலமாய்ச் செத்தான். மனிதருடைய கர்வத்தைச் சர்வேசுரன் எவ்வண்ணந் தண்டிக்கிறாரென்பதற்கு இது ஓர் அத்தாட்சியாமே.

வினா.—எரோதன் என்ன செய்யத் துவக்கினான்? யாரைக் கொலைசெய்தான்? சிறைக்கூடத்தில் அடைக்கப்பட்டதார்? இராயப்பர் எப்படி விடுவிக்கப்பட்டார்? மாற்குவின் வீட்டில் என்ன சம்பவித்தது? போர்வீரரை என்ன செய்தார்கள்? எரோதன் எப்படிச் செத்தான்?

---



# 109-ம் அதிகாரம்

## அர்ச். சின்னப்பர் வேதம் போதிக்கும்படி செய்த முதற் பிரயாணம்

அர்ச். சின்னப்பர் புதுமையாக மனந்திரும்பினபிறகு மிகுந்த சந்தோஷத்தோடு அப்போஸ்தலத் தொழிலுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு அர்ச். இராயப்பரால் ஆசீர்வதிக்கப்பட்டார். அவர் கொஞ்சகாலம் அந்தியோக்கியாபுரியில் பிரசங்கித்துக்கொண்டிருந்தார். ஆனால் இஸ்பிரீத்துசாந்துவின் ஏவுதலால் பர்னபாவுடன் அஞ்ஞானிகளுக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்க அனுப்பப்பட்டார். சின்னப்பர் தாம் போகும் இடங்களிலுள்ள யூதர்களுக்கே முந்தமுந்த உபதேசித்துவந்தார். அவர்கள் தம்முடைய போதனையை மறுத்தபோதுமாத்திரம் அஞ்ஞானிகள்பக்கந் திரும்புவார். அதனால் இவர்களில் அநேகர் மனந்திரும்பினார்கள். யூதர்கள்மாத்திரம் தங்களுக்கு அளிக்கப்பட்ட வரத்தை நிராகரித்தமையால், போக்குச்சொல்ல ஏதுவில்லாமல் கைவிடப்பட்டார்கள்'

அர்ச். சின்னப்பரும் பர்னபாவும் அந்தியோக்கியாபுரியைவிட்டுச் சிப்புரு தீவுக்குக் கப்பலேறினார்கள். அவர்கள் அவ்விடத்திற் சேரவே, செர்ஜியுஸ் என்னும் உரோமை புறோகொன்சுல் அதிகாரி சர்வேசுரனுடைய வாக்கியத்தைக் கேட்கும்படி அவர்களைத் தன்னிடம் வரவழைத்தான். ஆனால் ஷ அதிகாரியின் வீட்டிலிருந்த சூனியக்காரனான எலிமாசென்னும் ஓர் யூதன் செர்ஜியுஸை விசுவாசத்தினின்று விலக்கப் பிரயாசைப்பட்டான்.

அர்ச். சின்னப்பர் எலிமாசின் வஞ்சகத்தைக் கண்டுபிடித்து இஸ்பிரீத்துசாந்துவால் ஏவப்பட்டவ

ராய், எலிமாசை நோக்கி "நீ ஆண்டவருடைய வழியைத் தடுத்தமையால் சிலகாலங் குருடனாயிருப்பாய்" என்று சொன்னக்ஷணமே அவன் குருடனானான். புரோகொன்சுல் அதிகாரி இதைக்கண்டு உண்மையை விசுவசித்து ஞானஸ்நானம் பெற்றான்.

சின்னப்பரும் பர்னபாவுஞ் சிப்புரு தீவிலிருந்து சின்ன ஆசியாவுக்குப் பிரயாணப்பட்டார்கள். அவர்கள் பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோக்கியாபுரிக்குவந்து யூதருக்கும் அஞ்ஞானிகளுக்கும் உற்சாகத்தோடு பிரசங்கிக்க, அநேகர் மனந்திரும்பினார்கள். இவ்விடத்தில் யூதர் கோபங்கொண்டு, சின்னப்பரை எதிர்த்துப் பேச பெருங்கூட்டமாய் வந்தார்கள். ஆனால் அவர் அவர்கள் பக்கமாய்த் திரும்பி "முந்த உங்களுக்குப் பிரசங்கிக்கவேண்டியிருந்தது. ஆனால் நீங்கள் இப்போது சர்வேசுரனுடைய வாக்கியத்தைத் தட்டிவிட்டபடியால் இதோ அஞ்ஞானிகளிடந் திரும்புகிறோம்" என்று வசனித்தார்.

யூதர்கள் இடைவிடாமல் சின்னப்பரையும் பர்னபாவையும் துன்பப்படுத்தினபடியால், அவர்கள் ஆயாசமுற்று தங்கள் பாதங்களின் தூசியைத் தட்டிவிட்டு, அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு, நகரங்கள்தோறும் போய்ப் பிரசங்கித்து அநேகரைக் கிறீஸ்துவர்களாக்கினார்கள்.

லிக்கவோனியாவின் நகரமாகிய லிஸ்திராவில் முடவனாய்ப் பிறந்த ஒருவனை சின்னப்பர் சௌக்கியப்படுத்தினார். ஜனங்கள் இதைக்கண்டு சின்னப்பரையும் பர்னபாவையும் தெய்வங்களென்று நினைத்து, அவர்களுக்குப் பலியிட எண்ணங்கொண்டபோது, சின்னப்பர் அதைத் தடுத்தார். அவர்களுடைய பிரசங்கத்தைக்



கேட்டு அநேகர் விசுவசித்தார்கள். அதற்குப்பின் சின்னப்பரால் ஏற்கெனவே பிரசங்கிக்கப்பட்ட நகரங்களினின்று சில யூதர்கள் லிஸ்திராவுக்குவந்து, அங்குள்ளவர்களைச் சின்னப்பருக்கு விரோதமாய்த் தூண்டிவிட்டு, அவரை ஊருக்கு வெளியே இழுத்துவந்து கல்லால் எறிந்து, அவர் செத்தாரென்றெண்ணி, அவரை விட்டு அகன்றுபோனார்கள். ஆயினும் அவர் சௌக்கியமாகவே, அவ்விடத்தைவிட்டு நகருக்குள் சென்று சிலநாள் அவ்விடத்திலேயே தங்கியிருந்தார்.

தெர்பையில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபிறகு, சின்னப்பரும் பர்னபாவும் முன் பிரசங்கித்த ஊர்களின் வழியாக அந்தியோக்கியாபுரிக்குத் திரும்பினார்கள். கிறீஸ்துவர்களுக்கு தைரியமாயிருக்கப் புத்திசொல்லி, கரங்களை உயர்த்தி அவர்களுக்காகச் செபித்து, ஒவ்வொரு சபைக்கும் மேற்றிராணிமாரை நியமித்தார்கள்.

புத்தி.—வெகு காலத்திற்குமுன் இசையாஸென்பவர் அர்ச். சின்னப்பரையும், அவருடைய வேலைகளையும்பற்றி தீர்க்கதரிசனமாய் உரைத்தது என்னவெனில்: "சர்வேசுரன் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை, சமுத்திரத்தைச் சார்ந்து நிவசிக்குஞ் சனங்களிடத்திலும், ஆப்பிரிக்கா, லீதியா, இத்தாலியா, கிரேசியா முதலிய இராச்சியங்களுக்கும், வெகு துலைதூரமுள்ள தீவுகளுக்கும் அனுப்பி, தமது மகிமை அஞ்ஞானிகளுக்கு வெளிப்படுத்தவுஞ் சகல மாமிசமுந் தம்மை வணங்கவுஞ் செய்வார்" என்பதாம்.

வினா.—சின்னப்பர் மனந்திரும்பினபிறகு அவரைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? முதல் யாருக்குப் பிரசங்கஞ்செய்தார்? சிப்புரு தீவில் என்ன செய்யப்பட்டது? எலிமாசுக்கு என்ன சம்பவித்தது? சிப்புரு தீவிலிருந்து சின்னப்பரும் பர்னபாவும் எங்கே போனார்கள்? யூதர் நடந்துகொண்ட விதமெப்படி? லிஸ்திராவில் என்ன செய்யப்

பட்டது? சின்னப்பருக்கு என்ன செய்தார்கள்? அந்தந்த ஊர்களில் நியமிக்கப்பட்டவர்களார்?

## 110-ம் அதிகாரம்

### எருசலேமில் திருச்சங்கங் கூடினது

கி. பி. 50.

அப்போஸ்தலர் காலத்தில் அநேக விஷயங்களைப் பற்றி தர்க்கம் நடந்தது. அவற்றுள் விருத்தசேதனம் ஒன்று. அந்தியோக்கியா பட்டணத்து புது கிறீஸ்துவர்களான யூதரிற் சிலர் விருத்தசேதனஞ் செய்யவேண்டுமென்று சொல்ல, சின்னப்பர் கூடாதென்றார். ஆகையால் இச்சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ளும்படியாக யெருசலேமிலுள்ள அப்போஸ்தலர்களுக்கு இவ்விஷயத்தைத் தெரியப்படுத்த சின்னப்பரையும் பர்னபாவையும் அவ்விடத்துக்கு அனுப்பினார்கள்.

அவர்கள் வந்துசேர்ந்தபோது அப்போஸ்தலர்களும் மூப்பரும் இராயப்பரின் ஆதிக்கத்தில் சபைகூடி அவ்விஷயத்தைப்பற்றி யோசிக்கலானார்கள். டை விஷயத்தை நன்றாய் ஆராய்ந்து பார்த்தபிறகு இராயப்பர் எழுந்து: "சர்வேசுரன் யூதருக்கும் அஞ்ஞானிகளுக்கும் யாதோர் பேதங்காட்டாமல் நம்மைப்போலவே அவர்களுக்கும் இஸ்பிரீத்துசாந்துவைத் தந்தருளினபடியால், திருச்சபையில் ஓர் வித்தியாசமும் இருக்கக்கூடாது; விருத்தசேதனக் கட்டளை யார்பேரிலுஞ் சுமத்தவுங்கூடாது" என்று வசனித்தார்.

இப்போதனையால், மோயீசன் ஏற்படுத்திய பூர்வச் சடங்குகளால் பயனில்லையென்றும், இனி கிறீஸ்துவர்



கள்மேல் அதை சுமத்தக்கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த சங்கத்தார் அந்தியோக்கியாபுரியிலுள்ள விசுவாசிகளுக்கு: "இந்தச் சுமையை உங்கள்மேற் சுமத்தாமலிருப்பது நன்மையென இஸ்பிரீத்துசாந்துவுக்கும் எங்களுக்குந் தோன்றிற்று" என்று எழுதி தெரிவித்தார்கள்.

புத்தி.—அப்போஸ்தலர்களுக்குப் பதிலாளிகளாகிய மேற்றிராணிமார், இராயப்பருடைய ஸ்தானத்திலிருக்கும் பாப்பானவரைத் தலைமையாய் வைத்துக் கூடும் திருச்சங்கமானது எருசலேமில் அப்போஸ்தலர் காலத்தில் கூடிய சங்கத்துக்கு ஒப்பாயிருக்கிறது. மேலும் சேசுக்கிறீஸ்துநாதருடைய திருவாக்குத்தத்தத்தின்பிரகாரம் திருச்சபையானது வழுவாதபடி இஸ்பிரீத்துசாந்துவானவரால் காணாத விதமாய் காப்பாற்றப்பட்டு நடத்தப்படுவதால், அச்சங்கத்தின் தீர்மானங்கள் சர்வேசுரனுடைய திருச்சபையின் தீர்மானங்களாகி வழுவத்தக்கவையல்லவென்று அறிந்து நடக்கக்கடவோமாக.

வினா.—எதைப்பற்றி தர்க்கம் உண்டானது? அவ்விஷயத்தின்மட்டில் என்ன செய்யப்பட்டது? இராயப்பர் என்ன சொன்னார்? திருச்சங்கம் எந்த முடிவுக்கு வந்தது? கத்தோலிக்குத் திருச்சபையைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது?

## 111-ம் அதிகாரம்

### அர்ச். சின்னப்பர் செய்த இரண்டாம் பிரயாணம்

சிலகாலத்துக்குப்பிறகு அர்ச். சின்னப்பர் இரண்டாம்முறை கிறீஸ்துவர்களை விசாரிக்கப் பிரயாணப்பட்டார். அவர் சீரியா வழியாய் மறுபடியும் சின்ன ஆசி

யாவுக்குவந்து எங்கும் பிரசங்கஞ்செய்து, வயதுசென்றவர்களைச் சந்தித்து நூதனமாய்க் கிறீஸ்துவர்களை ஏற்படுத்தினார்.

அவர் துரோவா தேசத்திலிருக்கும்போது தம்மை மசெதோனியாவுக்கு அழைப்பதாக ஓர் காட்சிகண்டு அக்ஷணமே சீலா, லூக்கா, திமோத்தே யென்ற சீஷர்களைத் தம்மோடு அழைத்துக்கொண்டு கப்பலேறி ஆசியாவைக் கடந்து, மசெதோனியாவின் தலைநகரமாகிய பிலிப்பு நகரத்துக்கு சிந்தாத்திரையாய் வந்துசேர்ந்தார்.

இவ்விடத்தில் அப்போஸ்தலர் லீதியாளென்னும் ஓர் புது கிறீஸ்துவள் வீட்டில் தங்கினார். அந்நகரத்தில் சகுனஞ்சொல்லி தன்னெசமானனுக்கு வெகு ஆதாயத்தை வருவிப்பவளாகிய ஒரு பெண்ணிருந்தாள். சின்னப்பர் அவளிடமிருந்த பேயை ஓட்டிவிட்டார்.

அவளுடைய எசமான்கள் தங்களாதாயம் அற்றுப்போயிற்றென்று கண்டு, சின்னப்பரையும் சீலாவையும் பிடித்து, மிலாறுகளால் அவர்களை யடித்து சிறைச்சாலையில் வைத்தார்கள். நடுராத்திரியில் சின்னப்பருஞ் சீலாவுஞ் செபஞ்செய்துகொண்டிருக்கையில் சடுதியில் சிறைச்சாலையின் அஸ்திவாரங்கள் அசைபடும்படி பெரிதான ஓர் பூமியதிர்ச்சி யுண்டாகவே எல்லாக் கதவுகளும் திறக்கப்பட, அவர்களுடைய விலங்குகளுங் கழன்றுபோயின. சிறைச்சாலையின் காவற்காரன் நித்திரை தெளிந்து, சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக்கண்டு விலங்குக்காரர் ஓடிப்போனார்களென்றெண்ணி, பட்டயத்தை யுருவித் தன்னைக் கொலைசெய்துகொள்ளக் கருத்தாயிருந்தான். ஆனால் சின்னப்பர் பேரொலியாய்க் கூப்பிட்டு எல்லோருமிங்கே யிருக்கிறோமென்றார். அவன் நடுநடுங்கிக்கொண்டு ஓர் விளக்



கைக் கையிலேந்தி உள்ளே பிரவேசித்து, சின்னப்பர் பாதங்களில் விழுந்து, இரட்சணியமடைய நான் செய்யவேண்டியதென்னவென்றான். அதற்கு சின்னப்பர், சேசுநாதரை விசுவசிக்கும்படி போதித்து அன்று இராத்திரியே அவனுக்கும் அவன் குடும்பத்தாருக்கும் ஞானஸ்நானங் கொடுத்தார். பொழுதுவிடிந்தபிறகு அதிகாரிகள் சின்னப்பரும் சீலாவும் உரோமையாயிருக்கிறார்களென்று கேள்விப்பட்டு, உரோமயரை அடித்து வாதைப்படுத்தல் இராசாங்க முறைமைக்கு அடாததாகையால் அவர்களை வரவழைத்து மன்னிப்புக்கேட்டு அவர்களை விடுதலைசெய்துவிட்டார்கள்.

சின்னப்பர் பிலிப்பு நகரில் சில கிறீஸ்துவர்களைச் சேர்த்தபின் அங்கிருந்து தெசலோனிக்கா நகரத்துக்கும் பெரையா முதலிய வேறு அநேக நகரங்களுக்கும் போய்ப் பிரசங்கித்து, கிறீஸ்து சபையை யுண்டாக்கினார். கடைசியாய் கிரேசியா தேசத்தின் தலைநகரமாகிய அத்தேனுக்கு வந்துசேர்ந்தார்.

அந்நகரம் விக்கிரக ஆராதனைக் கடங்கியிருப்பதைக்கண்டு, வேதவைராக்கியங்கொண்டவராய் சந்தை கூடும் ஸ்தலத்தில் பிரசங்கிக்கத் தொடங்கினார். அப்போது இவரை நகரத்து ஞானிகளும் கனவான்களும் கூடியிருந்த அரெயொபாகுஸென்னும் சபைக்கூட்டத்துக்கு அழைத்துப்போய், அவர் போதிக்கும் போதனையை விவரித்துச் சொல்லும்படியாகக் கேட்டுக்கொண்டார்கள்.

சின்னப்பர் எழுந்து விஸ்தாரமான ஜனக்கூட்டத்தை நோக்கி: “அத்தேனியரே! நான் உங்கள் நகரத்தின் வீதியைக் கடந்துபோகையில் அறியப்படாத தேவனுக்கு என்று மேலே எழுதப்பட்ட ஓர் பீடத்

தைக் கண்டேன். ஆகையால் நீங்கள் அறியாமலாராதிக்கிறதையே நானுங்களுக்குப் பிரசங்கிக்கிறேன்" என்று மொழிந்தபிறகு, சர்வேசுரனுடைய லட்சணங்கள், கிறீஸ்துவேதத்தின் தன்மை, உத்தானம் முதலியவைகளைப்பற்றிப் பிரசங்கஞ்செய்தார்.

மரித்தோருத்தானத்தைக் குறித்து அவர் பேசினதைக் கேட்டபோது சிலர் நகைத்தார்கள். சிலரோ மறுபடி யுமக்குச் செவிகொடுப்போமென்றார்கள். ஆயினுஞ் சிலர் அவரைச் சேர்ந்தார்கள். அரெயொபாகுஸ் சங்கத்தாரில் ஒருவரான தியோனீசியார் மனதுதிரும்பினார்.

சின்னப்பர் அத்தேன் நகரத்தினின்று கொரிந்து நகரத்துக்குவந்தார். அவ்விடத்தில் அவர் முதல்முதல் யூதருக்குப் பிரசங்கஞ்செய்ய, அவர்கள் எதிர்த்துப் பேசி அவருடைய பிரசங்கத்தை மறுத்துவிட்டதால் "உங்களிரத்தம் உங்கள் தலைமேல் இருப்பதாக; நான் துப்புரவாயிருக்கிறேன்" என்று வசனித்தார்.

பிறகு அவர் கொரிந்தியர்களுக்குப் பிரசங்கஞ் செய்து அநேகரை மனந்திருப்பி சந்துஷ்டியடைந்தார். சின்னப்பர் ஒன்றரை வருஷகாலம் கொரிந்து நகரில் தங்கியிருந்தபின் ஆசியாவைக் கடந்து எப்பேசுக்கும் அந்தியோக்கியாவுக்கும் திரும்பிவந்தார்.

புத்தி.—கிறீஸ்துநாதர் யூதரை அழைக்கவந்தும், ஏசாவென்பவன் சொற்ப தின்பண்டத்துக்காகத் தன் ஜென்ம சுதந்தரத்தை விற்றுப்போட்டதுபோல், யூதரும் தங்கள் அழைப்பை நிராகரித்துவிட்டார்கள். சிறு மேகமானது பெருக வாரம்பித்த சிறிது நேரத்தில் ஆகாய முழுதும் மூடிக் கொள்ள பூமியானது ஜீவாதாரமான மழையைப் பெற்றுக் கொள்ளுவதுபோல, அதிசயத்துக்குரிய விதமாய் திருச்சபை



பெருகிவர யாவரும் அதன் மாட்சியைக் கண்டுணரவேண்டியதாயிற்று.

வினா.—சின்னப்பருடைய இரண்டாம் பிரயாணத்தைப் பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? அவர் எவ்விடத்துக் குப்போக அழைக்கப்பட்டார்? சின்னப்பருக்கும் சீலாவுக்கும் நேர்ந்த தொந்தரவென்ன? அவர்கள் சிறையிலடைப்பட்டதைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? அவர்கள் எப்படி காவற்கூடத்தைவிட்டு வெளிப்பட்டார்கள்? சின்னப்பர் பிலிப்பு நகரிலிருந்து எவ்விடத்துக்குப் போனார்? அவர் அத்தேன் நகரில் செய்ததென்ன? அவரோடு யார் சேர்ந்துகொண்டது? சின்னப்பர் கொரிந்தில் எவ்வளவுகால மிருந்தார்?

---

## 112-ம் அதிகாரம்

### அர்ச். சின்னப்பர் செய்த மூன்றாம் பிரயாணம்

அவர் இரண்டாம் பிரயாணஞ்செய்து திரும்பிவந்த சிலநாட்களுக்குள் மூன்றாஞ் சுற்றுப்பிரயாணத்துக்கு ஆரம்பித்தார். மறுபடியும் சின்ன ஆசியாவின் வழியாய்க் கடந்துசென்று, அக்காலத்தில் உரோமையருக்கு ஆசியாவில் ஆட்சி ஸ்தானமாகிய எப்பேசுஸ் என்னுந் தலைநகருக்கு கடைசியாக வந்துசேர்ந்தார். இவ்விடத்தில் முன்னால் ஸ்நாபக அருளப்பருடைய ஞானஸ்நானம் பெற்ற பன்னிருவருக்கு ஞானஸ்நானங் கொடுத்து அவர்கள்மேல் கரங்களை நீட்டவே அவர்கள் இஸ்பிரீத்துசாந்துவைப் பெற்றுக்கொண்டார்கள்.

சின்னப்பர் இரண்டு வருஷகாலமாய் எப்பேசிலிருந்து பிரசங்கஞ்செய்ய, அங்கிருந்தவர்களில் பெரும்பான்மையோர் கிறீஸ்து வேதத்தின் போதனைகளைக்

கற்றுக்கொண்டார்கள். சின்னப்பர் அனேக அற்புதங்களைச் செய்துகொண்டுவர, அவருடைய வல்லமை எவ்வளவு மேலானதாக எண்ணப்பட்டுவந்ததென்றால், அவருடைய சரீரத்தைத் தொட்ட உறுமால்களைக் கொண்டு வியாதியைப் பரிகரிக்க போதுமானதாயிருந்தது. இக்காரியங்களைக் கண்டவர்களெல்லோரும் பயங்கரத்துக்குள்ளாகி அனேகர் தங்கள் பாவங்களை சங்கீர்த்தனஞ்செய்தார்கள்.

சின்னப்பர் எப்பேசிலிருந்தபோது அவருக்கு விரோதமாய் ஓர் பெருங் கலகமுண்டானது. அவ்விடத்தில் தியானாளென்னுந் தேவதைக்கு ஒரு பிரமாண்டமான கோவில் கட்டப்பட்டிருக்க, தட்டார் அதைப்போல் சிறு கோவில்களைச் செய்து அவற்றை விற்று மிகுந்த ஆதாயமடைந்துகொண்டுவந்தார்கள். அப்படியிருக்க ஜனங்கள் சத்திய வேதத்தில் சேர்ந்ததினால் தங்கள் வியாபாரம் அற்றுப்போனதை மேற்படி தட்டார் கண்டு, தெமேத்திரி என்பவனைத் தலைவனாகக்கொண்டு, அவர்கள் எல்லோரும் சின்னப்பருக்கு விரோதமாய்ப் பெருங் குழப்பமுண்டாக்கினபோது, அவர்களுடைய கைகளினின்று சின்னப்பரை அதிகாரிகள் வெகு பிரயாசையோடு காப்பாற்றினார்கள்.

மேற்படி கலகம் அமர்ந்தபிறகு சின்னப்பர் சீஷர்களுக்கு உறுதியாயிருக்கும்படி புத்திசொல்லி, மசெதோனியாவுக்கும் கிரேசியாவுக்கும்போய் அங்கிருந்து ஆசியாவுக்குத் திரும்பி துரோவா நகருக்குவந்து அவ்விடத்தில் ஒரு வாரம் தங்கியிருந்தார். ஞாயிற்றுக்கிழமையன்று பூசைகண்டு நன்மைவாங்க விசுவாசிகள் ஒரு பெரிய சாலையில் கூடியிருந்தபோது சின்னப்பர் பிரசங்கஞ் செய்துக்கொண்டிருந்தார். அப்போது ஒரு



வாலிபன் சன்னலிலுட்கார்ந்து நித்திரைபோய் கீழே விழுந்து இறந்துபோகவே, சின்னப்பர் அவனை உயிரோடு எழுப்பினார். *

சின்னப்பர் துரோவாவிலிருந்து லெஸ்போஸ் சியோஸ் தீவுகளுக்கும், அங்கிருந்து சாமோஸ் மிலேத்துஸ் நகரங்களுக்கும் வந்தார். இவ்விடத்தில் சேர்ந்த பிறகு எப்பேசுக்கு ஆளனுப்பி அவ்விடத்திய திருச்சபையின் குருக்களை வரவழைத்து, அன்பாய் அவர்களோடு பேசி: “நான் எருசலேமுக்குப் போகிறேன்; எனக்கு என்ன நேரிடுமோ தெரியாது. ஒன்றுமாத்திரம் எனக்குத் தெரியும்: அதென்னவெனில், சங்கிலிகளும் உபத்திரவங்களும் எனக்காக எதிர்பார்த்திருக்கின்றன; இதனை இஸ்பிரீத்துசாந்துவானவர் எனக்கு முன்னறிவித்திருக்கிறார். ஆயினும் நானவைகளுக்கு அஞ்சுகிறதில்லை. என்னுத்தியோகத்தைக் குறைபற நிறைவேற்றுவேனாகில் எனக்கதுவே போதும். நீங்களினி என் முகத்தைப் பார்க்கமாட்டீர்களென்று நான் உறுதியாய் நம்புகின்றேன்; ஆகையால், நீங்கள் இனிமேல் உங்கள்மட்டிலும், இஸ்பிரீத்துசாந்துவானவர் உங்களை ஏற்படுத்தின திருச்சபையின்மட்டிலும் எச்சரிக்கையுடையவர்களாக இருக்கக்கடவீர்கள். நான் போனபின்பு துற்போதனைகளைப் போதிக்கும் மனிதர் எழும்புவார்கள்; அதினிமித்தமே நான் மூன்று வருஷமாய் அல்லும்பகலும் அறுபது நாழிகையும் ஓயாமல் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்திமதி சொல்லிக்கொண்டிருந்ததை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு விழித்திருங்கள். இப்போது உங்களைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கிறேன்: அவர் சகல அர்ச்சியசிஷ்டவர்களுடன் உங்களுக்குச் சுதந்தரத்தைத் தந்தருள வல்லவராயிருக்கிறார்” என்றார்.

மீளவும் அவர் இவைகளைச் சொன்னபின்பு, முழங்காட்படியிட்டு அவர்களெல்லோரோடும் வேண்டிக்கொண்டார். பின்னும் எல்லோரும் வெகுவாக அழுதார்கள். தமது முகத்தை அவர்கள் இனி பார்ப்பதில்லையென்று சின்னப்பர் சொன்ன வார்த்தையைப்பற்றி விசேஷமாய்த் துக்கித்து, அவருடைய கழுத்தின்மேல் விழுந்து அவரை முத்தமிட்டு, கப்பல்மட்டும் அவரைக் கூட்டிப்போய் அன்புடன் பிரயாணப்படுத்தியனுப்பினார்கள்.

வினா.—சின்னப்பர் மூன்றாம் பிரயாணஞ்செய்தபோது எங்கே போனார்? அவர் எப்பேசில் என்ன செய்தார்? சின்னப்பர் எப்பேசில் செய்த புதுமைகளெவை? எப்பேசில் சின்னப்பருக்கு விரோதமாய்க் கலகஞ்செய்ததற்குக் காரணமென்ன? துரோவாவில் என்ன சம்பவித்தது? மிலேத்துசில் என்ன செய்யப்பட்டது?

---

## 113-ம் அதிகாரம்

### அர்ச். சின்னப்பர் சிறையிலடைக்கப்பட்டதும், அவருடைய மரணமும்

கிறீஸ்து பிறந்த 67௵ அர்ச். சின்னப்பர் மனந்திரும்பினபிறகு அவர் யூதருக்கு ஓர் சவுக்குக்கு ஒப்பாயிருந்தார். அவர் கிறீஸ்து வேதத்தின்மட்டில் கொண்டிருந்த உற்சாகப்பற்றுதலையும், கணக்கற்ற ஜனங்களை மனந்திருப்பினதையும் அவர்கள் கண்டு அவர்மட்டில் வெகு பொறாமைகொண்டு, அவர் எருசலேமுக்குத் திரும்பிவந்தபோது, அவர்கள் செய்த பெருத்த கலகத்தால் உரோமை தேசாதிபதி சின்னப்பரைக் காவற்கூடத்தி லடைத்துவைக்கவும். கடைசி



யாய் அவரைச் செசரையாவின் அதிபதியாகிய பெலிக்ஸ் என்பவனிடம் அனுப்பவும் அவசியமாயிற்று.

சின்னப்பர் செசரையாவில் இரண்டு வருஷகாலஞ் சிறையிலிருந்தபிறகு, மறு விசாரணைக்காக உரோமைச் சக்கரவர்த்திக்கு மனுவு செய்துகொண்டார். அவர் உரோமைக்குப் பிரயாணஞ்செய்தபோது, மால்தா தீவண்டை கப்பல் உடைந்துபோக, சின்னப்பர் புதுமையாகக் காப்பாற்றப்பட்டார். சின்னப்பர் உரோமையில் இரண்டு வருஷகாலம் காவலிலிருந்து விடுதலையடைந்து, தாம் முன்னுழைத்த ஸ்தலங்களை பின்னுமோர்முறை சந்தித்து, வேதவாக்கியத்தைப் பிரசங்கித்து, கிறீஸ்துவர்களை வேதத்தில் ஸ்திரப்படுத்தினார்.

அர்ச். சின்னப்பர் சுமார் 67-ம் வருஷத்தில் உரோமைக்கு மறுபடியும் வந்துசேர்ந்த சிலநாட்களுக்குள், நேரோவென்ற சக்கரவர்த்தியால் கிறீஸ்துவர்களுக்கு விரோதமாய் எழுப்பப்பட்ட வேதகலாபனையில் அவர் பிடிபட்டு, மேற்படி இராயனால் மரணத்தீர்வை விதிக்கப்பெற்றார். இம்மேரையாய் அவரது மகா பரிசுத்த ஆத்துமமானது கொலைஞர் கையால் மண்ணுலகைத் துறந்து விண்ணுலகுக்கேகினது.

வினா.—சின்னப்பர் என் செசரையாவிற்கு அனுப்பப்பட்டார்? அவர் உரோமாபுரிக்குக் கப்பற்பிரயாணஞ்செய்த போது என்ன சம்பவித்தது? சின்னப்பர் எப்படி மரணமடைந்தார்? எப்போது?

---

# 114-ம் அதிகாரம்

## மற்ற அப்போஸ்தலர்கள்

அர்ச். சின்னப்பர் ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் பிரசங்கித்துக்கொண்டிருக்கையில் மற்ற அப்போஸ்தலர்கள் சும்மாயிருந்தவர்களல்ல. அவர்களும் அங்கங்கே சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, கிறீஸ்துவர்களைச் சேர்த்து, மேற்றிராணிமார்களை யேற்படுத்தி, தங்களுக்குக் கற்பிக்கப்பட்டவைகளையெல்லாம் விசுவாசிகளுக்குப் போதித்துவந்தார்கள். சிலர் பெர்சியாவுக்கும், வேறு சிலர் அரேபியாவுக்கும், மற்றுஞ் சிலர் வெகு துலைதேசங்களுக்கும், இந்தியாவுக்கும் வந்தார்கள். நூறு வருஷங்களுக்குள் அக்காலத்தில் அறியப்பட்டிருந்த தேசங்களில் கிறீஸ்துநாதரைப்பற்றி கேள்விப்படாத தேசம் ஒன்றுங் கிடையாதென்று சொல்லலாம்.

அக்காலத்தில் அப்போஸ்தலர்களில் சிலரும், அவர்களுடைய சீஷர்களிருவரும், இஸ்பிரீத்துசாந்துவின் ஏவுதல்பிரகாரம் நமது இரட்சகரின் சீவிய சரித்திரத்தைச் சுருக்கமாய் எழுதிவைத்தார்கள். அர்ச். சின்னப்பரும் வேறு சில அப்போஸ்தலர்களும் தாங்களுண்டாக்கிய திருச்சபைக்குப் படிப்பினையாகவும், தங்களைக் கேட்டுக்கொண்டவர்களுக்குப் புத்திமதியாகவும் "எபிஸ்தொலா" என்னும் நிருபங்களை எழுதினார்கள். காலவட்டத்தில் அவைகளெல்லாம் ஒன்றாய்ச் சேர்க்கப்பட அதற்கு புதிய ஏற்பாடு என்னும் பேர் வழங்கிற்று.

அர்ச். இராயப்பர் சிறிதுகாலம் எருசலேமில் பிரசங்கித்தபிறகு அந்தியோக்கியாபுரியைத் தமது அப்



போஸ்தொலிக்கு வேலைக்கு மத்தியஸ்தானமாகத் தெரிந்துகொண்டார். பிற்காலத்தில் தமது மேற்றிராசனத்தை உரோமாபுரியில் ஸ்தாபித்தார். அன்றுமுதல் நாளதுவரையில் அவருடைய பதிலாளிகள் அவ்விடத்திலிருந்து சர்வேசுரனுடைய திருச்சபையை ஆண்டுவருகிறார்கள். அர்ச். சின்னப்பர் தலைவெட்டுண்டு மரித்தவிடத்தில் அதே தினத்தில் அர்ச். இராயப்பரும் தலைகீழாக சிலுவையிலறையப்பட்டு மரணமானார். அருளப்பர் தவிர மற்ற அப்போஸ்தலர்களெல்லோரும் சேசுக்கிறீஸ்துநாதரில் கொண்டிருந்த விசுவாசத்திற்கு அத்தாட்சியாக தங்கள் இரத்தத்தைசிந்தி மரித்தார்கள்.

நமது இரட்சகர் மரணமடைந்தபிறகு, அர்ச். அருளப்பர் தேவதாயாரைத் தமது அநுசரணையில் வைத்துக்கொண்டு வெகு உருக்கமாய் அத்தாயாரை நேசித்துவந்ததால், அவள் தமது திவ்ய குமாரனை யிழந்த வியாகுலத்தினின்று சற்று ஆறுதலடைந்திருந்தாள். அவள் மரணமடைந்தபிறகு அருளப்பரைப் பிடித்து கொதிக்கும் எண்ணெய்க்கொப்பரையில் போட்டார்கள். அவரோ புதுமையாய்க் காப்பாற்றப்பட்டார். பிறகு பாத்மோஸ் என்னும் தீவுக்கு அனுப்பப்பட்டபோது, அவ்விடத்தில் காட்சியாகமம் என்னும் புத்தகத்தை யெழுதினார். அவர் விடுதலையடைந்து எப்பேசில் இருக்கும்போது தமது சுவிசேஷத்தை யெழுதிமுடித்து "என் பிள்ளைகளே! ஒருவரொருவரை நேசியுங்கள்" என்னும் வாக்கியத்தையே வெகு வருஷகாலமாகப் பிரசங்கித்துக்கொண்டுவந்தார்.

சுமார் 100-ம் வருஷத்தில் மற்ற அப்போஸ்தலர்கள் எவரும் அடையாத சுபாவீக மரணத்தை யிவரொருவரே யடையலானார்.

புத்தி.—பழைய ஏற்பாட்டின்படி எருசலேம் பட்டணம் யூத மதத்திற்கு மத்தியஸ்தானமாயிருந்தது. உரோமைமா நகரமானது கத்தோலிக்கு வேதத்தின் மத்தியஸ்தானமாக, அர்ச். பாப்பானவர் அவ்விடத்தினின்று திருச்சபையை ஆண்டு நடத்துந் தலைவராயிருக்கிறார்.

வினா.—மற்ற அப்போஸ்தலர்களைப்பற்றி யென்ன சொல்லியிருக்கிறது? சில அப்போஸ்தலர்கள் எழுதினதென்ன? அர்ச். சின்னப்பர் என்ன எழுதினார்? இவர்கள் எழுதினவைகளுக்குப் பெயரென்ன? இராயப்பர் எவ்விடத்தில் தமது ஆசனத்தை ஸ்தாபித்தார்? இராயப்பர் எப்படி இறந்தார்? மற்ற அப்போஸ்தலர்கள் எப்படி மரணமடைந்தார்கள்? அர்ச். அருளப்பரைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது? உரோமாபுரியைப்பற்றியும், எருசலேமைப்பற்றியும் என்ன சொல்லப்பட்டிருக்கிறது?

---

# 115-ம் அதிகாரம்

## முடிவுரை

சர்வேசுரன் நாலாயிர வருஷகாலமாய் சேசுக்கிறீஸ்துநாதருடைய வருகைக்கு மனுக்குலத்தை சித்தப்படுத்தி, சிற்சில காலத்தில் தாமே நேராக தரிசனங்களாலும், வேறு காலத்தில் உலகத்துக்கு வேதத்தை அறிவிக்கும்படி அப்போதைக்கப்போது தாமனுப்பிய தீர்க்கதரிசிகள் மூலமாயும் பேசிவந்த விஷயங்கள் இச்சிறு புத்தகத்தில் சுருக்கமாக எழுதப்பட்டிருக்கின்றன.

சேசுக்கிறீஸ்துநாதர் இவ்வுலகத்திற்கு வந்தபோது தம்மைப்பற்றி சொல்லப்பட்டிருந்த தீர்க்கதரிசனங்களெல்லாம் தம்மில் நிறைவேறினதெனக் காட்டினதுடன், புதுமைகளால் தமது தெய்வீகத்தை யெண்பித்தார். பிறகு அவர் தமது வேலைகளுக்கு சாட்சிகளாக அப்போஸ்தலர்களைத் தெரிந்தெடுத்து, வேதத்தை பிரசங்கஞ்செய்து தமது திருச்சபையை ஸ்தாபித்தார். அவரால் குறிக்கப்பட்ட காலம் வரவே அவர் மரித்து மறுபடியும் உயிர்த்து மோட்சாரோகணமானதால் இரட்சணிய வேலை பூர்த்தியாக நிறைவேறலாயிற்று.



உலகத்துக்குத் தமது போதனைகளை வெளிப்படுத்தும்படி கிறீஸ்துநாதரால் தெரிந்தனுப்பப்பட்ட அப்போஸ்தலர்கள் மரித்தபோதிலும், கிறீஸ்துநாதருடைய வேலையாகிய பரிசுத்த கத்தோலிக்கு திருச்சபையானது ஸ்திரமாக நிலைத்திருப்பதுடன், அந்தியகாலம் வரைக்கும் நீளித்திருக்குமாமே.

திருச்சபையானது சத்தியத்தில் ஸ்தாபிக்கப்பட்டதும் அதன் போதனை சத்திய போதனையாயுமிருப்பதால் சத்தியத்தைப்போல் திருச்சபையும் ஒருபோது மழியாது. பூர்வீக ஸ்திரமான கட்டிடத்துக்கொப்பான இத்திருச்சபையானது, சேசுக்கிறீஸ்துநாதருடைய இரத்தத்தாலும், அவர் படிப்பித்த திருப்போதனையை அச்சமின்றி போதித்து, அப்போதனைக்குச் சாட்சிகளாக தங்களுயிரை மகா உதாரகுணத்துடன் பலியாக்கின அப்போஸ்தலர்களுடையவும் வேதசாட்சிகளுடையவும் இரத்தத்தாலும் பந்திக்கப்பட்டிருக்கிறது.

பெரும் புயலுக்கொப்பான துஷ்டருடைய போராசையும் பாசமும் இத்திருச்சபைக்கு விரோதமாயெழும்பினும், அதை யழித்து நிர்மூலமாக்கும்படி மனிதர் தங்களுக்குள்ள எல்லா பலத்தையும் பராக்கிரம வல்லபத்தையும் பிரயோகித்து முயன்றாலும், விஷத்துக்கொப்பான பதிதத்தனங்களும் துர்ப்போதகங்களும் ஒன்றுசேர்ந்து அதற்கு விரோதமாய் தேவதூஷ

ணங்களைக் கக்கி குழப்பம் எழுப்பினபோதிலும் "இத் திருச்சபையானது அசைக்கப்படவுமாட்டாது, அழிக் கப்படவுமாட்டாதாமே?"

ஆகையால் நாம் சத்திய திருச்சபையின் பிள்ளை களாயிருப்பதால் சந்தோஷித்து மகிழ்வோமாக. அதில் கடைசிமட்டும் பிரமாணிக்கமாயிருக்கும்படி முயலுவ துடன், தேவகட்டளைகளை யனுசரித்து, திருச்சபை மாத்திரங் கொடுக்கக்கூடுமான இஷ்டப்பிரசாதங்களால் பரிசுத்தப்படுத்தப்பட்டு, தெளிவுகொண்டு யாதோர் பய அச்சமுமின்றி தைரியத்துடன் நடப்போமாக.

சர்வேசுரனுடைய இராச்சியம் போய்ச்சேர்ந்து மோட்சவாசிகளுடன் நித்தியமாய் சகல பாக்கியங்களை யும் சுகிக்கும்படி ஒருநாள் நாமிவ்வுலகத்தை விட்டுப் பிரிவது சத்தியம். மோட்ச எருசலேமாகிய அப்பரம விராச்சியத்தில் நாம் சேர்ந்து, பூர்வ வேதத்தை அனு சரித்துவந்தவர்களும் புது வேதத்தை அனுசரித்துவந் தவர்களுமான சகல அர்ச்சியசிஷ்டவர்களுடன் நாமும் ஒன்றித்து, பிதாச் சுதன் இஸ்பிரீத்துசாந்துவாகிய பரம திரித்துவத்தை சதாகாலமாய் ஸ்துதித்து ஆராதித் தானந்திப்போம்.

வினா.—கடைசி அத்தியாயத்தில் என்ன சொல்லப்பட் டிருக்கிறது? கிறீஸ்துநாதர் வந்தபோது என்ன செய்தார்? யார் கடந்துபோனது? கிறீஸ்துநாதருடைய எந்த வேலை நிலைத்திருக்கிறது? திருச்சபையைப்பற்றிச் சொல்லப்பட் டிருப்பதென்ன?

புதிய வேத சரித்திரம் முற்றிற்று.



# தருமநூலைக் காட்டும் வசனங்கள்

## 1—ஜெபம்

1. "துன்பகாலம் வருவதற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்லவென்று நீ சொல்லும் வருஷங்கள் வருவதற்குள்ளும் உன் சிருஷ்டிகரை உன் வாலிப நாட்களில் நினை" பிரசங். 12 : 1.

2. "நீங்கள் சோதனைக்குட் பிரவேசியாதபடி விழித்திருந்து வேண்டிக்கொள்ளுங்கள்" மத். 26 : 41.

3. "தானியேல் ஒரு நாளைக்கு மூன்று விசை முழங்காட்படியிட்டு ஆராதித்து சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரம் புரிந்தார்" தானி. 6 : 10.

4. "ஜெபத்திற்குமுன் உன்னாத்துமத்தை ஆயத்தஞ் செய். சர்வேசுரனை சோதிக்கும் மனிதனைப்போலிராதே" பிரசங். 18 : 23.

5. "சந்தோஷத்துடன் சர்வேசுரனை ஆராதிப்பவன் பிரியப்படுவதுடன், அவனுடைய மன்றாட்டு மேகங்கள்மட்டுஞ் செல்லும்" பிர. 35 : 20.

6. "உங்களில் ஒருவன் துக்கமாயிருப்பானேல், அவன் ஜெபம்பண்ணட்டும்; நீங்கள் இரட்சண்யத்தை அடையும்படி ஒருவருக்காக ஒருவர் வேண்டிக்கொள்ளுங்கள்; ஏனெனில் நீதிமானுடைய சுறுசுறுப்புள்ள வேண்டுதல் மிகவும் வல்லமையுள்ளதாயிருக்கிறது" இயா. 5 : 13, 16.

7. "கேளுங்கள், அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்போது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்போது உங்களுக்குத் திறக்கப்படும்" மத். 7 : 7.



## 2—தேவாலயத்திற்கு காட்டவேண்டிய வணக்காசாரம்

8. "ஆண்டவரே உமது வீட்டிற் பிரவேசிப்பேன்; உமது பரிசுத்த ஆலயத்தில் அச்சத்தோடு உமக்கு ஆராதனை பண்ணுவேன்" சங். 5 : 8.

9. "மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்திலிருக்கிறார், இதை நான் அறியாதிருந்தேன்" 1 மோ. 28 : 16.

10. "என் நாமத்தினால் இருவராவது மூவராவது எங்கே சேர்ந்திருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவில் நானிருக்கிறேன்" மத். 18 : 20.

11. "கர்த்தரோவென்றால் தமது பரிசுத்த தேவாலயத்திலிருக்கிறார்; பூமியெல்லாம் அவருக்குமுன்பாக இருக்கக்கடவது" அபகூ. 2 : 20.

12. "உலகத்துக்கடுத்ததும் வீணானதுமான பேச்சுகளை விட்டுவிலகு" 2 திமோ. 2 : 16.

## 3—பெற்றோரும், பிள்ளைகளும்

13. "சேசுநாதர் தேவசமுகத்திலும் மனிதர்முன்பாகவும் ஞானத்திலும் வயதிலும் வளர்ந்துகொண்டுவருவார்" லூக். 2 : 52.

14. "என் மகனே என் கட்டளையை மறவாதே, என் கற்பனைகளை யுன்னிருதயம் ஆசரிக்கட்டும்" பழ. 3 : 1.

15. "என் மகனே உன் தகப்பன் புத்தியை நீ கேட்டு உன் தாயின் போதகத்தைக் கைவிடாதிரு" பழ. 1 : 8.

16. "தன் தாய் அல்லது தகப்பன் சொல்லைக் கேளாமலும், அவர்களால் கண்டிக்கப்பட்டும் அசட்டைசெய்து கீழ்ப்படியாமலும்போகிற மகன் ஒருவனுக்கிருந்தால் அவர்கள் அவனை பட்டணத்து மூப்பரண்டைக்கும் நீதிசாலையின்

வாசலண்டைக்கும் கூட்டிக்கொண்டுவந்துவிட்டு, ‘இந்த எங்கள் மகன் முரட்டுத்தனமும் அடங்காக்குணமுமுள்ளவன்; எங்கள் புத்திமதிகளை அவமதிக்கிறான்; பெருந்தீனிக்காரனுங் குடியனுமாயிருக்கிறான்’ என்று பட்டணத்து மூப்பரோடு சொல்வார்களாக; அப்போது ஜனங்கள் அவனைக் கல்லாலெறிந்து கொல்லக்கடவார்கள். இப்படியே இஸ்ரூயேலர் எல்லோரும் இதைக் கேட்டு பயப்படுவார்கள்” 5 மோ. 21 : 18.

17. “தன் தகப்பனையும் தாயையுஞ் சபிக்கிறவனுடைய தீபம் காரிருளில் அவிந்துபோகும்” பழ. 20 : 20.

“தகப்பனைப் பரிகாசஞ்செய்து தன் தாயின் பிரசவவேதனையை நிந்திக்கிறவனுடைய கண்ணைக் காகங்கள் பிடுங்கிக் கழுகின் குஞ்சுகள் தின்னட்டும்” பழ. 30 : 17.

18. “ஞானமுள்ள மகன் தகப்பனைச் சந்தோஷிப்பிக்கிறான்; பயித்தியமுள்ள மகனோ தன் தாய்க்குச் சஞ்சலமாயிருக்கிறான்” பழ. 10 : 1.

19. தன் கழியைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான்; அவனைச் சிநேகிக்கிறவனோ அவனை ஏற்கனவே தண்டிப்பான்” பழ. 13 : 24.

20. “தன் மனப்படி நடக்கும் வாலிபன் அவன் கிழவனாகியும் அவ்வழக்கத்தை விடாதிருப்பான்” பழ. 22 : 6.

21. “தன் தகப்பனிடத்திலாவது தாயினிடத்திலாவது யாதொரு காரியத்தை ஒருவன் திருடி, அது பாவமல்லவென்பானேயாகில் அவன் கொலைப்பாதகனுடைய தோழனாவான்” பழ. 28 : 24.

### 4—அடக்கவொடுக்கமும், பரிசுத்தத்தனமும்

22. “மகிமைபொருந்திய கற்புள்ள சந்ததியானது எவ்வளவோ சிறந்தது! அதன் ஞாபகமானது அழியாது! ஏனெனில், அது சர்வேசுரனிடத்திலும் மனிதரிடத்திலும் பிரசித்தமாய் இருக்கிறது” ஞா. 4 : 1.



23. “நீ எருசலேமின் மகிமையாய் இருக்கிறாய்; இஸ்ரூயேலின் சந்தோஷமாய் இருக்கிறாய்; நமது ஜனத்தின் கௌரவமாய் இருக்கிறாய்; நீ கற்பை நேசித்து வீரியமாய் நடந்தபடியால், உன்னுடைய இருதயம் பலப்பட்டது. ஆகையால் சதாகாலமும் நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்” என்று ஜனங்கள் ஜூதித்தம்மாளைப் புகழ்ந்தார்கள்” ஜூதித். 15 : 10.

24. “உம்மைக் கற்புள்ளவராகக் காப்பாற்றிக்கொள்ளும், சிலருடைய நற்கிரியைகளும் வெளியரங்கமாய் இருக்கின்றன; அப்படி இராதவைகளும் வெளிக்கு வராதிருக்கமாட்டா” 1 திமோ. 5 : 23, 25.

25. “மனுஷருடைய வழிகளை கர்த்தர் பார்ப்பதுடன் அவன் அடிகளையெல்லாம் அவர் கவனிக்கிறார்” பழ. 5 : 21.

26. “பாவங் கட்டிக்கொள்ளுகிறவர்கள் ஒளிந்து கொள்ளத்தக்க இருளில்லை” ஜோப். 34 : 22.

27. “துர்நினைவுகள் கர்த்தருக்கு அருவருப்புண்டாக்குகின்றன. பரிசுத்தமான வார்த்தைகளோ இன்பகரமுள்ளவைகளாகி அவரால் அங்கீகரிக்கப்படும்” பழ. 15 : 26.

28. “பரஸ்திரீயின் உதடுகள் தேன் இறுட்டுக்கு ஒப்பாகவும், அவளுடைய முடிவோ எட்டி மரத்தைப்போலே பாகவும், இருபுறமும் கருக்குள்ள பட்டயம்போலே கூர்மையாகவும் இருக்கின்றன. அவள் பாதங்கள் சாவுமட்டும் இறங்கி அவள் காலடிகள் நரகமட்டும் போகும்” பழ. 5 : 3, 4, 5,

### 5—வேலையின் விருப்பமும், பயிற்சியும்

29. “முன்யோசனையற்ற கிழவனும் மூடனுமாகிய இராசாவைப்பார்க்கிலும், ஏழையும் விவேகியுமாகிய இளைஞனே வாசி” பிரச. 4 : 13.

30. "பல காரியங்களைக் கற்றுணர்ந்தவன் ஞானத்தைக் காட்டுவான்" பிரச. 34 : 9.

31. "படிப்பும் ஞானமும் உள்ளவனுக்கு அவை உயிர் தரும்" பிரச. 7 : 13.

32. "சகல பிரயாசத்தினாலும் மிகுதியுண்டாகும். ஆனால் அதிக பேச்சால் அடிக்கடி குறைச்சல் உண்டாகிறது. தன் நிலத்தைப் பயிரிடுகிறவன் அப்பத்தால் திருப்தியடைவான். ஆனால் சோம்பலைப் பின்பற்றுகிறவன் மதியீனன்" பழ. 14 : 23 ; 12 : 11.

33. "சோம்பேறியே! எறும்பண்டைக்குப்போய் அதின் வழிகளைப்பார்த்து ஞானம் கற்றுக்கொள். அதற்கு வழிகாட்டியும் தலைவனும் இல்லாதிருந்தும், உஷ்ணகாலத்தில் தன்னுசாரத்தைச் சம்பாதித்து, அறுப்புக்காலத்தில் தன் போசனத்தைச் சேர்க்கும். ஓ! சோம்பேறியே! எவ்வளவு நேரம் நித்திரைசெய்வாய்? எப்போது உன் தூக்கத்தைவிட்டு எழுந்திருப்பாய்? இன்னும் கொஞ்ச தூக்கமும் இன்னும் கொஞ்ச அசதியும், சயனிப்புக்கு இன்னும் கொஞ்சங் கைகளை மடக்குகிறதும் உண்டானால், அப்போது தரித்திரம் வழிப்போக்கனைப்போலவும், வறுமை ஆயுதபாணியைப்போலவும் வரும்" பழ. 6 : 6.

## 6—துஷ்ட சகவாசம்

34. "யாதாமொருவன் விபசாரக்காரனாயாவது, விக்கிரக ஆராதனைக்காரனாயாவது, குடிவெறியனாயாவது இருப்பானாகில், அப்படிக்கொத்தவனோடு போசனமுதலாய்ப் பண்ணாதேயுங்கள். கொஞ்சம் புளித்த மா, பிசைந்த மா முழுமையையும் புளிக்கும்படி செய்கிறதென்று அறியீர்களோ?" 1 கொரி. 5 : 11, 6.

35. "ஆகாத பேச்சு நல்லொழுக்கங்களைக் கெடுக்கின்றது" 1 கொரி. 15 : 33.



36. "ஞானிகளோடே சஞ்சரிக்கிறவன் ஞானமுள்ளவனாவான்; மூடருக்கு சிநேகிதனாய் இருப்பவனோ, அவர்களைப்போலாவான்" பழ. 13 : 20.

37. "என் மகனே! பாவிகள் உன்னைக் கெடுக்கப் பார்த்தால் அவர்களுக்கு இணங்காதே; நீ எங்களோடு வாவென்று அவர்கள் உன்னைக் கூப்பிட்டால் அவர்களோடு போகாதே. ஏனெனில், அவர்களுடைய கால்கள் தின்மையை நாடுகின்றன" பழ. 1 : 10.

## 7—தர்மமும் தயையும்

38. "உனக்கு மிகுதியாயிருப்பதில் தருமங்கொடு. யாதொரு ஏழையினிடம் உன் முகத்தைத் திருப்பிக்கொள்ளாதே. ஏனெனில் கர்த்தருடைய முகமும் உன்னிடத்தினின்று திருப்பப்படாது. உனக்கு அதிகமிருந்தால் அதிகமாய்க் கொடு; உனக்குக் கொஞ்சமிருந்தால் நல்ல மனதுடன் கொஞ்சமாகிலுங் கொடுக்கப்பார்" தோபி. 4 : 7, 8.

39. "சிலர் தங்கள் ஆஸ்திகளைக் கொடுத்துவிடுவதினால் அதிக ஆஸ்திக்காராகிறார்கள். வேறு சிலர் தங்களுக்குச் சொந்தமில்லாததை யபகரிப்பதினால் எப்போதும் வறுமைக்குள்ளாகிறார்கள்" பழ. 11 : 23, 24.

40. "தன் செவியை ஏழையின் கூக்குரலுக்கு அடைத்துக்கொள்ளுகிறவன் தான் கூக்குரலிட்டுங் கேட்கப்படாமலிருப்பான்" பழ. 21 : 13.

41. "நீதிமான் தன் மிருகங்களுடைய சீவனை அறிகிறான். ஆனால் கெட்டவர்களினிருதயம் குரூரமானது" பழ. 12 : 10.

## 8—நாவு

42. "நாவானது ஒரு சிறு அவயவமாயிருந்தாலும் பெரிய காரியங்களை மூட்டுகின்றது. எத்தனையோ பெருங்

காடுகளை ஒரு அக்கினிப்பொறி சுட்டெரிக்கக் காண்கிறோம்" அர்ச். யாக. 3 : 5.

43. "வார்த்தைகளின் திரட்சியில் குற்றம் இராமலிராது. தன்னுதடுகளை அடக்குகிறவனே மகா புத்திமான்" பழ. 10 : 19.

44. "தன் வாயை பத்திரம்பண்ணுகிறவன் தன்னாத்துமத்தைப் பாதுகாக்கிறான்" பழ. 13 : 3.

45. கோட்சொல்லும் வாயானது ஆத்துமத்தைக் கொல்லுகின்றது" ஞான. 1 : 11.

46. "சத்திய உதடுகள் என்றென்றைக்கும் ஸ்திரமாயிருக்கும்; பொய் நாவோ கர்த்தருக்கு அருவருப்பானதாயிருக்கும்" பழ. 12 : 19, 22.

47. "புறணி பேசுகிறவனைவிட சர்ப்பத்தின் கடி கெடுதியல்ல" எக். 10 : 11.

48 "வெடுவெடுப்புள்ள நாவை உன்னிடத்தினின்று அகற்று; கோட்சொல்லும் உதடுகள் உனக்குத் தொலையிலிருக்கட்டும்" பழ. 4 : 24.

49. "பொல்லாதவன் அநியாய உதட்டுக்குக் கீழ்ப்படிகிறான்; வஞ்சனைக்காரன் பொய்சொல்லும் நாவுக்குச் செவிகொடுக்கிறான்" பழ. 17 : 4.

### 9—தாழ்ச்சியும் விநயமும்.

50. "உன்னுடைய மனதிலும் பேச்சிலும் கோபம் இல்லாதபடிக்குப் பார்த்துக்கொள். ஏனெனில், அதினின்று சகல அழிவும் புறப்பட்டது" தோபி. 4 : 14.

51. உன் புத்தியை நீ நம்பாதே; உன் பார்வைக்கு நீ ஞானியாயிராதே" பழ. 3 : 5, 7.

52. "நீ பெற்றுக்கொள்ளாத யாதொன்று உனக்குண்டோ? ஆனால் பெற்றுக்கொண்டிருக்கிறாயாகில் பெற்



வக்கொல்லாதவனைப்போல என் மேன்மை பாராட்டுகிறாய்?" 1 கொரி. 4 : 7.

53. "ஒருவருக்கொருவர் எல்லாரும் தாழ்ச்சியை யநுசரித்துக்கொண்டு வாருங்கள்; ஏனெனில் சர்வேசுரன் ஆங்காரிகளை யெதிர்த்து, தாழ்ச்சியுள்ளவர்களுக்கு இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்கிறார்" 1 அர்ச். இரா. 5 : 5.

54. "தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்; தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" லூக். 18 : 14.

55. "மூப்பர் முன்னிலையில் அதிகமாய்ப் பேசாதே; வாலிபனே! உன்னைப்பற்றிய விஷயத்தில் அரிதாய்ப் பேசு. மௌனமாய்ச் செவிகொடு; உன் மரியாதையினிமித்தம் உனக்கு நல்ல கிருபை உண்டாகும்" பிரசங். 23 : 9, 10, 13.

### 10—பிரமாணிக்கமும், சமாதானப்பிரியமும்.

56. "பிரமாணிக்கமுள்ளவன் தன் சிநேகிதனால் தனக்கு ஒப்புவிக்கப்பட்ட காரியத்தை மறைக்கிறான்" பழ. 11 : 13.

57. "நீங்கள் நடுத்தீர்க்கப்படாதபடிக்கு ஒருவருக்கொருவர் விரோதமாய் முறைபடாதிருங்கள்" அர்ச். இயா. 5 : 9.

58. "சாந்தமான மறுமொழி கோபத்தைத் தணிக்கும்; கடுஞ்சொல்லோ கோபத்தை மூட்டும்" பழ. 15 : 1.

59. "நீ பீடத்தண்டையில் உன் காணிக்கையைச் செலுத்தும்போது, உன் சகோதரன் உன்மேல் ஏதோ மனத்தாங்கலாயிருக்கிறானென்று அங்கே நினைவுகூர்வாயாகில், அவ்விடத்தில் அப்பீடத்தின்முன்பாக உன் காணிக்கையை வைத்துவிட்டு, முந்த உன் சகோதரனோடு உறவாடப்போய், பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்துவாயாக" மத்தே. 5 : 23, 24.

60. "சமாதான குணத்தோர் பாக்கியவான்கள்; ஏனெனில் சர்வேசுரனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவார்கள்" மத். 5 : 9.

## 11—நீதிமான்களுடைய வழியும், அநீதருடைய வழியும்.

61. "மனுஷனுடைய பார்வைக்குச் செம்மையாய்க் காணப்பட்டும் முடிவிலே மரணத்திற்கு கொண்டுபோகிறதாகிய வழியுண்டு" பழ. 13 : 25.

62. "நீதிமான்களின் பாதையோவெனில் முன்செல்லும் பிரகாசமான வெளிச்சத்திற்குச் சமானமாயிருக்கிறது; ஆனால் துஷ்டருடைய வழியானது இருள்நிறைந்ததாயிருக்கிறது" பழ. 4 : 18, 19.

63. நெருக்கமான வாசலால் பிரவேசியுங்கள்; அதேனென்றால், கேட்டிற்குச் செல்லும் வாசல் அகன்றதும், அதன் வழி விசாலமுமாயிருக்கின்றது; அதில் பிரவேசிக்கிறவர்களும் அனேகராயிருக்கின்றார்கள். சீவியத்திற்குச் செல்லும் வாசல் எவ்வளவோ நெருக்கமும் அதன் வழி எவ்வளவோ இடுக்கமுமாயிருக்கின்றது; அதைக் கண்டுபிடிக்கிறவர்களும் எத்தனையோ கொஞ்சம் பேராயிருக்கின்றார்கள்" மத். 7 : 13, 14.

64. "பைத்தியக்காரன் பாவத்தைப் பார்த்து நகைப்பான்; நீதிமான்களுக்குள்ளேயோ இஷ்டப்பிரசாதமிருக்கும்" பழ. 14 : 9.

65. "நான் கூப்பிட்டும் நீங்கள் கேட்கமாட்டோமென்றதினாலும், என்னுடைய புத்திமதிகளை அலட்சியம் பண்ணினதினாலும், என் தண்டனைகளை நீங்கள் அசட்டை பண்ணினதினாலும், நானும் உங்கள் ஆபத்தில் நகைப்பேன்" பழ. 1 : 24, 25, 26.

66. "பாவி யிதைக்கண்டு மூர்க்கங்கொண்டு, தன் பற்களைக் கடித்து ஏங்கிக் கரைந்துபோவான்; பாவிகளின் அபேட்சை கெடும்" சங்கீ. 111 : 10.



67. "நீதிமான்களுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய கரங்களிலிருக்கின்றன; அவைகளை மரணம் அணுகாது. ஞானமற்றவர்களுடைய பார்வைக்கும் அவர்கள் செத்தவர்கள்போல் காணப்படுகிறார்கள்; அவர்களுடைய மரணந் துன்பமாக எண்ணப்பட்டது. நம்மைவிட்டு அவர்கள் பிரிந்தது முழுக் கேட்டுக்கே என்று காணப்பட்டது; ஆனால் அவர்கள் சமாதானத்தில் இளைப்பாறுகிறார்கள். அவர்கள் மனுஷர் முன்னிலையில் வாதைகளை யனுபவித்தபோதிலும், ஒருபோதும் சாகமாட்டோமென்று முழுநம்பிக்கைகொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஜனங்களை நடுக்கேட்டு பிரஜைகளை அரசாள, அவர்களுடைய கர்த்தர் நித்தியகாலமாய் இராச்சியபாரம் பண்ணுவார்" ஞானம். 3 : 1.

## 12—முடிவு.

68. "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை" மார்க். 13 : 31.

# பழய வேதத்தின் தீர்க்கதரிசனங்கள்

1. மேசியாவின் வருகை.—“ஏனெனில் நமக்கொரு பாலகன் பிறந்தார்; நமக்கொரு குமாரன் கொடுக்கப்பட்டார், அவர் நாமம் அதிசயத்துக்குரியது. ஆலோசனைக்காரர், வல்லமையுள்ள சர்வேசுரன், வரவிருக்கும் உலகத்தின் பிதா, சமாதானப் பிரபு” இசை 9 : 6.

2. அவர் எப்போது வருவார்.—“அனுப்பப்பட விருப்பவர் வருமட்டும் யூதாவிலிருந்து செங்கோல் எடுபடாது. மேலும் சகல ஜனங்களும் அவரை யெதிர்பார்ப்பார்கள்” 1 மோ. 49 : 10.

“கபிரியேல் சம்மனசு தானியேலுக்குச் சொன்னதாவது : இப்போது நீ அறிந்து உணரவேண்டியதேதெனில் : எருசலேமை மறுபடி கட்டத் தொடங்குவதுமுதல் தலைவராகிய கிறீஸ்துநாதர்வரைக்கும் எழு வாரமும் பிறகு அறுபத்திரண்டு வாரமுமுண்டு. வீதிகளும் பின்பு கட்டப்படும். அறுபத்திரண்டு வாரங்களுக்குப்பின் கிறீஸ்துநாதர் கொல்லப்படுவார்............பாதிவாரமாகையில் பலிப்பொருளும் பலியும் நின்றுபோம்” தனி. 9 : 25.

3. அவர் தாவீது சந்ததியினின்று பிறந்தது.—“ஜெஸ்சேயின் வேரிலிருந்து துளிர் புறப்படும்; அவனுடைய வேரிலிருந்து ஒரு பூ எழும்பும். அந்நாளில் ஜெஸ்சேயின் வேரானது ஜனங்களுக்கு ஒரு கொடியாயிருக்கும். அஞ்ஞானிகள் அவரை மன்றுடுவார்கள். அவருடைய கல்லறை மகிமையுள்ளதாயிருக்கும்” இசை. 11 : 1, 10.

4. சேசுநாதரின் பிறப்பு.—“இதோ ஒரு கன்னிகை கருப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாள். அவர் பேர் எம்மானுவேல் என்று அழைக்கப்படும்” இசை. 7 : 14.



ப. சேசுநாதர் பெத்லேமில் பிறந்தது.—“எப்ராத்தா என்னப்பட்ட பெத்லேமே! நீ யூதாவிலுள்ள அனந்த நகரங்களுக்குள் சிறியதாயிருந்தும் இஸ்ரேயேலை ஆளப்போகிறவர் உன்னில் நின்று புறப்படுவார். அவருடைய பிறப்பு அநாதி நாட்களாகிய பூர்வத்தைத் தொட்டதாகும்” மிக்கே. 5 · 2.

6. சேசுக்கிறீஸ்துநாதருடைய புதுமைகள்.—“ஆண்டவருடைய மகிமையையும், நமது சர்வேசுரனுடைய அலங்காரத்தையும் அவர்கள் பார்ப்பார்கள்; மனக்கலக்கமுள்ளவர்களைப் பார்த்து பயப்படாதிருங்கள், தைரியங்கொள்ளுங்கள் என்று சொல்லுங்கள்; அப்போது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிடுகள் திறவுண்டுபோம்; அப்போது முடவன் மானைப்போல் குதிப்பான்; ஊமையின் நாவும் திறக்கப்படும்” 35 : 2, 4.

7. சேசுக்கிறீஸ்துநாதர் எருசலேமில் பிரவேசித்தல்.—“சீயோன் குமாரத்தியே மிகவுங் களிகூர்; சந்தோஷத்தால் ஆர்ப்பரி; இதோ உன் இராசா உன்னிடம் வருகின்றார். அவர் நீதியுள்ளவரும் உன் இரட்சகருமாயிருக்கின்றார். அவர் தாழ்மையானவரும் கோளிகைக் கழுதையின்மேலும், கழுதைக்குட்டியின்மேலும் ஏறிவருகிறார். அவர் அஞ்ஞானிகளுக்குச் சமாதானத்தைக் கூறுவார்; அவருடைய வல்லமை ஒரு கடல் துவக்கி மற்றொரு கடல்மட்டும், நதிகள் துவக்கி பூமியின் எல்லைப்பரியந்தமுமிருக்கும்” சக். 9 : 9, 10.

8. கிறீஸ்துநாதர் யூதாஸால் சதிமானம்பண்ணப்பட்டது.—“ஏனெனில் நான் நம்பிக்கைவைத்து, என்னோடு சமாதானமாயிருந்து, என் அப்பத்தைப் புசித்த மனிதனே எனக்குப் பெருஞ் சதிசெய்தான்” சங்கீ. 40 : 8.

“அப்போது என் கூலியாக 30 வெள்ளிக்காசை நிறுத்தார்கள். நான் அந்த முப்பது வெள்ளிக்காசுகளை வாங்கி அவைகளைக் கர்த்தருடைய வீட்டிலே எறிந்துவிட்டேன்” சக். 11 : 12, 13.

9. சேசுக்கிறீஸ்துநாதர் பிடிபட்டதும் அப்போஸ்தலர்கள் ஓடிப்போனதும்.—" அபிஷேகம் பெற்றவர், கர்த்தர் நமது பாவங்களினிமித்தம் பிடிபடுவார் " ஜெர. 4.

" என் சகோதரர்களுக்கு அன்னியனாகவும், என் தாயின் பிள்ளைகளுக்கு முகமறியாதவனைப்போலவும் ஆனேன் " சங். 68 : 9.

" ஆயனை யடிக்க ஆடுகள் சிதறிப்போகும் " சக். 13 : 7.

10. சேசுக்கிறீஸ்துநாதர் அநுபவித்த துன்பதுரிதங்கள்.—" கதறிக் கர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல் என்மேல் வாயைத் திறந்தார்கள் " சங்கீ. 21 : 14.

" பொய்ச்சாட்சிகளெழும்பி நானறியாத காரியங்களைக் குறித்து என்னைக் கேட்டார்கள் " சங்கீ. 34 : 11.

" என் முகத்தில் துப்ப அஞ்சாதிருக்கிறார்கள் " யோப். 30 : 10.

" அவரிடத்தில் அந்தமில்லை ; நிந்திக்கப்பட்டு துக்கம் நிறைந்த மனிதனும், பலவீனத்தை யறிந்தவருமாயிருந்தார் ; மெய்யாகவே நமது பலவீனங்களை யவரெடுத்துக்கொண்டு, நம்முடைய நோவுகளைச் சுமந்தார். நாமோவெனில் அவர் ஒரு குஷ்டரோகியென்றும், சர்வேசுரனால் வாதித்து துன்பப்படுத்தப்பட்டவரென்றும் எண்ணினோம். நமது அக்கிரமங்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நமது பாவங்களுக்காக நொறுக்கப்பட்டார். நமது சமாதானத்தின் தண்டனை அவர் மேல் இறங்கி அவருடைய காயங்களால் குணப்பட்டோம். நாம் ஆடுகளைப்போல வழிதவறித் திரிந்தோம். கர்த்தரோவென்றால், நம்மெல்லோருடைய அக்கிரமங்களையும் அவர் மேல் சுமத்தினார் " இசை. 53 : 2.

" தன்னை யடிப்பவனுக்கு அவர் தமது கன்னத்தைக் காட்டுவார் " புலம்பல். 3 : 30.

" அடிப்பவர்களுக்கு என் சரீரத்தையும், பிடுங்குகிறவர்களுக்கு என் தாடையையுங் கொடுத்தேன். என்னை நிந்தித்துத் துப்புகிறவர்களிடத்திலிருந்தும் என் முகத்தைத் திருப்பவில்லை " இசை. 50 : 6.



" உள்ளங்கால் துவக்கி உச்சந்தலைமட்டும் கட்டப்படாமலும் எண்ணெயால் ஆற்றப்படாமலும் இருக்கிற காயங்களும், வீக்கமும், இரணமுமே அல்லாமல் ஒரு ஆரோக்கியமுமில்லை " இசை. 1 : 6.

" ஓ! இவ்வழியாய் நடந்துபோகிறவர்களே, என் கஸ்திக்குச் சரியான கஸ்தி யுண்டோவென்று கவனித்துப் பாருங்கள் " புலம்பல். 1 : 12.

11. சிலுவைப்பாதை.—" சீயோன் குமாரத்திகளே ! நீங்கள் புறப்பட்டுப்போய் இராசாவாகிய சலோமோனின் கலியாண நாளில் அவருடைய தாயார் அவருக்குச் சூட்டின முடியோடிருக்கிற அவரை நோக்கிப் பாருங்கள் " உன்னத கவி. 3 : 11.

" அவரொரு ஆட்டுக்குட்டியைப்போல் கொல்லப்படக் கொண்டுபோகப்பட்டு, தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமற்றிருக்கிற ஆட்டைப்போல் மௌனமாயிருப்பார் " இசை. 53 : 7.

12. சேசுக்கிறீஸ்துநாதருடைய வஸ்திரங்கள் பறிக்கப்பட்டன.—" என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொண்டு, என்னுடையின்பேரில சீட்டுப்போட்டார்கள் " சங். 21 : 17.

13. சேசுக்கிறீஸ்துநாதர் சிலுவையில் தொங்குகிறார்.—" நீதி புறப்படுகிற மரம் பரிசுத்தமான மாம் " ஞா. 14 : 7.

" அப்போது கர்த்தர் மோயீசுடன், நீ ஒரு வெண்கல சர்ப்பத்தைச் செய்து ஒரு அடையாளமாய்த் தூக்கிவை ! கடிபட்டு அதை நோக்கிப் பார்க்கிறவர்களெல்லோரும் பிழைப்பார்கள் " எண். 21 : 8.

"என் கைகளையும் கால்களையுந் துளைத்தார்கள்; என் எலும்புகளையெல்லாம் எண்ணினார்கள்" சங்கீ. 21 : 17.

"என் ஆகாரத்துக்கு பிச்சுகொடுத்தார்கள். என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள்" சங். 68 : 22.

"நான் மனுஷனல்ல, புழுவாயிருக்கிறேன்; நான் மனுஷர்களாலே நிந்திக்கப்பட்டு, ஜனங்களுக்கு அசங்கியப்பட்டவனுமாயிருக்கிறேன்; என்னைப் பார்த்தவர்களெல்லோரும் என்னைப் பரிகாசம்பண்ணினார்கள். என்னை இழிவாய்ப் பேசித் தலையை யசைத்தார்கள்" சங்கீ. 21 : 7.

"ஓ! தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டுவிட்டீர்?" சங்கீ. 21 : 1.

"உம்முடைய கரங்களில் என்னாத்துமத்தை ஒப்புக்கொடுக்கிறேன்" சங்கீ. 30 : 6.

14. சேசுக்கிறீஸ்துநாதரின் உயிர்த்தெழுதல்—அவருடைய மோக்ஷாரோகணம்.—"என் சத்துராதியே; நான் கீழே விழுந்தால் என்னைக் குறித்து சந்தோஷங்கொண்டாடாதே; இருளில் உட்கார்ந்தபின்னர் நான் எழுந்திருப்பேன்; ஏனெனில், என்னாண்டவர் என் பிரகாசமாயிருக்கின்றார். ஆண்டவருடைய கோபாக்கினையைச் சுமந்திருப்பேன்; அவர் என்னை வெளிச்சத்தில் கொண்டுவருவார்" மிக். 7 : 8, 9.

15. பெரிய குரு சேசுக்கிறீஸ்துநாதர், தமது பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார்.—"ஆண்டவர் என்னாண்டவருக்குத் திருவுளம்பற்றினதாவது: நாம் உங்களுடைய சத்துருக்களை உம்முடைய பாதங்களுக்கு, மணையாகப் போடுமட்டும் நமது வலதுபாரிசத்தில் உட்காரும்' என்றார். நீர் என்றைக்கும் மெல்கிசெதேக் கென்பவருடைய முறைமையின்படி குருவாயிருக்கிறீர்" சங். 109 : 1, 4.

# வேதாகம சரித்திரத்தினின்று தெரிந்தெடுக்கப்பட்ட கிறீஸ்து வேத படிப்பினைகளைக் குறிக்கும் அட்டவணை

## 1—விசுவாச மந்திரம்


1 விசுவாசம் (போது).—அபிரகாம், பக்கம் 23; சேர்வைக்காரன், 232; கனானைய ஸ்திரீ, 252.

2 முதற் பிரிவு.—

1. சர்வேசுரனுடைய சர்வ வல்லமை.—உலக சிருஷ்டிப்பு, 1; கானாவூர்க் கலியாணம், 215; அப்பங்கள் அதிகரிக்கப்பட்டது, 248; இலாசர் உயிர்த்தெழுந்தது, 277.

2. சர்வேசுரனுடைய சர்வ ஞானம்.—நமது ஆதிபிதா மாதாக்கள் கெட்டுப்போனது, 5; காயின், 10.

3. சர்வேசுரனுடைய நீதி.—ஜலப்பிரளயம், 12; சோதோம் கொமோரு, 25; கோரே, தாத்தான், அபிரோன், 89.

4. சர்வேசுரனுடைய நன்மைத்தனம்.—பூலோக மோக்ஷம், 4; நோவே, 13; வனாந்தரத்தில் காடைகள், மன்னு, ஜலம், 76.

5. சர்வேசுரனுடைய ஞானம்.—சூசையப்பர், 38.

6. சர்வேசுரனுடைய இரக்கம்.—இரக்ஷகரைப்பற்றிய வாக்குத்தத்தம், 8.

7. சர்வேசுரனுடைய பிரமாணிக்கம்.—மோயீசனின் கடைசி புத்திமதி, வாக்குத்தத்த பூமியில் பிரவேசம், 92.

8. சர்வேசுரன் மூன்றளாயிருக்கிறர்.—சேசுக்கிறீஸ்து நாதருடைய ஞானஸ்நானம், 210; ஞானஸ்நானம் உண்டானது, 336; இஸ்பிரீத்துசாந்துவின் வாக்குத்தத்தம், 300.

9. சிலுவை யடையாளம்.—வெண்கல சர்ப்பம், 90.

10. உலக சிருஷ்டிப்பு, 1.

11. சம்மனசுக்கள், 5; தோபியாஸ், 145; அக்கினிச் சூளையில் போடப்பட்ட மூன்று வாலர், 163; அபக்கூக், 169; பெத்சைதா குளத்தில் காணப்பட்ட சம்மனசு, 237; காவலான சம்மனசுக்கள், 257.

12. பசாசு, 6; யோப், 59; சேசுநாதர் பசாசால் சோதிக்கப்படுகிறர், 211; சேசுநாதர் பசாசுகளைத் துரத்துகிறர், 223.

3 இரண்டாம் பிரிவு.—மோயீசனுந் தாவீதும் சேசுநாதருக்கு அடையாளமாயிருக்கிறர்கள், 65, 115.

4 மூன்றம் பிரிவு.—சேசுநாதருடைய ஜனனத்தைப்பற்றி அறிவிக்கப்பட்டது, 192; சேசுக்கிறீஸ்துநாதருடைய பிறப்பு, 198.

5 நாலாம் பிரிவு.—சேசுநாதருடைய திருப்பாடுகளும், மரணமும், 300, 320.

6 ஐந்தாம் பிரிவு.—சேசுநாதருடைய உத்தானம், 324.

7 ஆறம் பிரிவு.—சேசுக்கிறீஸ்துநாதருடைய மோக்ஷாரோகணம், 336.



8 ஏழாம் பிரிவு.—அப்பக்காரனுக்கும் இரசக்காரனுக்கும் இடப்பட்ட தீர்ப்பு, 44; இஸ்ருயேலித்தார் செங்கடலைக் கடத்தல், 74; களையின் உவமை, 240; மச்சங்களின் உவமை, 242; பொதுத் தீர்வையைப்பற்றிய தீர்க்கதரிசனம், 288.

9 எட்டாம் பிரிவு.—இஸ்பிரீத்துசாந்து இறங்கினது, 340; கொர்நேலியு ஞானஸ்நானம் பெற்றது, 357.

10 ஒன்பதாம் பிரிவு.—திருச்சபை.

1. திருச்சபை. (பொது).—இஸ்ருயேலரோடு சர்வேசுரன் செய்துகொண்ட உடன்படிக்கை, 79; அர்ச். இராயப்பருடைய படகு, 224.

2. பாப்பானவர்.—பெரிய குரு, 86; அர்ச். இராயப்பருடைய தலைமைப்பட்டம், 253, 334; சிறையிலிருந்த இராயப்பருக்காக கிறீஸ்துவர்கள் வேண்டிக்கொண்டது, 361.

3. மேற்றிராணிமார்.—அப்போஸ்தலர்கள் பெற்ற அதிகாரம், 245, 259, 336; முதற் சங்கம், 366; மிலேத்தில் அர்ச். சின்னப்பருடைய கடைசிப் பிரசங்கம், 375.

4. சத்தியசபை ஏகமானது.—முந்திரிகைக்கொடியின் உவமை, 300; தமது சீஷருக்குள் ஒற்றுமையிருக்கும்படி சேசுநாதர் செய்த செபம், 301.

5. திருச்சபை பரிசுத்தமாயிருப்பதுடன் பொதுவானது.—அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஞானதிகாரம், 334; லோகாந்தியமட்டும் திருச்சபை நிலைக்குமென்று சேசுநாதசுவாமி கொடுத்த வாக்குத்தத்தம், 336; கடுகின் உவமை, 241.

6. திருச்சபை அப்போஸ்தலர்கள் காலமுதற்கொண்டு உண்டானது.—அப்போஸ்தலர்களுடைய வேலையும் அவர்களுடைய முடிவும், 378.

7. அர்ச்சியசிஷ்டவர்களுடைய சமூதீத பிரயோசனம்.—அபிரகாம் சோதோமுக்காக மன்றாடுகிறார், 25; இஸ்றாயேலித்தாருக்காக மோயீசன் மன்றாடுகிறார், 83, 88; யூதாஸ் மக்கபேர் பாவப்பரிகாரத்திற்காக ஒப்புக்கொடுத்த பலி, 187; தேவமாதா நமது தாயார், 319.

11 பத்தாம் பிரிவு.—பாவப்பொறுத்தல், மனஸ்தாபப்பட்ட இஸ்ராயேலித்தாரும், கொள்ளிவாய் சர்ப்பங்களும், 90; திமிர்வாதக்காரன், 226; மனஸ்தாபப்பட்ட மரியமதலேனம்மாள், 235 ஊதாரிப்பிள்ளை, 265; பச்சாதாபக் கள்ளன், 318.

12 பதினோராம் பிரிவு.—மாமிச உத்தானம், யோபின் நம்பிக்கை, 59; லாசரின் உயிர்த்தல், 277; சேசுக்கிறீஸ்துநாதருடைய உத்தானம், 324.

13 பன்னிரண்டாம் பிரிவு.—சதாதமான சீவியம், எலியசார் சாகும்போது அடைந்த ஆறுதல், 181; எழு மக்கபேருடைய சந்தோஷம், 182; ஐசுவரியவானும் இலாசரும், 268.

## 2—பத்துக் கற்பனைகள்

14 தேவ சிநேகம்.—மோயீசனின் கடைசி வார்த்தைகள், 92; மரியமதலேனம்மாள், 235, 327.

15 பிறர் சிநேகம்.—தாவீது சவுலுக்குக் காட்டின தர்மகுணம், 109; அபிரகாமின் உபசரணை, 24; நமது விரோதிகளை சிநேகிக்கும்படி கட்டளை கொடுக்கப்பட்டது, 227; நல்ல சமாரித்தான், 260; அர்ச். முடியப்பர், 350.

16 பத்துக் கற்பனைகள்.—சீனாய் மலையின்மேல் கொடுக்கப்பட்டன, 79; கிறீஸ்துவர்கள் அநுசரிக்கவேண்டிய நீதிநெறி, 229; ஐசுவரியவானான வாலன், 274.



17 முதற் கற்பனை.—

1. உள்ளாங்க ஆராதனை.—சேசுநாதர் யாக்கோபின் கிணற்றண்டையில் செய்த சம்பாஷணை, 219.
2. வெளியாங்க ஆராதனை.—பத்துக் கற்பனை பெட்டகம் எருசலேமுக்குக் கொண்டுபோகப்பட்டது, 112; வெளியரங்க ஆராதனைக்காக நியமிக்கப்பட்ட ஒழுங்குகள், 84.
3. விக்கிரக ஆராதனை.—பொற்கன்று, 82; நடுவர் காலத்தில் யூதர்களுடைய நடத்தை, 95; பேல் விக்கிரகம், 166.
4. தேவ கைங்கரியத்துக்கானவைகளைத் திருடுதல்.—பிலிஸ்தேயரும் பத்துக் கற்பனைப் பெட்டகமும், 101; பல்தசார் அரசன், 165; தேவாலயத்தின் சுத்திகரம், 217.
5. சுரூபங்களின் வணக்கம்.—பெட்டகத்தின்மேல் வைக்கப்பட்ட இரண்டு சுரூபங்கள், 94; வெண்கல சர்ப்பம், 90.
6. திருப்பண்டங்களுக்கு காட்டவேண்டிய வணக்கம், 371; எலிசேயுசின் எலும்புகள், 138; அர்ச். சின்னப்பரால் ஆசீர்வதிக்கப்பட்ட உறுமாலை, 372.

18 இரண்டாங் கற்பனை.—தேவதூஷணக்காரனான அந்தியோகுஸ், 185; அர்ச். இராயப்பருடைய மறுதலிப்பு, 306.

19 மூன்றாங் கற்பனை.—சேசுநாதர் கப்பர்னாவுமூரில் பிரசங்கித்தது, 223.

20 நாலாங் கற்பனை.—

1. நல்ல பிள்ளைகள்.—ஈசாக்கு, 27; தோபியாஸ், 144; சேசுநாதர், 206.

2. துஷ்ட பிள்ளைகள்.—காம், 17; அப்சலோம், 113; வலியின் குமாரர்கள், 99; பரிகாசஞ்செய்த பிள்ளைகள், 137.

21 ஐந்தாங் கற்பனை.—

3. கொலைப்பாதகம்.—காயின், 10; இஸ்ராயேலித்தார், 64; மாசில்லாத குழந்தைகள், 205; எரோதியாள், 247.

2. கோபம்.—கிறீஸ்துவனுடைய நீதிநெறி, 230; துர்மாதிரிகையால் வரும் கேடு, 256.

22 ஆறாங் கற்பனை.—கற்புள்ள சூசையப்பர், 42; சலமோனுடைய முடிவு, 122; சோதோம் கொமோரு, 25; எரோதனும் எரோதியாளும், 247.

23 ஏழாங் கற்பனை.—எலிசேயுவின் ஊழியனாகிய ஜியேஜி, 137.

24 எட்டாங் கற்பனை.—

1. பொய்சொல்லுதல்.—கள்ள சினேகிதர், 61; அனனியாசும் சபிராளும், 347; சேசுநாதருடைய கல்லறையைக் காத்த சேவகர், 328.

2. அவதூறு.—புத்திப்பாரின் மனைவி, 42; கள்ள நடுவர், 161; வீண் தீர்மாணம், 231.

## 3—திருச்சபை கட்டளைகள்

25 பொது.—அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்பட்ட திறவுகோல்களின் ஞானதிகாரம், 259.

26 முதற் கட்டளை.—யூதர் அநுசரித்துவந்த திருநாட்கள், 84.

27 இரண்டாங் கட்டளை.—யூதருடைய பலிகள், 85; சேசுநாதருடைய பிரசங்கத்துக்கு யூதர் செவிகொடுத்தது,



227; அர்ச். சின்னப்பர் துரோவா பட்டணத்தில் பிரசங்கித்தது, 372.

28 மூன்றாங் கட்டளை.—சிங்காரவனத்தில் விலக்கப்பட்ட கனி, 4; நினிவேயின் உபவாசம், 140; சேசுநாதர் வனாந்தரத்துக்குப் போனது, 211.

29 நாலாவது ஐந்தாவது கட்டளைகள்.—பாஸ்கு பண்டிகை, 206.

## 4—தலையான பாவங்கள்

30 பாவங்கள். (பொது).—சம்மனசுக்களுடைய பாவம், 5; நமது ஆதி பிதாமாதாக்களின் பாவம், 8.

31 ஆங்காரம்.—பாபேல் கோபுரம், 18; பாரவோன் அரசன், 69; ஆங்காரியான கோலியாத், 105; ரோபாமுடைய அகந்தையான மறுமொழி, 125; ஆங்காரியான பரிசேயன், 271.

32 லோபித்தனம்.—மன்னிப்புக் கொடாத சேவகன், 258; சவுல் அமலேசித்தருடைய கொள்ளைப் பொருளை வைத்துக்கொண்டது, 102; எலிசேயுவின் ஊழியனாகிய ஜியேஜி, 137.

23 மோகம்.—சோதோம் கொமோரு பட்டணத்தார், 25; புத்திப்பாரின் மனைவி, 42; சலமோன் விருத்தாப்பியத்தில் நடந்த நடத்தை, 124.

34 காய்மகாரம்.—நமது ஆதி பிதாமாதாக்களை பசாசு கெடுத்தது, 6; காயினும் ஆபேலும், 10; சூசையப்பர் தன் சகோதரர்களால் விற்கப்பட்டது, 39; நினிவே பட்டணத்தார் இரட்சிக்கப்பட்டதனால் யோனாஸ் கொண்ட காய்மகாரம், 139; காய்காரமுள்ள பரிசேயர் சேசுநாதரைக் கொல்லத் தீர்மானித்தது, 279.

35 போசனப்பிரியம்.—நோவே, 17; ஏசா பலகாரத்திற்காக தன் ஜென்ம சுதந்தரத்தை விற்றது, 32; இஸ்ரா

யேலித்தார் எஜிப்து நாட்டின் இறைச்சியை ஆசித்தது, 76 ; ஹோலொப்பெர்னஸ், 179.

36 கோபம்.—எசா யாக்கோபைப் பகைத்தது, 33 ; சவுல் தாவீதைப் பகைத்தது, 106.

37 சோம்பல்.—சோம்பேரியான ஊழியன், 291 ; பிலாத்தின் கோழைத்தனம், 311, 314.

38 இஸ்பிரீத்துசாந்துவுக்கு ஏற்காத பாவங்கள்.—காயினுடைய அவநம்பிக்கை, 12 ; பாரவோனுடைய மூர்க்கத்தனம், 69 ; யூதாசின் அவநம்பிக்கை, 307.

## 5—புண்ணியங்கள்

39 விமரிசை.—பத்து கன்னியர்களின் உவமை, 290.

40 தாழ்ச்சி.—சூசையப்பர் கனவுகளுக்கு அர்த்தஞ்சொன்னதால் சர்வேசுரனை மகிமைப்படுத்துகிறார், 45 ; மோயீசனின் அழைப்பு, 67 ; தாழ்ச்சியுள்ள தாவீதும் ஆங்காரியான கொலியாத்தும், 105 ; ஸ்நாபக அருளப்பர், 210 ; சேர்வைக்காரன், 232.

41 உதாரத்துவம்.—சூசையப்பருக்கும் அவருடைய குடும்பத்துக்கும் பாரவோன் காட்டின உதாரகுணம், 48, 55 ; பூஜ், 98 ; சரெப்தா பட்டணத்து விதவை ஸ்திரீ, 131 ; எலிசேயுசும் நாமானும், 137 ; பெரிய தோபியாஸ், 143.

42 கற்பு.—பூர்வ சூசையப்பர், 42 ; சேமும் யாபேத்தும், 17 ; சுசானம்மாள், 161 ; யூதித்தம்மாள், 179 ; மரியம்மாள், 192.

43 நேசம்.—அபிரகாமுடைய தருமகுணமும் சமாதானகுணமும், 22, 25 ; ரெபெக்காள், 29 ; பாரவோன் அரசனுடைய குமாரத்தியின் சினேக அன்பு, 65 ; ரூத், 97 ; எலிசபெத்தம்மாளின் அன்பு, 195.



44 மட்டசனம்.—தானியேலும் மூன்று தோழரும், 160 ; ஸ்நாபக அருளப்பர், 196.

45 பொறுமை.—யோப், 59 ; மோயீசன், 88 ; தாவீதும் செமேயியும், 114 ; சேசுக்கிறீஸ்துநாதர், 303 ; அர்ச். முடியப்பர், 350 ; குற்றங்களை மன்னிக்கவேண்டுமென்கிற கற்பனை, 258.

46 நன்மையின்பேரில் ஆவல்.—சாமுவேல், 99 ; தீர்க்கதரிசிகள், 156 ; யூதித்தம்மாள், 179.

## 9—பரிசுத்தத்தனத்தின் பல வழிபாடுகள்

47 இஷ்டப்பிரசாதம்.—சூசையப்பருடன் சர்வேசுரனிருந்தார், 42, 49 ; வனாந்தரத்தில் ஜலம், 77 ; ஜீவியந்தருஞ் சலம், 220.

48 ஞானஸ்நானம்.—செங்கடலைக் கடத்தல், [illegible]ழான் யோர்தான் நதியில் குளித்தது, 137 ; அருளப்பருடைய ஞானஸ்நானம், 210 ; சேசுநாதரும் நிக்கோதேமும், 213 ; ஞானஸ்நானம் உண்ட[illegible] 335.

49 உறுதிப்பூசுதல்.—இராயப்பரும் அருளப்பரும் சமாரிய கிறீஸ்துவர்களுக்கு உறுதிப்பூசுதல் கொடுத்தது, 353.

50 நற்கருணை.—ஜீவியத்தின் மரம், 4 ; மெல்கிசெதேக்குடைய பலி, 23 ; செம்மறிப்புருவையின் இரத்தம், 72 ; மன்னா, 76 ; பத்துக் கற்பனைப் பெட்டகத்தை ஆரவாரத்துடன் பிரதட்சணம் செய்தல், 112 ; தண்ணீர் இரசமாக மாற்றப்பட்டது, 215 ; சற்பிரசாதத்தைப்பற்றிய வாக்குத்தத்தம், 250, 296.

51 பச்சாத்தாபம்.—நாத்தான் தீர்க்கதரிசி, 114 ; குஷ்டரோகி, 232 ; ஊதாரிப்பிள்ளை, 265 ; நல்ல ஆயன், 264 ; மனஸ்தாபப்படும் பாவி, 273 ; ஜக்கேயுஸ், 280 ; பாவசங்கீர்த்தனத்தைப்பற்றிய வாக்குத்தத்தமும் அது

ஸ்தாபிக்கப்பட்டதும், 260, 331; எப்பேஸ் சகோதரர், 371.

52 அவஸ்தைப்பூசுதல்.—அப்போஸ்தலர்கள் வியாதியஸ்தரை எண்ணெயால் பூசினார்கள், 246.

53 குருத்துவம்.—பூதவேதத்தில் ஆசாரியர் நியமிக்கப்பட்டது, 86; கோரே, தாத்தான், அபிரோன், 89; ஓசியாஸ் என்பவன் குருத்துவத் தொழிலை அபகரித்தது, 153.

54 மெய்விவாகம்.—ஆதாமும் ஏவாளும், 4; ஈசாக்கு ரெபெக்காளை விவாகஞ் செய்துகொண்டது, 29; தோபியாஸ் சாராளை விவாகஞ் செய்துகொண்டது, 147; கானாவூர் கலியாணத்திற்கு சேசுநாதர் போனது, 215.

55 அர்ச்சிக்கப்பட்ட பண்டங்கள்.—நோவே சேமையும் யர்பேத்தையும் ஆசீர்வதிக்கிறார், 18; ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதிக்கிறார், 33; யாக்கோபும் அவருடைய குமாரர்களும், 57; தான் தலைசாய்த்து நித்திரைசெய்த கல்லை யாக்கோபு அபிஷேகஞ்செய்தார், 35.

56 ஜெபம்.—சாமுவேலுடைய தாயான ஆனாள், 99; சலோமோனுடைய ஜெபம், 121; உபவாசம் பிடித்து தர்மங்கொடுத்து ஜெபிக்கிறது, 149, 227; எசக்கியாஸ் வியாதியாயிருந்தபோது செய்த ஜெபம், 154; மனாசஸ் என்பவருடைய ஜெபம், 155; மார்த்தாளும் மரியம்மாளும், 262; பரமண்டல மந்திரம், 263.

57 திருச்சபை செய்யுஞ் சடங்குகள்.—மோயீசன் தமது பாதரட்சையைக் கழற்றும்படி கட்டளை பெற்றது, 67; தேவாராதனையைச் சார்ந்த முறைமைகள், 84; தேவாலய அபிஷேகம், 120; சேசுநாதர் விருத்தசேதனப்பட்டு தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது, 203; கிறீஸ்துநாதர் ஓட்டோலகராய் எருசலேமில் பிரவேசித்தது, 282.

78046

முற்றிற்று

408

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008